உ

கணபதி துணை.

முருகக் கடவுள் துணை.

சுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியருந்துணை

திருவண்ணுமலையி லெழுந்தருளியிருந்த

அருணகிரிநாத ஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்

பொதுப் பாடல்களும், மற்றைய நூல்களும்

மூன்றும் பாகம்

இவற்றுட்
பொதுப் பாடல்கள்
பல கையெழுத்துப் பிரதிரூபங்களைக்கொண்டு
திருப்பாதிரிப்புலியூர்—வித்துவான்
சிவசிதம்பர முதலியா ரவர்களாலும்
சேலம் காலேஜ் - தமிழ்ப்பண்டிதர்
சரவணப் பிள்ளை அவர்களாலும்
பரிசோதிப்பித்து

வடக்குப்பட்டு
த. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்
பதிப்பித்தன.

பொதுப் பாடல்கள்—இரண்டாம் பதிப்பு

மற்றைய நூல்கள்—முதற் பதிப்பு

சென்னை
பி. ஆர். ராமையர் கம்பெனியிலும்
கார்டியன் அச்சுக்கூடத்திலும்
அச்சிடப் பெற்றது.

அக்ஷய௵, கார்த்திகைமீ.
(November, 1926.)

Copyright Reserved.

இந்தப் பிரதியின் எண் :

☞ புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற்கண்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம். பதிப்பாசிரியருடைய கையெழுத்து முத்திரை (Facsimile) உள்ள புத்தகங்களையே வாங்கவேண்டுமென்பது இதனால் எல்லோருக்குந் தெரிவிக்கப்படுகின்றது.

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்கசெட்டித் தெரு,
சென்னை : Madras.

உ

(I) திருப்புகழ்—மூன்றாம் பாகம்

பொதுப் பாடல்கள்

309

[11 - புதிய பாடல்களுடன்]

(II) அருணகிரிநாத ஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

மற்றைய நூல்கள்

[[illegible], குறிப்புக்களுடன்]

[illegible] திருமுருகாற்றுப் படை

விற்பனைக்குரிய புத்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	அருணகிரிநாதஸ்வாமிகள் திருப்புகழ் முதற்பாகம்: ஆறுபடைவீடுகள் - மூன்றாம் பதிப்பு. 450-பாடல்கள்.	2	8	0
2.	ஷை இரண்டாம் பாகம்: பஞ்சபூத ஸ்தலங்களும், காசிமுதல இராமேசம் வரையிலுள்ள வேறு ஸ்தலங்களும். 545-பாடல்கள்.	3	0	0
3.	ஷை மூன்றாம் பாகம்: 309 பொதுப்பாடல்களும், *திருவகுப்பு, *கந்தரந்தாதி, *அலங்காரம், *அநுபூதி *ஸ்வாமிகள் சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளும்.	3	8	0
4.	சிவஸ்தல மஞ்சரி. மூன்றாம் பதிப்பு. தேவாரம் பெற்ற ஸ்தலங்களின் இருப்பிடம், விசேடம் முதலிய விவரங்களும், ஸ்தலத்துக்கொரு தேவாரப் பாடலும் அடங்கியது.	(அச்சில்)		
5.	பிரமோத்தரகாண்ட வசனம் என்னும் சிவகதைகள்	0	4	0
6.	திருநீடூர்த் தலபுராணம்	0	4	0
7.	திருத்தணிகைத் திருப்புகழ் முதலியன ...	0	6	0
8.	திருத்தணிகைத் தலபுராணச் சுருக்கம் (வசனம்)	0	3	0
9.	திருத்தணிகைத் திருப்புகழ், ஷை வசனம முதலியன	0	8	0
10.	காசிமாஹாத்மியம் என்னும் சிவகதை ..	0	1	0
11.	திருப்புகழ் பதிப்பாசிரியர். வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சரித்திரமும் அவர்கள் இயற்றிய தனிப் பாடல்களும்	0	12	0
12.	மஞ்ஞைப் பாட்டு	0	0	6
3.	சேவற் பாட்டு	0	0	6
4.	அறுபத்து நான்கு திருவிளையாடலின் பாடல்கள்	(அச்சில்)		
5.	History of the Tamil Prose Literature.	(அச்சில்)		

ஒரே காலத்தில் பத்துப்பிரதிகள் வாங்கினால் ஒரு பிரதி விலையின்றிக் கொடுக்கப்படும். தபால் செலவு முதலியன வேறு.

* இந்நூல்கள் தனித்தனியாகவும் கிடைக்கும்.

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்க செட்டித் தெரு,
சென்னை : Madras

உ

சிவமயம்.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

விஷயம்.	பக்கம்.	பாடற்றொகை.
முகவுரை	vi	
பிழை திருத்தம்	ix	
திருப்புகழ்ப் பொதுப்பாடல்கள் ...	௭௯௫-௯௯௦	309
,, பாட்டு முதற்குறிப்பகராதி ...	[௧]-[௬]	
திருவகுப்பு [பொருளடக்கம், முதற்குறிப் பகராதி, ஆராய்ச்சிகளுடன்] ...	௧-௫௪, [௧-௨, i—iv]	25
கந்தரந்தாதி, [முதற்குறிப்பகராதி, ஆராய்ச்சி, அரும்பத விளக்கங்களுடன்] .	௧-௭௬ [1—XVI]	100
கந்தரலங்காரம் [முதற்குறிப் பகராதி, ஆராய்ச்சிகளுடன] ...	௧-௩௨	107
கந்தரநுபூதி [ஷை, ஷை] ..	௧-௧௬	51
வேல் விருத்தம் ...	௧-௬	10
மயில் விருத்தம் ...	௭-௧௨	11
திருவெழுகூற்றிருக்கை ...	௧௩-௧௪	1
திருப்புகழ்ச் சந்தக் குறிப்பு ...	௧-௫௨	
அருணகிரிநாத ஸ்வாமிகளின் சரித்திர ஆராய்ச்சி ... (ஷை பத்ததியுடன்)	௧-௨௭	
திருப்புகழ் ஆராய்ச்சி ...	௧-௮௦	
திருப்புகழ் ஆராய்ச்சித் தலைப்புக்கள் ...	௮௧-௮௨	
திருமுருகாற்றுப் படை (கருத்துரையுடன்)	௧-௧௯	
திருப்புகழ் மூன்று பாகங்களுக்கும் அநுபந்தம். ...	௧-௬	

உ

திருத்தணிகேசன் திருவடி துணை.

திருப்புகழ் - மூன்றாம் பாகம்

முகவுரை.

திருப்புகழ் முதற்பாகம் துன்மதி௵ வைகாசி௴ (1921௵ ஜூன்௴) வெளி வந்தது. இரண்டாம் பாகம் துந்துபி௵ மாசி௴ (1923௵ மார்ச்சு௴) வெளி வந்தது. இம்மூன்றாம் பாகம் 1924௵ ஜூன்௴ அச்சுக்குத் தரப் பட்டும் வெளியேற இந்நாள் ஆயிற்று. இதற்குக் காரணம் இக்காலத்து நம்மனோரிற் பெரும்பாலாருக்கு இத்தகைய விஷயங்களிலுள்ள ஊக்கக் குறைவே. முதலிரண்டு பாகங்களையும் அச்சிட்டு இம்மூன்றாம் பாகத்தையும் அச்சிட இசைந்த P. R. ராமையர் கம்பெனியார் இறுதியிற் பல வேறு வேலைகளை மேற்கொண்டனராக யாம் இப்பாகம் எக்காலம் முடிவுபெறுமோ என கவற்சியுறலாயினம். ஈற்றிலுள்ள 72-பக்கங்கள் கார்டியன் அச்சுக்கூடத்தாரின் உதவியால் அச்சிடப்பட்டு இப்பாகம் ஒருவாறு முடிவுற்றது. இங்ஙனம் திருப்புகழ் மூன்று பாகங்களும் முடிய ஆறு வருடங்களாயின.

திருப்புகழ் முதலிரண்டு பாகங்களின் முகவுரையிற் கூறியாங்கு இப் பாகத்தில் திருப்புகழ்ப் பொதுப் பாடல்களும், அருணகிரிநாத ஸ்வாமிகள் அருளிய வேறு நூல்களும், சந்த ஆராய்ச்சி, ஸ்வாமிகளின் சரித்திர ஆராய்ச்சி, திருப்புகழ் முதலிய நூல்களின் ஆராய்ச்சி ஆகிய இவையெலாம் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி, குறிப்புரை இவை தம்முட் பிழைகள் மலிந்திருக்கும். கற்றுணர்ந்த

பெரியோர் தயைகூர்ந்து அவைதமை எமக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேம்.

இனி, இப்பாகத்திலுள்ள நூல்களின் அமைப்பினைக் குறித்துச் சில கூறுவாம். திருப்புகழ்ப் பொதுப் பாடல்களுள் முதல் 131-பாடல்கள் [996-1126] சந்த இனப்படி வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. அப்பால் தனிச் சந்த முள்ள பாடல்கள் 178 [1127 - 1304]—பெரிய பாடல்கள் 74 [1127-1200], நடுத்தரப்பாடல்கள் 80 [1201-1279], சிறிய பாடல்கள் 24 [1280-1303]—என்னும் வரிசையில் அகராதி முறைப்படி அச்சிடப்பட்டுள்ளன. **997, 1000, 1137, 1138, 1153, 1167, 1191, 1242, 1283, 1288, 1304** ஆகிய எண்களுள்ள 11-பாடல்கள் புதியன. நூலகத்து ஒவ்வொரு புதுப்பாடலின் முன்னும் "பு" என்னும் எழுத்தை யச்சிட்டும், இறுதியிற் பாட்டு முதற்குறிப் பகராதியில் புதுப்பாடலின் தொடககத்தின் முன் உடுக்குறி (*) யிட்டும், இப் புதுப் பாடல்களை விதந்திருக்கின்றேம். திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்த ரலங்காரம், கந்தரநுபூதி என்னும் நூல்களுக்கு ஆங்காங்கு, குறிப்புரைகளும், ஈற்றில் ஆராய்ச்சியும் சேர்சகப்பட்டுள்ளன. அருணகிரிநாத ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "திருவெழுகூற்றிருக்கை" என்பது எமது தந்தையார் வைத்திருந்த கையெழுத்துப் புத்தகங்கள் ஒன்றிற் காணப்பட்டது. அப் பாடலி லுள்ள சில குறைபாடுகள் காரணமாக அவர்கள் அதை வெளியிடாது வைத்திருந்தனர் போலும். அதன் நடையும் பொருளும் சிறந்தனவாகத் தோற்றுதலால் அதனை யாம் கண்டவாறே அச்சிட்டுள்ளேம். அருணகிரிநாத ஸ்வாமிகள் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமாகப் பின்னர் விளங்கின இரண்டொரு விஷயங்களை ஈற்றில் "திருப்புகழ் மூன்று பாகங்களுக்கும் அநுபந்தம்" என்னும் பகுதியிற் சேர்த்துள்ளோம். திருப்புகழ் ஆராய்ச்சி என்னும் பகுதியில் 85-தலைப்புக்களின் கீழ் அநேக விஷயங்களைப் பாகு

படுத்தி விளக்கியுள்ளோம். இவ்வாராய்ச்சியிற் பல பிழைகளும் குறைகளும் இருக்கும். எனினும் இவ்வாராய்ச்சி மிக உதவும் என நம்புகின்றோம்.

"ஆறு கொலாம் அவர் தானமு நூல்களும்" எனப் *பிறிதோரிடத்துக் கூறியாங்கு, ஆறுபடை வீட்டுக்கும், ஆறெழுத்துக்கும் நாயகனும், ஆற்றிற் றோற்றிய ஐயனுமாகிய ஆறுமுகப் பிரானுக்கு உகந்த நூல்கள் † ஆறும் ஒருங்கே இருத்தல்வேண்டும் என்னும் ஆசை மீக்கூர, நக்கீரதேவர் அருளிச்செய்ததும், அருணகிரிநாதஸ்வாமிகளாற் பாராட்டப்பட்டதுமான திருமுருகாற்றுப்படை திருப்புகழ் மூன்று பாகங்களுக்குங் கடைக்காப்பாக இம் மூன்றாம் பாகத்தின் இறுதியில் அச்சிடப்பட்டுள்ளது.

திருப்புகழ் ஓலைப் புத்தகங்கள் இருக்கும் இடங்களை அன்பராயினோர் தேடி எழுதிய ஏடுகள் நைந்து மறையுமுன், புதுப்பாடல்களைச் சேகரிக்குமாறு யாம் மிகவும் வேண்டுகின்றோம். ஆறுமுகக்கடவுள் அநுக்கிரகிப்பாராக.

அக்ஷய ஹு ஐப்பசி மீ மதுரை 4 - 11 - 1926.	வ. சு. சண்முகம்,
சென்னை : 292, லிங்கசெட்டித் தெரு, 31 - 10 - 1926.	வ. சு. செங்கல்வராயன்.

* கந்தரந்தாதி ஆராய்ச்சி-பக்கம் 11

† 1. திருப்புகழ், 2. திருவகுப்பு, 3. கந்தரந்தாதி, 4. கந்தரலங்காரம், 5. கந்தரநுபூதி, 6. திருமுருகாற்றுப்படை.

பிழை திருத்தம்

(மூன்று பாகங்களுக்கும்)

☞ புத்தகத்தைப் படிக்கத் தொடங்குமுன் பின்வருந் திருத்தங்களைச் செய்துகொள்க. எழுத்துச் சிதைவினாலும் அச்சுப் பிறழ்வினாலும் சிற்சில இடங்களி லுண்டான பிழைகளை ஆங்காங்குத் தக்கவாறு திருத்திக்கொள்க.

(i) திருப்புகழ்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௫௭		2	வடமேற்கு	தென்மேற்கு
௨௭௫	...	20	வடமேற்கு	தென்கிழக்கு
௩௧௫	...	9	நல்லத்தம்புத்தூர்	நாலாட்டின்புத்தூர்
௩௬௯	...	28	காகமச்சி	காமகச்சி
...	615	5	குவடாரக	குவடார் கர
...	660	13	குண ரச சிதர்	குணர் சசிதரர்
௭௪௮	...	3	அறியயற்	அரியயற்
...	1051	5	பாலழிர	பாலாழி
௮௯௫	...	கீழ்க்குறிப்பு 1	நாகம	நாகம்
...	1137	1	மீளவும்	மீள்வன
...	1145	3	மாயை யுழற்றினிற்	மாமயலுழற்றனிற்
௮௯௮	1153	...	1153	பு. 1153.
௯௧௩	...	4	†	
,,	1180	இப்பாடல் "1000"–எண்ணுள்ள "தோடுமென் குழை" என்பதன் சந்தமுள்ள தாதலின் அதன்பின் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.		
௧௫௭	1239	25	வாங்கைகை	வாங்குகை

திருப்புகழ் முதற்குறிப் பகராதி.

௨	...	23 (வலதுபக்கம்)	கலவியினல	*கலவியினல

(ii) திருவகுப்பு.

க		14	ஜலராசி	§ ஜலராசி
கஉ	...	13	தொன்றிலிட்	தொன்றிலெட்

(iii) கந்தரந்தாதி.

கூ	...	16	செயயா	செய்யா
கரு	...	17	(கு-உ) "1	(கு-உ) "2
,,	...	18	(கு-உ) "2	(கு-உ) "1
ருச	..	31	வெட்சிமாலை	கடப்பமாலை
சுரு	...	5	மாபரமாய்	மாமரமாய்

(iv) வேல் விருத்தம்.

...	3	6	கிரியெலா	கிரியெலாம்
...	7	11	பருவுடற	பருவுடற்
...	9	2	வாய்கொள	வாய்கொள்
	9	7	காவெனவ	காவெனவு

(v) சந்தக்குறிப்பு - இரண்டாவது குறிப்பு.

ரு	...	22	தானனா	தானனா†
,,	...	29	தத்தம்	தத்தம்†
எ	...	25	722	*722
உகூ	...	4	தாத்த	XIX தாத்த
,,	...	17	தாத்தா	XX தாத்தா
,,	...	21	தாந்த	XXI தாந்த
௬0	...	4	தாந்தா	XXII தாந்தா
,,	...	12	தான	XXIII தான

(vi) திருப்புகழ் ஆராய்ச்சி.

உகூ	...	38 (இடது பக்கம்)	389	339
சுச	...	36 (வலது ,,)	நாரதகீத வீநோதன்	நாரதகீத விநோதன்
சுஎ	...	13 (வலப்பக்கம்)	ஐந்தர்ய்ப்	ஐந்தாய்ப்

உ

கணபதி துணை.

சிவமயம்.

வேலு மயிலுந் துணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்

பொதுப் பாடல்கள்.

996.

போத நிர்க்குண போதா நமோநம
நாத நிஷ்கள நாதா நமோநம
பூர ணக்கலை சாரா நமோநம பஞ்சபாண-
பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோநம
போக சொர்க்க பூபாலா நமோநம சங்கமேரு ;
மாத்ருத்ரய சேயே நமோநம
வேத னத்ரய வேளே நமோநம
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோநம என்றுபாத-
வாரி ஜத்தில்வி ழாதே மகோததி
யேழ்பி றப்பினில் மூழ்கா மனோபவ
மாயை யிருகழி யூடே விடாதுக லங்கலாமோ ;
கீத நிர்த்தவெ தாளா டவீநட
நாத புத்திர பாகீ ரதீகிரு
பாச முத்திர ஸ்ரீரூத வாகனர் தநயபாசர-

கேகயப்பிர தாபா முலாதிப
மாலிகைக்கும ரேசா விசாகக்ரு
பானு வித்ரும காரா ஷடானன புண்டரீகா ;
வேத வித்தக வேதா விநோதகி
ராத லக்ஷ்மிகி ரீடா மகாசல
வீர விக்ரம பாரா வதானவ கண்டசூர-
வீர நிட்டுர வீராதி காரணா
தீர நிர்ப்பய தீராபி ராமவி
நாயகப்ரிய வேலாயு தாசுரர் தம்பிரானே.

பு. 997.

வேத வித்தகா சாமீ நமோநம
வேல்மி குத்தமா சூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம விந்துநாத-
வீர பத்மசிர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேக மொத்தமா யூரா நமோநம விண்டிடாத ;
போத மொத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம துங்கமேவும்-
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா யார்பா நமோநம புண்டரீக ;
மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மாபு லோமசை
வீர மிக்கஎழ் பேர்மாதர் நீடினம நின்றுநாளும்-
வேத வித்தகீ வீமா விராகிணி
வீறு மிக்கமா வீணை கரேமக
மேரு வுற்றுவாழ் சீரே சிவாதமொ யங்காரீ ;
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீணைக பூஷணி
ஆயி நிதநியே கோமள மாதவி யென்றுதாழும்-

ஆர்யை பெற்றசீ ராளா நமோநம
சூலாரா யட்டுநீள் பேரா நமோநம
ஆர ணத்திஞர் வாழ்வே நமோநம தம்பிரானே.

998.

ஆவி காப்பது மேற்பத மாத லாற்புரு டார்த்தமி
தாமெ ஞப்பா மார்த்தம துணாரதே-
ஆனை மேற்பரி மேற்பல சேனை போற்றிட வீட்டொட
நேக நாட்டொடு காட்டொடு தடுமாறிப் ;
பூவை மார்க்குரு காப்புநி தான கூத்தொடு பாட்டொடு
பூவி னுற்றம ருத்தன கிரிதோயும்-
போக போக்பக லாத்தொடு வாழ்ப ராக்கொடி ராப்பகல்
போது போக்கியெ ஞக்கையை விடலாமோ ;
தேவி பார்ப்பதி சேர்ப்பர பாவ ஞர்க்கொரு சாக்ரஅ
தீத தீக்ஷப ரிக்ஷக ளறவோதுந்-
தேவ பாற்கர நாற்கவி பாடு லாக்ஷண மோக்ஷநி
யாக ராதகிழ் கார்த்திகை பெறுவாழ்வே ;
மேவி ஞர்க்கருள் தேக்குது வாத சாக்ஷச டாக்ஷர
*மேரு வீழ்த்தப ராக்ரம வடிவேலா-
வீர ராக்கத ரார்ப்பெழ வேத தாக்ஷக ஞக்கெட
வேலை கூப்பிட வீக்கிய பெருமாளே.

999.

ஏக மாய்ப்பல வாய்ச்சிவ போக மாய்த்தெளி வாய்ச்சிவ
மீதெ ஞக்குரு வார்த்தையை யுணாரதே-
ஏழு பார்க்குமவி யாக்கிரன் யானெ ஞப்பரி தேர்க்கரி
யேறு மாப்பிறு மாப்புட னாசாகித் ;
தோகை மார்க்கொரு காற்றெறுலை யாத வேட்கையி ஞற்கெடு
சோர்வி ஞற்கொடி தாக்கையை யிழுவாமுன்-

* மேரு=மலை, இங்கே கரவுஞ்சம்.

சோதி காட்ட*வ ராச்சுத நாத னூர்க்கருள் போற்றிய
தூரி தாப்பர மார்த்தம தருள்வாயே ;
நாக மேற்றுயில் வார்க்கய னுன பேர்க்கரி யார்க்கொரு
ஞான வார்த்தையி னுற்குரு பரனுய-
நாத நாட்டமு ருப்பல காலும் வேட்கையி னுற்புகல்
நாவ லோர்க்கரு ளாற்பத மருள்வாழ்வே ;
வேக மேற்கொ ளராபபுடை தோகை மேற்கொடு வேற்கொடு
வீர † மாக்குலை யாக்குல வரைசாய-
மேலை நாட்டவர் பூக்கொடு வேலை போற்றியெ னுத்தொழ
வேலை கூப்பிட வீசிய பெருமாளே.

பு. 1000.

தோடு மென்குழை யூடே போரிடு
வாளெ டுங்கயல் போலே யாருயிர்
சூறை கொண்டிடு வேல்போ லேதொடர் விழிமாதர்-
சூத கந்தனி லேமா லாயவ
ரோது‡மன்றறி யாதே யூழ்வினை
சூழும் வெந்துய ராலே தானுயிர் சுழலாதே ;
ஆடு வெம்பண §காகோ தாசன
மூறு கண்டிட மேல்வீழ் தோகையி
லாரும வண்கும ரேசா ஆறிரு புயவேளே-
ஆரு நின்றரு ளாலே தாதொழ
ஆண்மை தந்தருள் வாழ்வே தாழ்வற
ஆகி தந்தவ நாயேன வாழ்வுற அருள்வாயே ;

---

* குமாரக் கடவுள் ஸ்ரீ ஞானசம்பந்தராக வந்தபொழுது அச்சுதனுக்குச் சிவசாரூப்பியம் அளித்த வரலாறு குறிக்கப்பட்டது. வர அச்சுதன் எனப் பிரிக்க. "புகலு கொண்டற்குச் சித்தி யளிக்கும் பெருமானே." என்றார் 458-ம் பாடலிலும்.

† மா = மாமரமாய் நின்ற சூரன்.

‡ அன்று = விரோதச்சொல். § காகோதம் = காகோதரம்: பாம்பு; காகோத அசனம் = பாம்பாகிய உணவு.

ஓடு வெங்கதி ரோடே சோமனு
மூழி யண்டமும் லோகா லோகமு
மூரு மந்தர நாணு தேவரு   மடிபேண-
ஊழி டமபுயன் * வேலா வாலய
மூடு தங்கிய மாலா ராதர
வேத வெண்டிரை சூர்மா மூடுற   விடும்வேலா ;
† வேடு கொண்டுள வேடா ‡ வேடைய
வேழ வெம்புலி போலே வேடர்கள்
மேவு திண்புன மீதே மாதொடு   மிகமாலாய்-
மேக மென்குழ லாய்கீ கேளினி
வேறு தஞ்சமு நீயே யாமென
வேளை கொண்டபி ரானே வானவர்   பெருமாளே.

1001.

நாலி ரண்டித ழாலே கோலிய
ஞால முண்டக மேலே தானிள
ஞாயி றென்றுறு கோலா காலனு   மதின்மேலே-
ஞால முண்டபி ராணு தாரனும்
யோக மந்திர மூலா தாரனு
நாடி நின்றப்ர பாவா காரனு   நடுவாக ;
மேலி ருந்தகி ரீடா பீடமு
நூல றிந்தமணீமா மாடமு
மேத கும்ப்ரபை கோடா கோடியு   மிடமாக-
வீசி நின்றுள தூபா தீபவி
சால மண்டப மீதே யேறிய
வீர பண்டித வீரா சாரிய   வினைதீராய் ;
ஆல கந்தரி மோடா மோடிகு
மாரி பிங்கலை நாணு பேதகிய
மோகி மங்கலை லோகா லோகியெ   வுயிர்பாலும்-

* வேலாவாலயம் = கடல். † வேடனைப்போல் வேடங் கொண்டவனே ! ‡ வேடை = கொடுமை.

ஆன சமப்ரமி மாதா மாதவி
ஆதி யம்பிகை ஞாதா வானவ
ராட மன்றினி லாடா நாடிய அபிராமி ;
கால சங்கரி சீலா சீலித்ரி
சூலி மந்த்ர சுபாஷா பாஷணி
காள கண்டிக பாலீ மாலினி கலியாணி-
காம தந்திர லீலா லோகினி
வாம தந்திர நூலாய் வாள்சிவ
காம சுந்தரி வாழ்வே தேவர்கள் பெருமாளே.

1002.

போதில் ருந்துவி டாச்சதுர் வேதமொ ழிந்தவ னுற்*புளி
னாகமு கந்தவ னுற்றெறி வரிதான-
போதுயா செந்தழ லாப்பெரு வானநி றைந்தவி டாப்புக
ழாளன ருஞ்சிவ கீர்த்திய னெறிகாண ;
ஆதர வின்பருள் மாக்குரு நாதனெ னும்படி போற்றிட
ஆனப தங்களை நாக்கரு திடவேயென்-
ஆசையெ னும்படி மேற்கவி பாடுமி தயபல பார்த்தடி
யேனும நிந்தனை யேத்துவ தொருநாளே ;
காதட ரும்படி போய்ப்பல பூசலி டுங்கய லாற்கனி
வாயித ழின்சுவை யாற்பயில் குறமாதின்-
காரட ருங்குழ லாற்கிரி யானத னங்களி னுற்கலை
மேவும ருங்கத னுற்செறி குழையோலை ;
சாதன மென்றுமை யாப்பரி தாபமெ னும்படி வாய்த்தடு
மாறிம னந்தள ராததனி திரிவோனே-
சாகர மன்றெறி யாக்கொடு சூரரு கும்படி யாத்தினி
வேலையு மம்பெற வோட்டிய பெருமாளே.

1003.

வேடர்செ ழுந்தினை காத்திதண் மீதிலி ருந்தபி ராட்டியி
லோசன அம்புக ளாற்செயல் தடுமாறி-

---

* புள்ளின் ஆகம் உகந்தவன் = கருட வாகனத்தை விரும்பிய விஷ்ணு.

மேனித ளர்ந்தரு காப்பரி தாபமு டன்புன மேற்றிரு
வேளைபு குந்தப ராகரம மதுபாடி ;
நாடறி யும்படி கூப்பிடு நாவலர் தங்களை யார்ப்பதி
ஞானுல கங்களு மேத்திய இருதாளில்-
நாறுக டம்பணி யாப்பரி வோடு ; சந்தப ராக்ரம
நாடஅ ருந்தவம் வாய்ப்பது மொருநாளே ;
ஆடக மந்தர நீர்க்கசை யாமனு ரம்பெற நாட்டியொ
ராயிர வெம்பகு வாய்ப்பணி கயிறாக-
ஆழிக டைந்தமு தாக்கிய நேசர்பெ ரும்பசி தீர்த்தரு
ளாயனு மன்றெயில் தீப்பட அதிபார ;
வாடைநெ டுங்கிரி கோட்டிய வீரனு மெய்பர மாற்றிய
வாழ்வென வஞ்சக ராக்ஷதர் குலமாள-
வாசவன் வன்சிறை மீட்டவ னாருமட ங்கலு மீட்டவன்
வானுல குங்குடி யேற்றிய பெருமாளே.

1004.

இலகி யிருகுழை கிழிகயல் விழியினு
மிசையி னசைதரு மொழியினு மருவம
ரிருள்செய் குழலினு மிடையினு நடையினு மநுராக-
இனிமை தருமொரு இதழினு நகையினு
மிளைய மருகமத தனகுவ டழகினு
மியலு மயல்கொடு துணிவது பணிவது தணியாதே;
குலவி விரகெனு மளறிடை முழுகிய
கொடிய நடலைய னடமிட வருபிணி
குறுகி யிடமம னிறுதியி லுயிரது கொடுபோநாள்-
குனகி யழுபவர் அயர்பவர் முயல்பவர்
குதறு முதுபிண மெடுமென வொருபறை
குணலை யிடஅடு சுடலையில் நடவுத லினிதோதான்;
மலையில் நிகரில தொருமலை தனையுடல்
மறுகி யலமர அறவுர முடுகிய
வலிய பெலமிக வுடையவ னுடையவு மதிகாய-

மவுலி யொருபது மிருபது கரமுடன்
மடிய வொருசரம் விடுபவன் மதகரி
மடுவில் முறையிட வுதவிய க்ருபைமுகில் மதியாதே;
அலகை யுயிர்முலை யமுதுசெய் தருளிய
அதுல னிருபத மதுதனி லெழுபவி
மடைய அளவிட நெடுகிய அரிதிரு மருகோனே-
அவுண ருடலம துலமர அலைகட
லறவு மறுகிட வடகுவ டனகிரி
மடைய இடிபொடி பட அயில் விடவல பெருமானே.

1005.

கடலை பயறொடு துவரையெ ளவல்பொரி
சுகியன் வடைகனல் கதலியி னமுதொடு
கனியு முதுபல கனிவகை நலமிவை யினிதாகக்-
கடல்கொள் புவிமுதல் துளிரொடு வளமுற
அமுது துதிகையில் மனமது களிபெற
கருணை யுட*னளி திருவருள் மகிழ்வுற நெடிதான;
குறுகு வயிறினி லடைவிடு மதகரி
பிறகு வருமொரு முருகசண் முகவென
குவிய இருகர மலர்விழி புனலொடு பணியாமற்-
கொடிய நெடியன அதிவினை துயர்கொடு
வறுமை சிறுமையி னலைவுட னரிவையர்
குழியில் முழுகியு மழுகியு முழலவகை யொழியாதோ;
நெடிய கடலினில் முடுகியெ வருமுறு
மறலி வெருவுற ரவிமதி பயமுற
நிலமு நெறுநெறு நெறுவென வருமொரு கொடிதான-
நிசிசர் கொடுமுடி சடசட சடவென
பகர கிரிமுடி கிடுகிடு கிடுவென
நிகரி லயில்வெயி லெழுபசு மையநிற முளதான;
நடன மிடுபரி துரகத மயிலது
முடுகி கடுமையி லுலகமை வலம்வரு
நளின பதவர நதிகுமு குமுவென முநிவோரும-

* அரி = அளி.

நறிய மலர்கொடு ஹரஹர ஹரவென
அமரர் சிறைகெட நறைகமழ் மலர்மிசை
நணியெ சரவண மதில்வள ரழகிய பெருமாளே.

1006.

கமல குமிளித முலைமிசை தாகிவிடு
விகட கெருவிக ளசடிகள் கபடிகள்
கலக மிடுவிழி வலைகொடு தழுவிக ளிளைஞோர்கள்-
கனலி விடுமெழு கெனநகை யருளிக
ளநெக விதமொடு தனிமென நடவிகள்
கமரில் விழுகிடு கெடுவிகள திருடிகள தமைநாடி;
அமுத மொழிகொடு தவநிலை யருளிய
பெரிய குணதர ருரைசெய்த மொழிவகை
அடைவு நடைபடி பயிலவு முயலவு மறியாத-
அசட னறிவிலி யிழிகுல னிவனென
இனமு மனிதரு ளணைவரு முரைசெய
அடிய னிதுபட அரிதினி யொருபொரு ளருளவாயே;
திமித திமிதிமி டமடம டமவென
சிகர கரதல டமருக மடிபட
தெனன தெனதென தெனவென நடைபட முநிவோர்கள்-
சிவமி லுருகியு மரகர வெனவுநி
பாத பரிபுர மலரடி தொழஅநு
தினமு நடமிடு பவரிட முறைபவள தருசேயே;
குமர சரவண பவதிற லுதவிய
தரும *நிகரொடு புலமையு மழகிய
குழக குருபர னெனவொரு மயில்மிசை வருவோனே-
குறவ ரிடுதினை வனமிசை யிதணிடை
மலையு மரையொரி பசலைகொள் வளர்முலை
குலவு குறமக ளழகொடு தழுவிய பெருமாளே.

* நிகர் = ஒளி.

1007.

தசையு முதிரமு நிணமொடு செருமிய
கரும கிருமிக ளொழுகிய பழகிய
சடல வுடல்கடை சுடலையி லிடுசிறு குடில்பேணுஞ்-
சகல கருமிகள் * சருவிய சமயிகள்
சரியை கிரியைகள் தவமெனு மவர்சிலர்
சவலை யறிவினர் நெறியினை விடஇனி யடியேனுக்;
கிசைய இதுபொரு ளென அறி வுறவொரு
வசன முறஇரு வினையற மலமற
இரவு பகலற எனதற நினதற அநுபூதி-
இனிமை தருமொரு தனிமையை மறைகளி
னிறுதி யறுதியி டவரிய † பெறுதியை
இருமை யொருமையில் பெருமையை வெளிபட
மொழிவாயே;

அசல குலபதி தருமொரு திருமகள்
அமலை ‡ விமலைக ளெழுவரும் வழிபட
அருளி அருணையி லுறைதரு மிறைபவ ளபிராமி-
அநகை அநுபவை அநுதயை அபிநவை
அதல முதலெழு தலமவை முறைமுறை
அடைய அருளிய பழையவ ளருளிய சிறியோனே;
§ வசுவ பசுபதி மகிழ்தர வொருமொழி
மவுன மருளிய மகிமையு மிமையவர்
மரபில் வனிதையும் வனசரர் புதல்வியும் வடிவேலும்-
மயிலு மியலறி புலமையு முபநிட
மதுர கவிதையும் விதரண கருணையும்
வடிவு மிளமையும் வளமையு மழகிய பெருமாளே.

---

* சருவிய = போராடுகின்ற. † பெறுதி = பேறு.
‡ விமலைகள் எழுவர் = சப்த மாதர்கள்.
§ வசுவ பசுபதி = அக்கினி சொரூபி யாகிய சிவபிரான்.

1008.

நெடிய வடகுவ டிடியவு மெழுகிரி
நெறுநெ றெனநெரி யவுமுது பணிபதி
நிபிட முடிகிழி யவுநில மதிரவும் விளையாடும்-
நிகரில் கலபியும் ரவியுமிழ் துவசமும்
நினது கருணையு முறைதரு பெருமையும்
நிறமு மிளமையும் வளமையு மிருசர ணமும்நீப;
முடியு மபிநவ வனசரர் கொடியிடை
தளர வளர்வன ம்ருகமத பரிமள
முகுள புளகித தனகிரி தழுவிய திரடோளும்-
மொகுமொ கெனமது கரமுரல் குரவணி
முருக னறுமுக னெனவரு வனபெயர்
முழுது மியல்கொடு பழுதற மொழிவது மொருநாளே;
கொடிய படுகொலை நிசிசர ருரமொடு
குமுகு மெனவிசை யுடனிசை பெறமிகு
குருதி நதிவித சதியொடு குதிகொள விதியோடக்-
குமுறு கடல்குடல் கிழிபட வடுமர
மொளுமொ ளென அடி யொடலறி விழவுயர்
*குருகு பெயரிய வரைதொளை படவிடு சுடர்வேலா;
இடியு முனைபவி குலிசமு மிலகிடு
கவள தவளவி கடதட கனகட
இபமு மிரணிய தரணியு முடையதொர் தனியானைக்-
கிறைவ குருபர சரவண வெகுமுக
ககன புனிதையும் வனிதைய ரறுவரும
எமது மகவென வுமைதரு மிமையவர் பெருமாளே.

1009.

பகர நினைவொரு நினையள விலுமிலி
கருணை யிலியுன தருணையொ டுதணியல்
பழநி மலைகுரு மலைபணி மலைபல மலைபாடிப்-

---

*குருகு பெயரிய வரை=பறவைப் பெய ருடைய மலை: அது கிரவுஞ்சம்

பரவு மிடறிலி படிறுகொ டிடறுசொல்
பழகி யழகிலி குலமிலி நலமிலி
*பதிமை யிலிபவு ஷதுமிலி மகிமையி லி†குலாலன்;
திகிரி வருமொரு செலவினி லெழுபது
செலவு வருமன பவுரிகொ டலமரு
திருக னுருகுத லழுகுதல் தொழுகுதல் நினையாத-
திமிர னியல்பிலி யருளிலி பொருளிலி
திருடன் மதியிலி கதியிலி விதியிலி
செயலி லுணர்விலி சிவபத மடைவது மொருநாளே;
மகர சலநிதி முறையிட நிசிசரன்
மகுட மொருபது மிருபது திரள்புய
வரையு மறவொரு கணைதெரி புயலகுரு நருபதிதன்-
மடுவில மதகரி முதலென வுதவிய
வரத னிருதிறல மருதொடு பொருதவன்
மதலை குதலையின் மறைமொழி யிகழிர ணியனுகம்;
உகிரி னுதிகொடு வகிருமொ ரடலரி
திகிரி தரமர கதகிரி யெரியுமிழ்
உரக சுடிகையில் நடநவி லரிதிரு மருகோனே-
உருகு மடியவ ரிருவினை யிருள்பொரு
முதய தினகர இமகரன் வலமவரும்
உலக முழுதொரு நொடியினில வலமவரு பெருமானே.

1010.

முருகு செறிகுழ லவிழ்தர முகமதி
முடிய வெயர்வர முதுதிரை யமுதன
மொழிகள் பதறிட வளைகல கலவென அணைபோக-
முலையின் மிசையிடு வடமுடி யறஇடை
முறியு மெனஇரு பரிபுர மலறிட
முகுள அலரிள நிலவெழு இலவிதழ் பருகாநின்;

---

* பதிமை = பத்திமை. † ஒருகால், "திரிகையி லாயிரக் கோடி சுற் றேடு திருத்துளமே"-(கந்தரந்தாதி - ௬௪).

றுருகி யுளமுட லுடலொடு செருகிட
வுயிரு மெனதுயி ரெனமிக வுறவுசெய்
துதவு மடமக ளிர்களொடு மமளியி லநுராக-
உததி யதனிடை விழுகினு மெழுகினும
உழலு கினுமுன தடியிணை எனதுயி
ருதவி யெனவுனை நினைவது மொழிவது மறவேனே;
எருவை யொடுகொடி கெருடனும் வெளிசிறி
திடமு மிலையென வுலவிட அலகையின்
இனமும நிணமுண எழுகுறள் களுமிய லிசைபாட-
இகலி முதுகள மிசைமிசை யொடுதனி
யிரண பயிரவி பதயுக மிருநட
மிடவு மிகவெதி ரெதிரெதி ரொருதனு விருகாலும்;
வரிசை யதனுடன் வளைதர வொருபது
மகுட மிருபது புயமுடன் மடிபட
வலியி னொருகணை விடுகர முதலரி நெடுமாயன்-
மருக குருபர சரவண மதிலவரு
மகிப சுரபதி பதிபெற அவுணர்கள்
மடிய பொருதோனு மபிமானமுடை வரவல பெருமாளே.

1011.

இலகு வேலெனு மிருவினை விழிகளு
மெழுதொ ணாதெனு மிருதன கிரிகளு
மிசையி னூல்வகை யொசிதரு மொழிகளு மெதிரேவேகொண-
டெதிரி லாவதி பலமுடை யிளைஞரொ
னினிய மாவினை யிருளெனும வலைகொடு
இடைவி டாதெறு நடுவனு மெனவளை மடவார்தம்;
கலவி மால்கொடு கலைகளு மறிவொடு
கருதொ ணாதென முனிவுற மருள்கொடு
கரையி லாவிதி பெனுமொரு கடலிடை கவிழாதே-
கருணை வானவர் தொழுதெழு மயிலுறை
குமர கானவர் சிறுமியொ டுருகிய
* கமல தாளிணை கனவிலு நினைவுற அருள்தாராய்;

* கமல = முக கமலத்தை யுடையவனே.

பலகை யோடொரு பதுசிய மறமுறி
பகழி யானரா வணைமிசை துயில்தரு
பரமன் மால்படி யளவிடு மரிதிரு மருகோனே-
பழுதி லாமன முடையவர் மலர்கொடு
பரவ மால்விடை மிசையுறை பவரொடு
பரம ஞானமு மிதுவென வுரைசெய்த பெரியோனே;
அலகை காளிகள் நடமிட அலைகட
லதனில் நீள்குடல் நிணமலை பிணமலை
அசுரர் மார்பக மளறது படவிடு மயில்வேலா-
அரிய பாவல ருரைசெய அருள்புரி
முருக ஆறிரு புயஇய லிசையுடன்
அழகு மாண்மைபு மிலகிய சரவண பெருமாளே.

1012.

முருகு லாவிய குழலினு நிழலினு
மருவ மாகிய இடையினு நடையினு
முளரி போலுநல் விழியினு மொழியினு மடமாதர்-
முனிவி லாநகை வலையினு நிலையினு
மிறுக வாரிடு மலையெனு முலையினு
முடிவி லாததொர் சொருவிட மடுவித மயலாகி;
நரகி லேவிழு மவலனை யசடனை
வழிப டாதவொர் திருடனை மருடனை
நலமி லாவக கபடனை விகடனை வினையேனை-
நடுவி லாதன படிறுகொ ளிடறுசொல்
வதனில் மூழ்கிய மறவனை யிறவனை
நவின மார்பத மதுபெற ஒருவழி யருள்வாயே;
வரிய ராவினின் முடிமிசை நடமிடு
பாத மாயவ னெழுபுவி யளவிடு
வரதன் மாதவ னிரணிய னுடலிரு பிளவாக-
வகிரு மாலரி திகிரிய னலையெறி
தமர வாரிதி முறையிட நிசிசரன்
மகுட மானவை யொருபதும் விழவொரு கணையேவும்;

கரிய மேனியன் மருதொடு பொருதவ
*னினிய பாவல னுரையினி லொழுகிய
கடவுள் வேயிசை கொடுநிரை பரவிடு மபிராமன்-
கருணை நாரண னரபதி சுரபதி
மருக கானக மதனிடை யுறைதரு
கரிய வேடுவர் சிறுமியொ டுருகிய பெருமாளே.

1013.

அரிசன பரிசமு லங்குநாமருக
கலசமு மதனுய ரம்பொன் மாமுடி
யதுமென இளைஞர்கள் நெஞ்சு மாவியு மொருகோடி-
அடைபடு குடயுக ளங்க ளாமெனு
ம்ருகமத களபம ணிந்த சீதள
அபிநவ கனதன மங்கை மாருடன் விளையாடி;
இரவொடு பகலொழி வின்றி மால்தரு
மலைகட லளறுப டிந்து வாயமு
தினிதென அருளமு ருந்தி யார்வமொ டிதமாகி-
இருவரு மருவிய ணைந்து பாற்படு
மருவினை யறவும றந்து னீள்தரு
மிணைமல ரடிகள்நி னைந்து வாழ்வது மொருநாளே;
சுரர்குல பதிவிதி விண்டு தோளுரி
யுடைபுனை யிருடிக ளண்ட ரானவர்
துதிசெய எதிர்பொர வந்த தானவ ரடிமாள-
தொலைவறு மலைகயி னங்க ளானவை
நடமிட நிணமலி துன்ற வேயதில்
துவரிது புளியிது தொய்ந்த தீந்தது இதுவென்றல்;
பருகுத லரியது கந்த தீதிது
உளதென குறளிகள் தின்று மேதகு
பசிகெட வொருதனி வென்ற சேவக மயில்வீரா-
பகிரதி சிறுவவி லங்க லூடுறு
குறமகள் கொழுநப டர்ந்து மேலெழு
பருவரை யுருவவெ றிந்த வேல்வல பெருமாளே.

---

* "வண்டமிழ் பயில்வோர் பின் திரிகின்றவன்" என்றார் பிறி தோரிடத்தும்-[திருப்புகழ்-3]

1014.

உரைதரு பரசம யங்க ளோதுவ
துருவென அருவென வொன்றி லாததொ
ரொளியென வெளியென வுபய ராமென இமபராநின்-
றுலகுகள் நிலைபெறு தமப மாமென
வுரைசெய அதுபொருள் கண்டு மோனமொ
டுணர்வுற வுணர்வொடி ருந்த நாளுமி றந்திடாதே ;
பரகதி பெறுவதொ ழிந்தி டார்வன
பரிசன தெரிசன கந்த வோசைகள்
பலநல விதமுள துன்ப மாகிம யங்கிடாதே-
பரிபுர பதமுள வஞ்ச மாதர்கள்
பலபல விதமுள துன்ப சாகர
படுகுழி யிடைவிழு பஞ்ச பாதக னென்றுமாவேன் ;
அரகர சிவசுத கந்த னேநின
தபயம பயமென நின்று வானவ
ரலறிட வொழிகினி யஞ்சி டாதென அஞ்சலகூறி-
அடல்தரு நிருதர நந்த வாகினி
யமபுர மடையஅ டர்ந்து போர்புரி
அசுரன தகலமி டந்து போகவ கிர்ந்தவேகம ;
விரிகடல் துகளெழ வென்ற வேலவ
மரகத கலபசி கண்டி வாகன
விரகுள சரவண முந்தை நான்மறை யந்தமோதும-
விரைதரு மலரிலி ருந்த வேதனும
விடவர வமளிது யின்ற மாயனும
விமலைகொள் சடையர னும்ப ராகிய தம்பிரானே.

1015.

இமகிரி மதத்திற் புயங்க வெம்பணி
கயிறது சுற்றித் தரங்க வொண்கட
லிமையவர் பற்றிக் கடைந்த அன்றெழு நஞ்சுபோலே-
இருகுழை தத்திப் புரண்டு வந்தொரு
குமிழையு மெற்றிக் கரும்பெ னுஞ்சிலை
ரதிபதி வெற்றிச் சரங்க ளஞ்சையும் விஞ்சிநீடு ;

சமரமி குத்துப் பரந்த செங்கயல்
விழியினில் மெத்தத் ததும்பி விஞ்சிய
தயனிய வெற்புக் கிசைந்த வம்பணி கொங்கைமீதே-
தனிமனம் வைத்துத் தளர்ந்து வண்டமர்
குழலியர் பொய்க்குட் கலங்க லின்றியெ
சததளம் வைத்துச் சிவந்த நின்கழல் தந்திடாயோ;
அமரர்து திக்கப் புரந்த ரன்தொழ
எழுபது வர்க்கக் குரங்கு கொண்டெற்
றலையைய டைத்துக் கடந்து சென்றெதி முந்துபோரில்-
அசுரர்மு தற்கொற் றவன்பெ ருந்திற
லிருபது கொற்றப் புயங்கள் சிந்திட
அழகிய கொத்துச் சிரங்க ளொன்பது மொன்றுமாளக்;
கமலய னாகம்பைச் சார்ந்து றந்தவர்
மநுபசு பட்டுக்கக் கொண்ணுறை யந்தொண்ட
கலைப்பற வொப்பற்ற துமைப யம்புலி கங்கைசூடுங்-
கடவுளர் பக்கத் தணங்கு தந்தருள்
குமரகு றத்தத் தையைப் பிலைதி ரிந்தவள்
கடினத னத்திற் கலந்தி லங்கிய தம்பிரானே.

1016.

முகமுமி னுக்கிப் பெருங்க ருங்குழல்
முகிலைய விழ்த்துச் செருந்தி சண்பக
முடியனி றைத்துத் ததும்பி வந்தடி முனபிறுக-
முலையைய சைத்துத் திருந்த முன்றரி
கலையைநெ கிழ்த்துப் புனைந்து வஞ்சக
முறுவல்வி ளைத்துத் துணிந்து தந்தெரு முன்றிலூடே;
மகளிர்வ ரப்பிற் சிறந்த பந்தியின்
மதனனு நிற்கக் கொளுந்து வெண்பிறை
வடவையெ றிக்கத் திரண்டு * பண்டனை வண்டுபாட-
மலயநி லத்துப் பிறந்த தென்றலு
நிலைகுலை யத்தொட் டுடம்பு புண்செய
மயலைய ளிக்கக் குழைந்து சிந்தைம லங்கலாமோ;

* பண்டனை = பண்தனை.

படலைவலை பிடகப புகுந்து *கந்தர
ககனமு கட்டைப பிளந்து மந்தர
பருவரை யொக்கச் சுழன்று பின்புப றந்துபோகப்-
பணாமணி பட்சத துரங்க முந்தணி
முடுகிந டத்திக் கிழிந்து விந்தெழு
பரவைய றப்ப்ர பஞ்சநின் றுப யந்துவாடக்;
குகனென முக்கட் சயம்பு வுப்ரிய
மிகவசு ரர்க்குக் குரம்பை வந்தரு
குறவமா குத்திப் பொருந்தொ டும்படை யென்றவேளே-
குழை†சயை யொப்பற் றிருந்த சங்கரி
கவுரிபெ டுந்துப் பரிந்து கொங்கையில்
குணவமு துய்க்கத் தெரிந்து கொண்டருள் தம்பிரானே.

1017.

படிதனி லுறவெனு மனைவர்கள் பரிவொடு
பக்கத் திற்பல கத்திட் டுத்துயர் கொண்டுபோவப்-
பணைமர விறகுடை யழலிடை யுடலது
பற்றக் கொட்டுகள் தட்டிச் சுட்டலை யொனறியேகக்;
கடிசம னுயிர்தனை யிருவிழி யனலது
கக்கச் சிக்கென முட்டிக் கட்டியு டன்றுபோமுன்-
கதிதரு முருகனு மெனநினை நினைபவர்
கற்பிற் புக்கறி வொக்கக் கற்பது தந்திடாயோ;
வடகிரி தொளைபட அலைகடல் சுவறிட
மற்றுத் திக்கெனு மெட்டுத் திக்கிலும வென்றிவாய-
வலியுட னெதிர்பொரு மசுரர்கள் பொடிபட
மட்டித் திட்டியர் சொக்கைக் குத்திம லைந்தவீரா;
அடர்சடை மிசைமதி யலைஜல மதுபுனை
அத்தர்க் குப்பொருள் கற்பித் துப்புகழ் கொண்டவாழ்வே-
அடியவர் முடியினும் வடிவுட னுழைமவு
னத்திற் பற்றற நித்தச் சுத்தர்கள் தம்பிரானே.

---

* கந்தரம் = மேகம். † சயை = பார்வதி.

1018

விடமென அயிலென அடுவன நடுவன மிளிர்வன சுழல்விழி
வித்தைக் குப்பக ரொப்புச் சற்றிலை யென்றுபேசும்-
விரகுடை வனிதைய ரணைமிசை யுருகிய வெகுமுக கலவியி
லிச்சைப் பட்டுயிர் தட்டுப் பட்டுவு ழன்றுவாடும் ;
நடலையில் வழிமிக அழிபடு தமியனை நமன்விடு திரளது
கட்டிச் சிக்கென வொத்திக கைக்கொடு கொண்டுபோயே-
நரகதில் விடுமெனு மளவினி லிலகிய நறைகமழ் திருவடி
முத்திக் குட்படு நித்யத் தத்துவம வந்திடாதோ ;
இடியென அதிர்குரல் நிசிசரர் குலபதி யிருபது திரள்புய
மற்றுப் பொற்றலை தத்தக் கொத்தொடு நஞ்சுவாளி-
எரியெழ முடுகிய சிலையின ரழகொழு கியலசிறு வினைமகள்
பசலைப் பட்சித னைக்கைப பற்றிடு மிந்தரலோகா ;
வடவரை யிடிபட அலைகடல் சுவறிட மகவரை பொடிபட
மைக்கட் பெற்றிடு முக்ரக் கட்செவி யஞ்சசூரன்-
மணிமுடி சிதறிட அலகைகள் பலவுடன் வயிரவர் நடமிட
முட்டிப் பொட்டெழ வெட்டிக குத்திய தம்பிரானே.

1019.

தூகையில்நவ நாதருஞ் சிறந்த
முகைவனச சாதனுந் தயங்கு
குணமுமசு ரேசருந தரங்க முரல்வேதக-
குரகதபு ராரியும் ப்ரசண்ட
மரகதமு ராரியுஞ் செயங்கொள்
குலிசகைவ லாரியுங் கொடுங்க ணறநூலும் ;
அகலிய புராணமும் ப்ரபஞ்ச
சகலகலை நூல்களும் பரந்த
அருமறைய நேகமுங் குவிந்தும் அறியாத-
அறிவுமறி யாமையுங் கடந்த
அறிவுதிரு மேனியென் றுணர்ந்துன்
அருணசர ணாரவிந்த மென்று அடைவேனோ ;

பகைகொள் துரி யோதனன் பிறந்து
படைபொருத பாரதந் தெரிந்து
பரியதொரு கோடு கொண்டு சண்ட வரைமீதே-
பழுதறவி யாசனன் றியம்ப
எழுதியவி நாயகன் சிவந்த
பவளமத யானைபின்பு வந்த முருகோனே;
மிகுதமர சாகரங் கலங்க
எழுசிகர பூதரங் குலுங்க
விபரிதநி சாசரன் றியங்க அமராடி-
விபுதர்குல வேழமங்கை துங்க
பரிமளப டீரகும்ப விம்ப
ம்ருகமதப யோதரம் புணர்ந்த பெருமாளே.

1020.

மழையளக பாரமுங் குலைந்து
* வரிபரவு நீலமுஞ் சிவந்து
மதிமுகமும் வேர்வுவந் தரும்ப அணைமீதே-
மகுடதன பாரமுங் குலுங்க
மணிகலைக ளேறவுந் திரைந்து
† வசமழிய வேபுணர்ந் தணைந்து மகிழ்வாகிக்;
குழையஇத ழூறலுண் டழுந்தி
குருகுமொழி வாய்மலர்ந்து கொஞ்ச
குமுதபதி போகபொங்கு கங்கை குதிபாயக்-

---

* "வரிசெறியு நீலமுங் குவிந்து"—என்றும் பாடம்.

† "வசமழிய வேபு ணர்ந்த வின்ப மதிலாகங்;
குழைய இத ழூறலுண்டு கொண்டு
குனகி யெழில் வாய் மலர்ந்து கொஞ்ச
குவியகர தாடனங்கள் பொங்க நகரேகை—
குறிகள் செய நூபு ரங்கள் கொஞ்ச
மதனகலை யாகமங்கள் மிஞ்ச
கொடியமட மாத ரின்ப நம்பி யழிவேனோ;"—
என்றும் பாடம்.

சுழியிலிழி யாவிதங் க*ளொங்கு
மதனகலை யாகமங்கள் விஞ்சி
குமரியர்க ளோடுழன்று நைந்து விடலாமோ ;
எழுபடைகள் சூரவஞ்ச ரஞ்ச
இரணகள மாகவுன்று சென்று
† எழுசிகர மாநிலங் குலுங்க விசையூடே-
‡ எழுகடலு மேருவுங் கலங்க
விழிபடர்வு தோகைகொண்ட துங்க
இயல்மயிலின் மாறுகொண் டமர்ந்த வடிவேலா ;
பொழுதளவு நீடுகுன்று சென்று
குறவர்மகள் காலினும் பணிந்து
புளிஞரறி யாமலுந் திரிந்து புனமீதே-
புதியமட லேறவுந் துணிந்த
அரியபரி தாபமுந் தணிந்து
புளகிதப யோதரம் புணர்ந்த பெருமாளே.

1021.

கற்பார்மெய்ப் பாட்டைத் தவறிய
சொற்பாகைக் காட்டிப் புழுகொடு
கஸ்தூரிச் சேற்றைத தடவிய இளநீரைக்-
கட்சேலைக் காட்டிக் குழலழ
கைத்தோளைக் காட்டித் தரகொடு
கைக்காசைக் கேட்டுத தெருவினில் மயில்போலே ;
நிற்பாருக் காட்பட் டுயரிய
வித்தாரப பூக்கட் டிலின்மிசை
நெட்டூரக் கூட்டத் தநவர தழுமாயும்-
நெட்டாசைப் பாட்டைத் தரிசற
விட்டேறிப் போய்ப்பத் தியருடன்
நெக்கோதிப் போற்றிக் கழலிணை பணிவேனோ;

---

* ஒங்கு=ஓங்கு. † 'எழுகிரிகள்' என்றும் பாடம்.

‡ எழுகடலு நீர்வறண் டிரங்க
அமரர்நட மாடிநின்று பொங்க
எழின்மயிலி லேறிகந்த துங்க"—என்றும் பாடம்.

வெற்பால்மத் தாக்கிக் கடல்கடை
மைச்சாவித் தாக்கைக் கடவுளை
விட்டார்மூக் கோட்டைக் கொருகிரி யிருகாலும்-
விற்போலக் கோட்டிப் பிறகொரு
சற்றேபற் காட்டித் தழல்எழு
வித்தார்தத் வார்த்தக் குருபர னெனவோதும்;
பொற்பாபற் றுக்கைப் புதுமலர்
பெட்டேயப் பாற்பட் டுயரிய
பொற்றோளிற் சேர்த்தக் கருணைசெ யெனமாலாய்ப்-
புட்கானத் தோசக் கிரியிசை
பச்சேனற் காத்துத் திரிதரு
பொற்பூவைப் பேச்சுக் குருகிய பெருமாளே.

1022.

சிற்றாயக் கூட்டத் தெரிவையர்
வித்தாரச் சூழ்ச்சிக் கயல்விழி
சற்றேறப் பார்த்துச் சிலபணி விடையேவிச்-
சிற்றூபத் தாக்கைப் பொருள்கொடு
* பித்தேறிக் கூப்பிட் டவர்பரி
செட்டாமற் றூர்த்தத் தனைபந் தியுகாலே;
உற்றார்பெற் றோர்க்குப் பெரிதொரு
பற்றாயப் பூட்டுக் கயிறுகொ
டுச்சாயத் தாக்கைத் தொழிலொடு தடுமாறி-
உக்காரித் தேக்கற் றுயிர்நழு
விக்காயத் தீப்பட் டெரியுட
லுக்கேன்மெய்க் காட்டைத் தவிர்வது மொருநாளே;
வற்றாமுற் றுப்பச் சிளமுலை
யிற்பால்கைப் பார்த்துத் தருமொரு
மைகதாமக் கோட்டக் குலமயில தருபாலா-
மத்தோசைப் போக்கிற் றயிருறி
நெய்ப்பாலுக் காய்ச்சிக் கிருபதம
வைத்தாடிக் காட்டிப் பருகரி மருகோனே;

---

* பித்தேறி = பித்தேற்றி.

* கற்றாவிற காட்டிக் † கரைதுறை
‡ நற்றாயிற் காட்டிய புகழ்§கலை
கற்றார் சொற் கேட்கத தனிவழி வருவோனே-
கைச்சூலக் கூற்றைக் கனைமத
னைத்தாள்பட் டார்பபக் கனல்பொழி
கர்த்தாவுக் கேற்கப் பொருளருள் பெருமாளே.

1023.

இருட்குழலைக் குலைத்துமுடித்
தெழிற்கலையைத திருத்தியுடுத்
திணைக்கயலைப் புரட்டிவிழித ததிபார-
இழைக்களபப் பொருபபணிகச்
செடுத்துமறைத் தழைத்துவளைத
திருத்தியகப படுத்திநகைத் துறவாடிப ;
பொருட்குமிகத் துதிததிளகிப்
புலப்படுசித் திரக்காணப்
புணர்ச்சிவிளைத் தருக்குமாத தையர்மோகப்-
புழுத்தொளையிற் றிளைத்ததனைப்
பொறுத்தருளிச் சடக்கெனஅப்
புறத்திலழைத் திருததியளித் திடுவாயே ;
உருத்திரரைப் பழிததுலகுக்
குகக்கடையப் பெனக்ககனத்
துடுததகரப் படுத்துகிரித் தலமேழும்-
உடுத்தபொலப் பொருப்புவெடித்
தொலிப்பமருத் திளைப்பநெருப்
பொளிக்கஇருப் பிடத்தைவிடச் சுரரோடித் ;
திரைக்கடலுட் படச்சுழலச்
செகத்ரையமிப் படிக்கலையச்
சிரித்தெதிர்கொக் கரித்துமலைத் திடுபாவி-

* கல் தா வில் காட்டி = மலையை யொத்த வலிவுள்ள வில்லைக் காட்டி.
† கரைதுறை = சொல்லுகின்ற துறையை.
‡ நற்றாயில் காட்டி புகழ் = நற்றா யிரங்க லாகப் "பொன் போலுங் கள்ளி" என்றெடுத்துக்காட்டிப் புகழ்ந்த.
§ கலை கற்றார் = பொய்யாமொழிப் புலவர்.

செருக்கழியத் தெழித்துதிரத்
திரைக்கடலிற் சுழித்தலையிற்
றிளைத்தஅயிற் காக்குமரப் பெருமாளே.

1024.

வினைத்திரளுக் கிருப்பெனவித்
தகப்படவிற் சலப்பிலமிட்
டிசைக்குமிடற் குடிற்கிடைபுக் கிடுமாய—
விளைப்பகுதிப் பயப்பளவுற்
றமைத்ததெனக் கருத்தமைவிற்
சகப்பொருள்மெய்க் குறப்பருகக் கருதாதே;
எனக்கெதிரொப் பிசைப்பவரெத்
தலத்துளரெச் சமர்த்தரெனப்
புறத்துரையிட் டிகழ்ச்சியினுற் றிளையாதுன்-
எழிற்கமலத் திணைக்கழலைத்
தமிழ்ச்சுவையிட் டிறப்பற*எய்த்
திடக்கருணைத் திறத்தெனைவைத் தருள்வாயே;
சினத்தைமிகுத் தனைத்துலகத்
திசைக்கருதிக் கடற்பரவித்
திடத்தொடதிர்த் ததிர்த்திடலுற் றிடுசூரன்-
சிரத்துடன்மற் புயத்தகலத்
தினிற்குருதிக் கடற்பெருகச்
சிறப்புமிகத் திறத்தொடுகைத் திடும்வேலா;
கனத்தமருப் பினக்கரிநற்
கலைத்திரள்கற் புடைக்கிளியுட்
கருத்துருகத் தினைக்குளிசைத் திசைபாடிக்-
கனிக்குதலைச் சிறக்குயிலைக்
கதித்தமறக் குலப்பதியிற்
களிப்பொடுகைப் பிடித்தமணப் பெருமாளே.

---

* எய்த்திட = அறிய.

1025.

முத்து மணிபணிக ளாரத் தாலு
மொய்த்த மலைமுலைகொ டேவித் தார
முற்று மிளைஞருயிர் மோகித் தேகப் பொருமாதர்-
முற்று மதிமுகமும் வாணிற் காரு
மொத்த குழல்விழியும் வேய்நற் றோளு
முத்தி தருமெனும்வி னாவிற் பாயற் கிடைமூழ்கிப்;
புத்தி கரவடமு லாவிச் சால
மெத்த மிகஅறிவி லாரைத் தேறி
பொற்கை புகழ்பெரிய ராகப் பாடிப் புவியூடே-
பொய்க்கு ளொழுகியய ராமற் போது
மொய்த்த கமலஇரு தாளைப் பூண
பொற்பு மியல்புதமை யாகப் பாடப் புகல்வாயே;
பத்து முடியுமத னோடத் தோ*ளிர்
பத்து மிறையவொரு வாளிக் கேசெய்
பச்சை முகில்சதுர வேதத் தோடுற் றயனாரும்-
பற்ற வரியநட மாடத் தாளில்
†பத்தி மிகவினிய ஞானப் பாடல்
பற்று மரபுநிலை யாகப் பாடித் திரிவோனே;
மெத்த அலைகடலும வாய்விட் டோட
வெற்றி மயில்மிசைகொ டேகிச் சூரர்
மெய்க்கு ளுறஇலகு வேலைப் போகைக் கெறிவோனே-
வெற்றி மிகுசிலையி னாலிக் கோர்தம்
வித்து விளைபுனமும வேய்முத தீனும
வெற்பு முறையுமயில் வேளைக் காரப் பெருமாளே.

---

* இர் பத்தும் = ஈர் பத்தும் = இரு பததும்.

† ஞானப்பாடல பாடித் திரிவோன் = ஞான சம்பந்தர் "ஈ மில் காழிதன்னுள் உயர்ஞான சம்பந்தர்க் கன்று, ஞானமருள் புரிந் தான்"; "நாளு மின்னிசையாற் றமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்"- சுந்தரர் தேவாரம்.

1026.

விட்ட புழுகுபனி நீர்கத தூரி
மொய்த்த பரிமளப டீரச் சேறு
மிகக முலையிலே கூறிக் காசுக் களவேதான்-
மெதத விரியுமலர் சேர்கற பூர
மெத்தை மிசைகலவி யாசைப பாடு
விற்கு மகளிர்சுரு ளோலை கோலக் குழையோடே;
முட்டி யிலகுகுமிழ் தாவிக் காமன்
விட்ட பகழிதனை யோடிச் சாடி
மொய்க்கு பளியதனை வேலைச் சேலைக் கயல்மீனை-
முக்கி யமனையட மீறிச் சீறு
மைக்கண் விழிவலையி லேபட் டோடி
முட்ட வினையன்மரு ளாகிப் போகக் கடவேனோ;
செட்டி யெனுமொர்திரு நாமக் கார
வெற்றி யயில்தொடுப்ர தாபக் கார
திக்கை யுலகைவல மாகப் போகிக் கணமீனுஞ்-
சித்ர குலகலப வாசிக் கார
தத்து மகரசல கோபக் கார
செச்சை புனையுமண வாளக் கோலத திருமார்பா;
துட்ட நிருதர்பதி சூறைக் கார
செப்பு மமரர்பதி காவற் கார
துப்பு முகபடக போலத் தானக் கரிஞாரும்-
சொர்க்க கனதளவி நோதக் கார
முத்தி விதரணவு தாரக் கார
சுத்த மறவர்மகள் வேளைக் காரப் பெருமாளே.

1027.

ஏடுமல ருற்ற ஆடல்மத னுய்க்கு
மேவதுப ழிக்கும் விழியாலே-
ஏதையும ழிக்கு மாதர்தம யக்கி
லேமருவி மெத்த மருளாகி;

நாடுநகர் மிக்க வீடுதன மக்கள
நாரியர்கள் சுற்ற மிலைபேறு-
ஞானவுணர் வற்று நானெழுபி றப்பும
நாடுநர கத்தில் விழலாமோ;
ஆடுமர வத்தை யோடியுடல் கொத்தி
யாடுமொரு பச்சை மயில்வீரா-
ஆரணமு ரைக்கு மோனகவி டத்தில்
ஆருமுய நிற்கு முருகோனே;
வேடுவர்பு னத்தில் நீடுமித ணத்தில
மேவியகு றத்தி மணவாளா-
மேலசுர ரிட்ட தேவர்சிறை வெட்டி
மீளவிடு வித்த பெருமாளே.

1028.

சீதமலம் வெப்பு வாதமிகு பித்த
மானபிணி சுற்றி யுடலூடே-
சேருமுயிர் தப்பி யேகுமவண மிக்க
தீதுவினை விக்க வருபோதில்;
தாதையொடு மக்கள் நீதியொடு துக்க
சாகரம தற்கு ளழியாமுன்-
தாரணி தனக்கு ளாரண முரைத்த
தாள்தர நினைத்து வரவேணும்;
மாதர்மய லுற்று வாடவடி வுற்று
மாமயிலில் நித்தம் வருவோனே-
மாலுமய னொப்பி லாதபடி பற்றி
மாலுழலு மற்ற மறையோர்முன;
வேதமொழி வித்தை யோதியறி வித்த
நாதவிறல் மிக்க இகல்வேலா-
மேலசுர ரிட்ட தேவர்சிறை வெட்டி
மீளவிடு வித்த பெருமாளே.

1029.

தோடுபொரு மைக்க ணுடைவடி வுற்ற
தோர்தனம சைத்து இளைஞோர்தம்-
தோள்வலி மனத்து வாள்வலி யுழக்கு
தோகையர் மயக்கி லுழலாதே;
பாடலிசை மிக்க ஆடல்கொடு பத்தி
யோடுநினை பத்தர் பெருவாழ்வே-
பாவவினை யற்று ஞமநினை புத்தி
பாரிலருள் கைக்கு வரவேணும்;
ஆடலழ கொக்க ஆடுமயி லெற்றி
ஆண்மையுட னிற்கு முருகோனே-
ஆதியா னுக்கு வேதமொழி முற்றி
யார்வம்விளை வித்த அறிவோனே;
வேடைமய லுற்று வேடர்மக ளுக்கு
வேளையென நிற்கும் விறல்வீரா-
மேலசுர ரிட்ட தேவர்சிறை வெட்டி
மீளவிடு வித்த பெருமாளே.

1030.

தோதகமி குத்த பூதமருள் பக்க
சூலைவலி வெப்பு மதநீர்தோய்-
சூழ்பெருவ யிற்று நோயிருமல் குற்று
சோகைபல குட்ட மவைதீரா;
வாதமொடு பித்த மூலமுடன் மற்று
மாயபிணி சற்று மணுகாதே-
வாடுமெனை முத்தி நீடியப தத்தில்
வாழுமிக வைத்து அருள்வாயே;
காதல்மிக வுற்று மாதினைவி ளைத்த
கானகுறத்தி மணவாளா-
காசினிய னைத்து மோடியள விட்ட
கால்நெடிய பச்சை மயில்வீரா;

வேதமொழி மெத்த வோதிவரு பத்தர்
வேதனைத விர்க்கு முருகோனே-
மேலசுர ரிட்ட தேவர்சிறை வெட்டி
மீளவிடு வித்த பெருமாளே.

1031.

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோருங்-
சாசு தேடி யீயாமல் வாழப் பெறுவோரும்;
மாது பாகர் வாழ்வே யெனுநெக் குருகாரும்-
மாறி லாத மாகால னூர்புக் கலைவாரே;
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே-
நாக லோக மீரேழு பாருக் குரியோனே;
தீதி லாத வேல்வீர சேவற் கொடியோனே-
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

1032.

கூறு மார வேளார வாரக் கடலாலே-
கோப மீது மாறாத கானக் குயிலாலே;
மாறு போலு மாதாவின் வார்மைப் பகையாலே-
மாது போத மாலாகி வாடத் தகுமோதான்;
ஏறு தோகை மீதேறி யாவித திடும்வீரா-
ஏழு லோகம் வாழ்வான சேவற் கொடியோனே;
சீறு சூரர் நீறாக மோதிப் பொரும்வேலா-
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

1033.

பேர வாவ றுவாய்மை பேசற் கறியாமே-
பேதை மாத ராரோடு கூடிப் பிணிமேவா;
ஆர வார மாறாத நூல்கற் றடிநாயேன்-
ஆவி சாவி யாகாமல் நீசற் றருள்வாயே;
சூர சூர சூராதி சூரர்க் கெளிவாயா-
தோகை யாகு மாரா கிராதக் கொடிகேள்வா;
தீர தீர தீராதி தீரப் பெரியோனே-
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

1034.

காதி லோலை கிழிக்குங் காம பாண விழிக்குங்
கான யாழின் மொழிக்கும் பொதுமாதர்-
காணொ ணாத இடைக்கும் பூணு லாவு முலைக்குங்
காதில் நீடு குழைக்கும் புதிதாய;
கோதி லாத கரும்பஞ் சாறு போல ருசிக்குங்
கோவை வாயமு தக்குந் தணியாமல்-
*கூருமேவெ னொருவர்க்கு நேடொ ணாதநெ டார்ந்தநங்
கூடு மாறொரு சற்றுங் கருதாயோ;
பூதி பூஷணர் கற்பின் பேதை பாகர் துதிக்கும்
போத தேசிக சக்ர தவரூதே-
போக பூமி புரக்குந் த்யாக யோக குறப்பெண்
போத ஆதர வைக்கும் புயவீரா;
சோதி வேலை யெடுத்தன் றோத வேலையில் நிற்குஞ்
சூத தாருவு மெற்பும் பொருகோவே-
சூரர் சேனை யனைத்துந் தூளி யாக நடிக்குந்
தோகை வாசி நடத்தும் பெருமாளே.

1035.

காரு லாவு குழற்குங் கூரி தான விழிக்குங்
காதல் பேணு நுதற்குங் கதிர்போலுங்-
காவி சேர்பவ ளத்தின் கோவை வாயித ழுக்குங்
காசு பூணு முலைக்குங் கதிசேரா;
நேரி தான இடைக்குஞ் சீத வார நகைக்கும்
நேரி லாத தொடைக்குஞ் சதிபாடும்-
நீத மான அடிக்கும் யாழு ரூத படிக்குன்
னேய மோடு துதிக்கும் படிபாராய்;
பார மேரு வளைக்கும் பாணி யார்சடை யிற்செம்
பாதி சோம னொருக்கும் புனைவார்தம்-
பால காளன நித்தம் பாடு நாவலர் துக்கம்
பாவ நாச மறுத்தின் பதமீவாய்;

---

* கூர்தல் = உள்ளது மிகுதல்.

சோரி வாரி யிடச்சென் றேறி யோடி யழற்கண்
சூல காளி நடிக்கும படிவேலாற்-
சூரர் சேனை தனைக்கொன் றூர வார மிகுத்தெண்
தோகை வாசி நடத்தும் பெருமாளே.

1036.

தோடுற்ற காதொக்க நீடுற்ற போருற்ற
தோய்மைக்க ணால்மிக்க நுதலாலே-
தோள்வெற்பி னால்விற்கை வேளுக்கு மேன்மக்கள்
சோர்கைக்கு மாஉவிற்கு படவார்தம ;
ஊடற்கு ளேபுக்கு வாடிக்க லாமிக்க
ஓசைக்கு நேசித்து உழலாதே-
ஊர்பெற்ற தாய்சுற்ற மாயுற்ற தாள்பற்றி
யோதற்கு நீசற்று *முணர்வாயே ;
† வேடர்க்கு நீள்சொர்க்கம் வாழ்விக்க வோர்வெற்பின்
மீதுற்ற பேதைக்கொர் மணவாளா-
வேழத்தி னாபத்தை மீள்வித்த மாலொக்க
வேதத்தி லேநிற்கு மயனாரு ;
தேடற்கொ ணாநிற்கும் வேடத்தர் தாமவைத்த
சேமத்தி னாமத்தை மொழிவோனே-
தீதற்ற நீதிக்கு ளேய்பத்தி கூர்பத்தர்
சேவிக்க வாழ்வித்த பெருமாளே.

1037.

தோலத்தி யாலப்பி னாலொப்பி லாதுற்ற
தோனாக்கை காலுற்ற குடிலூடே-
சோர்வற்று வாழ்வுற்ற கால்பற்றி யேகைக்கு
வேதித்த சூலத்த னணுகாமுன் ;
கோலத்தை வேலைக்கு ளேவிட்ட சூர்கொத்தொ
டேபட்டு வீழ்வித்த கொலைவேலா-
கோதற்ற பாதத்தி லேபத்தி கூர்புத்தி
கூர்கைக்கு நீகொற்ற அருள்தாராய் ;

* உணர்வாயே = உணர்த்தாயா ?   † வேடர்க்கும் = வேடரையும.

ஆலத்தை ஞாலத்து ளோர்திக்கு வானத்த
ராவிக்கள் மாள்வித்து மடியாதே-
ஆவித்து மூலத்தொ டேயுட்கொ ளாதிக்கு
மாம்வித்தை யாமத்தை யருள்வோனே;
சேலொத்த வேலொத்த நீலத்து மேவிட்ட
தோதக்கண் மானுக்கு மணவாளா-
தீதற்ற நீதிக்கு ளேய்பத்தி கூர்பத்தர்
சேவிக்க வாழ்வித்த

1038.

ஊனுந் தசையுடல் தானென் பதுவழி
யூருங் கருவழி யொருகோடி-
ஓதும பலகலை கீதஞ் சகலமு
மோருமபடியுன தருள்பாடி;
நானுன் திருவடி பேணும் படியிரு
போதுங் கருணையில் மறவாதுன்-
நாமம புகழ்பவர் பாதந தொழுதினி
நாடும படியருள் புரிவாயே;
காணுந் திகழ்கதி ரோனுஞ் சசியொடு
காலங் களு*நடை யுடையோனுங்-
காருங் கடல்வரை நீருந தருகயி
லாயன் கழல்தொழு மிமையோரும்;
வானிந் திரனொடு மாலும் பிரமனும்
வாழும் படிவிடும் வடிவேலா-
மாயம பலபுரி சூரன் பொடிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே.

1039.

தீயும் பவனமு நீருந தரணியும்
வானுஞ் செறிதரு பசுபாசத்-
தேகந தனைநிலை யேயென் றிருவினை
தீருந் திறல்வினை யறியாதே;

---

* நடையுடையோன் = காற்று.

ஓயும் படியறு நூறும் பதினறும்
நூறும் பதினிரு பதுநூறும்-
ஓடுஞ் சிறுவுயிர் மீளும் படிநல
யோகம் புரிவது கிடையாதோ ;
வேயுங் கணியும்வி ளாவும் படுபுன
மேவுஞ் சிறுமிதன் மணவாளா-
மீனம் படுகட லேழுந் தழல்பட
*வேதங் கதறிய வொருநாலு ;
வாயுங் குலகிரி பாலுந் தலைபட
மாகந் தரமதில் மறைசூரன்-
மார்புந் துணையுறு தோளுந் துணிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே.

1040.

வாதந் தலைவலி சூலம் பெருவயி
றுகும பிணியிவை யணுகாதே-
மாயம் பொதிதரு காயந் தனின்மிசை
வாழுங் கருவழி மருவாதே ;
ஓதம் பெறுகடல் மோதுந் திரையது
போலும் பிறவியி லுழலாதே-
ஓதும் பலஅடி யாருங் கதிபெற
யானுன் கழலிணை பெறுவேனோ ;
கீதம புகழிசை நாதங் கனிவொடு
வேதங் கிளர்தர மொழிவார்தம்-
கேடின் பெருவலி மாளும் படியவ
ரோடுங் கெழுமுத லுடையோனே ;
வேதந் தொழுதிரு மாலும் பிரமனு
மேவும் பதமுடை விறல்வீரா-
மேல்வந் தெதிர்பொரு சூரன் பொடிபட
வேல்கொண் டமர்செய்த பெருமாளே

---

* வேதங் கதறிய ஒருநாலு வாய்=பிரமன்.

1041.

ஊனே தானா யோயா நோயா
லாசா ரேசற் குடிலபேணா-
ஓதா மோதா வாதா காதே
லோகா சாரத் துளமவேறாய்.
நானே நீயாய் நீயே நானாய்
நானா வேதப் பொருளாலும்-
நாடா வீடா யீடே றாதே
நாயேன் மாயக் கடவேனோ;
வானே காலே தீயே நீரே
பாரே பாருக் குரியோனே-
மாயா மானே கோனே மானார்
வாழ்வே கோழிக் கொடியோனே;
தேனே தேனீள் கானா றாய்வீழ்
தேசார் சாரற் கிரியோனே-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே.

1042.

சாவா மூவா வேளே போல்வாய்
தாளா வேனுக் கருள்கூருந-
தாதா வேனா தாவே கோவே
சார்பா னார்கட் குயிர்போல்வாய்;
ஏவால் மாலே போல்வாய் காரே
போல்வா யீதற் கெனையாள்கொண்-
டேயா பாடா வாழ்வோர் பாலே
யான்வீ ணேகத் திடலாமோ;
பாவா நாவாய் வாணீ சார்வார்
பாரா வாரத் தூரகேசப்-
பாய்மீ தேசாய் வார்கா னாதே
பாதா ளாழத் துறுபாதச்;

சேவா மாவூர் கோமான் வாழ்வே
சீமா னேசெச் சையமார்பா-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே.

1043.

நாரா லேதோல் நீரா லேயாம்
நாளு வாசற் குடிலூடே-
ஞாதா வாயே வாழ்கா லேகாய்
நாய்பேய் சூழ்கைக் கிடமாமுன்;
தாரா ரார்தோ ளீரா றுனே
சார்வா னோர்நற் பெருவாழ்வே-
தாழா தேநா யேனு வாலே
தாள்பா டாண்மைத் திறல்தாராய்;
பாரே ழோர்தா ளாலே யாள்வோர்
பாவார் வேதத் தயனும்-
பாழூ டேவா னூடே பாரூ
டேயூர் பாதத் தினைநாடாச்;
சீரார் மாதோ டேவாழ் வார்நீள்
செவ்வூ வாரமபாற சடையசா-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப பெருமாளே.

1044.

மாதா வோடே மாமா னோர்
மாதோ டேமைத் துனமாரும்-
மாறு னோர்போ னீள்தீ யூடே
மாயா மோகக் குடில்போடாப்;
போதா நீரூ டேபோய் மூழ்கா
வீழ்கா வேதைக் குயிர்போமுன்-
போதா காரா பாராய் சீரார்
போதார் பாதத் தருள்தாராய்;

வேதா வோடே மாலா னோர்மேல்
வானோர் மேனிப் *பயமீள-
வேதா னோர்மே லாகா தேயோர்
வேலால் வேதித் திடும்வீரா;
தீதார் தீயார் தீயூ டேமூள்
சேரா சேதித் திடுவோர்தஞ்-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே.

1045.

வாராய் பேதாய் கேளாய் நீ†தாய
மானோர் மோகத் துடனாசை-
மாசூ டாடா ‡தூடே பாராய்
மாறு ஞானச் சுடர்தா§னின் ;
||றாரா யாதே யாராய் பேறும
ஆறு வேதப் பொருள்காணென்-
றுள்வாய் நீதா னோதா பார்மீ
தார்வே றுள்ளைக் குரியார்தாம் ;
தோரா வானோர் சேனா தாரா
சூரா சாரற் புனமாது-
தோள்தோய் தோளீ ராறு மாசூர்
தூளாய் வீழச் சிறுதாரைச ;
சீரா வாலே வாளா லேவே
லாலே சேதித் திடும்வீரா-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே.

---

* பயம் மீளவே தானோர் மேலாகாதே எனப் பிரிக்க ; தானோர்=தானவர்.

† தாய்=தாவி. ‡ ஊடு=உள். § நின்று=மனம் நிலைத்து.

|| ஆராயாதே ஆராய்=மற்றப் பொருள்களை ஆராய்வதுபோல் ஆராயாது அறிவால் ஆராய்.

1046.

அகல நீளம் யாதாலு மொருவ ராலு மாராய
அரிய மோன மேகோயி லெனமேவி-
அசைய வேக்ரி யாபீட மிசைபு காம காஞான
அறிவி னூத ராமோத மலர்தூவிச் ;
சகல வேத னூதீத சகல வாச காதீத
சகல மாக்ரி யாதீத சிவரூப-
சகல சாத காதீத சகல வாச னூதீத
தனுவை நாடி மாபூசை புரிவேனோ ;
விகட தார சூதான நிகள பாத போதுள
*விரக ராக போதார சுரர்கால-
விபுத மாலி காநீல முகப டாக மாயூர
விமல வ்யாப காசீல கவிநோத ;
ககன கூட பாடீர தவள சோபி தாளான
கவன பூத ராரூட சதகோடி-
களப காம †வீர்‡வீசு காமு கார வேல்வீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1047.

அடைப டாது நாடோறும இடைவி டாது போமவாயு
அடைய மீளில் வீடாகு மெனநாடி-
அருள்பெ றுவ னூசார கரும யோகி யாகாமல்
அவனி மீதி லோயாது தடுமாறும் ;
உடலம் வேறு யான்வேறு கரணம் வேறு வேறாக
உதறி வாச காதீத அடியூடே-
உருகி ஆரி யாசார பரம யோகி யாமாறுன்
உபய பாத ராசீக மருள்வாயே ;
வடப ராரை மாமேரு கிரியெ டாந டாமோது
மகர வாரி யோரேழு மழுதாக-

---

* விரகர் ராக போதார் அசுரர் எனப் பிரிக்க. † வீர் = வீர.
‡ வீசு காம் = காம் வீசு = கிரணம் வீசுகின்ற.

மகுட வாள ராநோவ மதிய நோவ வாரீச
வனிதை மேவு தோளாயி ரமுநோவக் ;
கடையு மாதி கோபாலன் மருக சூலி காபாலி
புதல்வ கான வேல்வேடர் கொடிகோவே-
கனக லோக பூபால சகல லோக ஆதார
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1048.

அமல வாயு வோடாத கமல நாபி மேல்மூல
அமுத பான மேமூல அனல்மூள-
அசைவு றாது போதாத விதமு மேவி யோவாது
அரிச தான சோபான மதனாலே ;
எமனை மோதி யாகாச கமன மாம னோபாவ
மெளிது சால மேலாக வுரையாடும்-
எனதி யானும் வேறாகி எவரும யாதும் யானாகும்
இதய பாவ னாதீத மருள்வாயே ;
விமலை* தோடி மீதோடு யமுனை போல வோரேழு
விபுத மேக மேபோல வுலகேழும்-
விரிவு காணு மாமாயன் முடிய நீறு மாபோல
வெகுவி தாமு காகாய பதமோடிக் ;
கமல யோனி வீடான ககன கோள மீதோடு
கலப நீல மாயூர இளையோனே-
கருணை மேக மேதூய கருணை வாரி யேயிறில்
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1049.

அயிலின் வாளி வேல்வாளி அளவு கூரி தா†யிச
ரமுத ளாவு மாவேச மதுபோல-

* தோடி=தொடி; இங்கு தொடியை அணிந்த கைக்கு ஆகு பெயர். உமாதேவியார் சிவபிரான் திருக்கண்புதைத்து எடுத்த காலத்துக் கைகள் இரண்டினும் வியர்வை உண்டாகிப் பத்து விரல் வழியாலும் விரிந்த கங்கை முதலிய நதிகளுள் யமுனை ஒன்று; அது கருநிறம் உடையது. † ஈசர் அமுது=ஆலகால விஷம்.

அறவு நீளி தாய்மீள அகலி தாய வார்காதி
னளவு மோடி நீடோகி நிழலாறித் ;
துயில்கொ ளாத வாஞொரு மயல்கொ ளாத *ஆவேத
துறவ ரான பேர்யாரு மடலேறத்-
துணியு மாறு லாநீல நயன மாத ராரோடு
துவளு வேனை யீடேறு நெறிபாராய் ;
பயிலு மேக †நீகார சயில ராசன வாழ்வான
பவதி யாம ளாவாமை அபிராமி-
பரிபு ரார பாதார சரணி சாம ளாகார
பரம யோகி னீமோகி மகமாயி ;
கயிலை யாள ரோர்பாதி கடவு ளாளி லோகாயி
கனத ஞச லாபார அமுதூறல்-
கமழு மார ஞகீத கவிதை வாண வேல்வீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1050.

இரத மான வாயூறல் பருகி டாவி டாய்போக
இனிய போக வாராழி யதில்மூழ்கி-
இதயம வேறு போகாம லுருகி யேக மாய்நாளு
மினிய மாதர் தோள்கூடி விளையாடுஞ் ;
சரச மோக மாவேத சரியை யோக்ரி யாஞான
சமுக மோத ராபூத முதலான-
சகள மோச டாதார முகுள மோநி ராதார
தரணி யோநி ராகார வடிவேயோ ;
பரத நீல மாயூர வரத நாக கேயூர
பரம யோகி மாதேசி மிகுஞான-
பரமர் தேசி காவேட பதிவ்ரு தாசு சீபாத
பதும சேக ராவேலை மறவாத ;
காத லாவி சாகாச கலக லாத ராபோத
கமுக மூஷி காரூட மததாரைக்-
கடவுள் தாதை சூழ்போதி லுலக மேழு சூழ்போது
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

---

* ஆவேதம = வேடம். † நீகாரம் = கூட்டம்.

1051.

குருதி தோலி னால்மேவு குடிலி லேத மாமாவி
குலைய ஏம னாலேவி விடு*காலன்-
கொடிய பாச மோர்சூல படையி னோடு கூசாத
கொடுமை நோய்கொ டேகோலி யெதிராமுன் ;
பருதி சோமன் வானாடர் படியு ளோர்கள் பாலாழி
பயமு றாமல் வேலேவு மிளையோனே-
பழுது றாத பாவாண ரெழுதொ ணாத தோள்வீர
பரிவி னோடு தாள்பாட அருள்தாராய்;
மருது நீற தாய்வீழ வலிசெய் மாயன் வேயூதி
மடுவி லானை தான்மூல மெனவோடி-
வருமு ராரி கோபாலர் மகளிர் கேள்வன் மாதாவின்
வசன மோம ருகேசன் மருகோனே ;
கருதொ ணாத ஞானாதி எருதி லேறு காபாலி
கடிய பேயி னோடாடி கருதார்வெங்-
கனலில் மூழ்க வேநாடி புதல்வ கார ணாதீத
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1052.

சுருதி யூடு கேளாது சரியை யாளர் காணாது
துரிய மீது சாராது எவராலுங்-
தொடரொ ணாது மாமாயை யிடையு காது ஆனாத
சுகம கோத தீயாகி யொழியாது ;
பருதி காயில் வாடாது வடவை மூளில் வேகாது
பவனம் வீசில் வீழாது சலியாது-
பரவை சூழி லாழாது படைகள் மோதில் மாயாது
பரம ஞான வீடேது புகல்வாயே ;
நிருதர் பூமி பாழாக மகர பூமி தீமூள
நிபிட தாரு காபூமி குடியேற-
நிகர பார நீகார சிகர மீது வேலேவு
நிருப வேத ஆசாரி யனுமாலும் ;

---

* காலன்—இயமன் மந்திரி.

கருது மாக மாசாரி கனக கார்மு காசாரி
ககன சாரி பூசாரி வெகுசாரி-
கயிலை நாட காசாரி சகல சாரி வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1053.

தொடஅடாது நேராக வடிவு காண வாராது
சுருதி கூறு வாராது மெதிர்கூறத்-
துறையி லாத தோராசை யிறைவ னுகி யோரேக
துரிய மாகி வேறாகி யறிவாகி;
நெடிய கால்கை யோடாடு முடலின் மேவி நீநானு
மெனவு நேர்மை நூல்கூறி நிறைமாயம-
நிகரில் கால னேவ முகரி யான தூதாளி
நினைவொ டேகு மோர்நீதி மொழியாதோ;
அடல்கெ டாத சூர்கோடி மடிய வாகை வேலேவி
யமர்செய் வீர ஈராறு புயவேளே-
அழகி னோடு மானீனு மரிவை காவ லாவேதன்
அரியும் வாழ வானாளு மதிரேகா;
கடுவி டாக ளாரூப நடவி நோத தாடாளர்
கருதி டார்கள் தீமூள முதல்நாடுங்-
கடவு ளேறு மீதேறி புதல்வ கார ணாவேத
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1054.

நிலவில் மார னேறுாதை யசைய வீசு மாராம
நிழலில் மாட மாமாளி கையின்மேலாம்-
நிலையில் வாச மாருத அணையில் மாத ராரோடு
நியதி யாக வாயார வயிறார;
இலவி னூறு தேனூறல் பருகி யார வாமீறி
யிளகி யேறு பாடீர தனபாரம்-
எனது மார்பி லேமூழ்க இறுக மேவி மால்கூரு
கினுமு னீப சீர்பாத மறவேனே;

குலவி யோம பாகீர திமிலை நாதர் மாதேவர்
குழைய மாலி காநாக மொடுதாவிக்-
குடில கோம ளாகார சடில மோலி மீதேறு
குமர வேட மாதோடு பிரியாது;
கலவி கூரு மீராறு கனக வாகு வேசூரர்
கடக வாரி தூளாக அமராடுங்-
கடக போல மால்யானை வனிதை பாக வேல்வீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1055.

மனக பாட பாடீர தனத ராத ராரூப
மதன ராச ராசீப சரகோப-
வருண பாத காலோக தருண சோபி தாகார
மகளி ரோடு சீராடி யிதமாடிக்;
குனகு வேனை நாணாது தனகு வேனை வீணான
குறைய னேனை நாயேனை வினையேனைக்-
கொடிய னேனை யோதாத குதலை யேனை நாடாத
குருட னேனை நீயாள்வ தொருநாளே;
அநக வாம னாகார முநிவ ராக மால்தேட-
அரிய தாதை தானேவ மதுரேசன்-
அரிய சார தாபீட மதனி லேறி*யீடேற
அகில நாலு மாராயு மிளையோனே;
கனக பாவ னாகார பவள கோம ளாகார
கலப சாம ளாகார மயிலேறுங்-
கடவு ளேக்ரு பாகார †கமல வேத னாகார
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

1056.

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்-

---

* ஈடேற=(உலகத்தார) உய்ய. † கமல வேதன ஆகாரம்= இதயகமலத்திற் பொருந்திய ஞான சொரூபம்; வேதனம்=அறிவு.

றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட;
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட-
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்;
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்-
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்;
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே-
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

1057

குருதி மூளை யூனாறு மலமி குந்த தோல்மூடு
குடிசை கோழை மாகூறு குழிநீர்மேற்-
குமிழி போல நோகி அழியு மாயை யாதார
குறடு பாறு நாய்கூளி பலகாகம்;
பருகு காய மேபேணி அறிவி லாம லேவீணில்
படியின் மூழ்கி யேபோது தளிர்வீசிப்-
பரவு நாட காசார கிரியை யாளர் காணாத
பரம ஞான வீடேது புகல்வாயே;
எரியின் மேனி நீறாடு பரமர் பாலில் வாழ்வான
இமய மாது மாகூலி தருபாலா-
*எழுமை யீறு காணாதர் முநிவ ரோடு வானாட
ரிசைக ளோடு †பாராட. மகிழ்வோனே;

---

* எழுமை ஈறு காண் நாதர்=எழுவகைத் தோற்றத்தின் முடிவையுங் கண்டுணர்ந்த அகத்தியாதி நாதாக்கள் எண்மர்.

† பாராட=பாராட்ட.

அரவி னோடு மாமேரு மகர வாரி பூலோக
மதிர நாக மோரேழு பொடியாக-
அலகை பூத மாகாளி சமர பூமி மீதாட
அசுரர் மாள வேலேவு பெருமாளே.

1058.

சரியு மவல யாக்கையு ளரியு முரிய தீப்பசி
தணிகை *பொருடி ராப்பகல் தடுமாறுஞ்-
சகல சமய தார்க்கிகர் கலக மொழிய நாக்கொடு
சரண கமல மேத்திய வழிபாடற் ;
றரிய துரிய மேற்படு கருவி கரண நீத்ததொ
ரறிவின் வடிவ மாய்ப்புள கிதமாகி-
அவச கவச மூச்சற அமரு மமலர் மேற்சில
ரதிப திவிடு பூக்கணை படுமோதான் ;
விரியு முதய பாஸ்கர கிரண மறைய வார்ப்பெழு
மிடையு மலகில் தேர்ப்படை யொடுசூழும்-
விகட மகுட பார்த்திப ரனைவ ருடனு நூற்றுவர்
விசைய னொருவ னுற்பட வொருநூறு ;
திரியு மொருப ராக்ரம அரியின் மருக பார்ப்பதி
சிறுவ தறுகண் வேட்டுவர் கொடிகோவே
திமிர வுததி கூப்பிட அவுணர் மடிய வேற்கொடு
சிகரி தகா வீக்கிய பெருமாளே.

1059.

மகளு மனைவி தாய்க்குல மனையு மனைவர் வாக்கினில்
மறுகி புறமு மார்த்திட வுடலூடே-
மருவு முயிரை நோக்கமு மெரியை யுமிழ ஆர்ப்பவ
ருடனு மியமன் மாட்டிட அணுகாமுன் ;
உகமு முடிவு மாச்செனு முதய மதியி னோட்டமு
முளது மிலது மாச்சென வுறைவோரும்-
உருகு முரிமை காட்டிய முருக னெனவு நாக்கொடு
உனது கழல்கள் போற்றிட அருள்தாராய் ;

---

* பொரு டிராப்பகல்=பொருட்டு இராப்பகல.

புகல வரிய போர்ச்சிலை விரக விசைய னேற்புக
 ழுடைய திருத ராட்டிர புதல்வோர்தம்-
புரவி கரிகள் தேர்ப்படை மடிய அரசை மாய்த்துயர்
 புவியின் விதன மாற்றினர் மருகோனே ;
மிகவு மலையு மாக்கடல் முழுது மடிய வேற்றரு
 வெனவு மருவி வேற்கொடு பொருசூரன்-
விரைசெய் நெடிய தோட்கன அடலு முருவ வேற்படை
 விசைய முறவும் வீக்கிய பெருமாளே.

1060.

கூடரு நீர்க்கொழு மலமு மீததொரு
 குறைவி லாப்பல என்பினாலுங்-
கொடிய நோய்க்கிட மெனவு நாட்டிய
 குடிவி லேற்றயி ரென்றகூறும் ;
வடிவி லாப்புல மதனை *நாட்டிடு
 மறலி யாட்பொர வநதிடாமுன்-
மதியு மூத்துன தடிக ளேத்திட
 மறுவி லாப்பொருள் தந்திடாதோ ;
கடிய காட்டக முறையும் வேட்டுவர்
 கருதொ ணுக்கணி †வெங்கையாகிக்-
கழைசெய் தோட்குற மயிலை வேட்டுயர்
 களவி னற்புணர் கந்தவேளே ;
முடுகி மேற்பொரு மசுர ரார்ப்பெழ
 முடிய வேற்கொடு வென்றவீரா-
முடிவி லாத்திரு வடிவை நோக்கிய
 முதிய மூர்த்திகள் தம்பிரானே.

1061.

பொதுவ தாய்த்தனி முதல தாய்ப்பக
 லிரவு போய்ப்புகல் கின்றவேதப்-
பொருள தாய்ப்பொருள் முடிவ தாய்ப்பெரு
 வெளிய தாய்பபுதை யின்றியீறில் ;

---

* நாட்டிடு = நாடிடு. † வெங்கை = வேங்கை.

75612

கதிய தாய்க்கரு தரிய தாய்ப்பரு
கமுத மாய்ப்புல னைந்துமாயக்-
கரண மாய்த்தெனை மரண மாற்றிய
கருணை வார்த்தையி ருந்தவாறென்;
உததி கூபிட நிருத ரார்ப்பெழ
உலகு போற்றிட *வெங்கலாப-
ஒருப ராக்ரம துரக மோட்டிய
வுரவ †கோக்கிரி நண்பவானோர்;
முதல்வ பார்ப்பதி புதல்வ கார்த்திகை
முலைகள் தேக்கிட வுண்டவாழ்வே-
மூளரி பாற்கடல் சயில மேற்பயில்
மூதிய மூர்த்திகள் தம்பிரானே.

1062.

கீவடு கோத்தெழு மூவரி மாத்திறல்
காய்வேல் பாடே னடேன் வீடா னதுகூடக்-
கருணை கூர்ப்பன கழலக ளார்ப்பன
கால்மேல் வீழேன் வீழ்வார் கால்மீ திலுமவீழேன்;
‡தவிடி னார்ப்பத மெனினு மேற்பவர்
தாழா தீயேன் வாழா தேசா வதுசாலத்-
தாமு மோக்ஷமு மினிமெ னுக்கைச
தாவா மாறே நீதா னூதா புரிவாயே;
சுவடு பார்த்தட வருக ராத்தலை
தூளா மாறே தானு நாரா யணனேநற்-
றுணைவ பாற்கடல் வனிதை சேர்ப்பது
மூய்மார் பாகோ பாலா காவா யெனவேகைக்;
குவடு கூபிட வுவண மேற்கன
கோடு தாவா னேபோ தாள்வான் மருகோனே-
குலிச பார்த்திப வுலகு காத்தருள்
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே.

---

* வெம்=விருப்பத்தைத தருகின்ற.

† கோ கிரி நண்ப=பூமியிலுள்ள மலைகளினிடத்து விருப்ப முள்ளவனே. ‡ "தவிடி னற்பிள வெனினும்" என்றும் பாடம்.

1063.

பருதி யாய்ப்பனி மதிய மாய்ப்படர்
பாராய் வானாய் நீர்தீ காலா புடிசாலம்-
பலவு மாய்ப்பல கிழமை யாய்ப்*பதி
னாலா றேழா மேனா ளாயே யுலகாகிச்;
சுருதி யாய்ச்சுரு திகளின் மேற்சுட
ராய்வே தாவாய் மாலாய் மேலே சிவமான-
தொலைவி லாப்பொரு ளிருள்பு காக்கழல்
சூடா நாடா ஏடே றாதே சுழல்வேனோ;
திருத ராட்டிர னாதவு நூற்றுவர்
சேனா டாள்வா னாளோர் மூவா றினில்வீழத்-
திலக பார்த்தனு முலகு காத்தருள்
சீரா மாறே தேரூர் கோமான் மருகோனே;
குருதி வேறகா நிருத ராக்ஷத
கோபா நீபா கூதா ளாமா மயில்வீரா-
குலிச பார்த்திப னுலகு காத்தருள்
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே.

1064.

முதலி யாக்கையு மிளமை நீத்தற
மூவா தாரா காவா தாரா எனஞாலம்-
முறையி டாப்படு பறைக ளார்த்தெழ
மூடா வீடு டேகேள் கோகோ எனநோவ;
மதலை கூப்பிட மனைவி கூப்பிட
மாதா மோதா வீழா வாழ்வே யெனமாய-
மறலி யூர்ப்புகு மரண யாத்திரை
வாரா வானாள் போநாம் நீமீ ளெனவேணும்;
புதல றாப்புன வயினர் கூக்குரல்
போகா நாடார் பாரா வாரா ரசுரோடப்-
பொருது தாக்கிய வயப ராக்ரம
பூபா லாநீ பாபா லாதா தையுமோதும்;

---

* பதினால் ஆறு ஏழ் ஆம் மேல் நாள் = ௨௭-நக்ஷத்திரம்.

குதலை வாய்க்குரு பரச டாக்ஷர
கோடா ரூபா ரூபா பாரீ சதவேள்விக்-
குலிச பார்த்திப னுலகு காத்தருள்
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே.

1065.

வருக வீட்டெனும் விரகர் நேத்திரம்
வாளோ வேலோ சேலோ மானோ எனுமாதர்-
மனது போற்கரு கினகு வாற்குழல்
வானோ கானோ மாயா மாயோன் வடிவேயோ ;
பருகு பாற்கடல் முருகு தேக்கிய
பாலோ தேனோ பாகோ வானோ ரமுதேயோ-
பவள வாய்ப்பணி மொழியெ னுக்கவி
பாடா நாயே னீடே றுதே யொழிவேனோ ;
அருகு பார்ப்பதி யுருகி நோக்கவொ
ரால்கீழ் வாழ்வார் வாழ்வே கோகோ வெனஏகி-
அவுணர் கூப்பிட வுததி தீப்பட
ஆகா சூரா போகா தேமீ ளனவோடிக் ;
குருகு பேர்க்கிரி யுருவ வோச்சிய
கூர்வே லாலே யோர்வா ளாலே அமராடிக்-
குலிச பார்த்திப னுலகு காத்தருள்
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே.

1066.

மறலி போற்சில நயன வேற்கொடு
மாயா தோயா வேயார் தோளார் மறையோதும்-
வகையு மார்க்கமு மறமு மாய்த்திட
*வாறு ராயா தேபோ மாறு திடதீர ;
விறலு மேற்பொலி அறிவு மாக்கமும்
வேறாய் நீரே றுதோர் மேடாய் வினையூடே-
விழுவி னுற்கலை யெழும தாற்பெரு
வீரா பாராய் வீணே மேவா தெனையாளாய் ;

* வாறு = வாய்ப்பு : அடையத்தக்க பேறு.

மறலி சாய்த்தவ ரிறைப ராக்ரம
மாலகா ஞூமேத மாதோ டேவாழ் பவர்சேயே-
மறுவி லாத்திரு வடிக *ஞாட்டொறும்
வாயார் நாவால் மாறா தேபோ தினர்வாழ்வே;
குறவர் காற்புன அரிவை தோட்கன
கோடார் மார்பா கூர்வே லாலே அசுரேசர்-
குலைய மாக்கட லதனி லோட்டிய
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே.

1067.

குருதி யொழுகி யழுகு மவல
குடிலை யினிது புகலாலே-
குலவு மினிய கலவி மகளிர்
கொடிய கடிய விழியாலே;
கருது மெனது விரக முழுது
கலக மறலி அழியாமுன்-
கனக மயிலி னழகு பொழிய
கருணை மருவி வரவேணும்;
பரிதி சுழல மருவு கிரியை
பகிர எறிசெய் பணிவேலா-
பணில வுததி யதனி லசுரர்
பதைய முடுக வரும்வீரா;
இரதி பதியை யெரிசெய் தருளு
மிறைவர் குமர முருகோனே-
இலகு கமல முகமு மழகு
மெழுத வரிய பெருமாளே.

1068.

தூயர மறுகின் வறுமை தொலையு
மொழிபு மமிர்த சுரபானம்-
சுரபி குளிகை யெளிது பெறுக
துவளு மெமது பசிதீரத்;

---

* நாட்டொறும் = நாடோறும்.

தயிரு மமுது மமையு மிடுக
சவடி கடக நெளிகாறை-
தருக தகடொ டுறுக எனுமி
விரகு தவிர்வ தொருநாளே ;
உயரு நிகரில் சிகரி மிடறு
முடனு மவுணர் நெடுமார்பும்-
உருவ மகர முகர திமிர
வுததி யுதர மதுபீற ;
அயரு மமரர் சரண நிகள
முறிய எறியு மயில்வீரா-
அறிவு முரமு மறமு நிறமு
மழகு முடைய பெருமாளே.

1069.

பணிகள் பணமு மணிகொள் துகில்கள்
பழைய அடிமை யொடுமாதும்-
பகரி லொருவர் வருக அரிய
பயண மதனி லுயிர்போகக் ;
குணமு மனமு முடைய கிளைஞர்
குறுகி விறகி லுடல்போடாக்-
கொடுமை யிடுமு னடிமை யடிகள்
குளிர மொழிவ தருள்வாயே ;
இணையி லருணை பழநி கிழவ
இளைய இறைவ முருகோனே-
எயினர் வயினின் முயலு மயிலை
யிருகை தொழுது புணர்மார்பா ;
அணியொ டமரர் பணிய அசுரர்
அடைய மடிய விடும்வேலா-
அறிவு முரமு மறமு நிறமு
மழகு முடைய பெருமாளே.

1070.

மைந்த ரினிய தந்தை மனைவி
மண்டி யலறி மதிமாய-
வஞ்ச விழிகள் விஞ்சு மறலி
வன்கை யதனி லுறுபாசம்;
தந்து வளைய புந்தி யறிவு
*தங்கை குலைய உயிர்போமுன்-
தமப முனது செம்பொ னடிகள்
தந்து கருணை புரிவாயே;
மந்தி குதிகொ ளந்தண் வரையில்
மங்கை மருவு மணவாளா-
மண்டு மசுரர் தண்ட முடைய
அண்டர் பரவ பலைவோனே;
இந்து நுதலு மந்த முகமு
மென்று மினிய மடவார்தம-
இன்ப மிளைய அன்பி னணையு
மென்று மிளைய பெருமாளே.

1071.

ஒழுகூ னிரத்த மொடுதோ லுடுத்தி
உயர்கால் கரத்தி லுருவாகி-
ஒருதாய் வயிற்றி னிடையே யுதித்து
உழல்மாய மிக்கு வருகாயம்;
பழசா யிளைப்பொ டிளையா விருத்த
பரிதாப முற்று மடியாமுன்-
பரிவா லுளத்தில் முருகா வெனச்சொல்
பகர்வாழ் வெனக்கு மருள்வாயே;
எழுவா னகத்தி லிருநாலு திக்கி
லிமையோர் தமக்கு மரசாகி-
எதிரேறு மத்த மதவார ணத்தி
லினிதேறு கொற்ற முடன்வாழும்;

* தங்கை = தங்குதல.

செழுபா மணிப்பொ னகாபாழ் படுத்து
செழுதீ விளைத்து — மதிள்கோலித்-
திடமோ டரக்கர் கொடுபோ யடைத்த
சிறைமீள விட்ட — பெருமாளே.

1072.

கருவாய் வயிற்றி லுருவா யுதித்து
முருகாய் மணக்க — வலையோடே-
கலைநூல் பிதற்றி நடுவே கழுத்த
தலைபோய் வெளுத்து — மரியாதே ;
இருபோது மற்றை யொருபோது *மிட்ட
கனல்மூழ்கி †மிக்க — புனல்மூழ்கி-
‡இறவாத சுத்த மறையோர் துதிக்கு
மியல்போத கத்தை — மொழிவாயே ;
அரு§மாத பத்த அமரா பதிக்கு
வழிமூடி விட்ட — தனைமீள-
அயிரா வதத்து விழியா யிரத்த
னுடனேபி டித்து — முடியாதே ;
திருவான கற்ப தருநா டழித்து
விபுதேசர் சுற்ற — மவைகோலித்-
திடமோ டரக்கர் கொடுபோ யடைத்த
சிறைமீள விட்ட — பெருமாளே.

1073.

புரக்க வந்தநங் குறக்க ரும்பைமென்
புனத்தி லன்றுசென் — றறவாடிப்-
புடைத்த லங்க்ருதம் படைத்தெ ழுந்ததிண்
புதுக்க ரும்பைமென் — புயமீதே ;

---

* இட்ட கனல்=வளர்த்த மூலாக்கினி.

† மிக்க புனல்=மதிமண்டலச் சுத்த கங்கை.

‡ இறவாத சுத்த மறையோர் = நித்தத்துவம் பெற்ற அகஸ்தியராதி நாதாக்கள். § ஆதபம்=ஒளி.

செருக்க நெஞ்சகங் களிக்க அன்புடன்
திளைக்கு நின்திறம் புகலாதிந்-
த்ரியக்க டஞ்சமந் தலக்கண் மண்டிடுந
தியக்க மென்றொழிந் திடுவேனோ;
குரக்கி னங்கொணர்ந் தரக்கர் தண்டமுங்
குவட்டி லங்கையுந துகளாகக்-
கொதித்த கொண்டலுந் த்ரியக்ஷ ருங்கடங்
கொதித்து மண்டுவெம் பகையோடத் ;
துரக்கும் விம்பகிம் புரிப்ர சண்டசிந்
துரத்த னும்பிறந் திறவாத-
சுகத்தி லன்பருஞ் செகத்ர யங்களுந்
துதிக்கு மும்பர்தம் பெருமாளே.

1074.

பெருக்க நெஞ்சுவந் *துருக்கு மன்பிலன்
ப்ரபுத்த னங்கள்பண் பெறுநாளும்-
பிழைக்க வொன்றிலன் சிலைக்கை மிண்டர்குன்
றமைந்த பெண்தனந் தனையாரந் ;
திருக்கை கொண்டணைந திடச்செல் கின்றநின்
திறத்தை யன்புடன் தெளியாதே-
சினத்தில் மண்டிமிண் டுரைக்கும் வம்பனென்
திருக்கு மென்றொழிந் திடுவேனோ;
தருக்கி யன்றுசென் றருட்க ணொன்றரள்
தரித்த குன்றநின் றடியோடுந்-
தடக்கை கொண்டுவந் தெடுத்த வன்சிரந்
தறித்த கண்டனெண் டிசையோருஞ் ;
சுருக்க மின்றி†நின் றருக்க னிந்திரன்
துணைச்செய் கின்றநின் பதமேவும்-
சுகத்தி லன்பருஞ் செகத்ர யங்களுந
துதிக்கு மும்பர்தம் பெருமாளே.

---

*உருக்கு=உருகு. † நின் றருக்கன்=நின்ற அருக்கன்.

1075.

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்-
இசைந்த ஊரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்;
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே-
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே;
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே-
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா;
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே-
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

1076.

கலந்த மாதுங் கன்களி யுறவரு புதல்வோருங்-
கலங்கி டாரென நினைபழு துலகிடை கலிமேவி;
உலந்த காயங் கொண்டுள முழலுத யருடனேவா-
உகந்த பாதந் தந்துனை யுரைசெய அருள்வாயே;
மலர்ந்த பூவின் மங்கையை மருவரி மருகோனே-
மறஞ்செய் வார்தம வருசியை மருவிய மணவாளா;
சிலையபி னேடுங் கிண்கிணி திசைதொறும் ஒலிசச-
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

1077.

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்-
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்;
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே-
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா;
*உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே-
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே;
† அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்-
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

* உசந்த = உயர்ந்த. † அசந்த = அயர்ந்த.

1078.

திரிபுர மதனை யொருநொடி யதனி
லெரிசெய்த ருளிய சிவன்வாழ்வே-
சினமுடை யசுரர் மனமது வெருவ
மயிலது முடுகி விடுவோனே;
பருவரை யதனை யுருவிட எறியு
மறுமுக முடைய வடிவேலா-
பசலையொ டணையு மிளமுலை மகளை
மதன்விடு பகழி தொடலாமோ;
கரிதிரு முகமு மிடமுடை வயிறு
முடையவர் பிறகு வருவோனே-
கனதன முடைய குறவர்த மகளை
கருணையொ டணையு மணிமார்பா;
அரவணை துயிலு மரிதிரு மருக
அவனியு முழுது முடையோனே-
அடியவர் வினையு மமரர்கள் துயரு
மறஅரு ளுதவு பெருமானே.

1079

புழுககில் களப மொளிவிடு தரள
மணிபல செறிய வடமேருப்-
பொருமிரு கலச முலையினை யரிவை
புனையிடு பொழுதின் மடமாதா;
அழகிய குவளை விழியினு மமுத
மொழியினு மவச வநுராக-
அமளியின் மிசையி லவர்வச முருகி
அழிபுறு மடிமை தனையாள்வாய்;
குழலிசை யதுகொ டறவெருள் சுரபி
குறுநிரை யருளி யமுனோதுங்-
குரைசெறு யுததி வரைதனில் விரவு
குமுகுமு குமென வலகோடு;

முழுமதி சுழல வரைநெறு நெறுநெறென
முடுகிய முகிலின் மருகோனே-
மொகுமொகு மொகென ஞிமிறிசை பரவு
முளரியின் முதல்வர் பெருமானே.

1080.

முழுமதி யனைய முகமிரு குழையில
முனிவிழி முனைகள் கொண்டுழவா-
முதலறி வதனை வளைபவர் கலவி
முழுகிய வினையை மொண்டுநாயேன்;
வழிவழி யடிமை யெனுமறி *வகல
மனமுறு துயர்கள் வெந்துவாட-
மதிதரு மதிக கதிபெறு மடிகள்
மகிழ்வொடு புகழு மன்புதாராய்;
எழுதிட அரிய எழில்மற மகளின்
இருதன கிரிகள் தங்குமார்பா-
எதிர்பொரு மசுரர் பொடிபட முடுகி
இமையவர் சிறையை யன்றுமீள்வாய்;
அழகிய குமர எழுதல மகிழ
அறுவர்கள் முலையை யுண்டவாழ்வே-
அமருல கிறைவ உமைதரு புதல்வ
அரியர பிரமர் தம்பிரானே.

1081.

கொடியன பிணிகொடு விக்கிக் கக்கிக்
கூன்போந் தசடாகுங்-
குடிலுற வருமொரு மிக்கச் சிதரக்
†கோண்பூண் டமையாதே;
பொடிவன பரசம யத்துத் தப்பிப்
போந்தேன் தலைமேலே-
பொருளது பெறஅடி நட்புச் சற்றுப்
பூண்டாண் டருள்வாயே;

* அகல = சொலிக்க. † கோண் = மாறுபாடு.

துடிபட அலகைகள் கைக்கொட் டிட்டுச்
சூழ்ந்தாங் குடனாடத்-
தொகுதொகு திகுதிகு தொக்குத் திக்குத
தோந்தாந் தரி*தாளம;
படிதரு பதிவ்ரதை யொத்தச் சுத்தப்
பாழ்ங்கான் தனிலாடும்-
பழயவர் குமரகு றத்தத் தைக்குப்
பாங்காம பெருமாளே.

1082.

சுடரொளி கதிரவ னுற்றுப் பற்றிச்
சூழ்ந்தோங் கிடுபாரிற்
றுயரிரு வினைபல சுற்றப் பட்டுச்
சோர்ந்தோய்ந் திடநாளுந்;
கடுகென எடுமெனு டற்பற் றற்றுக்
கான்போந் துறவோருங்-
கனலிடை விதியிடு தத்துக் கத்தைக்
காய்ந்தாண் டருளாயோ;
தடமுடை வயிரவர் தற்கித் தொக்கத்
தாந்தோய்ந் திருபாலும்-
தமருக வொலிசெவு தக்கிற் றத்தத்
தாழ்ந்தூர்ந் திடநாகம்;
படிநெடி யவர்கா மொத்தக் கொத்துப்
பாய்ந்தாய்ந் துயர்கானம்-
பயில்பவர் புதல்வகு றத்தத் தைக்குப்
பாங்காம் பெருமாளே.

1083.

சூடமென வொத்த கொங்கை குயில்மொழி யொத்த இன்சொல்
குறமகள் வைத்த நண்பை நினைவோனே-
வடவரை யுற்று றைந்த மகதேவர் பெற்ற கந்த
மதசல முற்ற தந்தி யிளையோனே;

---

* தாளம் பதிவ்ரதை யொத்தக கான்தனிலாடும் எனக்கூட்டுக.

இடமுடன் வைத்த சிந்தை யினைவற முத்தி தந்து
இசையறி வித்து வந்து எனையாள்வாய்-
தடவரை வெற்பி னின்று சரவண முற்றெ ழுந்து
சமர்கள வெற்றி கொண்ட பெருமாளே.

1084.

மடவிய ரெச்சி லுண்டு கையில்முத லைக்க ளைந்து
மறுமைக ணிற்கு முன்று வடிவான-
சடமிக வற்றி நொந்து கலவிசெ யத்து ணிந்து
தளர்வுறு தற்கு முந்தி யெனையாள்வாய்;
படவர விற்றி றந்த இடமிதெ னத்து யின்ற
பசுமுகி லுக்கு கந்த மருகோனே-
குடமுனி கற்க வன்று தமிழ்செவி யிற்ப கர்ந்த
குமரகு றத்தி *நம்பு பெருமாளே.

1085.

கருமய லேறிப் பெருகிய காமக்
கடலினில் மூழ்கித் துயராலே-
கயல்விழி யாரைப் பொருளென நாடிக்
கழியுமெ நாளிற் கடைநாளே;
எருமையி லேறித் தருமனும் வாவுற்
றிறுகிய பாசக் கயிறாலே-
எனைவளை யாமற் றுணைநினை வேனுக்
கியலிசை பாடத் தரவேணும்;
திருமயில் சேர்பொற் புயமென வாழ்ந்த
தெரியல ரோடப் பொருவீரா-
செகதல மீதிற் பகர்தமிழ் பாடற்
செபமறை சேர்பொற் புயநாதா;
பொருமயி லேறிக் கிரிபொடி யாகப்
புவியது சூழத் திரிவோனே-
புனமக ளாரைக் கனதன மார்பிற்
புணருமவி நோதப் பெருமாளே.

*நம்பு=விரும்பு.

1086.

குடலிடை தீதுற் றிடையிடை பீறுக
குலவிய தோலைத் தியினாடே-
குருதியி லேசுக் கிலமது கூடிக்
குவலயம் வானப் பொருகாலாய்;
உடலெழு மாயப் பிறவியி லாவிக
ளுருவிணை நோயுற் றுழலாதே-
உரையடி யேனுக் கொளிமிகு நீப
முறைதிரு தாளைத் தரவேணும்;
கடலிடை சூரப் படையொடு பாறக்
கருதல ரோடப் பொரும்வேலா-
*கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத் தமிழ்நாடா;
சடையினர் நாடப் படர்மலை யோடிச்
சதுர்விளை யாடித் திரிவோனே-
தனிமட மானைப் பரிவுட னாடித்
தழுவுமனோதப் பெருமானே.

1087.

கருதியே மெத்த விடமெலாம் வைத்த
கலகவா ளொத்த விழிமானார்-
கடினபோ கத்த புளகவா ருற்ற
களபமார் செப்பு முலைமீதே;
உருகியான் மெத்த அவசமே யுற்ற
உரைகளே செப்பி யழியாதுன்-
உபயபா தத்தி னருளையே செப்பு
முதயஞா னத்தை அருள்வாயே;
பருவரா லுற்று மடுவின்மீ துற்ற
பகடுவாய் விட்ட மொழியாலே-

---

* கதிர்விடு வேலைக் கதிரினில் மேவி = சமுத்திரத்தினிடத்துக் கிரணங்கள் வீசும் இளஞ்சூரியனைப்போல் தோன்றி.

பரிவினொடுற்ற திகிரியே விட்ட
பழயமா யற்கு மருகோனே;
முருகுலா வுற்ற குழலிவே டிச்சி
முலையின்மே வுற்ற க்ருபைவேளே-
முருகனே பத்த ரருகனே வெற்பு
முரியவேல் தொட்ட பெருமாளே.

1088.

கொலையிலே மெத்த விரகிலே கற்ற
குவளையேர் மைக்கண் விழிமானார்-
குழையிலே யெய்த்த நடையிலே நெய்த்த
குழலிலே பற்கள் தனிலேமா;
முலையிலே யற்ப இடையிலே பதம
முகநிலா வட்ட மதின்மீதே-
முதுகிலே பொட்டு நுதலிலே தத்தை
மொழியிலே சித்தம விடலாமோ;
கலையனே உக்ர முருகனே துட்டர்
கலகனே யெத்த இளையோனே-
கனகனே பித்தர் புதல்வனே மெச்சு
கடவுளே பச்சை மயிலோனே;
உலகனே முத்தி முதல்வனே சித்தி
உடையனே விஷ்ணு மருகோனே-
ஒருவனே செச்சை மருவுநேர் சித்ர
வுருவனே மிக்க பெருமாளே.

1089.

அகிலநறுஞ் சேறு ம்ருகமதமுந தோயு
மசலமிரண் டாலு மிடைபோமென்-
றடியில்விழுந தாடு பரிபுரசெஞ் சீர
தபயமிடுங் கீத மமையாதே;
நகமிசைசென் றூடி வனசார்சந் தான
நவையறநின் றேணல் விளைவாள்தன்-

லளிதவிர்சிங் கார தனமுறுசிந் தூர
நமசரணென் றோத அருள்வாயே;
*பகலிரவுண் டான இருவருமவண் டாடு
பரிமளபங் கேரு கனுமாலும்-
படிகநெடும் பார கடதடகெம் பீர
பணமுகசெம பால மணிமாலை;
மூகபடசிந் தூர கரியில்வருந் தேவு
முடியஅரன் தேவி யுடனுடை-
முழுதுலகுந் தாவி எழுகடல்மண் டூழி
முடிவினுமஞ் சாத பெருமாளே.

1090.

இலகமதன் சாதுங் கனமலரம் பாலுங்
களிமதுவண் டூதும் பயிலாலும்-
கடலலையங் காலுங் கன†இரையொன் றாலுங்
கலைமதியங் காயும் வெயிலாலும்;
இலகியசங் காளும் இனியவளன் பீனும்
எனதருமின் தானின் றிளையாதே-
இருள்கெடமுன் தானின் றினமணிசெந் தார்தங்
கிருதனமுந் தோள்கொண் டணைவாயே;
உலகைவளைந் தோடுங் கதிரவுன்விண் பால்நின்
றனதபயங் காவென் றணைநாட-
உரியவெஞ் சூரன் சிரமுடன்வன் தோளும்
உருவியுடன் போதும் ஒளிவேலா;
அலகையுடன் பூதம் பலகவிதம் பாடும
அடைவுடனின் றாடும் பெரியோர்முன்-
அறமுமறந் தோயும் அறிவு‡நிரம் போதென்
றழகுடனன் றோதும் பெருமாளே.

---

* பகலிரவுண்டான இருவர் = சூரிய சந்திரர்.

† இரை = ஒலி; இது முதனிலைத் தொழிற்பெயர்.

‡ நிரம்ப ஓது என்று = நிரம்ப ஓது என்ன.

1091.

குருதிசலந் தோலுங் குடலுடனென் பாலுங்
குலவியெழுங் கோலந் தனில்மாயக்-
கொடுமையுடன் கோபங் கடுவிரகஞ் சேருங்
குணவுயிர்கொண் டேகும் படிகாலன் ;
கருதிநெடும் பாசங் கொடுவரநின் றாயுங்
கதறமறந் தேனென் றகலாமுன்-
கமலமலர்ந் தேறுங் குகனெனவும் போதுங்
கருணைமகிழ்ந் தோதுங் கலைதாராய்;
நிருதர்தளஞ் சூழும் பெரியநெடுஞ் சூரன்
நினைவுமழிந் தோடும் படிவேலால்-
நிகரிலதம பாபொன் றிமையவர்நெஞ் சால்நின்
நிலைதொழநின் றேமுன் பொருவீரா ;
பருதியுடன் சோமன் படியையிடந் தானும்
பரவிடநந் தானுண் டெழுபாரும்-
பயமறநின் றாடும் பரமருளங் கூரும்
பழமறையன் றோதும் பெருமாளே.

1092.

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி லனைவோரும்-
இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி
லெரியளரி மூட்டி யிடுமாறு ;
கரியஇரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி யழையாமுன்-
கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி யருள்வாயே ;
பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா-
பகைஞர்படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா ;

அருமறைகள் கூட்டி யுரைசெய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே-
அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

1093.

உறவின்முறை யோர்க்கு முறுதுயரம வாய்த்து
உளமுருகு தீர்த்தி வுடலூடே-
உடலைமுடி வாக்கு நெடியதொரு காட்டி
லுயர்கனலை மூட்டி விடமுவி ;
மறலிமற மார்த்த கயிறுதனை வீக்கி
வலிவினொடு தாக்கி வளையாமுன்-
மனமுமுனி வேட்கை மிகவுமுன தாட்கள்
மகிழ்வியல்கொ டேத்த மதிதாராய்;
பிறைநுதலி சேற்க ணமையரிவை வேட்பு
வரையில்மற வோர்க்கு மகவாகப்-
*பிறிதுருவில் வாய்த்து நிறைதினைகள் காத்த
பிடியிணடி போற்று மணவாளா ;
அறுகுபிறை யாத்தி அலைசலமு மார்த்த
அடர்சடையி னோர்க்கு மறிவீவாய்-
அடமவரு போர்க்கை அசுரர்கிளை மாய்த்து
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

1094.

அளகநிரை குலையவிழி குவியவளை கலகலென
அமுதமொழி பதறியெழ அணியாரம்-
அழகொழுகு புளகமுலை குழையஇடை துவளமிக
அமுதநிலை யதுபரவ அதிமோகம் ;
உளமுருக வருகலவி தருமகளிர் கொடுமையெனு
முறுகபட மதனில்மரி யழியாதே-
உலகடைய மயிலின்மிசை நொடியளவில் வலம்வருமு
னுபயநறு மலரடியை அருள்வாயே ;

* பிறிதுருவில = மான் வயிற்றில்.

வளையுமலை கடல்சுவற விடுபகழி வரதனிரு
மருதினொடு பொருதருள மபிராமன்-
வரியரவின் மிசைதுயிலும் வரதஜய மகள்கொழுநன்
மருகஅமர் முடுகிவரு நிருதேசர் ;
தளமுறிய வரைதகர அசுரர்பதி தலைசிதற
தகனமெழ முடுகவிடு வடிவேலா-
தாளமணி வடமிலகு குறவர்திரு மகள்கணவ
சகலகலை முழுதுமவல பெருமானே.

1095.

அனகனென அதிகனென அமலனென அசலனென
அபயனென அதுலனென அநபாயன்-
அடல்மதன னெனவிசைய னெனமுருக னென*நெருடி
யவர்பெயரு மிடைசெருகி யிசைபாடி ;
வனசமணி பணிலமழை சுரபிசுரர் தருநிகர்கை
மகிபனென திணையளவு ளவுமீயா-
மனிதர்கடை தொறுமுழலு மிடியொழிய மொழியொழிய
மனமொழிய வொருபொருளை அருள்வாயே;
இனனிலவு தலைமலைய அடியினுகி ரிலைகளென
இருசதுர திசையிலுர கமுமவிழ-
இரணியச யிலம்ரசித சயிலமர கதசயில
மெனவிமலை யமுனையென நிழல்வீசிக் ;
ககனமழை யுகைகடவு ளுடலமென முதியவிழி
கதுவியெழில் பொதியமிசை படர்கோலக்-
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமானே.

1096.

குடருமல சலமுமிடை யிடைதடியு முடையளவு
கொழுவுமுதி ரமும்வெளிற ளறுமாகக்-
கொளகொளென அளவிலபுழு நெளுநெளென விளைகுருதி
குமுகுமென இடைவழியில் வரநாறும் ;

* நெருடி = இணைத்து.

உடலின்மண மலிபுழுகு தடவியணி கலமிலக
வுலகமரு ளுறவருமு ரிவையாரன்-
பொழியவினை யொழியமன மொழியஇரு ளொழிய*என
தொழிவிலக லறிவையருள் புரிவாயே ;
வடகனக சயிலமுத லியசயில மெனநெடிய
வடிவுகொளு நெடியவிறல் மருவானை-
வகிருமொரு திகிரியென மதிமுதிய பணிலமென
மகரசல நிதிமுழுகி விளையாடிக் ;
கடலுலகை யளவுசெய வளருமுகி லெனஅகில
ககனமுக டுறநிமிரு முழுநீலக்-
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1097.

குதறுமுனை யறிவுகொடு பதறியெதி கதறிமிகு
†குமுதமிடு பரசமய மொருகோடி-
குருடர்தெரி வரியதொரு பொருள்தெரிய நிகழ்மனது
கொடியஇரு வினையெனும ளறுபோக ;
உதறிவித ரியகரண மரணமற விரணமற
வுருகியுனை பருகியது தினஞான-
உணர்வுவிழி பெறவுனது மிருகமத நளினபத
யுகளமினி யுணரஅருள் புரிவாயே ;
சிதறவெளி முழுதுமொளி திகழுமுடு படலமவை
சிறுபொறிக ளெனவுரக பிலமேழுஞ்-
செகதலமு நிகர்சிகரி பலவுநல கெசபுயக
திசையுமுட னுருகவரு கடைநாளிற் ;
கதறுமெழு கடலபருகி வடவைவிடு கரியபுகை
யெனமுடியில் ககனமுக டதிலோடுங்-
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

---

* எனது ஒழிவு=தற்போத ஒழிவு. † குமுதம்=பேரொலி.

1098.

வளைத்தபுழுக மறலிவிறல் மதனன்வழி படுத்துமென
வயிரமர கதமகர மளவாக-
வரிசிதறி விடமளவி வளருமிரு கலகவிழி
வளையிளைஞ ருயிர்கவா வருமாய;
இதையமள விடஅரிய அரிவையர்கள் நெறியொழுகி
எழுபிறவி நெறியொழிய வழிகாணா-
இடர்கள்படு குருடனைஉன் அடிமைகொள மகிழ்வொடுன
திருநயன கருணைசிறி தருள்வாயே;
பதயுகள மலர்தொழுது பழுநில்பொரி அவல்துவரை
பயறுபெரு வயிறு*நிறை யவிடாமுப்-
பழமுமினி துதவிமுனி பகரவட சிகரிமிசை
பரியதனி யெயிறுகொடு குருநாடர்;
கதைமுழுது மெழுதுமொரு களிறுபிளி றிடநெடிய
சடையுலகு கொடியில்வரு மதிவேகக்-
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
சடகமுட னமர்பொருத பெருமாளே.

1099.

விடமளவி யரிபரவு விழிகுவிய மொழிபதற
விதறிவளை கலகலென அநுராகம-
விளையமருக மதமுகுள முலைபுளக மெழநுதலில்
வியர்வுவர அணிசிதற மதுமாலை;
அடாளக மவிழஅணி துகிலகல அமுதுபொதி
யிதழ்பருகி யுருகியரி வையரோடே-
அமளிமிசை யமளிபட விரகசல தியில்முழுகி
யசைமுறு கினுமடிகள் மறவேனே;
உடலின்முய லகன்முதுகு நெறுநெறென எழுதிமிர
வுரகர்பில முடியமொரு பதமோடி-
உருவமுது ககனமுக டிடியமதி முடிபெயர
வுயரவகி லபுவனம திரவீசிக்;

* நிறைய இடா = நிறைய இட்டு.

கடகக ரதலமிலக் கடனமிடு மிறைவர்மகிழ்
கருதரிய விதமொடமு — குடனுடங்-
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத — பெருமாளே.

1100.

எழுபிறவி நீர்நிலத்தி லிருவினைகள் வேர்பிடித்து
இடர்புலைக ளேமுளைத்து — வளர்மாயை-
எனுமுலவை யேபணைத்து விரகுதழை யேதழைத்து
இருளிலைக ளேதழைத்து — மிகநீளும்;
இழவுநனை யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தி — னருநீழல்-
இசையில்விழ ஆதபத்தி யழியுமுன மேயெனக்கு
இனியதொரு போதகத்தை — யருள்வாயே;
வழுவுநெறி பேசுதக்க னிசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவர்வஜ்ர — படையாளி-
மலர்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையஎதிர் வீரவுக்ரர் — புதல்வோனே;
அழகியக லாபகற்றை விகடமயி லேறியெட்டு
அசலமிசை வாகையிட்டு — வருமவேலா
அடலசுரர் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரர்சிறை மீளவிட்ட — பெருமாளே.

1101.

நடையுடையி லேபெருக்கி நெடியதெரு வீதியிற்றுள்
நயனமத னூலுருட்டி — வருவாரை-
நணுகிமய லேவிளைத்து முலையையிலை கூறிவிற்று
லளிதமுட னேபரப்பி — யுறவாடி;
வடிவதிக வீடுபுக்கு மலரணையின் மீதிருத்தி
பதனனுடை யாகமத்தி — னடைவாக-
மருவியுள மேயுருக்கி நிதியமுள தேபறிக்கும்
வனிதையர்க ளாசைபற்றி — யுழல்வேனோ;

இடையர்மனை தோறுதித்த முறிதயிர்நெய் பால்குடிக்க
இருகைபுற வேபிடித்து உரலோடே-
இறுகிடஅ சோதைகட்ட அழுதிடுகோ பாலக்ருஷ்ண
னியல்மருக னேகுறத்தி மணவாளா;
அடலெழுது மேருமெத்த வருபுனலி லேறவிட்டு
அரியதமிழ் வாதுவெற்றி கொளுமவேலா-
அவுணர்குலம் வேரறுத்து அபயமென வோலமிட்ட
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

1102.

மடலவிழ்ச ரோருகத்து முகிழ்நகையி லேவளைத்து
மதசுகப்ர தாபசித்ர முலையாலே-
மலரமளி மீதணைத்து விளையுமமு தாதரத்தை
மனமகிழ வேயளித்து மறவாதே;
உடலுயிர தாயிருக்க உனதெனதெ னுமறிக்கை
ஒருபொழுதொ ணாதுசற்று மெனவேதான்-
உரைசெய்மட வாரளித்த கலவிதரு தோதகத்தை
யொழியவொரு போதகத்தை யருள்வாயே;
தடமகுட நாகரத்ந படநெளிய ஆடுபத்ம
சரணயுக மாயனுக்கு மருகோனே-
சரவணமி லேயுதித்த குமரமுரு கேசசக்ர
சயிலபவல மாய்நடத்து மயில்வீரா;
அடல்மருவு வேல்காத்தி லழகுபெற வேயிருத்தும
அறுமுகவ ஞானதத்வ நெறிவாழ்வே-
அசுரர்குல வேரைவெட்டி அபயமென வோலமிட்ட
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

1103.

அங்கதன் கண்டகன் *பங்கிலன் பொங்குநெஞ
சனபிலன் துன்பவன் புகழ்வாரா-
அஞ்சொநிங் குமபொதும் பொன்றையென் றஞ்சுமந்
தங்குமிங் குந்திரிந் திசைதேடுஞ்;

---

* பங்கிலன் = பாங்கிலலாதவன்.

சங்கடங் கொண்டவெஞ் சண்டிபண் டன்பெருஞ்
சஞ்சலன் கிஞ்சுகத் தருவாயார்-
தந்தொழும் பன்றழும் பன்பணிந் தென்றுநின்
தண்டையம் பங்கயம் புகழ்வேனோ;
கங்கையும் பொங்குநஞ் சம்பொருந் தும்புயங்
கங்களுந் திங்களுங் கழுநீருங்-
கஞ்சமுந் தும்பையுங் கொன்றையுஞ் சந்தனங்
கந்தமுந் துன்றுசெஞ் சடையாளர்;
பங்குதங் கும்பசுங் கொம்புதந் தின்புறும்
பந்தமவங் குண்டர்தங் குலகாலா-
பண்டிதன் கந்தனென் றண்டரண் டந்தொழும்
பண்புநண் பும்பெறும் பெருமாளே.

1104.

தந்தமுந் துன்பவெஞ் சிந்தைகொண் டந்தகன்
தண்டவொன் றன்றொடுங் கிடுமாவி-
தஞ்சமென் றம்பரிந் தின்சொல்வஞ் சந்தெரிந்
தன்றுமென் றுந்தனந் தனைநாடி;
நின்றனன் பென்பதொன் றின்றிநன் றென்றுநெஞ்
சின்கணண் பொன்றில்யங் கையர்நேசம்-
நின்றளந் துஞ்சளங் கொண்டிடும் *புன்கணந்
தின்பமொன் றின்றியிங் குழல்வேனோ;
சுந்தரன் பந்தமுஞ் சிந்தவந் தன்புடன்
தொண்டனென் றன்றுகொண் டிடுமாதி-
தும்பைசெய் பொன்சொரிந் தூந்தருங் கொன்றைதுன்
பங்கடிந் தென்பொடுந் தொலையாநீர்;
அந்தமுந் திந்தவுங் கெந்தமிஞ் சுங்கொழுந்
தன்றுமின் றும்புனைந் திடும்வேணி-
அன்பர்நெஞ் சின்புறுஞ் செஞ்சொலன் கந்தனென்
றண்டரண் டந்தொழும் பெருமாளே.

---

* புன்கண் நந்த எனப் பிரிக்க; நந்த = விருத்தியாக.

1105.

உம்பரா ரமுதெனுந் தொண்டைவா யமுதமுண்
டுண்டுமே கலைகழன் றயலாக-
உந்திவா வியில்விழுந் தின்பமா முழுகியன்
பொன்றிலா ரொடுதுவண் டணைமீதே ;
செம்பொனார் குடமெனுங் கொங்கையா பரணமுஞ்
சிந்தவாள் விழிசிவந் தமராடத்-
*திங்கள்வேர் வுறவணைந் தின்பவா ரியில்விழுஞ்
சிந்தையே †னெனவிதங் கரைசேர்வேன் ;
கொம்புநா லுடையவெண் கம்பமால் கிரிவருங்
கொண்டல்பலோ மசையள்சங்க் ரமபாரக்-
கும்பமால் வரைபொருந் திந்தராபூ பதிதருங்
கொண்டலா னையைமணஞ் செயும்வீரா ;
அம்புரா சியுநெடுங் குன்றுமா மரமுமன்
றஞ்சவா னவருறுஞ் சிறைமீள ;
அங்கநான் மறைசொலும பங்கயா சனமிருந
தங்கைவே லுறவிடும் பெருமாளே.

1106.

வண்டுதான் மிகவிடங் கொண்டகா ரளகமென்
பந்திமா மலர்சொரிந் துடைசோர-
வம்புசேர் கனிபொருந் தின்பவா யமுதருந்
தந்தமா மதனலம் விதமாக ;
விண்டுமே னிகள்துவண் டன்றில்போ லுளமிரண்
டொன்றுமா யுறவழிந் தநுபோகம்-
விஞ்சவே தருமிளங் கொங்கையார் வினைகடந்
துன்றன்மே லுருகஎன் றருள்வாயே ;
பண்டுபா ரினையளந் துண்டமால மருகசெம்
பைம்பொன்மா நகரிவிந் திரன்வாழ்வு-
பண்பெலா மிகுதிபொங் கின்பயா னையைமணந்
தனபிரோ ரகமயர்ந் திடுவோனே ;

---

* திங்கள் = திங்கள் போன்ற முகம். † எனவிதம் = என்ன விதம்.

அண்டர்தா மதிபயங் கொண்டுவா டிடநெடுந்
தண்டுவாள் கொடுநடந் திடுசூரன்-
அங்கமா னதுபிளந் தெங்கும்வீ ழிடவெகுண்
டங்கைவே லுறவிடும் பெருமாளே.

1107.

காதல்மோ கந்தருங் கோதைமார் கொங்கைசிங்
கார*நா கஞ்செழுங் கனிவாய்கனை-
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சரும் பினம்வாழும ;
ஓதிகார் செஞ்சொல்மென் பாகுதே னென்றுயர்ந்
தோநமோ கந்தமன் றுரையாதே-
ஊசலா டிப்புலன் †தாரியே சென்றுநின்
றேயுமா றொன்றையுங் கருதாதோ ;
தாதகீ சண்பகம் பூகமார் கந்தமந்
தாரம்‡வா சந்திசந் தனநீடு-
§சாமவே தண்டம்வெங் கோபமே தண்டசந்
தானமா தங்கள்பைம் புனமேவும் ;
தீதிலா வஞ்சியஞ் சீதபா தம்படுஞ்
சேகரா தண்டையங் கழல்பேணித்-
தேவிபா கம்பொருந் தாதிநா தன்தொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

1108.

கோலகா லத்தைவிட் டாசுபா டக்கொடிக்
கோவைபா டக்கொடிக் கொடிவாதிற்-
கோடிகூ ளக்கவிச் சேனைசா டக்கெடிக்
கூறுகா ளக்கவிப் புலவோன்யான் ;
சீலகா லபபுயற் பாரிசா தத்தருத
த்யாகமே ருப்பொருப் பெனவோதுஞ்-

---

* நாகம்=மலை. † தாரி=வழி. ‡ வாசந்தி=குருக்கத்தி.
§ சாம வேதண்டம்=கரிய நிறத்தை யுடைய மலை.

சீதரா சித்ரவித் தாரமே செப்பிடக்
கேளொணா நிற்பதைத் தவிர்வேனோ ;
ஆலகா லப்பணிப் பாயல்நீ ளப்படுத்
தாரவா ரக்கடற் கிடைசாயும்-
ஆழிமா லுக்குநற் சாமவே தற்குமெட்
டாதரூ பத்தினிற் சுடராய :
காலகா லப்ரபுச் சாலுமா லுற்றுமைக்
காகவே ளைப்புகக் கழுநீராற்-
காதும்வே ழச்சிலைப் பாரமீ னக்கொடிக்
காமவேள் மைத்துனப் பெருமாளே.

1109.

ஞாலமோ டொப்பமக் காளொணா நற்சொலைத்
தீதெனா நற்றவத் தணைவோர்தம்-
நாதமோ டட்கருத் தோடவே தர்க்கமிட்
டோயுநா யொப்பவர்க் கிளையாதே ;
நீலமே னிக்குலத் தோகைமே லுற்றுநிட்
டூரசூர் கெட்டுகப் பொரும்வேலா-
நேசமாய் நித்தநிற் றாளைநீ ளச்சமற்
றோதநீ திப்பொருட் டாவேணும் ;
கோலவா ரிக்கிடைக் கோபரா விற்படுத்
தானும்வே தக்குலத் தயனாரும்-
கூறும்*வா னப்புவிக் கூறுதீ ரக்குறிப்
போதுறா நிற்பஅக் கொடிதான ;
காலன்மார புறறுதைதத தானும்மார கறபுடைக்
கோதைகா மக்கடற் கிடைமூழ்கக்-
காவிசேர் கொத்தலர்ப் பாண†மேய் வித்தகக்
காமவேள் மைத்துனப பெருமாளே.

1110.

கரவுசேர் மகளிர்குங் குமபயோ தரதனங்
களினறு துயில்வதுஞ் சரிபேசுங்-

* வானப் புவிக்கு = வானத்துக்கும் புவிக்கும். † எய் = எய்

காசரோ ருகநகம் படவிடாய் தணிவதூங்
கமலநா பியினமுயங் கியவாழ்வும்;
அரவுபோ லிடைபடிந திரவெலா முழுகுமின்
பநல்மகோ தநிநலம் பெறுமாறும்-
அதரபா னமுதமுந் தவிரவே மவுனபஞ்
சரமஞெ லயசுகந தருவாயே;
பரவுமா மிரமுகங் கொடுதிசா முகதலம்
படர்பகீ ரதிவிதம் பெறவூடல்-
பயில்பணு வனமுகந தகுணமா சுணகணம்
பணிநிலா வுமிழுமம் புலிதாளி;
குரவுகூ விளமரும் பிதழிதா தகிநெடுங்
குடிலவே ணியிலணிந் தவராகங்-
குழையவூ தரவுடன் தழுவுநா யகிதருங்
குமரனே யமரர்தம் பெருமாளே.

1111.

விடிவவேல் தனைவெகுண் டிணைநரா விமையவனைந
தமர்செய்வாள் விழியர்நெஞ் சினில்மாயம்-
வளரமால் தனைமிகுந் தவர்கள்போ லளவிவந
தணுகுமா நிதிகவர்ந திடுமாதர்;
துடியையநே ரிடைதனந துவளவே துயில்பொருந
தமளிதோய் பவர்வசஞ் சுழலாதே-
தொலைவிலா இயல்தெரிந தவலமா னதுகடந
தனைதுதாள் தொழுமனந தருவாயே;
படியெலா முடியநின் றருளுமா லுதவுபங்
கயனுநான் மறையுமும் பரும்வாழப்-
பரவையூ டெழுவிடம் பருகிநீள் பவுரிகொண்
டலகையோ டெரிபயின் றெருதேறிக்;
கொடியவா ளரவிளம் பிறையிஞெ டலைசலங்
குவளைசேர் சடையர்தந் திருமேனி-
குழையவூ தரவுடன் தழுவுநா யகிதருங்
குமரனே யமரர்தம பெருமாளே.

1112.

இட்டமுறு நோய்தீமை யிட்டகுடில் மாமாய
கட்டுவிடு மோர்கால *மளவாவே-
கத்தவுற வோர்பாலர் தத்தைசெறி வார்வாழ்வு
கற்புநெறி தான்மாய வுயர்காலன் ;
இட்டவொரு தூதாறு முட்டவினை யால்மூடி
யிட்டவிதி யேயாவி யிழவாமுன்-
†எத்தியுனை நாடோறு முத்தமிழி னாலோத
இட்டமினி தோடார நினைவாயே ;
துட்டரென வழ்பாரு முட்டவினை யாள்சூரர்
தொக்கில்நெடு மாமார்பு நெரையாகத்-
தொட்டவடி வேல்வீர நட்டமிடு வார்பால
சுத்ததமி ழார்ஞான முருகோனே ;
மட்டுமறை நால்வேத னிட்டமலர் போல்மேவ
மத்தமயில் மீதேறி வருநாளை-
வைத்தநிதி போல்நாடி நித்தமடி யார்வாழ
வைததபடி மாறாத பெருமாளே.

1113.

பக்கமுற நேரான மக்களுட னேமாதர்
பததியுடன் மேல்மூடி யினிதான-
பட்டினுட னேமாலை யிட்டுநெடி தோர்பாடை
பற்றியனை வோர்கூவி யலைநீரிற் ;
புக்குமுழு காநீடு துக்கமது போய்வேறு
பொற்றியிட வேயாவி பிரியாமுன்-
பொற்கழலை நாடோறு முட்பரிவி னாலோது
புத்திநெடி தாம்வாழ்வு புரிவாயே ;
இக்கனுக வேநாடு முக்கணர்ம காதேவ
ரெப்பொருளு மாமீசர் பெருவாழ்வே-
எட்டவரி தோர்வேலை வற்றமுது சூர்மாள
எட்டியெதி ரேயேறு மிகல்வேலா ;

---

* அளவா=அளந்து. ஏ-அசை.
† எத்தி=எத்தி.

மக்களொடு வானுடர் திக்கில்முனி வோர்சூழ
மத்தமயில் மீதேறி வருவோனே-
வைத்தநிதி போல்நாடி நித்தமடி யார்வாழ
வைத்தபடி மாறாத பெருமாளே.

1114.

நீருநில மண்டாத தாமரைய டர்ந்தோடி
நீளமக லஞ்சோதி வடிவான-
நேசமல ரும்பூவை மாதின்மண மும்போல
நேர்மருவி யுண்காத லுடன்மேவிச்;
சூரியனு டன்சோம னீழலிவை யண்டாத
சோதிமரு வும்பூமி யவையூடே-
தோகைமயி லின்பாக னுமெனம கிழ்ந்தாட
சோதிஅயி லுந்தாரு மருளவாயே;
வாரியகி லங்கூச ஆயிரப ணஞ்சேடன்
வாய்விட*வொ டெண்பாலு முடுபோல-
வார்மணியு திர்ந்தோட வேகவினி றைந்தாட
மாமயில்வி டுஞ்சேவல் கொடியோனே;
ஆரியன வன்தாதை தேடியின முடபாடு
மாடலரு ணஞ்சோதி யருள்பாலா-
ஆனைமுக வன்தேடி யோடியெய ணங்காத
லாசைமரு வுஞ்சோதி பெருமாளே.

1115.

சுட்டதுபோ லாசை விட்டுலகா சார
துக்கமிலா ஞான சுகமேவிச்-
சொற்கரணு தீத நற்குணமூ டாடு
சுத்தநிரா தார வெளிகாண;
மொட்டலர்வா ரீச சக்ரசடா தார
முட்டவுமீ தேறி மதிமீதாய்-

---

* ஒ டெண்பாலும் = ஓடு எண்பாலும்.

முப்பதுமா றாறு முப்பதும்வே றான
முத்திரையா மோன மடைவேனோ;
எட்டவொணு வேத னத்தொடுகோ கோவெ
னப்பிரமா வோட வரைசாய
எற்றியவ மூழி வற்றிடமா றாய
எத்தனையோ கோடி யசுரேசர்;
பட்டொருசூர் மாள விக்ரமவே லேவு
பத்திருதோள் வீர காவல
பத்தினிதோள் தோயு முத்தமமா றாது
பத்திசெய்வா ருடர் பெருமாளே.

1116.

மைச்சுனமார் மாம னைச்சியுமா தாவு
மக்களுமா றாத துயர்கூர
மட்டிலதோர் தீயி லிக்குடில்தான் வேவ
வைத்தவர்தா மேக மதிமாய;
நிச்சயமாய் நாளு மிட்டொருதூ தேவு
நெட்டளவாம் வாதை யணுகாமுன்
நெக்குருகா ஞான முற்றனதா ளோதி
நித்தலும்வாழ் மாறு தருவாயே;
நச்சணைமேல் வாழு மச்சுதனால் வேத
னற்றவர்தா நாட விடையேறி
நற்புதல்வா சூரர் பட்டிடவே லேவு
நற்றுணைவா ஞால மிகவாழப்;
பச்செனுநீள் தோகை மெய்ப்பரியூர் பாக
பத்தியதா மாறு முகநாலும்
பக்ஷமுமே லாய்ஷ டக்ஷரசூழ் பாத
பத்திசெய்வா ருடர் பெருமாளே

1117.

தத்துவத் துச்செயலொ *டொட்டில்பட் டக்குருகு
சத்துவிட் டப்படிபொ லடியேனுஞ்-
சச்சிலுற் றப்படியில் விட்டுவிட் டுக்குளறி
சத்துவத் தைப்பிரிய விடும்வேளை;
சுத்தமுத் தப்பதவி பெற்றநற் பத்தரொடு
தொக்குசற் றுக்கடையன் மிடிதீரத்-
துப்புமுத் துச்சரண பச்சைவெற் றிப்புரவி
சுற்றவிட் டுக்கடுகி வரவேணும்;
†வித்தகத் திப்பவள தொப்பையப் பற்கிளைய
வெற்றிசத் தி‡காரக முருகோனே-
வெற்புமெட் டுத்திசையும வட்டமிட் டுச்சுழல
விட்டபச் சை§சரண மயில்வீரா;
கத்தர்நெட் டுச்சடையர் முக்கணக் கக்கடவுள்
கச்சியப் பர்க்கருள்செய் குருநாதா-
‖கற்பதத் தைக்குருகி யுற்பதத துக்குறவர்
¶கற்பினுக் குற்றுபுணர் பெருமாளே.

1118.

மக்களொக் கற்றெரிவை பக்கமிக் கத்துணைவர்
மற்றுமுற் றக்குரவ ரனைவோரும்-
வைத்தசெப் பிற்பணமும் ரத்நமுத் திற்பணியு
மட்டுமற் றுப்பெருகு மடியாரும்;
புக்குதுக் கித்தெரிகள் தத்தவைக் கப்புகுத
பொய்க்குமெய்க் குச்செயலு முருகாதே-

---

* ஒட்டு=பறவை பிடிப்போர் அது வந்து படப் பசை தடவி வஞ்சித்து வைத்திருக்குங் கருவி: கண்ணி.

† வித்த கத்தி=வித்தக+அத்தி. ‡ காரக=கார+அக.

§ சரணம்=மயில் தோகை.

‖ கற்ப தத்தை=கற்பக நாட்டுத் தெய்வயானை.

¶ கற்பினுக்கு=கற்பினை யுடைய வள்ளிநாயகியை.

புஷ்பமிட் டுக்கருணை நற்பதத் தைதப்பரவு
புத்திமெத் தத்தருவ தொருநாளே;
செக்கர்கற் றைச்சடையில் மிக்ககொக் கிற்சிறகு
*செக்கமுற் றச்சலமு மதிசூடி-
சித்தமுற் றுத்தெளிய மெத்தமெத் தத்திகழு
சித்தமுத் திச்சிவமு மருள்வோனே;
கொக்குறப் புக்கொடு†மை நிற்கும்வட் டத்தசுரை
கொதறிநெக் கக்கொலைசெய் வடிவேலா-
கொற்றவெற நிப்பரிசை யொட்டியெட் டிசசிறித்து
குத்திவெட் டிப்பொருத பெருமாளே.

1119.

உற்பா தப்பூ தக்கா யத்தே
யொத்தோ டித்தத் தியல்காலை-
உட்பூ ரித்தே சற்றே சற்றே
யுக்கா ரித்‡தற புதனேரும;
§அற்பா யிற்றாய் நிற்பா ரைப்போ
லப்பா வித்துத திரிவேனுக்-
கப்பா சத்தா லெட்டா அப்பா
லைப்போ தத்தைப் புரிவாயே;
||பொற்பார் பொற்பார் புத்தே ளிர்க்கா
கப்போய் முட்டிக் கிரிசாடிப்-
புக்கா ழிச்சூழ் கிட்டா கிச்சூர்
பொட்டா கக்குத் தியவேலா;
¶முற்பா டப்பா டற்றா ருக்கோர்
முட்கா டற்கப் பொருளீவாய்-

* செக்கம் : செகம்=ஜகம். † மை வட்டத்து நிற்கும் அசுரை என அந்வயப் படுத்துக; மை வட்டம்=கறுத்த வட்டமாகிய கடல்.

‡ அற்புதன்=கடவுள். § அற்பா யிற் றாய்=அன்பாய் இல் தாய்=அன்பாய் இல்லறத்தைத் தழுவி.

|| பொற்பு ஆர் பொன் பார்=அழகு நிறைந்த பொன்னுலகம்.

¶ இங்கே பொய்யாமொழிப் புலவருக்கு அநுக்கிரகித்ததைக் குறிப்பிட்டது.

முத்தா முத்தி யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

1120.

ஏற்று வற்று மட்டா கத்தி
யிற்காய் செக்கட் பிறைவாளை-
யிற்றார் கைப்பா சத்தே கட்டா
டிக்கோ பித்துக் கொடுபோமுன்;
உற்றார் பெற்றார் சுற்று நிற்பா
ரொட்டோம் விட்டுக் கழியியென்-
றற்றே துற்றே பறு நிற்பா
ரக்கா லத்துக் குறவார்தான்;
பற்றார் மற்று டைக்கே குத்தா
பற்று னப்பிற் கனைவோனே-
பச்சே னற்கா னத்தே நிற்பாள்
பொற்பா தத்திற் பணிவோனே;
முற்று வற்று மெய்ப்போ தத்தே
யுற்றார் சித்தத் துறைவோனே-
முத்தா முத்தி யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

பு 1121.

செட்டா கத்தே ளைப்போ லச்சி
ரைத்தே டித்திட் பமதாகத்-
திக்கா மற்பா டுற்று ரிற்சி
ருற்று ருக்குச் சிலபாடல்;
பெட்டா கக்கூ றிப்போ தத்தா
சைப்போல் வப்புற் றுழலாதே-
பெற்று ரிற்சார் வுற்றுய் நற்றாள்
சற்றே தப்பெற் றிடுவேனோ;
எட்டா நெட்டா கத்தோ கைக்கே
புக்கோ லத்திட் டிமையோர்வா-

னிற்பா ரிற்கு ழச்கு ரைத்தா
னெட்டா வெட்டிப் பொரும்வேலா;
மூட்டா மற்று ளேச்சே விப்பார்
முற்பா வத்தைக் களேவோனே-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முக்திப் பெருமாளே.

1122.

பட்டா டைக்கே பச்சோ லக்கா
துகம்*க பதந்த தனமாகும-
பக்கே கிட்டு ரப்பார் வைக்கே
பட்டா சைப்பட் டுறவாடி;
ஒட்டார் நட்டார் †வட்டா ரத்தே
சுற்றே முற்றத தடுமாறும-
ஒட்டா ரபா விக்கே மிக்கா
‡முற்றுள் கிட்டத் தருமோதான்;
கட்டா விப்போ துட்டா விப்பூ
கக்கா விற்புக் களிபாடுங்-
கற்பூர் நற்சா ரக்கா ழித்தோப்
கதா சத்திக் தகவோடே;
முட்டா கக்கூ ரிட்டே னற்றுள்
முற்று மற்கொட் குமரேசா-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

1123.

§பத்தே ழெட்டெ ரெட்டேழ் ரட்டால்
வைத்தே பத்திப் படவேயும்-
பைப்பி றற்கூ ரைப்பா சத்தா
சற்கா ரத்துக் கிரைதேடி;

* கும்பக்கே=கும்பத்துக்கே. † வட்டாரத்து எசு உற்றே எனப் பிரிக்க. ‡ உற் றுள்=உன் தாள். § பத்து எழு எட்டு பதினாறு எழு=சஅ; இதன் இரட்டை கஈ.

எத்தே சத்தோ டித்தே சத்தோ
டொத்தேய் *சப்தத் திலுமோடி-
எய்த்தே நத்தா பற்று மற்று
திற்றே முக்கக் கடவேனோ;
சத்தே முற்று யத்தா னைச்சூர்
கற்சா டிக்கற் பணிதேசா-
சட்சோ திப்பூ திப்பா லதநா
அக்†கோ டற்செச் சையமார்பா;
‡முத்தா பத்தா ரெட்டா வைப்பா
வித்தா முத்தர்க் கிறையோனே-
முத்தா முததீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

1124.

பொற்கோ வைக்கே பற்கோ வைக்கே
பொய்ப்போ கந்தைப் பகர்வார்கட்-
பொய்க்கே மெய்க்கே பித்தா கிப்போ
கித்தே கைக்குப் பொருள்தேடித்;
தெற்கோ டிக்கா சிக்கோ டிக்கீழ்
திக்கோ டிப்பச் சிமமான-
திக்கோ டிப்§பா ணிக்கோ டித்தீ
வுக்கோ டிக்கெட் டிடலாமோ;
தற்கோ லிப்பா லிப்பார் நற்சி
ரைச்சா ரத்தற் பரமானைப்-
தப்பா முப்பா லைத்தே டித்தே
சத்தோர் நிற்கத் தகையோடே;
முற்கா னப்பே தைக்கா கப்போய்
முற்பால் வெற்பிற் ||கணியானாய்-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

* சப்தத்திலும் = சப்த தீவிலும். † கோடல் = காந்தள் மலர். ‡ முத்தாபத்தார் = தாபத்திரய முடையவர்கள் = மூவாசை யுள்ளோர். § பாணி = நீர் : கடல். || கணி = வேங்கைமரம்.

1125.

பொற்பூ வைச்சி ரைப்போ லப்போ
தப்பே சிப்பொற் கனிவாயின்-
பொய்க்கா மத்தே மெய்க்கா மப்பூ
ணைப்பூண் வெற்பிற் றுகில்சாயக் ;
கற்பா லெக்கா வுட்கோ விக்கா
சுக்கே கைக்குத் திடுமாதர்-
கட்கே பட்டே நெட்டா சைப்பா
டுற்றே கட்டப் படுவேனோ ;
சொற்கோ லத்தே நற்கா லைச்சே
விப்பார் சித்தத் துறைவோனே-
தொக்கே கொக்கா கிச்சூ ழச்சூர்
விக்கா முக்கத் தொடும்வேலா ;
முற்கா லத்தே வெற்பேய் வுற்றூர்
முத்தாள் முத்தச் சிறியோனே-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

1126.

மெய்க்கூ ணைத்தே டிப்*பூ மிக்கே
விதத்தா ரத்திற் பலகாலும்-
வெட்கா மற்சே ரிச்சோ ரர்க்கே
வித்தா சைச்சொற் கலையோதிக்;
கைக்கா ணிக்கோ ணற்போ தத்தா
ரைப்போ லக்கற் பழியாதுன்-
கற்பூ டுற்றே நற்றூ ளைப்பா
டற்கே நற்சொற் றருவாயே ;
பொய்க்கோ ணத்தாழ் மெய்க்கோ ணிப்போய்
முற்பால் வெற்பிற் புனமானைப்-
பொற்றோ ளிற்சேர் கைக்கா கப்பா
தத்தாள் பற்றிப் புகல்வோனே ;

---

* பூமிக்கே = பூமியி னிடத்தில்.

முக்கோ ணத்தா னத்தா னைப்பால்
வைத்தார் முத்தச் சிறியோனே-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே.

1127.

அகரமுத லெனவுரைசெய் *ஐம்பந்தொ ரக்ஷரமும
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குதத னிப்பொருளை
எப்பொருளு மாய-
அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினின்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு
மற்றதொரு காலம்;
நிகழும்வடி விணைமுடிவி லொன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சுமபின்பு ரத்ரயமெ
ரித்தபெரு மானும-
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள் வாயே;
தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத குந்தந்த ரித்தகுத
தத்ததகு தீதோ-
தனதனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடு டுடுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு
தரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையுமு
டுக்கையுமி யாவும்;

---

* ஐம்பந்தொரக்ஷரம் = ஐம்பத்தொரக்ஷரம்.

மொகுமொகென அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலைகைகர ணமிடவுல கெங்கும்ப ரக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக
ளத்திலொரு கோடி-
முதுகழுகு கொடிகருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச
ளித்தபெருமாளே.

1128.

அரிய வஞ்சக ரறவே கொடியவ
ரவலர் வன்கண ரினியா ரவகுணை
ரசட ரன்பில ரவமே திரிபவ ரதிமோக-
அலையில் மண்டிய வழியே யொழுகியர்
வினைநி ரம்பிடு பவமே செறிபவ
ரருள்து றந்தவ ரிடம்வாழ் சவலைகள் நரகேற;
உரிய சஞ்சல மதியா னதுபெறு
மனதி டும்பர்க ளிடமே தெனஅவ
*ருபய அங்கமு நிலையா கிடவொரு கவியாலே-
உலக முண்டவர் மதனு ரிமையவர்
தருவெ னும்படி மொழியா வவர்தா
உளது கொண்டுயி ரவமே விடுவது தவிராதோ;
கரிய கொந்தள மலையா ளிருதன
அமுது ணுங்குரு பரனே திரைபடு
கடல டும்படி கணையே வியஅரி மருகோனே-
கருணை கொண்டொரு குறமா மகளிடை
கலவி தங்கிய குமரா மயில்மிசை
கடுகி யெண்டிசை நொடியே வலம்வரு மிளையோனே;
திரிபு ரங்கனல் நகையா லெரிசெய்து
பொதுந டம்புரி யாளு ரிடமுறை
சிவைச வுந்தரி யுமையா ளருளிய புதல்வோனே-

* உபயம் அங்கம்=சாங்கமும் உபாங்கமும்.

சிகர வெண்கரி அயிரா வதமிசை
வருபு ரந்தர னமரா பதியவர்
சிறைவி டும்படி வடிவேல் விடவல பெருமாளே.

1129.

ஆராத காத லாகி மாதர்த
*மாபாத சூட மீதி லேவிழி
யாலோல ஞய்வி கார மாகியி லஞ்சியாலே-
ஆசாப சாசு மூடி மேலிட
ஆசார வீன ஞகி யேமிக
ஆபாச ஞகி யோடி நாளுமி ழிந்திடாதே;
ஈராறு தோளு மாறு மாமுக
மோடாரு நீப வாச மாலையு
மேமுன தோகை நீல வாசியு மன்பினுலே-
ஏனேரு மோது மாறு தீதற
நாஞ்சு பாடி யாடி நாடொறு
மீடேறு மாறு ஞான போதக மன்புருதோ;
வாராகி நீள்க பாலி மாலினி
மாமாயி யாயி தேவி யாமளை
வாசாம கோச ராப ராபரை யிங்குளாயி-
வாதாடி மோடி காடு காளுமை
மாஞால வீலி யால போசனி
மாகாளி சூலி வாலை யோகினி யம்பவாணி;
சூராரி மாபு ராரி கோமளை
தூளாய பூதி பூசு நாரணி
சோஞசை லாதி லோக நாயகி தந்தவாழ்வே-
தோளாலும் வாளி ஞலு மாறிடு
தோலாத வான நாடு சூறைகொள்
சூராரி யேவி சாக னேசுரர் தம்பிரானே.

---

* ஆபாத சூடம் = உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைக்கும்.

1130.

ஆராதன ராடம் பரத்து மாறுதுச வாலம பனத்து
மாவாகன மாமந திரத்து மடலாலும-
ஆரூர்தெச மாமண் டபத்தும் வேதாகம மோதுந் தலத்து
மாமாறெரி தாமிந் தனத்து மருளாதே;
நீராளக நீர்மஞ் சனத்த நீடாரக வேதண்ட மத்த
நீநானற வேறின்றி நிற்க நியமாக-
நீவாவென நீயிங் கழைத்து பாராவர வாநந்த சித்தி
நேரேபர மாநந்த முத்தி தரவேணும்;
வீராகர சாமுண்டி சக்ர பாரகண பூதங் களிக்க
வேதாளச மூகம் பிழைக்க அமராடி-
வேதாமுறை யோவென் றரற்ற ஆகாசக பாலம் பிளக்க
வேர்மாமர மூலந் தறித்து வடவாலும்;
வாராகர மேழுங் குடித்து மாசூரொடு போரம் பறுத்து
வானூசன மேலுந் துணித்த கதிர்வேலா-
வானாடா சாளும் படிக்கு வாவாவென வாவென் றழைத்து
வானோர் பரி தாபந் தவிர்த்த பெருமாளே.

1131.

ஆலா லத்தைய முத்திய வேல்போல நற்குழை யைப்பொரு
தாகா ரைத்தொடர் கைக்கெணும விழியாலே-
ஆளா மற்றவர் சுற்றிட மீளா மற்றலை யிட்டறி
வார்போ கச்செயல் விச்சைகள் விலைகூறிக்;
கோலா லக்கண மிட்டுவ ராதார் நெக்குரு கப்பொருள்
கூறு கப்பெறில் நிற்கவு மிலதானார்-
கூடா நட்புமு ரைத்திடு கேடா விட்டகல் மட்டைகள்
கோமா ளத்துய ருட்பய முறலாமோ;
பாலா மக்கட விற்றுயில் மாலோ டெட்டுத லைக்கிரி
பால்பார் வைக்கள விட்டுமை யுறுபோதிற்-
பார்மே விக்கனு டற்பொறி யாய்வீ ழச்சுடும் வித்தகர்
பாலா பதகரி டத்தியல் பயில்வோனே;

மேலா யத்தொடு திக்கடை மேவார் வெற்பொட ரக்கரை
வேர்மா ளப்பொரு திட்டொளி விடும்வேலா-
மேனு டர்ச்சிறை விட்டருள் மீளா விக்கிர மத்தொடு
வேதா வைச்சிறை யிட்டருள் பெருமாளே.

1132.

ஆனாத ஞான புத்தி யைக்கொ டுத்ததும்
ஆராயு நூல்க ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ளைத்துயி ரழியாதே-
ஆசாப யோதி யைக்க டக்க விட்டதும்
வாசாம கோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபாத னென்மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்;
யானாக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற வோதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடாமழி-
ஏறாத மாம லத்ர யக்கு ணத்ரய
நானாவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்ததும் மறவேனே;
மாநாக நாண்வ லுப்பு றத்து வக்கியொர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி லொருமூவர்-
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெ டுத்த கற்பக வனமேவும்;
*தேநாய காஎ னத்து திக்க வுத்தம
வானாடர் வாழ விக்ர மத்தி ருக்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய வரைமோதிச்-
சேறாய சோரி புக்க ளக்கர் திட்டெழ
மாறாநி சாச ரக்கு லத்தை யிப்படி
சீராவி னால றுத்த றுத்தொ துக்கிய பெருமாளே.

---

* தேம் நாயகா; தேம்=தேசம்.

1133.

இடமருவுஞ் சீற்ற வேலெ டுத்து
விடமுழுதுந் தேக்கி யேநி றைத்து
இருகுழையுந் தாக்கி மீள்க யற்கண் வலையாலே-
இனிமையுடன் பார்த்து ளேய ழைத்து
முகபடமுஞ் சேர்த்து வார முத்தும்
இருவரையுங் காட்டி மாலெ ழுப்பி விலைபேசி;
மடலவிழும் பூக்க ளால்நி றைத்த
சுருளளகந் தூற்றி யேமு டித்து
மறுகிடைநின் றார்க்க வேந கைத்து நிலையாக-
வருபொருள்கண் டேற்க வேப றிக்கும்
அரிவையர்தம் பேச்சி லேமு ழுக்க
மனமுருகுந் தூர்த்த னாயி ளைத்து விடலாமோ;
படிமுழுதுங் கூர்த்த மாகு லத்தி
முதுமறையின் பேச்சி நூலி டைச்சி
*பகிர்மதியம் பூத்த தாழ்ச டைச்சி யிருநாழி-
படிகொடறங் காத்த மாப ரைச்சி
மணிவயிரங் கோத்த தோள்வ ளைச்சி
†பலதிசையும் போய்க்கு லாவி ருப்பி நெடுநீலி;
அடுபுலியின் தோற்ப டாமு டைச்சி
சமரமுகங் காட்டு மால்வி டைச்சி
அகிலமுமுண் டார்க்கு நேரி ளைச்சி பெருவாழ்வே-
அரியயனின் றேத்த வேமி குத்த
விபுதர்குலம் பேர்க்க வாளெ டுத்த
அசுரர்குலம் பாழ்க்க வேலெ டுத்த பெருமாளே.

1134.

இடர்மொய்த்துத் தொடரிற்பொய்க் குடிலக்கிக் கிடையிட்டிட்
டினிமைச்சுற் றமுமற்றைப் புதல்வோரும்-
இனமொப்பித் திசையச்சொற் பலகத்திட் டிழியப்பிற்
கிடையத்துக் கழும்விட்டிட் டவசேக;

* "பனி மதியம்" என்றும் பாடம்.
† "பலகலையும் போற்று வேல்விழிச்சி" என்றும் பாடம்.

விடமெத்தச் சொரிசெக்கட் சமன் வெட்டத் தனமுற்றிட்
டுயிர்வித்துத் தனையெற்றிக் கொடுபோமுன்-
வினைபற்றற் றறநித்தப் புதுமைச்சொற் கொடுவெட்சிப்
புயவெற்றிப் புகழ்செப்பப் பெறுவேனோ;
அடர்செக்கர்ச் சடையிற்பொற் பிறையப்புப் புனையப்பர்க்
கறிவொக்கப் பொருள்கற்பித் திடுவோனே-
அலகைக்குட் பசிதித்தப் பலகைக்கொத் ததுபட்டிட்
டலறக்குத் துறமுட்டிப் பொரும்வேலா;
அடலுக்குட் படுசர்ப்பத் தினில்மெச்சத் துயில்பச்சைக்
கிரிகைக்குட் டிகிரிக்கொற் றவன்மாயன்-
கமலத்திற் பயில்நெட்டைக் குயவற்கெட் டிசையர்க்குக்
கடவுட்சக் கிரவர்த்திப பெருமாளே.

1135.

இரவினிடை வேள்தொ டுத்து டன்று
முறுகுமலர் வாளி யையபி ணங்கி
யிருகுழையு மோதி யப்ப டங்கு கடலோடே-
எதிர்பொருது மானி னைத்து ரந்து
சலதிகிழி வேல்த னைப்பொ ருந்தி
யினியமுத ஆல முற்ற கண்கள் வலையாலே;
முரணினொரு ராவி யைத்தொ டர்ந்து
விசிறிவளை மாத ரைக்க லந்து
மொழியதர கோவை யிக்க ருந்தி யமுதாகு-
முகிழ்முகுளி தார வெற்ப னைந்து
சுழிமிதுன வாவி யிற்பு குந்து
முழுகியழி யாம னற்ப தங்கள் தரவேணும்;
திரையுலவு சாக ரத்தி லங்கை
நகரிலுறை ராவ ணற்கி யைந்த
தெசமுடியு மீரு பததொ ழுங்கு திணிதோளும்-
சிதையவொரு வாளி யைத்து ரந்த
அரிமருக தீத றக்க டந்து
தெளிமருவு கார ணத்த மர்ந்த முருகோனே;

அரணமதிள் சூழ்பு ரத்தி ருந்து
கருதுமொரு மூவ ருக்கி ரங்கி
யருளுமொரு நாய கற்ப ணிந்த குருநாதா-
அகல்முடிவை யாதி யைத்தெ ளிந்து
இரவுபக லாக நெக்க விழ்ந்த
அடியவர்கள் பாட லுகந்தி சைந்த பெருமாளே.

1136.

இரவொ டும்பக லேமா றாதே
அநுதி னந்துய ரோயா தேயே
யெரியு முந்தியி னூலே மாலே பெரிதாகி-
இரைகொ ளும்படி யூடே பாடே
மிகுதி கொண்டொழி யாதே வாதே
யிடைக ளின்சில நாளே போயே வயதாகி;
நரைக ளும்பெரி தாயே போயே
கிழவ னென்றொரு பேரே சார்வே
நடைக ளும்பல தாறே மாறே விழலாகி-
நயன முந்தெரி யாதே போனால்
விடிவ தென்றடி யேனே தானே
நடன குஞ்சித வீடே கூடா தழிவேனோ;
திருந டம்புரி தாளீ தூளீ
மகர குண்டலி மாரீ சூரீ
திரிபு ரந்தழ லேவீ சார்வீ யபிராமி-
சிவனி டந்தரி நீலீ சூலீ
கவுரி பஞ்சவி யாயீ மாயீ
சிவைபெ ணம்பிகை வாலா சீலா அருள்பாலா;
அரவ கிங்கிணி வீரா தீரா
கிரிபு ரந்தொளிர் நாதா பாதா
அழகி ளங்குற மானோர் தேனோர் மணவாளா-
அரிய ரன்பிர மாவோ டேழு
வகைய ரிந்திர கோமா னீள்வா
னமரர் கந்தரு வானோ ரேனோர் பெருமாளே.

பு. 1137.

இருகுழை மீதோடி மீளவும்
கயல்களு மாலால காலமு
ரதிபதி கோலாடு பூசலு மெனவேகின்-
றிலகிய கூர்வேல் விலோசன
ம்ருகமத பாடீர பூஷித
இளமுலை மாமாத ரார்வச முருகாதே;
முருகவிழ் கூதாள மாலிகை
தழுவிய சீர்பாத தூளியின்
முழுகிவி டாய்போ மனோலயம் வரவோது-
முழுமதி மாயாவி காரமு
மொழிவது வாசாம கோசர
முகுளித ஞானோப தேசமு மருள்வேணும்;
அருமறை நூலோதும் வேதிய
னிரணிய ரூபாந மோவென
அரிகரி நாராய ணாவென ஒருபாலன்-
அவனெவ னாதார மேதென
இதனுள னோவோது நீயென
அகிலமும் வாழ்வான நாயக னெனவேகி;
ஒருகணை தூணோடு மோதிட
விசைகொடு தோள்போறு வாளரி
யுகிர்கொடு வாரா நிசாசர னுடல்பீறு-
முலகொரு தாளான மாமனு
முமையொரு கூறான தாதையு
முறைதரு தேவாசு ராதிபர் பெருமாளே.

பு. 1138.

இருமுலை மலையென ஒப்பிட் டேயவர்
இருவிழி யதனில கப்பட் டேமன
மிசைபட வசனமு ரைத்திட் டேபல மினிதோடே-

இடையது துவளகு லுக்கிக் காலணி
பரிபுர வொலிகள் தொனிக்கப் பூதர
இளமுலை குழைய அணைந்துக் கேயுர மணியோடே;
மாகத பவள மழுத்திப் பூஷண
மணிபல சிதறி நெறிகதுத் தானுக
மருமலர் புனைகு தரிததுப பூவணை மதாராஜன்-
மருவிய கலவி தனக்கொப் பாமென
மகிழ்வொடு ரசிது மிகுத்துக் கோதையை
மருவியு முருகி கலைத்துப் பூமியி லுழல்வேனோ;
திரிபுர மெரிய நகைத்துக் காலனை
யுதைபட மதனை யழித்துச் சாகர
திரைவரு கடுவை மிடற்றிற் றானணி சிவனார்தந்-
திருவருள் முருக பெருத்துப் பாரினில்
சியொதனன் மடிய மிகுத்துப் பாரத
செயமுறு மரிதன் மனத்துக் காகிய மருகோனே;
நரிகழு வதுகள் களிக்கச் சோரிகள்
ரணகள முழுதுமி குத்துக் கூளிகள்
நடமிட அசுரர் குலத்துக் காலனை நிகராகி-
நனிகடல் கதற பொருப்புத் தூளெழ
நணுகிய இமையவ ருக்குச் சீருற
நணுகலர் மடியதொலைத்துப் பேர்பெறு பெருமாளே.

1139.

இலகிய வேலோ சேலோ ஒளிவிடு வாளோ போதோ
எமன்விடு தூதோ மானோ விடமீதோ-
எனவிழி கூறு வாரா அரிவையர் தோளுடாடா
இறுதியில் வேறாய் மாறு நினைவாலே;
பலபல கோளாய் மாலா யுழலும தானால் வீணே
படிறுசொ லாகா லோகா யதனுகிப்-
பரிவுட னுடாய் வீடா யடிமையு மீடேறுதே
பணிதியில் மூழ்கா மாயா விடுவேனோ;
அலைகடல் கோகோ கோகோ எனவுரை கூறு வோடா
அவுணரை வாடா போடா எனலாகி-

அழகிய வேலால் வாளால் நிலவிய சீரா வாலே
யவருடல் வாளு ளீரா எதிராகி ;
மலைமிகு தோளா போதா அழகிய வாலா பாலா
மகபதி வாழ்வே சேயே மயில்வீரா-
மறைதொழு கோவே தேவே நறைசெறி பூவே நீரே
வளவிய வேளே மேலோர் பெருமாளே.

1140.

உமையெனு மயில்பெற்ற மயில்வா கனனே
வனிதைய ரறுவர்க்கு மொருபா லகனே
உளமுரு கியபத்த ருறவே மறவே னெனவோதி-
உருகுத லொருசற்று மறியேன் வறியேன்
இருவினை யிடையிட்ட கொடியே னடியேன்
உணர்விலி பெறமுத்தி தருவாய் துகிர்வாய் மடமாதர் ;
அமையென வளர்சித்ர இருதோள் தழுவா
அமுதென மதுரித்த கனிவா யணுகா
அமளியி லணைவுற்ற அநுரா கமகோ ததிமூழ்கி-
அநவர தமுமுற்ற மணிமா முலைதோய்
கலவியி னலமற்ப சுகமா கினுமா
அநுபவ மிதுசற்று மிடவோ இயலா தியலாதே;
தமனிய குலசக்ர கிரியோ கடலோ
விடமென முடிவைத்த முதுபே ரிருளோ
தனுவென முனையிட்ட கொலைமூ விலைவேல் கொடுபார்வை-
தழலெழ வருமுக்ர எமபா தகனோ
யுகஇறு தியில்மிக்க வடவா னலமோ
தனியிவ னெனமிக்க பிசிதா சனபூ பதியாகி ;
இமையவ ரனைவர்க்கும அறையோ அறையோ
அரியயன் முழுதுக்கும் அறையோ அறையோ
எழுபுவி யுலகுக்கும் அறையோ அறையோ பொரவாரும்-
எனவரு மொருதுட்டன் முறையோ முறையோ
வடகுல கிரியெட்டும் அபிதா அபிதா
எனவொரு அயில்தொட்ட அரசே யிமையோர்
பெருமாளே.

1141.

உரைத்த பற்றுட னடிகள்ப ணிந்திட்
டிருத்தி மெத்தென இளநகை யுஞ்சற்
றமிழ்த்த டைக்கல மெனஎதிர் கும்பிட் டணைமேல்வீழ்ந்-
துடுத்த பொற்றுகி லகலல்கு லுந்தொட்
டெடுத்த ணைத்திதழ் பெருகமு தந்துய்த்
துனக்கெ னக்கென வுருகிமு யங்கிட் டுளம்வேறாய் ;
அருக்கி யத்தனை யெனுமவ சம்பட்
டறுத்தொ துக்கிய நகநுதி யுந்தைத்
தறப்பி தற்றிட அமளிக லங்கித் தடுமாறி-
அளைதது ழைத்திரு விழிகள்சி வந்திட்
டயர்த்தி தத்தொடு மொழிபவ ருந்திக்
கடுத்த கப்படு கலவியில் நொந்தெய்த் திடலாமோ ;
தரைக்க டற்புகு நிருதர்த யங்கச்
சளபா டத்தட முடிகள்பி டுங்கித
தகர்த்தொ ளித்தெழு மலையொடு துண்டப் பிறைசூடி-
தனுக்கி ரித்திரி தரஎதி ருங்கொக
கிளைப்ப தைத்துட லைபிட வஞ்சத்
தருக்க டக்கிய சமர்பொரு துங்கத தனிவேலா;
பருப்ப தப்ரிய குறுமுனி வந்தித
திருக்கு முந்தம நிருதர்க லங்கப்
படைப்பெ லத்தொடு பழபக்ர வுஞ்சக் கிரிசாடிப்-
படர்பப றைக்குரு குடலுதி ரங்குக்
குடக்கொ டிக்கிடு குமரகொ டுங்கற்
பதத்தி றுத்தது பசியசி கண்டிப் பெருமாளே.

1142.

உலகத்தினில் மாதரு மைந்தரும்
உறுசுற்றமும வாழ்வொடு றுங்கிளை
உயர்துக்கமு மோடுற வென்றுற வருகாலன்-
உதிரத்துட னேசல மென்பொடு
உறுதிப்பட வேவள ருங்குடில்
உதிரக்கனல் மீதுற என்றனை யொழியாமுன் ;

கலகக்கலை நூல்பல கொண்டெதிர்
கதறிப்பத றுவுரை வென்றுயர்
கயவர்க்குள னய்வினை நெஞ்சொடு களிகூருங்-
கவலைப்புல மோடுற என்துயர்
கழிவித்துன தாளிணை யன்பொடு
கருதித்தொழும் வாழ்வது தந்திட நினைவாயே;
இலகப்பதி னாலுல கங்களும்
இருளைக்கடி வாளெழு மம்புலி
யெழில்மிக்கிட வேணியில் வந்துற எருதேறி-
இருகைத்தல மான்மழு வும்புனை
யிறையப்பதி யாகிய இன்சொலன்
இசையப்பரி வோடினி தன்றரு ளிளையோனே;
மலைபட்டிரு கூறெழ வன்கடல்
நிலைகெட்டபி தாவென *அஞ்சகர்
வலியற்றசு ரேசரு மங்கிட வடிவேலால்-
மலைவித்தக வானவ ரிந்திரர்
மலர்கைக்கொடு மாதவ ருந்தொழ
வடிவுற்றொரு தோகையில் வந்தருள் பெருமாளே.

1143.

உறவின்முறை கதறியழ ஊராரு மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரிசி வாய்மீதி லேசொரியு மந்தநாளில்-
உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழியு
முபயபத மிசைகுலவு சிரேறு நூபுரமும் அந்தமார்பும்;
மறையறைய அமரர்தரு பூமாரி யேசொரிய
மதுவொழுகு தாவில்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு னாடியர் வந்துகூட-

* அம் சகர் = அழகிய ஜகத்தோர். "வஞ்சக வலிவற்றசு ரேசரு மங்கிட"—என்றும் பாடம்.

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇநன்
வந்திடாயோ;

பிறையெயிறு முரணசுரர் போராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாக வேதிசையில் நின்றநாகம்-

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய
வென்றதீரா;

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
காடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவி-

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ றுவருள்செய்
குமரகுரு பரஅமரர் வாழுடர் பேணஅருள் தம்பிரானே.

1144.

உறவு சிங்கிகள் காமா காரிகள்
முறைபட சங்கிக ளாசா வேசிகள்
உதடு கன்றிகள் நாணு வீணிகள் நகரேகை-

உடைய கொங்கையின் மீதே தூசிகள
பிணமெ னும்படி பேய்நீ ராகிய
உணவை யுண்டுடை சோர்கோ மாளிகள கடல்ஞாலத;

தறவு நெஞ்சுபொ லாமா பாவிகள்
வறுமை தநதிடு பாழ்மூ தேவிக
ளணிநெ ருங்கிக ளாசா பாஷண மடமாதர்-

அழகு யர்நதபொய் மாயா ரூபிகள்
கலவி யின்பமெ னுவே சோருதல்
அலம லந்தடு மாறு தோர்கதி யருள்வாயே;

*பறவை யென்கிற கூடார் மூவரண்
முறையி டுந்தமர் வானோர் தேரரி
டஃகழி குன்றவி லாலே நீறெழ வொருமூவர்-
பதநி னைந்துவி டாதே தாள்பெற
அருள்பு ரிந்தபி ரானோர் மாபதி
பரவு கநதசு வாமீ கானக மதின்மேவுங்;
குறவர் தங்கள்பி ரானே மாமரம்
நெறுநெ றென்றடி வேரோ டேநிலை
குலைய வென்றிகொள் வேலே யேவிய புயவீரா-
குயில்க ளன்றில்கள் கூகூ கூவென
மலர்கள் பொங்கிய தேன்வீழ் காமிசை
குறவர் சுநதரி யோடே கூடிய பெருமாளே.

1145.

ஊனோடு †வா துயிர் தரித்து மட்டற
ஆசாடு பாழ்குடி லெடுத்த திற்படி
ஓயாத மாயை யுழற்றி னிற்படு வம்பனேனை-
ஊதாரி யாய்விடு சமத்தில் நிற்பது
மாராத காதலை மனத்தில் வைப்பது
மூரோடு போயெதிர் பிணக்கி னிறபது முநதிடாதே;
தேனூறு வாய்மொழி பரத்தை யர்க்கொரு
நாய்போல வேயவர் வசத்தில் நிற்பது
சீர்கேட தாய்விடு சிறுப்பி னைத்தன மென்றுநீபச்-
‡சீதாள மாமலர் தொடுதத பததர்கள்
சீராடி நாண்மல ரெனப்ரி யப்படு
சீர்பாத போதக மநுக்ர கிப்பது மெநதநாளோ;
மானுக பாயலில் படுக்கை யிட்டவர்
மாமேரு வாரியில் திரித்து விட்டவர்
மாடோடு போய்வரு மிடைக்கு லத்தவ ரன்றுவாவி-

---

* பறவை யென்கிறமூ வரண் = பறக்குந தன்மையுள்ள திரி புரங்கள்.

† வாதுயிர் = வாத உயிர்: பிராண வாயு.

‡ சீதாள = சீதள.

வாய்நாக மோலிட பிடித்த சக்கிர
வாளேவி யேகா விநோதத்த ரித்தவர்
மாமாய ஞாபுல களித்த வித்தகர் தங்கைவாழ்வே;
காளுரு மாமலை தினைப்பு னத்தினில்
கால்மேல்வி ழாவொரு குறச்சி றுக்கியை
காணாது போயியல் புணர்ச்சி யிட்ட ருள் கந்தவேளே-
கரரேழு மாமலை யிடித்து ருக்கெட
காராழி யேழுவை கலக்கி விட்டுயர்
காவான நாடர்கள் பகைச்ச வட்டிய தம்பிரானே.

1146.

எட்டுட னொருதொளை வாயா யதுபசு
மட்கல மிருவினை தோயா மிருபிணி
*யிட்டிடை செயவொரு போதா கிலுமுயிர் நிலையாக-
எப்படி யுயர்கதி நாமே றுவதெனை
எட்பகி ரினுமிது வோரார் தமதம
திச்சையி னிடருறு போரா சைகொள்கட லதிலேவீழ்;
முட்டர்க ணெறியினில் வீழா தடலொடு
முப்பதி னறுபதின் மேலா மறுவரு
முற்றுத லறிவரு ஞானோ தயவொளி வெளியாக-
மூக்குண மதுகெட நாளு வெனவரு
முத்திரை யழிதர ஆரா வமுதன
முத்தமிழ் தெரிகனி வாயா லருளுவ தொருநாளே;
திட்டென எதிர்வரு மாகா ளியினொடு
திக்கிட தரிகிட தீதோ மெனவொரு
சித்திர வெகுவித வாதா டியபத மலராளன்-
செப்புக வெனமுன மோதா துணர்வது
சிற்சுக பரவெளி யீதே யெனஅவர்
†தெக்ஷண செவிதனி லேபோ தனையருள் குருநாதா;

---

* இட்டிடை = தடை.

† தெக்ஷண செவி = வலக காது.

மட்டற அமர்பொரு சூரா திபனுடல்
பொட்டெழ முடுகிவை வேலா லெறிதரு
மற்புய மரகத மாதோ கையில்நட மிடுவோனே-
வச்சிர கரதல வானோ ரதிபதி
பொற்புறு கரிபரி தேரோ டழகுற
வைத்திடு மருமக னேவா ழமரர்கள் பெருமாளே.

1147.

எத்தி யிருகுழையை மோதி மீனமதின்
முட்டி யிடறியம தூதர் போலமுகி
லெட்டி வயவர்கர வாளை வேல்முனையை யெதிர்சீறி-
எத்தி சையினுமொரு காம ராஜன்மிக
வெற்றி யரசுதனை யாள வீசியட
லெற்றி யிளைஞருயிர் கோலு நீலவிழி மடமாதர்;
வித்தை தனிலுருகி யாசை யாகியவர்
கைக்குள் மருவுபொரு ளான ஆகும்வரை
மெத்தை தனிலுருகி மோக மாகிவிட அதன்மேலே-
வெட்க மிலைநடவு மேரு மேருமினி
மற்ற வரையழையு மாத ரேயெனமுன்
விட்ட படிறிகள்தம் நேச ஆசைகெட அருள்வாயே;
ஒத்த வரிகமுகு வாளை தாவுபுனல்
*அத்தி நகரமர சான வாள்நிருபன்
ஒக்கு நினைவுமுனி லாமல் வாகுபெல நிலைகூற-
உற்ற தருமனடல் வீமன் வேல்விசையன
வெற்றி நகுலசக தேவர் தேர்தனிலும்
ஒத்து முடுகிவிடு பாகன் வாளமரி லசுரேசன்;
பத்து முடிகள்துக ளாக வாகுஇரு
பத்து மொருகணையில் வீழ நேரவுணர்
பட்டு மடியஅமர் மோது காளமுகில் மருகோனே-
பச்சை மயிலில்வரு வீர வேல்முருக
துட்ட நிருதர்குல கால வானவர்கள்
பத்தி யுடனடியில் வீழ †வாழ்வுதவு பெருமாளே.

---

* அத்தி நகரம்=அஸ்தினபுரம். †"வாழ்வுதரு" என்றும் பாடம்.

1148.

ஒக்க வண்டெழு கொண்டைகு லைந்திட
வெற்பெ னுங்கன கொங்கைகு ழைந்திட
உற்ப லங்கள்சி வந்துகு விந்திட இந்த்ரகோபம-
ஒத்த *தொண்டைது வண்டமு தந்தர
மெச்சு தும்பிக ருங்குயில் மென்புற
வொக்க மென்தொனி வந்துபி றங்கிட அன்புகூர;
மிக்க சந்திர னென்றுநி லங்களில்
விக்ர மஞ்செய்தி லங்குந கம்பட
மெத்த மென்பொரு ளன்பள வுந்துவ ளின்பமாதர்-
வித்த கந்தரு விந்துத புங்குழி
பட்ட ழிந்துந லங்குகு ரம்பையை
விட்ட கன்றுநி னம்புய மென்பத மென்றுசேர்வேன்;
மைக்க ருங்கட லன்றெரி மண்டிட
மெய்க்ர வுஞ்சசி லம்புடல் வெம்பிட
மற்று நன்பதி குன்றிய ழிந்திட வும்பர்நாடன்-
வச்சி ரங்கைய ணிந்துப தம்பெற
மெச்சு குஞ்சரி கொங்கைபு யம்பெற
மத்த வெஞ்சின வஞ்சகர் தங்களை நுங்கும்வேலா;
குக்கு டங்கொடி கொண்டப ரம்பர
சக்ர மண்டல மெண்டிசை யும்புகழ்
கொட்க கொன்றைய ணிந்தசி ரஞ்சர ணங்கிகாரா-
கொத்தத விழ்ந்தக டம்பலர் தங்கிய
மிக்க வங்கண கங்கண திண்புய
கொற்ற வங்குற மங்கைவி ரும்பிய தம்பிரானே.

1149.

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாயெரி காளையா மறையோர்கள்-

---

* தொண்டை=கொவ்வைக்கனி யொத்த இதழ்.

ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்
ஆர்த னக்குமு தாசின தாரிகள்
ஓடி யுத்தம ருதிய நாடின ரிரவோருக்;
கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினி லோரம தானவர்
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோர்கள்-
ஏக சித்ததி யானமி லாதவர்
மோக முற்றிடு போகித மூறினர்
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே;
தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச சசசாச-
தாட டட்டட டாடட டாடட
டூடு டுட்டுடு டூடுடு டூடுடு
தாடி டிட்டிடி டீடிடி டீடிடி டிடிடீடி;
திதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு-
சேயெ னப்பல ராடிட மாகலை
ஆயு முத்தமர் கூறிடும் வாசக
சேகு சித்திர மாக*நி னாடிய பெருமாளே.

1150.

ஓலைத ரித்தகு ழைக்கு மப்புற
மோடிநி றத்தும தர்த்து நெய்த்தற
லோதிநி முற்குள ளிக்கு லத்துட னொன்றினாணம்-
ஓதிமி குத்தத வதத வர்க்கிட
ரோகைசெ லுத்திவ டுப்ப டுத்தகி
யூடுவி டத்தையி ருத்தி வைத்தக ணம்பினாலே;
மாலைம யக்கைவி னைதது நற்பொருள்
வாசமு லைக்குள கப்ப டுத்தியில்
வாவென முற்றிந டத்தி யுட்புகு மநதமாதர்-

---

*நி னாடிய = நின் றாடிய.

மாயம யக்கையொ ழித்து மெத்தென
வானவ ருக்கரு ளுற்ற அக்ஷர
வாய்மையெ னக்குமு னிந்த ளித்தருள் தந்திடாதோ;
வேலைய டைக்கஅ ரிக்கு லத்தொடு
வேணுமெ னச்சொலு மக்க ணத்தினில்
வேகமொ டப்புமலைக்கு லத்தைந ளன்கைமேலே-
வீசஅ வற்றினை யொப்ப மிட்டணை
மேவிய ரக்கர்ப திக்குள் முற்பட
வீடண னுக்கருள் வைத்த வற்றமை யன்கள்மாளக்;
காலயி லக்கணை தொட்ட ருட்கன
மாலமை திக்கரை யிற்ற ரித்துல
காளஅ ளித்தப்ர புதவ ருட்கடல் தநதகாமன்-
காயமொ ழித்தவர் பெற்ற கொற்றவ
நானில வித்தநி னைப்பு னத்தொரு
காதல்மி குத்துமி சப்ர மித்தருள் தடபிரானே.

1151.

கிடைசி வந்தகன் றுரைபு கன்றிரு
குழையை யுந்தர தரிப ரந்தொளிர்
கரிய கண்துறந் தவர்நி றந்தொளை படவோடக்-
கலைநெ கிழ்ந்திருங் குழல்ச ரிந்திட
முலைசு மந்தசைந் திடையொ சிந்துயிர்
கவர இங்கிதங் கெறுவி தடபெற விளையாடும்;
படைம தன்பெருங் கிளைதி ருந்திய
அதர கிஞ்சுகந் தனையு ணர்ந்தணி
பணிநி தம்பஇன் பசுக முந்தர முதிர்காம-
பரவ சந்தணிந் தனையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில்த ருஞ்சுக
பதம டைந்திருந் தருள்பொ ருநதும தொருநாளே;
வடநெ டுஞ்சிலம் புகள் புலம்பிட
மகித லம்ப்ரியங் கொடும கிழ்ந்திட
வருபு ரந்தரன் தனபு ரமபெற முதுகோப-

மகர வெங்கருங் கடலொ டுங்கிட
நிசிச ரன்பெருங் குலமொ ருங்கிற
வனச னின்றழும் படிநெ ருங்கிய வொருசூதம்;
அடியொ டும்பிடுங் கியத டங்கர
வடிவ அஞ்சுரும புறவி ரும்பிய
அடவி யுநதொழும் பொடுதொ ழும்படி யநுராக-
அவச முமபுனைந தறமு னைநதெழு
பருவ தஞசிறந தகன தநதியின்
அமுத மென்குயங் களின்மு யங்கிய பெருமாளே.

1152.

கதறிய கலைகொடு சுட்டாத நிர்பொருள்
பதறிய சமயிக ளெட்டாப் பேரொளி
கருவற இருவினை கெட்டாற் காண்வரு மென்றவகங்-
கருகிய வினைமன துட்டாக் காதது
சுருதிக ளுருகியொர் வட்டாய்த் தோய்வது
கசடற முழுதையும் விட்டாற் சேர்வது ணர்ந்திடாதே;
விதமது காமுரல் மொட்டாற் சாடிய
ரதிபதி யெனவரு துட்டாத் மாவுடன்
வினைபுரி பவரிடு முற்றாச் சாவிரு புண்டரீக-
ம்ருகமத முகுளித மொட்டாற் கார்முக
நுதலெழு தியசிறு பொட்டாற் சாயக
விரகுடை விழிவலை பட்டாற் றுதுந லங்கலாமோ-
பதமலர் மிசைகழல் கட்டாப் பாலக
சுருதிக ளடிதொழ எட்டாத தேசிக
பருகென வனமுலை கிட்டாத் தாரகை தநதுநாளும்-
பரிவுற வெகுமுக நெட்டாற் றாடொரு
படுகையி னிடைபுழு வெட்டாப் பாசடை
படர்வன பரிமள முட்டாட் டாமரை தங்கிவாழுஞ்;
சததள அமளியை விட்டாற் றேறிய
சலநிதி குறுகிட வொட்டாச் சூரொடு
தமனிய குலகிரி பொட்டாய்த் தூளெழ வென்றகோவே.

தழைதரு குழைதரு பட்டாட் சாலவு
மழகிய கலவிதெ விட்டாக் காதலி
தலைமக நிலமடி தட்டாத் தேவர்கள் தம்பிரானே.

1153.

தனதன தனதன தானன தானந்
தனத் தனந்தன தனன தான தனதன
தானன தான தனனந் தானந்
தனன தாத்தன தானத் தானத் தானத்
தாத்தன தனதான :

கலவியி னலமுரை யாமட வார்சந்
தனத் தனங்களில் வசம தாகி யவரவர்
பாதாதி கேச மளவும் பாடுங்
கவிஞ ருய்த்திரி வேளைக் காமக் ரோதத்
தூர்த்தனை யபாராதக்-
கபடனை வெகுபரி தாபனை நாளும்
ப்ரமிக்கு நெஞ்சனை உருவ மாறி முறை முறை
ஆசார வீன சமயந் தோறுங்
களவு சாத்திர மோதிச் சாதித் தேனைச்
சாத்திர நெறிபோயையம் ;
புலன்வழி யொழுகிய மோகனை *மூகந்
தனிற் பிறந தொரு நொடியின் மீள அழிதரு
மாதேச வாழ்வை நிலையென் றேயம்
புவியின் மேற்பசு பாசத் தேபட் டேனைப்
பூக்கழ லிணைசேரப்-
பொறியிலி தனையதி பாவியை நீடுங்
குணத ரயங்களும வருமநேக வினைகளு
மாயா விகார முழுதுஞ் சாடும்
பொருளின் மேற்சிறி தாசைப் பாடற் றேனைக்
காப்பது மொருநாளே;

---

* மூகம் = ஊமை; இங்கே ஊமையின் கனவு.

குலகிரி தருமபி ராம மயூரம்
ப்ரியப் படும்படி குவளை வாச மலர்கொடு
வாரா வுலாவி யுணரும யோகங்
குலைய வீக்கிய வேளைக் கோபித் தேறப்
பார்த்தரு ளியபார்வைக்-
குரிசிலு மொருசுரர் பூசுர ரென்மென்
றதற் கநந்தா மிரணி யாய நமவென
நாராய ணாய நமவென் றோதுங்
குதலை வாய்ச்சிறி யோனுக் காகத் தூணிற்
றோற்றிய வசபாணிப்;
பலநக நதியி னிசாசர னகங்
கிழித் தளைநதணி துளசி யோடு சிறுகுடல்
*தோண்மாலை யாக அணியுங் கோவும்
பரவி வாழ்த்திட வே†கற் றாரச் சோதிப்
பாற்பணி யிறைவாகைப்-
‡படமுக வடலயி ராபத மேறும்
ப்ரபுப் பயங்கெட வடப ரரை வரைகெட
வேலேவி வாவி மகரஞ் சேறும்
பரவை கூப்பிட மோதிச் சூர்கெட் டோடத்
தாக்கிய பெருமாளே.

1154.

சிறுதது நீவிடு கூர்வேலி னுங்கடை
சிவநது நீடிய வாய்மீன வொண்குழை
கடக்க வோடிய ஆலால நஞ்சன வஞ்சநீடு-
கயற்க ணார்கனி வாயூற லுண்டணி
கழுத்து மாகமு மேவிப வங்கொடு
கலக்க மார்பக டாடீர குங்கும கொங்கைமீதே;

---

* தோர்மாலை எனவும் பாடம், தோர்மாலை = தோண்மாலை.

† கற்று ஆரச் சோதிப்பான். ஆர = நிறைய; சோதிப்பான் = பிரகஸ்பதி; இனி, கற்று ஆர் அ சோதி பால் எனப் பிரிததுக கற்று விளங்கும் அநதப் பொன்னிறத்தனை பிரகஸ்பதியின் பால எனப் பொருள் கொள்ளலு மாம்

‡ படர்முக வடாயிராபதம் எனவும் பாடம்.

உறுத்து மாரமு மோகாவ டங்களு
மறுத்து நேரிய கூர்வாள்ந கம்பட
உடுத்த ஆடையும வேருயு முன்றுக முன்றுவிழ-
உருக்கு நாபியின் மூழ்காம ருங்கிடை
செருக்கு மோகன வாரத ரங்களை
யொழிக்க வோர்வகை காணேனு றுநதுணை
யொனறுகாணேன் ;

நிறத்த நூபுர பாதார விந்தமு
முடுத்த பீலியும் வாரார்த னங்களும்
நிறத்தி லேபடு வேலான கண்களும வண்டுபாட-
நெறித்த வோதியு மாயான்ம னம்பர
தவிக்க மால்தர லாமோ கலந்திட
நினைக்க லாமென வேல்வேடர் கொமபுட
னண்புகூர்வாய் ;

மறித்த வாரிதி கோகோவெ னும்படி
வெறுத்த ராவணன் வாளுளை யம்பினில்
வதைத்த மாமனு மேவார்பு ரங்கனல் மண்டமேரு-
வளைத்த தாதையு மாருன குன்றமு
மனைத்து லோகமும் வேதாக மங்களும்
மதித்த சேவக வானோரு மும்பர்கள் தம்பிரானே.

1155.

குறிப்பரிய குழற்கும‌தி நுதற்புருவ விலுக்குமிரு
குழைக்கும்வடு விழிக்குமெழு குமிழாலும்-
கொடிப்பவள இதழ்க்குமிரு சுடர்த்தரள நகைக்குமமு
தினுக்குமிக வுறத்தழுவு குறியாலும் ;
அறப்பெரிய *தனக்குமன நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமுள மயராதே-
அகத்தியனோ டுரைத்தபொரு ளளித்தருளி அரிப்பிரம
ரளப்பரிய பதக்கமல மருள்வாயே ;

* தனக்கும் = தனத்துக்கும்.

கறுத்தடரு மரக்கரணி கருக்குலைய நெருக்கியொரு
கணத்திலவர் நிணத்தகுடல் கதிர்வேலாற்-
கறுத்தருளி யலக்கணுறு சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடரை யறுத்தருளு மயில்வீரா ;
செறுத்துவரு கரித்திரள்கள் திடுக்கிடவல் மருப்பையரி
சினத்தினொடு பறித்தமர்செய் பெருகானிற்-
செலக்கருதி யறக்கொடிய சிலைக்குறவர் கொடித்தனது
சிமிழ்த்தனமு னுறத்தழுவு பெருமாளே.

1156.

குனகியொரு மயில்போல வாராம னோலீலை
விளையவினை நினையாம லேயேகி மீளாத
கொடியமன தநியாய மாபாத காபோதி யெனஆசைக்-
கொளுவஅதில் மயலாகி வீறோடு போய்நீள
மலரமளி தனிலேறி யாமாறு போமாறு
குலவிநல மொழிகூறி வாரேறு பூணார முலைமூழ்கி ;
மனமுருக மதராஜ கோலாடு மாபூசல்
விளையவிழி சுழலாடி பேலோதி போய்மீள
மதிவதன மொளிவீச நீராள மாய்மேவி யநுராக-
வகைவகையி லதிமோக வாராழி யூடான
பொருளளவ தளவாக யாரோடு மாலான
வனிதையர்கள் வசமாய நாயேனு மீடேற அருள்வாயே;
எனதுமொழி வழுவாமல் நீயேகு கான்மீதி
லெனவிரகு குலையாத மாதாவு நேரோத
இசையுமொழி தவறாம லேயேகி மாமாது மிளையோனும்-
இனிமையொடு வருமாய மாரீச மானைவி
குலையவரு கரதூஷ ணாவீசர் போர்மாள
இறுகிநெடு மரமேழு தூளாக வேவாலி யுயிர்சீறி ;
அநுமனொடு கவிகூட வாராக நீராழி
யடைசெய்தணை தனிலேறி மாபாவி யூர்மேவி
அவுணர்கிளை கெடநூறி யாலால மாகோப நிருதேசன்-

அருணமணி திகழ்பார விராக ராமோலி
யொருபதுமொர் கணைவிழ வேமோது போராளி
அடல்மருக குமரேச மேலாய வானோர்கள் பெருமாளே.

1157.

கோலவிழி சுழலச் சுழலச் சிலைநுதல் குவியக் குவியக்
கொடியிடை துவளத் துவளத் தனபாரக்-
குறியணி சிதறச் சிதறக் கரவளை கதறக் கதறக்
குயில்மொழி பதறப் பதறப் ப்ரியமோகக்;
கலவியி லொருமித் தொருமித் திலவிதழ் பருகிப் பருகிக்
கரமொடு தழுவித் தழுவிச் சிலநாளிற்-
கையிலுள பொருள்கெட் டருள்கெட் டனைவரும் விடுசிச் சியெனக்
கடியொரு செயலுற் றலகிற் றிரிவேனோ;
சலநிதி சுவறச் சுவறத் திசைநிலை பெயரப் பெயரத்
தடவரை பிதிரப் பிதிரத் திடமேருத்-
தமனிய நெடுவெற் பதிரப் பணிமணி சிரம்விட் டகலச்
சமனுடல் கிழியக் கிழியப் பொருசூரன்;
பெலமது குறையக் குறையக் கருவிகள் *பறையப் பறையப்
பிறநரி தொடரத் தொடரத் திரள்கூகை-
பெடையொடு குழறக் குழறச சுரபதி பரவப் பரவப்
ப்ரபையயில் தொடுநற் குமரப் பெருமாளே.

1158.

சந்தனங் கலந்த குங்கு மம்புனைந் தணிந்த கொங்கை
சந்திரந் ததும்ப சைந்து தெருவூடே-
சங்கினங் குலுங்க செங்கை யெங்கிலும் பணிந்து டம்பு
சந்தனந் துவண்ட சைந்து வருமாபோல்;
கொந்தளங் குலுங்க வஞ்சி லம்புபொங்க இன்சு கங்கள்
கொஞ்சிபொன் தொடர்ந்தி டும்பொன் மடவார்தோள்-
கொங்கைபைங் கரம்பு ணர்ந்த ழிந்துணங் கலுந்த விர்ந்து
கொஞ்சுநின் சரண்க ளண்ட அருள்தாராய்;

* பறைதல=ஒழிதல்.

தந்தனந்த செஞ்சி லம்பு கிண்கிணின்கு லங்கள் கொஞ்ச
தண்டையம்ப தம்பு லம்ப வருவோனே-
சந்தனம் புனைந்த கொங்கை சூண்களுஞ் சிவந்து பொங்க
சண்பகம் புனங்கு றம்பொன் அணைமார்பா ;
வந்தநஞ் சுகந* தமைந்த கந்தரன் புணர்ந்த வஞ்சி
மந்தரம் பொதிந்த கொங்கை யுமையீனும்-
மைந்தனென் றுகந்து விஞ்சு மன்பணிந்த சிந்தை யன்பர்
மங்கலின் றுளம்பு குந்த பெருமாளே.

1159.

சுருதி வெகுமுகபு ராண கோடிகள்
சரியை கிரியைமக யோக மோகிகள்
துரித பரசமய பேத வாதிகள் என்றுமோடித்-
தொடர வுணரஅரி தாய்† தூரிய
பொருளை யணுகியநு போக மானவை
தொலைய இனியவொரு ஸ்வாமி யாகிய நின்ப்ரகாசங் ;
கருதி யுருகியவி ரோதி யாயருள்
பெருகு பரமசுக மாம கோததி
கருணை யடியரொடு கூடி யாடிம கிழ்ந்துநீபக்-
கனக மணிவயிர நூபு ராரிய
கிரண சரண அபி ராம கோமள
கமல யுகளமற வாது பாடநி னைந்திடாதோ ;
மருது நெறுநெறென மோதி வேரொடு
கருது மலைகைமுலை கோதி வீதியில்
மதுகை யொடுதழுக ஞானை வீரிட வென்றுதாளால்-
வலிய சகடிடறி மாய மாய்மடி
படிய நடைபழகி யாயர் பாடியில்
வளரு முகில்மருக வேல்வி நோதசி கண்டிவீரா ;
விருதர் நிருதர்குல சேனை சாடிய
விஜய கடதடக போல வாரண
விபுதை புளகதன பார பூஷண அங்கிராத-

* அமைந்த = அமைத்த. † தூரிய = துரிய.

விமலை நகிலருணை வாகு பூதர
விபுத கடகக்கிரி மேரு பூதர
விகட சமரசத கோடி வானவர் தம்பிரானே.

1160.

சுற்றத் தவர்களு மக்களு *மிதமுள
சொற்குற் றரிவையும் விட்டது சலமிது
சுத்தச் சலமினி சற்றிது கிடைபடு மெனமாழ்கித்-
துக்கத் தொடுகொடி தொட்டியெ யழுதழல்
சுட்டக் குடமொடு சுட்டெரி கனலொடு
தொக்குத் தொகுதொகு தொக்கென இடுபறை
பிணமூடச்;
சற்றொப் புளதொரு சச்சையு மெழுமுடல்
சட்டப் படவுயிர் சற்றுடன் விசியது
தப்பிற் றவறுறு மத்திப நடையென உரையாடிச்-
சத்திப் பொடுகரம் வைத்திடர் தலைமிசை
தப்பிற் றிதுபிழை யெப்படி யெனுமொழி
தத்தச் சடம்விடு மப்பொழு திருசர ணருள்வாயே;
சிற்றிற் கிரிமகள் கொத்தலர் புரிகுழல்
சிதரப் ப்ரபைபுனை பொற்பின ளிளமயில்
†செற்கட் சிவகதி யுத்தமி களிதர முதுபேய்கள்-
திக்குச் செககெண தித்தரி திகுதிகு
செச்செச் செணக்ருத டொட்டரி செணக்ருத
டெட்டெட் டுடுடுடு தத்தரி தரியென நடமாடுங்;
கொற்றப் புலியதள் சுற்றிய அரனருள்
குட்டிக் கரிமுக னிக்கவ லமுதுசெய்
கொச்சைக் கணபதி முக்கண னிளையவ களமீதே-
குப்புற் றுடனெழு சச்சரி முழவியல்
கொட்டச் சுரர்பதி மெய்த்திட நிசிசரர்
கொத்துக் கிளையுடல் பட்டுக அமர்செய்த பெருமாளே.

---

* இதமுள சொற்கு உற்ற அரிவை எனப் பிரிக்க.

† செற்கண் = மேகம்போன்ற கண்; செல் = மேகம்; மழைக் கண் என்பது வழக்கு.

1161.

செங்க னற்புகை யோமாதிகள் குண்ட மிட்டெழு சோமாசிகள்
தெண்டெ னத்துணை தாள்மேல்விழ அமராடிச்-
சிந்த னைப்படு மோகாதியி லிந்த்ரி யத்தினி லோடாசில
திண்டி றற்றவ வாள்வீரரொ டிகலாநின்;
றங்கம் வெட்டிய கூர்வாள்விழி மங்கை யர்க்கற மாலாய்மன
மந்தி பட்டிருள் மூடாவகை யவிரோத-
அந்த நிற்குண ஞானோதய சுகத ரச்சுட ராராயந
லன்பு வைத்தரு ளாமோர்கழ லருளாதோ;
கொங்க டுத்தகு ராமாலிகை தண்க டுக்கைது ழாய்தாதகி
கும்பி டத்தகு பாகீரதி மதிமீது-
கொண்ட சித்ரக லாசூடிகை யிண்டெ ருக்கணி*காகோதர
குண்ட லத்தர்பி னாகாயுத ருடனேயச்;
சங்கு சக்ரக தாபாணியு மெங்க ளுக்கொரு வாழ்வேசுரர்
தங்க ளைச்சிறை மீளாயென அசுரேசன்-
தஞ்ச மற்றிட வேதாகர ணஞ்ச வெற்புக வீராகர
சண்ட விக்ரம வேலேவிய பெருமாளே.

1162.

சேலையடர்த் தாலமிகுத் தேயுழையைச் சீறிவிதித்
தூறுசிவப் பேறுவிழிக் கணையாலே-
தேனிரதத் தேமுழுகிப் பாகுநிகர்த் தாரமுதத்
தேறலெனக் கூறுமொழிச் செயலாலே;
ஆலிலையைப் போலுமவயிற் றாலளகத் தாலதரத்
தாலுமிதத் தாலும்வளைப் பிடுவோர்மேல்
ஆசையினைத தூரவிடுத் தேபுகழ்வுற் றேப்ரியநற்
றாளிணையைச சேரஎனக் கருள்வாயே;
காலனைமெய்ப் பாதமெடுத் தேயுதையிட் டேமதனைக்
காயஎரித் தேவிதியிற் றலையூடே-
காசினியிற் காணஇரப் போர்மதியைச் சூடியெருத்
தேறிவகித் தாருதிரைக் கடல்மீதில்;

---

* காகோதரம் = பாம்பு.

* ஆலமிடற் றானையுரித் தோலையுடுத் தீமைதுற்
றாடியிடத் தேயுமைபெற் றருள்வாழ்வே-
ஆழியினைச் சூரனைவெற் பேழினையுற் றேயயில்விட்
டாதுலருக் காறுமுகப் பெருமாளே.

1163.

சொக்குப் † பொட் டெத்திக் கைப்பொரு
ளைக் ‡ கெத்திற் பற்றிச் சிக்கொடு
சுற்றுப்பட் டெற்றித் தெட்டிகள் முலைமீதே-
சுற்றுப்பொற் பட்டுக் கச்சினர்
§ முற்றிக்குத் தத்தைக் கொப்பென
சொற்பித்துக் கற்பிற் செப்பிய துயராலே;
சிக்குப்பட் டுட்கிப் || பற்கொடு
வெற்றிக்கைக் குத்துப் பட்டிதழ்
தித்திப்பிற் கொத்துப் பித்துயர் கொடுநாயேன்-
திக்குக்கெட் ¶ டொட்டுச் சிட்டென
பட்டத்துற் புத்திக் கட்டற
$ செப்பத்துற் பற்றற் கற்புத மருள்வாயே;
தக்குத்தக் குக்குக் குக்குட
தட்டுட்டுட் டுட்டுட் டுட்டென
தக்குத்திக் கெட்டுப் பொட்டெழ விருதோதை-
தத்தித்தித் தித்தித் தித்தென
தெற்றுத்துட் டக்கட் டர்ப்படை
சத்திக்கொற் றத்திற் குத்திய முருகோனே;
o துக்கித்திட் டத்தித் துக்கக
நெக்குப்பட் டெக்கித் துட்டறு
சுத்தப்பொற் பத்தர்க் குப்பொரு ளருள்வேலா-

---

* ஆலம் மிடற்று வகித்து எனக் கூட்டுக.
† பொட்டு=போட்டு. ‡ கெத்தில்=தந்திரமாய்.
§ முற்று இக்கு=முதிர்ந்த கரும்பு.
|| பல் கொடு=பல கொடுமையான. ¶ ஒட்டு=கண்ணி.
$ செப்பத்து உன் பற்றற்கு=செம்மையாக உன்னைப் பற்றுதற்கு.
o துக்கித்திட்ட அத்தி துக்க அகம்=சமுத்திரம் போன்ற துன்ப வீடு.

துற்றப்பொற் பச்சைக் கட்கல
பச்சித்ரப் பக்ஷிக் கொற்றவ
சொக்கர்க்கர்த் தத்துவைச் சுட்டிய பெருமாளே.

1164.

தரணிமிசை அனையினிட வுந்தியின் வந்துருந
துளிபயறு கழலினிய அண்டமுங் கொண்டதின்
தசையுதிர நிணநிறைய அங்கமுந் தங்கவொன் பதுவாயுந்-
தருகரமொ டினியபத முங்கொடங் கொன்பதும்
பெருகியொரு பதினவனி வந்துகண் டன்புடன்
தநயனென நடைபழகி மங்கைதன் சிங்கியின் வசமாகித்;
திரிகியுடல் வளையநடை தண்டுடன் சென்றுபின்
கிடையெனவு மருவிமனை முந்திவந் தந்தகன்
சிதறவுயிர் பிணமெனவெ மைந்தரும் பந்துவும் அயர்வாகிச்-
செடமிதனை யெடுமெடுமி னென்றுகொண் டன்புடன்
சுடலைமிசை யெரியினிட வெந்துபின் சிந்திடுஞ்
செனனமிது தவிரஇரு தண்டையுங் கொண்டபைங் கழல்தாராய்,
செருவெதிரு மசுரர்கிளை மங்களங் கெங்கணுங்
கழுகருட னயனமிது கண்டுகொண் டம்பரந
திரியமிகு அலகையுடன் வெங்கணந் தங்களின் மகிழ்வாகிச்-
சினவசுர ருடலமது தின்றுதின் றின்புடன்
டுமுடுமுட டுமுடுமுட டுண்டுடுண் டுண்டுடுண்
டிமிலைபறை முழவுதுடி பம்பையுஞ் சங்கமுந தவமோதச்;
சரவரிசை விடுகுமர அண்டர்தம் பண்டுறுஞ
சிறையைவிட வருமுருக என்றுவந் திந்திரன்
சதுமுகனு மடிபரவ மண்டுவெஞ் சம்பொருங் கதிர்வேலா-
சகமுழுது மடையஅமு துண்டிடுங் கொண்டலுந்
தெரிவரிய முடியினர வங்களுந் திங்களுஞ்
சலமிதழி யணியுமொரு சங்கரன் தந்திடும் பெருமாளே.

1165.

தினஞ்சற்றுக் குலுங்கப்பொற் கலன்கட்பட் டிலங்கப்பொற்
சதங்கைக்கற் சிலம்பொத்திக் கையில்வீணை-
ததும்பக்கைக் குழந்தைச்சொற் பரிந்தற்புக் கிதங்கப்பொற்
சரஞ்சுற்றிட் டிணங்கக்கட் சரவேலால் ;
தினம்பித்திட் டிணங்கிச்சொற் கரங்கட்டிப் புணர்ந்திட்டுத்
தினந்தெட்டிக் கடன்பற்றிக் கொளுமாதர்-
*சிலம்பக்கிற் றிரிந்துற்றிட் டவம்புக்கக் குணஞ்செற்றுச்
சிவம்பெற்றுத் தவம்பற்றக் கழல்தாராய் ;
தனந்தத்தத தனநதத்தத் தடுண்டுட்டுட டிடிண்டிட்டிட்
டடண்டட்டட் டிமிண்டுட்டுட் டியல்தாளந்-
தகுந்தொத்தித் தியந்தித்தித் †தவண்டைக்குட் கயர்ந்துக்கத்
தகண்டத்தார்க் குடன்பட்டுற் றசுரரைச் ;
சினந்தகதிக் கொளுந்தகைச் சரநதொட்டுச் சதம்பொர்பைபச்
சிரநதத்தப் பிளந்துட்கக் கிரிதூளாச்-
செகந்திக்குச் சுபம்பெறறுக துலங்கப்பொாக களம்புக்குச்
செயபபற்றிக் கொளுஞ்சொகக் பெருமாளே.

1166.

நரையொடு பற்க ழன்று தோல்வற்றி
நடையற மெத்த நொந்து காலெய்த்து
நயனமி ருட்டி நின்று கோலுற்று நடைதோயா-
நழுவும்வி டக்கை யொன்று போல்வைத்து
நமனென மெத்த வந்த வாழ்வுற்று
நடலைப டுத்து மிந்த மாயத்தை நகையாதே ;
விரையொடு பற்றி வண்டு பாடுற்ற
ம்ருகமத மப்பி வந்த வோதிக்கு
மிளிருமை யைச்செ றிந்த வேல்கட்கும் வினையோடு-
மிகுகவி னிட்டு நின்ற மாதர்க்கு
மிடைபடு சித்த மொன்று வேனுற்றுன்
விழுமிய பொற்ப தங்கள் பாடற்கு வினவாதோ ;

---

* சிலம்பம்=தந்திரோபாயம். † தவண்டை=பேருடுக்கை.

உரையொடு சொற்றெ ரிந்த மூவர்க்கு
மொழிபெற நற்ப தங்கள் போதித்து
மொருபுடை பச்சை நங்கை யோடுற்று மூலகூடே-
உறுபலி பிச்சை கொண்டு போயுற்று
மூவரிவி டத்தை யுண்டு சாதித்து
மூலவியா மூப்பு ரங்கள் வேவித்து முறநாகம் ;
அரையொடு கட்டி யந்த மாய்வைத்து
மகிர்சடை வைத்த கங்கை யோடொக்க
அழகுதி ருத்தி யிந்து மேல்வைத்து மாவோடே-
அறுகொடு நொச்சி தும்பை மேல்வைத்த
அரியய னித்தம வந்து பூசிக்கும்
அரநிம லர்க்கு நன்றி போதித்த பெருமாளே.

பு. 1167.

நிமிர்ந்த முதுகுங் குனிந்து சிறந்த முகமுந் திரங்கி
நிறைந்த வயிறுஞ் சரிந்து தடியூணி-
நெகிழ்ந்து சடலந் தளர்ந்து விளங்கு விழியங் கிருண்டு
நினைந்த மதியுங் கலங்கி மனையாள்கண் ;
டுமிழ்ந்து பலருங் கடிந்து சிறந்த வியலும் பெயர்ந்து
உறைந்த உயிருங் கழன்று விடுநாள்முன்-
உகந்து மனமுங் குளிர்ந்து பயன்கொள் தருமம் புரிந்து
ஒடுங்கி நினையும் பணிந்து மகிழ்வேனோ ;
திமிந்தி மெனவெங் கணங்கள் குணங்கர் பலவுங் *குழும்பி
திரண்ட சதியும் புரிந்து முதுசூரன்-
சிரங்கை முழுதுங் குடைந்து நிணங்கொள் குடலுந் தொளைந்து
சினங்க ழுகொடும் பெருங்கு ருதிமூழ்கி ;
அமிழ்ந்தி மிகவும் பிணங்கள் அயின்று மகிழ்கொண்டு மண்ட
அடர்ந்த அயில்முன் துரந்த பொருவேளே-
அலங்க லெனவெண் கடம்பு புனைந்து புணருங் குறிஞ்சி
அணங்கை மணமுன் புணர்ந்த பெருமாளே.

* குழும்பி = கூடி.

1168.

நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜெய
நிமல னார்க்கொரு பாலா ஜேஜெய விறலான-
நெடிய வேற்படை யானே ஜேஜெய
எனஇ ராப்பகல் தானே நான்மிக
நினது தாட்டொழு மாறே தானினி யுடனேதான்;
தரையி னாழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடியு னடியார்வாழ்-
சபையி னேற்றியின் ஞான போதமு
மருளி யாட்கொளு மாறே தானது
தமிய னேற்குமு னேநீ மேவுவ தொருநாளே;
தருவி னாட்டர சாள்வான் வேணுவி
னுருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னாற்சிவ னீபோய் வானவர் சிறைதீரச்-
சகல லோக்கிய மேதா னாளுறு
மசுர பார்த்திப னோடே சேயவர்
தமரை வேற்கொடு நீறா யேபட விழமோதென் ;
றருள வற்றம ரோடே போயவ
ருறையு மாக்கிரி யோடே தானையு
மழிய வீழ்த்தெதிர் சூரோ டேயம ரடலாகி-
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டா னார்பால் மேவிய
அதிப ராக்ரம வீரா வானவர் பெருமாளே.

1169.

நீரு மென்பு தோலி னாலு மாவ தென்கை கால்க ளோடு
நீளு மங்க மாகி மாய வுயிரூறி-
நேச மொன்று தாதை தாய ராசை கொண்ட போதில் மேவி
நீதி யொன்று பால னாகி யழிவாய்வந் ;

தூரு மின்ப வாழ்வு மாகி யூன மொன்றி லாது மாத
ரோடு சிந்தை வேடை கூர உறவாகி-
ஊழி யைந்த கால மேதி யோனும் வந்து பாசம வீச
ஊனு டம்பு மாயு மாய மொழியாதோ ;
சூர னண்ட லோக மேன்மை சூறை கொண்டு போய் விடாது
தோகை யின்கண் மேவி வேலை விடும்வீர-
தோளி லென்பு மாலை வேணி மீது கங்கை சூடி யாடு
தோகை பங்க ரோடு சூது மொழிவோனே ;
பாரை யுண்ட மாயன் வேயை யூதி பண்டு பாவ லோர்கள்
பாடல் கண்டு ஏகு மாலின் மருகோனே-
பாத கங்கள் வேறி நூறி நீதி யின்சொல் வேத வாய்மை
பாடு மன்பர் வாழ்வ தான பெருமாளே.

1170.

பகல்மட்கச் செக்கர்ப ப்ரபைவிடு
நவரத்நப் பத்தித் தொடைநக
நுதிபட்டிட் டற்றுச் சிதறிட இதழூறல்-
பருகித்திக் திக்கப் படுமொழி
பதறக்கைப் பத்மத் தொளிவளை
வதறிச்சத் திக்கப புளகித தனபாரம் ;
அகலத்திற் றைக்கப பரிமள
அமளிக்குட் சிக்கிச் சிறுகென
இறுகக்கைப் பற்றித் தழுவிய அநுராக-
அவசத்திற் சித்தத் தறிவையு
மிகவைத்துப் *பொற்றித் தெரிவையர்
வசம்விட்டர்ச் சிக்கைக் கொருபொழு துணர்வேனே ;
இகல்வெற்றிச் சதுதிக் கிரணமு
முரணிர்த்தப் பச்சைப் புரவியு
மிரவிக்கைக் குக்டத் துவசமு மறமாதும்-
இடைவைத்துச் சித்ரத் தமிழ்கொடு
கவிமெத்தச் செப்பிப் பழுதற
எழுதிக்கற் பித்துத் திரிபவர் பெருவாழ்வே ;

* பொற்றி = போற்றி.

புகலிற்றார்க் கிட்டுப் ப்ரமையுறு
கலகச்செற் றச்சட் சமயிகள்
புகலற்குப் பற்றற் கரியதொ ருபதேசப்-
பொருளைப்*புட் பித்துக் குருபர
னெனமுக்கட் செக்கர்ச் சடைமதி
புனையப்பர்க் கொப்பித தருளிய பெருமாளே.

1171.

பத்தித்தா ளக்கொத் தொளிர்வரி
பட்டப்புள கச்செப் பிளமுலை
பட்டிட்டெதிர் கட்டுப் பாதவ ருயர்தாளப்-
பத்மத்திய †ாற்புக் கடுகடு
கட்சத்தியர் மெத்தத திரவிய
பட்சத்திய ரிக்குச் சிலையுரு விலிசேருஞ் ;
சித்தத்தரு ணர்க்குக் கனியத
ரப்புத்தமு தத்தைத் தருமவர்
சித்ரக்கிர ணப்பொட் டிடுபிறை நுதலார்தங்-
தெட்டிற்படு கட்டக் கனவிய
பட்சத்தரு ளற்றுற் றனதடி
சிக்கிட்டிடை புக்கிட் டலைவது தவிராதோ ;
மத்தப்பிர மத்தக் கயமுக
னைக்குத்திமி தித்துக் கழுதுகள்
மட்டிட்டஇ ரத்தக் குருதியில் விளையாட-
மற்றைப்பதி னெட்டுக் கணவகை
சத்திக்கந டிக்கப் பலபல
வர்க்கத்தலை தத்தப் பொருபடை யுடையோனே ;
முத்திப்பர மத்தைக் கருதிய
சித்தத்தினில் முற்றத் தவமுனி
முற்பட்டுழை பெற்றுத் தருகுற மகள்மேல்மால்-

---

* புட்பித்து=திருவாய் மலர்ந்து.

† அற்பு=அன்பு.

முற்றித்திரி வெற்றிக் குருபர
முற்பட்டமு ரட்டுப் புலவனை
*முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே

† இங்கே, சுவாமி பொய்யாமொழிப் புலவர்க்கு எதிர் தோன்றித் தம் பெயர் 'முட்டை' என்று சொல்லித் தம்மேல் அவரைப் பாடும்படி சொல்ல அவர் 'கற்று யிரங்கற் றுறை'யாகப்

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேல் முட்டைக்குங் காடு."

எனப் பாடின சரித்திரத்தைக் குறிப்பிட்டார்.

'கற்றுவிற் காட்டிக் கரைதுறை நற்றுயிற் காட்டிப் புகழ்கலை
கற்றார்சொற் கேட்கத் தனிவழி வருவோனே" என்று

1022-ஆம் பாடலிலும்,

"முற்பா டப்பா டற்று ருக்கோர்
முட்கா டற்கப் பொருளீவாய்" என்று

1119-ஆம் பாடலிலுங் கூறியிருத்தலையுங் காண்க.

புலவர் பாடினதற்கு மாறாக, சுவாமி

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றுஞ்-செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்துப் பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிபகைஞர் போல்." எனப் பாடினதாகவுங் கூறுவர்.

"பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம்
புரக்கவெழு நாள்மறவனைப்
புறவுற வளைத்தெனது பெயர்முட்டை பாடெனப்
'பொன்போலு' மென்றுபாட
வெய்யான பாலைக்கி தேலாறு நம்பெயர்
விளம்பென விளம்ப அவர்மேல்
'விழுந்ததுளி' யென்றெடுத் துப்பாடி யவர்நாவில்
வேல்கொடு பொறித்த சதுரா" என்றார் வரகவி
மார்க்கசகாய தேவரும்.

(திரு விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், சப்பாணிப் பருவம் ௪-ஆம் செய்யுள்.)

1172.

பிரதவித புண்டரிக பாதத் தாட்டிகள்
அமுதமொழி யுங்குமுத் கீதப் பாட்டிகள்
பலர்பொருள்க வர்ந்திடைக லாம்ட் டோட்டிகள் கொடிதாய-
பழுதொழிய அன்புமுடை யாரைப் போற்சிறி
தழுதழுது கண்பிசையு மாசைக் கூற்றிகள்
பகழியென வந்துபடு பார்வைக் கூற்றினர் ஒருகாம;
விரகம்வினை கின்றகடு நீரைச் சேர்த்தகில்
மருகமதமி குந்தபனி நீரைத் தேக்கியெ
விபுதர்பதி யங்கதல மேவிச் சாற்றிய தமிழ்நூலின்-
விததிகமழ் தென்றல்வர வீசிக் கோட்டிகள்
முலைகளில்வி ழுந்துபரி தாபத் தாற்றினில்
விடியளவு நைந்துருகு வேனைக் காப்பது மொருநாளே;
உரகபணை பந்தி*யபி ஷேகத தாற்றிய
சகலவுல குந்தரும மோகப் பார்ப்பதி
யுடனுருவு பங்குடைய நாகக் காப்பனும் உறிதாவும்-
ஒருகளவு கண்டுதனி கோபத் தாய்க்குல
மகளிர்சிறு தும்புகொடு மோதிச் சேர்த்திடும
உரலொடுத வழ்ந்தநவ நீதக் கூற்றனு மதிகோபக்;
கரவிகட வெங்கடக போலப் போர்க்கிரி
கடவியபு ரந்தரனும் வேளைப் போற்றுகை
கருமமென வநதுதொழ †வேதப் பாற்பதி பிறியாத-
கடவுளுமு னிந்தமர ரூரைக் காத்துயர்
கரவடக்ர வுஞ்சகிரி சாயத் தோற்றெழு
கடலெனவு டைந்தவுண ரோடத் தாக்கிய பெருமாளே.

1173.

பழுதற வோதிக் கடந்து பகைவினை தீரத் துறந்து
பலபல யோகத் திருந்து மதராசன்-
பரிமள பாணத் தயர்ந்து பணைமட வார்தற் கிசைந்து
பரிதவி யாமெத்த நொநது மயல்கூர;

* அபிஷேகம் = முடி. † வேதப்பால் பதி பிறியாத கடவுள் = வேதப் பிரணவத்திற் பதிப்பொருள் விளங்கப் பெறாத பிரமன்.

அழுதழு தாசைப் படுங்க ணபிநய மாதர்க் கிரங்கி
யவர்விழி பாணத்து நெஞ்ச மறைபோய்நின்-
றழிவது யான்முற் பயந்த விநிவச மோமற்றை யுன்ற
னருள்வச மோஇப்ர மநதெ ரிகிலேனே ;
எழுதரு வேதத்து மன்றி முழுதினு மாய்நிற்கு மெந்தை
யெனவொரு ஞானக் குருந்த ருளமேவும்-
இருவுரு வாகித் துலங்கி யொருகன தூணிற் பிறந்து
இரணியன் மார்பைப் பிளந்த தனியாண்மை;
பொழுதிசை யாவிக்ர மன்தன் மருகபு ராரிக்கு மைந்த
புளகப டீரக் குரும்பை யுடன்மேவும்-
புயல்கரி வாழச் சிலம்பின் வனசர மாதுக் குகந்து
புனமிசை யோடிப் புகுந்த பெருமாளே.

1174.

பாணிக்குட் படாது சாதகர் காணச்சற் றொணாது வாதிகள்
பாஷிக்கத் தகாது பாதக பஞ்சபூத-
பாசத்திற் படாது வேறொரு பாயத்திற் புகாது பாவனை
பாவிக்கப் பெறாது வாதனை நெஞ்சமான ;
ஏணிக்கெட் டொணாது மீதுயர் சேணுக்குச சமான நூல்வழி
யேறிப்பற றொணாது நாடினர் தங்களாலும்-
எதுச்செப் பொணாத தோர்பொருள் சோத்துக சமாம கோததி
யேறச்செச் சைநாறு தாளைவ ணங்குவேனோ ;
ஆணிப்பொற் ப்ரதாப மேருவை வேலிட்டுக் கடாவி வாசவன்
ஆபத்தைக் கெடாநி சாசரர் தமப்ரகாசம்-
ஆழிச்சத் ரசாயை நீழலி லாதித்தப் ப்ரகாச நேர்தர
ஆழிச்சக் ரவாள மாள்தரும் எம்பிரானே ;
மாணிக்கப் ப்ரவாள நீலம தாணிப்பொற் கிராதை நூபுர
வாசப்பத் மபாத சேகர சம்புவேதா-
வாசிக்கப் படாத வாசகம் ஈசர்க்குச் சுவாமி யாய்முதல்
வாசிப்பித் ததேசி காசுரர் தம்பிரானே.

1175.

பால்மொழி படித்துக் காட்டி ஆடையை நெகிழ்த்துக காட்டி
பாயலி லிருத்திக் காட்டி யநுராகம்-
பாகிதழ் கொடுத்துக் காட்டி நூல்களை விரித்துக காட்டி
பார்வைகள் புரட்டிக் காட்டி யுறவாகி;
மேல்நக மழுத்திக் காட்டி தோதக விதத்தைக் காட்டி
மேல்விழு நலத்தைக் காட்டு மடவார்பால்-
மேவிடு மயக்கைத் தீர்த்து சீர்பத நினைப்பைக் கூட்டு
மேன்மையை யெனக்குக் காட்டி யருள்வாயே;
காலனை யுதைத்துக் காட்டி யாவியை வதைத்துக் காட்டி
காரணம் விளைத்துக் காட்டி யொருகாலங்-
கானினில் நடித்துக் காட்டி யாலமு மிடற்றிற் காட்டி
காமனை யெரித்துக் காட்டி தருபாலா;
மாலுற நிறத்தைக் காட்டி வேடுவர் புனத்திற் காட்டில்
வாலிப மிளைததுக் காட்டி அயர்வாகி-
மான்மகள் தனத்தைச் சூட்டி ஏனென அழைத்துக் கேட்டு
வாழ்வுறு சமத்தைக் காட்டு பெருமாளே.

1176.

புகரில் சேவல தந்துர சங்க்ரம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாளா-
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயக பூதர என்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புது ளும்பிய மனனாகி;
அகில பூதவு டம்புமு டம்பினில்
மருவு மாருயி ருங்கர ணங்களு
மவிழ யானுமி ழுந்தஇ டந்தனி லுணர்வாலே-
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
யறிவி லேனறி யும்படி யின்றருள் புரிவாயே;

மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலய மாருத மும்பல வெம்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடும்-
மதுக ராரம்வி குஞ்சணி யுங்கர
மதுர கார்முக முமபொர வநதெழு
மதன ராஜனை வெந்துவி ழும்படி முனிபால;
முகிழ்வி லோசன ரஞ்சிறு திங்களு
முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்றும ணங்கமழ் அபிராமி-
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே.

1177.

புருவத்தை நெறித்து விழிக்கயல்
பயில்விட்டு வெருட்டி மதித்திரு
புதுவட்டை மினுக்கி யளிக்குல மிசைபாடும்-
புயல்சற்று விரித்து நிரைததொளி
வளையிட்ட கரத்தை யசைத்தகில்
புனைமெத்தை படுத்த பளிக்கறை தனிலேறிச்;
சரசத்தை விளைத்து முலைக்கிரி
புளகிக்க அணைத்து நகக்குறி
தனைவைத்து முகத்தை முகத்துட னுறமேவித்-
தணிவித்தி ரதத்த தரத்துமி
ழமுதத்தை யளித்து வுருக்கிகள்
தருபித்தை யகற்றி யுனைத்தொழ முயல்வேனோ;
பரதத்தை யடக்கி நடிப்பவர்
த்ரிபுரத்தை யெரிக்க நகைப்பவர்
பரவைக்குள் விடத்தை மிடற்றிடு பவர்நேர்கப்-
பரையுற்ற கரத்தர் மிகப்பகி
ரதியுற்ற சிரத்தர் நிறத்துயர்
பரவத்தர் பொருப்பி விருப்பவ ருமையாளர்;

சுரர்சுத்தர் மனத்துறை வித்தகர்
பணிபத்தர் பவத்தை யறுப்பவர்
சுடலைப்பொடி யைப்பரி சிப்பவர் விடையேறுந்-
துணையொத்த பதத்த ரெதிர்த்திடு
மதனைக்கடி முத்தர் கருத்தமர்
தொலைவற்ற க்ருபைக்கு ளுதித்தருள் பெருமாளே.

1178.

*புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு மதுதனை அறியாதே-
புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவ மதுகொளல் பிழையாதே;
கவிக்கொண் டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
களைக்கும் பாவ சுழல்படு மடிநாயேன்-
கலக்குண் டாகு புவிதனி லெனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுள மறியாதோ;
சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி யெமதுளெ
சிறக்குஞ் சாமி சொருபமி தொளிகாணச்-
செழிக்குஞ் சாமி பிறவியை யொழிக்குஞ் சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முநிவர்க ளிடமேவுந்;
தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி யசுரர்கள் பொடியாகச்-
சதைக்குஞ் சாமி யெமைபணி விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி யெனவரு பெருமாளே.

1179.

பூசல்த ருங்கய லும்பொ ருநதிய
வாசந றுங்குழ லுந்து லங்கிய
பூரண கும்பபெ னநத னங்களு மடமாதர்-
போகம டங்கலை யுமபு ணர்ந்தறு
ராகம்வி ளைந்துவ ரும்பெ ருமபிழை
போயக லும்படி யொன்றை யன்புற நினையாதே;

* புவிக்கு=புவியில்.

ஆசையெ னும்படி யுந்த னங்களு
 மோகைந டந்திட வுந்தி னங்களும்
 ஆருட னும்பகை கொண்டு நின்றுற நடமாடி-
ஆடிய பமபர முன்சு ழன்றெறி
 ரோடிவி ழும்படி கண்ட தொன்றுற
 ஆவிய கன்றுவி டும்ப யங்கெட அருள்வாயே;
வாசவ னன்புவி ளங்க நின்றசு
 ரேசர்கு லங்கள டங்க லுங்கெட
 வானவர் நின்றுதி யங்கு கின்றதொர் குறைதீர-
வாரிய திர்ந்துப யந்து நின்றிட
 மேருவு டங்கஇ டிந்து சென்றிட
 வாகைபு னைந்தொரு வென்றி கொண்டரு ளிளையோனே;
வீசிய தென்றலெ லா டந்தி யும்பகை
 யாகமு யங்கவு நங்க னுமபொர
 வேடையெ னும்படி சிந்தை நொந்திட அடைவாக-
வேடர்செ ழுமபுன வஞ்சி யஞ்சன
 வேலினு ளங்கள்க லங்கி யின்புற
 வேளையெ னும்படி சென்றி றைஞ்சிய பெருமாளே.

1180.

பூசல் வநதிரு தோடார் காதொடு
 மோதி டுங்கயல் மானர் மானமில்
 போக மங்கையர் கோடா கோடிய மனதானர்-
பூர குங்கும தாளா மோதப
 டீர சண்பக மாலா லாளித
 பூத ரங்களின் மீதே மூழ்கிய அநுராக;
ஆசை யென்கிற பாரா வாரமு
 மேறு கின்றில னுறு பேதஅ
 நேக தந்த்ரக்ரி யாவே தாகம கலையாய-
ஆழி யுங்கரை காணே னூபுர
 பாத பங்கய மோதே னேசில
 ஞயி னுங்குரு நாதா நீயருள் புரிவாயே;

வாச வன்பதி பாழா காமல்கி
சாசரன்குலம் வாழா தேயடி
மாள வன்கிரி கூறுய் நீறெழ நெடுநேமி-
மாத வன்தரு வேதா வோடலை
மோது தெண்கடல் கோகோ கோவென
மாழு றிந்திட நீள்வே லேவிய இளையோனே;
வீசு தென்றலும் வேள்பூ வாளிபு
மீறு கின்றமை யாமோ காமவி
டாய்கெ டும்படி காவா யாவியை யெனஏனல்
மீது சென்றுற வாடா வேடுவர்
பேதை கொங்கையின் மீதே மால்கொடு
வேடை கொண்டபி ரானே வானவர் பெருமாளே.

1181.

பொங்குங் கொடிய கூற்றனு நஞ்சும பொதுவில் நோக்கிய
பொங்கும் புதிய நேத்திர வலைவீசிப்-
பொன்கண் டிளகு கூத்திகள் புன்கண் கலவி வேட்டுயிர்
புண்கொண் டுருகி யாட்படு மயல்தீரக்;
*கொங்கின் புசக கோதகிரி பங்கங் களையு மாய்க்குடி
†கொங்கின் குவளை பூக்கிற கிரிசோண-
குன்றங் கதிரை பூப்‡பர முன்துன் றமரர் போற்றிய
குன்றம் பிறவும வாழ்த்துவ தொருநாளே;
எங்கும் பகர மாய்க்கெடி விஞ்சும் பகழி வீக்கிய
வெஞ்சண் டதனு வேட்டுவர் சாரர-
விந்தம் பணிய வாய்த்தரு ளந்தண் புவன நோற்பவை
மென்குங் குமகு யாத்திரி பிரியாதே;
எங்குங் கலுழி யார்த்தெழ எங்குஞ் சுருதி கூப்பிட
எங்குங் குருவி யோச்சிய திருமானை-
என்றென் றவச மாய்த்தொழு தென்றும் புதிய கூட்டமொ .
டென்றும் பொழுது போக்கிய பெருமாளே.

---

*கொங்கின் புசக கோத்கிரி = கொங்குநாட்டிலுள்ள நாககிரி : திருச்செங்கோடு. † கொங்கின் குவளை பூக்கிற கிரி = திருத்தணி.
‡ பரம் முன் துன்று குன்றம் = திருப்பரங்குன்றம்.

1182.

பொருத கயல்விழி புரட்டிக் காட்டுவர்
புளக தனவட மசைத்துக் காட்டுவர்
புயலி னளகமும் விரித்துக் காட்டுவர் பொதுமாதர்-
புனித இதழ்மது நுகைத்துக் காட்டுவர்
பொலிவி னிடைதுகில் குலைத்துக் காட்டுவர்
புதிய பரிபுர நடித்துக் காட்டுவ ரிளைஞோரை;
உருக அணைதனி லணைத்துக் காட்டுவர்
உடைமை யடையவெ பறித்துத் தாழ்க்கவெ
உததி யமுதென நிகழ்த்திக் கேட்பவர் பொடிமாயம-
உதர மெரிதர மருத்திட் டாட்டிக
ளுயிரி னிலைகளை விரித்துச் சேர்ப்பவ
ருறவு கலவியை விடுத்திட் டாட்கொள நினையாதோ;
மருது பொடிபட வுதைத்திட் *டாய்ச்செரி
மகளி ருறிகளை யுடைத்துப் போட்டவர்
மறுக வொருகயி றடித்திட் டார்ப்புற அழுதாறும-
வளரு நெடுமுகி லெதிர்த்துக் காட்டென
வசட னிரணிய னுரத்தைப் பேர்த்தவன்
மழையி னிரைமலை யெடுத்துக் காத்தவன் மருகோனே,
விருது பலபல பிடித்துச் சூர்க்கிளை
விகட தடமுடி பறித்துத் தோட்களை
விழவு முறியவு மடித்துத் தாக்கிய அயில்வீரா-
வெகுதி சலதியை யெரித்துத் தூட்பட
வினைசெ யசுரர்கள் பதிக்குட் பாய்ச்சிய
விபுத மலரடி விரித்துப் போற்றினர் பெருமாளே.

1183.

மங்காதிங் காக்குஞ் சிறுவரு
முண்டேயிங் காற்றுந துணைவியும
வம்பாருந தேக்குண் டிடவறி தெனும்வாதை-

* ஆய் செரி=ஆயர் சேரி.

வந்தேபொன் தேட்டங் கொடுமன
நொந்தேயிங் காட்டம் பெரிதெழ
வண்போதன் தீட்டுந் தொடராது படியேயன் ;
சங்காரம் போர்ச்சங் கையிலுடல்
வெங்கானம போய்த்தங் குயிர்கொள
சந்தேகந் தீர்க்குந் தனுவுட னணுகாமுன்-
*சந்தாரஞ் சாத்தும் புயவியல்
கந்தாஎன் றேத்துப் படியென
†சந்தாபந் தீர்த்தென் றடியிணை தருவாயே ;
கங்காளன் பார்த்தன் கையிலடி
யுண்டேதிண் டாட்டங் கொளுநெடு
‡கன்சாபஞ் சார்த்துங் காதல னருதேறி-
கந்தாவஞ் சேர்த்தண் புதுமல
ரம்பான்வெந் தார்ப்பொன் றடவிழி
கண்டான்வெங் காட்டங் கனலுற நடமாடி ;
அங்காலங் கோத்தெண் டிசைபுவி
மங்காதுண் டாற்கொன் றதிபதி
அந்தாபந் தீர்த்தம் பொருளினை யருள்வோனே-
அன்பாலந் தாட்கும் பிடுமவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கந் தாவல பெருமாளே.

1184.

§மதன தனுநிக ரிடைக்கே மன
முருக வருபிடி நடைக்கே யிரு
வனச பரிபுர மலர்க்கே மதா காம்வாழும்-
வகுள ம்ருகமத மழைக்கே மணி
மகர மணிவன குழைக்கே மட
மகளிர் முகுளித முலைக்கே கட லமுதாறும் ;

---

* சந்து ஆரம்=சந்தனமும் ஆரமும். † சந்தாபம்=கொடுமை.
‡ கன் சாபம் சார்த்தும்=மலையாகிய வில்லைத் தரித்த.
§ மதன தனு நிகர்=மன்மதனுடைய சரீரத்துக் கொப்பாகிய : உருவ மில்லாத.

அதர மதுரித மொழிக்கே குழை
யளவு மளவிய விழிக்கே தள
வனைய தொருசிறு நகைக்கே பணி   மதிபோலும்-
அழகு திகழ்தரு நுதற்கே யந
வரத மவயவ மனைத்தூ டினு
மவச முறுமயல் தவிர்த்தாள் வது   மொருநாளே;
உததி புதைபட அடைத்தா தவன்
நிகரி லிரதமும் விடுக்கா நக
ரொருநொ டியில்வெயி லெழச்சா நகி   துயர்தீர-
உபய வொருபது வரைத்தோள் களு
நிசிச ரர்கள்பதி தசக்ரீ வமு
முருள ஒருகணை தெரிததா னும   வுனஞான;
திதமி லவுணர்த மிருப்பா கிய
புரமு மெரியெழ முதற்பூ தர
திலத குலகிரி வளைத்தா னும   கிழவானோ-
திருவ நகர்குடி புகச்சீ கர
மகர சலமுறை யிடச்சூ ரொடு
சிகர கிரிபொடி படச்சா டிய   பெருமாளே.

1185.

மதனேவிய கணையாலிரு வினையால்புவி கடல்சாரமும்
வடிவாயுடல் நடமாடுக   முடியாதேன்-
மனமாயையொ டிருகாழ்வினை யறமூதுடை மலம்வேரற
மகிழ்ஞானக அநுபூதியி   னருள்மேவிப்;
பதமேவுமு னடியாருடன் விளையாடுக அடியேன்முனே
பரிபூரண கிருபாகர   முடன்ஞான-
பரிமேலழ குடனேறிவி ணவர்பூமழை யடிமேல்விட
பலகோடிவெண் மதிபோலவெ   வருவாயே;
சதகோடிவெண் மடவார்கட லெனசாமரை யசையாமுழு
சசிசூரியர் சுடராமென   வொருகோடிச்-
சடைமாமுடி முநிவோர்சர ணெனவேதியர் மறையோதுக
சதிநாடக மருள்வேணிய   னருள்பாலா;

விதியானவ னிளையாளென துளமேவிய வளிநாயகி
வெகுமாலுற தனமேலணை முருகோனே-
வெளியாசையோ டடை*பூவணர் மருகாமணி முதிராடக
வெயில்வீசிய அழகாதமிழ் பெருமாளே.

1186.

மாடமதிட் சுற்று மொக்க வைத்திட
வீடுகனக் கத்த னத்தி லச்சுறு
மாலிபமொத் துப்ர புத்த னத்தினி லடைவாக-
மாதர்பெருக் கத்த ருக்க மற்றவர்
சூழவிருக் கத்த ரிக்க இப்படி
வாழ்கையில்மத் தப்ர மத்த சித்திகொளா கடைநாளிற்;
பாடையினிற் கட்டி விட்டு நட்டவர்
கூடஅரற் றிப்பு டைத்து றப்புள
பாவையெடுத் துத்த ழற்கி ரைப்பட விடலாய-
பாடுதொலைத் துக்க ழிக்க அக்ருபை
தேடுமெனைத் தற்பு ரக்க வுற்றிரு
பாதுகையைப் பற்றி நிற்கவைத்தெனை யருளாதோ;
ஆடகவெற் பைப்பெ ருத்த மத்தென
நாகவடத் தைப்பி ணித்து ரத்தட
ரார்கள்பிடித் துத்தி ரிததி டப்புகை யனலாக-
ஆழிகொதித் துக்க தற்றி விட்டிமை
யோர்களொளிக் கக்க ளித்த உக்கிர
ஆலவிடத் தைத்த ரித்த அற்புதர் குமரேசா;
வேடர்சிறுக் கிக்கி லச்சை யற்றெழு
பாரும்வெறுத் துச்சி ரிப்ப நட்பொடு
வேளையெனப் புக்கு நிற்கும் வித்தக இளையோனே-
வேகமிகுத் துக்க திக்கும் விக்ரம
சூரர்சிரத் தைத்து ணித்த டக்குதல்
வீரமெனத் தத்து வத்து மெச்சிய பெருமாளே.

---

* பூ வணர் = பூ வண்ணராகிய விஷ்ணு.

1187.

மாண்டாரெ லும்பணி யுஞ்சடை
யாண்டாரி றைஞ்ச மொழிந்தனை
வான்பூத லம்பவ னங்கனல் புனலான-
வான்பூத முங்கர ணங்களு
நான்போயொ டுங்கவு டங்கலு
மாய்ந்தால்வி ளங்கும தொன்றினை யருளாயேல்;
வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாறி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை யுடையேனுய்-
வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாச ரண்சர ணென்பது
வீண்போம தொன்றல னென்பதை யுணராதே,
ஆண்டார்த லங்கள ளந்திட
நீண்டார்மு குந்தர்த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றமு தலைவாயுட்-
ருங்கோர்*சி லம்புபு லம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆய்†பூமு ழுங்கிய டங்கும ளவில்நேசம்:
பூண்டாழி கொண்டுவ னங்களி
லேய்ந்தாள வென்று வெறுந்தனி
போந்தோல மென்று தவுமபுயல் மருகோனே-
பூம்பாளை யெங்கும ணங்கமழ்
தேங்காவில் நின்றதொர் குன்றவர்
பூந்தோகை கொங்கைவி ரும்பிய பெருமானே.

1188.

மாறுபொரு கால னுக்கும் வானிலெழு மாம திக்கும்
வாரிதுயி லாவ தற்கும் வசையேசொல்-

---

* சிலம்பு = மலையை யொத்த யானை.
† பூ முழுங்கி = பூவை யொத்த வாயினிடத்து வைத்து முழுங்கி.

மாயமட வார்த மக்கும் ஆயர்குழ லூதி சைக்கும்
வாயுமிள வாடை யிற்கு மதனாலே;
வேறுபடு பாய லுக்கு மேயெனது பேதை யெய்த்து
வேறுபடு மேனி சற்று மழியாதே-
வேடர்குல மாதி னுக்கு வேடைகெட வேக டித்து
மேவுமிரு பாத முற்று வரவேணும்;
ஆறுமிடை வாள ரக்கர் நீறுபட வேலெ டுத்த
ஆறுமுக னேகு றத்தி மணவாளா-
ஆழியுல கேழ டக்கி வாசுகியை வாய டக்கி
ஆலுமயி லேறி நிற்கு மிளையோனே;
சீறுபட மேரு வெற்பை நீறுபட வேசி னந்த
சேவலவ நீப மொய்த்த திரள்தோளா-
சேருமட லால்மி குத்த சூர்கொடு போய டைத்த
தேவர்சிறை மீள விட்ட பெருமாளே.

1189.

மின்னினில் நடுக்க முற்ற நுண்ணிய நுசுப்பில் முத்த
வெண்ணகையில் வட்ட மொத்து அழகார-
விம்மியிள கிக்க தித்த கொம்மைமுலை யிற்கு னித்த
வின்னுதலி லிட்ட பொட்டில் விலைமாதர்;
கன்னல்மொழி யிற்சி றக்கு மன்னநடை யிற்க றுத்த
கண்ணினிணை யிற்சி வந்த கனிவாயிற்-
கண்ணழிவு வைத்த புத்தி ஷண்முகநி னைக்க வைத்த
கன்மவச மெப்ப டிக்கு மறவேனே;
அன்னநடை யைப்ப ழித்த மஞ்ஞைமலை யிற்குறத்தி
யம்மையட விப்பு னத்தில் விளையாடும்-
அன்னையிறு கப்பி ணித்த பன்னிருதி ருப்பு யத்தி
லன்னியஅ ரக்க ரத்த னையுமாளப்;
பொன்னுலகி னைப்பு ரக்கு மன்னநல்வ ரதத்தை விட்ட
புன்மையர்பு ரத்ர யத்தர் பொடியாகப்-
பொன்மலை வளைத்தெ ரித்த கண்ணுத லிடத்தி லுற்ற
புண்ணிய வொருத்தி பெற்ற பெருமாளே.

1190.

முத்தமு லாவு தனத்தியர் சித்தச னாணை செலுத்திகள்
முத்தமி டாம னுருக்கிக ளிளைஞோர்பால்-
முட்டவு லாவி மருட்டிகள் கெட்டிலை வேலின் விழிச்சியர்
முப்பது கோடி மனத்திய ரநுராகத்;
தத்தைக ளாசை விதத்தியர் கற்புர தோளின் மினுக்கிகள்
தப்புறு மாறக மெத்திக ளளவேநான்-
தட்டழி யாது திருப்புகழ் கற்கவு மோதவு முத்தமிழ்
தத்துவ ஞான மெனக்கருள் புரிவாயே;
மத்தக யானை யுரித்தவர் பெற்றகு மார இலட்சுமி
மைத்துன னாகிய விக்ரமன் மருகோனே-
வற்றிட வாரிதி முற்றிய வெற்றிகொள் சூரர் பதைப்புற
வற்புறு வேலைவி டுத்தரு ளிளையோனே;
சித்திர மான குறத்தியை யுற்றொரு போது புனத்திடை
சிக்கென வேதழு விப்புணர் மணவாளா-
செச்சைய லாயு பதத்தினை மெய்த்தவர் வாழ்வு பெறத்தரு
சித்தவி சாக வியற்சுரர் பெருமாளே.

பு. 1191.

முருகு லாவிய மைப்பாவு வார்குழல்
முளரி வாய் நெகிழ் வித்தார வேல்விழி
முடுகு வோர்குலை வித்தான கோடெனு முலையாலே-
முறைமை சேர்கெட மைத்தார்வு வார்கடல்
முடுகு வோரென எய்த்தோடி யாகமு
மொழியும் வேறிடு வித்தேறி ஞானமு முயல்வேவகொண்;
டுருகு வார்சில சிற்றும னேயைப
முயிரு மாகமு மொத்தாசை யோடுள
முருகி நீமெழு கிட்டான தோவென வுரையாநண்-
புலக வாவொழி வித்தார் மனோலய
முணர்வு நீடிய பொற்பாத சேவடி
யுலவு நீயெனை வைத்தாள வேயருள் தருவாயே;

குருகு லாவிய நற்றுழி சூழ்நகர்
குமர னேமுனை வெற்பார் பராபரை
குழக பூசுரர் மெய்க்கா ணும் வீரர்தம் வடிவேலா-
குறவர் சீர்மக ளைத்தேடி வாடிய
குழையு நீள்கர வைத்தோடி யேயவர்
குடியி லேமயி லைக்கோடு சோதிய வுரவோனே ;
மருகு மாமது ரைக்கூடல் மால்வரை
வளைவு ளாகிய நக்கீர ரோதிய
வளைகை சேர்தமி ழுக்காக நீடிய கரவோனே-
மதிய மேவிய சுற்றுத வேணியர்
மகிழ நீநொடி யற்றுன போதினில்
மயிலை நீடுல கைச்சூழ வேவிய பெருமாளே.

1192.

முலைமேலிற் கலிங்க மொன்றிட
முதல்வானிற் பிறந்த மின்பிறை
நுதல்மேல்முத் தருமப புநதியி விதமார-
முகநேசித் திலங்க வும்பல
வினைமூசிப் புரண்ட வண்கடல்
முரணுசைக் கமைநத வன்சர மெனமூவா :
மலர்போலச் சிவநத செங்கணில்
மருள்கூர்கைக் கிருண்ட அஞ்சனம்
வழுவாமற் புனைநது திண்கய மெனநாடி-
வருடமாதர்க் கிரங்கி நெஞ்சமு
மயலாகிப் பரந்து நின்செயல்
மருவாமற் கலங்கும் வஞ்சக மொழியாதோ ;
தொலையாநற் றவங்க ணின்றுனை
நிலையாகப் புகழ்ந்து கொண்டுள
அடியாருட் டுலங்கி நின்றருள் துணைவேளே-
துடிநேரொத் திலங்கு மென்கொடி
யிடைதோகைக் கிசைந்த வொண்டொடி
சுரர்வாழப் பிறந்த சுந்தரி மணவாளா

மலைமாளப் பிளந்த செங்கையில்
வடிவேலைக் கொடந்த வஞ்சக
வடிவாகக் கரந்து வந்தமர் பொருசூரன்-
வலிமாளத் துரந்த வன்றிறல்
முருகாமற் பொருந்து திண்புய
வடிவாமற் றநந்த மிநதிரர் பெருமாளே.

1193.

மூளைய ழிந்தது மேட்டிகு லைந்தது
வயது சென்றது வாய்ப்ப லுதிர்ந்தது
முதுகு வெஞ்சிலை காட்டிவ ளைந்தது பரையான-
முகமி ழிந்தது நோக்குமி ருண்டது
இருமல் வந்தது தாக்கமொ ழிந்தது
மொழித ளர்ந்தது நாக்குவி ழுந்தது அறிவேபோய்;
நினைவ யர்ந்தது நீட்டல் முடங்கலு
மவச மும்பல ஏக்கமு முந்தின
நெறிம றந்தது மூப்பு முதிர்ந்தது பலநோயும்-
நிலைவை கொண்டது பாய்க்கிடை கண்டது
சலமலங்களி னூற்றமெ ழுந்தது
நமிஷ மிங்கினி யாச்சுதென் முன்பினி தருள்வாயே;
இனைய இந்திர னேற்றமு மண்டர்கள்
தலமு மங்கிட வோட்டியி ருஞ்சிறை
யிடுமி டும்புள ராக்கதர் தங்களில் வெகுகோடி-
எதிர்பொ ருமபடி போர்க்குளெ திர்ந்தவர்
தசைசி ரங்களு நாற்றிசை சிந்திட
இடிமு ழங்கிய வேற்படை யொன்றனை யெறிவோனே;
தினைவ னங்கிளி காத்தசவுந்தரி
அருகு சென்றடி போற்றிம ணஞ்செய்து
செகம றிந்திட வாழ்க்கைபு ரிந்திடு மிளையோனே-
திரிபு ரம்பொடி யாக்கிய சங்கரர்
குமர கந்தப ராக்ரம செந்தமிழ்
தெளிவு கொண்டடி யார்க்குவி ளம்பிய பெருமாளே.

1194.

மைக்குக்கைப் புக்கக் கயல்விழி
யெற்றிக்கொட் டிட்டுச் சிலைமதன்
வர்க்கத்தைக் கற்பித் திடுஞற மொழியாலே-
மட்டிட்டுத் துட்டக் கெருவித
மிட்டிட்டுச் சுற்றிப் பரிமள
மச்சப்பொற் கட்டிற் செறிமல ரணைமீதே ;
புக்குக்கைக் கொக்கப் புகுமொரு
அற்பச்சிற் றிற்பத் தெரிவையர்
பொய்க்குற்றுச் சுற்றித் திரிகிற புலையேனைப்-
பொற்பித்துக் கற்பித் துனதடி
அர்ச்சிக்கச் சற்றுக் க்ருபைசெய
புத்திக்குச் சித்தித் தருளுவ தொருநாளே ;
திக்குக்குந் திக்குத் திகுதிகு
டுட்டுட்டுட் டுட்டுட் டுடுடுடு
தித்தித்தித் தித்தித் திதியென நடமாடுஞ்-
சித்தர்க்குச் சுத்தப் பரமநல்
முத்தர்க்குச் சித்தக் க்ருபையுள
சித்தர்க்குப் பத்தர்க் கருளிய குருநாதா ;
ஒக்கத்தக் கிட்டுத் திரியசுர்
முட்டக்கொட் டற்றுத் திரிபுர
மொக்கக்கெட் டிட்டுத் திகுதிகு வெனவேக-
உற்பித்துக் கற்பித் தமரரை
முற்பட்டக் கட்டச் சிறைவிடு
*மொட்குக்கடக் கொற்றக் கொடியுள பெருமாளே.

1195.

மோது மறலியொரு †கோடி வேற்படை
கூடி முடுகியெம தாவி ‡ பாழ்த்திட
மோக முடையவெகு மாதர் கூட்டமு மயலாரும்-

---

* ஒட் குக்கட = ஒள் குக்குட.

† கோடி = கூர்மை. ‡ பாழ்த்திட = பாழ்படுத்த.

மூளு மளவில்விசை மேல்வி ழாப்பரி
தாப முடனும்விழி நீர்கொ ளார்கொடு
மோக வினையில்நெடு நாளின் மூத்தவ ரிலைபோர்கள்;
ஏது கருமமிவர் சா*வெ னார்சிலர்
கூடி நடவுமிடு கா*டெ னாக்கடி
தேழு நரகினிடை வீழ்*மெ னாப்பொரு யறுபாவி-
ஏழு புவனமிரு வான நாட்டவர்
சூழு முநிவர்கிளை தாமு மேத்திட
ஈச னருள்குமர வேத மார்க்கெழ வருவாயே;
சூது பொருதரும னாடி தோற்றிரு
வாறு வருஷமவன வாச மேற்றியல்
தோகை யுடனுமெவி ராட ராசநிய முறைநாளிற்-
கூறை நிரைகொடவ ரேக மீட்டெதி
ராளு முரிமைதரு மாறு கேட்டொரு
தூது செலஅநுவ லாண்மை தாக்குவ னெனமீள ;
வாது சமர்திருத ரான ராட்டிர
ராஜ குமார்துரி யோத னாற்பிறர்
மாள நிருபரொடு சேனை தூட்பட வரிசாப-
வாகை விஜயனடல் வாசி பூட்டிய
தேரை முடுகுநெடு மால்ப ராக்ரம
மாயன் மருகஅமர் நாடர் பார்த்திப பெருமாளே.

1196.

வடிகட்டிய தேனென வாயினி
லூறுதுப்பன வூறலை யார்தர
வரைவிற்றிக ழூடலி லேதரு மடவார்பால்-
அடிபட்டலை பாவநிர் மூடனை
முகடித்தொழி லாமுன நீபுன
தடிமைத்தொழி லாகஎ நாளினி லருள்வாயோ ;

---

* எனா=என்னாமல்.

பொடிபட்டிட ராவணன் மாமுடி
சிதறச்சிலை வாளிக ளேகொடு
பொருகைக்கள மேவிய மாயவன் மருகோனே-
கொடுமைத்தொழி லாகிய கானவர்
மகிமைக்கொள வேயவர் வாழ்சிறு
குடிலிற்குற மாதொடு மேவிய பெருமாளே.

1197.

வட்ட முலைக்கச் சவிழ்த்து வைத்துள
முத்து வடத்தைக் கழுத்தி லிட்டிரு
மைக்கு வளைக்கட் குறிப்ப ழுத்திய பொதுமாதர்-
மட்டம ளிக்குட் டிருத்தி முத்தணி
மெத்தை தனக்குட் செருக்கி வெற்றிலை
வைத்த பழுப்பச் சிலைச்ச ருட்கடி யிதழ்கோதிக்;
கட்டி யணைத்திட் டெடுத்து டுத்திடு
பட்டை யவிழ்த்துக் கருத்தி தத்தொடு
கற்ற கலைச்சொற் களிற்ப யிற்றுள முயல்போதுங்-
கைக்கு ளிசைத்துப் பிடித்த கட்கமும்
வெட்சி மலர்ப்பொற் பதத்தி ரட்சணை
கட்டு மணிச்சித் திரத்தி றத்தையு மறவேனே;
கொட்ட மிகுத்திட் டரக்கர் பட்டணம்
இட்டு நெருப்புக் கொளுத்தி யத்தலை
கொட்டை பரப்பச் செருக்க ளத்திடை யசுரோரைக்-
குத்தி முறித்துக் குடிப்ப ரத்தமும்
வெட்டி யழித்துக் கனக்க ளிப்பொடு
கொக்கரி யிட்டுத் தெரித்த டுப்பன வொருகோடிப்;
பட்ட பிணத்தைப் பிடித்தி ழுப்பன
சச்சரி கொட்டிட் டடுக்கெ டுப்பன
பற்கள் விரித்துச் சிரித்தி ருப்பன வெகுபூதம்-
பட்சி பறக்கத் திசைக்குள் மத்தளம்
வெற்றி முழக்கிக் கொடிப்பி டித்தயில்
பட்டற விட்டுத் துரத்தி வெட்டிய பெருமாளே.

1198.

வளைகர மாட்டி வேட்டி னிடைதுயில் வாட்டி யிட்டி
வரிவிழி தீட்டி யேட்டின் மணம்வீசும்-
மழைகுழல் காட்டி வேட்கை வளர்முலை காட்டி நோக்கின்
மயில்நடை காட்டி மூட்டி மயலாகப் ;
புளகித வார்த்தை யேற்றி வரிகலை வாழ்த்தி யிழ்த்து
புணர்முலை சேர்த்து வீக்கி விளையாடும்-
பொதுமட வார்க்கு ஏற்ற வழியுறு வாழ்க்கை வேட்கை
புலைகுண மோட்டி மாற்றி யருள்வாயே ;
தொளையொழு கேற்ற நோக்கி பலவகை வாச்சி தூர்த்து
சுடரடி *நீத்த லேத்து மடியார்கள்-
துணைவன்மைநோககிநோக்கி னிடைமுறையாய்ச்சிமாரச்சொல்
சொலியமு தூட்டி யாட்டு முருகோனே ;
இளநகை யோட்டி மூட்டர் குலமவிழ வாட்டி †யேட்டை
யிமையவர் பாட்டை மீட்ட குருநாதா-
இயல்புவி வாழ்த்தி யேத்த எனதிடர் நோக்கி நோக்க
மிருவினை காட்டி மீட்ட பெருமாளே.

1199.

வாடையில் மதனைய ழைத்துற்று
வால்வளை கலகலெ னக்கற்றை
வார்குழல் சரியமு டித்திட்டு துகிலாரும்-
மால்கொள நெகிழவு டுத்திட்டு
நூபுர மிணையடி யைப்பற்றி
வாய்விட நுதல்மிசை பொட்டிட்டு வருமாய ;
நாடக மகளிர்ந டிப்புற்ற
தோதக வலையில கப்பட்டு
ஞாலமு முழுதுமி கப்பித்த னெனுமாறு-

---

* நீத்தல் = நித்தல் : நாடோறும்.

† ஏட்டை = தளர்ச்சி.

நாணமு மாபுமொ ழுக்கற்று
  நீதியு மறிவும றக்கெட்டு
  நாயடி மையுமடி மைப்பட்டு விடலாமோ ;
ஆடிய மயிலினை யொப்புற்று
  பீலியு மிலையுமு டுத்திட்டு
  ஆரிரு மழகுமி கபெற்று *யவனாளும்-
ஆகிய விதண்மிசை யுற்றிட்டு
  மானின மருளவி ழிநதிட்டு
  ஆயுத கவணொரு கைச்சுற்றி விளையாடும ;
வேடுவர் சிறுமியொ ருத்திக்கு
  யான்வழி யடிமையெ னச்செப்பி
  வீறுள அடியிணை யைப்பற்றி பலகாலும்-
வேதமு மமரு மெய்ச்சசக்ர
  வாளமு மறியவி லைப்பட்டு
  மேருவில் மிகவுமெ ழுந்திட்ட பெருமாளே.

1200.

விரைசொரியு மருகமதமு மலருமவாய்த்திலகு
  விரிகுழலு மவிழுநறு மெழுகு கோட்டுமுலை
  மிசையில்வரு பகலொளியை வெருவ வோட்டுமணி
  வகையாரம்-
விடுதொடைகள் நகருதியி லறவும வாய்த்தொளிர
  விழிசெருக மொழிபதற அமுது தேக்கியகை
  விதறிவளை கலகலென அழகு மேற்பொழிய
  அலர்மேவும் ;
இருசரண பரிபுரசு ருதிக ளார்க்கவச
  மிலகுகடல் கரைபுரள இனிமை கூட்டியுள
  மிதம்விளைய இருவரொரு மளவு காட்டரிய அநுராகத்-
திடைமுழுகி யெனதுமன தழியு நாட்களினு
  மிருசரண இயலும்வினை யெறியும வேற்கரமு
  மெழுதரிய திருமுகமு மருளு மேத்தும்வகை தாவேணும்;

---

* யவனாள் = யௌவனத்தை யுடையவள்.

அரிபிரம ரடிவருட வுததி கோததலற
அடல்வடவை யனலுமிழ அலகை கூட்டமிட
அணிதிணமு மலைபெருக அறையும் வாச்சியமு மகலாத-
அடல்கழுகு கொடிகெருட னிடைவி டாக்கணமு
மறுகுறளு மெறிகுருதி நதியின் மேற்பாவ
அருணரண முகவயிர வர்களு மார்ப்பரவ விடாநாளும்;
பரவுநிசி சரர்முடிகள் படியின் மேற்குவிய
பவுரிகொடு திரியவரை பலவும வோப்பறிய
பகர்வரிய ககனமுக டிடிய வேட்டைவரு மயிலவீரா-
படருநெறி சடையுடைய இறைவர் கேட்குரிய
பழயமறை தருமவென வழியை யார்க்குமொரு
பரமகுரு பரனெனவு மறிவு காட்டவல பெருமாளே.

1201.

வேலொத்து வென்றி யங்கை வேளுக்கு வெஞ்ச ரங்க
ளாமிக்க கண்க ளென்று மிருதோளை-
வேயொக்கு மென்று கொங்கை மேலவெற்பதென்று கொண்டை
மேகத்தை வென்ற தென்று மெழில்மாதர்;
கோலத்தை விஞ்ச வெஞ்சொல் கோதித்து வஞ்ச நெஞ்சர்
கூடத்தில் நின்று நின்று குறியாதே-
கோதற்ற நின்ப தங்கள் நேர்பற்றி யின்ப மன்பு
கூர்கைக்கு வந்து சிந்தை குறுகாதோ;
ஞாலத்தை யன்ற ளந்து வேலைக்கு ளுந்து யின்று
நாடத்தி முன்பு வந்த திருமாலும்-
நாடத்த டஞ்சி லம்பை மாவைப்பி ளந்த டர்ந்து
நாகத்த லங்கு லுங்க விடுமவேலா;
ஆலித்தெ ழுந்த டர்ந்த ஆலந்தை யுண்ட கண்ட
ராகத்தில் மங்கை பங்கர் நடமாடும்-
ஆதிக்கு மைந்த னென்று நீதிக்குள் நின்ற அன்பர்
ஆபத்தி லஞ்ச லென்ற பெருமாளே.

1202.

அடியார்ம னஞ்சலிக்க எவராகி லும்பழிக்க
அபராதம் வந்துகெட்ட பிணிமூடி-
அனைவோரும வந்துசிச்சி யெனநால்வ ருஞ்சிரிக்க
அனலோட மூன்றுசெத்து விடுமாபோற்;
கடையேன்ம லங்கள்முற்று மிருநோயு டன்பிடித்த
கலியோடி றந்துசுத்த வெளியாகிக்-
களிகூர என்றனுக்கு மயிலேறி வந்துமுத்தி
கதியேற அன்புவைத்து னருள்தாராய்;
சடைமீது கங்கைவைத்து விடையேறு மெந்தைசுத்த
தழல்மேனி யன்சிரித்தொர் புரமூணும்-
தவிடாக வநதெதிர்த்த மதனாக முஞ்சிதைத்த
தழல்பார்வை யன்றளித்த குருநாதா;
மிடிதீர அண்டருக்கு மயிலேறி வஞ்சர்கொட்டம்
வெளியாக வந்துநிர்த்த மருள்வோனே-
மினனூல்ம ருங்குல்பொற்பு முலைமாதி ளங்குறத்தி
மிகுமாலொ டன்புவைத்த பெருமாளே.

1203.

அடியில்வி டாப்பிணி மடையவி டாச்சிறி
தழியுமுன் வீட்டுமு னுயர்பாடை-
அழகொடு கூட்டுமி னழையுமின் வார்ப்பறை
யழுகையை மாற்றுமி னெதியாமுன்;
எடுமினி யாக்கையை யெனஇடு காட்டெரி
யிடைகொடு போய்த்தமர் சுடுநாளில்-
எயினர்கு லோத்தமை யுடன்மயில் மேற்கடி
தெனதுயிர் காத்திட வரவேணும்;
மடுவிடை போய்ப்பரு முதலையின் வாய்ப்படு
மதகரி கூப்பிட வளையூதி-
மழைமுகில் போற்கக பதிமிசை தோற்றிய
மகிபதி போற்றிடு மருகோனே;

படர்சடை யாத்திகர் பரிவுற ராட்சதர்
பரவையி லார்ப்பெழ விடுமவேலாற்-
படமுனி யாப்பணி தமனிய நாட்டவர்
பதிகுடி யேற்றிய பெருமாளே.

1204.

அப்படி யேழு மேழும்வ குத்துவ ழாது போதினி
னக்ரம்வி யோம கோளகை மிசைவாழும்-
அக்ஷர தேவி கோவின்வி திப்படி மாறி மாறிய
னேத்துரு வாய காயம தடைவேகொண்;
டிப்படி யோனி வாய்தொறு முற்பவி யாவி ழாவுல
கிற்றடு மாறி யேதிரி தருகாலம்-
எத்தனை யூழி காலமெ னத்தெரி யாது வாழியி
னிப்பிற வாது நீயருள் புரிவாயே;
கற்பக வேழ மேய்வன பச்சிள எனல் மீதுறை
கற்புடை மாது தோய்கரு மபிராம-
கற்புர தூளி லேபன மற்புய பாக சாதன
கற்பக லோக தாரண கிரிசால;
விப்ரச மூக வேதன பசசிம பூமி காவல
வெட்சியு நீப மாலையு மணிவோனே-
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூர னீறெழ
விக்ரம வேலை யேவிய பெருமாளே.

1205.

அயில்வி லோசனங் குவிய வாசகம
பதற ஆனனங் குறுவேர்வுற்-
றளக பாரமுங் குலைய மேல்விழுந்
ததர பானமுண் டியல்மாதர்;
சயில பாரகுங் குமப யோதரந்
தழுவு மாதரந் தமியேனல்-
தவிரொ ணாதுநின் கருணை கூர்தருந்
தருண பாதமுந் தரவேணும்;

கயிலை யாளியுங் குலிச பாணியுங்
கமல யோனியும் *புயகேசன்-
கணப ணுமுகங் கிழிய மோதுவெங்
கருட வாகனந் தனிலேறுமே ;
†புய‡லி லேகரும் பரவ வானிலும்
புணரி மீதிலுங் கிரிமீதும்-
பொருநி சாசரன் றனது மார்பினும்
புதைய வேல்விடும் பெருமாளே.

1206.

அருக்கி மெத்ததோள் திருத்தி யுற்றுமார்
பசைத்து வக்குமா விளோரை-
அழைத்து மிக்கசா சிழைத்து மெத்தைமீ
தணைத்து மெத்தமா லதுகூர ;
உருக்கி யுட்கொள்மா தருக்கு ளெய்த்துநா
யலற்றி யுட்குநா னுடன்மேவி-
உழைக்கு மதனைநீ யொழித்து முத்திபா
லுறக்கு ணைத்தநா ளருள்வாயே ;
கருக்க முற்றமால் தனக்கு மெட்டிடா
தொருத்தர் மிக்கமா நடமாடுஞ்-
சுகத்தி லத்தர்நா மிகுந்த பத்திகூர்
சுராக்க வித்தைதா னருள்வோனே ;
பொருக்க வெற்றிகூர் திருக்கை கொற்றவேல்
பிடித்து குற்றமா றொருசூரன்-
பெலத்தை முட்டியார் தொளைத்து நட்டுளோர்
பிழைக்க விட்டவோர் பெருமாளே.

1207.

அரும்பி னுற்றனிக் கரும்பி னுற்றெடுத்
தடர்ந்து மேற்றெறித் தமராடும்-

---

* புயகேசன் = புயககேசன் : சர்ப்ப ராஜன்.

† புயல் = மேகவண்ண ராகிய விஷ்ணு

‡ இலேகர் = தேவர்கள்.

அநங்க னூர்க்கிளைத் தயர்ந்த னுப்பியெத்
தரமபை மார்க்கடைக் கலமாகிக் ;
குரும்பை போற்பணைத் தரும்பு ருக்கொதித்
தெழுந்து கூற்றெனக் கொலைசூழுங்-
குயங்கள் வேட்டறத் தியங்கு தூர்த்தனைக்
குணங்க ளாக்கிநற் கழல்சேராய் ;
பொருநதி டார்ப்புரத் திலங்கை தீப்படக்
குரங்கி னுற்படைத தொருதேரிற்-
புகுநது தூற்றுவர்க் கொழிந்து பார்த்தனுக்
கிரங்கி யாற்புறத தலைமேவிப் ;
பெருங்கு ரோட்டைவிட் டுறங்கு காற்றெனப்
பிறங்க வேத்தியக் குறமாதூர்-
பிறங்க லார்ப்பெழச் சலங்கள் கூப்பிடப்
பிளந்த வேற்கரப் பெருமாளே.

1208.

அலமல மிப்புலாற் புலையுடல் கட்டனேற்
கறமுக நித்தர்போற் றியநாதா-
அறிவிலி யிட்டுணுப் பொறியிலி சித்தமாய்த்
தணிதரு முத்திவீட் டணுகாதே ;
பலபல புத்தியாய்க் கலவியி லெய்த்திடாப்
பரிவொடு தத்தைமார்க் கிதமாடும்-
பகடிது டுக்கன்வாய்க் கறையனெ னத்தராப்
படியில்ம னித்தர்தூற் றிடலாமோ ;
குலகிரி பொற்றலாய்க் குரைகடல் வற்றலாய்க்
கொடியஅ ரக்கரார்ப் பெழவேதக்-
குயவனை நெற்றியேற் றவனெதிர் குட்டினற்
குடுமியை நெட்டைபோக் கியவீரா;
கலைதலை கெட்டபாய்ச் சமணரை நட்டகூர்க்
கழுநிரை முட்டவற் றியதாளக்-
கவிதையும் வெற்றிவேற் கரமுடன் வற்றிடாக்
கருணையு மொப்பிலாப் பெருமாளே.

1209.

அளக பார முங்கு லைந்து அரிய பார்வை யுஞ்சி வந்து
அணுகி யாக மும்மு யங்கி யமுதூறல்-
அதர பான மும்நு கர்ந்து அறிவு சோர வும்மொ ழிந்து
அவச மாக வுமபு ணர்ந்து மடவாரைப்;
*பளக ஞவி யுந்த ளர்நது பதறு மாக மும்ப யந்து
பகலி ராவை யும்ம றந்து திரியாமற்-
பரம ஞான முந்தெ ளிந்து பரிவு நேச முங்கி ளர்ந்து
பகரு மாறு செம்ப தங்கள் தரவேணும்;
துளப மாய னுஞ்சி றந்த கமல வேத னும்பு கழ்நத
தொழுது தேட ருமப்ர சண்ட னருள்பாலா-
சுரர்கள் நாய கன்ப யந்த திருவை மாம ணம்பு ணர்ந்து
சுடரு மோக னம்மி குந்த மயில்பாகா;
களப மார்பு டன்த யங்கு குறவர் மாது டன்செ றிந்து
கலவி நாட கம்பொ ருந்தி மகிழ்வோனே-
கடிய பாத கந்த விர்ந்து கழலை நாடொ றுங்கி ளர்ந்து
கருது வார்ம னம்பு குந்த பெருமாளே.

1210.

ஆசார வீன னறிவிலி கோபாப ராதி யவகுண
ஞகாத நீச னநுசிதன் விபரீதன்-
ஆசாவி சார வெகுவித மோகாச ரித பரவச
ஞகாச நீர்ம னனல்வளி யுருமாறி;
மாசான நாலெண் வகைதனை நீநானெ ஞத அறிவுள்
வாயாத பாவி யிவனென நினையாமல்-
மாதாபி தாவி னருணல மாறும காரி லெனையினி
மாஞான போத மருள்செய நினைவாயே;
வீசால வேலை சுவறிட மாசூரர் மார்பு தொளைபட
வேதாள ராசி பசிகெட அறைகூறி-
மேகார வார மெனஅதிர் போர்யாது தான மெமபுர
மீதேற வேல்கொ டமர்செயு மிளையோனே;

* பளகன் = குற்ற முள்ளவன்.

கூசாது வேட னுமிழ்தரு நீராடி யூனு ணெனுமுரை
கூறாம னீய அவனுகர் தருசேடங்-
கோதாமெ ளுமை லமுதுசெய் வேதாக மாதி முதல்தரு
*கோலோக நாத குறமகள் பெருமாளே.

1211.

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்-
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான ;
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட-
மாக்ருதா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி
மூசுகா னத்து மீதுவாழ் முத்த
மூரல்வே டிச்சி தனபார-
மூழ்குநீ பப்ர தாபமார் பத்த
மூரிவே ழத்தின் மயில்வாழ்வே ;
விசுமீ னப்ப யோதிவாய் விட்டு
வேகவே தித்து வருமாசூர்-
வீழமோ திப்ப ராரைநா கத்து
வீரவேல் தொட்ட பெருமாளே.

1212.

ஆசைக் கொளுந்தி வெகு வாகப் பசப்பிவரு
மாடைப் பணந்தையெடெ னுறவாடி-
ஆரக கழுத்துமுலை மார்பைக் குலுக்கிவிழி
யாடக் குலந்துமயில் கிளிபோலப் ;
பேசிச் சிரித்துமயிர் கோதிக் குலைத்துமுடி-
பேதைப் படுத்திமய விடுமாதர்-
பீறற் சலத்துவழி நாறப் படுத்தியெனை
பீடைப் படுத்துமய லொழியாதோ ;

---

* கோ = கோவே.

தேசத் தடைத்துபிர காசித் தொலித்துவரி
சேடற் பிடித்துதறு மயில்வீரா-
தேடித் துதித்தஅடி யார்சித்த முற்றருளு
சீர்பொற் பதத்தஅரி மருகோனே;
நேசப் படுத்தியிமை யோரைக் கெடுத்தமுழு
நீசற் கனத்தமுற விடும்வேலா-
நேசக் குறத்திமய லோடுற் பவித்தபொனி
நீர்பொற் புவிக்குள்மகிழ் பெருமாளே.

1213.

ஆசை நேச மயக்கிகள் காசு தேடு மனத்திகள்
ஆவி சோர வுருக்கிகள் தெருமீதே-
யாவ ரோடு நகைப்பவர் வேறு கூறு விளைப்பவர்
ஆல கால விழிச்சிகள் மலைபோலு;
மாசி லாத தனத்தியர் ஆடை சோர நடப்பவர்
வாரி யோதி முடிப்பவர் ஒழியாமல்-
வாயி லூற லளிப்பவர் நாளு நாளு மினுக்கிகள்
வாசல் தேடி நடப்பது தவிர்வேனோ;
ஓசை யான திரைக்கடல் ஏழு ஞாலமு முற்றருள்
ஈச ரோடுற வுற்றவள் உமையாயி-
யோகி ஞானி பராபரி நீலி நாரணி யுத்தமி
ஓல மான மறைச்சிசொல் அபிராமி;
ஏசி லாத மலைக்கொடி தாய்ம னோமணி சற்குணி
ஈறி லாதம லைக்கொடி அருள்பாலா-
*ஏறு மேனி யொருத்தனும வேத னான சமர்த்தனும்
ஈச னோடு ப்ரியபடு பெருமாளே.

1214.

ஆல மேற்ற விழியினர் சால நீட்டி யழுதழு
தாக மாய்க்க முறைமுறை பறைமோதி-

* "ஏம மேனி யொருத்தியும் வேத நாத சமர்த்தனும்" என்னும் பாடம்.

ஆடல் பார்க்க நிலையெழு பாடை கூட்டி விரையம
யான மேற்றி யுறவின ரயலாகக் ;
கால மாச்சு வருகென ஒலை காட்டி யமபடர்
காவ லாக்கி யுயிரது கொடுபோமுன்-
காம வாழ்க்கை பொடிபட ஞானம் வாய்த்த கழலிணை
காத லார்க ருதுமுணர் தருவாயே ;
வேல கீர்த்தி விதரண சீலர் வாழ்த்து சரவண
வியாழ கோத்ர மருவிய முருகோனே-
வேடர் நாட்டில் விளைபுன வனல் காத்த சிறுமியை
வேட மாற்றி வழிபடு மிளையோனே ;
ஞால மேத்தி வழிபடு மாறு பேர்க்கு மகவென
நாணல் பூதத படுகையில் வருவோனே-
நாத போற்றி யெனமுது தாதை கேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே.

1215.

ஆலுமயில் போலுற்ற தோகையர்க ளேமெத்த
ஆரவட மேலிட்ட முலைமீதே-
ஆனதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்க
ஆமவரை யேசற்று முறையாதே ;
வேலுமழ கார்கொற்ற நீலமயில் மேலுற்று
வீறுமுன தார்பத்ம முகமாறு-
மேவியிரு பாகத்தும் வாழுமிணை மார்தக்க
மேதகவு நானித்த முறையேனோ ;
நாலுமுக வேதற்கு மாலிலையில் மாலுக்கு
நாடவரி யார்பெற்ற வொருபாலா-
நாணமுடை யாள்வெற்றி வேடர்குல மீதொக்க
நாடுகுயில் பார்மிக்க எழில்மாது ;
வேலைவிழி வேடச்சி யார்கணவ னேமத்த
வேழமுக வோனுக்கு மிளையோனே-
வீரமுட னேயுற்ற சூரனணி மார்பத்து
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

1216.

இடையித்தனை யுளதத்தைய
ரிதழ்துய்த்தவ ரநுபோகம்-
இளகிக்கரை புரளப்புள
கிதகற்புர தனபாரம் ;
உடன்மற்கடை படுதுற்குண
மறநிற்குண வுணர்வாலே-
ஒருநிஷ்கள வடிவிற்புக
வொருசற்றருள் புரிவாயே ;
திடமற்றொளிர் நளினப்ரம
சிறைபுக்கன னெனவேகுந-
*தெதிபட்சண †க்ருதபட்சண
செகபட்சண னெனவோதும் ;
விடபட்சணர் திருமைத்துனன்
வெருவச்சுரர் பகைமேல்வேல்-
விடுவிக்ரம கிரியெட்டையும்
விழவெட்டிய பெருமாளே.

1217.

இருகுழை மீது தாவடி யிடுவன வோதி நீழலி
னிடமது லாவி மீள்வன நுதல்தாவி-
இழிவன காம வேதமு மொழிவன தாரை வேலென
எறிவன காள கூடமு மமுதாகக் ;
கருகிய நீல லோசன அபிநய மாத ரார்தரு
கலவியில் மூழ்கி வாடிய தமியேனுங்-
கதிபெற ஈட ளூதன பதிபசு பாச மானவை
கசடற வேறு வேறுசெய் தருள்வாயே ;
ஒருபது பார மோலியு மிருபது வாகு மேருவு
முததியில் வீழ வானர முடனேசென்-
றொருகணை யேவு ராகவன் மருகவி பூதி பூஷணர்
உணருப தேச தேசிக வரையேனற் ;

---

* தெதி = ததி : தயிர். †கிருதம் = நெய்.

பரவிய கான வேடுவர் தருமபி ராம நாயகி
பரிபுர பாத சேகர சுரராஜன்-
பதிகுடி யேற வேல்தொடு மூருகம யூர வாகன
பரவச ஞான யோகிகள் பெருமாளே.

1218.

இருநோய்ம லத்தைசிவ வொளியால்மி ரட்டியெனை
யினிதாவ ழைத்தெனது முடிமேலே-
இணைதாள ளித்தனது மயில்மேலி ருத்தியொளி
ரியல்வேல ளித்துமகி ழிருவோரும்;
ஒருவாகெ னக்கயிலை யிறையோன ளித்தருளு
மொளிர்வேத கற்பகந விளையோனே-
ஒளிர்மாம றைத்தொகுதி சுரர்பார்து திக்கருள
உபதேசி கப்பதமு மருள்வாயே;
கருநோய றுத்தெனது மிடிதூள்ப டுத்திவிடு
கரிமாமு கக்கடவு ளடியார்கள்-
கருதாவ கைக்குவர மருள்ஞான தொப்பைமகிழ்
கருணைக டப்பமல ரணிவோனே;
திருமால ளித்தருளு மொருஞான பத்தினியை
திகழ்மார்பு றத்தழுவு மயில்வேலா-
சிலைதூளெ ழுப்பிகவ டவுணரை வெட்டிசுரர்
சிறைமீள விட்டபுகழ் பெருமாளே.

1219.

இனமறைவி தங்கள்கொஞ் சியசிறுச தங்கைகிண்
கிணியிலகு தண்டையம் புண்டரீகம்-
எனதுயன பங்கயங் குவளைகுர வம்புனைந்
திரவுபகல் சந்ததஞ் சிந்தியாதோ;
உனதருளை யன்றியிங் கொருதுணையு மின்றிநின்
றுளையுமொரு வஞ்சகன் பஞ்சபூத-
உடலதுசு மந்தலைந் துலகுதொறு மவந்துவந்
துழலுமது துன்புகண் டன்புறாதோ;

கனநிவத தந்தசங் க்ரமகவள துங்கவெங்
கடவிகட குஞ்சரந் தங்கும்யானைக்-
கடகசயி லமபெறும படியவுணர் துஞ்சமுன்
கனககிரி சம்பெழுந் தம்புராசி ;
அனலெழமு னிந்தசங் க்ரமமதலை கந்தனென
றானுமுமை யும்புகழ்ந் தன்புகூர-
அகிலபுவ னங்களுஞ் சுரரொடுதி ரண்டுநின்
றரிபிரமர் கும்பிடுந் தம்பிரானே.

1220.

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்-
ஊழ்நோ யடைந்த மாசான மண்டு
மூனோ டுழன்ற கடைநாயேன் ;
நானா ரொடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து உனையோத-
நானா ரிரங்க நானா ருணங்க
நானார் நடந்து விழநானார் ;
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளுமித்-
*தாய்போல் பரிந்த தேனோ டுகந்து
தானே தழைந்து சிவமாகித் ;
தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா-
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே.

1221.

எதிரொருவ ரிலையுலகி லெனஅலகு சிலுகுவிரு
திட்டுக்ரி யைக்கேயெ ழுந்துபாரின்-
இடையுழல்வ சுழலுவன சமயவித சகலகலை
யெட்டெட்டு மெட்டாத மந்த்ரவாளால் ;

---

* தாய் போல் பரிந்த தேன் = உமா தேவியார்.

விதிவழியி னுயிர்கவர வருகொடிய யமபடரை
வெட்டித் துணித்தாண்மை கொண்டுநீபட-
விளவினிள இலைதளவு குவளைகமழ் பவளநிற
வெட்சித் திருத்தாள்வ ணங்குவேளே ;
திதிபுதல்வ ரொடுபொருது குருதிநதி முழுகியொளிர்
செக்கச் செவத்தேறு செங்கைவேலா-
சிகரகிரி தகரவிடு முருவமர கதகலப
சித்ரக் *ககத்தேறு மெம்பிரானே ;
முதியபதி னொருவிடையர் முடுகுவன பரிககன
முட்டச் செலுத்தாறி ரண்டுதேரர்-
மொழியுமிரு அசுவினிக ளிருசதுவி தவசுவெனு
முப்பத்து முத்தேவர் தம்பிரானே.

1222.

எழுந்திடுங் கப்புச் செழுங்குரும் பைக்கொத்
திரண்டுகண் பட்டிட் டிளையோர்நெஞ்-
சிசைந்திசைந் தெட்டிக் கசிந்தசைந் திட்டிட்
டிணங்கும்பொன் செப்புத் தனமாதர் ;
அழுங்கலங் கத்துக் குழைந்துமன் பற்றுற்
றணைந்துபின் பற்றற் றகல்மாயத்-
தழுங்குநெஞ் சுற்றுப புழுங்குபுண் பட்டிட்
டலைந்தலைந் தெய்த்திட் டுழல்வேனோ ;
பழம்பெருந் தித்திப் புறுங்கரும் பப்பத்
துடன்பெருங் கைக்குட் படவாரிப்-
பரந்தெழுந் தொப்பைக் கருந்திமுன் பத்தர்க்
கிதஞ்செய்தொன் றத்திக் கிளையோனே ;
தழைந்தெழுந் தொத்துத் தடங்கைகொண் டப்பிச்
சலம்பிளந் தெற்றிப் பொருசூரத்-
தடம்பெருங் கொக்கைத் தொடர்ந்திடம் புக்குத்
தடிந்திடுஞ் சொக்கப் பெருமாளே.

---

* ககம் = பறவை (மயில்).

1223.

ஏட்டி லேவரை பாட்டி லேசில
நீட்டி லேயினி தென்றுதேடி-
ஈட்டு மாபொருள் பாத்து ணாதிக
லேற்ற மானகு லங்கள்பேசிக் ;
காட்டி லேயியல் நாட்டி லேபயில்
வீட்டி லேஉல கங்களேசக்-
காக்கை நாய்நரி பேய்க்கு ழாமுண
யாக்கை மாய்வதொ ழிந்திடாதோ ;
கோட்டு*மாயிர நாட்ட னாடுறை
கோட்டு†வாலிப மங்கைகோவே-
கோத்த வேலையி லார்தத சூர்பொரு
வேற்‡சி காவள கொங்கில்வேளே ;
பூட்டு வார்சிலை கோட்டு வேடுவர்
பூட்கை சேர்குற மங்கைபாகா-
பூத்த மாமலர் சாத்தி யேகழல்
போற்று தேவர்கள் தம்பிரானே.

1224.

கச்சுப் பூட்டு கைச்சக் கோட்ட
கத்திற் கோட்டு கிரியாலங்-
கக்கித தேக்கு செக்கர்ப போர்கக
யற்கட் கூற்றில் மயலாகி ;
அச்சக் கூச்ச மற்றுக் கேட்ட
வர்க்குத் தூர்த்த னைநாளும்-
அத்தப் பேற்றி விச்சிப பார்க்க
றப்பித் தாய்த்தி ரியலாமோ ;

---

* ஆயிர நாட்டன் = ஆயிரங் கண்ணனாகிய தேவேந்திரன்.
† வால் இப மங்கை = தெய்வயானை. ‡ சிகாவளம் = மயில்.

பச்சைக் கூத்தர் மெச்சிச் சேத்த
*பத்மக் கூட்டி லுறைவோரி-
பத்திற் சேர்ப்பல் சக்கிற் கூட்டர்
பத்தக கூட்ட ரியல்வானம ;
மெச்சிய போற்ற வெற்புத் தோற்று
வெட்கக் கோத்த கடல்மீதே-
மெத்தக் காய்த்த கொக்குக் கோட்டை
வெட்டிச சாய்த்த பெருமாளே.

1225.

கடலினும பெரியவிழி மலையினும பெரியமுலை
கவரினுந் துவர்தர மிருதோள்பைங்-
கழையினுங் குழையுமென மொழிபழங் கிளவிபல
களவுகொண் டொருவர்மிசை கவிபாடி ;
அடலசஞ் சலனதுல னநுபமன் குணதரன்மெய்
அருள்பரங் குரனபய னெனஆசித்-
தலமரும பிறவியினி யலமலம பிறவியற
அருணபங் கயசரண மருள்வாயே ;
வடநெடுங் குலரசத கிரியினின் றிருகலுழி
மகிதலம் புகவழிபு மதுபோல-
மதசலஞ் சலசலென முதுசலஞ் சலதிநதி
வழிவிடும் படிபெருகு மு†துபாகை ;
உடையசங் க்ரமகவள தவளசிந் துரதிலக
னுலகுமிந் திரனுநிலை பெறவேல்கொண்-
டுததிவெந தபயமிட மலைபொடுங் கொலையவுண
ருடனுடன் றமர்பொருத பெருமாளே.

---

* பதமக கூட்டி லுறைவோர் இபதநில சேர் பல் சககின் கூட்டர எனப் பிரிக்க, பதமக் கூட்டி லுறைவோர் = பிரமா ; இபத்தில சேர் பல் சக்கின் கூட்டர் = தேவேந்திரன் ; பல் சககின் கூட்டர் = கூட்டமாகிய பல கண்களை யுடையவா, சக்கு = கண்.

† பாகை = பாகனை.

1226.

கட்டக் கணைபறைகள் கொட்டக் குலத்திளைஞர்
கட்டிப் புறத்தி லணைமீதே-
கச்சுக் கிழித்த துணி சுற்றிக் கிடத்தியெரி
கத்திக் கொளுத்தி யனைவோரும ;
சுட்டுக் குளித்துமனை புக்கிட் டிருப்பரிது
சுத்தப் பொய்யொப்ப துயிர்வாழ்வு -
துக்கப் பிறப்பகல மிக்கச் சிவத்தகொரு
சொர்க்கப் பதத்தை யருள்வாயே ;
எட்டுக் குலச்சயில முட்டத் தொளைத்தமரர்
எய்ப்புத் தணித்த கதிர்வேலா-
எத்திக் குறத்தியிரு முத்தத் தனக்கிரியை
யெற்பொற் புயத்தி லணைவோனே ;
வட்டக் கடப்பமலர் மட்டுற்ற செச்சைமலர்
வைத்துப் பணைத்த மணிமார்பா-
வட்டத் திரைக்கடலில் மட்டித் தெதிர்த்தவரை
வெட்டித் துணித்த பெருமாளே.

1227.

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகமவேய்தோள்-
கண்டு பாவனை கொண்டு தோள்களி
லொண்டு காதலி லிருந்தோடு ;
மண்டி மார்பினில் விண்ட தாமென
வந்த கூர்முலை மடவார்தம்-
வஞ்ச மாலதில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயம தொழியாதோ ;
கொண்ட லார்குழல் கெண்டை போல்விழி
கொண்டு கோகில மொழிகூறுங்-
கொங்கை யாள்குற மங்கை வாழ்தரு
குன்றில் மால்கொடு செலும்வேலா ;

வெண்டி மாமன மண்டு சூர்கடல்
வெம்ப மேதினி தனில்மீளா-
வென்று யாவையு மன்றி வேலையும்
வென்று மேவிய பெருமாளே.

1228.

கப்பரை கைக்கொள வைப்பவர் மைப்பயில்
கட்பயி லிட்டிள வளவோரைக்-
கைக்குள்வ சப்பட பற்கறை யிட்டுமு
கத்தைத மினுக்கிவ ருமுபாயப்;
பப்பர மட்டைகள் பொட்டிடு நெற்றியர்
பற்றென வுற்றவொர் தமியேனைப்-
பத்மப தத்தினில் வைத்தருள் துய்த்திரை
பட்டதெ னக்கினி யமையாதோ;
* குப்பர வப்படு பட்சமி குத்துள
முத்தரை யர்க்கொரு மகவாகிக்-
குத்திர மற்றுரை பற்றுணர் வற்றவொர்
குற்றம றுத்திடு முதல்வோனே;
விப்ரமு னிக்குழை பெற்றகொ டிச்சிவி
சித்ரத னக்கிரி மிசைதோயும்-
விக்ரம மற்புய வெற்பினை யிட்டெழு
வெற்பைநெ ருக்கிய பெருமாளே.

1229.

கலைகோட்டு வல்லி விலைகாட்டு வில்ல
ரிவைமார்க்கு மெய்யி லவநூலின்-
கலைகாட்டு பொய்ய மலைமாக்கள் சொல்ல
கடுகாட்டி வெய்ய அதிபாதக்;
கொலைகோட்டு கள்ளி டறிவோர்க்கு முள்ள
முகையாக்கை நைய முயிர்வாழக்-
கொடிகோட்டு மல்லி குரவார்க்கொள் தொல்லை
மறைவாழ்த்து செய்ய கழல்தாராய்;

* கு பரவப் படு=பூமியி லுள்ளோரால் புகழப்படும்; கு=கூ=பூமி.

சிலைகோட்டு மள்ளர் தினைகாத்த கிள்ளை
முலைவேட்ட பிள்ளை முருகோனே-
திணிகோட்டு *வெள்ளி பவனாட்டி லுள்ள
சிறைமீட்ட †தில்ல மயில்வீரா;
அலைகோட்டு வெள்ள மலைமாக்கள் விள்ள
மலைவீழ்த்த வல்ல அயில்மோகா-
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே.

1230.

களவு கொண்டு கைக்காசி னளவ றிந்து கர்ப்பூர
களப துங்க வித்தார முலைமீதே-
கலவி யின்பம் விற்பார்க ளவய வங்க ளைப்பாடு
கவிதெ ரிநது கற்பார்கள் சிலர்தாமே ;
உளநெ கிழ்ந்த சத்தான வுரைம றந்து சத்தான
உனையு ணர்ந்து கத்தூரி மணநாறும்-
உபய பங்க யத்தாளி லபய மென்று னைப்பாடி
யுருகி நெஞ்சு சற்றேறுதி விழிவாமோ ;
அளவில் வன்க விச்சேனை பரவ வநத சுக்ரீவ
அரசு டன்க டற்றூளி யெழுவேபோய்-
அடலி லங்கை சுட்டாடி நிசிச ரன்த சக்ரீவ
மறவொ ரமபு தொட்டார்த மருகோனே ;
வளரு மந்த ரச்சோலை மிசைசெ றிந்த முற்பாலை
வனசர் கொம்பி னைதேடி யொருவேட-
வடிவு கொண்டு பிததாகி யுருகி வெநத றக்காணில்
மறவர் குன்றி னிற்போன பெருமாளே.

1231.

கள்ளமீ னச்சுறவு கொள்ளுமீ னற்பெரிய
கல்விழீ றக்கரிய மனமாகுங்-

---

* வெள் இபவன் = வெள்ளை யானையை யுடைய தேவேந்திரன்.
† தில்லம் = காடு.

*கல்விடா துற்றநிசை சொல்விசா ரத்திசைய
மெய்கள்தோ ணிப்பிறவி யலைவேலை ;
மெள்ளவ றிக்குரவு வெள்ளிலார் வெட்சிதணை
முல்லைவே ருற்பலமு ளரிநீபம்-
வில்லநீள் பொற்கனக வல்லிமே லிட்டுனது
சொல்லையோ திப்பணிவ தொருநாளே ;
துள்ளு†மா னித்தமுனி புள்ளிமான் வெற்புதவு
வள்ளிமா னுக்குமயல் மொழிவோனே-
தொல்வியா ளத்துவளர் செல்வர்யா கத்தரையன்
எல்லைகா ணற்கரியர் குருநாதா ;
தெள்ளுநா தச்சுருதி வள்ளல்மோ லிப்புடைகொள்
செல்வனே முத்தமிணர் பெருவாழ்வே-
‡ தெய்வயா னைக்கிளைய வெள்ளையா னைத்தலைவ
தெய்வயா னைக்கினிய பெருமாளே.

1232.

கன்னியர் கடுவிட மன்னிய கயலன
கண்ணிலு மிருகன தனமீதுங்-
கன்மைகள் மருவிய மன்மத னுருவிலி
மென்மைகொ ளுருவிலு மயலாகி ;
இன்னல்செய் குடிலுட னின்னமு முலகினி
லிநநிலை பெறவிரு துதியாதே-
யெண்ணுமு னடியவர் நண்ணிய பதமிசை
யென்னையும வழிபட விடவேணும் ;
பொன்னவ மணிமயில் மன்னவ புனமற
மின்முலை தழுவிய புயவீரா-
புண்ணிய முளபல விண்ணவர் தொழுமுத
லெண்மலை யொடுபொரு கதிர்வேலா ;
தன்னிறை சடையிறை யென்முனி பரவரு
இன்னிசை யுறுதமிழ் தெரிவோனே-

---

* கல் = கல்லை. † மா னித்த முனி = மால் நீத்த முனி.
‡ தெய்வ யானை = விநாயகர்.

தண்ணளி தருமொரு பன்னிரு விழியயில்
சண்முக மழகிய பெருமாளே.

1233.

இஞ்சுகமெ னச்சிவத்த தொண்டையள்மி கக்கறுதத
கெண்டையள்பு னக்கொடிச்சி யதிபாரக்-
கிமபுரிம ருப்பையொத்த குங்குமமு லைக்குறததி
கிங்கரனெ னப்படைத்த பெயர்பேசா ;

நெஞ்சுருகி நெக்குநெக்கு நின்றுதொழு நிர்க்குணத்தர்
நிருதனையில் பத்தர்வெட்சி மலர்தூவும-
நின்பதயு கப்ரசித்தி யென்பனவ குததுரைக்க
நின்பணித மிழ்த்ரயத்தை யருள்வாயே ;

கஞ்சன்வர விட்டதுட்ட குஞ்சரம ருப்பொசித்த
கங்கனும தித்திகைக்க மதம்வீசுங்-
கந்தெறிக ளிற்றுரித்து வென்றுதிரு நட்டமிட்ட
கமபனும திக்கவுக்ர வடிவேல்கொண் ;

டஞ்சியஜ கத்ரயததை யஞ்சலென விக்ரமித்து
அன்பர்புக ழப்பொருப்பொ டமராடி-
அன்றவுண ரைக்களத்தில் வென்றுததி யைக்கலக்கி
அண்டர்சிறை வெட்டிவிட்ட பெருமாளே.

1234.

குடிமைமனை யாட்டியும அடிமையொடு கூட்டமும
குலமுமிறு மாப்புமி குதியான-
கொடியபெரு வாழ்க்கையி லினியபொரு ளீட்டியெ
குருடுபடு மோட்டென வுடல்வீழில் ;

அடைவுடைவி டாச்சிறு பழையதுணி போர்த்தியெ
அரிடசுடு காட்டிடை யிடுகாயம்—
அழியுமள வாட்டிலுன் அமலமலர் மாப்பத
அருணசர ணாஸ்பதம் அருள்வாயே ;

அடியிணொடு மாத்தரு மௌளமௌளமொ ளாச்செ்ன
அலறிவிழ வேர்க்குல மொடுசாய-

அவுணர்படை தோற்பெழ அருவரைக ளார்ப்பெழ
அயிலலகு சேப்பெழ மறைநாலும் ;
உடையமுனி யாட்பட முடுகவுணர் கீழ்பட
உயரமரர் மேற்பட வடியாத-
உததிகம ராப்பிள முதுகுலிச பார்த்திபன்
உலகுகுடி யேற்றிய பெருமாளே.

1235.

குறைவ தின்றி மிக்க சலமெ லும்பு துற்ற
குடிலி லொன்றி நிற்கு முயிர்மாயம-
குலைகு லைந்து தெர்பபை யிடைநி னைந்து நிற்ப
கொடிய கொண்ட லொதத வுருவாகி ,
மறலி வந்து தட்ட வினைகள் கொண்ட லைந்து
மரண மென்ற துக்க மணுகாமுன்-
மனமி டைஞ்ச லற்று னடிநி னைந்து நிற்க
மயிலில் வந்து முத்தி தரவேணும ;
அறுகு மிந்து மதத மலைய றிந்த அபபு
மணிசி றந்த புட்ப மதுகுடி-
அருந டஞ்செ யப்ப ரருளி ரங்கு கைக்கு
அரிய இன்சொல் செப்பு முருகோனே ;
சிறுகு லந்த னக்கு ளறிவு வந்து தித்த
சிறுமி தன்த னத்தை யணைமார்பா-
திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே.

1236.

கோக னகமு கிழ்த்த போக புளகி தத்த
கோடு தலைகு லைத்த முலையாலே-
கூட வரவ ழைக்கு மாடு குழைய டர்த்த
நீடி யதுவ ளைக்கண் மடமானார் ;
ஆக முறவ ணைத்து காசை யபக ரித்து
மீள விதழ்க டிப்ப தறியாதே-

ஆசை யதுகொ ளுத்து மால மதுகு டித்த
*சேலில் பரித விப்ப தினியேனோ;
மாக நதிம திப்ர தாப மவுலி யர்க்கு
சாமி யதுவொ ரர்த்த மொழிவோனே-
வாகு வலைய சித்ர ஆறி ருபுய வெற்பில்
வாழ்வு பெறுகு றத்தி மணவாளா;
வேக வுரக ரத்ந நாக சயன சக்ர
மேவு மரக தத்தின் மருகோனே-
வீசு திரைய லைத்த வேலை சுவற வெற்றி
வேலை யுருவ விட்ட பெருமாளே.

1237.

சந்தம் புனைந்து சந்தஞ் சிறந்த
தண்கொங்கை வஞ்சி மனையாளுந-
தஞ்சம பயின்று கொஞ்சுஞ் சதங்கை
தங்கும பதங்க ளிளையோரும்;
எந்தன் தனங்க ளென்றென்று நெஞ்சி
லென்றும் புகழ்ந்து மிகவாழும-
இன்பங் கலைந்து துன்பங்கள் மங்க
இன்றுன் பதங்கள் தரவேணும்;
கொந்தின் கடம்பு செந்தண் புயங்கள்
கொண்டங் குறிஞ்சி யுறைவோனே-
கொங்கின் புனஞ்செய் மின்கண்ட கந்த
குன்றம் பிளந்த கதிர்வேலா;
ஐந்திந் த்ரியங்கள் வென்றொன்று மன்ப
ரங்கம் பொருந்து மழகோனே-
அண்டந் தலங்க ளெங்குங் கலங்க
அன்றஞ்ச லென்ற பெருமாளே.

1238.

சலமல மசுத்த மிக்க தசைகுருதி யத்தி மொய்த்த
தடியுடல் தனக்கு ளுற்று மிகுமாயம்-

* சேலில் பரிதவிப்பது=சேல்களை யொத்த விழி மிரட்டால் பரிதவிப்பது.

சகலமு மியற்றி மத்த மிகுமிரு தடக்கை யதநி
தனிலுரு மிருத்து மக்க ளொடுதாரம் ;
கலனணி துகிற்கள் *கற்பி னொடுகுல மனைத்து முற்றி
கருவழி யவத்தி லுற்று மகிழ்வாகிக்-
கலைபல படித்து நித்த மலைபடு மநர்த்த முற்ற
கடுவினை தனக்குள் நிற்ப தொழியாதோ ;
மலைமக ளிடத்து வைத்து மதிபுனல் சடைக்குள் வைத்து
மழுவனல் கரத்துள் வைத்து மருவார்கள்-
மடிவுற நினைத்து வெற்பை வரிசிலை யிடக்கை வைத்து
மறைதொழ நகைத்த அத்தர் பெருவாழ்வே ;
பலதிசை நடுக்க முற்று நிலைகெட அடற்கை யுற்ற
படையது பொருப்பில் விட்ட முருகோனே-
பழுதறு தவத்தி லுற்று வழிமொழி யுரைத்த பத்தர்
பலருய அருட்கண் வைத்த பெருமாளே.

1239.

சாங்கரி பாடியிட வோங்கிய ஞானசுக
தாண்டவ மாடியவர் வடிவான-
சாந்தம தீதமுணர் கூந்தம சாதியவர்
தாங்களு ஞானமுற வடியேனுந் ;
தூங்கிய பார்வையொடு நாங்கிய வாயுவொடு
தோன்றிய சோதியொடு சிவயோகந்-
தூண்டிய சீவனொடு வேண்டிய காலமொடு
சோம்பினில் வாழுமவகை அருளாதோ ;
வாங்கைகை யானையென வீன்குலை வாழைவளர்
வான்பொழில் சூழும்வய லயலேறி-
மாங்கனி தேனொழுக வேங்கையில் மேலரிகள்
மாந்திய வாரணிய மலைமீதிற் ;
பூங்கொடி போலுமிடை யேங்கிட வாரமணி
பூண்பன பாரியன தனபாரப்-
பூங்குற மாதினுட னுங்குற வாடியிருள்
பூம்பொழில் மேவிவளர் பெருமாளே.

---

* கற்பு=கல்வி.

1240.

சிவஞான புண்டரீக மலர்மாது டன்கலவி
சிவபோக மன்பருக அறியாமற்-
செகமீது மூன்றுமல வடிவாயி ருந்துபொது
திகழ்மாதர் பின்செருமி யழிவேனோ;
தவமாத வங்கள்பயில் அடியாரக ணங்களொடு
தயவாய்ம கிழ்ந்துதினம் விளையாடத்-
தமியேன் மலங்களிரு வினைநோயி டிந்தலற
தநிநாளும வந்தெந்தன்முன் வரவேணும்;
உவகாரி யன்பர்பணி கலியாணி பெந்தையிட
முறைநாய கங்கவுரி சிவகாமி-
ஒளிரானை யின*கரமில மகிழ்மாது ளங்கனியை
யொருநாள்ப கிர்ந்தவுமை யருள்பாலா;
அவமேபி றந்தஎனை யிறவாம லன்பர்புகு
மமுதால யமபதவி யருளவோனே-
அழகாந கமபொலியு மயிலாகு றிஞ்சிமகிழ்
அயிலாபு கழ்ந்தவர்கள் பெருமாளே.

1241.

சீறிட்டு லாவு கண்கள் மாதர்க்கு †நாள்மருண்டு
சேவித்து மாசை கொண்டு முழல்வேனைச்-
சீரிட்ட மாக நின்ற காசைக்கொ டாத பின்பு
சீறற்று வாழு மின்பம் நலியாதே;
ஆறெட்டு மாய்வி ரிந்து மாறெட்டு மாகி நின்று
மாருக்கு மேவி ளமப அறியாதே-
ஆகத்து ளேம கிழ்ந்த ஜோதிப்ர காச இன்பம்
ஆவிக்கு ளேது லங்கி அருளாதோ;
மாறிட்டு வான டுங்க மேலிட்டு மேல கண்டம்
வாய்விட்டு மாதி ரங்கள் பிளவாக-
வாள்தொட்டு நேர்ந டந்த சூர்வஜ்ர மார்பு நெஞ்சும
வான்முட்ட வீறு செம்பொன் வரையோடு;

---

* கரமில்=கரத்தில். † நாள் மருண்டு=நாள்தோறும் மருண்டு.

கூறிட்ட *வேலபங்க வீரர்க்கு வீர கந்த
கோதற்ற வேடர் தங்கள் புனபவா ழுங்-
கோலப்பெண் வாகு கண்டு மாலுற்று வேளை கொண்டு
கூடிக்கு லாவு மண்டர் பெருமாளே.

பு. 1242

†சூதினுண வாசைதனி லேசுழலு மீனெதென
தூசுவழ கானவடி வதனாலே-
‡சூத§முட னேருமென மாதர்நசை தேடுபொரு
ளாசைதமி லேசுழல வருகாலன் ;
ஆதிவிதி யோடுபிற ழாதவகை தேடியென
தாவிதனை யேகுறுகி வருபோது-
ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவு
மாதிமுரு காநினைவு தருவாயே ;
ஓதமுகி லாடுகிரி ||யேறுபட வாழசுரர்
ஓலமிட வே¶யயில்கொ டமராடி-
ஓநமசி வாயகுரு பாதமதி லேபணியும்
யோகமயி லாவமலை மகிழ்பாலா ;
நாதரகு ராமஅரி மாயன்மரு காபுவன
நாடுமடி யார்கள்மன துறைவோனே-
ஞான$சுர வானைகண வாமுருக னேயமரர்
நாடுபெற வாழவருள் பெருமாளே.

1243.

செழுந்தாது பார்மாது மருமபாதி ரூபோடு
சிறந்தியாதி ஓமாசை யொழியாத-
திறமபூத வேதாள னருமபாவ மேகோடி
செயுங்காய நோயாள னரகேழில் ;
விழுந்தாழ வேழுழ்க இடுங்காலன் ०மேயாவி
விடுங்கால மேநாயென் வினைபாவம்-

---

* வேல அபங்க எனப் பிரிக்க. † "சூதுமய லாசை"—என்றும் பாடம். ‡ சூதம்=மாந்தளிர். § உடனேரும்=உடல் நேரும். || ஏறுபட=பொடியாக. ¶ 'கதிர்கொ டமராடி'—என்றும் பாடம். $ 'குற வானை கணவா'—என்றும் பாடம். ० மேய்=மேவி.

விரைந்தேக வேவாசி தூரந்தோடி யேஞான
விளம்போசை யேபேசி வரவேணும் ;
அழுங்கோடி தேவர்க ளமர்ந்தார வானீடி
அழுன்றேகி மாசீத நெடுவேலை-
அதிர்ந்தோட வேகாலன் விழுந்தோட வேசூர
அலங்கார வேலேவு முருகோனே ;
கொழுங்காவி லேமாதர் செழுஞ்*சேலை யேகோடு
குருந்தேறு மால்மாயன் மருகோனே-
குறம்பாடு வார்சேரி புகுந்தாசை மாதோடு
குணங்கூடி யேவாழு பெருமாளே.

1244.

தத்த னமுமடிமை சுற்ற மொடுபுதல்வர்
தக்க மனையினமு மனைவாழ்வுந்-
தப்பு நிலைமையணு கைக்கு வர†விரகு
தைக்கு மயல்நினைவு குறுகாமுன் ;
பத்தி யுடனுருகி நித்த முனதடிகள்
பற்று மருள்நினைவு தருவாயே-
பத்து முடியுருளு வித்த பகழியினர்
பச்சை நிறமுகிலின் மருகோனே ;
அத்தி முகவனழு குறற ‡பெழைவயிற
னப்ப மவரைபொரி அவலதேனும்-
அப்பி யமுதுசெய §மொய்ப்ப னுதவஅட
விக்குள் மறமகளை யணைவோனே ;
முத்தி தருமுதல்வர் முக்க ணிறைவரொடு
முற்று மறைமொழியை மொழிவோனே-
முட்ட வசுரர்கிளை கெட்டு முறியமுதல்
வெட்டி யமர்பொருத பெருமாளே.

---

* சேலையே கோடு = சேலைகளைக் கொண்டு.

† விரகு உதைக்கும் மயல் நினைவு = அறிவைச் சிதைக்கும் புத்தி மாறாட்டம்.

‡ பெழை = பேழை. § மொய்ப்பன் = மொய்ம்பன்.

1245.

தலைவலைய போகமுஞ் சலனமிகு மோகமுந்
தவறுதரு காமமுங் • கனல்போலுந்-
தணிவரிய கோபமுந் துணிவரிய லோபமுஞ்
சமயவெகு ரூபமும பிறிதேதும் ;
அலமலமெ னுளமுந் தவர்களறு பூதிகொண்
டறியுமொரு காரணந் தனைநாடா-
ததிமதபு ராணமுஞ் சுருதிகளு மாகிநின்
றபரிமித மாய்விளம புவதேதான் ;
கலகஇரு பாணமுந் திலகவொரு சாபமுங்
களபமொழி யாதகொங் கையுமாகிக்-
கவருமவ தாரமுங் கொடியபரி தாபமுங்
கருதியிது வேளையென் றுகிராத ;
குலதிலக மானுடன் கலவிபுரி வாய்பொருங்
குலிசகர வாசவன் திருநாடு-
குடிபுகநி சாசரன் பொடிபட *மகீதரன்
குலையநெடு வேல்விடும பெருமாளே.

1246.

தவநெறி தவறிய குருடிகள் தலைபறி
கதறிய பரபாதத்-
தருமிகள் கருமிகள் வெகுவித சமயிக
ளவரொடு சருவாநின் ;
றவனிவ னுவனுட னவளிவ ளுவளது
இதுவுது வெனுமாறற்-
றருவுரு வொழிதரு வுருவுடை யதுபதி
தமியனு முணர்வேனோ ;
குவலய முழுவது மதிர்பட வடகுவ
டிடிபட வுரகேசன்-
கொடுமுடி பலநெரி தரநெடு முதுகுரை
கடல்புனல் வறிதாகத் ;

* மகீதரன் = ஆதிசேஷன்.

துவல்கொடு முறையிடு சுரர்பதி துயரது
கெடநிசி சரர்சேனை-
துகளெழ நடநவில் மரகத துரகதம்
வரவல பெருமாளே.

1247.

திதலையு லாத்துபொற் களபமணி டாப்புதுத்
த்ரிவிதக டாக்களிற் றுரகோடு-
சிகரம காப்ரபைக் குவடென வாய்த்துநற்
சுரர்குடி யேற்றிவிட் டிளநீரை;
மதனவி டாய்த்தனத் திளைஞரை வாட்டுசெப்
பிணைமுலை மாத்தவக் கொடிபோல்வார்-
வலையிலி ராப்பகற் பொழுதுகள் போக்குமற்
றெனையுனை வாழ்த்தவைத் தருள்வாயே;
சததள பார்த்திபற் கரிபுரு ஷோத்தமற்
கெரிகன லேற்றவற் குணராதோர்-
சகலச மார்த்தசத் தியவன (அ)க்ஷரமுக்
கியபர மார்த்தமுற் புகல்வோனே;
கதிர்மணி நீர்க்கடற் சுழிபுகு ராக்ஷதக்
கலகப ராக்ரமக் கதிர்வேலா-
கருதிய பாட்டினிற றலைதெரி மாக்ஷணக்
கவிஞரு சாத்துணைப் பெருமாளே.

1248.

திரைவஞ்ச இருவினைகள் நரையங்க மலமழிய
சிவகங்கை தனில்முழுகி விளையாடிச்-
சிவம்வந்து *குதிகொ†ளக வடிவுன்றன் வடிவமென
திகழண்டர் முநிவர்கண மயன்மாலும்;
அரன்மைந்த னெனகளிறு முகனெம்பி யெனமகிழ
அடியென்க ணளிபரவ மயிலேறி-

---

* குதிகொளக = குதிகொள அகம் எனப் பிரிக்க.

† அகம் = யான்; அக வடிவு = என்னுடைய வடிவம்.

அயில்கொண்டு திருநடன மெனதந்தை யுடன்மருவி
அருமந்த பொருளேயினி யருள்வாயே ;
பரியென்ப நரிகள்தமை நடனங்கொ டொருவழுதி
பரிதுஞ்ச வருமதுரை நடராஜன்-
பழியஞ்சி யெனதருகி லுறைபுண்ட ரிகவடிவ
பவளஞ்சொ லுமைகொழுந னருள்பாலா ;
இருள்வஞ்ச கிரியவுண ருடனெங்க ளிருவினையு
மெரியுண்டு பொடியஅயில் விடுவோனே-
எனதன்பி லுறைசயில மகிழ்வஞ்சி குறமகளொ
டெனு*பஞ்ச ணையின்மருவு பெருமாளே.

1249.

† தீயூதை தாத்ரி பானீய மேற்ற
வானீதி யாற்றி கழுமாசைச்-
சேறாறு தோற்பை யாறுக நோக்கு
மாயாமை தீர்க்க அறியாதே ;
பேய்பூத மூத்த பாரோரி காக்கை
பீறுஇ மூாதி னுடல்பேணிப்-
பேயோன டாத்து சோமாளி வாழ்க்கை
போமாறு பேர்த்து னடிதாராய் ;
வேயூரு சீர்க்கை வேல்வேடர் காட்டி
லேய்வாளை வேட்க வுருமாறி-
மீளாது வேட்கை மீதூர வாய்த்த
வேலோடு வேய்த்த இளையோனே ;
மாயூர வேற்றின் மீதே புகாப்பொன்
மாமேரு வேர்பப றியமோதி-
மாறான மாக்கள் நீறாக வோட்டி
வாளோடு காத்த பெருமாளே.

---

*“ பஞ்ச அணைமருவு ” எனவும் பாடம்.

† தீயூதை...வான் = தீ, கால், மண், நீர், வான் ஆகிய பூதம் ஐந்து.

1250.

துடித்தெதிர் வடித்தெழு குதர்க்கச மயத்தவர்
சுழற்கொரு *கொடிக்கொடி யெதிர்கூறித்-
துகைப்பன கிதத்தலை யறுப்பன யில்விட்டுடல்
துணிப்பன கணித்தலை மிசைபார ;
முடித்தலை விழுப்பன முழுக்கவு டிமைப்பட
முறைப்படு மறைதிர ளறியாத-
முதற்பொருள் புலப்பட வுணர்த்துவ னெனக்கொரு
மொழிப் பொருள் பழிப்பற அருள்வாயே ;
குடிப்பன முகப்பன நெடிப்பன நடிப்பன
கொழுத்தகு ருதிக்கட லிடையூடே-
குதிப்பன மதிப்பன குளிப்பன களிப்பன
குவட்டினை யிடிப்பன சிலபாடல் ;
படிப்பன திருப்புக ழெடுப்பன முடிப்பன
பயிற்றிய லகைக்குலம் விளையாடப்-
பகைத்தெழு மரக்கரை யிமைப்பொழு தினிற்பொடி
படப்பொரு துழக்கிய பெருமாளே.

1251.

துத்தி நச்ச ராவிளம பிச்சி நொச்சி கூவிளஞ்
சுக்கி லக்க லாமிர்தப் பிறைசூதம்-
சுத்த ரத்த பாடலம் பொற்க டுக்கை யேடலஞ்
சுத்த சொற்ப கீரதித் திரைநீலம் ;
புத்தெ ருக்கு பாழிகங் கொத்தெ டுத்த தாளிதண்
பொற்பு மத்தை வேணியர்க் கருள்கூரும்-
புத்தி சித்தி வாய்கனஞ் சுத்த சத்ய வாசகம்
புற்பு தப்பி ராணனுக் கருள்வாயே ;
பத்தி யுற்ற தோகையம பச்சை வெற்றி வாகனம்
பக்க மிட்டு லாவி†யச் சுரர்மாளப்-
பக்க விட்டு வாய்நிணங் கக்க வெட்டி வாய்தரும்
பத்ம சிட்ட னோடமுத் தெறிமீனக் ;

* கொடிக் கொடி = கோடி கோடி. † அச்சுரர் = அசுரர்.

கைத்த லைப்ர வாகையுந் தத்த ளிக்க மாமுறிந்
துட்க முத்து வாரணச் சதகோடி-
கைக்க ளிற்று வாரணம் புக்கொ ளிக்க வாரணங்
கைப்பி டித்த சேவகப் பெருமாளே.

1252.

தெரிவை மக்கள் செல்வ முரிமை மிக்க வுண்மை
தெரிவ தற்கு உள்ள முணராமுன்-
சினமி குத்த திண்ணர் தனிவ ளைத்து வெய்ய
சிலுகு தைத்து வன்மை சிதையாமுன்;
பரவை புக்கு தொய்யு மரவ ணைக்குள் வைகு
பரம னுக்கு நல்ல மருகோனே-
பழுதில் நிற்சொல் சொல்லி யெழுதி நித்த முண்மை
பகர்வ தற்கு நன்மை தருவாயே;
இருகி ரிக்க ளுள்ள வரைத டிக்கு மின்னு
மிடியு மொய்த்த தென்ன எழுகூரை-
எழுக டற்கு ளுள்ளு முழுகு வித்து விண்ணு
ளிமைய வர்க்கு வன்மை தருவோனே;
அரிவை பக்க முய்ய வுருகி வைக்கு மைய
ரறிய மிக்க வுண்மை யருள்வோனே-
அறிவி னுக்கு ளென்னை நெறியில் வைக்க வல்ல
அடிய வர்க்கு நல்ல பெருமாளே.

1253.

தென்றலு மன்றி யின்றலை பொங்கு
திண்கட லொன்று மிகமோதச்-
செந்தழ லென்று வெந்தழல் சிந்து
திங்களும் வந்து துணையேய;
அன்றிலு மன்றி துன்றுச ரங்க
ளைந்துமெ னெஞ்ச மழியாதே-
அந்தியி லென்றன் வெந்துய ரஞ்ச
அன்பொட லங்கல் தரவேணும்;

வென்றிவி ளங்கு குன்றவர் வஞ்சி
விஞ்சிய கொங்கை புணர்மார்பா-
வெண்டர ளங்கள் தண்டைச தங்கை
மின்கொடி லங்கு கழலோனே;
கொன்றைய ணிந்த சங்கர னன்று
கும்பிட வந்த குமரேசா-
குன்றிய அண்ட ரன்றய வென்று
குன்றமெ றிந்த பெருமாளே.

1254.

தோரண கனக வாசலில் முழவு
தோல்முர சதிர முதிராத-
தோகையர் கவரி வீச*வ யிரியர்
தோள்வலி புகழ மதகோப;
வாரண ரதப தாதினி துரக
†மாதிர நிறைய அரசாகி-
வாழினும் வறுமை கூரினு நினது
வார்கழ லொழிய மொழியேனே;
பூரண புவன காரண ‡சவரி
பூதர புளக தனபார-
பூஷண நிருதர் தூஷண விபுதர்
பூபதி நகரி குடியேற;
ஆரண வனச ஈரிரு குடுமி
ஆரியன் வெருவ மயிலேறு-
மாரிய பரம ஞானமு மழகு
மாண்மையு முடைய பெருமாளே.

1255.

நச்சுவாள் விழிக்கொ டெற்றியே தனத்தை
நத்துவார் சுகத்தில் நலமாக-

---

* வயிரியர்=பாணர்: புகழ்ந்து பாடுவோர். 'வயிரியா சேர்ந்து பாட' என்றார் 778-ஆம் பாடலிலும். † மாதிரம்=திசை.

‡ சவரி=குறத்தி.

நட்டமா மனத்தை யிட்டமே கொடுத்து
நத்துவாழ் கடற்கு — ளணைபோலே;
கச்சமே செலுத்தி யச்சமே படுத்து
கட்டவழ் பிறப்பு — விடவேதான்
கற்றநூ லுகக்க வெட்கமே செறித்த
கட்டனே னினைப்ப — தொருநாளே;
இச்சையே செலுத்தி யுச்சிதாள் பலிக்கு
மிட்டமா வைற்கு — மருகோனே
எற்றுவா ரிதிக்குள் முற்றிநீள் பொருப்பை
யெக்கிநோ மடித்த — இளையோனே;
மெச்சவே புடைத்த முத்தமார் தனத்தி
மிக்கவாள் படைத்த — விழியாலே
வெட்டுமா மறத்தி யொக்கவே யிருக்க
வெற்றிவே லெடுத்த — பெருமாளே.

1256.

நற்குணமு ளார்த மைப்பொல் மைக்குழலி லேசி றக்க
நற்பரிம ளாதி துற்ற — மலர்சூடி
நச்சுவிழி யால்ம யக்கி யிச்சைபல பேசி யுற்று
நற்பொருள வாமனத்தர் — வசமாகி;
வெற்பனைய மாத னத்தை பொற்புறவு ருவ ணைத்து
மெத்தமய லாகிநித்த — மெலியாதே
வெட்சிகமழ் நீப புஷ்ப வெற்றிசிறு பாத பத்ம
மெய்க்கிருபை நீய ளிப்ப — தொருநாளே;
ரத்தினப ஞாநி ருத்தன் மெய்ச்சுதனு நாடு மிக்க
லக்ஷணகு மார சுப்ர — மணியோனே
*நற்றிசையு மேறி யிட்ட பொய்ச்சமணை வேர றுத்து
நற்றிருநி றேப ரப்பி — விளையாடும்;
சற்சனகு மார வ்ருத்தி அற்புதசி வாய னுக்கொர்
சற்குருவி நோத சித்ர — மயில்வீரா

* நற் றிசையும் = நாற் றிசையும்.

சக்ரதரன் மார்ப கத்தி லுக்ரமுட னேத ரித்த
சத்தியடை யாள மிட்ட பெருமாளே.

1257.

நாகாங்க ரோமங் காட்டி வாரேந்து நாகங் காட்டி
நாமேந்து பாலங் காட்டி யபிராம-
நாணுங்க ராகங் காட்டி நாகேந்த்ர நீலங் காட்டி
நாயேன்ப்ர காசங் காட்டி மடலூர;
மேகாங்க கேசங் காட்டி வாயாம்பல் வாசங் காட்டி
மீதூர்ந்த போகங் காட்டி யுயிரீர்வார்-
மேல்வீழ்ந்து தோயுந் தூர்த்தன் மோகாந்த காரந் தீர்க்க
வேதாந்த தீபங் காட்டி யருள்வாயே;
ஏகாந்த வீரம் போற்றி நீலாங்க யானம் போற்றி
யேடார்ந்த நீபம் போற்றி முகில்தாவி-
ஏறுங்க வேழுஞ் சாயத்த நான்மூன்று தோளும் போற்றி
யார்வேண்டி னுலுங் கேட்ட பொருளீயும்;
த்யாகாங்க சீலம் போற்றி வாயோய்ந்தி டாதன் றூர்ந்து
*தேசாங்க சூரன் தோற்க மயிலேறிச்-
†சேவேந்தி தேசம் பார்க்க வேலேந்தி மீனம் பூத்த
தேவேந்த்ர லோகங் காத்த பெருமாளே.

1258.

பரிமள மலரடுத் தகில்மண முழுகிமைப்
பரவிய மருகமதக் குழல்மாதர்-
பருமணி வயிரமுத் திலகிய குழையினிற்
படைபொரு வனவிழிக் கயலாலே;
எரியுறு மெழுகெனத் தனிமன மடையநெக்
கினிமையொ டுருகவிட் டவமேயான்-
இருவினை நலியமெய்த் திறலுட னறிவுகெட்
டிடர்படு வதுகெடுத் தருள்வாயே;

---

* தேசாங்க=தசாங்க. † சேவு=சேவல்.

சொரிமத அருவியிட் டொழுகிய புகர்முகத்
தொளைபடு கரமலைக் கிளையோனே-
துடியிடை யொருகுறக் குலமயில் புளகிதத்
துணைமுலை தழுவுபொற் புயவீரா;
அரியன பலவிதத் தொடுதிமி லையுமுடுக்
கையுமொகு மொகுமெனச் சதகோடி-
அலகையு முடனடித் திடவடி யயிலெடுத்
தமர்செயு மறுமுகப் பெருமாளே.

1259.

பற்றநெட் டைப்படைத் தட்டிருட் டைத்தயிர்ப்
பதனைமுட் டிப்படுத் தயில்மாதர்-
பக்கமிட் டுப்பொருட் கொட்*குமிட் டப்பரப்
பற்றுகெட் டுப்பயிர்க் களைபோலுங்;
கற்றகட் டுக்கவிக் கொட்டமொட் டிக்கனத்
திட்டு†கதத் தத்திஊற் றகமாயுங்-
கட்டமற் றுக்கழற் பற்றிமுத் திக்கருத்
தொக‡நொக் குக்கணித் தருள்வாயே;
வற்றவட் டக்கடற் கிட்டிவட் டித்துரத்
திட்டுமட் டுப்படப் பொருமாயன்-
மற்றுமொப் புத்தரித் தெட்டெட் டப்புறத்
துற்றஅத் தர்க்கருட் பெருவாழ்வே;
செற்றமுற் றச்சினத் திட்டுநெட் டைப்பொருப்
பெட்டைமுட் டிச்செருச் செயும்வேலா-
சித்தர்சித் தத்துறப் பற்றிமெத் தப்புகழ்ச்
செப்புமுத் தித்தமிழ்ப் பெருமாளே.

1260.

பாதக மான யாக்கை வாதுசெய் பாவி கோதத
பாணமும் வாளு மேற்ற இருபார்வை-

* குமிட்ட = குமிட்டிக்க: திரட்ட. † கத தத்தி ஊற்று = கத்தி.
‡ நொக்கு கணித்து = நோக்குக் குறித்து: கடாக்ஷித்து

பாரப டீர மாப்ப யோதர மாதர் வாய்த்த
பாயலின் மீத னுபவி யிதமாடுந ;
நோதக மாய வார்த்தை போதக மாக நோக்கு
தூய்மையில் நாயி னேற்கும் வினைதீரச்-
சூழும னுதி நீத்த யாமொடு தானி லாச்சு
கோதய ஞான வார்த்தை யருள்வாயே ;
சாதன வேத நூற்பு ராதன பூண நூற்ப்ர
ஜாபதி யாண்மை தோற்க வரைசாடிச்-
சாகர சூர வேட்டை யாடிய வீர வேற்ப்ர
தாபம கீப போற்றி யெனநேமி ;
மாதவன் மாது பூத்த பாகா னேக நாட்ட
வாசவ னேதி மீட்க மறைநீப-
மாமலர் தூவி வாழ்த்த யானையை மாலே சூட்டி
வானவர் சேனை காத்த பெருமாளே.

1261.

பாரக றங்குழல் சோரநெ கிழ்ந்துப
டீரத னம்புள கிதமாகப-
பாவைய ருந்தியில் மூழ்கிநெ டும்பரி
தாபமு டன்பரி மளவாயின் ;
ஆரமு துண்டணை மீதிலி ருந்தநு
ராகம்வி ளைந்திட விளையாடி-
ஆகக கம்பட ஆரமு யங்கிய
ஆசைம றந்துனை யுணர்வேனோ ;
நாரத வன்றுச காயமொ ழிந்திட
நாயகி பைம்புன மதுதேடி-
நாணம ழிந்துரு மாறிய வஞ்சக
நாடியெ பங்கய பதநோவ ;
மாரச ரமபட மோகமு டன்குற
வாணர்கு றிஞ்சியின் மிசையேபோய்-
மாமுநி வன்புணர் மானுத வுந்தனி
மானைம ணஞ்செய்த பெருமாளே.

1262.

பிரமனும் விரகொடு பிணிவினை யிடர்கொடு
பேணிக் காங்கொண் டிருகாலும்-
பெறநிமிர் குடிலென வுறவுயிர் புகமதி
பேதித் தளந்தம் புவியூடே;
வரவிட வருமுட லெரியிடை புகுதரு
வாதைத் தரங்கம் பிறவாமுன்-
மரகத மயில்மிசை வருமுரு கனுமென
வாழ்கைக் கொரன்புந் தருவாயே;
அருவரை தொளைபட அலைகடல் சுவறிட
ஆவிப் புடன்சென் றசுரேசர்-
அனைவரு மடிவுற அமர்பொரு தழகுட
ணுண்மைத் தனங்கொண் டெழும்வேலா;
இருவினை யகலிட எழிலுமை யிடமுடை
யீசர்க் கிடுஞ்செந் தமிழ்வாயா-
இயல்பல கலைகொடு இசைமொழி பவரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

1263.

பூதக லாதிகள் கொண்டு யோகமு மாகம கிழ்ந்து
பூசைகள் யாதுநி கழ்ந்து பிழைகோடி-
போம்வழி யேதுநெ றிந்து ஆதிய நாதியி ரண்டு
பூரணி காரணி விந்து வெளியான;
நாதப ராபர மென்ற யோகியு லாசம றிந்து
ஞானசு வாசமு ணர்ந்து வொளிகாண-
நாடியொ ராயிரம வந்த தாமரை மீதில மர்ந்த
நாயகர் பாதமி ரண்டு மடைவேனோ;
மாதுசர் வேஸ்வரி வஞ்சி காளிபி டாரி*வி பஞ்சி
வாணிவ ராகிம டந்தை யபிராமி-

* விபஞ்சி=வீணை.

வாழ்சிவ காமச வுந்தரி *யாலமெ லா†முக பஞ்ச
வாலைபு ராரி‡யி டந்த குமையாயி;
வேதபு ராணம்வி ளம்பி நீலமு ராரியர் தங்கை
மேலொடு கீழுல கங்கள் தருபேதை-
வேடமெ லாமுக சங்க பாடலொ டாடல்ப யின்ற
வேணியர் நாயகி தந்த பெருமாளே.

1264.

பெருங்கா ரியம்போல் வருங்கே டுடம்பால்
ப்ரியங்கூர வந்து கருவூறிப்-
பிறந்தார் கிடந்தா ரிருந்தார் தவழ்ந்தார்
நடந்தார் தளர்ந்து பிணமானர்;
அருங்கான் மருங்கே யெடுங்கோள் சுடுங்கோள்
அலங்கார நன்றி தெனமூழ்கி-
அகன்றா சையும்போய் விழும்பா ழுடம்பால்
அலந்தேனை யஞ்ச லெனவேணும்;
இருங்கா னகம்போ யிளங்கா ளைபின்போ
கவெங்கே மடந்தை யெனவேகி-
எழுந்தே குரங்கா விலங்கா புரந்தீ
யிடுங்கா வலன்றன் மருகோனே;
பொருங்கார் முகமபா ணிகொண்டே யிறைஞ்சார்
புறஞ்சாய அம்பு தொடும்வேடர்-
புனங்கா வலங்கோ தைபங்கா வபங்கா
புகழ்ந்தோது மண்டர் பெருமாளே.

1265.

மக்கட் பிறப்புக்கு ளொக்கப் பிறப்புற்ற
மட்டுற்ற சுற்றத்தர் மனையாளும்-
மத்யத் தலத்துற்று நித்தப் பிணக்கிட்டு
வைத்தப் பொருட்பற்று மிகநாட;

* ஆல மெலாம் = ஆலம் மேலாம்; அதாவது, பிரளய கால வெள்ளத்தின் மேலாகிய. † முகபஞ்ச = பஞ்சமுக.

‡ இடந் தருமை = இடம் தரு உமை.

நிக்ரித் திடுத்துட்டன் மட்டித் துயிர்ப்பற்ற
நெட்டைக் கயிற்றிட்டு வளையாமுன்-
நெக்குக் குருப்பத்தி மிக்குக் கழற்செய்ய
நிற்றத் துவச்சொற்க ளருள்வாயே;
திக்கப் புறத்துக்குள் நிற்கப் புகழ்ப்பித்த
சித்ரத் தமிழ்க்கொற்ற முடையோனே-
சிப்பக் குடிறகட்டு மறபக் குறத்திச்சொல்
தித்திப்பை யிச்சிக்கு மணவாளா;
முக்கட் சடைச்சித்த ருட்புக் கிருக்கைக்கு
முதநித துவக்குற்ற மொழிவோனே-
முட்டச் சினத்திட்டு முற்பட் டிணர்க்கொக்கை
முட்டித் தொளைத்திட்ட பெருமாளே.

1266.

மக்கள்தா யர்க்குமரு கர்க்குமா மர்க்குமனை
விக்கும்வாழ் நர்க்குமிக மனதூடே-
மைததவே லைக்குநெடி துற்றமா யததுயரம
வைததுவா டச்சமனு முறமேவித்;
திக்குநா டிக்கரிய மெய்க்கடா விற்றிருகி
திக்கவு விக்களவு தெரியாமுன்-
சித்தமோ வித்துயிலு மற்றுவா ழச்சிறிது
சித்ரபா தக்கமல மருள்வாயே;
இக்குவே ளைக்கருக முக்கணு டிக்கனலை
யிட்டுயோ கத்தமரு மிறையோர்முன்-
எச்சரா திக்குமுற நிற்குமா யற்குமுத
லெட்டொணு வித்தைதனை யினிதீவாய்;
பக்கவூர் வத்துடனுள் நெக்குநா டிப்பரவு
பத்தர்பா டற்குருகு முருகோனே-
பக்கம்யா னைத்திருவொ டொக்கவா ழக்குறவர்
பச்சைமா னுக்கினிய பெருமாளே.

1267.

மதனிக் கதுகொடு பதுமப் புதுமலர்
மலையப் படவிடு வலியாலே-
வனமுற் றினவளை யினநித் திலமலை
வலையத் துகள்வளை கடலாலே;
விதனப் படுமதி வதனக் கொடியற
வெருவிப பரிமள அணைமீதே-
மெலியக் கலைதலை குலையத *தருமினி
விரையக் குரவலர் தரவேணும்;
புதனைச் சதுமுக விதியச் சுதனெதிர்
புனைவித் தவர்தொழு கழல்வீரா-
பொருமைச் சரிவரி பெருகச் செறிவுறு
புனமெய்க் குறமகள் மணவாளா;
முதுநற் சரவண மதனிற் சததள
முளரிப் பதிதனி லுறைவோனே-
முதுமைக் கடலட ரசுரப் படைகெட
முடுகிப் பொரவல பெருமாளே.

1268.

மதிதனை யிலாத பாவி குருநெறி யிலாத கோபி
மனநிலை நிலாத பேயன் அவமாயை-
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வருமவகை யிதேது காய மெனநாடும்;
விதியிலி பொலாத லோபி சபைதனில் வராத கோழை
வினையிகல் விடாத கூள னெனைநீயும்-
மிருபா மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமுன துரூப தான மருள்வாயே;
எதிர்வரு முதார சூர னிருபிள வதாக வேலை
யியலொடு கடாவு தீர குமரேசா-
இனியசொல் மறாத சீலர் கருவழி வாராமல் நாளும்
இளமையது தானு மாக நினைவோனே;

* தரும்=தருமா?

நதிபுட னராவு பூணு பரமர்குரு நாத ஞன
நடைபெறு கடீர மான மயில்வீரா-
நகைமுக விநோத ஞான குறமினுட னேகு லாவு
நவமணி யுலாவு மார்ப பெருமாளே.

1269

மலந்தோற் சலந்*தேற் றெலும்பாற் கலந்திட்
டிடுங்கூட் டினிற்றங் கிடு†மாய-
மயங்காத் தியங்காப் ‡பயங்கோட் டிடுங்காற்
றுடன்போக் குறத்தந் தையுமாதும் ;
குலந்§தாய்க் குடம்பாற் பிறந்தேற் றிடுங்கோத்
||தடங்கூப் பிடத்தம் புவியாவுங்-
குலைந்¶தார்ப் பெழுங்காட் டிலந்தாட் களன்பாற்
குணங்காத் துணைக்கும் பிடஆளாய் ;
தலந்தாட் டொடண்டாத் தளைந்தார்க் கிளங்காத்
தடந்தாட் புடைத்தன் பினர்வாழத்-
தருங்கூத் தரும்பார்த் துகந்தேத் திடஞ்சாத்
திரஞ்சாற் றிநிற்கும் பெருவாழ்வே ;
$அலந்தாற் றெழுங்கோச் சலந்தீக் கலந்தாட்
டரம்போச் செனக்கன் றிடும்வேலா-
அறங்காத் துறங்காத் திறம்பார்த் திருந்தோர்க்
கபர்ந்தோர்க் களிக்கும் பெருமாளே.

---

* தேறற =தெற்று. † மாயம்=மாய வாழ்க்கையில்.
‡ பயம் கோட்டிடும் காற்று=பயனாக விளக்கப்பட்ட பிராணவாயு.
§ தாய்க்கு உடம்பால் பிறந்து ஏற்றிடும் கொத்து=தாயுடன் கூடப் பிறந்தவர்களின் வர்க்கம்.
|| அடம் கூப்பிட=கொடுமையாய்ப் புலம்ப.
¶ ஆர்ப்பு எழுங்காட்டில்=அழுகையோசை எழுமுன்.
$ இங்கே அமணர்கள் ஜலத்திலும் தீயிலும் இட்ட ஏடு அபஜயப் பட்டுப் போனதைக் குறிப்பித்தது.

1270.

மனநூறு கோடி துன்ப நொடிமீதி லேநினைந்து
மதனூட லேமு யங்கி யதிரூப-
மடமாத ராசை கொண்டு புவிமீதி லேம யங்கி
மதிசீரெ லாம ழிந்து கொடிதான ;
வினைமூடி யேதி ரிந்து புவிமீதி லேயு ழன்று
விரகான்மை யேத ளர்ந்து விடுநாளில்-
விசையான தோகை துங்க மயிலேறி யோடி வந்து
வெளிஞான வீடு தந்து அருள்வாயே ;
தினைவேடர் காவல் தங்கு மலைகாடெ லாமு ழன்று
சிறுபேதை கால்ப ணிந்த குமரேசா-
திரையாழி சேது கண்டு பொருராவ ணனை வென்ற
திருமால்மு ராரி தங்கை யருள்பாலா ;
முனிவோர்கள் தேவ ரும்பர் சிறையாக வேவ ளைந்த
முதுசூரர் தானை தங்கள் கிளையோடு-
முடிகோடி தூளெ ழுந்து கழுகோடு பாற ருந்த
முனைவேலி னாலெ றிந்த பெருமாளே.

1271.

மாதர்மயல் தனிற்கலந்து காமபனி யெனப்புகுந்து
*மாடவிய லெனச்சுழன்று கருவூறி-
மாறிபல வெனச்சுமந்து தேனுருட மெனத்திரண்டு
மாதமிது வெனத்தளர்ந்து வெளியாகி ;
வேதபுவி தனிற்கழன்று ஏனமென வெனத்தவழ்ந்து
வீறுமணி களைப்புனைந்து நடைமேலாய்-
வேணவித மெனத்திரிந்து நாறுபுழு குடற்றிமிர்ந்து
வேசிவலை தனிற்கலந்து மடிவேனோ ;
ஆதிசர ணெனக்கயங்கு லாவமுத லையைக்கிடங்கி
லாரவுடல் தனைப்பிளந்த அரிநேமி-
ஆமைகய லெனச்செயங்கொள் கோலகுற ளரித்தடங்கை
யானஅர வணைச்சயந்தன் மருகோனே ;

---

* மாட இயலென = உளுந்துபோல.

சோதியுரு வெனத்திரண்டு கோலஅரு ணையிற்கலந்த
சோமனணி குடிற்சிலம்ப னருள்பாலா-
தோகைமயி லெனச்சிறந்த ரூபிகுற மகட்கிரங்கி
தோள்களிறு கிடப்பு ணர்ந்த பெருமாளே.

1272.

முத்துமணி யாரமொய்த்த நிட்டஇரு கோடுமுற்
பட்டகரி போலுமத தனமாதர்-
முற்றுமதி யார்முகத் துற்றமுனை வேலுறப
பட்டுமுகில் போல்மனத் திருள்மூடிச்;
சுத்தமதி போய்வினை துட்டனவ னுய்மனத
துக்கமுற வேமிகச் சுழலாதே-
சொற்கள்பல நாவினிற் றெட்டுனிரு தாடொழச்
சொற்கமல வாழ்வுசற் றருள்வாயே;
கொத்துமுடி யானபத் தற்றுவிழ வேகுறிப்
புற்றஅதி கோபனச் சுதன்மாயன்-
கொற்றமரு காகுறக் கொச்சைமற மாதினுக்
கிச்சைமொழி கூறுநற் குமரேசா;
பத்தியுட னேநினைத *தெத்துமடி யார்வினைப்
பற்றுவிடு மாமறைப் பொருளானாய்-
பததிவர ஞானசொற் கற்றவர்கள் பாடுநற்
பக்ஷபத தேவர்மெய்ப் பெருமாளே.

1273.

முருகம யூரச் சேவக சரவண ஏனற் பூதரி
முகுளப டீரக் கோமள முலைமீதே-
முழுகிய காதற் காமுக பதிபசு பாசத் தீர்வினை
முதியபு ராரிக் கோதிய குருவேயென்;
றுருகியு மாடிப் பாடியு மிருகழல் நாடிச சூடியு
முணர்வினொ டூடிக் கூடியும் வழிபாடுற்-
றுலகினொ ராசைப் பாடற நிலைபெறு ஞானத தாலினி
யுனதடி யாரைச் சேர்வது மொருநாளே;

---

* எத்தும் = ஏத்தும்.

மருகனெ னுமற் சூழ்கொலை கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமேல்-
வருமத யானைக் கோடவை திருகிவி ளாவிற் காய்கனி
மதுகையில் விழச் சாடிய சதமாபுட ;
பொருதிரு கோரப பாரிய மருதிடை போயப போதொரு
சகடுதை யாமற் போர்செய்து விளையாடிப்-
பொதுவியர் சேரிக் கேவளர் புயல்மரு காவஞ் ஞாயுத
புரமதில் மாபுத் தேளிர்கள் பெருமாளே.

1274.

மூலா நிலமதின் மேலே மனதுற
மோகா டவிசுடர் தனைநாடி-
மோனா நிலைதனை நாலு வகையிலு
மோதா நெறிமுறை முதல்கூறும் ;
லீலா விதமுன தாலே கதிபெற
நேமா ரகசிய வுபதேசம்-
நீடூ ழிதனிலை வாடா மணியொளி
நீதா பலமது தருவாயே ;
நாலா ருசியமு தாலே திருமறை
நாலா யதுசெப மணிமாலை-
நாடாய் தவரிடர் கேடா வரிகரி
நாரா யணர்திரு மருகோனே ;
சூலா திபர்சிவ ஞானா யமனுதை
காலார் தரவரு குருநாதா-
தோதீ திகுதிகு தீதீ செகசெக
சோதீ நடமிடு பெருமாளே.

1275.

வரிபரந் திரண்டு நயனமுஞ் சிவந்து
வதனமண் டலங்கள் குறுவேர்வாய்-
மணிசிலம் பலம்ப அளகமுங் குலைந்து
வசமழிந் திழிந்து மயல்கூர ;

இருதனங் குலுங்க இடைதுவண் டனுங்க
இனியதொண் டையுண்டு மடவார்தோள்-
இதமுடன் புணர்ந்து மதிமயங் கினும்பொ
னிலகுநின் பதங்கள் மறவேனே ;
விரிபரந் தியங்கு முததியுங் கலங்க
விடமினும் பிறந்த தெனவானோர்-
வெருவிநெஞ் சமஞ்சி யுரனொடுந நயங்கி
விரைபதம் பணிந்து முறையோவென் ;
றுரைமறந் துணங்க அயில்தொடும் ப்ரசண்ட
உயர்தலங் குலுங்க வருதோகை-
ஒருபெருஞ் சிகண்டி யயிலமர்ந் திலங்கி
உலகமுழு புரந்த பெருமாளே.

1276.

வரிவிழி பூச லாட இருகுழை யூச லாட
வளர்முலை தானு மாட வளையாட-
மணிவட மாலை யாட முருகவி ழோதி யாட
மதுரமு தூறி வீழ அநுராகம ;
இருவரு மேக போக மொருவர்த மாக மாக
இதமொடு கூடி மாயை படுபோதும்-
*இருகர மாறு மாறு மறுமுக நீப மார்பு
மிருகழல் தானு நானு மறவேனே ;
திருநட மாடு காளி பயிரவி மோடி சூலி
திரிபுர நீற தாக அனல்மோதுஞ்-
சிவைகயி லாச வாசி மலைமகள் நாரி பாரி
திருமுலை யாயி தாயி யருள்பாலா ;
குருபர நாத னாகி யரனொரு காதி லோது
குணநிதி யாசை நேச முருகோனே-
குறமுக ளார பார முகிழ்முலை மீது தாது
குலவிய மாலை மேவு பெருமாளே.

---

*“இணைகரம்” எனவும் பாடம்.

1277.

விழையுமனி தரையுமுநி வரையுமவ ருயிர்துணிய
வெட்டிப் பிளந்துளம் பிட்டுப பறிநதிடுஞ
செங்கண்வேலும்-
விரையளக முகிலுமிள நகையுமருக மதகனவி
சித்ரத தனங்களுந நிதநித்த தொண்டையும
புண்டரீகச் ;
சுழிமடுவு மிடையுமழ கியமகளிர் தருகலவி
சுட்டித திரிநதிஙன் தட்டுப் படுங்கொடும
பங்கவாழ்வுந்-
தொலைவில்பிற வியுமகல வொருமவுன பரமசுக
சுத்தப் பெரும்பதஞ சித்திக்க அன்புடன்
சிநதியாதோ ;
எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களுந
துங்கநீள் பன்-
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும
ரத்நக் குதம்பையும் பதமக் கரங்களுஞ்
செமபொனூலும ;
மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சிதரச் சிகண்டியுஞ
செங்கைவேலும-
முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ சறபுத்ர வுமபர்த
தம்பிரானே.

1278.

வீணையிசை கோட்டி யாலமிட றாட்டு
விரமுனை யீட்டி விழியார்தம்-
வேதனையில் நாட்ட மாகியிடர் பாட்டில்
வீழுமயல் தீட்டி யுழலாதே ;
ஆணியுள வீட்டை மேவியுள மாட்டை
யாவலுட னீட்டி யழியாதே-

ஆவியுறை கூட்டில் ஞானமறை யூட்டி
யானநிலை காட்டி யருள்வாயே;
கேணியுற வேட்ட ஞானநெறி வேட்டர்
கேள்சுருதி நாட்டி லுறைவோனே-
கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரியல் கேட்ட க்ருபைவேளே;
சேணினுயர் காட்டில் வாழுமற வாட்டி
சீதவிரு கோட்டி லணைவோனே-
சீறவுணர் நாட்டி லாரவழல் மூட்டி
தேவர்சிறை மீட்ட பெருமாளே.

1279.

வேலைவா ளைக்கொடிய ஆலகா லத்தைமதன்
விசுபா ணத்தைநிக ரெனலாகும்-
வேனைசா திததவிழி மாதரா பத்தில்வினை
யாடிமோ கித்திரியும வெகுரூப;
கோலகா லத்தைவிட லாகிமா றக்குணவி
காரமோ டத்தெளிய அரிதான-
கூறொணா தற்பரம ஞானரூ பத்தின்வழி
கூடலா கப்பெருமை தருவாயே;
வாலிமார் பைத்துணிய ஏழ்மரா இற்றுவிழ
வாளிபோ டக்கருது மநாரமன்-
வானுலோ கத்திலம ரேசனே விக்கவளை
யூதிமோ கிததுவிழ அருள்கூரும்;
நீலமே னிக்குமரு காவுதா ரத்துவரு
நீசர்வாழ் வைக்களையு மினையோனே-
நேசமா சுகுறவர் தோகையா னைப்புணரு
நீபதோ ளொப்பரிய பெருமாளே.

1280.

இததரணி மீதிற் பிறவாதே-
எத்தரொடு கூடிக் கலவாதே;

முத்தமிழை யோதித் தளராதே-
முத்தியடி யேனுக் கருள்வாயே;
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா-
சத்தசொரு பாபுத் தமுதோனே;
நித்தியகரு ணாநற் பெருவாழ்வே-
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே.

1281.

என்பந்தவி னைத்தொடர் போக்கிவி ளைசயமாகி-
இன்பந்தனை யுற்றும காப்ரிய மதுவாகி;
அன்புந்திய பொற்கிணி பாற்கட லமுதான-
ஆநந்தநனி லிச்சைகொ *ளாற்பத மருள்வாயே;
முன்புந்தினி னைந்துரு வாற்சிறு வடிவாகி-
முன்றிந்தியெ னாபர தாந்துட னடபாடித;
தம்பந்தம றந்தவ ரோற்பவர் குறைதீரச்-
சம்பந்தனெ னத்தமிழ் தேக்கிய பெருமாளே.

1282.

கருப்பற் றூறிப் பிறவாதே-
கனகசப பாடுற் றுழலாதே;
திருப்பொற் பாதத் தநுபூதி-
சிறக்கப் பாலித் தருள்வாயே;
பரப்பற் றாருக் குரியோனே-
பரதப பாலுக் கணியோனே;
திருக்கைச் சேவற் கொடியோனே-
செகத்திற் சோதிப் பெருமாளே.

பு. 1283.

கருப்பை யிற்சுக் கிலத்†து லேத்துற் பவித்து மறுகாதே-
கபட்ட சட்டர்க் கிதத்த சித்ரத் தமிழ்க்க ளுரையாதே;
விருப்ப முற்றுத் துதித்தெ னைப்பற் றெனக்க ருதுநீயே-
வெளிப்ப டப்பற் றிடப்ப டுத்தத் தருக்கி மகிழ்வோனே;

---

* ஆஸ்பதம என்பது ஆற்பதம் என்றாயிற்று.
† உலேத்து=அலேப்புண்டு.

பருப்ப தத்தைத் தொளைத்த சத்திப் படைச்ச மவேளே-
பணிக்கு லத்தைக் கவர்ப்ப தததுக் களித்த மயிலோனே;
செருப்பு றத்துச் சினத்தை முற்றப் பரப்பு மிசையோனே-
தினைப்பு னத்துக் குறத்தி யைக்கைப் பிடித்த பெருமாளே.

1284.

கொடியமத வேளைக் கணையாலே-
குரைகணொடு நீலக் கடலாலே;
நெடியபுகழ் சோலைக் குயிலாலே-
நிலைமைகெடு மானைத் தழுவாயே;
கடியரவு பூணர்க் கினியோனே-
கலைகள்தெரி மாமெய்ப் புலவோனே;
அடியவர்கள் நேசத் துறைவேலா-
அறுமுகவி நோதப் பெருமாளே.

1285.

கோடான மேருமலைத் தனமானார்-
கோமாள மானவலைக் குழலாதே;
நாடோறு மேன்மையடைத் திடவேதான்-
நாயேனை யாளநினைத் திடொணாதோ;
ஏடேற ஞானமுறைத் தருள்வோனே-
ஈராறு தோள்கள்படைத் திடுவோனே;
மாடேறு மீசர்தமக் கினியோனே-
மாதானை யாறுமுகப் பெருமாளே.

1286.

சமய பத்தி வ்ருதாத்தனை நினையாதே-
சரண பத்ம சிவார்ச்சனை தனைநாடி,
அமைய சற்குரு சாத்திர மொழிநூலால்-
அருளெ னக்கினி மேறறுனை தருவாயே;
உமைமு லைத்தரு பாற்கொடு அருள்கூறி-
உரிய மெய்த்தவ மாக்கிந லுபதேசத்;
தமிழ்த னைக்கரை காட்டிய திறலோனே-
சமண ரைக்கழு வேற்றிய பெருமாளே.

1287.

சீருவிய சாத்திரத் திரளான-
சடுதிக ழாஸ்பதத தமையாத;
அருமறை யாற்பெறற் கரிதாய-
அனிதய வார்த்தையைப் பெறுவேனோ;
நிருதரை மூக்கறுத் தெழுபார-
நெடுதிரை யார்ப்பெழப் பொருதோனே;
பொருளடி யாற்பெறக் கவிபாடும்-
புலவரு சாத்துணைப் பெருமாளே.

பு. 1288.

சினத்துச் சீறிய வழிகாணச்-
சிரித்துப் பேசியு மயல்பூண;
கனத்துப் போர்செயு முலைதோணக்-
கலைக்குட் பாதியு மறைவாக;
மனத்துக் காறுதல் வருமாறு-
மலைப்பப் பேணியு மிகவாய;
தனத்தைச் சூறைகொள் மடவார்தம-
சதிக்குப் போமவழி தவிர்வேனோ;
தெனத்தத் தாதென எனவேபண்-
திருத்தத் தோடளி யிசைபாடும்;
புனத்துக் காவல்கொள் குறமாதின்-
புணர்ச்சிக் கேயொரு வழிதேடி;
இனத்துக் காவல ரறியாமல்-
இணக்கித் தோகையை மகிழ்வோயென்;
றெனக்குத் தாளிணை யருள்வாய்சூர்-
இறக்கப் போர்செய்த பெருமாளே.

1289.

தீதுற் றேயெழு திங்களாலே-
தீயைத் தூவிய தென்றலாலே;
போதுற் றூடும நங்கனாலே-
போதப் பேதைந லங்கலாமோ;

வேதத் தோனைமு னிந்தகோவே-
வேடப் பாவைவி ரும்புமார்பா ;
ஓதச் சூதமெ றிந்தவேலா-
ஊமைத் தேவர்கள் தம்பிரானே.

1290.

துள்ளுமத வேள்கைக் கணையாலே-
தொல்லைநெடு நீலக் கடலாலே ;
மெள்ளவரு சோலைக் குயிலாலே-
மெய்யுருகு மானைத் தழுவாயே ;
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே-
செய்யகும ரேசத் திறலோனே ;
வள்ளல்தொழு ஞானக் கழலோனே-
வள்ளிமண வாளப் பெருமாளே.

1291.

தேனியல்சொற் கனிமாதர்-
சேவைதனைக் கருதாதே ;
யானெனதற் றிடுபோதம்-
யானறிதற் கருள்வாயே ;
வானவருக் கரசான-
வாசவனுக் கினியோனே ;
ஆனைமுகற் கிளையோனே-
ஆறுமுகப் பெருமாளே.

1292.

நாரியர்க ளாசையைக் கருதாதே-
நாளுமிரு பாதபத் மமுநாட ;
ஆரமுத மானசர்க் கரைதேனை-
ஆனஅறு பூதியைத் தருவாயே ;
காரணம தானவுத் தமசீலா-
கானகுற மாதினைப் புணர்வோனே ;
சூரர்கிளை தூளெழப் பொருதவேலா-
தோகைமயில் வாகனப் பெருமாளே.

1293.

நாளு மிகுத்த கசிவாகி-
ஞான நிருத்த மதைநாடும் ;
ஏழை தனக்கு மநுபூதி-
ராசி தழைக்க அருள்வாயே ;
பூளை யெருக்கு மதிநாக-
பூண ரளித்த சிறியோனே ;
வேளை தனசகு சிதமாக-
வேழ மழைத்த பெருமாளே.

1294

நித்தமுற் றுனைநினைந்து மிகநாடி-
நிட்டைபெற் றியல்கருத்தர் துணையாக ;
நத்தியுத் தமதவத்தி னெறியாலே-
லக்யலக் கணநிருத்த மருள்வாயே ;
வெற்றிவிக் ரமவரக்கர் கிளைமாள-
விட்டநத் துகரனுக்கு மருகோனே ;
குற்றமற் றவருளத்தி லுறைவோனே-
குக்குடக் கொடிதரித்த பெருமாளே.

1295.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே-
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே ;
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்-
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே ;
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே-
வீரங்கொள் சூரர்க்குங குலகாலா ;
*நாலந்த வேதத்தின் பொருளோனே-
நானென்று மார்தட்டும் பெருமாளே.

---

*" நாலங்க வேதத்தின் " எனவும் பாடம்.

1296.

பட்டுப் படாத மதனாலும்-
பக்கத்து மாதர் வசையாலும் ;
சுட்டுச் சுடாத நிலவாலும்-
துக்கத்தி லாழ்வ தியல்போதான் ;
தட்டுப் படாத திறல்வீரா-
தர்க்கித்த சூரர் குலகாலா ;
மட்டுப் படாத மயிலோனே-
மற்றொருப்பி லாத பெருமாளே.

1297.

பரவைக் கெத்தனை விசைதூது-
பகரற் குற்றவ னெனமாறன் ;
மரபுக் குச்சித ப்ரபுவாக-
வரமெத் தத்தர வருவாயே ;
கரடக் கற்பக னிளையோனே-
கலைவிற் கட்குற மகள்கேள்வா ;
அரனுக குற்றது டகல்வோனே-
அயனைக் குட்டிய பெருமாளே.

1298.

பிறவியலை யாற்றினிற் புகுதாதே-
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே ;
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே-
உனதுபத காட்சியைத் தருவாயே ;
அறுசமய சாத்திரப் பொருளோனே-
அறிவுளறி வார்க்குணக் கடலோனே ;
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே-
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

1299.

புத்தகத் தேட்டிற் றீட்டி முடியாது-
பொற்புறக் கூட்டிக் காட்டி யருள்ஞான ;

வித்தகப் பேற்றைத் தேற்றி யருளாலே-
மெத்தெனக் கூட்டிக் காக்க நினைவாயே ;
தத்தைபுக் கோட்டிக் காட்டி லுறைவாளைச்-
*சற்கரித் தேத்திக் கீர்த்தி பெறுவோனே ;
†கைத்தலத் தீக்குப் பார்த்து நுழையாத-
கற்பகத் தோப்புக் காத்த பெருமாளே.

1300.

பொன்னை விரும்பிய பொதுமாதர்-
புன்மை விரும்பியெ தடுமாறும் :
என்னை விரும்பி‡நி யொருகால்§நின்-
எண்ணி விரும்பவு மருள்வாயே ;
மின்னை விரும்பிய சடையாளர்-
மெய்யின் விரும்பிய குருநாதா ;
அன்னை விரும்பிய குறமானை-
அண்மி விரும்பிய பெருமாளே.

1301.

மனைமக்கள் சுற்ற மெனுமாயா-
வலையைக்க டக்க அறியாதே ;
வினையிற்செ ருக்கி யடிநாயேன்-
விழலுக்கி றைத்து விடலாமோ ;
சுனையைக்க லக்கி விளையாடு-
சொருபக்கு றத்தி மணவாளா ;
தினைநற்ச ரித்ர முளதேவர்-
சிறைவெட்டி விட்ட பெருமாளே.

1302.

வாரிமீ தேயெழு திங்களாலே-
மாரவே ளேவிய அம்பினாலே ;

---

* சற்கரித்து = உபசரித்து.

† கைத்தலத்து ஈ குப்பு = தும்பிவண்டுக் கூட்டம்; குப்பு = கும்பு.

‡ நி = நீ. § நின் எண்ணி = நின்னை யெண்ணி.

பாவொலா மேசிய பண்பினேலே-
பாவியே னுவிம யங்கலாமோ ;
சூரனீள் மார்புதொ ளேந்தவேலா-
சோதியே தோகைய மர்ந்தகோவே ;
மூரிமால் யானைம ணந்தமார்பா-
மூவர்தே வாதிகள் தம்பிரானே.

1303.

வானப் புக்குப் பற்றும ருத்துக் கனல்மேவு-
மாயத் தெற்றிப் பொய்க்குடி லொக்கப் பிறவாதே ;
ஞானச் சித்திச் சித்திர நித்தத் தமிழாலுன்-
நாமத் தைக்கற் றுப்புகழ் கைக்குப் புரிவாயே ;
கானக் கொச்சைச் சொற்குற விக்குக் கடவோனே-
காதிக் கொற்றப் பொற்குல வெற்பைப் பொரும்வேலா ;
தேனைத் தத்தச் சுற்றிய செச்சைத் தொடையோனே-
தேவச் சொர்க்கச் சக்கிர வர்த்திப் பெருமானே.

பு. 1304.

க்ஷேத்திரக் கோவை.

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி-
கொந்து லாவிய ராமே சுரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத *தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே ;
செம்பு கேசர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்-
செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே :

---

* தந்திரர் = மறையவர்.

கம்பை மாவடி மீதேய சுந்தர
* கமபு லாவிய † காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ ‡ தந்திர வயலூரா-
கந்த மேவிய போரூர் நடமபுரி
தென்சி வாயமு மேயா § யகமபடு
கண்டி யூர்வரு சாமீக டமபணி மணிமார்பா ;
எம்பி ராெனாடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு துதியோதும்-
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தோறு பெருமாளே.

வேலு மயிலுந் துணை.

---

* கம்பு = சங்கு. † காவேரி சங்க முகம் = காவிரிப்பூம்பட்டினம். ‡ தந்திர = சேனையை உடையவனே. § அகம்படு = பாவத்தைத் தொலைக்கும்.

வேலுமயிலுந் துணை.

பாட்டு முதற்குறிப் பகராதி.

[திருப்புகழ்.]

உடுக்குறி [*] யுற்றன புதிய பாடல்கள்.

முதற்குறிப்பு	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்	பக்க எண்.
அகரமுத	1127	௮௭௭	ஆசைநேச	1213	௯௪௨
அகலநீளம்	1046	௮௩௧	ஆராத காத	1129	௮௭௯
அகிலநறுஞ்	1089	௮௫௪	ஆராதனை	1130	௮௮0
அங்கதன்	1103	௮௬௨	ஆல மேற்ற	1214	௯௪௨
அடியாரமனஞ்	1202	௯௩௬	ஆலா லத்தை	1131	௮௮0
அடியில்விடாப்	1203	௯௩௬	ஆலுமயில்	1215	௯௪௩
அடைபடாது	1047	௮௩௩	ஆவி காப்பது	998	௭௯௭
அதலசேட	1056	௮௩௬	ஆறுத ஞான	1132	௮௮௧
அப்படியேழு	1204	௯௩௭			
அமலவாயு	1048	௮௩௨	இசைந்த ஏறுங்	1077	௮௪௮
அயிலின்வாளி	1049	௮௩௨	இடமருவுஞ்	1133	௮௮௨
அயில்விலோச	1205	௯௩௭	இடர்மொயத்துத்	1134	௮௮௨
அரிசன பரிச	1013	௮0௧	இடையித்தனை	1216	௯௪௪
அரிய வஞ்சக	1128	௮௭௮	இத்தரணி	1280	௯௮௧
அருக்கி மெத்த	1206	௯௩௮	இமகிரி மத்திற்	1015	௮௧0
அரும்பிறைற்	1207	௯௩௮	இரத மான	1050	௮௩௩
அலமல 'மிப்புலாற்	1208	௯௩௯	இரவினிடை	1135	௮௮௩
அளகநிரை	1094	௮௫௭	இரவொடும்பக	1136	௮௮௪
அளக பார	1209	௯௪0	இருகுழைமீது	1217	௯௪௪
அனகனென	1095	௮௫௮	*இருகுழை மீதோடி	1137	௮௮௫
ஆசார வீன	1210	௯௪0	இருட் குழலைக்	1023	௮௧௭
ஆசைகூர்பத்த	1211	௯௪௧	இருநோய மலத்	1218	௯௪௫
ஆசைக்கொளுத்தி	1212	௯௪௧	இருந்த வீடுங்	1075	௮௪௮

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
*இருமுலை மலை	1138	௮௮௫	ஒக்க வண்டெழு	1148	௮௯௪
இருவினைக	1092	௮௫௬	ஒழுகூ னிரத்த	1071	௮௪௫
இலகிய வேலோ	1139	௮௮௬			
இலகி யிருகுழை	1004	௮௦௧	ஓதுவித்தவர்	1149	௮௯௪
இலகு வேலெனு	1011	௮௦௭	ஓலை தரித்த	1150	௮௯௫
இனமறை விதங்	1219	௯௪௫			
			கச்சுப் பூட்டு	1224	௯௪௮
உமையெனு	1140	௮௮௭	கடலினும் பெரிய	1225	௯௪௯
உம்பரா	1105	௮௬௪	கடலைபயறொடு	1005	௮௦௨
உரைதரு பரசம	1014	௮௧௦	கடைசிவந்தகன்ற	1151	௮௯௬
உரைத்த பற்றட	1141	௮௮௮	கட்டக கணப்	1226	௯௫௦
உலகத்தினில்	1142	௮௮௮	கட்டமுறு	1112	௮௬௮
உறவின் முறை கதறியழ	1143	௮௮௯	கண்டுபோல்	1227	௯௫௦
			கதறிய கலை	1152	௮௯௭
உறவின் முறை யோர்க்கு	1093	௮௫௭	கப்பரைகைக்	1228	௯௫௧
			கமல குமிளித	1006	௮௦௩
உறவு சிங்கிகள்	1144	௮௯௦	கரவுசேர்	1110	௮௬௬
உற்பாதப்பூ	1119	௮௭௨	கருதியே	1087	௮௫௩
			கருப்பற்றூறிப்	1282	௯௮௨
ஊனுந் தசை	1038	௮௨௬	* கருப்பையிற்சுக்	1283	௯௮௨
ஊனே தானு	1041	௮௨௮	கருமயலேறிப்	1085	௮௫௨
ஊனே றெலும்பு	1220	௯௪௬	கருவாய் வயிற்றி	1072	௮௪௬
ஊனோடு	1145	௮௯௧	கலகமதன்	1090	௮௫௫
			கலந்தமாதுங்	1076	௮௪௮
எட்டுட	1146	௮௯௨	கலவியினல	1153	௮௯௮
எதிரொருவ	1221	௯௪௬	கலைகோட்டு	1229	௯௫௧
எத்தி யிருகுழை	1147	௮௯௩	கவடு கோத்தெழு	1062	௮௪௦
எழுந்திடுங் கப்புச்	1222	௯௪௭	களவு கொண்டு	1230	௯௫௨
எழு பிறவி	1100	௮௬௧	கள்ளமீனச்	1231	௯௫௨
எற்று வற்று	1120	௮௭௩	கறுத்துநீவிடு	1154	௮௯௯
என்பந்த	1281	௯௮௨	கற்பார் மெய்ப்	1021	௮௧௫
			கன்னியர்	1232	௯௫௩
ஏக மாய்ப்பல	999	௭௯௭			
ஏடுமல	1027	௮௨௦	காதல்மோ	1107	௮௬௫
ஏட்டிலே வரை	1223	௯௪௮	காதிமோதி	1031	௮௨௩

முதற்குறிப்பு.	பாட்டின் எண்	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்	பக்க எண்.
காதிலோலே	1034	௮௨௪	சரியுமவல	1058	௮௩௮
காருலாவு	1035	௮௨௪	சருவிய சாந்திரத்	1287	௯௮௪
			சலமல மசுத்த	1238	௯௫௬
கிஞ்சுகமெனச்	1233	௯௫௪			
			சாங்கரிபாடி	1239	௯௫௭
குவகயில்நவ	1019	௮௧௩	சாவாமூவா	1042	௮௨௮
குடமென	1083	௮௫௧			
குடருநீர்க்கொழு	1060	௮௩௯	சிவஞான	1240	௯௫௮
குடருமல	1096	௮௫௮	சிற்றுயக்	1022	௮௧௬
குடலிடை	1086	௮௫௩	„ சினத்துச	1288	௯௮௪
குடிமைமனே	1234	௯௫௪			
குதறுமுனே	1097	௮௫௯	சீதமலம்	1028	௮௨௧
*கும்பகோண	1304	௯௮௯	சீறிட்டு	1241	௯௫௮
குருதிசலந	1091	௮௫௬			
குருதி தோலி	1051	௮௩௪	சுடரொளி	1082	௮௫௧
குருதிமூளே	1057	௮௩௭	சுட்டதுபோ	1115	௮௬௯
குருதியொழுகி	1067	௮௪௩	சுருதியூடு	1052	௮௩௪
குறிப்பரிய	1155	௯௦௦	சுருதி வெகுமுக	1159	௯௦௩
குறைவதின்றி	1235	௯௫௫	சுற்றத்தவர்களு	1160	௯௦௪
குணகியொரு	1156	௯௦௧			
கூறுமார	1032	௮௨௩	* சூதிஞுண	1242	௯௫௯
கொடியமத	1284	௯௮௩	செங்கனற்புகை	1161	௯௦௫
கொடியன	1081	௮௫௦	* செட்டாகத்தே	1121	௮௭௩
கொலேயிலே	1088	௮௫௪	செழுந்தாது	1243	௯௫௯
கொலேவிழி	1157	௯௦௨			
கோகனகமு	1236	௯௫௫	சேலேயடர்த்	1162	௯௦௫
கோடான்	1285	௯௮௩			
கோலகாலத்தை	1108	௮௬௫	சொக்குப்பொட்	1163	௯௦௬
சந்தம்புனேந்து	1237	௯௫௬	ஞாலமோ	1109	௮௬௬
சந்தனங் கலந்த	1158	௯௦௨			
சமய பத்தி	1286	௯௮௩	திசையுமுதிரமு	1007	௮௦௪

முதற்குறிப்பு.	பாட்டின் எண்	பக்க எண்.
தத்தனமு	1244	௯௬௦
தததுவத்	1117	௮௭௧
தந்தமுந	1104	௮௬௬
தரணிபிலை	1164	௯௦௭
தலைவலய	1245	௯௬௧
தவநெறி	1246	௯௬௧
தனஞ்சறறுக்	1165	௯௦௮
திதலையுலாதது	1247	௯௬௨
திரிபுர மதனை	1078	௮௪௯
திரைவஞ்ச	1248	௯௬௨
தீதுற்றே	1289	௯௮௪
தீயும் பவனமு	1039	௮௨௬
தீயூதை	1249	௯௬௩
துடித்தெதிர்	1250	௯௬௪
துதிநச்ச	1251	௯௬௪
துயா மறுகின்	1068	௮௪௯
துள்ளுமத	1290	௯௮௫
தெரிவை மககள்	1252	௯௬௫
தென்றலு மனறி	1253	௯௬௫
தேனியல் சொற்	1291	௯௮௫
தொட அடாது	1053	௮௩௫
தோடுபொரு	1029	௮௨௨
*தோடு மென்	1000	௭௯௮
தோடுற்ற	1036	௮௨௫
தோதகமிகுத்த	1030	௮௨௨
தோலத்தி	1037	௮௨௫
தோரண	1254	௯௬௬
நச்சுவாள்	1255	௯௬௬
நடையுடையி	1101	௮௬௧
நரையொடு	1166	௯௦௮
நற்குணமுளார்	1256	௯௬௭
நாகாஙக	1257	௯௬௮
நாராமேலேதால	1043	௮௨௯
நாரியர்க	1292	௯௮௫
நாவிரண்டித	1001	௭௯௯
நாளு மிகுதத	1293	௯௮௬
நிததமுற்	1294	௯௮௬
நிமிர்ந்த மூதுகுக	1167	௯௦௯
நிருதரார்க்கொரு	1168	௯௧௦
நிலவில மார	1054	௮௩௫
நீருநில	1114	௮௬௯
நீருமென்பு	1169	௯௧௦
நீலங்கொள்	1295	௯௮௬
நெடிய வடகுவ	1008	௮௦௫
பகல்மட்கச்	1170	௯௧௧
பகிர நினைவொரு	1009	௮௦௫
பக்கமுற	1113	௮௬௮
படிதனி	1017	௮௧௨
பட்டாடைகசே	1122	௮௭௪
பட்டுப் படாத	1296	௯௮௭
பணிகள் பணமு	1069	௮௪௪
பத்தித்தா	1171	௯௧௨
பத்தே ழெட்டீ	1123	௮௭௪
பாதவித	1172	௯௧௪
பரவைக் கெத்	1297	௯௮௭
பரிமள மலரடுத்	1258	௯௬௮
பருதியாய்ப்பனி	1063	௮௪௧
பழுதறவோதிக்	1173	௯௧௪
பற்றநெட்	1259	௯௬௯

முதற்குறிப்பு.	பாட்டின் எண்	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
பாணிக்குட்	1174	௧௧௫	மகளு மனைவி	1059	௮௯௮
பாதகமான	1260	௧௬௧	மக்கட் பிறப்புக்கு	1265	௧௭௨
பார நறுங்குழல்	1261	௧௭௦	மக்களொக்	1118	௮௭௧
பால்மொழி	1175	௧௧௬	மக்கள் தாயர்க்கு	1266	௧௭௯
			மங்காதிங	1183	௧௨௧
பிரமனும்	1262	௧௭௧	மடலவிழ்ச	1102	௮௬௨
பிறவியலே	1298	௧௮௭	மடவிய	1084	௮௫௨
			மதனதனுங்க	1184	௧௨௨
			மதனிக்	1267	௧௭௪
புகரில் சேவல	1176	௧௧௬	மதனேவிய	1185	௧௨௯
புதகத்	1299	௧௮௭	மதிதனே	1268	௧௭௪
புரக்க வந்தநங்	1073	௮௪௬	மலங்தோற்	1269	௧௭௫
புருவத்தை	1177	௧௧௭	மழையளக	1020	௮௧௪
புழுக்கில்களப	1079	௮௪௧	மறலிபோற்சில	1066	௮௪௨
புலிக்குன்	1178	௧௧௮	மனகபாட	1055	௮௯௬
			மனநூறு	1270	௧௭௬
பூசல்தருங்கய	1179	௧௧௮	மனைமக்கள்	1301	௧௮௮
பூசலவந்திரு	1180	௧௧௯			
பூத கலாதிகள்	1263	௧௭௧	மாடமதிட்	1186	௧௨௪
			மாண்டாரெலும	1187	௧௨௫
பெருகக்நெஞ்	1074	௮௪௭	மாதர்மயல்	1271	௧௭௬
பெருங்காரியம	1264	௧௭௨	மாதாவோடே	1044	௮௨௧
			மாறுபொரு	1188	௧௨௫
பேரவாவ	1033	௮௨௯	மின்னினில்	1189	௧௨௬
பொங்குங்கொடி	1181	௧௨௦	முகமுமினுக்கிப்	1016	௮௧௧
பொதுப்தாய்த	1061	௮௯௧	முதலியாக்கைய	1064	௮௪௧
பொருத கயல்	1182	௧௨௧	முத்தமுலாவு	1190	௧௨௭
பொர்கோவை	1124	௮௭௫	முத்துமணிபணிக	1025	௮௧௧
பொற்பூவைச்சி	1125	௮௭௬	முத்துமணியார	1272	௧௭௭
பொன்னே விரும்	1300	௧௮௮	முருகமயூரச்	1273	௧௭௭
			முருகுசெறிகுழ	1010	௮௦௬
போத நிர்க்குண	996	௭௧௫	முருகுலாவிய குழலினு	1012	௮௦௮
போதிலிருந்து	1002	௮௦௦			

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
*முருகுலாவிய மைப்பாவு	1191	௯௨௭
முலைமேலிற்	1192	௯௨௮
முழுமதியனைய	1080	௮௫0
முனையழிந்தது	1193	௯௨௧
மூலாநில	1274	௯௭௮
மெய்க்கூனைத்	1126	௮௭௬
மைக்குக்கைப்	1194	௯௩0
மைச்சுனமார்	1116	௮௭0
மைந்தரினிய	1070	௮௪௫
மோதுமறலி	1195	௯௩0
வடிகட்டிய	1196	௯௩௧
வடிவவேல்	1111	௮௬௭
வட்டமுலைக்கச்	1197	௯௩௨
வண்டுதான்	1106	௮௬௪
வதைபழக	1098	௮௬0
வரிபரந்திரண்டு	1275	௯௭௮
வரிவிழிபூச	1276	௯௭௧
வருகவீட்டெனும்	1065	௮௪௨
வளைகரமாட்டி	1198	௯௩௩
வாடையில்	1199	௯௩௩
வாதந் தலைவலி	1040	௮௨௭
வாராய் பேதாய்	1045	௮௩0
வாரிமீதே	1302	௯௮௮
வானப்புக்குப்	1303	௯௮௧
விடமளவி	1099	௮௬0
விடமென	1018	௮௫௧
விட்டபுழுகுபனி	1026	௮௨0
விரைசொரிய	1200	௯௩௪
விழையுமனி	1277	௯௮0
வினைத்திரளுக்	1024	௮௧௮
வீணையிசை	1278	௯௮0
வேடர் செழுந்	1003	௮00
*வேதவித்தகா	997	௭௯௬
வேலைவாளைக்	1279	௯௮௧
வேலொத்து	1201	௯௩௫

உ

வேலு மயிலுந் துணை

அருணகிரிநாதசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

திருவகுப்பு

---

1. சீர்பாத வகுப்பு*

† உததியிடை கடவுமர கதவருண குலதுரக
    வுபலளித கனகரத   சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
    யுகமுடிவி னிருளகல   வொருசோதி வீசுவதும்
உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
    மொருவிவரு மநுபவன   சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
    யுணர்வுவிழி கொடுநியதி   தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
    முழலுவன ‡ பரசமய   கலையார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
    வுளபடியை யுணருமவ   ரநுபூதி யானதுவும்
உறவுமுறை மனைவிமக வெனுமலையில் வினைதிரைய
    வுருவுடைய மலினபவ   §ஜலராசி யேறவிடும்

---

* சீர்பாத வகுப்புமுதற் பதினெட்டே அருணகிரிநாத சுவாமிகளாற் பாடப்பட்டன என்பது ஸ்ரீ - ஆறுமுக நாவலர் கொள்கை.

† "உலக முவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு"—திருமுருகாற்றுப்படை.

‡ "ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன்" [தேவாரம்-அப்பர்-இன்னம்பர்.]

§ "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்", "மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி"—திருவாசகம்.

உருபுணையு மறிமுகமு * முயரமரர் மணிமுடியி
லுறைவதுவு முலைவிலது மடியேன் மனோரதமும் ;

இதழிவெகு முகககன நதியறுகு தறுகணர
இமகிரண தருணவுடு பதிசேர்ஜ டாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
இமையமயி றழுவுமொரு திருமார்பி லாடுவதும்
இமையவர்க ணகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத வுரகர்பதி †யபிஷேக மாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
இளையதளர் நடைபழகி விளையாடல் கூருவதும்
இனியகனி கடலைபய §றொடியல்பொரி யமுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
எழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்
‡எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபக லிரைதேர்க டாடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய
வினிதுபயில் சிறுமிவளர் புனமீ துலாவுவதும்;

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்

* "இமையோர் முடிமேல ** ஆணிக் கனகமு மொக்கும் ஐயாற னடித்தலமே (தேவாரம்-அப்பர்-திருவையாறு).

† அபிஷேகம் = முடி. "அபிஷேக பார—முகமலர்"— திருப்புகழ்-350. § ஒடியல்=பனங் கிழங்குப் பிளவு.

‡ "வலிய சிங்கமுங் கரடியு முழுவையும்
உறை செழும் புனந் தினைவிளை யிதண்மிசை
மறவர் தங்கள் பெண் கொடிதனை யொருதிரு
வுளநாடி.. அணைவோனே" திருப்புகழ்—552.

"வெங்காடும், புனமுங் கமழுங் கழலே"—கந்தரநுபூதி [௪௪]

மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுநீல நீவாமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத
முநிவர்கரு தரியதவ முயல்வார் தபோபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு
முககுமர சரணமென வருள்பாடி யாடிமிக
மொழிகுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென வறைகூவி யாளுவதும்
முடிய*வழி வழியடிமை யெனுமுரிமை †யடிமைமுழு
துலகறிய மழலைமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வனநிபுண மதுபமுக ரிதமவுன
முகுளபரி மளநிகில கவிமாலை சூடுவதும்;
மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொரு விசையாதி மூலமென
வருகருணை வரதனிக விரணியனை நுதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை
வலியசிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய
வளருமுகி னிருதனிரு பதுவாகு பூதரமும்
மகுடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின்
மருகனிசி சார்தளமும் வருதார காசுரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல ‡னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
வசனிபயி ரவிகவுரி யுமையாள்த்ரி சூலதரி
வநசைமது பதியமலை விசயைதிரி புரைபுநிதை
வநிதையபி நவையநகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனறு பவனபய னுபயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மணநாறு சீறடியே.

---

* "என்றனை வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள் பெருமானே"—திருப்புகழ் 358.

† "மயிலினில் வந்தெனை யாட்கொளல், ஜகமறியும்படி காட்டிய குருநாதா" . .. திருப்புகழ் 331.

‡ நீலகிரி=நீலோற்பல கிரி : திருத்தணி.

2. தேவேந்திர சங்கவகுப்பு.

[முருகன் திருநாமத்தை மொழிபவர் இவரென ஆராய்ந் தறிந்து அவர் தமைத் தேவேந்திர சங்கமும் வணங்கும் என்பது இதன் கருத்து.]

தாரணியி லாரணிய முரணிர ணியனுடல்
தனைநக நுதிகொடு
சாடோங்குநெ டுங்கிரி யோடேந்துப யங்கரி
தமருக பரிபுர வொலிகொடு நடநவில்
சரணிய சதுர்மறை
தாதாம்புய மந்திர வேதாந்தப ரம்பரை
சரிவளை விரிசடை யெரிபுரை வடிவினள்
சததள முகுளித
தாமாங்குச மென்றிரு தாளாந்தர அம்பிகை
தருபதி சுரரொடு சருவிய வசுரர்கள்
தடமணி முடிபொடி
தாளும்படி செங்கையில் வாள்வாங்கிய சங்கரி;
இரணகி ரணமட மயின்ம்ருக மதபுள
கிதவிள முலையிள
நீர்தாங்கிநு டங்கிய நூல்போன்றம ருங்கினள்
இறுகிய சிறுபிறை யெயிறுடை யமபட
ரெனதுயிர் கொளவரின்
யானேங்குதல் கண்டெதிர் தானேன்றுகொ ளுங்குயில்
இடுபலி கொடுதிரி யிரவல ரிடர்கெட
விடுமன காதல
ஏகாம்பரை யிந்திரை மோகாங்கசு மங்கலை
எழுதிய படமென விருளறு சுடரடி
யிணைதொழு மவுனிக
ளேகாந்தசு கந்தரு பாசாங்குச சுந்தரி;
காரணமு மரணமு மலமொடு முடல்படு
கடுவினை கெடநினை
காலாந்தரி கந்தரி நீலாஞ்சனி நஞ்சுமிழ்

3. வேல் வகுப்பு.

கனலெரி கணபண குணமணி யணிபணி
கனவளை மரகத
காசாம்பர கஞ்சுளி தூசாமபடி கொண்டவள்
கனைகழ லிணையல ருயிரவி பயிரவி
கவுரிக மலைகுழை
காதார்ந்தசெ ழுங்கழு நீர்தோய்ந்தபெ ருந்திரு
கரைபொழி திருமுக கருணையி லுலகெழு
கடனிலை பெறவளர்
காவேந்திய பைங்கிளி மாசாம்பவி தந்தவன் ;

அரணொடு வடவரை யடியொடு பொடிபட
அலைகடல் கெடவயில்
வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன்கும ரன்குகன்
அறுமுக னொருபதொ டிருபுய னபிநவ
னழகிய குறமகள்
தார்வேய்ந்தபு யன்பகை யாமாந்தர்க ளந்தகன்
அடன்மிகு கடதட விகடித மதகளி
றனவர தமுமக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி யெனவரு பொருதிறன் முருகனை
யருள்பட மொழிபவ
ராராய்ந்துவ ணங்குவர் தேவேந்திர சங்கமே.

---

3. வேல்வகுப்பு.

பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும
பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும்

பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு
*கவிப்புலவ னிசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும்

பசித்தலகை முசித்தழுது முறைப்படுத
லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவரு ளேரும் ;

சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்குமவி
தனக்குமரி தனக்குநரர் தமக்குமுறு
மிடுக்கண்வினை சாடும்

சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி
யொளிப்பஅலை யடக்குதழ லொளிப்பவொளி
ரொளிப்பிரபை வீசும்

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு
மெனக்கொர்துணை யாகும்

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுறுக்கியெழு
மறத்தைநிலை காணும் ;

தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தவிறை
கழற்குநிக ராகும்†

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும்

---

* "கவிப்புலவன் இசை" என்றது (வேத) கீதத்துடன் பாடப்பட்ட வேதமொழியாகிய திருமுருகாற்றுப்படையை.

மறையவர் வேதங் கூறுவதுபோன்ற இசையுடனும் நிறுத்திய உச்சரிப்புடனும் திருமுருகாற்றுப் படையை ஓதவேண்டும் என்பது இதனாற் பெறப்படும். "கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு கீரரியல் கேட்ட க்ருபைவேளே." —திருப்புகழ் - 1278.

† "மரண ப்ரமாதம்***வேலுமுண்டே" - கந்தரலங்காரம் - (21\.

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்
சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும் ;
திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது
குடித்துடைய முடைப்படைய வடைத்துதிர
நிறைத்துவிளை யாடும்
திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும்
சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும்
திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயி
னடத்துகுகன் வேலே.

---

4. திருவேளைக்காரன்வகுப்பு.

[வள்ளியம்மையொடு தமது வேளையைப் (பொழுதைப்) போக்குபவன் எனக்கூறி முருகன்பெருமையை விதந்தோதுவது. "விந்தை குறமாது வேளைக்கார," "வித்து விளைபுனமும் வேய்முத்தினும், வெற்பு முறையுமயில் வேளைக்காரப்பெருமாளே.", " சுத்த மறவர் மகள் வேளைக்காரப் பெருமாளே "—[திருப்புகழ் 41, 1025, 1026.]

ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்
ஆரமது ரித்தகனி காரணமு தற்றமைய
னொருடனு ணக்கைபரி தீமைக் காரனும்

ஆகமம்வி ளைத்தகில லோகமு நொடிப்பளவி
லாசையொடு சுற்றுமதி வேகக் காரனும்
ஆணவவ ழுக்கடையு மாவியை விளக்கியரு
பூதியடை வித்ததொரு பார்வைக் காரனும்
ஆடலைவு பட்டமரர் நாடதுபி ழைக்கவம
ராவதிபு ரக்குமட லாண்மைக் காரனும்
ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு
ணைபுரியி னிற்குமடை யாளக் காரனும்
ஆயிரமு கத்ததுநதி பாலனும கத்தடிமை
யானவர்தொ டுத்தகவி மாலைக் காரனும்
ஆறுமுக வித்தகனு மாறிருபு யத்தரசு
மாதிமுடி வற்றதிரு நாமக் காரனும்;

யானெனதெ னச்சருவு மீனசம யத்தெவருமு
யாருமுணர் தற்கரிய நேர்மைக் காரனும்
யாதுநிலை யற்றலையு மேழுபிற விக்கடலை
யேறவிடு நற்கருணை யோடக் காரனும்
ஏரகமி டைக்கழிசி ராமலைதி ருப்பழநி
யோரணிசெ ருத்தணியில் வாசக் காரனும்
ஏழையினி ரட்டைவினை யாயதொரு டற்சிறையி
ராமல்விடு வித்தருணி யாயக் காரனும்
யாமளைம ணக்குமுக சாமளைம ணிக்குயிலை
யாயெனவ ழைத்துருகு நேயக் காரனும்
ஏதமற நிச்சயம ஞேலயவி ளக்கொளியும
யாகமுநி வர்க்குரிய காவற் காரனும்
ஈரிரும ருப்புடைய சோனைமத வெற்பிவரும்
யானையள விற்றுவளு மாசைக் காரனும்
ஏடவிழ்க டப்பமலர் கூதளமு டிக்குமிளை
யோனுமறி விற்பெரிய மேன்மைக் காரனும்;

வானவர்பொ ருட்டுமக வானதுபொ ருட்டுமலர்
வாவியிலு தித்தமுக மாயக் காரனும்
வாரணப திக்குதவு நாரணனு வக்குமரு
மானுமய னைக்கறுவு கோபக் காரனும்

வாழியென நித்தமற வாதுபார விற்சரண
வாரிசம ளிக்குமுப காரக் காரனும்
மாடமதில் சுற்றியத்ரி கூடகிரி யிற்கதிர்செய்
மாநகரி யிற்கடவு ளாயக் காரனும்
வாளெயிற தற்றரகு வாய்தொறுநெ ருப்புமிழும்
வாசுகியெ டுத்துதறும் வாசிக் காரனும்
வாளகிரி யைத்தனது தாளிலிடி யப்பொருது
வாகைபுனை குக்குடப தாகைக் காரனும்
மாசிலுயி ருக்குயிரு மாசிலுணர் வுக்குணர்வும
வானிலணு வுக்கணுவு பாயக் காரனும்
வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படும
காடவியி னிற்பதொர்ச காயக் காரனும்;
மீனவனு மிக்கபுல வோருமுறை பொற்பலகை
மீதமர்த மிழ்த்ரயவி நோதக் காரனும்
வேரிமது மத்தமதி தாதகிக டுக்கைபுனை
வேணியர்து திப்பதொரு கேள்விக் காரனும்
வேலைதுகள் பட்டுமலை சூரனுடல் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக் காரனும்
மீனுலவு கிர்த்திகைகு மாரனுநி னைக்குமவர்
வீடுபெற வைத்தருளு தாரக் காரனும்
மேனையரி வைக்குரிய போனும தித்ததிறல்
வீரனும ரக்கர்குல சூறைக் காரனும்
வேதியர்வெ றுக்கையும நாதிபர வஸ்துவுபவி
சாகனுமவி கற்பவெகு ரூபக் காரனும்
*வேடுவர்பு னத்திலுரு மாறிமுனி சொற்படிவி
யாகுலம னத்தினொடு போம்விற் காரனும்
மேவியபு னத்திதணி லோவியமெ னத்திகழு
மேதகு குறத்திதிரு வேளைக் காரனே.

---

* "நாரதனன்று சகாய மொழிந்திட நாயகி பைம்புன மது தேடி, நாணமழிந் துருமாறிய வஞ்சக..." திருப்புகழ்-1261.

5. பெருத்த வசன வகுப்பு.

[இது முருகபிரான் தமக்குபதேசித்த மௌனோபதேசத்தின் சிறப்பைக் கூறுகின்றது.]

அருக்க னுலவிய சகத்ர யமுமிசை
யதிற்கொள் சுவையென வினைத்து'நிறைவதும்
அவஸ்தை பலவையு மடக்கி யகிலமு
மவிழ்ச்சி பெறவினி திருக்கு மவுனமும்
அசட்டு* வெறுவழி வழக்க ரறுவரு
மாற்று வனபொருள் விகற்ப மொழிவதும்
அழுக்கு மலவிருண் முழுககி னுழல்வதை
யடக்கி யவநெறி கடகக விடுவதும்;

எருக்கு மிதழியு முடிக்கு மிறைகுரு
வெமக்கு மிறையவ னெனததி கழுவதும்
இரட்டை வினைகொடு திரட்டு மலவுட
லிணக்க மறவொரு கணக்கை யருள்வதும்
இருக்கு முதலிய சமஸ்த கலைகளு
மிதற்கி தெதிரென விணக்க வரியதும
இறக்க வெனவெதிர் நடக்கும் யமபடர்
கடக்க விடுவதொ ரியற்கை யருள்வதும்;

நெருக்கு வனவுப நிடத்தி னிறுதிக
ணிரப்பு கடையினி லிருப்பை யுடையதும்
நெருப்பு நிலம்வெளி மருத்து வனமென
நிறைத்த நெறிமுறை கரக்கு முருவமும்
நினைப்பு நினைவது நினைப்ப வனுமறு
நிலத்தி னிலைபெற நிறுதத வுரியதும்
நிலைத்த வடியவர் மலைத்த லதுகெட
நிவிர்த்தி யுறவறு பவிக்கு நிதியமும ;

உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர
வுளத்தொ டுரைசெய வொளித்து விடுவதும்

---

* "பரசமய கலையார வாரமற" — திருவகுப்பு - 1.

ஒளிக்கு மொளியென வெளிக்கும் வெளியென
உயிர்க்கு முயிரென நிகழ்ச்சி தருவதும்
உரத்த தனியயி லுகைத்து நிசிசர
ரொளிக்க வமர்பொரு சமர்த்த னணிதழை
உடுத்த குறமகண் மணக்கு மறுமுக
னொருத்த னருளிய*பெருத்த வசனமே.

---

6. பூத வேதாள வகுப்பு.

[முருகபிரான் சூரனொடு பொருத போர்க்களத்தில் ஆடிய அநேகவித பூதவேதாளங்களின் வருணனை. இத்தகைய வருணனை திருப்புகழ் 570, 585, 906, 921, 1197 - ஆம் எண்களுள்ள பாடல்களிலுங் காணலாம்.]

அருண கணபண புயக சுடிகையி
னகில புவனமு முதவு மலைமகள்
அமலை யாரியை யந்தரி சுந்தரி
யிமய மாமயி லம்பைத்ரி யம்பகி
அச்சுதச கோதரிய னைத்துவே தத்தலைவி
யற்புதப ராதனிவ ரப்ரகா சப்ரக்ருதி
அம்பொற் குண்டலப் பேதை சாம்பவி
விம்பக் கிஞ்சுகப் பூவை பூங்கொடி
அக்ஷர லக்ஷஜ பத்தர்க்ர மத்திடு
சக்ர தலத்தித்ரி யக்ஷிச டக்ஷரி
ஆயிதிரு மைந்தன்முக மாயிரம்வி ளங்கியதொ
ராறுதர வந்தருளு மாறுமுக புண்டரிகன்
அருவரை திறநதுவன் சங்க்ராம கற்கிமுகி
யபயமிட வஞ்சலென் றங்கீர னுக்குதவி

---

* பெருத்த வசனம் : "பேற்றைத்" (க), "ஒளியில்" (அ), "தேனென்று" (கூ), "சொல்லுகைக்கில்லை" (கo), "தந்தைக்கு முன்னம்" (சுகூ) எனவருங் கந்தரலங்காரப் பாடல்களும், "அமரும்பதி" (அ), "கூகாவென" (கக), செம்மான்மகளை (கஉ), "செவ்வான்" (கூo) எனவருங் கந்தரநுபூதிச் செய்யுள்களும் ஈண்டு கவனிக்கற்பாலன.

அரசறிய வாமனமு நிக்கொருத மிழ்த்ரயமு
மபரிமித மாகவிவ ரித்தகட வுட்புலவன்
அநுபவ சித்த பவக்கட லீற்பு காதெனை
வினவியெ டுத்தருள் வைத்த கழற்கரு பாகரன்
ஆசிலா சார தபோதன ரின்புறும்
வாசகா தீத மனோலய பஞ்சரன்-
அகரு ம்ருகமத களப பரிமள
விகட முகபட கடின புளகித
அமிர்த பூதரி யண்டர்செ ழுங்கொடி
குமுத வாய்மயில் குஞ்சரி மஞ்சரி
அக்கமொரு கோடிபெறு வஜ்ரபா ணிக்குமரி
தக்கவம ராவதிபு ரக்குமா னைக்கிறைவன்
ஐம்பத் தொன்றிலிட் டாறின் மூன்றினி
லைந்திற் றங்குமப் பாலை வான்பொருள்
அப்படி பதறி பழுத்த மனத்தின
ரர்ச்சனை மெச்சிய செச்சை மணிப்புயன்
ஆறுநிலை யென்றுமுத லாகியப ரங்கிரியு
மாவின னெடுங்குடியு மாரண முடிந்திடமும்
அருணையு மிலஞ்சியுஞ் செந்தூர்தி ருப்பழநி
யடியர்பன பங்கயஞ் செங்கோயு டைக்கழியும்
அநவரத நீலமலர் முத்தெறிசு னைப்புனலி
லருவிகுதி பாய்தருசெ ருத்தணியென் வெறபுமெனும்
அலகில் திருப்பதி யிற்பயில் கற்ப காடவி
யநுபவ னத்தனி ருதத*ன ரத்த வாடையன்
ஆறுமா மாதர் பயோதர பந்தியி
லாரவே பாலமு தாருநெ டுந்தகை;

வருண சரவண மடுவில் வருமொரு
மதலை மறைகமழ் குதலை மொழியினன்
மதுக ராரவ மந்திர சிந்துர
மணமரு ருத கடமபு புனைந்தவன்

---

* அரத்த ஆடையன் = சிவந்த ஆடையன்; "செய்யன் சிவந்த ஆடையன்" —திருமுருகாற்றுப்படை.

மட்டொழுகு சாரமது ரித்ததே னைப்பருக
    மர்க்கடச மூகமமை தொட்டிரு லெட்டுவரை
மன்றற் பைம்புனத் தாள்ப தாமபுயம்
    வந்திக் குந்தனிக் காம வீரஞ்சையன்
மத்தமு டித்தரு ளத்தர்ப்ரி யப்பட
    நித்தம றைப்பொரு ளைத்தெளி வித்தவன்
மாதிரமு மந்தரமு நீருநில னுங்கனக
    மால்வரையு டன்சுழல வாசுகிவி டம்பொழிய
மகரசலி லங்கடைந திந்த்ராதி யர்க்கமுது
    பகிர்தரு முகுந்தன்மன் பஞ்சாயு தக்கடவுள்
மருகன்மற வாதவர்நி னைப்பவைமு டிக்குமவ
    னுருகுமடி யாரிருவி னைத்தொகைய றுக்குமவன்
மறவர்பொ ருப்பிலொருததிபொ ருட்ட நாளிள
    வடிவமு மூக்க நரைத்தவி ருத்த வேதியன்
மாதரா ரூப னிராகுல சிநதைய
    ஞூதிகூ தாள மதாணிய லங்க்ருதன்-
வரத விதரண விரத அநுபவ
    மவுன குருபர னிபுண குணதரன்
வனஜ ஜாதனை யன்றுமு னிந்தற
    வலிய பாரவி லங்கிடு புங்கவன்
மட்டிலிரு நாலுதிசை கட்டுநே மிக்கிரியு
    முத்தாகு ஞூதிகுட தக்ஷிண திக்கிரியும்
*மங்கத†துங்க‡விட் டேறு§வாங்கிய
    செங்கைப் பங்கயச் சோதி காங்கெயன்
மத்தம லக்ரப மித்தைத விர்த்தருள்
    சுத்தப வித்ரநி வர்த்திய ளிப்பவன்

---

* மங்க = மங்கிக்குலைய. † துங்க = பரிசுத்தமான.

‡ விட்டேறு = வேல், "வேலைமபுத்தூர் விட்டேறருளி"—திருவாசகம். "சத்தி, எஃகம, உடம்பிடி, குந்தம், விட்டேற, அரணம் ஞாங்கர், அயில், வேல்"—திவாகரம்.

§ வாங்கிய = செலுத்திய. "வேல்வாங்கு வகுப்பு" என்பதை யுங் காண்க.

வாரணமு கன்றனது தாரைதையைவ லஞ்சுழல
வாகைமயில் கொண்டுலகு சூழ்நொடிவ ருங்குமரன்
மயமுறு ப்ரபஞ்சமுஞ் சங்கேத ஷட்சமய
வழியுமன முங்கடந் தெங்கேனு நிற்குமவன்
மதுரமொழி யாலுலக னைத்தையுமு ணர்த்துமவன்
வடவனல நேர்கொடிய குக்குடமு யர்த்தகுகன்
மரகத பக்ஷ குலத்துர கத்தி வாகரர்
வடிவையு ருக்கி வடித்தந் ருக்கை வேல்கொடு
வாரிகோ கோவென வாய்விட வநதெதிர்
சூரமா சேனையை மோதுக ளந்தனில்;

உருவ மிருளெழ வெயிறு நிலவெழ
வுலகு வெருவர வசைய வருவன
உடைய நாயகி கண்டும கிழ்ந்திட
நடைவி நோதவி தம்புரி பந்திய
ஒக்கலைவி டாதழுத ரற்றுபா லர்க்குமிக
வுச்சிவெடி யாதுநிண மெத்தவே தப்புவன
உங்குக் கிங்குவிட் டாழி நான்கினு
மொன்றுக் கொன்றடி பாய்தல் காண்பன
யுத்தக ளத்தினில் ரதகம ணிக்குவை
யொட்டமொ டொற்றையி ரட்டைபி டிப்பன
யோகினிக ளும்பெரிய சாகினிக ளுமபுதிய
மோகினிக ளுமபழைய டாகினிக ளும்புகழ
உவணநிரை கொண்டிடுஞ் செங்காவ ணத்திடையி
லுறவுகொள வநதுதம் பெண்காறை கட்டுவன
உமிழ்குருதி யாறடைப டக்குறட டுக்கியதி
லுபவனமொ ரேழையுமு றித்தருகொ ழுக்குவன
உடுபட லத்தை மறைதத குறைக்கு வாலுட
லுதிரச முத்திர முற்று நிலைப்ப டாதன
ஓடைமால் வாரண யூகம டங்கலு
மோரொர்பேய் நீள்கடை வாயி லடங்குவ-
உடலி னிசிசரர் மவுலி யொலியலு
முதடு மலைவன பதடி முலையின

உததி யெழும டங்கவு றிஞ்சியு
முதர வாரழ னின்றுகொ ளுந்துவ
உககிரவி ராவணனெ டுத்தமே ருக்கிரியு
மொற்றியிரு தோள்கொடுப றித்திடா தப்புவன
ஒன்றித் திண்குரற் கூகை பாம்பொடு
வென்றிச் செநதலைத் தாலி பூண்பன
ஒக்கமி டற்றி லிறக்கு குறைத்தலை
விக்கி வெளுக்க வெளுக்க விழிப்பன
யோகுபுரி யுங்குகையும் யோகபா ரும்பொருவ
ஓடைமத தந்திவயி றாடினிது றங்குவன
உசிதபிசி தங்கொணர்ந திங்கேற விற்றுமெண
மதமலையெ லும்புகொண் டங்காடி கட்டுவன
உதிரநிண வாள்பெருக வொட்டுவன வெட்டுவன
உடலினடு வூடுருவ முட்டுவன தட்டுவன
ஒழுகுபி ணத்துநி ணத்தின ளற்றி லேபழு
ஒடியவு ழக்கிவ ழுக்கி யுருட்டி வீழ்வன
ஊசலார் வார்குழை யோலை யிடும்படி
யோதுசா மீகர நேமி பிடுங்குவ ;

காண மிடுவன குணலை யிடுவன
கழையை நடுவன பவுரி வருவன
ககன கூடமு டைநதுவி ழும்படி
கதறி வாயனல் கண்கனல் சிந்துவ
கைசசதியி னுமுறைவி தித்தவா முற்கடித
சச்சபுட சாசபுட சட்பிதா புத்திரிக
கண்டச் சமபதிப் பேத மாம்பல
கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி
கற்சரி யுற்சவ தர்ப்பண லக்ஷண
சச்சரி மட்டிசை யொற்றிய றப்பன
காயெரிய பங்கியொடு சேகரமி குந்தசைவ
காதுபடு சங்கவள மாலிகைபு னைந்திசைவ
கருணைய திகந்துவந் தொண்கோகு லப்பெரிய
கருமுடியொ டும்படுங் கங்காள மொத்துவன

கடிபயிர வாதிகள்ப்ரி யப்படுக திக்கிசைய
நடைநவிலு பாவனை யுதிக்குநட வித்தையின
கடகம டுத்த விடக்கை வலக்கை வாளின
கருதிய லக்ஷிய லக்ஷண முற்று மோதுவ
காலமா ரூத வராளிசி கண்டிகை
பாலசி காமர மானவி பஞ்சிகை-
கவுட பயிரவி லளிதை கயிசிகை
கவுளி மலகரி பவுளி யிசைவன
கனவ ராடிய ரும்பட மஞ்சரி
தனத ஞசிவி தம்படு பஞ்சமி
சைச்சுலவு கோன்முறைவி தித்தரா கத்தடைவி
லுச்சமது சாதிகமெ டுத்துமே லெட்டுவன
கஞ்சக் கஞ்சநற் றேசி ராஞ்சிகு
றிஞ்சிப் பண்குறித் தியாழை யேந்துவ
கற்றவு டுக்கையி டக்கைக ளப்பறை
மத்தளி கொட்டிய முற்றும டிப்பன
காரெனமு ழங்குர லேறுதுடி சந்த்ரவளை
வீரமுர சுந்திமிற டாரிகுட பஞ்சமுகி
கரடிபறை யங்கனந் தங்கோடி கொட்டுவன
முறைமுறை கவந்தநின் றொன்றோடு கிட்டுவன
கசரதப தாகினிய ரக்கர்துணி பட்டுவிழு
களமுழுதும் வாழிய* திருப்புகழ்மு ழக்குவன
கடியகு ளத்த சினத்த சகதர யோசனை
நெடிய கழுத்த சுழித்த விழித்த பார்வைய
காதநூ றுயிர கோடி வளைந்தன
பூதவே தாள மநேகவி தங்களே.

---

* "திருப்புகழ் எடுப்பன முடிப்பன"—திருப்புகழ் 1250.

7. பொருகளத் தலகை வகுப்பு.

[முருகபிரான் அசுர சம்ஹாரஞ் செய்த போர்க்களத்துள்ள பேய்கள் வருணனை - திருப்புகழ் - 354, 404, 406, 1013, 1127-1250-ஆம் பாடல்களைக் காண்க.]

அதிர்த்த பரிபுர பதத்தி பயிரவி
யமைத்த காதலி ப்ரியத்தை யுடையன
அடித்த தமருக கரத்தர் பயிரவர்
நடித்த நவரச நடத்தை யறிவன
அருக்கர் பதமல வுடுக்கள் பதமள
வடுக்கு பிணமொரு குறட்டி லடைசுவ
அளக்க ருடைபட மிகுத்த குருதியை
யடைத்து மடைபட வுடைத்து விடுவன
அரக்கர் முடிகளை யடுப்பு வகிர்வன
அவற்றி னுலையென இரத்தம் விடுவன
அடுக்க லெனுமவ ரெயிற்றை யவர்கர
வகப்பை யவைகொடு புகட்டி யடுவன
அமிழ்த்தி யடிவிழ பிணத்தி னிணவெளி
றளற்றி னிடையடி வழுக்கி விழுவன
அடபயை யிடவரு மணுக்க ருடன்வரு
தடக்கை மதமலை நடத்தி வருவன ;

குதித்து மகிழ்வொடு மிதித்து நடமிடு
குறட்கு மிகுதசை கொடுத்து வருவன
கொழுத்த குரகத விறைச்சி வகைவகை
குவித்து முறைமுறை யவித்து நுகர்வன
குருத்து மலரினும் வெளுத்த நிணமது
கொளுத்தி யனலதில் வெதுப்பி யிடுவன
குதட்டி நெடியன வுதட்டி லிடுதசை
கொடிக்கு முதுசின நரிக்கு முமிழ்வன
குணக்கு வளைகடல் வடக்கி யமதிசை
குடக்கு முழுவது மடக்கு வயிறின

குரக்கு மிடறின காத்தி லெழுகிரி
குலுக்கி யடியொடு பறித்து நிமிர்வன
குதித்து முழுகியு மிரத்த நதியிடை
குடித்து முணர்வொடு களித்து வருவன
குறத்தி யிறைவனை நிறைதரு மலரடி
குறித்து வழிபடு குணந்தனை யுடையன ;
துதிக்கை மலைகளை யடுக்கி யலகைகள்
துதிக்க அவைமிசை யிருக்கு மாசின
துளக்க முறுசுடர் விளக்கை யனையன
சுழித்து வெருவர விழித்த விழியின
துதித்து வழிபட நடத்தல் குறையன
சுகித்து வெளிபட நகைத்து வருவன
துணித்த கரியுட றிணித்த மிடறிடை
துவக்கி யவசமொ டுவிக்கி நிமிர்வன
தொலைத்த முடிநிரை பரப்பி வயிரவர்
சுழற்றி நடமிடு துருத்தி யிடுவன
துறுக்க முளவவர் துணுக்க மிலையென
எடுத்த கழிநெடில் படித்து வருவன
சுரர்க்கு மகபதி தனக்கு மினியொரு
துளக்க மிலையென மகிழ்ச்சி புகல்வன
தொகுக்கு தொகுதொகு தொகுக்கு தொகுதொகு
தொகுக்கு தொகுவென நடித்து வருவன ;
எதிர்த்த மலைவன முடித்து வெளிமுக
டிடித்து விழுமிடி யிடித்த குரலின
இரட்டை யிளமதி யுதித்த வெனவெளி
றெயிற்றி னிலவெழு மிருட்டு வடிவின
இயக்க முறுபல ரதத்தி னுருளைக
ளிருத்தி யணிதரு பெருத்த குழையின
இடக்கை குடமுழ வுடுக்கை துடிபறை
யெடுத்து முகிலென முழக்கி வருவன
இதத்த கயிசிக மினித்த பயிரவி
யெழுப்பி யெழுவகை நிருத்த மிடுவன

இறப்பும் வருமெழு பிறப்பு மறவினி
திருத்து மெனமயில் விருத்த மொழிவன
இடைக்க ழியிலொரு செருத்த ணியிலினி
திருக்கு மறுமுக னெருந்த னிலையவன்
இனைந்து நிசிசரர் பதைத்து மடியவொ
ரிமைப்பி லமர்பொரு களத்தி னலகையே.

---

8. செருக்களத் தலைகை வகுப்பு.

[ஏழாவது திருவகுப்பின் கருத்தைத் தழுவியது.]

குதிரைத் திரள்பட் டபிணத் தைத்தெயித்த
துதிரப் புனலிற் குளிக்கு மொருதிரள்
குருதிக் கடலைப் பெருகப் பருகிக்
குணலைத் திறனிற் களிக்கு மொருதிரள்
கொடிகொட் டிபடத் துடிகொட் டிநடத்
தடமிட் டுவைத்து நெருக்கு மொருதிரள்
குடரைப் புயமிட் டுடலைச் சிறுகக்
குலையிட் டதிரச் சிரிக்கு மொருதிரள்;
சதையைச் சிலாகைக் கொளமற் றதனைச்
சருவிச் சருவிப் பறிக்கு மொருதிரள்
தறுகட் சிறுகட் டவளக் கவளத்
தமரத் திமிரப் பனைக்கைம் மதமலை
தலையுக் குளநற் றருணக் கிரணத்
தரளத் திரளைக் குவித்த டியெனுமால்
தனிவிட் டதனைத் தகுகைத் தலமுற்
றிடுநெட் டைமருப் புலக்கை முறைமுறை;
எதிரிட் டதுகுத் திமுடித் தலையோய
பவடுப் பெனவைத் தெழுப்பு விறகினை
எரியிட் டெரியிட் டுருவத் துடனெட்
டுலைவைத் துணைவைச் சமைக்கு மொருதிரள்
இருள்செற் றதடித் தினையொத் தநெடுங்
கமெடுத் தெறியத் தெறித்த தலைகளை

இடெதனக் கதனக கதமற றதனுக
கெனமொய்த் துலவிப் பொறுக்கு மொருதிரள்;
அதரத் துவிரற் படைவைத் துமிகுத்
தரவத் தொடுகொக் கரிக்கு மொருதிரள்
அழுதொத் தநிணத் தசைமுக் கியறத்
தவசத துயிலிற் கிடக்கு மொருதிரள்
அடவிப் புனமுற் றகுறத் திருவுக்
கமைவுற் றமணிப் புயத்த னறுமுகன்
அடன்மிக் கதயித் தியர்பட் டுவிழப்
பொருதிட் டசெருக் களத்தி லலகையே.

---

9. போர்க்களத் தலகை வகுப்பு.

[எட்டாவது திருவகுப்பின் கருத்தைத் தழுவியது.]

பகலிர வின்றியொர் புகறிசை நந்திய பற்பா ணுத்தகை
படமுதல் விசும்பு தூர்த்த டுக்கு பிணமலை
பவுரிவ ரும்பரி புரநரல் பங்கய வித்தா ரத்தன
பயிரவி பதங்கள் வாழ்த்தெ டுத்த பசியன
பரியகொ ழுந்தசை பயிரவ ரென்றுப லிக்கா நிற்பவர்
பகரிட மறிந்து பாத்தி ரத்தி லிடுவன
பரவிவ ருங்குறள் பசிதணி யும்படி பட்டார் கைப்படு
பரிசையின் முகந்து சூட்டி றைச்சி சொரிவன
படுகள மென்பதொர் செறுவில் விளைந்தன பற்கோ வைப்பயில்
பவுரிவி சைகொண்டு நீட்டி மெத்த வடுவன
பரியணி திண்பணை முடியம டிந்துடல் பப்பா தித்துணி
படவிழு பெருங்கை மாக்க ருக்கல் பகிர்வன
படைவிச யந்தெரி சலதிவ லம்புரி பற்றார் பட்டுள
பலபல விதங்க ளார்ப்பெ டுக்கு முதடின
பகடுபி ளந்தத னுரிவைபு னைந்திடு குப்பா யத்தன
பதவிய ரிணைஞ்செ யூட்டு டுத்த வுடையின;
உகமுடி வன்றினும் வெருவவ ருமபல வுற்பா தத்தன
வொளிமதி வகிர்ந்த கீற்றெ யிற்று நிலவின

உருவமி ருண்டன திகிரிவி லங்கலி னுட்பாய் கிற்பன
உலவிநி ணமொண்டு கூட்ட மைத்து நுகர்வன
உததியு றுஞ்சுவ வடவைநெ டுங்கன லுட்கா கப்பெரு
குதிரபி சிதங்கள் ' போர்ததி றக்கி யிடுவன
உருமுமி டைநதென வதிர்குர லின்றபி லொபபே றிட்டுதி
ருதர்மவு லிகொண்டு கோட்டை யிட்டு மலைவன
உலகுகு லுங்கிட வரியது ணங்கையி னைச்சா திப்பன
உவணப டலங்கள் காக்கை சுற்றி வருவன
உலைதரு மென்குட ரிடைபட இநதிர னுதயா னததல
ருகிர்கொடு புனைந்த சூட்டு முற்றி மலைவன
உயரிய முங்குர கதகுல முங்கன பொற்றேர் வர்க்கமு
முடைபடு கலங்கள் போற்சு ழித்து விரைபட
ஒழுகுதி ரந்தனின் முழுகியெ ழுந்தன உச்சா டததுட
னுடைகட லதிர்ந்து கூப்பி ளக்கு நடையின;

செகதல மெங்கணு மதிமு ழங்கிய டிப்பாய் வெற்றிய
திரள்வரை பிடுங்கி நாட்டி யொட்டு குழையின
சினமலி வெங்குற ளினமொடு திண்டிறன் மற்போர் கற்பன
திசையள வுநின்று நீட்டி வைக்கு மடியின
திசைகடொ றும்பல குறைகளெ ழுந்துது டிததா டச்சிறை
செறிகழு காங்கில் வீற்றி ருக்கு மாசின
திமிரபி லங்கிழி படவிசை கொண்டுகு தித்தா லிப்பன
சிகரவ டகுன்றி னூற்றி ரட்டி நெடியன
சிறியன கிண்கிணி யணிகுரு வின்சர ணதயா னத்தின
திசைபட வகண்ட சீர்த்தி மெச்சி யிரைவன
திமிலைபெ ரும்பறை சிறுபறை நின்றதி ரச்சே வித்துயர்
சயமகள் விளங்கு வேற்க ரத்தை மொழிவன
திரிகட தொங்கிட திரிகட திங்கிட தித்தீ செக்கண
செககண மொழிந்து கூத்த னைத்து நவில்வன
சிலைமலி திண்புய வசுரர்சி ரங்கள டுப்பா வைத்தவர்
செறிகுடர் நிணங்கள் காய்ச்சி மிக்க வயில்வன;

நிகறில நம்புரி குருகுல பஞசவர் மெய்த்தா துக்கொரு
நிமிடம திலன்று போய்க்க வித்த மணிமுடி

நிருபர்ப யங்கொள நெறுநெ றெனும்படி பொற்பீ டத்திடை
நிலைபெற விருந்து நூற்று வர்க்கு மவரறி
நினைவுற வன்புற மொருபதி னெண்குண வகரோ ணிப்படை
நிகிலமு மடிந்து ' கூற்று வற்கு நிறைவுற
நிலமகள் வன்பொறை கடிதுமு குந்தன்மு தற்சேண் முட்டவு
நெறிபட நிமிர்ந்த வாக்கை யற்கு மருமகன்
நிமலைத்ரி யம்பகி கவுரிதி கம்பரி நிர்ப்பா வகருண
நிருமலி யிரங்கு தாய்ப்ரி யத்த னறுமுகன்
நிகரக னங்குல சிகரிதொ டுமபெரு வெற்பா ருற்பல
நிறையருவி கொஞ்ச வோச்சி யததி லொளிர்சுனை
நியதியி னனகலர் தணிகையெ னுமபதி நிற்பான் முற்பட
நெடுமகா சுரது தீப்ப றக்க வெகுவித
நிபுடூ ரங்கக சவிரத சங்க்ரம நிட்டூ ரக்கொலை
நிருதரை முனிந்த போரக்க ளத்தி லலகையே.

---

10. திருஞான வேழ வகுப்பு.

[மௌனஞான விசேடத்தைக் கூறிற்று. "சிவமத திருஞான வேழம" என்பதிற் சிவஞானத்தை யானைக்கு ஒப்பிட்டார். "பஞ்சமலங் காயந்த சிவஞானக் கடாக்களிறும" என்பது கந்தர் கலிவெண்பா. வேழம=யானை.]

சடலை பட்டலை யுடலெ னப்படு
தரும சித்திர கூட மானவை
தவிர நிட்கள வெளியி னிற்பன
சமய தர்க்கவி ரோத வாதிகள்
தகா வெற்றுவ புகர்ம தக்கிரி
தளையு ருக்குவ வாசை யாணவ
தளையி யற்கையை விட்ந டிப்பன
சனன முற்றிய சாத மாமெழு;

கடல்க டபபன படுகொ லைச்சமர்
கடக மப்படி சாய மோதுவ

கருவி னைதத்தரு மிருவி னைத்தொடா
கழல்ப தத்தன யோக சாதகர்
களைப றிப்பன கிளைமெ னப்படு
கவலை சுற்றிய காடு சாடுவ
கருணை மெய்த்தவ திருவ ருட்கன
கவள மொக்குவ காம நாசனை;

அடல்கெ டுப்பன அகில கற்பனை
யரண ழிப்பன கோப மானவை
அவிய நற்பொறை யெனுந திப்பிர
ளயமி றைப்பன லோப மோகிதம்
அவைமு றிப்பன மதமு ழுத்தறி
யடிப றிப்பன ராச தாதியின்
அதிகு ணத்ரய மதிலி டிப்பன
அளவி றத்துவ தூளி வீசுவ;

திடமு டைசசிறை மயிலு கைத்தெழு
சிகரி குத்திய வேலை நீள்சுனை
தினமு முற்பல மலர்தி ருத்தணி
யிறைதி ருப்புகழ் பாடி நாவலர்
திரள்பரி யப்பட வினித ளிப்பன
செயலொ ழித்தற பூதி மீமிசை
திகழு மற்புத மவுன நிர்க்குண
சிவம யத்திரு ஞான வேழமே.

---

11. திருக்கையில் வழக்க வகுப்பு.

[இது முருகன் திருக்கையில் வழங்கப் படுவதாய ப்ரசாத மகிமையைக் கூறிற்று. அங்ஙனம் வழங்கப்படுவது ஞானமே யாதலின் அந்த ஞானத்தை ஐராவதம் போன்ற நிருமல ஞானக் களிற்றுக்கு உவமையாக்கி ஞானவேழ வகுப்புப் போலவே அந்த ஞான சக்தியின் பெருமையைக் கூறினர்.]

தருக்குவ செருக்களம் வெருக்கொள வதிர்ப்பன
தடக்கர நிமிர்த்துய ருடுக்குல முதிர்ப்பன
தடித்தெழு குலப்புவி நடுக்குற வதிர்ப்பன
தழைச்செவி படைப்பன திரட்கயிலை யொப்பன
சதுர்த்தச தலத்தையு மெடுத்தக டவுட்பணி
சகஸ்ர பணபதியு மொடுக்குற நடப்பன
சமுத்தர மதனத்தி லமுதத்துட னுதிப்பன
தரத்தன தலைச்சுர நதிப்புனல் குளிப்பன ;

அருக்கர் பதமுட்பட மிதித்திடு பதத்தன
அறப்படு கொலைத்தொழில் புறப்படு முகத்தன
அரக்கர்படை கெட்டுமுறி யப்பொரு பதத்தன
அயற்கு மமரர்க்கு மொருபொற்பதி யளிப்பன
அளித்தவ முதுக்கவள மொக்குவன முத்தெறி
யலைக்கடல் கலக்குவ குலக்கிரி குலுக்குவ
அடித்தெழு பொருப்பினை நெருப்பெழ விழிப்பன
அதிக்ரம கமபரவுட விக்ரம மதத்தன ;

மருக்குலவு கற்பக வனத்தலர் பறிப்பன
வளைத்தெழு தருக்களை மொளுக்கென முறிப்பன
மதிப்பிள வெனச்செருகி வைத்தென மணிச்சதுர்
மருப்பின விமைப்பற விழித்த நயனத்தன
வளைத்த கிரியைப் பொடிபடுத்தி யிபமெட்டையு
மலைத்தவ ணடிப்பட மடப்பிடி யணைப்பன
மழைப்புயல் கிழிப்பன புனற்பசி தணிப்பன
மணிக்கண கணப்பண மதத்தாயம் விதிர்ப்பன ;

திருத்திய புனத்திடை வனத்தழை யுடுத்தினி
திருபவள் விருப்புறு வரைப்புயன் விளைப்பகை
செருப்பவ னினைத்தவை முடித்தருள் க்ருபைக்கடல்
சிவத்த கமலச் சரவணத் தறுமுகப்பொருள்
செகத்ரய முகிழ்த்த வுதரத கிரிபுரைக்கொரு
திருப்புதல்வ னுற்பல கிரிப்பெயர் தரித்தருள்
திருத்தணி மலைக்கிறை திருப்புகழ் படிப்பவர்
சிறப்பொடு பெறத்தரு திருக்கையில் வழக்கமே. ()

---

12. வேடிச்சி காவலன் வகுப்பு.

[இது வேடர் மகளாம் வள்ளி காதல ராகிய முருகன் பெருமையைக் கூறும்]

உதரகம லத்தினிடை முதியபுவ னத்ரயமு
முகமுடிவில் வைக்குமுமை யாள்பெற்ற பாலகனும்
உமிழ்திரை பரப்பிவரு வெகுமுக குலப்பழைய
உதகமகள் பக்கல்வரு சோதிச் சடானனனும்
உவகையொடு *கிர்த்திகைய ரறுவருமெ டுக்கவவ
ரொருவரொரு வர்க்கவனொ ரோர்புத்ர னானவனும்
உதயரவி வர்க்கநிகர் வனகிரண விர்த்தவித
முடையசத பத்ரநவ பீடத்து வாழ்பவனும்
உறைசரவ ணக்கடவுண் மடுவிலடர் †வஜ்ரதர
னுடையமத வெற்புலைய வேதித்த வீரியனும்

---

* "மறுவறு மார லாகு மாதர்மூ விருவர் தாமு
நிறைதரு சரவ ணத்தி னிமலனை யடைந்து போற்ற
உறுநர்க டமக்கு வேண்டிற் றுதவுவோ னாத லாலே
அறுமுக ஒருவன் வேறு யறுசிறு ருருவங் கொண்டான்"
—கந்த புராணம்-திருவவதாரப் படலம்-கக௬.

† "அக்கா லையில்வேள் செலுத்துங் கணையண்டர் தம்மின்
மிக்கா னயிரா வதநெற்றி யுண்மேவி வல்லே
புக்காவி கொண்டு புறம்போதப் புலம்பி வீழா
மைக்கார் முகிலச் சுறவேயது மாண்ட தன்றே."—கந்த
புராணம்-திருவிளையாட்டுப்படலம்-௫௰.

உரைபெற வகுத்தருணை நகரினொரு பத்தனிடு
        மொளிவளர் திருப்புகழ்ம   தாணிக்ரு பாகரனும்
உரககண சித்தகண கருடகண யக்ஷகண
        முபநிட முரைத்தபடி   பூசிக்கும வானவனும்
ஒருவனு மகிழ்ச்சிதரு குருபானு முத்தமனு
        முபயமுறு மக்நிகா   மீதிற்ப்ர பாகரனும;

அதிமதுர சித்ரகவி நிருபனு மகத்தியனு
        மடிதொழு தமிழ்த்ரயவி   னோதக் கலாதரனும
அவரைபொரி யெட்பயறு துவரையவல் சர்க்கரையொ
        டமுதுசெயும் விக்நபதி   யானைச் சகோதரனும
அவுணர்படை கெட்டுமுது மகரசல வட்டமுட
        னபயமிட விற்படைகொ   டாயத்த மானவனும்
அருணையி லிடைக்கழியி லுரககிரி யிற்புவியி
        லழகிய செருத்தணியில்   வாழ்கற்ப காடவியில்
*அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளு
        மறியென விமைப்பொழுதின்   வாழ்வித்த வேதியனும
அரிபிரம ருக்குமுத லரியபா மற்குயரு
        மருமறை முடிப்பையுப   தேசித்த தேசிகனும்
அமலனு மெனக்கரசு மதிகுணனு நிர்க்குணனு
        மகிலபுவ னத்தமர   சேனைக்கு நாயகனும்
அநுபவனு மற்புதனு மநுகுணனு மக்ஷரனு
        மருமனமொ ழிக்குமநு   பூதிச் சுகோதயனும ;

இதமகிதம் விட்டுருகி †யிரவுபக லற்றவிட
        மெனதறவி ருக்கைபுரி   யோகப் புராதனனும

---

* "அறிவை யறிவது பொருளென அருளிய பெருமானே."
—திருப்புகழ் 509.

† இரவு பகலற்ற இடம்—"அராப்புனை வேணியன்" என வருங் கந்தரலங்காரச் (74) செய்யுளைக் காண்க.

"இரவு பக லில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற"—திருவுந்தியார்—20.

எனதுமன சிற்பரம சுக*மவுன கட்கமதை
யமன்முடி துணிக்கவிதி யாவைத்த பூபதியும்
†எழுமையுமெ னைத்தனது கழல்பரவு பத்தனென
இனிதுகவி யப்படிப்ர சாதித்த பாவலனும்
‡இமையவர் முடித்தொகையும வனசரர் பொருப்புமென
திதயமு மணக்குமிரு பாதச் சரோருகனும்
எழுதரிய கற்பதரு நிழலில்வளர் தத்தைதழு
வியகடக வஜ்ரவதி பாரப் புயாசலனும
எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவள
ரிவுளிமுகி யைப்பொருத §ராவுத்த னானவனும்
எழுபரி ரதத்திரவி யெழுநிலமொ டக்கரிக
ளிடர்பட முழக்கியெழு சேவற் பதாகையனும்
இணையிலியு நிர்ப்பயனு மலமிலியு நிஷ்களனு
மிளையவனும விப்ரகுல யாகச் சபாபதியும் ;

மதுகையொடு சக்ரகிரி முதுகுநெளி யப்புவியை
வளையவரும விக்ரமக லாபச் சிகாவலனும்

---

* மவுன கட்கம் = மௌன வாள். மௌன வாளாகிய ஞான வாள் கொண்டு எமபடரை வெல்வது - "எமபடரை மோது மோன உரையிலுப தேசவாளை"—என்னுந் திருப்புகழாலும் [828],

"துறக்க எனதெதிர் நடக்கும் யமபடர்
கடக்க விடுவதொ ரியற்கை யருள்வதும்" என்னும் பெருத்த வசன வகுப்பாலும் —"தந்தைக்கு முன்னந் தனிஞானவாளொன்று சாதித்தருள்" எனவருங் கந்தரலங்காரச் செய்யுளாலும் [கக] விளங்கக் கிடக்கின்றது. "ஞான வாளேந்தும் ஐயர்"— என்றார் திருவாசகத்திலும்.

† "முடிய வழி வழியடிமை**கவிமாலை சூடுவதும்—[சீர் பாத வகுப்பு.]

‡ "சாடுந் தனிவேல முருகன்" என்னுங் கந்தரநுபூதிச் செய்யுளின் [சச] கருத்துக் கொண்டது. "உயரமரர் மணிமுடியி லுறைவதுவும்"—சீர்பாதவகுப்பு.

§ "ராவுத்தன்":—"சூர்கொன்ற ராவுத்தனே"; "கலாபத் தனிமயிலேறும் இராவுத்தனே."—கந்தரலங்காரம் (கஎ, ருo)

வலியநிக ளத்திடு மறுகுசிறை பட்டொழிய
வனஜமுனி யைச்சிறிது*கோபித்த காவலனும்
வருசூரர் மதிக்கவொரு †குருகுபெயர் பெற்றகன
வடசிகரி பட்டுருவ வேலெறிந்த சேவகனும்
வரதனு மநுக்ரகனு நிருதர்குல நிஷ்டூரனு
மநுபவன சித்தனும நோதுக் கபேதனனும்
வயிரிசை முழக்கமிகு மழைதவழ் குறிச்சிதொறு
மகிழ்குரவை யுட்டிரியும வேடிக்கை வேடுவனும்
மரகத மணிப்பணியி னணிதழை யுடுத்துலவும்
வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகனும்
மதனன்விடு புட்பசர படலமுட லத்தணையு
‡மடலெழுதி நிற்குமதி மோகத் தபோதனனும்
வரிசிலை மலைக்குறவர் பரவிய புனதநிதணின்
மயிலென இருக்குமொரு வேடிச்சி காவலனே.

---

13. சேவகன் வகுப்பு.

இருபிறை யெயிறு நிலவெழ வுடல
மிருள்படு சொருப முடைக்கோ விடவே
இறுகிய கயிறு படவினை முடுகி
யெமபடர் பிடரி பிடித்தே கொடுபோய் ;
அருமறை முறையின் முறை முறை கருதி
யதரிடை வெருவ ஒறுத்தால் வகையால்
அறிவொடு மதுர மொழியது குழறி
யலமரு பொழுதி லழைத்தால் வருவாய் ;

---

* "வனஜ ஜாதனை யன்று முனிந்தற வலியபார விலங்கிடு புங்கவன்—பூதவேதாளவகுப்பு."

† குருகு பெயர்க்குன்றம் = கிரௌஞ்சகிரி. "குருகு பெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே"—சிலப்பதிகாரம்; "குருகு பெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின் முருகச் செவ்வி"—மணிமேகலை.

‡ "கொந்துவார் குர ..இந்த்ர நீலமு மடலிடை எழுதிய பெருமாளே."—திருப்புகழ்-289.

ஒருபது சிரமு மிருபது கரமும்
விழவொரு பகழி தொடுதோன் மருகா
உரமது பெரிய திரிபுர மெரிய
வுயர்கன கிரியை வளைதோர் புதல்வா ;
மருவள ரடவி வனிதையர் பரவ
மரகத விதணி லிருப்பாள் கணவா
வளைகடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத *முழுச்சே வகனே.

---

14. வேல்வாங்குவகுப்பு.

[முருகபிரான் வேலாயுதத்தைப் பிரயோகித்ததினால் சேர்ந்தன இவை என இவ் வகுப்பு விளக்குகின்றது]

திடவிய நெஞ்சுடை யடியரி டும்பைகெ டும்படி
தீயாங்குறை போயாழ்ந்தது
செயசெய வென்றிசை பரவிய வெங்கள்கொ டுங்கலி
தேசாந்தர மேசாய்ந்தது
செயலுரை நஞ்சுறழ் மயலுறு நெஞ்சினர் வஞ்சகர்
தீமான்கதர் தாமேங்கினர்
சிகரத ரங்கித மகரநெ ருங்குபெ ருங்கட
றீமூண்டுதன் வாய்மாண்டது
தெரியலர் சென்றடை திசைகளி லெஞ்சுகிரி சிமெபெழ
மாறுங்கிரி நூறுநதொளை

* சேவகன் = பராக்ரமசாலி. "வென்றிவேள் முழுச் சேவகன்"—[சித்து வகுப்பு]. முழுச் சேவகன் = ஒப்பற்ற வீரன். கந்தரந்தாதி கூகூ-ஆவது செய்யுளுரையைக் காண்க. "மயிலேறிய சேவகனே", திரிபுதிரர் வீறடு சேவகனே"— கந்தரநுபூதி (உ௫,௫௦.);"வாரணங் கைப்பிடித்த சேவகப் பெருமாளே": "முருக மயூரச் சேவக-திருப்புகழ் 1251, 1273. "தேவதேவன் மெய்ச் சேவகன்"—திருவாசகம். "வைதிகத் தேர் ஏறிய ஏறு சேவகன்" திருவிசைப்பா.

சிகரநெ டுங்கிரி குகைகடி றந்துதி கந்தமும்
லோகாந்தமு நீர்தேங்கின
சிறையுள ழுந்திய குறைகளொ ழிந்துசெயங்கொடு
தேவேந்திரர் சேணுண்டனர்
திரிபுவ னங்களு மொருபய மின்றிவ ளங்கெழு
சீர்பூண்டற நேர்பூண்டன;

விடவச னஞ்சில பறையும*வி ரிஞ்சன்வி லங்கது
கால்பூண்டுதன் மேறீர்ந்தனன்
விகசித சுந்தர விதரண வைந்தரு வெந்தெழில்
வீவான்பொழில் பூவாய்ந்தது
விழைவுத ரும்பத †சசிதன்வி ளங்கிய மங்கல
நூல்வாங்குகி லாள்வாழ்ந்தனள்
வெருவியொ துங்கிமை யவரெவ ருஞ்சிறை வென்றித
மேலாம்படி யேமீண்டனர்
விழியொரி ரண்டொரு பதுசத நின்றெரி கண்டகன்
மேல்வாங்கிளை கால்சாய்ந்தது
வெளிமுழு துந்திசை முழுதும்வி ழுங்கியெ ழுங்கன
சூர்மாண்டற ‡வேர்மாய்ந்தது
விபுதர்ப யங்கெட நிருதர்த ளங்கெட விண்கெடு
மேடாம்படி பாடோங்கின
மிடைகுறள் வெங்கொடி கழுகுப ருந்து விருந்தென
ஆனூர்ந்தகல வானூர்ந்தன;

அடவிப டுஞ்சடை மவுலியில் வெம்பணி யம்பணி
யாமாங்கதர் வாமாங்கனை
அநுபமை யம்பிகை யநுதினை யபயைத்ரி யம்பகி
யாசாம்பரை பாசாங்குசை

* "தேர்ப்பாகன் மைந்தன் மறையோடு தெருமர***வாங்கு வேற்கார—திருப்புகழ்-757.

† "களிற்றூன் கிழித்தி கழுத்திற் கட்டும் நூல் வாங்கிடா தன்று வேல் வாங்கி"—கந்தரலங்காரம்-௭௭.

‡ "நிசிசரர் வேர்மாண்டிட வினையற வேல் வாங்கிய பெருமாளே":—திருப்புகழ்-480.

14. வேல்வாங்கு வகுப்பு.

அநகைய சஞ்சலை யதிகுண சுந்தரி யந்தரி
காலாந்தகி மேலாந்திரு
அமலைய லங்க்ருதை யபிநய பங்குரை சங்கினி
மானுங்கணி ஞானுங்குரை
அணிமுக பந்திகள் சிறுபொறி சிந்தவி ளைந்தழல்
வாய்கான்றிடு நாகாங்கதை
அபயவ ரம்புரி யுபயக ரந்திக ழுந்தணி
யாமாங்குறி தாய்மாண்பினள்
அதுலைத ருநதிரு மதலையி பங்கொள்ப யங்கொடு
பாய்மாண்கலை வாய்மாண்புன
அணிகுற மின்புணர் தணிகையி லந்தண னிந்திர
ராசாங்கம தாராய்ந்தவன் ;
வடவையி டும்படி மணிமுடி பருசெழ விஞ்சிய
மாடாமபுடை நாடாண்டகை
வசைகரு துங்குரு பதியொடு தம்பிய ரும்பட
வேபாண்டவர் தேரூர்ந்தவன்
வளவில்வ ளர்ந்திடை யகளிர்கு விநதுத டங்குடை
வார்பூந்துகில் வார்பூம்புயல்
வரைநிரை கன்றின முழுதும யங்கிய பண்கெழு
வேயேந்திய வாயான்கழல்
மருதிடை சென்றுயர் சகடுத டிந்தடர் *வெம்புளை
வாய்கீண்டொரு பேய்காய்ந்தவன்
மதசயி லம்பொர வரவிடு நெஞ்சினில் வஞ்சக
மாமான்பகை கோமான்றிரு
மருகனி ரம்பிய மதிமுக மஞ்சரி குஞ்சரி
வாகாம்பரை தோய்காங்கெயன்
மகபதி தன்பதி பகைகிழி யும்படி யன்றடல்
வாளோங்கிய வேல்வாங்கவே.

* புள்ளை வாய் கீண்டான் = விஷ்ணு. "புள்வாய் போழ்ந்து மாநிலங் கீண்ட பொருகடல் வண்ணனும்" [தேவாரம்-சம்பந்தர்-பேணு பெருந்துறை.]

15. புயவகுப்பு.

[முருகவேளின் பன்னிரு திருக்கரங்களின் செயல்களை எடுத்துக் கூறுகின்றது.]

வசைதவிர் ககன சரசிவ கரண மகாவ்ருத
சீல சால வர*முநி சித்தரை
யஞ்ச லஞ்ச லென்று வாழ்வித் துநின்றன
மணிவட மழலை யுடைமணி †தபனிய நாணழ
காக நாடி வகைவகை கட்டும
ருங்கு டன்பொ ருந்து ‡ரீதிக் கிசைந்தன
வருணித கிரண வருணித வெகுதரு ணாதப
சோதி யாடை வடிவுபெ றப்புனை
திண்மெச ழுங்§கு றங்கின் மேல்வைத தசைந்தன
வளைகட லுலகை வலம்வரு பவுரி விநோதக
லாப கோப மயில்வத னத்துவி
ளங்கு ||மங்கு சங்க டாவிச் சிறந்தன
வரைபக நிருதர் முடிபக மகர மகோததி
தீயின் வாயின் மறுகவி திர்த்தயில்
வென்றி தங்கு துங்க ¶வேலைப் புனைந்தன
மதியென வுதய ரவியென வளைபடு தோல்வி
சால நீல மணிபரி சைப்படை
கொண்டு நின்று முன்று சாதிக்க முந்தின

திருக்கரங்களின் செயல்களைக் கீழ்க்காட்டியவாறு திருமுருகாற்றுப் படையிலுள்ள முறையைத் தழுவிக் கூறுகின்றார்.

* "விண் செலன் மரபின் ஐயர்க் கேந்திய தொரு கை."

† தபனியம்=பொன்.

‡ "உக்கஞ் சேர்த்திய தொரு கை."

§ "நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசை இய தொரு கை." || "அங்குசங் கடாஅவ ஒரு கை."

¶ "இருகை, ஐயிரு வட்டமொடு எஃகு வலந் திரிப்ப."

மனகுண சலன மலினமில் துரிய அதீதசு
காரு பூதி மவுன நிர க்ஷர
மந்தி ரப்பொ ருந்தி *பார்பிற் றிகழ்ந்தன
வகைவகை குழுமி மொகுமொகு மொகென அநேகசு
மூக ராக மதுபம்வி ழுச்சிறு
சண்ப கஞ்செ றிந்த †தாரிற் பொலிந்தன;
மிசைமிசை கருவி வெளிமுக டளவு நிசாசர
சேனை தேடி விததிபெ றச்சில
கங்க ணங்க றங்க ‡மீதிற் சுழன்றன
வெருவுவ வெருவ எரிசொரி விழியுள பூதபி
சாசு போத மிகுதொனி பற்றிமு
ழங்கு விஞ்சு §கண்டை வாசிக் கைகொண்டன
விதமிகு பாத சுரவனி தையர்கண மேமெருறும
லீலை யாக ||விமலச லத்தினை
விண்டி றந்து மொண்டு வீசிப் பொலிந்தன
விதரண தருவின் மலரிடை செருகிய கூந்தள
நீப மாலை¶ விபுதர்கு லக்குலி
சன்ப யந்த செங்கை யானைக் கிசைந்தன
விகசித தமர பரிபுர முளரி தொழாவபி
ராம வேடா வியலைந்தி னைப்புன
மங்கை கொங்கை கண்டு வேளைப் புகுந்தன
விதிர்தரு சமர முறிகர கமல நகாயுத
கோழி வீற விதரண சித்ரவ
லங்க்ரு தம்பு னைந்து பூரித் திலங்கின

---

* "ஒரு கை மார்பொடு விளங்க."

† "ஒரு கை தாரொடு பொலிய."

‡ "ஒரு கை கீழ்வீழ் தொடியொடு மீமிசைக கொட்ப."

§ "ஒரு கை பாடின் படுமணி இரட்ட."

|| "ஒரு கை நீனிற விசும்பின் மலிதுளி பொழிய."

¶ "ஒரு கை வானர மகளிர்க்கு வதுவை சூட்ட — ஆங்கப் பன்னிருகையும் பாற்பட இயற்றி"—(திருமுருகாற்றுப்படை).

விரகுடை யெனது மனதுட னகில்பனி நீர்புழு
கோட ளாவி ம்ருகமத கற்புர
குங்கு மங்க லந்து பூசித் துதைந்தன
வினைபுரி பவனி தொழுதழு துருகிய கோதையர்
தூது போக விடுமது பக்ஷண
வண்டி னந்தி ரண்டு சூழப் படிந்தன;

இசைதனி லினிய கயிசிகை கவுட வராளித
னாசி தேசி பயிரவி குச்சரி
பஞ்சு ரந்தெ ரிந்து வீணைக் கிசைந்தன
இறுதியி லுதய ரவிகண நிகரென ஆறிரு
காது தோயு மிலகும ணிக்கன
விபுல குண்ட லங்கண் மேவிப் புரண்டன
எதிராபடு நெடிய தருவடு பெரிய கடாமுமிழ்
நாக மேக மிடிபட மற்பொரு
திண்சி லம்ப டங்க மோதிப் பிடுங்கின
எழுதரு மழகு நிறமலி திறலிசை யாகவு
தார தீர மெனவுரை பெற்றவ
டங்க ளுஞ்சி றந்து சாலத் ததும்பின
இருள்பொரு கிரண விரணிய வடகுல பாரிய
மேரு சாதி யினமென வொத்துல
கங்க ளெங்க ளுமப்ர காசித்து நின்றன
இயன்*முநி பரவ வொருவிசை யருவரை யூடதி
பா[illegible] கொ[illegible]† விவுளிமு கத்தவள்
கொங்கை கொண்ட சண்ட மார்பைப் பிளந்தன
இபரத துரக நிசிசரர் கெடவொரு சூரனை
மார்பு பீறி யவனுதி ரப்புனல்
செங்க ளந்து ளங்கி யாடிச் சிவந்தன

---

* நக்கீர முநிவர்.

† கற்கிமுகி என்னும் பூதம். "எதிரில் புலவர்க் குதவு**ராவுத்த ஞனவனும்" (வேடிச்சி காவலன் வகுப்பு).

எவையெவை கருதி லவையவை தருகொடை யான்* மணி
மேக ராசி† சுரபிய வற்றொடு
‡சங்க §கஞ்ச பஞ்ச சாலநதை வென்றன;
அசைவற நினையு மவர்பவ மகலவெ மேல்வரு
கால தூதரை யுடையு மப்படி
யங்கு மிங்கு மெங்கு மோடந டாநதன
அகிலமு மொனது செயலல திலையென யானென
வீறு கூறி யறவுமி குதமெழு
மைமபு லன்பி யங்கி விழுதத திமிர்ந்தன
அனலெழு தவச முடுகுல முதிரவி யோமமு
மேழு பாரு மசலமு மிக்கபி
லங்க ளுங்கு லுங்க வாவித் ததிர்நதன
அடனெடு நிருதர் தளமது மடிய வலாரிதன்
வானை யாள அரசுகொ டுத்தப
யம்பு குந்த அண்ட ரூரைப் புரந்தன
அடவியில் விளவு தளவலர் துளவு குராமகிழ்
கோடல் பாட லளிமுரல் செச்சைய
லங்கல் செங்க டம்பு நேசித தணிந்தன
அரியதொர் தமிழ்கொ டிரிமையொ டடிதொழு தேகவி
மாலை யாக ||அடிமைதொ டுததிடு
புன்சொ லொன்று நீநதி யாமற் புனைந்தன
அழகிய குமர னுமைதிரு மதலை பகீரதி
மாதர் வாழு மறுவர் பரியபபடு
கநத னெனதை ¶யிந்த்ர நீலச சிலம்பினன்
அநுபவ னநக னணிய னமல னயோகன
நேக னேக னபினவ னிதநிய
னஞ்ச லென்பர சண்ட வாகைப் புயங்களே.

---

* மணி = சிந்தாமணி. † சுரபி = காமதேனு.

‡ சங்கம் = சங்க நிதி. § கஞ்சம் = பதும நிதி.

|| "அடிமை சொலுஞ் சொற் றமிழ்ப் பனிரொடு பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே:— திருப்புகழ்—186.

¶ இந்த்ர நீலச் சிலம்பு = நீலோற்பலகிரி: திருத்தணிகை.

திருவகுப்பு.

16. சித்து வகுப்பு

[பல சித்திகள் பெறும் வழியைக் கூறி, முருகன் திருப்புகழைக் கற்றவரே சித்தருக்குள் மேலான சித்தரென்றது.]

அடல்புனைந்த வேலு மயிலு மென்றும் வாழி
யரிய தொன்று கூற வருகி ருந்து கேண்மின்
அளவில் பலகாய மோடாடி யண்ட
ரறிய விளையாட லாமூலி யொன்றில்
ஆசை வேறிலை யறுமுக வன்றிரு
வாணை மேருவை யடிதலை கண்டனம்
அகில லோகமு மடைவடை வேமுத
லருளி னோமது சிவனறி யாதல
அமையு மெனும்படி நின்றம நோரத
மவைமுழு துந்தரு வம்பத ருதுகொள்
ஆதியு முடிவுமி லாநந் தந்தரு
மாறிரு கரதல நாதன் றந்தவை
அவுஷத முளசில கிலுகி லுப்பைக
ளரசிலை நறுவிலி கரிய ககரி
அத்தி செமபி ராகை முட்காவளை
துத்தி சங்க மோரி தழ்த்தாமரை
அவுரி கற்றாழை பொடுவைகு றிஞ்சிலி
சிவிறி கததாரி பொடுதலை சண்பகம்
அரைகொடி வேலி வேல்காஞ்சிரம
வீரையிரு வேலி பேரீந்திலை
அமுக்கிணை யெருக்கிலை முருக்கிதழ் செருப்படை
யகத்தி தமரத்தை மதமத்தமொடு பித்திகை
ஆல மாத்தி கடுக்கை கொடிக்கழல்
கோலி தேட்கடை நெய்க்கொடை வக்கணை-
அகில்ப ரம்பை காரை துடரி தும்பை சூரை
யலரி சம்பு நாவன் மருது சிந்து வாரம
அறுகு தழுதாழை மாபாலை புனகு
புரசு பழுபாகல் பூலா வழிஞ்சில்

ஆயி லாவிரை யிறலியி ரும்பிலி
யாடி யாவணி புடமிட வென்றழை
அவனி பாடல மனல மகிருக
மிவைச மூலமு மெழுபது சாலடை
அதிம துரநதக ரஞசிறு பாலடை
பதிமுக வெநதய மின்கய மோதகம
ஆறிடை யபினரி தாரங் கநதக
நூறிடை திரிபலை யோசான றெண்பலம
அதிவிட யமுமொழி கிருமி சதகுவ
மனன்முறு கலுமற முறுகு துத்தமும்
அற்ப மொன்று கீரை விதமேதழிடை
யத்தி லொன்று பாதி தக்கோலமும்
அடவி கச்சோல நிமிளை நறும்பிசி
னரிதம் வெட்பாலை யரிசி கருங்கணி
ஆமலக மேல நான்மூன்றிடை
சேமசிலை கூட லோகாஞசனம்
அரப்பொடி கடிப்பகை விடத்திர ணமப்பிர
கசத்தைசத குபபிவிதை கொத்தமலி திப்பிலி
ஆலி கோட்ட மெலிபபகை சச்சிலை
நீலி காய்ச்சு நிலப்பனை கற்பிசின் ;

மடல்சி வநத தாழை மணவ சமபு நீலம்
வருகு ருமமை கோட றுருசு சமபி ராணி
மரிசி வசவாசி காசீச மஞசண்
மகிழ விதைமேதை மாமேதை குன்றி
வாரி வாய்நமரை சயில சலமபுரி
பூரி வாதுமை சணவுபெ ருங்குமிழ்
வடுவில் சிரக பலமயி ரோசனை
கடுகு ரோகணி சிவிதைம னோசிலை
வகைவகை கொண்டொரு மண்டல மோரொடு
குகையினி லெண்பது செமபினி லூறவை
வாதநல் வழிக ளநேகம் பண்ணையில்
வாகட மலகுரு நாதன் றநதது

வழிபடு மரியா பிரம ருட்பட
மொழிகிற வகையிது சிறிது பெற்றிலர்
மற்று மிந்த்ர சால முச்சாடன
முற்று மிங்ங னேத ரத்தாழ்விலை
மதலை யர்க்கிது மொழிவது பண்பல
கதவி னிற்றுழை யிடுபய மொன்றிலை
வாலுமுழை யோரி காராம்பசு
வாலின்மயிர் கீரி தேவாங்கழை
மரித்தவர் சனித்தகுழி யுப்புறு சலத்தினை
வடித்தினி தெடுத்தொரு குடத்தினி னிறைத்துவை
மாறி ரேத்திர வித்தை பலித்திடின்
மாடை சேர்க்க வருத்த முனக்கிலை.

மணம தின்று நாளை யெனமொ ழிந்து கேளு
மனைக ளெங்கு மோடி யினிவி ரைந்து தேடு
வளையல் குழைபிலி காலாழி தண்டை
மணிவ யிரவீடு மேலீடு செம்பொன்
வாளி பாடக மணிபிறை சங்கிலி
பாளை சூடக மயில மிலம்பகம்
மவுலி நூபுர மயிற்று வாசிகை
சவடி தோள்வளை முகவளை மேலவளை
மரகத குண்டலம் வெண்டய மேகலை
யாசிலை கம்பி குறுங்குணி சாலகம்
வாரணி மடைமணி யாரங் கிங்கிணி
வாகுவ லயநெளி பீடங் கண்டிகை
மணிமக ரிகைவளை திகிரி பட்டிகை
பணிகளி லழகிய பணிகள் கொக்கிகள்
வட்ட வம்பொ னோலை முத்தாவளி
சுட்டி சந்து காறைகைக் காறைகள்
வடக முத்தோலை யரைவட முஞ்செறி
கடகம் வித்தார மகர நெடுங்குழை
மாதாணி தாலி நூல்காஞ்சன
மாலிகை மதாணி பீதாம்பரம்

மதிப்பரிய கைச்சரி சரப்பணி யிலச்சினை
பதக்க மிவையுட்பட வணிப்படல மிட்டுவை
மாடை பாட்டிபு தைத்த குடப்பண
மோடு கூட்டியு ருச்சுவி ருப்புடன் ;
இடுப்ர சங்கி யாம ளாலய நநத கோடி
யெரியில் வெநதி டாத கரிசி ரம்ப வேணும்
இதுபஞ்சய கவுரி பாஷாண வுண்டை
யிடுரகல வேதி பூரக செம்பின்
ாய மானதொ ரிரதமு மெண்பல
மேழு கோடியு மிரவு சிவந்திடும்
யமுனை நீர்கொடு குகைபதி னாயிர
மிறுக வேசமை நிலவறை யூடுவை
எழுபதொ டெண்பது வண்டியி லேபத
ரிடுகொடு வந்து சொரிந்து குவாலிடு
யாமொழி படரச வாதந் தந்தன
நீசிவ குருவுப காரங் கண்டிரு
இரதமொ டுருகிய சருகு பித்தளை
யிவையிவை குகைதொறு மிடை நறுக்கிவை
எற்ற வநதி ராது பொய்க்காளல
வெட்டி ரண்டு மாறு தப்பாதுகொள்
எழுப தக்ரோணி புடமுள செங்களம்
ரணமு கத்தானை படையொடு வநதிரு
ஈழம்வெகு கோடி யானிநதிட
வேழுநீல மாட நீமேய்ந்துகொ –
இபத்திர ஞரித்தன பருத்தன துருத்திக
ளிலக்கற வுனக்கரு கடுக்கிவை சடக்கென
யாவும் வாய்ப்பது சதய முனக்கிவை
யேழு நாட்டரு மெத்த விளைத்தனம்

இறைவர் குன்ற மானை மணம்கிழ்நத நாளி
வினையி லண்ட ரோடு முனவு கொண்ட தாகும்
எமது பசிதீர மாராச விந்தா
வமுது படைபோத வாகாச கங்கை

யாறு போலநெய் சொரிவட கம்படை
நூறு சாலொடு பொரியலை யிங்கழை
இடுக மாவடு வடையிடை கீரையி
லவண மீறிய கறியுடை வேபடை
இருபது தண்டை யுடும்பு குவால்சமை
அருவைகள் பன்றி சமைநதவெ லாமழை
யாமையை யழைமுய லாணங் கண்டறி
யோமிது சிவசிவ மேலெங் குமபடை
இடைவெளி யறமிகு விடுக ருக்கலை
யிறவகை கயல்கெளி றிவைபொ டித்தன
எட்டு வண்டி வாளை யிப்பிலியி
விட்ட முண்டு தியன் முற்பாடழை
இடைகொ ழுப்பாடி லிளையவெ லும்புட
னடைசு ரைக்காயி லடுபடை முன்கறி
ஈறுபுளி வார்வி டாய்போமபடி
யேடு பிரியாத பாறேன்சொரி
இருக்கிற சருக்கரை வருக்கை கதலிக்கனி
ரசத்தினை யனைதமைதபு மிலைக்கு ளடையப்படை
ஈக பாக்குடன் வெற்றிலை கர்பபுரம
யாரு மேத்த விளிச்சுக முற்றிரு ;

மிடைத ரும்ப்ர வாள சடைபெ ருமப்ர வாக
விமலர் கொன்றை மாலை தருண சந்த்ர சேகை
விரவு மணநாறு பாதார விந்த
ஸ்ரீமண் விநோத மாதாவின் மைந்தன்
மீன கேதன னுருவின் மிகுநதரு
டான வாரிதி சரவண சமபவன்
விகிர்தி வேதனன் மவுன சுகாதன
னகில காரண னகில கலாதரன்
விகசித சுந்தர சநதன பாளித
ம்ருகமத குங்கும கஞ்சப யோதரி
வேழமு முழைகளு மாரும் பைம்புன
மேவுறு குறமகண் மேவுந் திண்புயன்

விரிகட றுகளெழ வெகுளி விக்ரமன்
அரிதிரு மருமக னறுமு கத்தவன்
வெட்சி கொண்ட தோளன் வெற்பூடற
விட்ட வென்றி வேன்முரு கசேவகன்
விரவு நக்கீரர் சரணெனை வந்தருள்
முருக னிஷ்க்ரோத முநிதுணை பஞ்சரன்
மேதகுபு ராண வேதாங்குர
ஞேதரிய மோன ஞானங்குரன
மிகைத்தவா புரதரய மெரிததவா ப்ரியப்பட
அகஸ்திய முநிக்கொரு தமிழ்த்ரய முரைத்தவன்
வேத மூர்த்தி திருத்தணி வெறபுறை
சோதி கார்த்திகை பெற்ற விளகமொளி

வெகுளி வென்ற வேள்வி முநிவா சங்கமேற
விரவு மிநதர லோக வழிதி றந்த மீளி
மிகவிருது கூறு பேவார்கள் கண்டன்
விகட வசுரேசர் சாமோது சண்டன்
மேக வாகன மிகுமத வெண்கய
பாக சாதன னகரி புரந்தவன்
விபுத தாரகன் விபுத திவாகரன்
விபுத தேசிகன் விபுத சிகாமணி
விபரித கஞ்ச விரிஞ்ச பராமுக
னபினவ கந்த னடைந்தவர் தாபரன்
மேருவை யிடிபட மோதுஞ் சங்ரம
தாரகன் மகுட விபாடன் புங்கவன்
வெயிலுமிழ் கொடியொடு வினைமு கத்தினின்
மயில்மிசை வருமொரு வரத னிர்ப்பயன்
வித்தகன் சுவாமி நிர்ப்பாவகன்
சத்தியன் ப்ரதாப வித்யாதரன
விரத நட்பாளர் பரிபும சஞ்சல
னிருத நிட்டூர னிருதர் பயங்கரன்
வீரமத லோக வேள்காங்கெயன்
சூராண சூர சூராந்தகன்

வினைப்பகை யறுப்பவ னினைத்தது முடிப்பவன்
மனத்துயர் கெடுத்தெனை வளர்த்தருள் க்ருபைக்கடல்
வேலன் வாய்த்த *திருப்புகழ் கற்றவர்
சில மேத்திய சித்தப்ர சித்தரே.

---

17. கடைக்கணியல் வகுப்பு.

[முருகக்கடவுளின் † கடைக்கண் நோக்கின் பெருமையை விளக்கிறது.]

அலைகடல் வளைந்து டுத்த வெழுபுவி புரந்தி ருக்கு
மரசென நிரந்த ரிக்க வாழலாம்
அளகைய ரசன்ற னக்கு மமரர ரசன்ற னக்கு
மரசென அறஞ்செ லுத்தி யாளலாம்
அடைபெறுவ தென்று முத்தி யதிமதுர செந்த மிழ்க்கு
மருள்பெற நினைந்த சித்தி யாகலாம்
அதிரவரு மென்று முட்ட அலகில்வினை சண்டை நிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி யாகலாம் ;

---

* "கருப்புகழாம் பிறசமயக் கதைகேளா தநுதினமுன்
திருப்புகழை யுரைப்போர்க்குச் சித்தியெட்டு மெளிதாமே."
[தணிகைக் கலம்பகம் - க.]

† "கருவெந்து வீழக் கடைக்கணித்து"-திருவாசகம்.
திருத்தெள்ளேணம் (ரு)

"நின்னருட் கண்ணால் நோக்காதா ரல்லாதாரே"-
(தேவாரம்-அப்பர்-ஆரூர்)

"தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே."
(அபிராமி அந்தாதி-சுக)

இலகிய நலஞ்செய் * புட்ப கமுமுட னிறம் வெளுத்த
† இபவர செனும்பொ ருப்பு மேறலாம்
இருவரவர் நின்றி டத்து மெவரெவ ரிருந்தி டத்து
‡ மொருவனிவ னென்று ணர்ச்சி கூடலாம்
§ எமபடர் தொடர்ந்த லைகளி லவருட னெதிர்ந்து ளுட்க
இடியென முழங்கி வெற்றி பேசலாம்
|| இவையொழிய வுப்ப லிப்ப தகலவிடு முங்கள் வித்தை
யினையினி விடும்பெ ருத்த பாருளீர்;

முலையிடை கிடந்தி லைப்ப மொகுமொகென வண்டி னைப்ப
முகையவிழ் கடப்ப டுத்த தாரினான்
முதலிபெரி யமப லத்துள் வரையசல மண்ட பத்துண்
¶ முநிவர்தொழ வன்று நிர்த்த மாடினான்
முனைதொறு முழங்கி யொற்றி முகிலென விரங்க வெற்றி
முறைநெறி பறந்து விட்ட கோழியான்
முதியவுண ரன்று பட்ட முதியகுடர் நன்று சுற்று
முதுகழுகு பந்த ரிட்ட வேலினான்;

---

*புட்பகம்=குபேரனது விமானம். † இப அரசு=ஐராவதம்.

‡ "உலகத் தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில்"-திருமுருகாற்றுப்படை.

"ஒருத்தனும் வகை திருவருளாலே"-திருப்புகழ்-173.

§ "தண்டாயுதமுந் திரிசூலமும் விழ..." கந்தரலங்காரம்-(௨௫).

|| இவை யொழியவும் = மேற் கூறியனவே யன்றி ; பலிப்பது=தோன்றி விருத்தியாவது ; பிறவி [illegible] அகலவிடும்=நீங்கச் செய்யும், அதாவது, பிறவி யொழியும்; உங்கள் வித்தையினை இனி விடும் என்றது-"உலக கலைகளும் அலம் அலம்" [திருப்புகழ்-912] என்றது போல.

¶ அரிதுயில் சயன வியாள மூர்த்தனு
மணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனு
மரிதென முறைமுறை யாடல் காட்டிய பெருமாளே.
[திருப்புகழ்-650.]

மலைமக ளுமைதரு வாழ்வே மனோகரா—மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவா நமோநம : [திருப்புகழ்-611.]

மலைமருவு பைம்பு னத்தில் வளருமிரு குன்ற மொத்த
* வலிகுடி புகுந்தி ருக்கு மார்பினன்
மழலைகள் விளம்பி மொய்த்த அறுவர்முலை யுண்டு முற்றும
வடிவுடன் வளர்ந்தி ருக்கும் வாழ்வினன்
மலையிறை மடந்தை பெற்ற வொருமதலை யென்று நித்த
மலையிடிய வுகந்து ணித்த தோளினன்
மயிலையு மவன்றி ருக்கை யயிலையு மவன்க டைக்க
ணியலையு நினைந்தி ருக்க வருமே.

---

18. சிவலோகவகுப்பு.

[மௌன யோக நிலையால்வரும பேரின்ப அன்பெனப்படுஞ் சிவலோகந் தருவதான சிறப்புக்களை எடுத்துக் கூறிற்று.]

உரகமு மிதழியு முதகமு முடுபதி யுமபுனை
யும்பஞ் சாட்சரர் பங்கின் கொடிதாளினில்
உலகமு மலைகளு முததியு முயிரும டங்கவொ
டுங்கும் பார்ப்பதி மைந்தன் † கமலாலயன்
உபநிட முடிவினு மிடபம தனிலுமு யங்கிவ
யங்குஞ் சீர்ப்பதி யொன்றென் றவிதாவென
உறைவிடு படையினை யுடலுடை நிசிசரர் தண்டமு
டைந்தங் காப்பெழ வங்கம் பொருசேவகன்;
வரபதி சுரபதி சரவண மடுவினில் வந்தருள்
கந்தன் கார்த்திகை யன்செங் கழுநீர்மலர்
மருவிய குருபரன் வனசரி பதயுக கஞ்சம்வ
ணங்கும் பாக்கிய தமபன் கருணாகரன்

---

* "சுரிகுழல் மடந்தை துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடி கொள் வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்கு மார்பினனே"-திருவாசகம்
அருட்பத்து. (ரு)

† கமலாலயன் = சரவணத்திற் பதுமப்பாயலில் இருந்த முருகன். "வனசமேல வருதேவா"-திருப்புகழ்-150, "சரவணை தனில் முளரியின் வரு முருகோனே-திருப்புகழ் 133.

வடதரு விலையிலும் வெகுமுக மவுலிய னந்தனை
னுஞ்செநு சேகரைகயி லுங்கண் டுயின்மாறிரு
மருமக னிமையவர் வழிபடு மணியணி * கிங்கிணி
பண்கொண் டார்த்திசை கொஞ்சும் பதகுடிகை ;
அருவுரு வொழியவொ ரபிநவ வடிவரு ளுநதனி
யநதந தீசை ஈசெ னுங்குன் டலபூஷணம
அணிமய மெனுமொரு சிவிகையொ டிருணை மஞ்சினு
மனுசொன் றுக்கிய தென்பொங் கரியாசனம்
அறநெறி முறைமையி லொழுகிய வழகிய பண்பெனு
மமபொன் சேர்த்தக லியகரு சபசாரமும்
அவனவ ளதுவென மொழிபவு மிலதொரு வன்பிணி
யுங்கொண் டாக்கமு மின்பங் களுமேதரும்;
இரவலர் மிடிகெட வுதவிய விதரண கங்கண
மிங்கங் காப்பிலெ னுருகந தரகாகளம்
எனதற தறவினு முயர்கொடை யவிரத சங்குல
கெங்கும் கேட்டுவ முங்கும பொறைமாமுர
சிமையவர் கணமுனி கணமுட னினிதுப்ர பஞ்சமி
றைஞ்சுங் கீர்த்திது ரங்கந திறல்வாரணம்
இருவினை கெடவொரு நிரமய பரமவு னதரு
மின்பந் தேக்கிய வன்பின் சிவலோகமே.

---

19. மயில் வகுப்பு.

ஆதவனு மம்புலியு மாசுறவி ழுங்கியுமி
ழாலமரு வும்பணியி ரண்டு மழுதே
ஆறுமுக னைநதுமுக ஞனமுக னெங்கடவு
ளாமெனமொ ழிந்தகல வென்று விடுமே

---

* கிண்கிணி பண் கொண்டு ஆர்த்து இசை கொஞ்சும ; முருகபிரானது திருவடியிலுள்ள கிண்கிணி தண்டை முதலியன கீத பேதங்களைக் காட்டும் , மேற்கோள் :—

" இசைத்திடுஞ் சந்தபேத மொலித்திடுந் தண்டை"- திருப்புகழ்-15, " கீதகிண்கிணி பாதா-" திருப்புகழ் - 100, சதங்கைதரு கீதம்—ஷை 204, நாதகீத கிண்கிணி—ஷை 236.

ஆர்கலிக டைந்தமுது வானவ ருந்தவரு
ளாதிபக வன்றுயில நந்தன் மணிசேர்
ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி
யாகமுழு துங்குலைய வந்த தையுமே;
வேதமுழு துமபுகலி ராமனொரு தம்பியிசை
வீடணன ருந்தமையன் மைந்த னிகலாய்
வீசுமர வஞ்சிதறி போடவரு வெங்கலுழன்
மேலிடி யெனும்படிமு ழங்கி விழுமே
மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக
மேவுசர ணங்கொடுல கெங்கு முழுமே
வேலியென வெண்டிசையில் வாழுமுரா கந்தளர
வேயழலெ னுஞ்சினமு டன்ப டருமே;
போதினிலி ருந்தகலை மாதினைம ணந்தவுயர்
போதனை யிருந்துமலர் கொண்டு முறையே
பூசனைபு ரிந்துகொடி யாகிமகி ழொன்றுதுகிர்
போன்முடிவி ளங்கவரு *மஞ்ச மடுமே
பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
பூரணக ணங்களொடு வந்து தொழுமே
போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர்
போயினமெ னும்படியெ திர்ந்து விழுமே;
கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில்
கோலவுட லங்கருகி வெந்து விழவே
கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள்
கூடிமன மஞ்சிவளை சென்று புகவே
கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு
கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே
கோலமுறு செந்திநகர் மேவுகும ரன்சரண
கோகனத மன்பொடுவ ணங்கு மயிலே.

---

* அஞ்சம்=ஹம்ஸம்: அன்னப்பக்ஷி (பிரமன் வாஹனம்.)

20. கொலுவகுப்பு.

அருமறை யவன்முத லரியரன் மகபதி
யரங்க ளிமையோ ரினங்க ளொருபால்
அருணனு மதியமு மனலெழு கனலியு
மணங்கி னொடுசூழ் கணங்க ளொருபால்
வருணனு நிருதியும வழியொடு தனதனு
மகிழ்ந்து மிகவே புகழ்ந்த தொருபால்
வயிரவ ரொடுபட ருவணரு முரகரும்
வரங்கள் பெறவே யிரங்க வொருபால்
இருடிக ளெவர்களு மினியகி னரர்களு
மிணங்கி யெதிரே வணங்க வொருபால்
இபமுக வனுமெழி லிளவல்க ளனைவரு
மியன்ற நெறியே முயன்ற தொருபால்
உருமலி குறளின மொடுவசு முசுமுக
னுறைந்து பரிவாய் நிறைந்த தொருபால்
உடுவொடு நடவுப னிருவரு முறைமுறை
யுகந்து தொழவே மிகுந்த தொருபால்;
அடல்விடை முகனறை கதையுற வெகுசன
மதுங்கி யருகே யொதுங்க வொருபால்
அயன்முடி திருகிய வயவனு நியமமொ
டடங்கி வலமே தொடங்க வொருபால்
மடல்புனை புகமொடு வருபதி னொருவரு
மருங்கி னுறவே நெருங்க வொருபால்
மருவொடு துவரிரு வருமிசை வலமொடு
வசிந்து மனமே கசிந்த தொருபால்
மிடலிறை விறலரி விமலர்க ளருள்சுதன்
வியந்து விரைவாய் நயந்த தொருபால்
வெயில்விரி சுடரவன் மகனொடு மதிமகன்
விளம்பு முறையே கிளம்ப வொருபால்
உடலொளி மவுனிக ளுடனுப னிடதரு
முளங்கு ளிரவே விளங்க வொருபால்

உமைதிரு மகணில மகள்கலை மகளொடு
முகநதெ வருமே   தொகுந்த தொருபால்;
அதிபகி ரதிபயி ரவிபக வதிசசி
யரம்பை யருமே   நிரம்ப வொருபால்
அழகிய கவுரியொ டிலகிய வலவையு
மடைந்து தயவாய்   மிடைந்த தொருபால்
மதியர சருநிறை வசியரும் வினைஞரு
மலிநது முகமே   பொலிநத தொருபால்
வருசிவ னடியவ ரரகர வெனமுறை
வழங்கு கடல்போன்   முழங்க வொருபால்
விதிமுறை கருதியை வகைபுரி கருவிகள்
விளைநத வொலிவா   னளைந்த தொருபால்
விதமுட னபிநய வனிதையர் சதிமுறை
விரிநத நடமே   புரிந்த தொருபால்
உதிர்தரு மலர்விரை யுறுபுகை ம்ருகமத
முமிழ்நத மணமே   கமழ்ந்த தொருபால்
ஒழுகிய கிரிதொடு பணிதம தடுசுட
ருவநத வொளியே   நிவநத தொருபால்;
அரியக டெனமுக டளவிய வொருகுடை
யமர்ந்த நிழலே   சமைந்த தொருபால்
அருமட வனமென விருபுடை கவரிக
ளசைநத வழகே   யிசைந்த தொருபால்
வரிசைசெய் துயிலொடு வனமயில் சிவிறியின்
வயங்கு சிறுகா   லியங்க வொருபால்
மறுகட லினிலெழு நிறைமதி யமுதென
வரிநது பனிநீர்   சொரிநத தொருபால்
விரியிருள் வலிதரு கிரணம தெனநல
மிகுஞ்சு ழலிவ்வி   சுகுஞ்ச மொருபால்
வியன்மர கதமணி மிளிர்தரு களசெதிர்
விரைந்து நிரையாய்   நிரைநத தொருபால்
உரியவெ ளிலையுட னுயரிய கமுகினி
லுகுந்த கனியே   பகுந்த தொருபால்

உலகுள வனைவரு மவரவர் விரதமொ
டுணர்ந்து கனியே கொணர்ந்த தொருபால்;

அறுகதி ரவனென அறுமணி மவுலிக
ளடர்ந்து வெயிலே படர்ந்த தொருபால்
அறுமதி யெனவறு திருமுக சந்திர
அலர்ந்த மலரே மலர்ந்த தொருபால்

மறுவறு கடலென மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால்
வனைதரு மகரமு மணியணி பணிகளும
வயங்கு குழையே தயங்க வொருபால்

இறுகுபொன் மலையொடு மிடறுப னிருபுய
மிசைந்து நெடுவா னசைந்த தொருபால்
எழிலியை யனையப னிருகைய லயின்முத
லிலங்கு படையே துலங்க வொருபால்

உறுவரை யருவியை நிகர்தரு முபமிசை
யுடன்கொள் புரிநூல் கிடந்த தொருபால்
உருமென விகலிமு னெதிர்பொரு மவுணரு
ளுடைந்த வுடைவாள் சிறந்த தொருபால்;

அருவர தமுமறை முறையிடு பரிபுர
மலங்கு மிருதாள் குலுங்க வொருபால்
அளவறு கலவியின் முழுகிய குறமக
ளமர்ந்து ளொளியிலாய் நிமிர்ந்த தொருபால்;

வனைதரு வினிலுறை சதமக னருண்மகள்
வதிந்து மணமே பொதிந்த தொருபால்
வருமடி யவரிடம் வலியச நதம்வர
வளர்ந்த சபையே கிளர்ந்த தொருபால்

நினைவொடு பணிபவர் வினைதுகள் படவெதிர்
நினைந்து திருநீ றணிந்த தொருபால்
நிறைமல ரொடுநல கலவையு முயர்குரு
நினைந்து தரவே புனைந்த தொருபால்

தினகர னுலவுசு நிதியினி லிரவலர்
தெளிந்த தமிழே பொழிந்த தொருபால்
சிவபர கிரியினி லொருசிவன் வடிவொடு
திருந்த முருகோ னிருந்த கோலுவே.

---

21. வீரவாள்வகுப்பு.

[வீரவாகு தேவரின் வாட்படையின் சத்தியைக் கூறிறது.]

பூவுளோ னுக்குமுயர் தேவர்கோ னுக்குமெழு
பூவில்யா வர்க்கும்வரு துன்புதீர்த் திடுமே
பூதசே னைக்குளொரு கோடிசூர் யப்பிரபை
போலமா யக்கிரிய கங்குனீக் கிடுமே
பூநிபூ சிப்பரமர் தோலைமே விட்டதொரு
போர்வைபோ னெட்டுறைம ருங்குசேர்த் திடுமே
போரிலே நிர்த்தமிடு வீரமா லக்ஷ்மிமகிழ்
பூசைநே சித்துமலர் தும்பைசாத் திடுமே;
பாவரு பக்கொடிய சூரனா் பெற்றபல
பாலர்யா ளத்தசைக ளுண்டுதேக் கிடுமே
பாநுகோ பப்பகைஞன் மேனிசோ ரக்குருதி
பாயவே வெட்டியிரு துண்டமாக் கிடுமே
பாடுசேர் யுததகள மீதிலே சுற்றுநரி
பாறுபேய் துய்த்திடநி ணங்களூட் டிடுமே
பாடியா டிப்பொருத போரிலே பத்திரக
பாலிசூ லப்படையை வென்றுதாக் கிடுமே;
ஆவலா கத்துதிசெய் பாவலோர் மெய்க்கலிக
ளாமகோ ரக்களைக ளோந்துநீக் கிடுமே
யாருமே யற்றவனென் மீதொரா பத்துறவ
ராமலே சுற்றினுமி ருந்துகாத் திடுமே
ஆடல்வே ணற்படைக ளாணையா வுக்குமுத
லாணையா வைத்துவலம் வந்துபோற் றிடுமே
ஆலகா லத்தைநிகர் காலசூ லத்தையும
ருதபா சத்தையும ரிந்துபோட் டிடுமே;

மேவலார் முப்புரமு நீறவே சுட்டவொரு
மேருவாம விற்பரமர் தந்தபாக் கியவான்
வேடர்மா னுக்குமுயர் தேவயா னைக்குமிசை
வேலர்தா ளைத்தொழுது யர்ந்தவாழ்க் கையினன்
வீறுசேர் மிக்ககண நாதனு மொட்டுவகை
வீரர்நே யத்தமைய னென்றதோட் டுணைவன்
மேன்மையாம் லக்ஷ்ரத வீரர்பூ சிக்கவரு
வீரவா குத்தலைவன் வென்றவாட் படையே.

---

22. சிவகிரி வகுப்பு.

மெத்த மெத்த வக்ர மத்தின்
மெத்த மெத்த விக்ர மத்தின்
மெத்த மெத்த வுக்ர வெற்றி மிகுபாசமே-
விட்டு விட்டு றுக்கு றுக்கு
கட்டு கட்டு குத்து குத்து
வெட்டு வெட்டெ னச்சி னத்து நமனுடியே;
சத்த மிட்ட தட்டி கெட்டெ
யிற்றி னைக்க டித்து றுக்கு
தர்க்க மிட்டெ னைப்பி டிக்க வருபோதிலே-
தத்த ளிக்கு புததி யைத்தி
டப்ப டுத்தி யொத்தி டத்த
ணிப்பு றுத்தி மெய்த்து ணைக்கு வரவேணுமே;
எத்த லத்து மெப்ப திக்கு
மெப்ப டிக்கு மெச்ச ரித்து
நற்ப தத்தை யுச்சரிக்கு நினைவாகியே-
இட்டம் வைத்த வர்க்க நுக்ர
கச்ச முத்ர வித்தை யிற்ப்ர
சித்த நித்ய முத்த மிழ்க்கு மருள்போதனே;
அத்ர பத்ர சித்ர மிட்ட
யிற்ப டைத்த யிற்கி ணைத்த
லர்க்க ணுற்ற பொற்கு றத்தி மணவாளனே-

அத்த னுக்கு மைக்கி தத்த
புதா சிதந்தி முகந்தி யைச்செ
யற்பு தச்சி வக்கி ரிக்குள் முருகேசனே.

---

23. திருச்செந்தில் வகுப்பு.

சந்தபந்த முந்து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சங்க மங்க லம்பொ ருந்து தமிழ்பா டியே-
தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்ச வஞ்சர்
தங்கண் முன்பு நின்று நின்று மெலிவோ தியே ;
சிந்தைநொந்து நொந்துநைந்து நைந்துவெம்பி வெம்பி யங்கி
சிந்தி யிந்த வெங்கு டம்பை யழிபோ துமா-
சிங்கமுன்பு குந்தகந்தி யின்கு லங்க லங்கு பண்பொ
சிந்த துன்ப மென்றொ ழிந்து கரையேறுவேன் ;
அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
சைந்த சைந்து பந்தெ ழும்ப அசுராதியோர்-
அங்க டங்க டுண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த அடர்கோபனே ;
கந்த சந்த நங்கு கும்ப கொங்கை யிந்தி ரன்ம டந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி யணிநேயனே-
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி குந்தி டுந்தி றஞ்செ றிந்த
கஞ்ச நன்ற லர்ந்த செந்தின் முருகேசனே.

---

24. திருப்பழநி வகுப்பு.

எந்தவினை யும்பவமு மெந்தவிட மும்படரு
மெந்தவிக லும்பழியு மெந்தவழு வும்பிணியு
மெந்தவிகழ் வுங்கொடிய வெந்தவசி யுஞ்சிறிது
மணுகாமலே-
எந்தவிர வுந்தணிமை யெந்தவழி யும்புகுத
வெந்தவிட முஞ்சபையி லெந்தமுக மும்புகலு
மெந்தமொழி யுந்தமிழு மெந்தவிசை யும்பெருமை
சிதறாமலே ;

வந்தனைசெய் துன்சரண நமபுதல்பு ரிந்தவருள்
வந்தநுதி னந்தனிலு நெஞ்சினினை வின்படிவ
ரந்தரவு வந்தருளி தம்பெறுவ தன்றிநெடு
வலைவீசியே-

வஞ்சவிழி சண்டனுற கின்றபொழு துங்குமர
கந்தவென நன்கறைய வுந்தெளிவு தந்துயிர்வ
ருந்துபய முந்தனிமை யுந்தவிர அஞ்சலென
வரவேணுமே ;

தந்தனன தந்தனன டிண்டிகுடி டிண்டிகுடி
குண்டமட குண்டமட மண்டமென நின்றுமுர
சந்திமிலை பம்பைதுடி திண்டிமமு ழங்குமொலி
திசைவீறவே-

தண்டவமர் மண்டசுரர் மண்டைநிண மென்றலகை
யுண்டுமிழ்தல் கண்டமர ரிந்திரன் வணங்குபத
தண்டைசிறு கிங்கிணி புலம்பிடவ ரும்பவனி
மயில்வாகனு ;

சேந்தளிரை முந்துபட மென்றுளம ருண்டுநிறை
சந்தனவ னங்குலவு மந்திகுதி கொண்டயல்செ
றிந்தகமு கின்புடைப துங்கிடவ ளைந்துநிமிர்
யடல்சாடவே-

சிந்தியவ ரம்பைபல வின்கனியில் வந்துவிழ
மென்கனியு டைந்தசுளை விண்டநறை கொண்டுசிறு
செண்பகவ னங்கள்வளர் தென்பழநி யம்பதியின
முருகேசனே.

---

25. திருப்பரங்கிரி வகுப்பு.

சாதியுங்குல மாவதுங்குடி யாவதுஞ்சன மாவதுங்கிளை
தாரமுந்திர பாலரும்பிர தானமும்பெரு காண்மை யும்பெறு
தானமும்பகு மானமுஞ்சிவ ஞானமும்பல கோலமும்புரி
தொழிலோடுமே-

தாழ்வகனறிடு வாழ்வும்வெம்பிணி நோயுமங்கதி லாதுரந்தனி
லாவதுந்தளர் சாவொழிந்திடு யோகமுஞ்சிவ பேறுமெந்தனி
தானமுஞ்செய்த ராசுகண்டது போல்வரும்பொது வாகுமென்றுன
திருதாளையே ;

ஓதிநெஞ்சய ரார்திநந்திரி காலமுந்தொழு வோர்விரும்பிய
தேதுமன்புட னேதருங்க்ருபை யாகவந்தரு பூதிதந்துமு
னூல்கடந்திட வேபுரந்தருள் கூருமிங்கித சேவைநம்பிய
படிகாநவே-

ஓகைவந்தனை யாய்வணங்கிய வேழைசிந்தையு ளேநினைந்திடு
வேளைவந்தினி தாய்வரந்தர வேணுமென்றக மேவருந்திய
மோகினன்றின நான்விளம்புத லேயறிந்தும் தேனிரங்கிலை
யறிவேனையா ;

ஆதியந்தம னாதிவிந்துவு நாதமும்பிரி யாநிறைந்தவ
ரூபவின்பசொ ரூபசுந்தர சோதிமின்பொலி நீநியம்பொரு
ளாகநின்றப ராபரன்கரு ணாலயன்புல வோரிறைஞ்சிட
வெதிர்காளிவா-

தாடலின்செக சேகிணங்கிண சேகுடண்டம டாடமண்டம
தாகிணங்கிண தோதிணங்கின தாதிமிந்திமி தோவெனுந்தொனி
யார்சிலம்பொலி தாளமிஞ்சிட வேநடம்புரி பாதநம்பர
னருள்பாலனே;

மாதிரந்திசை யாகவந்திக டாசலந்திரை மாசலம்புவி
மாகமண்டக டாகமும்பொனின் மேருவின்றலை யேகுலுங்கிட
வாசமொன்றிய காலபொருந்துகள் வானிரம்பிட வேவருங்கதிர்
வடிவேலனே-

வானரங்கதிர் தாவுதண்டலை மேவுகொண்டலை யூடுநின்றலை
மாவினங்கனி கூருநண்பொடு கோகநஞ்செறி வாவிசிந்திய
பாலருந்திய போசிறந்திரு மூவர்விஞ்சையர் சூழ்பரங்கிரி
முருகேசனே.

---

* பால் அருந்திய இருமூவர்=பராசரமுனிவர் புத்திரராகிய அறுவர் திருப்பரங்கிரியிற் பேறுபெற்றனர். [கந்தபுராணம்].

திருவகுப்பு

பொருளடக்கம்

வகுப்பின் எண்.		பக்க எண்.	வகுப்பின் எண்.		பக்க எண்.
17	கடைக்கணியல் வகுப்பு ..	சஉ	15	புய வகுப்பு ...	ஙஉ
20	கொலு வகுப்பு ...	சஎ	6	பூத வேதாள வகுப்பு ...	கக
16	சித்து வகுப்பு ..	ஙகூ	5	பெருத்த வசன வகுப்பு ...	க0
22	சிவகிரி வகுப்பு ..	ருக	7	பொருகளத் தலைகை வகுப்பு	கஎ
18	சிவலோக வகுப்பு	சச	9	போர்க்களத் தலைகை வகுப்பு	உ0
1	சீர்பாத வகுப்பு ...	க	19	மயில் வகுப்பு ...	சரு
23	செந்தில் வகுப்பு	ருஉ	21	வீரவாள் வகுப்பு	ருய
8	செருக்களத் தலைகை வகுப்பு	ககூ	12	வேடிச்சி காவலன் வகுப்பு ...	உரு
13	சேவகன் வகுப்பு	உஅ	3	வேல் வகுப்பு ..	ரு
10	ஞானவேழ வகுப்பு	உஉ	14	வேல்வாங்கு வகுப்பு ...	உங
11	திருக்கையில் வழக்க வகுப்பு	உச	4	வேளைக்காரன் வகுப்பு ...	எ
2	தேவேந்திர சங்க வகுப்பு ...	ச			
25	பாங்கிரி வகுப்பு...	ருங			
24	பழநி வகுப்பு ...	ருஉ			

திருவகுப்பு முதற்குறிப் பகராதி

முதற் குறிப்பு.	வகுப்பின் எண்.	முதற் குறிப்பு.	வகுப்பின் எண்.
அடல்புனைந்த	16	சடலைபட்டலை	10
அதிர்த்த பரிபுர	7	சந்த பந்த	23
அருக்க னுலவிய	5		
அருண கணபண	6	சாதியுங்குல	25
அருமறை	20		
அலைகடல்	17	தரணியி	2
		தருககுவ	11
ஆதவனும்	19		
ஆனபய	4	திடவிய	14
இருபிறை	13	பகலிரவின்றி	9
		பருததபுலை	3
உததியிடை	1		
உதரகமலததினிடை	12	பூவுளோனுக்கு	21
உரகமும்	18		
		மேத்த மெத்த	22
எந்தவினை	24		
		வசைதவிர	15
குதிரைத் திரள்பட்	8		

திருவகுப்பு ஆராய்ச்சி

திருப்புகழ் போலச் சந்தப் பாவால் அமைந்த இந்நூல் முருகக் கடவுளின் சீர்பாதப் பெருமை, அடியார் பெருமை, வேலாயுதத்தின் பெருமை, உபதேசப் பெருமை, பிரசாதப் பெருமை, திருப்புகழ்ப் பெருமை, கடைக்கணோக்கப் பெருமை, திருக்கரங்களின் சிறப்பு ஆகிய இவை தமை வகுத்து எடுத்து ஓதுவதால் நூலுக்குத் திருவகுப்பு என்னும் பெயர் வாய்ந்தது. "ஏழையி னிரட்டைவினை யாயதொருடற்சிறை, யிராமல்விடு வித்தருள் நியாயக் காரனும்" என வேளைக் காரன் வகுப்பிற் கூறிய திருவாக்கால் சுவாமிகள் மானுட தேகம் நீத்துக் கிளிரூபம் பெற்ற பிறகு திருவகுப்புப் பாடல்களைப் பாடி யிருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது. இதனுண்மை திருப்புகழின் முக்கிய கருத்தாக உள்ள பெண்ணாசை யறுதலைப் பற்றி இத் திருவகுப்பில் எங்குங் கூறி யில்லாமையாலும், யம பயம் நீக்கிக் காத்தருள வேண்டும் எனத் திருப்புகழிற் பல இடத்தும் வேண்டினவாறு வேண்டாமல் வகுப்பிற் பெரும்பான்மைய முருகன் பெருமையையே கூறி உலகத்தாருக்கு உபதேசங்களையே எடுத்தோதும் உயர்நிலைப் பாடல்களா யமைந்துள்ள காரணத்தாலும் நன்கு பெறப்படும். மேலும், வேடிச்சி காவலன் வகுப்பில், "உரைபெற வகுத்தருணை நகரினொரு பக்தனிடும் ஒளிவளர் திருப்புகழ் மதாணிக் ருபாகரனும்" என்பதில் தம்மை மூன்றாம் வேற்றுமையிற் குறித்ததும் தாம் மானுடப் பிறவியில் ஓதிய திருப்புகழைச் சுட்டியுள்ளதும் கவனிக்கற் பாலன.

2. திருப்புகழிலுங் கந்தரந்தாதியிலும் சம்பந்த மூர்த்தி சுவாமிகளை முருகக் கடவுளெனப் போற்றிப் புகழ்ந்தது

போலக், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு என்னும் இம் மூன்று நூல்களில் அவ்வாறு எங்குங் கூறாததும், திருப்புகழிற் கூறிய "வயலூர்" வேறு நூல்களிற் கூறப்படாததும் கவனிக்கற்பாலன.

3. கீழ்க் காட்டிய விஷய ஆராய்ச்சியிற் பதினெட்டு திருவகுப்புக்களே ஆராயப்பட்டுள.

அகஸ்தியர் : 6, 12, 16
அருணகிரிநாதர் சரித்திரம் :
அருணையில் அநுக்கிரகம் பெற்றது 4
அருணை வாசி யென்பது 12
இறைவனுடைய திருக் கண்ணோக்கம் பெற்றது 4
காட்டுவழியில் வெளிப் பட்டுச் சகாயராய்த் தோன்றி இறைவன் உதவியது 4
தனது தேக பந்தத்தை இறைவன் ஒழித்தது 4, 5
தனது பிறவி வேரை இறைவன் அறுத்தது 4, 6
தனது மனத் துயரை இறைவன் நீக்கியது 4, 16
திருப்புகழ் பாடினது 12
மெய்ஞ் ஞானமும் சகல வித்தைகளும் ஒரிமைப் பொழுதில் அறியும்படி இறைவன் அருளினது 12
மௌனோப தேசம் பெற்றது 12
வழி வழித் தொண்டரென்பது 1, 12
ஆதிசேஷன் : 1, 6, 11
இந்திரன் : 3, 6, 7, 14, 16, 17
,, மலைகளின் சிறகரிந்தது 3
ஐராவதம் : 3, 4, 12, 16, 17
கணபதி : 1, 2, 6, 12
குபேரன் : 17
கோழியுங் கோழிக் கொடியும் : 4, 6, 12, 15, 16, 17
சித்திகள் வர்ணனை : 16
சிவபெருமான் : 1, 4, 5, 6, 16, 18
,, திரிபுரமெரித்தது 13, 16
தலங்கள் :
அருணை 4, 6, 12
ஆவினன்குடி, பழநி 4, 6
இடைக்கழி 4, 6, 7, 12
இலஞ்சி 6
ஏரகம் (சுவாமிமலை) 4
கதிர்காமம் 4
குற்றாலம் (த்ரிகூடாசலம்) 4
செங்கோடு 6, 12
செந்தில் 2, 6
திரிசிராப்பள்ளி 4
திருத்தணி (நீலகிரி, உற்பலகிரி, இந்த்ர நீலச் சிலம்பு) 1, 3, 4, 6, 7, 9-12, 14, 15, 16
பரங்குன்றம் (ஆறுபடை வீட்டில் முதலாவதென்பது) 6
தாள வகைகள் : 6
திருப்புகழ்: 3, 6, 10, 11, 12, 16
சகல சித்திகளையும் கைகூட்டும 16
தேவசேனை: 4, 6, 12, 14, 15
நகை (ஆபரணங்களின் பெயர்கள்) 16

நக்கீரர் :
குகையில் அடைபட்டிருந்த போது வேலாயுதத்தின் உதவியால் கற்கிமுகி என்னும் குதிரை முகப் பெண் பூதத்தினின்றும் மீண்டது 3, 6, 12, 15
முருகனைச் சரணடைந்தது 16
நாரதர் : 4
பச்சிலை வகைகள் : 16
பார்வதி தேவி : 1, 2, 4, 11, 12, 14, 15, 17, 18
,, ஸ்துதி 1, 2, 6, 9, 14
புட்பகம்: (குபேரன் விமானம்) 17
போர்க்கள வருணனை: 6,7,8,9
மயில் : 1, 3-7, 10, 12, 15, 16, 17
மயில் விருத்தம் 7
மஹாபலி : 1
முருகர் :
அகத்தியருக்குத் தமிழறிவுறுத்தியது 6, 12, 16
அக்கினிதேவன் திருக்கரத் தேந்திச் சென்றது 12
அசுர சம்ஹாரம் 4, 16
அடியருடைய கவிமாலை சூடுதல் 4
அடியார் நினைப்பை முடிப்பவன் 6, 11,15,16
உபதேசப் பெருமை 5, 10
உருத்திர ஜன்ம லீலை 4
உலகெலாம் வலம் வந்தது 1, 4, 6, 12
ஐராவதத்தைச் செற்றது 12
கங்கா புத்திரர் 4, 6, 12
கடல்மீது வேல் விட்டது 2, 14
கிருத்திகை மாதர் அறுவர் புதல்வன், அறுவருக் குகந்தவன் 1, 4, 6, 12, 15, 16, 17
கிரௌஞ்சம் பிளந்தது 1, 2, 4, 12, 13, 15, 16, 17
சகல கலா வல்லவன் 16
சரவணேற்பவன் 4, 6, 11 16, 18
சிங்க முகாசுர சம்ஹாரம் 14
சிவந்த ஆடையன் 6
சிவபிரானுக்கு உபதேச குரு 4, 5, 6, 12
சூர சம்ஹாரம் 4, 14, 15, 16
செந்தமிழ் நூலோன் 2, 12
தாமரை மலரிற் றிகழ்ந்தது 18
தாரகாசுர சம்ஹாரம் 1, 16
திருவடிப் பெருமை 1, 12
தில்லையம்பலத்துள் திருநடனம் ஆடினது 17
தேவ சேனாபதி 12
தேவர் சிறைமீட்டது 14
பகையாம் மாந்தர்களுக்கு அந்தகன் 2
பிரமனைக் கண்டித்தது 4, 6, 12, 14
பொன்னுலகைப் புரந்தது 1, 4, 14, 15, 16
மன்மதன் உருவினுஞ் சிறந்த உருவினர் 16
முத்தமிழ் விநோதர் 12
மேருவை மோதினது 16
மேனை (பர்வத ராஜன் மனைவி) யின் பேரன் 4
யாக (வேள்வி) புரந்தரன 4, 12
வள்ளி பதாம்புய சேவிதன் 6, 18

வள்ளியம்மை பொருட்டு மடல் எழுதியது 12
வள்ளியொடு லீலை முதலிய 1, 4, 6, 12
முருகர் மாலை :
- அருணகிரியாரது பாமாலை 15
- கடம்பு (செங்கடம்பு) 4, 6, 15, 17
- குரா 1, 15
- கூதளம் 4, 6, 15
- கோடல் (வெண் காந்தள்) 15
- சண்பகம் 15
- செங்கழுநீர், நீலோற்பலம் 1, 18,
- துளசி 15
- மகிழம்பூ 15
- முல்லை 1, 15
- விளா 1, 15
- வெட்சி (செச்சை) 6,15,16

ரசவாதம் 16
ராக வகைகள் 6, 7, 15
ராவணன் மேருவை [கயிலையை] எடுத்தது 6
ராவுத்தன் 12
வள்ளியம்மை 1-6,8,11-18
வாசுகி 4, 6
வாத்திய வகைகள் 6, 7
விஷ்ணு :
- அநந்த சயனன் 18
- ஆலிலைப் பள்ளி 18
- இரணிய சம்ஹாரம் 1, 2
- கஞ்சன் வஞ்சம் வென்றது 14
- கன்று மேய்த்தது (புல்லாங்குழல் ஊதி) 14
- கஜேந்திர மோக்ஷம் 1, 4
- (குவலயாபீடம் என்னும்) யானையை ஒடுக்கியது 14
- கோபிகா ஸ்திரீகளின் துகில்களைக் கவர்ந்தது 14
- சகடுதைத்தது 14
- திரிவிக்ரம சொரூபம் 1, 9
- பஞ்சாயுதன் 6
- பாண்டவர் தூதன் 9
- பாண்டவருக்குத் தேரூர்ந்தது 14
- பாற்கடல் கடைந்து அமுதம் பகிர்ந்தது 6
- புள்ளின் வாய் கீண்டது 14
- பூதகி என்னும் பேயை ஒடுக்கியது 14
- மருதிடைத் தவழ்ந்தது 14
- ராவண சம்ஹாரம் 1, 13
- வாமனாவதாரம் 1

வேல் (விட்டேறு) 3,6, 15, 17
- தியாகரார் வடிவை உருக்கி வடித்த திருக்கை வேல் 6

வேலு மயிலும்
- என்றும் வாழி 16

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த

கந்தரந்தாதி

(வில்லிபுத்தூரார் செய்த உரையுடன்)

காப்பு.

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

(பதவுரை.) வாரணத்தானை - அயிராவதத்தையுடைய இந்திரனையும், அயனை - பிரமாவையும், விண்ணோரை - தேவர்களையும், மலர்க்கரத்து - தாமரை மலர்போன்ற கையில், வாரணத்தானை - சங்கையுடைய விஷ்ணுவையும், மகத்து - (தக்கனது) வேள்வியில், வென்றோன் - (வீரபத்திர முகூர்த்தங்கொண்டு) செயித்தவனாகிய பரமசிவனது, மைந்தனை - புதல்வனும், துவச வாரணத்தானை - கோழிக் கொடியையுடைய குமரக்கடவுளை, துணை நயந்தானை - தம்பியாக விரும்பியவனும், வயல் - பழனஞ்சூழ்ந்த, அருணை - அருணாசலத்தில், வாரணத்தானை - கயமுகாசுரனை, திறைகொண்ட - வெற்றிகொண்ட, யானையை - யானைமுகனுமாகிய கணபதியை, வாழ்த்துவன் - (யான்) வணங்குகிறேன் என்றவாறு. யான் - தோன்றா எழுவாய். வாழ்த்துவன் - பயனிலை, ஏகாரம் - ஈற்றசை.

(கருத்துரை.) தக்கனது வேள்வியில் இந்திரன் பிரமா விஷ்ணு விண்ணோரிவர்களை வீரபத்திர முகூர்த்தங்கொண்டு வென்ற பரமசிவன் மைந்தனும், குமாரக்கடவுளுக்குத் துணைவனும், கயமுகாசுரனை வென்றோனுமாகிய அருணகிரியில் வீற்றிருக்கும் யானைமுக விநாயகனை யான் வணங்குகின்றேன்-என்பதாம்.

இதுவுமது.

உண்ணு முலையுமை மைந்தா சரணம் பாருயிர்சேர்
உண்ணு முலையுமை மைந்தா சரண மருணைவெற்பாள்
உணணு முலையுமை மைந்தர் சரணந் தனமுமொப்பில்
உண்ணு முலையுமை மைந்தா சரணஞ் சரணுனக்கே.

(ப-ரை.) உண்-(கன்றுகள்) உண்ணும், ஆ-பசுக்களையுடைய, முலை - முல்லை நிலத்திற்கு, உ-இறைவனாகிய விஷ்ணுவினது, மை-மேகநிறத்தையும், மைந்து - வலிமையையும், ஆசு -(உவர்ப்பாகிய) குற்றத்தையு முடையதாய், அரண்-காவலாயிருக்கிற, அம்பார்-சமுத்திரத்திருந்த அசுரரது, உயிர் சேர் - ஆவியை யாய்த்து, உள்-தேவர்கள் மனத்திருந்த, நாம்-அச்சத்தை, உலையும் - கெடுத்தருளும், ஐ-சுவாமியே! மை - ஆட்டுவாகனத்தை, தா - ஏறும், சர் - (உஷ்ணத்தையுடைய) அக்கினி, அண் - சேர்ந்திருக்கும், நம் - நாமடைக்கலம் புகுதற்கிடமாகிய, அருணை வெற்பாள்-அருணகிரியில்வாழு மம்மையாகிய, உண் - மிகுதியாக, ஆம் - பெருகும், முலையும் - கற்புடைமைகளும், ஐ-அழகிய, மை-அஞ்சனந்தீட்டிய, தா-குழையை யெட்டுகின்ற, சர - அம்புபோன்ற கண்ணினது, நந்தனமும் - கிருபைக்கும், ஒப்பில் - இணையில்லாத, உண்ணுமுலையுமை - உண்ணுமுலை யென்னும் பெயரையுடைய பார்வதியினது, மைந்தா - புதல்வனே, சரணம் சரண் உனக்கு - உன்னிடத்தே யான் சரணம் புகுந்தேன். (எ-று.) யான் - தோன்றா எழுவாய். சரணஞ் சரணம் - பயனிலை. ஏ-அசை.

(க-து.) திருமால் நிறம்போற் கறுத்து உவர்ப்பையுடையதாயும் வலிய அரணாயுமிருக்கிற சமுத்திரத்திருந்த அசுரரைத் தேவர் அச்சந் தீரும்படி வதைத்தவனே! அக்கினி சொரூபமாகிய அருணகிரியி லமர்ந்தருளிக் கற்பிலும் கடாக்ஷத்திலுந் தனக்கொப்பில்லாத உண்ணுமுலையம்மை புதல்வனே! யான் உன் அடைக்கலம் புகுந்தேன். (உ)

நூல்

திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே. (1)

(ப-ரை.) திரு - மகாலக்ஷ்மிக்கு, ஆவி - உயிராகிய (திருமாலும்), நன்குடி - நற்றேவியைப், பங்காளர் - பாகத்திலுடைய பரமசிவனும், எண் - மதிக்கத்தக்க, முது - பழமையாகிய, சீர் - சிறப்புப் பொருந்திய, உரை - (வேதாகமப்பொருளை) சொல்லிய, சதிர் - சதுர்ப்பாட்டை யுடைய, உவாவினன் - இளையோனாகிய (கந்தஸ்வாமிக்கு), குடி-உறைவிடமாகிய, வான்-ஆகாசத்தை, ஆர்-அளாவிய, பரங்குன்று - திருப்பரங்குன்றையும், சீரலைவாய் - திருச்செந்திற் பதியையும், திரு - செலவநிறைந்த, ஆவினன்குடி - பழநியையும், ஏரகம்-ஸ்வாமிமலையையும், குன்றுதொறாடல் - (அக்கடவுள்) திருவிளையாட் டியற்றும் பல குன்றங்களையும், சென்று - நடந்து, அதிர்-முழங்கும், உவா-யானைகளின், இனன் - கூட்டங்கள், குடி கொண்ட - நீங்கா துறைகின்றதும், தண் கார் - குளிர்ந்த மேகந் தவழ்வதுமாகிய, வரை-பழமுதிர் சோலையையும், செப்புமின்-துதி செய்யுங்கள். (எ-று.). நீவிர் - தோன்றா எழுவாய். செப்புமின் - பயனிலை. ஏ-அசை.

(க-து.) (பார்வதி சமேதரான) பரமசிவனும், லக்ஷ்மீசமேதரான திருமாலும் புகழ்கின்ற கீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக் கடவுளுக்கு உறைவிடமாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதொறாடல், பழமுதிர்சோலைமலை இவ்வாறு தலங்களையுந் துதியுங்கள்.

குறிப்புரை: 'ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே"— கந்தர்கலிவெண்பா. பழமுதிர் சோலையைத் "தந்தி . சாமுக. தண்கார் வரை" என்றா 73-ஆம் பாட்டிலும்.

செப்புங் கவசங் காபா லகதெய்வ வாவியம்பு
செப்புங் கவசங் கரிமரு காவெனச் சின்னமுன்னே
செப்புங் கவசம் பெறுவார் கணுங்தெய்வ யானைதனச்
செப்புங் கவசம் புனைபுயன் பாதமென் சென்னியதே. (2)

(ப-ரை.) செ - ரிஷபத்தையுடைய, புங்கவ - தேவாகிய, சங்கர பாலக-சங்கரன் பாலனே! தெய்வ-தெய்வீகமாகிய, வாவி-[1]சரவணப்பொய்கையின், அமபு-ஜலத்தில், செ-உற்பவித்த, புங்கவ-உயர்ந்தோனே! சங்கு-சங்கையுடைய, அரி-விஷ்ணுவுக்கு, மருகா-மருகனே! என - என்று, சின்னம்-திருச்சின்னமானது, முன்னே-முதலில்தானே, செப்பு - சொல்லியார்க்கின்ற, உங்கு - உவ்விடத்திலேயே (கேட்டு), அவசம் பெறுவார் - மயக்கம அடையும் (பவனி) மாதராது, கணும் - விழிப்பார்வையையும், தெய்வயானை - தெய்வயானையினது, தனச்செப்பும் - கொங்கையாகிய கலசத்தையும, கவசம் புனை-சட்டையாக அணிந்த, புயன்-தோளையுடையவனாகிய முருககடவுளின், பாதம்-திருவடி, என் சென்னியது - என்றலை மீதுற்றது. (எ-று.). பாதம்-எழுவாய். சென்னியது - பயனிலை. ஏ-அசை.

(க-து.) பரமசிவன் மைந்தனே! சரவணோற்பவனே! திருமால் மருகனே! என்று சின்னம் ஆர்ப்பதைக்கேட்டு மயங்கும பெண்களின் பார்வையையுந தெய்வயானையின் கொஙகையையும கவசமாகத் தரித்த குமாரக்கடவுள் திருவடி என்றலையின் கண்ணது

(கு-உ) "[1]சரவண மடுவினில் வந்தருள் கந்தன்"-திருவகுப்பு.(கஅ)

சென்னிய மோகந தவிராமு தோகண் டிகிரிவெண்ணெய்ச்
சென்னிய மோகம் படவூ தெனதொனி செய்தபஞ்ச
சென்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சென்னிய மோகம் பணிபணி யோகத் தேமொழிக்கே. (3)

(ப-ரை.) சென்னி - சிரசின்கண்ணே, அம் - (கஙகா சலத்தின், ஓகம்-ஆரவாரம், தவிரா-நீங்காத (பரமசிவன்), அமுதோ-உண்ட நஞ்சுதானோ, கண்-விழியானது, திகிரி-சக்கிரத்தையேந்தி, வெண்ணெய் - நவநீதமுண்ட, சென்னிய - கீதமிசைக்கின்ற திருமாலே, மோகம்பட - (தேவரும்) மயல்கொளும்படி, ஊதென - ஊதென்று சொல்ல, தொனி செய்த - முழக்கின, பஞ்சசென்னியமோ - பாஞ்ச சன்னியமென்னுஞ் சங்கந்தானோ, கந்தரம் - கழுத்தானது, புனதேன்- (தினைப்புனத்தின்கண்) மதுரபாஷிணியாகிய வள்ளிநாயகியை, புணர்-தழுவும், தேவை-குமாரக்கடவுளை, தெய்வச் சென்னி-தெய்வத் தன்மையையுடைய சோழராஜன், அமோகம்-அதிக ஆசையுற்று, பணி-வணங்கிய, பணி-கட்டுவித்த,

ராக - சுவாமிமலைச் சார்பில் வாழும், தேமொழிக்கு - இனிய மொழியையுடைய பெண்ணுக்கு (எ-று.), கண், கந்தரம்-இரண்டும் எழுவாய்; அமுது, பஞ்சசன்னியம்-இரண்டும் பயனிலை, ஏ-அசை.

(க-து.) தெய்வச் சோழனானவன் கந்தக்கடவுளை வழிபட்ட சுவாமிமலையினில் வாழும் பெண்ணினுடைய கண் பரமசிவனுண்ட நஞ்சோ, அவள் கழுத்து திருமால் முழக்கின சங்கமோ.

தேமொழி யத்தம் பெறவோந் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினா லுலகுமந் தித்ததொன்றே. (4)

(ப-ரை.) தேமொழி - இனிய மொழியையுடையவளாகிய பார்வதியின், அத்தம்-பாதியாகிய (பரமசிவன்), பெற-உபதேசம் பெற்றுக்கொள்ள, ஓம் தனக்கு-பிரணவத்திற்கு, அன்று-பூர்வத்தில், சேணுலக-தேவலோகத்தின், தேம்-நன்மை யெல்லாம், ஒழிய-அற்றுப் போகும்படி, தம்-தங்கள், சினம்-கோபத்தை, காட்டு-காட்டிய, அவுணரை-அசுரரை, சே மகர-ஆண் சுறாமீனுக்கு, தேம்-இடமாகிய சமுத்திரத்தில், மொழி-கணுக்களையுடைய, அத்தம்-கரங்களும், புயம்-தோள்களும், அவர்-அவர்களுடைய, சூடிகை-கிரீடங்களும், சிந்த-சிதற, வென்ற-சங்கரித்துச் செயித்த, தே-குமாரக் கடவுளானவர், மொழி-உரைததருளிய, அத்தம்-பொருள், பதினாலுலகும்-ஈரேழு லோகத்திலும், அந்தித்தது-பொருந்தி நின்றது, ஒன்று-ஒரேதன்மையாக (எ-று.). அத்தம்-எழுவாய், அந்தித்தது-பயனிலை, ஏ-அசை.

(க-து.) விண்ணுலக நன்மையை யொழித்துவந்த அசுரரைச் சமுத்திரத்தில் சங்கரித்து வென்ற குமாரக்கடவுள் பரமசிவனுக்கு உபதேசித்த பிரணவப் பொருளானது பதினாலுலகத்தினும் ஒரே தன்மையாய்ப் பொருந்தினது.

(கு-உ.) அந்துதல் - பொருந்துதல், "செவ்வந்தி" என்றார் 6-ஆம் செய்யுளில்.

தித்தவித் தார மனித்தனைத் தேவர் வணங்கமுன்போ
தித்தவித் தாரகை மைந்தர்செந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே. (5)

(ப-ரை) தித்த வித்தாரம்-தித்தவென்னுந் தாளவிரிவினால், மன்-நிலைபெற்ற, நித்தரை-நடனமிடும் பரமசிவனுக்கு, தேவர்-அமரர்கள், வணங்க - வந்திக்கும்படியாக, முன் - முற்காலத்தில், போதித்த-உபதேசித்தவராகிய, வி-விசேஷமான, தாரகை-கார்த்திகைப் பெண்களின், மைந்தா - புதல்வரும், செந்தூர்க்கந்தர் - செந்திற்பதிவாழ் கந்தவேளும், சிந்தூரம்-திலதத்தை, ஆதித்த-சூரியனைப்போலுடைய, வி-நல்ல, தாரமுடையார்-(வள்ளிதெய்வயானையென்னும்) தேவிகளையுடையவருமாகிய குமாரக்கடவுள், அருள் வெள்ளம்-தமது கிருபாநதியை, தேக்கி-என்னுள்ளத்து நிலைநிறுத்து, அன்பு-பக்தியை, உதித்து-தோற்றுவித்து, அவித்தார்-தணித்தார், அம்-அழகிய, [1]தனி-ஒப்பற்ற, வீடு-மோட்சம், உற-அடையும்படி, துக்கம்-இடும்பையை (விளைக்கின்ற), செ-செனனமாகிய, அனல்-அக்கினியை. (எ-று.) மைந்தர் முதலிய-எழுவாய்; அவித்தார்-பயனிலை ; ஏ-அசை.

(க-து.) முற்காலத்திற் பரமசிவனுக் குபதேசித்தவரும் கார்த்திகேயரும் வள்ளிதெய்வானை பாகருமாகிய செந்தூர்க் கந்தர் என்னுள் கருணை வெள்ளத்தை நிறைத்து, யான் கதியடையும்பொருட்டாகக் கொடிய அக்கினி போன்ற துன்பத்தை விளைக்கும் என் பிறப்பை யொழித்தார்.

(கு-உ.) தாரகை - "தாரா கணமெனுந் தாயமார்" கந். அலங்.81. "[1]ஒரு பூதரு மறியாத் தனிவீடு"-கந். அலங். 45.

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி லீடுமுற் றுத திமிரமுமே. (6)

(ப-ரை) செவ்வந்தி - செவ்வந்தியென்னும் பூமாலையையும், நீலம்-கருங்குவளை மாலையையும் (புனைந்திடும்), புயம்-புயங்களையுடைய, முருகா-முருகக்கடவுளே ! பத்தர்-அன்பரது, சித்தமெய்யில்-இருதய உண்மைநிலையில், செவ்வு - செம்மையாக, அந்தி-பொருந்தியிருக்கின்ற, நீ-நீ, லத்தையுற்று-கிருபைகூர்ந்து, அருள்வாய் - (அம்மாலையை) எனக்குத் தந்தருளவேண்டும், திங்கட்சேய்-குழவித்திங்களை, புனைந்த-அணிந்த, செவ்வந்தி-சிவந்தமாலைக்காலமானது, நீலத்தொருபாகர்-நீல நிறத்தையுடைய பார்வதிபங்கரை,

போன்றது-போலத் தோன்றி விளங்குகின்றது ; இனி-இனிமேல, சிந்தியார்-(உன்னைத்) தியானியாதவர்கள் (அடையும்), செ-செனன மாகிய, வந்தி - வருத்தத்தை (விளைக்கும்), நீலத்தின்-அஞ்ஞான இருளைப்போல, நீடும் - நீடித்து நிற்கும், முற்றாத - தொலையாத, திமிரமும்-இருட்டும். (எ-று.). நீ-எழுவாய், அருள்வாய-பயனிலை ; ஏ-அசை.

(கு-து.) செவ்வந்தி நீலோற்பல மாலிகை யணிந்த முருகா! பரம சிவனைப்போல இளம்பிறையுஞ் செவ்வானமுந் தோன்றிய மாலைக் காலமும் உன்னை நினையாா அடையுஞ் செனன விருளைப்போல இருட்டும் வந்தது. அன்பரது சித்தத்தில் வீற்றிருக்கின்ற நீ கருணையற்று அம்மாலையை எனக்கருளவேண்டும்.

(து-உ.) "பொழுது கண்டு மயங்கல்" என்னுந் துறை-[திருக் கோவையார்-௧அஅ]

திமிரத் திமிரக் கதரங்க கோபசெவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் குலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமென் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே (7)

(ப-ரை.) திமிர-இருணிறத்ததும், திமி-திமிங்கலமீனை, ரகக-இரட்சிப்பதுமாகிய, தரங்கம் - சமுத்திரத்தை, கோப-கோபித்த வனே! செவ்-சிவந்த, வேல-வேலாயுதத்தை யுடையானே! கை வேல்-கையின் வேலாயுதமும், திமிர-திமிராகும்படி, திமி-குற்று கின்ற, ரகக குலாந்தக-அசுரர்குலத்துக்கு யமனே! வரைத்தேன் பெருகு-மலையினின்று வீழுந் தேனூற் பெருகிய, உந்தி மிர-கான் யாற்றையுடைய புனத்தில் வாழும் வள்ளி நாயகி, அத்தி மிர்-அயிரா வதத்தால் வளர்க்கப்பட்ட தெய்வயானை நாயகி, அத்தனை-அவ் வளவு, ஆவி-(என்) பிராணனை, ஆளும்-ஆண்டு கொள்ளுங்கள், என்-என்றிங்கிதம் பேசும், சேவகனே-வீரனே! திமிரத் திமிர-பூசப்பூச, கனலாய-அக்கினிபோ லிருக்கின்றன, சந்தன சீதளம்-(யான் திமிர்ந்திருக்கின்ற) சந்தன முதலிய குளிர்ந்த வஸ்துக்களும் (ஆதலால் வந்து தழுவி யருளவேண்டும்.) (எ-று.). தரங்க கோப முதலியன-எழுவாய் - என்னைத் தழுவ வேண்டும் என்னும் பய னிலையைக் குறிப்பாய்க் காட்டி நின்றன. ஏ-அசை.

(க-து.) திமிங்கிலமீனையுடைய இருண்ட சமுத்திரத்தைக் கோபித்தவனே! வேலவனே! அசுரர் குலாந்தகனே! வள்ளி தெய்வயானை என்னும் நாயகிமார் தழுவும்படி இதம்பேசும் வீரனே! யான் பூசுஞ் சந்தன முதலிய குளிர்ந்த வஸ்துக்கள் இப்போது உன் விரக தாபத்தால் எனக்கு வெப்பத்தை விளைக்கின்றன. ஆதலால் என்னைத் தழுவ வேண்டுமென்பது குறிப்பு.

சீதனங் கோடு புயங்கைகொண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு னிதருமென் பார்தொழுந் தேவிபெறுஞ்
சீதனங் கோடு கொடிவேன் மயூரஞ் சிலையரசே. **(8)**

(ப-ரை.) சீ - மகா லக்ஷ்மியினது, தனம் - கொங்கையையும், கோடு - சங்கததையும், புயம் - திருத்தோளிலும், கை - திருக்கரத்திலும், கொண்டார்தம்-தரித்த விஷ்ணுவினது, திருமருக-சிறந்த மருகனும், சீதன்-சந்திரனை, அம்-அழகிய, கோடு-கோணல் வடிவாகத் (தரித்த), முடியாளர்-பரமசிவன், சேய்தனக்கு-மைந்தனுமாகிய குமாரக் கடவுளுக்கு, ஏதுளதோ-உள்ளதென்னெனில், சீ-இகழத்தக்க, தனம்-திரவியம், கோள்-குற்றத்தையும், துனி-துன்பத்தையும், தரு-கொடுககத்தக்கது, என்பார்-என்று நீக்கிய அன்பர்கள், தொழும்-வணங்குகின்ற, தேவி-வள்ளி நாயகியால், பெறுஞ் சீதனம்-கிடைத்த வரிசையாகிய, கோடு-கொம்பினோடு, கொடி-கோழிக் கொடியும், வேல்-வேலாயுதமும், மயூரம்-மயில் வாகனமும், சிலை-குறிஞ்சி நிலமாகிய மலைகளின், அரசு-ஆளுகையுமாம். (எ-று.) ஏதுளது - எழுவாய்; இவைகளுடைமையாம் - பயனிலை. ஏ-அசை.

(க-து.) திருமாலுக்கு மருகோனும் பரமசிவனுக்கு மைந்தனுமான குமாரக் கடவுளுக்கு வள்ளி நாயகி சீதனத்தாற் பெற்ற கொம்புடன் கோழிக் கொடியும் வேலாயுதமும் மயில்வாகனமும் மலைகளின் ஆளுகையும் உடைமைகளாம்.

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவெச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதென்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே. **(9)**

(ப-ரை) சிலை - கருப்புவில்லையுடைய, மதன்-மன்மதனது, அம்பு-புஷ்ப பாணம், அடுமாறு எழும்-கொல்லும்படி வருகின்றன, சேய மயில்-குமாரக் கடவுளின் மயிலினது, உச்சிட்ட-எச்சிலாகிய, பாம்பினது, எச்சிலை-எச்சிலாகிய தென்றற் காற்றையும், மதனம் படு-கடையப்பட்ட, சிந்துவை-சமுத்திரத்தையும், இந்துவை-சந்திரனையும, யான் செய்வதென்-நானென்ன செய்து கடப்பேன்; சிலை-ஆர்ப்பரிப்போடு, மதம்-ஆங்காரத்தை, நம்படு-நம்மிடத்திலே, காட்டுவர்-அலர் தூற்றிக் காட்டா நின்றார்கள்; கேளிரும்-சுற்றத்தாரைவரும், செங்கழுநீர்-குவளைமலர் நிறைந்த, சிலை-திருத்தணிமலையின்கண், மது-தேனும், அனம்-அன்னப்பட்சியும், படு-உண்டாகிய, தாமரை-தாமரைகளையுடைய, வாவி-பொய்கையில் (வாழும்), திரள்-கூட்டமாகிய, சங்கமே-சங்கினங்களே. (எ-று.). யாம்-எழுவாய், செபவதென்-பயனிலை.

(க-து.) குமாரக கடவுளினது தணிகையங்கிரித் தாமரைத் தடாகத்தில் வாழுஞ் சஙகினஙகளே! என்மேல் மன்மதன் பாணப் பிரயோகஞ் செயயா நிற்கின்றான்; தென்றலும் சந்திரனும் கடன் முழக்கமும் வருத்துகின்றன; சுற்றத்தாரது கோப தாபமும் உண்டா யிருக்கின்றன; இவற்றை என்ன செய்து கடப்பேன்.

திரளக் கரக்கரை வென்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைநதர்புந திக்கொக்குமே.(**10**)

(ப-ரை.) திர - உறுதியான, ளக்க - லட்சமான, ரக்கரை-அசுரர்களை, வென்கண்டவேலன் - புறங்காட்டச் செய்த வேலாயுதனை, திசைமுகன்-பிரமாவுக்கும், மால்-மாயோனுக்கும், திரள்-அநேக, அககர்-கண்ணையுடைய இந்திரனுக்கும், அக்கர்-உருத்திராட்சமாலையையுடைய பரமசிவனுக்கும், ஐ-சுவாமியாகிய குமாரக் கடவுளை, யான் பாட நாடுதல் - நான் பாடும்படி கருதுகின்றது, செய்ய-அழகிய, சங்கு-சங்குகள், அதிர்-முழங்கும், அளக்கர்-சமுத்திரத்தை, அக்கரை காண்பான்-கரைகாணும்படி, கைந்நீத்திசை வார்-கையினால் நீந்திப்போவாரது (புததிகளும்), பனிக்கதிர்-தண் கதிரையுடைய சந்திரனை, அள-பிடித்துக் கொள்ளும்படி, கரக்கரை-கையளவை, வானீட்டு மைந்தர்-ஆகாசத்திலே நீட்டுஞ் சிறு

வர்களது, புந்திக்கு-புத்திககும், ஒககும் - ஒப்பாகும். (எ-று.). நாடுதல்-எழுவாய். ஒக்கும்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) அசுரர்களைச் செயித்தவரும், பிரமன் முதலியோருக்குச் சுவாமியுமாகிய குமாரக்கடவுளை யான் பாடக கருதுதல் கையினாற் கடலை நீநதவும், கையை நீட்டிச் சந்திரனைப் பிடிக்கவும் நினைப்போர் புத்திக்கு ஒப்பாயிருக்கின்றது.

திக்கத்திக் கோடு படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கதந்திக் கோடு கடடக் கடறடி சேப்படைச்சத
திக்கத்திக் கோடு துறைத்திறத தற்ற குறக்குறச்சத்
திக்கத்திக் கோடு பறித்துக்கொ டாதி சிறைபிறப்பே. (11)

(ப-ரை.) திக்க-திகைககும்படி, திக்கோடு - திசைதோறும் படர்ந்த, படி-பூமியின்கண், புடை-நீக்கியருளவாய், சூத-மாமரமாய் நின்ற சூரனை, தெறி-விளங்கிய, படபத்தி-ஆயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேடனது, கத்து-தலையிலே, இக் கோடு-இந்தச் சங்குகள், உகள-உலரும்படி யாழ்ந்த, தடககடல்-பெரிய சமுத்திரத்தின்கண்ணே, தடி-கொன்ற, சேப்படைச் சத்தி-சிவந்த வேற்படையை யுடையவனே! கத்தி-கதறி, கோடு-மாறுபட்ட, துறைத்திறதது - பரசமயவழியில், அற்ற - மறைந்து நிற்பவனே, குற - குறச் சாதியில் பிறந்த, குறச்சத்திககு - வள்ளிநாயகிக்கு, அத்திக்கோடு-ஆனைக்கொம்பை, பறித்து-பிடுங்கி, கொடு-கொடுத்த, ஆதி-முதல்வனே! சிறை - பஞ்சேந்திரியங்களால் கட்டுண்டிருக்கிற, பிறப்பு-(எனது) செனனததை. (எ-று.). நீ-தோன்றா எழுவாய் புடை-பயனிலை. ஏ-அசை.

(க-து.) சமுத்திரததின்கண் மாவுருக்கொண்டு நின்ற சூரனை வென்ற வேலாயுதனே! மாறுபாடுடைய பரசமயவழிக்கு எட்டாதவனே! வள்ளியம்மைக்கு யானைக்கோட்டைப் பிடுங்கி விளையாடக் கொடுத்த முதல்வனே! பூமியின்கண் என் பிறப்பை யொழித்துவிடு.

சிறைவர வாமையி லேறிச் சிகரி தகரவநது
சிறைவர வாமையில் கூப்பிடத் தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே (12)

(ப-ரை.) சிறை - தோகையையும், வர-வரப்பிரசாதத்தையுமுடைய, வா மயிலேறி-தாவு மயிலேறி, சிகரி-கிரவுஞ்சகிரி, தகர-

[1]பொடியாகும்படி, வந்து-எழுந்தருளி, சிறை - கரையினால், வரசூழப்பட்டும், ஆமை-ஆமைக்கு, இல்-இருப்பிடமுமாகிய (கடல்), கூப்பிட-இரங்க, தானவர் சேனை - ராக்ஷதசேனைகள், கொண்ட-கொண்டுபோன, சிறை வர - தேவர் சிறை மீளும்படி, ஆம்-தகுந்த, ஐயில் வாங்கிதன்-வேலெடுத்த குமாரகடவுளது, தேங் கழல்-இனிய பாததாமரையை, யாம்-நான், கழலா - அணுகாமற் பிரிந்ததனால், சிறு-சிறிய, ஐவர் - பஞ்சேந்திரியங்களின், அவா-ஆசையாகிய, மையில்-இருளில், நெஞ்சு-என்னிருதயம், உடனே நின்று - அவ்விருளோடு நின்று, தேங்குவது - திகைக்கின்றது. (எ-று.). நெஞ்சு-எழுவாய். தேங்குவது-பயனிலை. ஏ-அசை.

(க-து.) கிரவுஞ்சகிரி பொடிபடவும், சமுத்திரம் முறையிடவும், அசுரரினின்று தேவர் சிறைமீளவும், வேற்படையெடுத்து மயின்மீ தெழுந்தருளிய குமாரக்கடவுளினது பாததாமரையை நான் நண்ணுதலின்றிப் பிரிந்ததனால் எனனிருதயத்தில் ஐம்புல ஆசையென்னும் இருள் அகலாது நிறைந்திருக்கின்றது

(கு-உ.) "[1]சிகர பூதரந் தகர"—திருப்புகழ்—295.

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்தவிண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேயிடமேல்
தேங்கா வனமுந தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீ ரிலஞ்சியுஞ் செந்திலுமே. **(13)**

(ப-ரை) தேங்கு - நிறைவாகிய, ஆவன - பசுநிரைமேய்த்த திருமாலையும், மும்மத-மும்மதம் பொழியும், கரி-அயிராவதத்தை யுடைய, வேந்துடன்-இந்திரனோடு, சேர்ந்த-கூடிய, விண்ணோர்-தேவர்களையும், தேம்-அத்தேவர்கட்கிடமாகிய (அமராபதியையும்), காவல்-காப்பது, நம் - நமது, முனைய-கூரிய, வேல்-வேலாயுதத்தின், பணி-தொழில், எனும்-என்று கட்டளையிட்ட, சேய் இடம்-குமாரக்கடவுளின் வாசஸ்தலம், மேல் - முன்னேயிருக்கின்றன, தேங்கா-திகைத்து, அனமும்-அன்னப்பட்சியும், தளர் நடையாய்-தோற்கின்ற நடையை யுடையவளே, அஞ்சல் - பயப்படாதே, (அவை) செண்பக - செண்பக விருட்சத்தால், பூம் - பொலிந்த, தேங்காவனமும்-இனிய பூஞ்சோலையும், கழுநீ ரிலஞ்சியும் - செங் கழுநீர் மடுவும், செந்திலும் - திருச்செந்தூருமாம். (எ-று.) நீ-தோன்றா எழுவாய். அஞ்சல்-பயனிலை ஏ-அசை.

(க-து.) அன்னமுந தோற்கு நடையையுடையவளே! விஷ்ணு முதலிய தேவர்களையும் அமராபதியையும் காக்கும்படி வேலை யனுப்பிய குமாரக்கடவுளினது திருச்செந்திற்பதியும் பூங்காவனமும் செங்கழுநீர்ச்சுனையும் அணித்தா யிருக்கின்றன ; பயப்படாதே.

செந்தி லகத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
செந்தி லகத்தலர் துண்டமென் றுநின்ற சேயசங்க
செந்தி லகத்தலர் ராசிதந் தானைச் சிறையிட்டவேற்,
செந்தி லகத்தலர் தூற்றிடுங் கேடு திவாகருளே. (14)

(ப-ரை.) செம் - சிவந்த, திலகத்து-பொட்டினால், அலர்-பரந்த, வாள்-ஒளிபொருந்திய, நுதல்-நெற்றியையுடைய, வேடிச்சி-வள்ளிநாயகியினது, முகம்-வதனம், பங்கசெம் - தாமரையாகும், திலகத்து - எள்ளினது, அலர்-பூ, துண்டம்-மூக்காகும், என்று நின்ற - என்று நலம்புனைந்துரைக்கும், சேய - குமாரக்கடவுளே! சங்க - கூட்டமாகிய, செந்து - சீவராசிகட்கு, இலக - இருப்பிடமான, தலராசி தந்தானை-அண்டங்களைப்படைத்த பிரமனை, சிறையிட்ட வேல்-சிறைப்படுத்திய வேலாயுதத்தையுடைய, செந்தில்-செந்திற்பதியோனே! அகத்து-அகங்காரத்தினால், அலர் தூற்றிடும்-அலர் தூற்றுகின்ற, கேள்-சுற்றத்தாரும், துதி-(யாவரும்) துதிக்கத்தகக, வாகு-உனது புயத்தை, அருள்-கிருபை செய்யவேண்டும். (எ-று.). நீ - தோன்று எழுவாய். அருள்-பயனிலை. எ-அசை.

(க-து.) வள்ளிநாயகியினது முகத்தைத் தாமரை யென்றும், மூக்கை எட்பூவென்றும் வியக்குங் குமாரககடவுளே! பிரமனைச் சிறையிட்ட செந்திநாயகனே! சுற்றத்தார் மிகவும் அலர் தூற்றுகின்றார்கள்; (அது நீங்க) உனது திருப்புயந் தந்தருளவேண்டும.

திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ றீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல்கொடென்புந
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே. (15)

(ப-ரை.) திவா - பகலிலே, காகன்ன - [1]கன்னனைப்போற் கொடுக்குங் கரத்தோனே! கொடைப்பாரி-[2]பாரி வள்ளலைப்போற் கொடுக்குங் கொடையோனே! என்று-(புல்லரிடஞ் சென்று) சொல்லி, உழல் - வருந்தச்செய்யும், தீன-வறுமையாகிய, அல்-

இருளை, ஈர்-நீக்கும், திவாகர-ஞான சூரியனே! கன்னபுரக்குழை-கன்னப்புரக் குழையென்னும் பணியணிந்த, வல்லி-வள்ளிநாயகி, செருக்கு-களிப்புறத் தழுவும், உர-மார்பையுடையோனே! அந்தி-மாலையின் செவ்வானம போலும், வாகு-அழகையுடைய, அர-பரம சிவனது, கன்ன-திருச்செவிக்கு, சுக வாசக-இனிய வசனம் உபதே சித்தவனே! திறல-வலிமையையுடைய, வேல் கொடு-வேலாயுதத் தைக்கொண்டு, என்-எனது, புந்தி-இருதயத்தில், வா-வரக்கடவாய்; கா-ஒளிந்திருந்து, கன்ன மறலி யிடாது-இயமனைவன கொள்ளை கொள்ளாமல், உயிர - என்னுயிரை, சேவலுக்கு - (அவ்வுயிரைக) காப்பாற்றும் பொருட்டாக. (எ-மு.). நீ - தோன்று எழுவாய். வா-பயனிலை. ஏ-அசை.

(க-து) வறுமையினால் பிறரிடத்துக் கொடையிற் கன்னனே! பாரி வள்ளலே! யெனறு புகழ்ந்து இரப்பதை யொழிக்கும் ஞான சூரியனே! வள்ளிநாயகி தழுவு மார்பனே! பரமசிவனுக்கு உபதே சித்தவனே! என்னுயிரை யமன் கைப்பற்றிக் கொள்ளாதபடி யென்னை வந்து காத்தருள்.

(கு-உ) "[1]கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை"—தேவாரம். "வண்புகழ் பாரி"; "[2]முதிய க(ர்) ணனெனை"—திருப்புகழ் 236, 304.

சேவற் கொடியும் பணிசாந் தகனுந் திருக்கரத்துச்
சேவற் கொடியுங் கொடியகண் டாய்தினை சூழ்புனத்துச்
சேவற் கொடியுந் திவளத் தவளுந்தந் திக்களபச
சேவற் கொடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே. (16)

(ப-ரை) சேவற்கு - இடபவாகனத்தையுடைய பரமசிவனால், ஒடியும் பல-[1]பல்லுதிரக்கப்பட்ட, நிசாந்தகனும் - இருட்கூற்றாகிய ஆதித்தனும், திருக்கரத்து - (உனது) அழகிய கையினிடத்திலிருக் கின்ற, சேவற்கொடியும் - கொடியாகிய சேவலும், கொடிய கண் டாய்-பொல்லாதவைகளாயிருக்கின்றன; தினை சூழ் புனத்து-தினை நிறைந்த புனத்தை, சேவல் - காப்பவளும, கொடி-நீண்ட, உந்தி - கான்யாற்றின், வளத்தவளும் - வளப்பத்தை யுடையவளுமாகிய (வள்ளியம்மையையும்), தந்தி-அயிராவதம் வளர்த்த, களப-சந்தனம் அணிந்த, சே-சிவந்த, வல்-சொக்கட்டான் காய்போன்ற கொங்கை யையும், கொடியும் - கொடிபோன்ற இடையையுமுடைய (தெய்வ யானையையும்), உடையாய் - இருபாசத்தும் வைத்திருக்கின்ற கர்த

ஸ்வாமியே, பிரியினும் - உன்னைப் பிரிந்த (பகல்) காலத்தும், சேரினும்-உன்னையடைந்த (இராக்) காலத்தும் (எ-று.). நிசாந்தக னும்-சேவற் கொடியும்-எழுவாய. கொடிய-பயனிலை. ஏ-அசை.

(க-து.) வள்ளிநாயகியையுந் தெய்வானைநாயகியையு முடைய கந்தனே! உன்னைத் தழுவியகாலத்திரவு நீடியாமல கோழி கூவி யும், உன்னைப் பிரிந்தகாலத்து மாலை விரைந்துவராமல் பகல் நீடித் தும் கொடுமை செய்வனவா யிருக்கின்றன.

(கு-உ) "[1]சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற."—திருவாசகம்.

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைந்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி லுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே. **(17)**

(ப-ரை.) சேர்-இசைந்த, இக்கு-கரும்பையும், வடு-மாவடுவை யும் (ஒத்த), மொழி விழியாள்-மொழியையும் விழியையுமுடைய வள்ளிநாயகியின், தனச்செவ்வி - கொங்கையின் தன்மை, குறச் சேரிக்கு-குறவர் குடியிருப்புக்கு, வடு - (காந்தருவமணம் நடந்த தென்னும்) குற்றமாகிய சொல்லை, விளைந்தது-உண்டாக்கினது, அன்றே-அக்காலத்திற்றானே, நன்று-நன்றாயிருந்தது, தெண்டிரை நீர்-கடலைத்தும், சேரி-ஒருமித்தது, கு-உலகத்தை, அடு-அழிக் கின்ற, கடைநாளிலும்-உகாந்தகாலத்திலும், சிதைவற்ற-அழிவில் லாத, செவ்வேள்-குமாரக்கடவுளது, சேரி-(தென்சேரி வட) சேரி யாகிய, குவடு-மலையின், புடை-பக்கத்தில், சூழ்-சூழ்ந்த, புனத்தில்-தினைப்புனத்தில், தினை-தினை, விளைவு - விளைவானது. (எ-று). வடு, விளைவு-எழுவாய்; விளைந்தது, நன்று-பயனிலை. ஏ-அசை.

(க-து.) குமாரக்கடவுள் ஆளுகைக்குள்ளடங்கிய மலைப்பக்கத் தில் தினை நன்றாய் விளைந்தது; உடனே கன்னல்போல் மொழியும் மாவடுப்போல் விழியுமுடைய வள்ளிநாயகியின் யௌவனத்தால் குறவர் குடிக்கு வடுவிளைந்தது.

தினைவேத் தியன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்திபுந்
தினைவேத் தியமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினைவேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்
தினைவேத் தியக்குயிர் கூற்றுறி லூசிடுஞ் சீயுடம்பே. **(18)**

(ப-ரை.) தினை - தினைப்புனத்துக்கு, ஏத்தி - இறைவியாகிய வள்ளிநாயகி, அன்பு செய்-இச்சை கொள்ளும், வேந்தன் - குமாரக் கடவுளது, பதாம்புயத்தில் - திருவடித்தாமரையில், பத்தி - அன்பை யும், புத்தி - அறிவையும், நைவேத்தியம்-நைவேத்தியமாக, உகந்து-விரும்பி, ஏற்றினர் - (சமர்ப்பித்து) வணங்கின அடியார்கள், மாற்றி னர்-(உண்மையாய்) ஒழித்துவிட்டார்கள், பாற்றினம்-பருந்துக்கூட் டங்களும், தீ - நெருப்பும், தின்-பட்சிக்கத் தகுந்தும், ஐ-அழகிய, வேத்தியர்-அறிஞோர், நெறி - (விதித்த) நல்வழியில், செல்லாத - ஒழுகாததும், இந்திய-பஞ்சேந்திரிய வசத்ததும், தித்தி யினத்தின்-உணவு வகைகளினால், நைவு-கழிவாகிய (மலசலாதிகளை), ஏத்து - ஏந்திக் கொண்டதும், இயங்குயிர் - (உண்ணின்று) இயங்கும் பிரா ணனை, கூற்று-யமனானவன், ஆறில் - உண்டுவிட்டால், நாறிடும் - நாறிப்போகத் தக்கதுமாகிய, சீ-இகழ்ச்சிக்கு இடமான, உடம்பு-தேகத்தை. (எ-று.). ஏற்றினர்-எழுவாய் ; மாற்றினர்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) வள்ளிநாயகி விரும்பிய கந்தசுவாமியினது திருவடித் தாமரையில் அன்பையும் அறிவையும் செலுத்தினவர்கள் பருந்துக் குந் தீக்கும் இரையாய் நெறியொழி ஐம்புல னுகர்ச்சியைபுடைய மலபாண்டமும பிராணன் விட்டுப்பிரிந்தால் நாறிப்போவதுமாகிய உடலை யொழித்து விடுவார்கள்.

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் செவிதரந்தோல்
சியனம் போதி யமலையிற் றுதை சிறுமுநிவன்
சியனம் போதி கடைந்தான் மருகன்செப் பத்திகைத்தார்
சீயனம் போதி லாறு திருக்கென் செயக்கற்றதே. **(19)**

(ப-ரை.) சீயன் - பார்வதிபாகரான சிவன், நம் - நம்மை, போதி-உபதேசி, என-என்று, வாய் புதைத்து-வாய்மூடி, செவிதர-கேட்கவும், தோல்-யானையும், சீய-சிங்கமும், நம்பு-தஞ்சமா யுறை கின்றதும், ஓதிய-கல்விக்குறைவிடமுமான, மலையிற்றுதை-பொதிய மலைக்கு முதல்வரான, சிறுமுநிவன் - அகத்திய முநிக்கு, சீபன் - பாட்டனாகிய, அம்போதி கடைந்தான் - பாற்கடலைக் கடைந்த விஷ்ணுவினது, மருகன்-மருமகனான குமாரக்கடவுள், செப்ப - உபதேசிக்க, திகைத்தார்-(பிரணவப்பொருள் தெரியாமல்) தியங்க முற்றிருந்தார், சீ - இகழத்தக்க, அனம்போதில் - அன்னவாகனத்

நின்மேற் செல்லும், அரன் - பிரமன், ஆதி - முதன்மையாகிய, ருக்கு-வேதத்தை, என்-என்ன, செய-செய்யும்படி, கற்றது-கற்றுக் கொண்டது. (எ-று.) அரன்-எழுவாய். கற்றது-பயனிலை. ஏ-அசை.

(க-து.) பார்வதிபாகரான பரமசிவன் வாய்மூடிக் கேட்கவும், திருமான் மருகனை குமாரக்கடவுள் பிரணவப்பொருளைச் சொல்லத் திகைத்துநின்ற பிரமா ஆதிவேதத்தை என் கற்றான்?

செயதுங்க பத்திரி போற்றும பகீர திகரசெவ்வேற்
செயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்ததண்டஞ்
செயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் செல்வதென்பாற்
செயதுங்க பத்திரி யத்திரி யாதிரு என் சிந்தையிலே. **(20)**

(ப-ரை.) செய - சிறந்த, துங்கபத்திரி போற்றும் - துங்கபத்திரியென்னும் நதி வணங்குகின்ற, பகீரதி கர-கங்காதேவியின் கையிலிருப்பவனே! செவ்வேல்-சிவந்த வேலாயுதத்தையுடைய, செய - செம்பொருந்திய குமாரக்கடவுளே! துங்கபத்திரி - சுரப்புன்னையிலையை, சூடும்-புனைகின்ற, குறத்தி திறத்த-வள்ளி பங்காளனே! தண்டம் - தண்டாயுதமும், செய-வெற்றியும, துங்க - பெருமையும், பத்தி-ஒழுக்கமு முடைய, ரிபு-மாறுபட்ட (காலன்), திரி-கெடும்படி (உதைத்த), பாதத்தர்-திருவடியையுடைய பரமசிவன், செல்வ-புதல்வனே! தென்பால் - தென்திசையில், செய்-போகச்செய்வதாகிய, அதுங்கு-பாவருமொதுங்கும, அபத்து-தீநெறியினால, இரிய எனது சிந்தை முதிர்சேதாட, திரியாது - உழலாமல, இரு - நீ தங்கியருள வேண்டும், என் சிந்தையில்-என் மனத்தின்கண்ணே. (எ-று.). நீ - தோன்றா எழுவாய். இரு - பயனிலை.

(க - து) காங்கேயனே! வேலாயுதனே! வள்ளி நாயகனே! பரமசிவனது மைந்தனே! யான் இயமதண்டனையை விளைக்கும் அவநெறியிற் சிக்காவண்ணம் நீ என் சிந்தையில் வீற்றிருக்க வேண்டும்.

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தனு காதரு டமதலை
சிந்தா குலவரி மாயூர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே. **(21)**

(ப-ரை.) சிந்தா-ஒருக்காலும் அழியமாட்டா, குல வரிசைப் பேரும்-நமது வமிச பாரம்பரை நாமமும், ஊரும்-நமது நகரமும்,

நஞ் சீரும்-நமது சிறப்பும், என்று நர்-என்று எண்ணுகின்ற, சிந்தா குலவ ரிடத்து-வருந்து மனத்தையுடைய அஞ்ஞானிகள் பால், அணுகாதருள்-சேராதிருக்க அநுக்கிரகிக்கவேண்டும்; தீ மதலை-அக்கினியிற் பிறந்த கோழியை, சிந்தா-கொடியாகக் கொண்டவனே! குலவு - பிரகாசிக்கின்ற, அரி-பச்சைநிறம் பொருந்திய, மாயூர வீர - மயிலேறுஞ் சேவகனே! செகம்-பூமியை, அளப்ப-அளக்கும்படி, சிந்தாகு - வாமனமாகி, உலவு - உலாவின, அரி-விஷ்ணுவின, மருக - மருகனே! சூரனை சூரனை, செற்றவனே-செயித்தவனே! (எ-று) நீ - தோன்றி எழுவாய, அநுகாதருள்-பயனிலை.

(க-து.) கோழிக் கொடியோனே! பச்சைமயில் வீரனே! வாமனவுருவெடுத்தாரங் கொண்ட மான்மருகோனே! சூர சங்காரனே! லௌகிக வாழ்வை நித்தியமாய நமபி மனம் வருந்துவோர்பாற் சேராதிருக்க எனக்கருள்செய்.

செற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ்வரைமேற்
செற்றை வரும்பழ நிக்கந்த தேற்றிடு நூற்றுவரைச்
செற்றை வருமபழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
செற்றை வரும்பழ மாங்கூடு வேமத் தினத்தில்வந்தே. (**22**)

(ப-ரை.) செற்றை - செற்றையென்னு மீனினம், வரும் - உலாவுகின்ற, பழனம்-வயலும், சோலை-பொழிலும, இஞ்சி-மதிலும், திகழ்-விளங்காநின்ற, வரைமேல்-பருவதத்தின்மேல, செல்-மேகம், தைவரும்-தவழுகின்ற, பழநிக கந்த-பழநிமலைக் கந்தனே! தேற்றிடு - அபயந் தந்தருள்வாய, நூற்றவரை - துரியோதனன் முதலிய நூறுபேரையும், செற்று-கொன்று, ஐவரும-பாண்டவர்கள், பழநாடு-பழைய ராச்சியத்தை, ஆள-ஆளும்படி, நாடி-கருதிய கிருஷ்ணமூர்த்தியினது, கண் - விழியாகிய (ஆதித்தன்), சேய்-மைந்தனாகிய காலன, விடுத்த-அனுப்பிய, செற்றை வரும்-தூதர் கூட்டம வரும், பழமாங கூடு-வார்த்திகத்தை யடைகின்ற இக்கூடலானது, வேம்-பிராணனீங்கித் தகிக்கப்படுகின்ற, அத்தினத்தில் வந்து-அந்நாளில் எழுந்தருளிவந்து. (எ-று.) நீ-தோன்றி எழுவாய். தேற்றிடு-பயனிலை. ஏ-அசை.

(க - து.) பழநிமலை யாதிபனே! விஷ்ணுவின் விழியாகிய சூரியனது மைந்தனாகிய காலன் விடுத்த தூதர் கூட்டம வரும்

புழுக்குரம்பையாகிய என்னுடல் அழியுங்கால் நீ எழுந்தருளி வந்து அபயந் தந்தருள்.

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றாகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே. **(23)**

(ப-ரை.) தினகர-பகன் பூடாவென்னும் இரண்டு ஆதித்தர்களுடைய, அக்க-கண்ணையும், ரதம்-பல்லையும், கெடுத்தார்-அழித்த பரமசிவனுக்கு, குருதேசிகர் - போதகாசிரியரும், செந்தினகரர்-செந்திற்பதியினரும், அக்கரம் ஆறுடையார்-சடாக்ஷரப் பொருளானவரும், தெய்வ-தெய்விகமாகிய, ஆரண-வேதம் பூசித்த, தந்தி-பாம்புபோன்ற பிரகாரத்தையுடைய, நகர் - திருச்செங்கோட்டுமலையை யுடையவருமாகிய (கந்தசுவாமி)யினது, அர-அரத்தாற் கூர்மையிட்ட, கர-திருக்கையிற்றரித்த, சத்தி-வேலாயுதமானது, இன்றாகில் - இல்லாவிட்டால், அத்தேவர் நண்பதி-அத்தேவர்கள் பொருந்திய பொன்னகரமும், ந-இல்லாமற் போவதுமன்றி, கர-வஞ்சக நிறைந்த, ரககர்-அசுரரும், அதம் தீர்வர்-இறப்பும் ஒழிவார்கள், ஈர்வர் செகமெங்கும்-உலக முழுவதையும் நிர்மூலமாக்கியும் விடுவார்கள். (எ-று.) அரக்கர்-எழுவாய். அதந் தீர்வர், ஈர்வர்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) பரமசிவனுக்குக் குருவாயச் செந்தூரில் வாழும் சடாக்ஷரப் பொருளாகிய திருச்செங்கோட்டு மலையையுடைய கந்தசுவாமியினது திருக்கைவேல் எழுந்தருளாவிடில் அமராபதி யழிந்து போவதுமன்றி அசுரரும் ஸ்திரமாயிருந்து உலக முழுவதையும் நாசஞ் செய்துவிடுவார்கள்.

செகப்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டுகொண்ட
செகம்புர வாதிங்ஙன் செய்வதென் ஞேமயல் செய்யவன்பு
செகம்புர வாச மெனத்துயில் வார்செப்ப பங்கபங்க
செகப்புர வாமுரல் செந்தூர வென்னத் தெளிதருமே. **(24)**

(ப-ரை.) செகம்-உலகத்திலும், புர - ஊரிலுமுள்ள, வார்-ஒழுங்கான, கிளையெல்லாம - சுற்றத்தா ரெல்லாரும், மருண்டு-மயங்கி, திரண்டுகொண்டு-கூடிக்கொண்டு, அசெ-ஆட்டினுடைய, கம்-தலையை, புரவாது - காப்பாற்றாமல், இங்ஙன் - இவ்விடத்தில்,

செய்வதென்னோ-வெறியாடற்செய்ய நினைப்பதென்ன விபரீதம், மயல்-(கைக்கிளையாக மயங்கிய இம்மாதின்) விரகதாபம், செய்ய-சிவந்த, வன்-வலிய, புசெகம்-ஆதிசேடனை, புர வாசமெனை-ஆதி யான இடமாய்க்கொண்டு, துயில்வார்-திருக்கண்வளர்கின்ற திரு மால், செப்பு - புகழ்கின்ற, அபங்க-பங்கமிலாதவனே! பங்கசெ-தாமரைத்தடாகத்தில், கம்பு-சங்கினங்கள், உரவா-உரக்க, மூரல்-சப் திக்கின்ற, செந்தூர-திருச்செந்திற் பதியோனே, என்ன-என்று சொல்லில், தெளிதரும் - (அக்ஷணமே) தீர்ந்து விடுவது நிச்சயம். (எ-று.) மயல்-எழுவாய். தெளிந்திடும்-பயனிலை. ஏ-அசை.

(க-து) பந்துக்க ளெல்லாரும் மயங்கி வீணாய் ஆட்டைப் பலியிடுவதால் இவள் மையல் தணியுமோ? (தணியாது); திருமால் புகழத்தகக மாசற்றவனே! செந்தூரனே! என்று சொல்லிற் றணிந் திடும்.

(து-உ.) இச்செய்யுள் 'வெறி விலக்கல்' என்னுந் துறை. திருக் கோவையார்-உகூஉ.

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமி ழாநித்தர் சேவித்து நின்றதென்னோ
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்வி தினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே ()

(ப-ரை.) தெளிதரு-ஆராயப்படுகின்ற, முத்தமிழ் - இயல் இசை நாடகம் எனும் முத்தமிழிலும், வேதத்தில்-வேதத்திலும், தெய்வப் பலகையின் கீழ்-தெய்வத் தன்மையான சங்கப் பலகை யிலும், தெளி-மாசற்ற, தரு-குற்றலின்கீழும், முத்து-முந்தியிருந் தருளுகின்ற, அமிழா நித்தர்-அழிவில்லாத நித்தியராகிய பரம சிவன், சேவித்து நின்றதென் - பணிந்துநின்ற காரணமென்ன? நாள்-நக்ஷத்திரம் (போல), தெளிதரு-பிரகாசிக்கும், முத்து-முத்தை யும், அமிழ்து - தேவாமுதத்தையும், எய்-ஒத்த, நகை-பல்லையும், வாசக-சொல்லையுமுடைய, செல்வி-மங்கையாகிய, தினை-தினையை, தெளி - கொழிக்கின்ற வள்ளிநாயகியார், தரு முத்து - கொடுக்கு முத்தத்தினால், அமிழ் - ஆநந்தத்தி லாழ்ந்தவராகிய, செவ்வேள்-முருக வேளானவர், இருப்ப-எழுந்தருளி யுபதேசிக்க, செவி குனித்து-செவியைத் தாழ்த்திக்கொண்டு. (எ-று.) நித்தர்-எழுவாய். சேவித்து நின்றதென்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) வள்ளிநாயகியின் முதகத்தால் மகிழும் குமாரவேளிருந்து உபதேசிக்க முத்தமிழிலும் வேதத்திலும சங்கப்பலகையிலும் குற்றமின்றி முதல்வராயிருக்கிற நித்தியரான பரமசிவன் பணிவோடு நின்று கேட்டதென்ன காரணம் ?

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்-
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே.

(ப-ரை.) செவிக்கு-என் காதுக்கு, உன்-உனது, தவா - தவிராத, ரண - உரிமையை, நல்கு - கொடுக்கும், இசை - கீர்த்தியை, பூட்ட-அணிய, வன்-வலிய, சிந்தை-(என்) இருதயமாகிய, அம்பு செ-தாமரையிலிருக்கும், வி-பட்சியாகிய ஆன்மா, குன்ற-வருந்துகையில், வாரணம்-நின் கோழிக்கொடி யெழுந்தருளி, அஞ்சல் என்று - பயப்படாதேயென்று, ஆண்டது - அடிமைகொண்டது, நீண்ட கன்ம-பெரிதான முன்செய் வினையாலாகும், செ-செனனத்துக்கு வித்தாகிய, இக் குன்று-இம் மலைபோன்ற, அவா-ஆசையை, ரண-அமர்புரியும், வேலாயுதம்-அயிலானது, செற்றது-கொன்றுவிட்டது, உற்றன - என் சென்னிமேலே வீற்றிருந்தன, கட்செவி - பாம்புபோன்ற, குன்ற - திருச்செங்கோட்டு மலையையுடைய கந்தசுவாமியே! வாரண-தெய்வயானை, வள்ளி-வள்ளியாகிய நாயகிமாருடைய, பொற்றாள் - பொன்னடிகள், மற்றென் தேடுவது - இனி நான் சம்பாதிக்கவேண்டியது வேறென்ன இருக்கின்றது- (எ-று.) யான்-தோன்றா எழுவாய். தேடுவதென்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) நாகமலையில் வாழுங் கந்தசுவாமியே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக்கொடி என் ஆத்துமாவை அபயங் கொடுத்து ஆண்டுகொண்டது ; உன் வேலாயுதம் பிறப்புக்கிடமான பேராசையை யொழித்துவிட்டது ; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது ; இனி யான் தேடவேண்டியது என்ன இருக்கின்றது ?

தேடிக் கொடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே.

(ப-ரை) தேடிக்கொள்-இப்போழுதே சம்பாதித்துக் கொள்வா யாக, தாம்பு-பாசத்தை, அடை-பொருந்திய, கை- கையையுடைய, கூற்று-இயமன், அடாது - அழிக்காதபடி, உளம்-நெஞ்சமே, சே-இடபம், வில - தநுசு, மை-மேஷம், மீன் - மீனம், தேள - விருச்சிகமென்னும் இராசிகளையும், திக்கொடும்-திசைகளையும், படை-சிருட்டித்த, கோமான் - பிரமதேவனை, சிறைபட - சிறைப்படுத்தி, வேறுள புத்தேள் - மற்றைத் தேவரது, தீ-பத்தியில், கொடும்பு - கிருகுதலை, அடையா-சேராத, வெகு நாட்டன் - ஆயிரங்கண்களை யுடைய இந்திரனது, சிறை-சிறையை, களை-ஒழித்தவரும், உந்து-நீரிலும் (நெருப்பிலும்) சமனா செலுத்திய, எடு - எடுகளையும, இகல்கொடும - அவர்கள செய்த கொடுமைகளையும, படு-தாழ்த்தி விட்ட, ஐ-சுவாமியாகிய, மன் கேளவன்-வெகயவியானை நாயகனது, நற்றுணை நல்ல அநுக்கிரகத்தை, சிக்கெனவே-உறுதியாக (எ-று.) நீ-தோன்றா எழுவாய. தேடிக கொள - பயனிலை. வ - அசை.

(க-நு.) நெஞ்சமே! பாச தரனாகிய யமன உன்னை ஈலிவு செய்யாதபடி பிரமாவைச் சிறைப்படுத்தி இந்திரனைச் சிறைதவிர்த்துச் சமனரிட்ட எட்டையும் வாதையுஞ் செயித்த குமாரக்கடவுளது துணையை உறுதியாகச் சம்பாதித்துக்கொள்.

சிக்குறத தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லெனுஞ்சில ரன்பர்செந்தாள்
சிக்குறத தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே. (28)

(ப-ரை) சி-இகழ்தற்கிடமாகிய, குறு - குறைவுபடத்தக்க, அத்தத்தை-பொருளை, வழங்காது - நல்வழியிற் செலுத்தாமல், இழந்து-பலவழியாயிழந்து, தியங்குவர்-வருந்துவார்கள், தேசு-(தங்களுடைய) கீர்த்தியும், இக்குற - மங்கிப்போகும்படியாய், தத்து - பொங்கமுற்ற, ஐ-அழகிய, வடிவேல் என்ற சிலர்-கூரிய வேலாயுத மென்று துதியாத சிலபேர்கள், அன்பர்-அவ்வேலைத் துதிக்கும் அடியார்கள், செந்தாள்-உனது செவ்விய திருவடியை, சிக்குற-அகலா துறையக் கண்டும், தத்தை கடிந்து-கிளியோட்டி, ஏனல காக்கும் - தினைப்புனங் காக்கும், சிறுமி-சிறுமியாகிய, குறிஞ்சிக் குறத்து - மலைநிலத்துக் குறவரிடம் வளர்ந்த, அத் தையல்-அந்த வள்ளிநாயகியினது, நகில்-கொங்கைச் சுவட்டால், எப்போதும்-சதாகாலமும்,

திகழ் புயனே-பிரகாசிக்கின்ற புயத்தையுடைய குமாரக்கடவுளே. (எ-று.) சிலர் - எழுவாய் - தியங்குவர் - பயனிலை.

(க-து) வள்ளிநாயகியினது கொங்கைச் சுவடு திகழும் புயத்தோனே! அன்புற்றவர்கள் உனது திருவடியில் அகலாது உறைதலைக் கண்டும் சிலர் உனது வேலாயுதத்தைத் துதியாமல் அநித்தியமான கைப்பொருளையும் இழந்து வறுமையால் வருந்துகின்றார்கள்.

திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவே
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமென் னுவமண் சேனைபுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே. (29)

(ப-ரை.) திகழும் - விளங்காநின்ற, அலங்கல் - மாலையையணிந்த, கழல் - தனது திருவடியை, பணிவார் - வணங்குவோர், சொற்படி செய்ய - திருவாக்கின்படி நடக்க, ஓதி-தமிழ்வேத மென்னுந் தேவாரத்தை மொழிந்தருளினவரும், கழுமலம்-தான் அவதாரஞ் செய்த சீகாழியையும், கற்பக வூர்-தான் காத்தருளிய கற்பகத் தருவையுடைய அமராபதியையும், செருத்தணி-தான் உறையுந் திருத்தணியையும், செபபி-துதிசெய்து, வெண்பூதி-திருவெண்ணீறனது, கழும் போககடிக்கும், மலம்-மும்மலத்தையும், கற்பு-பரம்பொருளிதேயென்று நம்புங் கற்புடைமையை, அருளும் - கொடுத்தருளும், என்னு-என்று நினையாத, அமண்-சமணர், சேனை-கூட்டங்களை,உபாதி-வருத்தமான, கழு-கழுவிலேற்றி, மலங்கற்கு-கலக்கமுற்றழியும்படிக்கு, உரைத்தோனலது - வாதுமொழிந்த சம்பந்தப் பிள்ளையாகிய குமாரக்கடவுளையன்றி, இல்லை தெய்வங்களே-பிரத்தியக்ஷமான தெயவங்கள் வேறில்லை. (எ-று)

தெய்வங்கள்-எழுவாய். இல்லை-பயனிலை ஏ-அசை.

(க-து)தன்னடித் தொண்டர்க்கு நன்னெறியாகத் தேவாரத்தை மொழிந்தருளினவரும் திவ்விய ஸ்தலங்களைத் துதியாமலும் திருநீற்று மகத்துவத்தைக் கைக்கொள்ளாமலும் இருந்த சமணர்கள் கழுவேறும்படி வாதினால் வென்றவருமாகிய சம்பந்தாவதாரங் கொண்ட குமாரக்கடவுளேயன்றி வேறு தெய்வமில்லை.

தெய்வ மணம்புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம்புண ராரிக்கு மருக செசசையந்தார்
தெய்வ மணம்புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம்புணர் கந்தனென் னீருங்க டீதறவே. (30)

(ப-ரை.) தெய்வ - தேவர்களையும், மண் - பூமியையும், அம்பு-சலத்தையும், உணர்-அறிவையும், தீ-நெருப்பையும், கால்-காற்றையும், வெளி - ஆகாசத்தையும், செய்த - படைத்த, தே - பிரமாவானவன், வரைந்தது-பொறித்த விதியை, எய்வ-(குமாரக் கடவுளினது [1]நாமகீர்த்தனமானது) செயிக்குமாதலால, மண-மாசற்ற, அம்-அழகிய, புள்-கருடவாகனத்தையுடைய, நராரிக்கு - நரசிங்க அவதாரமெடுத்த திருமாற்கு, மருக - மருகோனே! செச்சை அம் தார்-அழகிய வெட்சிமாலையை யணிந்த, தெய்வ-கடவுளே! மணம் புணரும்-வாசனையையணிந்த, குழலாளை-கூந்தலையுடைய (வள்ளி) நாயகியை, தினைப்புனத்தே - தினைப்புனத்திலே, தெய்வமணம் புணர்-காந்தருவமணமாகப் புணர்ந்த, கந்தன்-குமாரக்கடவுளே! என்னீர்-என்று தோத்திரம் பண்ணுங்கள், உங்கள்-உங்களுடைய, தீது - வினை, அற-ஒழியும்படி. (எ-று.)

நீர-தோன்ற எழுவாய், என்னீர்-பயனிலை. ஏ-அசை.

(க-து) திருமான் மருகோனே! வெட்சிமாலையை யணிந்தோனே! வள்ளிநாயகியைத் தினைப்புனத்தின் மணந்த கந்தசுவாமியே! என்று துதித்தால் அது பஞ்சபூத முதலானவற்றைப் படைத்த பிரமாவின் விதியையு நீக்குமாதலால் உங்கள் தீவினையறும் பொருட்டு அப்படித் துதியுங்கள்.

(கு-உ.) "[1]முடியாப்பிறவிக் கடலிற்புகார் . வேற்பெருமாள் .. திருநாமம் புகலபவரே"—கந். அலங்-33.

"மாமயிலோன் கால்பட் டழிந்தது இங் கென்றலை மேலயன் கையெழுத்தே" —கந். அலங்-40.

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசந்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே. **(31)**

(ப-ரை.) தீதா-பொல்லாங்காகிய, வசவு-இகழ்ச்சிச் சொல்லை, அனுபவிக்க-அனுபவித்தற்கிடமாய், மண்ணிலும்-பூலோகத்திலும், விண்ணிலும் - தேவலோகத்திலும் (புகழையும் போகத்தையும் பெற நினைத்து), செந்தீ-சிவந்த அக்கினிபகவான், தாவு - ஏறுகின்ற, அச-ஆட்டை, அனியாயம் செய்-சீவகாருணியம் இல்லாமல் வதைத்து யாகஞ்செய்கின்ற, வேதியரே-மறையோரே! தியங்கா-

இனி யப்படித் திகைக்காத, தீ-நல்லறிவை, தா-தந்தருள்வா யென்றும், வசவ-இடபவாகனத்தையுடைய, நிமலர்-பரமசிவனது, செல்வா-மைந்தனே! சாக்கிர வசத்து-ஆன்மா சாக்கிர அவத்தையி லறிவோடிருக்கிற காலத்திலும், அதீதா-துரியாதீத அவத்தையிற் கருவி கரணங்களொடுங்கி, வச-வசமாகுங் காலத்திலும், அன்புறப் பாரெனும்-உனக்கு எங்களிடத்தில அன்புண்டாகிக் கடாக்ஷிக்க வேண்டும் என்று துதியுங்கள், முத்தி-மோக்ஷமானது, சித்திக்க-உங்களுக்குக் கிடைக்கும்படி. (எ-று.)

நீங்கள்-தோன்றா எழுவாய். துதியுங்கள்-பயனிலை. ஏ-அசை.

(க - து) இம்மையிற் புகழையும், மறுமையிற் போகத்தையும் பெற நினைத்துப் பழிக்கஞ்சாமல் சீவனைக் கொன்று வேள்வி செய்கின்ற மறையோரே! முத்தி வேண்டுமானால் பரமசிவனது மைந்தனே! சாக்கிர அவத்தையிலும் துரியாதீதத்திலும் எங்களுக்கு நல்லறிவுண்டாக அன்புவைத்தருளென்று துதியுங்கள்.

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சைகுறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கெனுந்திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே. (32)

(ப-ரை.) சித்திக்க-அடியேனுக்குக் கிடைக்க அருள வேண்டும், தத்துவ-தத்துவசொரூபியே! ருத்திர பாலக-சிவனது மைந்தனே! செச்சை-வெட்சிமாலை யணிந்த, குறிஞ்சித் திக்க-குறிஞ்சி நிலத் திசைக்கு இறைவனே! ததது- அலைமோதுகின்ற, உவர் - உவர்ப்பையுடைய, அத்தியில்-சமுத்திரத்தின்கண், மா - மாவுருக் கொண்ட சூரனை, வென்ற-செயித்த, சேவக-வீரனே! இச்சித்து-விரும்பி, இக்கத்து-கரும்பும, அத் துவர்-அந்த சிவந்த பவளமும், வாய்-வாயும், மொழி - மொழியுமாகும், மாதர்க்கு - மடவார்க்கு, எனும் திணை-என்று நலம்புனைந்துரைக்குங் காமநூலை, வாசித்து-ஒழியாமற் படித்து, இக்கத்தத்து-இதற்கினமான வெகுளியினால், வருத்தப்படாது - துன்பமடையாது, நற்சேதனம் - நல்ல ஞான அறிவு. (எ-று.) நீ-தோன்றா எழுவாய்; சித்திக்க அருளவேண்டும்-பயனிலை. ஏ-அசை.

(க-து) தத்துவசொரூபியே! சிவனது புத்திரனே குறிஞ்சி நிலத்து இறைவனே! சமுத்திரத்தின்கண் சூரனை வதைத்தவனே!

மாதரது சொலலைக் கரும்பென்றும், வாயைப் பவளமென்றும், நலம் பாராட்டும் காமநூலின் வாஞ்சையையும், வெகுளியையும் விட்டு உன்னை யறியும் நல்லறிவை எனக்குக் கிருபை செய்யவேண்டும்.

சேதனந் தநதுறை யென்றுமை செப்புங் குருநதுறைகாற்
சேதனந தநதுறை யல்விமன் வாவிச்செந் தூர்கருத
சேதனந் தநதுறை யென்றறி யார்திற நீங்கிநெஞ்சே
சேதனுந் தநதுறை மற்றுமுற் றுடித் திரிகைவிட்டே. (33)

(ப-ரை) சே-அழகிய, தனம் தந்து-திருமுலைப்பாலூட்டி, உற-பெரும்பேறு யுற்ற, ஐ என்று-ஐயனே யென்று, உமை செப்பும் - பார்வதி யருமைபாரா மொழியும், குருநது[1] - பாலகனாகிய குமாரக்கடவுள், உறை - அமர்ந்தருளிய, காற்சேதது - சிவந்த காலை யுடைய, அனம்-அன்னங்களும், தந்துறை-நூலோடுகூடிய, அல்லி-ஆம்பல்களும், மன்-அகலாதிருக்கின்ற, வாவி-தடாகங்கள் சூழ்ந்த, செந்தூர் - திருச்செந்திற்பதியை, கருது - நீ சிந்தைசெய், அசேதனம்-அறிவின்மையான, தம்-தநகள் தங்கள், துறை என்று-சமயக்கோட்பாடென்று, அறியார் திறம் நீங்கி-தெரியாமலுழலும் பரசமயவாதிகளின் கூட்டத்தை நீங்கி, நெஞ்சே - மனமே - சேது-சேதுமுதலிய, அனந்தம் துறை மற்றும்-மற்றநேக கடல் நதிகளை யும், உற்றுடித திரிகை விட்டு-போய்ப்போய்த் தானஞ்செய் தலை வதை விடுத்து. (எ-று)

நீ - தோன்றா எழுவாய். கருது - பயனிலை. ஏ-அசை.

(க-து.) நெஞ்சமே! பரசமயவாதிகளோடு இணங்காமல் சேது முதலிய தீர்த்தங்க ளாடக் கருதும் மனதைவிட்டுப் பார்வதி திரு முலைப்பாலுண்ட குமாரக்கடவுள் வாசஞ்செய்கின்ற [2]திருச்செந் தூரையே நாடுக.

(கு-உ.) "[1]பாவை திருமுலைப்பால் அருந்தி ** விம்மி யழுங் குருந்து" கந் அலங். 5.

"[2] செந்திலென் றவிழவுளம்"-திருப்புகழ் 18

" செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுற"-திருப்புகழ்-47

" திருச்செந்திலை யுரைத்துய்ந்திட"-திருப்புகழ்-71

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றேடுந் திருத்துளமே. (34)

(ப-ரை) திரிகையிலாய்-மாறுபடாத நித்தியனே! இரவு - இராத்திரியையும், எல்-பகலையும், ஆழி-கடலையும், மண் - பூமியையும், விண் - ஆகாசத்தையும், தரு-மூவரின் முதல்வனுயிருந்து சிருஷ்டித்தவரும், சிர பாத்திரி-பிரமகபாலத்தைப் பலிக் கலமாகக் கொண்டவரும், கையிலாயி-கயிலாசத்தை யுடையவரும், ரவ-ஆரவாரத்தையுடைய, ஆநந்த நாடகி-ஆநந்த நடனஞ்செய்கின்ற பரமசிவனுக்கும், சேர்-அவர்பாலிருக்கின்ற, இம கோத்திரி-இமய மலையின், கையில்-இடத்திலுற்பவித்து வளர்ந்த, ஆயி-பார்வதிக்கும், ரமிக்கும் - மகிழ்வைவிளைக்கும், மைந்தா-புதல்வனே! செந்திலாய்-திருச்செந்திற் பதியோனே! ஒருகால்-ஒருதரம், திரிகையில்- குலாலன்[1] சக்கிரஞ்சுற்றி வருவதற்குள், ஆயிரக்கோடி சுற்றேறும்-ஆயிரங்கோடிதரஞ் சுற்றிவருவதாகிய, திருத்துளம் - (என்னுடைய) மனதைத் திருத்தி யருளவேண்டும். (எ-று)-நீ. தோன்றா எழுவாய். திருத்து-பயனிலை. ஏ-அசை.

(க-து.) நித்தியமானவனே! சராசரங்களைப் படைத்தும் பிரம கபாலமேந்தியும், ஆநந்த நடனஞ்செய்து கயிலாசத்திலுறைகின்ற பரமசிவனுக்கும், இமயமலையின் குமாரியாகிய பார்வதிக்கு மைந்தனே! திருச்செந்திற் பதியோனே! என் உள்ளமானது குலாலன் சக்கிரம் ஒருதரம் சுற்றுவதற்குள் அநேக கோடிதரம் சுற்றி வருகின்றது, அதை யடக்கியருளவேண்டும்.

(கு-உ.) "[1]குலாலன், திகிரி வருமொரு செலவினி லெழுபது செலவு வருமன பவுரிகொ டலமரு திருகன்"-திருப்புகழ்-1009.

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்டசிந்தை
திருத்துள வாரன்னை செந்தூரையன்னள்செம்மேனியைன்பு
திருத்துள வார்சடை யிசர்மைந் தாவினிச் செச்சைநல்கே.

(ப-ரை. திருத்துளவார் - திருத்துழாய் மாலையை யணிந்த விஷ்ணுவினது, இகல்-கரியநிறத்தைப் பகைக்கின்ற, போதுடன்-மாலைக்காலத்தோடு, சேண்-ஆகாசத்தினின்றும், மழை தூங்கும்-மழை பெய்கிறது; சங்கது-சங்கினங்களை, இருத்துள - உடையதாயிடமகன்ற, வாரிதி - சமுத்திரம், கண்டுயிலா - ஓயாமல் முழங்குகின்றது; செயல் மாண்ட சிந்தை-இந்த விரக தாபத்தினால் மெய்மறந்து கிடக்கின்ற என் மனதை, திருத்து-ஆற்றுதற்கு, உள-

உரியவர், ஆர்-யார்; அன்னை - தாயும், செந்துறை அன்னள் - பகை யாகிய செந்திறப்பதியை யொத்திருக்கின்றாள்; செம் - சிவந்த, மேனி - திருமேனியில், என்பு-எலும்பையும், உதிருத்துள - உதிரத்தக்க திருநீற்றுப் பொடியையுமுடைய, வார்-நீண்ட, சடை-சடா பாரத்தையுமுடைய, ஈசர் - பரமசிவனது, மைந்தா - புதல்வனே! இனி-இனிமேல் சகிக்கப்படாததாதலால், செச்சை-உனது வெட்சி மாலையை, நல்கு - எனக்கு அளித்தருள வேண்டியது. (எ-று.)

நீ-தோன்றா எழுவாய், நல்கு-பயனிலை. ஏ-அசை.

(க-து) திருமேனியில நீறும் எலும்பும் அணிந்த நீண்ட சடா பாரத்தையுமுடைய பரமசிவனது மைந்தனே! கார்காலமும் மாலைப் போதும் ஒத்திருக்கின்றன; சமுத்திரமு முழங்குகின்றது; என்னைத் தேற்றுபவர் யாவர்? அன்னையும் பகையா யிருக்கின்றனள்; ஆதலால் இனிச் சகிக்கமுடியாது; உனது வெட்சிமாலையைத் தந்தருள வேண்டும்.

செச்சைய வாவி கலபில்வல் வாயிடைச் சேடனிற்கச்
செச்சைய வாவி பருகுஞ் சிகாவல செங்கைவெந்தீ
செச்சைய வாவி விடுகெனுஞ் செல்வநின் றாளனுகச
செச்சைய வாவி னுயிர்வாழ் வினியலஞ் சீர்ப்பினுமே. (36)

(ப-ரை) செசசைய-வெட்சிமாலையை யுடையோனே! வாவு-தாவுதலையும், இகல்-பகைமையையும், அயில்-கூரமைபொருந்திய, வல்-வலிய, வாயிடை-வாயினிடத்தில, சேடன்-பாம்பு, நிற்க-இருக்க, செ-சிவந்த, சைய - மலையின்கண், ஆவி - அதனுயிரை, பருகும்-உண்ணுகின்ற, சிகாவல - மயில்வாகனனே! செம் - சிவந்த, கை-கரத்தினிலேந்தி, வெம்-வெவ்விய, தீ-அனற்பொறியை, செச்சைய-ஆட்டு வாகனத்தையுடைய அக்கினிதேவனே! வாவி-சரவணப் பொய்கையில், விடுக எனும்-(பரமசிவன்) கொண்டுபோய விடுகென அதில் உற்பவித்த, செல்வ-பாலகனே! நின் தாள்-உன்னுடைய திருவடிகளை, அணுகச் செ-நாங்களடையக் கிருபைசெய்: சை-இகழ் தற்கிடமான, அவாவின் - ஐம்புல ஆசைபால, உயிர் வாழ்வு-உயி ரோடு வாழ்வதை, இனி அலம்-இனியுடையேமல்லேம், சீர்ப்பி னும்-செல்வம் அதிகரிக்கினும். (எ-று.). நீ-தோன்றா எழுவாய், அணுகச்செ-பயனிலை. ஏ-அசை.

(க-து.) வெட்சிமாலை யுடையவனே! பாம்பினுயிரை யுண்ணு மயில்வாகனனே! பரமசிவனிடத்தில அனற்பொறியாய்த் தோன்றி

அக்கினிதேவனுற் சரவணப் பொய்கையில் விடப்பட்டதில் வளர்ந்த பாலகனே! இனி நாங்கள் மிகுந்த செல்வம் அடையினும் அவ்வாசையில் அழுந்தி யுடலை யோம்போம்; நின் திருவடியிற் சேர்த்துக்கொள்.

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலையோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவளைக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நூற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே. ()

(ப-ரை.) சீர்க்கை-மனந் திருந்துதல், வனப்பு - அழகாகும், மலர்-புஷ்பங்களையுடைய, வேங்கையானவன் - வேங்கை மரமாய் நின்றவனும், செஞ்சிலையோர்-அழகிய வில்லையுடைய குறவர்கள், சீர்-சந்தேகப்பட்ட தன்மையை, கை - கோபித்து, வன-வனத்தில், புனித-பரிசுத்தமான, தவ வேடன்-தவ வேடங்கொண்டவனும், தினை வளைக்கும்-தினைப்புனத்தைக் காக்கின்ற, சீர்க்கு-சிறந்த வள்ளிநாயகிக்கு, ஐவனப் புனமது-மலைநெல் விளைகின்ற புனத்தின்கண், உருக்காட்டிய சேய்-தன் நிசரூபத்தைக் காட்டிய குமரனும், தமிழ்நூற் சீர்க்கு-இயற்றமிழ் நூலுக்குரிய முப்பது சீருக்கும், ஐ-புலவனாகிய தேவனும், வன - கங்கையையும், புல்-அறுகையும் அணிந்த, நிமிர்-நீண்ட, சடையோன்-சடாபாரத்தையுடைய பரமசிவனது, மகன்-மைந்தனுமாகிய முருகக் கடவுளினது, சிற்றடிக்கு-சிறிய திருவடித் தாமரைகளை யடைதற்கே. (எ-று.)

சீர்க்கை-எழுவாய், வனப்பு-பயனிலை. ஏ-அசை.

(க-து.) தினைப்புனத்தில் முன் சந்தேகித்த சந்தேகம் குறவர் நீங்கும்படி வேங்கைமரமாய் நின்றவனும், தவ வேடங் கொண்டு வள்ளி நாயகிக்குத் தன் நிசரூபத்தைக் காண்பித்தவனும், இயற்றமிழ்ப் புலமையையுடைய பரமசிவனது மைந்தனுமாகிய குமாரக் கடவுளினது திருவடியை யடைதலே யழகாகும்.

சிற்றம் பலத்தை யரன்புநெய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க்குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ்செந் தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே. (38)

(ப-ரை.) சிற்றம்பலத்து - ஞான வெளியாகிய, ஐயர்-சுவாமியும், அன்பு-பக்தியென்னும், நெய்-நெய்யை வார்த்து, நூல்-ஆகம நூலென்னும், திரி-திரியை, சிந்தை-இருதயமாகிய, இடும்-தீப

மேற்றுகின்ற, சில் - தகழியிலிட்டு, தம்ப-ஆன்மாவுக்குப் பற்றுக் கோடாகிய, லத்தை வர-கிருபையுண்டாகும் பொருட்டு, ஞான தீபம் - மெய்ஞ்ஞான தீபத்தை, இட்டார்கரு - ஏற்றின அடியார்க ளுக்கு, பரிசில்-ஈவாக, தம்பலத்தை - தமது சாயுச்சியமென்னும் பலனை, அருளும்-கிருபை செய்கின்ற, செந்தூரர்-திருச்செந்திலைய கருமாகிய கந்தசுவாமியினது, பகைக் குலமாம்-சத்துருக்களாகிய அசுரக்குலத்தை வேரறுத்த, சிற்று - சிறிய, அம்பல-பாணமல்ல, தைப்பது-என்னிருதயத்தில் தைத்து வருத்துவது, அவர்-அக்கடவு ளது, அம்-அழகிய, தோளில்-புயத்திலணிந்த, இந்தீவரம்-நீலோற் பலமாகிய பாணமே. (எ-று.). இந்தீவரம்-எழுவாய், தைப்பது-பயனிலை. ஏ-அசை.

(க-து.) இருதயத்தைத் தகழியாக்கி அன்பாகிய நெய்யை வார்த்து ஆகமமாகிய திரியையிட்டு ஞானத்தை விளக்காயேற்றின அடியார்களுக்குச் சிதாகாசமான சாயுச்சிய பதவியை யருளுகின்ற திருச்செந்திலையகர் சத்துருசங்காரஞ் செய்த பாணமிருக்க அவர் புயத்தி லணிந்த நீலோற்பலமாலையே மன்மதன் பாணத்திலொன் றாக என் ஆகத்திற் றைக்கின்றது.

(கு-பு.) "மனக் கோயிலுள் ளிருத்தி யுறவாதி தனையுணரு மொளி விளக்குச் சுடரேற்றி"—பெரிய புராணம். (வாயிலார் நாயனார்)

"உடம்பெனு மனைய கத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கின்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.
—(தேவாரம்-அப்பர்.)

தீவர கந்தரி தாம்பகி ரார்உற வானசெம்பொன்
றீவர கநதரி யாநொந்த போதினிற் செச்சையவிந
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே. (39)

(ப-ரை.) தீ-தீய்ந்துபோன, வரகு-வரகென்னுந் தானியத் தில், அந்து-வண்டுகளால், அரி-அரிக்கப்பட்ட பதரையும், தாம் பகிரார் தாம் பங்கிட்டுக்கொடார்கள், உறவான-உறவினராய், செம் பொன் தீவர்-சிவந்த பொன்விளையுந் தீவிலிருப்பவரும், அகம் தரியா-பாவத்தைத் தரித்து மனம் பொறுக்கக்கூடாமல், நொந்த

போதினில் - வருந்துங் காலத்தில், செச்சைய - வெட்சிமாலையை யுடையோனே! இந்தீவர-செங்கழுநீர்மாலையை யுடையோனே! கந்தரி-மலைக்குகையி லிருந்த வள்ளிநாயகியையும், சிந்துரை-அயிராவதத்தினிடம் வளர்ந்த தெய்வயானை நாயகியையும், பாக-இருபக்கத்திலு முடையவனே! சிவகரண-சிவகரணம் புரிகின்ற, தீ-புத்தியை, வர-வரமாகக் கொடுக்கின்ற, கந்த-குமாரக் கடவுளே! ரிபு-சத்துருக்களை, தீர்-சம்மாரஞ் செய்யத்தக்க, உனது அடி-உனது திருவடித் தாமரையே, சேம நட்பு-பொக்கிஷமும் உயிர்த்துணையுமாம். (எ-று.). அடி-எழுவாய், சேமநட்பு - பயனிலை ஏ-அசை.

(க-து.) வெட்சிமாலையையும் செங்கழுநீர் மாலையையும் அணிகின்றவனே! வள்ளி தெய்வயானை பாகனே! சிவகரண அறிவினர்களுக்கு அநுக்கிரகஞ் செய்கின்றவனே! எனக்கு உறவென்பவர்கள் பொன்விளையுந் தீவில் இருப்பவராயினும், வறுமையால் வருந்துங் காலத்தில் அந்து அரித்துத் தீய்ந்த வரகையாவது உதவவல்லரோ? ஆதலின் உனது திருவடியே பொக்கிஷமும் உறவுமாம்.

(த-பு.) ஈதலின் விசேடத்தை "நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்"-[கந். அலங். 18]—என்ற இடத்துங் காண்க.

சேமர விக்கம் படையாக வீசுப தேசமுன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கந் திரித்தாய் வருத்திய வன்றிறென்றல்
சேமர விக்கம டியவாளி விண்டிரை தெண்டிரையே. **(40)**

(ப-ரை.) சேம-சிவந்த, ரவிக்கு-சூரியனுக்கு, அம்-சலத்தை, படையாக-அசுரராது தடையை விலக்கும் ஆயுதமாக, வீசு-இறைக்கின்ற, உபதேசம்-உபதேசத்தையும், முன்னூல்-முப்புரிநூலையும், சேமர் - காப்போராகிய வேதியர் செலுத்தும், அவிக்கு - அவிர்ப்பாகத்திற்கு, அம் - அழகிய, பலம் - நற்பயனை, தருவாய - அளிப்போனே! செருவாய - போரினையுடைய, வெஞ்சூர் - கொடிய சூரனுகிய, சே-வயிரம் பொருந்திய, மர-மாமரத்தினால், விககம்-தேவர்கட்குண்டான விக்கினத்தை, திரித்தாய்-ஒழித்தவனே! வருத்திய-என்னைத் துன்பப்படுத்துகின்ற, அன்றில் - காமசின்னமாகிய அன்றிற்பட்சியும், தென்றல் - அவனது தேராகிய தென்றலும், சே-கழுத்தின் மணியொலியைச் செய்தலினால் இடபமும், மரவிக்கு -

கருப்புவில்லும், அம்புய வாளி-தாமரைப்பூவாகிய அம்பும், விண்டு-ஆர்ப்பரித்து, இரை - முழங்குகின்ற, தெண்டிரை - தெளிந்த திரையையுடைய கடலும் (ஆகிய இவ்வாறும்). (எ-று.) அன்றில் முதலிய ஆறும் எழுவாய்; வருத்திய-பயனிலை. ஏ-அசை.

(க-து.) ஆதித்தனுக்கு அம்பாகச் சந்தியாவந்தனஞ் செய்யு முந்நூலாளராகிய மறையவரது வேள்விக்குத் தக்க பலனளிப் போனே! மாமரமாய் நின்ற சூரனை வென்றவனே! இடபமணி யோடு காமனது சின்னங்களாகிய அன்றிலும், தென்றலும், கரும்பும், தாமரைப்பூவும், கடலும் என்னை வருத்துகின்றன.

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செறாதுசெற் றோய்களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே. (41)

(ப-ரை.) தெண்டன் - வணங்குகிறேன், புரந்து - குறைவறக் காப்பாற்றி, அரவக்குன்றில் - திருச்செங்கோட்டு மலையில், வாழ் - வாழாநின்ற, கந்த - குமாரக்கடவுளே! சிந்துவில் - சமுத்திரத்தின் கண், உத்தெண்டன்-வலிமையுடைய சூரனை, புரந்தர லோகம் - இந்திர லோகத்தை, செறாது - அழிக்காதபடி, செற்றோய்-வதைத் தவனே! களைவாய் - ஒழித்தருளவேண்டும், தெண்டன் - தெண்டாயுதத்தையுடைய காலன், புரந்தர் - தொன்றுதொட்டு வருகின்ற, அம்-அழகிய, நற் கேள்-நற சுற்றத்தாரும், சிறுவர்-பிள்ளைகளும், அழச்செய்து - சூழ்ந்து முறையிடும்படி, எம்மை - எம் உயிரைப் பிரித்து, தெள்-தெளிந்த, தன் புரம்-தனது லோகத்திற் கொண்டு போய், தரவின்படி-தனது கட்டளையின்படி, நூக்கிய தீ நரகு - தள்ளுதற்கிடமாகிய கொடிய நரகாக்கினியை. (எ-று.) நீ-தோன்றா எழுவாய், களைவாய்-பயனிலை, ஏ-அசை.

(க-து.) திருச்செங்கோடுமலைக் கந்தனே! தேவலோகம் அழிந்து போகாதபடி சூரனை வென்றோனே! உன்னை வணங்குகிறேன்; இயமன் வந்து என் சுற்றத்தாரும் பிள்ளைகளும் சூழ்ந்து அழும்படி யென்னைத் தன்னுடைய லோகத்திற் கொண்டுபோய நரகாக்கினை செய்யாமற் காத்தருளவேண்டும்.

தீனந் தினத்து தரச்செல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந் தினதது முதரா னலஞ்சுடச் சேர்நதுசுடுந
தீனந் தினத்து னிகளைசெங் கோட்டினன் செநதிலநீர்
தீனந தினத்து தவதது பிரசுதஞ செய்யவற்றே. (42)

(ப-ரை.) தீ-புததி, நந்து - கெட்ட, இனத்து-கூட்டததாருக் குள், உதர-உதாரததுவம் பேசும், செல்வர்பால்-அயிசுவரியவானக ளிடம், சென்று-போய், எனக்கென்பது-எனக்கு உதவி செயக என்று இரக்கும்படி செய்கின்றதாகிய, ஓர்-ஒப்பற்ற, தீனம்-வறுமை நோயானது, தினத்தும் - நாடோறும், உதரானலம் - வயிறறுப் பசியாக்கினி, சுட-தகிக்கும்போது, சேர்நது (அதனுடன்,சேர்ந்து, சுடும்-தகிக்கின்றது, தீ-டுக்கொடிதான, நம்-நமது, தினத் துனி-நித்தியத் துன்பத்தை, களை - நீககுகின்ற, செஙகோட்டினன்-திருச்செங்கோட்டு முருகக் கடவுளது, செந்தில் - திருச்செநதிற் பதியின், அம்-அழகிய, நீர-சலமானது, தீன் - இனிய, நந்தின் - சங்கின்நிறம்போல, அதது - சிவப்பை, உதவ-கொடுககின்ற, துப்பு-பவளம்போன்ற அதரததில், இரசதம்-வெண்மைநிறததை, செயய வற்றே - செய்யவல்லதோ. (எ-று.) நீர் - எழுவாய், செய்யவற்றே-பயனிலை, ஏ-அசை.

(க-து.) திருச்செங்கோட்டு முருககடவுளது திருச்செந்திற் பதியின் தீர்த்தம் நாம் நாடோறும் இரத்தலால் உண்டாகுந் துன்பத்தை யொழிக்க வல்லதாயினும் பவளம்போலும் சிவநத இதழைச் சங்குபோலும் வெண்மையாக்க வல்லதோ ?

செய்யசெந் தாமரை யில்லாத மாதுடன் செந்தினைசூழ்
செய்யசெந் தாமறை மாஞர் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசெந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசெந் தாமரை சேர்வதென் றோவினை சேய்தொலைத்தே. ()

(ப-ரை.) செய்ய-தினைவிளை நிலத்தையுடைய, செம் - ஒழுங் கான, தாமரை-சிறுகுடியென்னு நகரத்தாருக்கு, இல்லாது - தெரி யாமல், அ மாதுடன்-அப்புனங்காத்திருந்த வள்ளியம்மையை, செந் தினை சூழ் செய் - செந்தினைக்கொல்லைப் பயிரைச் சூழ்ந்துகொண் டிருந்த, அசெம் - காட்டாடும், தா-தாவுகின்ற, மரை-கடம்பையும், மான்-மானும், ஆர் - நிறைந்த, சிலம்பில - மலையின்கண்ணே, கலந் துறையுஞ் செய்ய - காந்தருவமணம் புணர்நதுறையுங் குமாரக்

கடவுளே! செம்-அழகிய, தாமர்-கொன்றைமாலையையுடைய பரம சிவன், ஐ என்னும் குமார-ஐயனேயென்று சொல்லப்பட்ட குமாரக் கடவுளே! சிற-சிறிய, சதங்கை-சதங்கையணிந்த, செய்ய-அழகிய, செந்தாமரை - உனது சிவந்த திருவடித் தாமரையை, சேர்வது என்று-யானடையுங்காலம் என்றைக்கு, வினை - இருவினைகளையும், சேய்-தூரத்தில், தொலைத்து - ஒழித்துவிட்டே. (எ-று). சேர்வது-எழுவாய, என்று-பயனிலை, ஏ-ஏ-அசை.

(க-து.) மலையிற் குடியிருக்குங் குறவர் அறியாமல் தினைப் புனத்தில் வள்ளியம்மையை மணம் புணர்ந்தவனே! கொன்றை மாலையை யுடைய பரமசிவனால் ஐயனே யென்று துதிக்கப்பட்ட குமாரக்கடவுளே! இருவினைப் பரப்பைக் கடந்து உன் திரு வடியை யானடையுங் கால மென்றைக்கு?

சேதாம பலதுறை வேறும பணிகங்கை செல்வநந்தன்
சேதாம பலதுறை யாதசிற் றுபன் றிருமருக
சேதாம பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்தமுத்திச்
சேதாம் பலதுறை யீதென் றெனக்குப தேசநல்கே. **(44)**

(ப-ரை) சேதாம் - சேது என்னும் தீர்த்த முதலாகிய, பல துறை வேறும்-மற்றைப் பல தீர்த்தங்களும், பணி-வழிபடத்தக்க, கங்கை-பகீரதியின், செல்வ-மைந்தனே! நந்தன் சே-நந்தகோபன் பாலகனாகிய, தாம்பலது - நவநீதக் கள்வராய்க் கட்டுண்ட கயிற்றா லன்றி, உறையாத-மற்றொன்றாலுங் கட்டுண்ணப்படாத, சிற்றுயன்-சிற்றிடையனான கிருஷ்ணமூர்த்தியினது, திரு மருக - சிறந்த மரு கோனே! சேதாம்பலது-சிவந்த ஆம்பற்பூ நிறம்போலும், உறை-உற்ற, செவ் வாய்-சிவந்த வாயையுடைய, குறத்தி திறத்த-வள்ளி நாயகி மணாளனே! முத்திச் சே-எனக்கும் முத்திக்கும் இருக்கிற தூரத்தை, தாம்-கடப்பதாகிய, பலதுறை ஈதென்று - நற்பலனைத் தரும் வழியிதுவென்று, எனக்கு - அடியேனுக்கு, உபதேச நல்கு-உபதேசம் அருளவேண்டும் (எ-று.) நீ-தோன்றா எழுவாய், நல்கு-பயனிலை, ஏ-அசை.

(க-து) கங்காதேவியின் மைந்தனே! திருமான் மருகோனே! வள்ளிநாயகனே! எவற்றினுந் தூரமாயிருக்கின்ற மோக்ஷத்தைச் சேரும் நல்வழி யிதுவென்று அடியேற்கு உபதேசித்தருள வேண்டும்.

தேசம் புகல வயிலேயெ னசசிறை புக்கொருகந்
தேசம் புகல வணவாரி செற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச்செய்வதே. (45)

(ப-ரை.) தேசம் - எனக்குறைவிடமும், புகல - அடைக்கல ஸ்தானமும், அயிலே என - வேலாயுதமேயென்று சொல்லும்படி செய்து, சிறை புக்கு - சிறையிற்பட்டு, ஒரு கம் - ஒரு தலையி லொன்றை, தேசம்பு-இழந்த பிரம்மா, கல-மரக்கலங்களையுடைய தும், வண - அழகையுடையதுமான, வாரி செற்றவன் - வருணன் ஏவிய கடலை உக்கிரபாண்டியனாகி வற்றச் செய்தோனாகிய, ஈசற்கு-பரமசிவனுக்கு, உபதேசம் புகல்-உபதேசஞ் செய்த, அதிக-மிகுதியான, வாசகன்-மொழியையுடைய குமாரக்கடவுளானவன், சிறிது சற்றும், ஓர்கிலன் - அறிந்தானில்லை ; மா-மாம்பூவாகிய, தேசு-ஒளிதங்கிய, அம்பு - பாணமானது, கலகம் உதவி-கலகஞ் செய்து, மானே - மானினது விழியையுடைய இம்மங்கையுடன், செருச் செய்வது-போர் செய்கின்றதை (எ-று.) அதிக வாசகன்-எழுவாய், ஓர்கிலன்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) ஒருதலையிழந்த பிரம்மா சிறைபட்டு வேலாயுதமே உனக்கு அடைக்கலம் என்று சொல்லச் செய்தவரும், சமுத்திரத்தை வற்றச் செய்த பரமசிவனுக்கு உபதேசித்தவருமாகிய முருகக் கடவுள் மன்மதனது மாமபூ வாளி யிம்மங்கைமேற் றைத்துப் போர் செய்வதைச் சற்றும் அறிந்தாரில்லை.

செருக்கும் பராக வயிராவ தத்தெய்வ யானைமணஞ்
செருக்கும் பராக தனந்தோய் கடம்ப செகமதநூல்
செருக்கும் பராக மஙீரு பணநதந் தெளிவியம்பு
செருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடமபெறவே. (46)

(ப-ரை.) செரு-போரினையும், கும்ப-மத்தகத்தையும், ராக-கோபத்தையுமுடைய, அயிராவத - அயிராவதத்திடம் வளர்ந்த, தெய்வயானை-தெய்வயானை நாயகியினது, மணம-வாசனையையும், செருக்கும்-இறுமாப்பையும், பராக - மலர்த் தாதுக்களையுமுடைய, தனம்-கொங்கையில், தோய்-முழுகுகின்ற, கடம்ப-வெட்சிமாலையை யுடையவனே ! செக-உலகத்திலுள்ள, மத நூல்-சமய சாஸ்திரங் களின், செருக்கும்-மயக்கத்தையும், பராகமம்-இதர வேதாகமங்களை

யும், நிருபன்-நிருமித்த தேவனே! அந்தம்-முடிவான பொருளை, தெளிவி-இதென்று எனக்கு விளக்கியருளவேண்டும், அம்புசெர்-தாமரையில் வாசஞ் செய்கின்ற பிரமாக்களெல்லாம், உக்கு-இறந்து, உம்பர் ஆகம் விடும்-தேவர்களெல்லாம் அழிகின்ற, கடைநாளும்-இறுதிகாலத்திலும், திடம் பெற-அடியேன் நித்தியத்துவம் அடையும் பொருட்டு. (எ-று) நீ-தோன்று எழுவாய், தெளிவி-பயனிலை, ஏ-அசை.

(க-து.) அயிராவதத்திடம் வளர்ந்த தெய்வயானையைத் தழுவுங் கடப்பமாலையை யுடையவனே! உலக மயக்காகிய பரசமயவழியில் மயங்காமலும், பிரம்மாதி தேவர்கள் அழியுங்காலத்தில் அழியாமலும், நித்தியத்துவம் அடையும்பொருட்டு அவற்றின் முடிவான பொருளை எனக்கு விளக்கியருள்.

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகுமச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலியு ரத்தும்பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருகுமும்ம
திடம்படு கத்துங் ககங் குனித்தவன் சேயெனுமே. (47)

(ப-ரை.) திடம் - உறுதிநிலை, படு - அழிகின்ற, உகத்தும்-யுகாந்தத்திலும் கெடீர் - நிலைகெடாது நித்தியரா யிருப்பீர்கள், கன்ம-பூர்வ வினையால், லோக-உலகத்தின்கணுண்டாகிய, சிலுகும்-சஷ்டிணைத்திரயங்களையும், அச் சோதிடம் படு கத்தும்-அக் கல்விச் செருக்கைத் தருங் கணித நூலைப் பிதற்றுதலையும், திரித்து-மாற்றுதல் செய்து, அம்பு-முன் இராமபாணத்தை, வாலி-வாலியினுடைய, உரத்தும் - மார்பிலும், பத்து - பத்தென்கிற, திடம் படு-வலிமை பொருந்திய, கத்தும் - இராவணனுடைய தலைகளிலும், தெறித்தான்-செலுத்திய ஸ்ரீராமருடைய, மருக-மருகோனே! திருகு-மாறுபட்ட, மும்மதிள்-முப்புரங்களும், தம்படு-தோற்றிய இடத்திலேயே, உக-நீறுகிவிழ, துங்க - உயர்ந்த, நகம்-மகமேருவை குனித்தவன்-வில்லாக வளைத்த பரமசிவனது, சேய எனும்-மைந்தனாகிய குமாரக்கடவுளென்று துதியுங்கள். (எ-று) நீங்கள்-தோன்று எழுவாய், கெடீர்-பயனிலை, ஏ-அசை.

(க-து.) நமர்காள்! நீங்கள் ஈஷணைத் திரயங்களையும் சத்தமுஞ் சோதிடமுமாகிய நூல்களைப் பிதற்றுதலையும் ஒழித்து, இராவண

லேயும் வாலியையுஞ் சங்கரித்த திருமான் மருகோனே! மேரு விலலின்றி திரிபுர தகனஞ்செய்த பரமசிவனது மைந்தனே! என்று துதிப்பீர்களானல் யுகாந்த காலத்திலும் அழியாமல் நித்தியரா யிருப்பீர்கள்.

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே. (48)

(ப-ரை) சேய - அழகினையுடைய, அன்பு - இச்சையோடு, உந்தி-கான்யாற்றின், வன-காட்டில், வாச-வாசஞ்செய்த, மாதுடன்-வள்ளிநாயகியுடன், சேர்ந்த-கூடியிருந்த, செந்தில் - திருச்செந்தூரில் வாழாநின்ற, சேய-குமாரக்கடவுளே! வன்பு-வலிமையில், உந்து-உயர்ந்த, இகல்-மாறுபாட்டையுடைய, நிசாசராந்தக-அசுரர்குலத்திற் கியமனே! சேந்த-கந்தனே! என்னில்-என்று துதிப்பீராகில், சேயவன்-செவ்வாய், புந்தி-புதன், பனிப்பானு-சந்திரன், வெள்ளி-சுக்கிரன், பொன்-வியாழம், செங்கதிரோன்-ஆதித்தன், சேயவன்-அவ்வாதித்தன் மைந்தன் சனியாகிய நவக்கிரகங்களின் வக்கிரோதையத்தால், புந்தி தடுமாறவே தரும்-புத்தியைச் சலனப்படுத்துகின்ற, சேதம் இன்று-கேடில்லை. (எ-று.) சேதம்-எழுவாய், இன்று-பயனிலே, ஏ-அசை.

(க-து) கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகி பேரில் அன்புகூர்ந்த செந்திநாயகனே! அசுரர்குலாந்தகனே! சேந்தனே! என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோதயத்தாலாகுந் தீமையில்லே.

(கு-உ.) இது கோளறுபதிகம். "நாளென்செயும்" என்னும் கந்தரலங்காரச் செய்யுளின் கருத்துகொண்டது.

"வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ னுளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி சனிபாம்பிரண்டு
[முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே"

—என்னுந் தேவாரக் கோளறு பதிகத்தையுங் காண்க.

சேதக மொன்று மனுதியுந் தாதையுந தேடரியார்
சேதக மொன்றுஞ் சதங்கையங் கிண்கிணி செச்சையந்தாள்
சேதக மொன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மொன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே. **(49)**

(ப-ரை.) சேதகமொன்று - ஒருதலை பின்னமான, மன - நிலைபெற்ற, ஆதியும்-பிரம்மாவும், தாதையும்-அப்பிரமாவின்றந்தை யாகிய மகாவிஷ்ணுவும், தேடரியார் - தேடுதற்கரிதான பரமசிவனது, சே-மைந்தனே! தகமொன்றம்-தகுதியாய் முழங்குகின்ற, சதங்கை-சதங்கையையும், அம்-அழகிய, கிண்கிணி-கிணகிணியையும், செச்சை - வெட்சிமாலையையுமுடைய, அம்-சிரேஷ்டமாகிய, தாள் - திருவடித தாமரையில், சேது-சிவந்த, அகம்-என்னிருதயமானது, ஒன்றும் வகை - கூடும்வண்ணம், பணியாய் - அருள் செய்யவேண்டும், இனி-இனிமேல், தீய-கொடிய, வினை - இருவினையாகிய, சேதகம்-சேற்றினுள்ளே, ஒன்றம் அறியாது-ஒருநெறியும் அறியாமல், உழல்-கிடந்துழலுகின்ற, உயிர்-ஆவியின் வாழ்க்கை, சித்திரம்-பொய்யாயிருக்கின்றது. (எ-று.) நீ-தோன்றா எழுவாய், பணியாய-பயனிலை, ஏ-அசை.

(க-து.) நான்முகனுந் திருமாலும் அறிய வொண்ணாத பரமசிவனது மைந்தனே! இருவினைச்சேற்றில அழுந்தி வருந்தும் என் உயிர் வாழ்க்கை நித்தியமல்ல; ஆதலால் உன் திருவடியை யென் மனம் பற்றும் வகையருள்.

சித்திர மிக்க னவில்வாழ் வெனத்தெளி யுந்தவவா
சித்திர மிக்க னெறிக்கழிந தேற்கினிச் செச்சைநல்வி
சித்திர மிக்க தனக்குறத தோகை திறத்தழுந்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிதையநீவே. **(50)**

(ப-ரை.) சித்திரம் - பொய்யாகிய, இக கனவு - இப்போது காணுங் கனாப்போலாகும், இல் வாழ்வு-பாசபந்தங்களாற் சிக்கிய மனைவாழ்க்கையானது, எனத் தெளியும் - என்னு நிச்சயத்தைக் கொடுக்கின்ற, தவ வாசி-தபோபலத்தின், திரம்-உறுதியை நாடாமல், இக்கன்-கருப்புவில்லையுடைய மன்மதனது, நெறிகரு-காமநூல் வழியில், அழிந்தேற்கு-கெட்ட எனக்கு, இனி-இனிமேலாவது, செச்சை-வெட்சிமாலையைப் புனையும், நல்-திவ்வியமான, விசித்திர-அழகனே! மிக்க-பெருத்த, தன-கொங்கையையுடைய,

குறத்தோகை திறத்த-குறவர் வளர்த்த வள்ளிநாயகனே! முத்தி சித்தி - மோட்சப்பேறானது, ரமிக்க-குறைதீர்ந்து திருப்தியாகும் படி, அருளாய்-நீ கிருபை செய்யவேண்டும், பிறவிச் சிகை-எனது சனன மரண பந்தங்கள், அற-அறும் பொருட்டு, (எ-று.)-நீ தோன்றா எழுவாய்; அருள்வாய்-பயனிலை. ஏ-அசை.

(ஈ-து.) வெட்சிமாலையோனே! வள்ளிநாயகனே! ஆத்மாவுக்கு உறுதியான தவத்தை நாடாமல் சிற்றின்ப விஷயத்தில் ஆழ்ந்து பொய்யுங் கனவும் போன்ற மனைவாழ்க்கையி லிருக்கின்ற எனக்கு இனியாகிலும் முத்தி எய்தும்பொருட்டும் சனனம் மரணம் அறும் பொருட்டும் அதை நாடக் கிருபை செய்யவேண்டும்.

சிகைத்தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத்தோகை மாமயில் வானில்வைத் தோய்வெஞ் செருமக
[ள்வா
சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்
[ததே. (51)

(ப-ரை.) சிகை - கொண்டையையும், தோகை-தூவியையு முடைய, மா-பெரிய, மயில் வீரா-மயிலேறும் வீரனே! சிலம்பும்-கிரவுஞ்ச கிரியையும், சிலம்பு-முழங்குகின்ற, அம்புராசி-சமுத்திரத் தின்கண், கை-ஒழுங்காக, தோகை-அவசத்தையுடைய, மா-மா மரமாய் நின்ற சூரனையும், மய்-இருளுக்கு, இல்-இடமாகிய மாயையையும், வாங்கி-விலக்கி, பொருது-போர்செய்து வென்று, திசை முகன்-நான்முகப் பிரமன், வாசி-பிரணவப்பொருள் அறியா மல் வாசித்த குற்றத்திற்கு, கைத்து-கோபித்து, ஓகை-மகிழ்ச்சியை, மாமய்-அழகுக்கு, இல்-இருப்பிடமாகிய, வானில் - தேவருலகத் தில், வைத்தோய்-விளைத்தவனே! வெஞ்செரு-வெவ்விய போரிற் சிறந்த, மகள் வாசி-பாண்டியனது குதிரை முகத்தையுடைய பெண் ணுக்கு, கைத்தோ-அக் குதிரைமுகத்தைத் தீர்த்தவனே! கைமா-ஐராவதம் வளர்த்த, மயில்-தெய்வயானையினது, செவ்வி-கலவிப் புதுமையினும், நற்கீரர் சொல்-நற்கீரர் சொல்லிய திருமுரு காற்றுப்படை, தித்தித்தது-(உனக்கு) இனிமையாயிற்று. (எ-று.) சொல்-எழுவாய், தித்தித்தது பயனிலை, ஏ-அசை.

(க-து.) மயில் வீரனே! மாவாய் நின்ற சூரனையும் கிரவுஞ்ச கிரியையும் மாயையையும் அறச்செற்று அமராபதியை யீடேற்றின வனே! பிரமாவைக் கோபித்தவனே! தெய்வயானையின் கலவி இன்பத்திலும் நக்கீரர் துதித்த பாடல், குதிரை முகத்தையுடைய பெண்ணுக்கு அம்முகத்தை மாற்றின உனக்கு இனிமை யாயிற்று.

(கு-உ.) இச்செய்யுள் திருமுருகாற்றுப்படையின் அருமையை விளக்குகின்றது.

குதிரை முகத்தை மாற்றின சரித்திரம்: கலிங்க தேசத்தரசன் மகளாகிய **கனகசுந்தரி** தாமிர பருணி நதி மூலததில் ஸ்நாநஞ் செய்ய வந்தபோது அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த குதிரை முகமுடைய **அயக்கிரீவ** முனிவரைக் கண்டு அவமதித்து நகைத் தாள். அதுகண்ட முனிவர் "நீ மறு பிறப்பிற் குதிரைமுகத்துடன் பிறக்கக் கடவை" எனக் கனகசுந்தரியைச் சபிக்க, அவளும் மனம் வருந்தி 'சுவாமி! இச்சாபம் என்று தீரும்' என வேண்ட, அவர், திருச்செந்தூரில் ஷண்முக நாதன் சந்நிதிக்கு நேராகவுள்ள **வதனாரம்ப தீர்த்தம்** எனப்படும் சமுத்திரத்தில் ஸ்நாநஞ் செய்யத் தீரும் எனக் கூறினர். மறு பிறப்பிற் கனகசுந்தரி உக்கிரப் பெரு வழுதி என்னும் பாண்டியராஜன் மகளாகப் பிறந்தனள். முக மாத் திரம் குதிரைமுகம். அங்கங்கள் யாவும் வெகு அழகு. அது கண்டு மனம் வருந்தின பாண்டியன் தன் மகளுக்கு **அங்க சுந்தரி** எனப் பெயரிட்டுக் குதிரைமுகம் எங்ஙனம் தொலையும் என ஏக்கமுற்றிருக் கப் புண்ணிய தீர்த்தங்களில் முழுக வேண்டும் என ஓர் அசரீரி கேட் டது. பாண்டியனும் தன் மகளை அவ்வாறே தீர்தத ஸநாநத்துக்கு அனுப்ப அவளும் கங்கை முதலிய தீர்த்தங்களில் ஆடி, ஈற்றில் திருச்செநதூரில் சமுத்திர ஸ்நாநஞ் செயய, குதிரைமுகம் மாறி சுந்தரமான நன்முகம் பெற்றனள்: — **திருச்செந்தூர்ப் புராணம்.**

திதத்திக்குந் தொந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன்செவிபத்
தித்திக்குந் தொந்திக் கறமொழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தொநதிக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந தொநதிப் பணவேது செய்வினைத தீவிலங்கே. ()

(ப-ரை.) தித்திக்கும்-தித்தியென்னுந் தாளத்துக்கும், தொந் திக்கும்-தொந்தி யென்னுந் தாளத்திற்கு மேற்க, நித்தம் புரியும்-நடனஞ் செயகின்ற, சிவன்-பரமசிவனது, செவி பத்தித்திக்கு-

இருசெவிகளின் புலனிடத்து, உந்து-நுழையும்படி, ஓம்-பிரணவப் பொருளை, திக்கற - மயக்கநீங்க, மொழி - உபதேசித்த, பாலக-பாலகனே! தேன் அலைத்து - பலகார நைவேத்தியத்தால் தேனொழுகி, தித்திக்கும் - இனிப்புற்றிருக்கின்ற, தொந்திக்கு-வயிற்றையுடைய கணபதிக்கு, இளையாய-இளையோனே! வினை-கருப்பையில் உருவான, உயிர்க்கும்-சீவனுக்கும், சிதை - அழிந்து போகின்ற, தோல் தித்திக்கும்-தோற் பையாகிய உடம்புக்கும், தொந்திப்பன எது - சம்பந்தப்பட்டுப் பிறப்புண்டாவதற்குக் காரணம், செய்-யான் முன்னியற்றிய, வினை-இருவினையினது, தீ-கொடிய, விலங்கே-தளை தானோ? (எ-று.) நீ என்னும் தோன்றா எழுவாய் சொல் என்னும் பயனிலையைக் குறிப்பாகக் காட்டி நின்றது.

(க-து) தித்தித் தொந்தி யென்று நடனஞ்செய்யும் பரம சிவனது திருச்செவியிற் பிரணவப்பொருளை மயக்கற உபதேசித்த பாலகனே! தொந்தி விநாயகருக்கு இளையோனே! உடலும் உயிருஞ் சம்பந்தப்பட்டுப் பிறவி யுண்டாவதற்கு முன் செய்த வினைப்பாசந்தான் காரணமோ? நீ சொல்.

(கு-உ.) தித்தி=பை. ஈண்டுத் 'தோல் தித்தி' என்றும் 54-ஆவது செய்யுளில் 'அத்தி நிதி' என்றும் உடலைக் கூறினார்.

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிரமுந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலுந்
தீவிலங் கங்கை யமன்றொட ராமற் றிதம்பெறவே. (53)

(ப-ரை) தீ-கரத்தில் அக்கினியையும், விலம்-புயத்தில் வில்வத்தையும், கங்கை-சென்னியிற் கங்கையையும், தரித்தார்-தரித்த பரமசிவனது, குமார-மைந்தனே! திமிர-இருணிறமான, முந்நீர்-சமுத்திரமும், தீ வறண்டுபோகத்தக்க, வில்-வில்லின், அங்கம்-வித்தையில, கைவரு-வல்லவரான, மான் மருக-திருமான் மருகோனே, தெரிவற்ற - அறிதற்கரிய, வான் - பெரிய, தீவில - தீவுகளிலும், அங்கங்கு-மற்றும் பல இடங்களிலும், ஐவர்-பஞ்சேந்திரியங்களால், அவாவு-இச்சிக்கத்தக்க, இரைக்கு-உணவின்பொருட்டு, திரிந்துழலும் - அலைந்து திரிகின்ற, தீ-புத்தியினது, விலங்கம் - பலத்த தொடர்ச்சியை, கை - ஒழிக்கவேண்டும், யமன் தொடராமல்-

இயமன் தொடர்ந்து பற்றாமல், நிதம் பெற-உனது திருவடியில இன்புற்று உறுதிப்படும்பொருட்டு (எ-று.) நீ-தோன்ற எழுவாய். தை-பயனிலை. ஏ-அசை.

(க-து.) கங்கையும் வில்வமுஞ் சூடி அனலேந்திய பரமசிவ னது மைந்தனே! கடலும் வறளும்படி விற்போர்செயயுந் திருமான் மருகோனே! என்னை நமன பிடித்துக்கொள்ளாமல யான உன் அடியை உறுதியாய்ப் பற்றும்படி ஐம்புலன்களின் இச்சையை யொழித்தருள்.

திதத்தத்தத் தித்தத திந்தாதை தாததுத் தித்தத்திதா
திதத்ததத்த திந்த தித்தித்த தேதுத்து தித்தித்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததது
திதத்தத்தத் தித்தித்தி தீதி திதிதுதி தீதொத்ததே. (54)

(ப-ரை.) திதத்தத் தத்தித்த-திதத்தத் தத்தித்த என்னுந் தாளமானங்களை, திதி-திருநடனத்தாற் காக்கின்ற, தாதை-பரம சிவனும், தாத-பிரமனும், துத்தி-படப்பொறியினையுடைய, தத்தி-பாம்பினுடைய, தா-இடத்தையும், தித-நிலை பெற்று, தத்து-ததும்புகின்ற, அத்தி-சமுத்திரத்தையும் பாயலாகக்கொண்டு, ததி-தயிரானது, தித்தித்ததே-தித்திக்கின்றதென்று, து-உண்ட கண்ண னும், துதித்து-துதிசெய்து வணங்குகின்ற, இதத்து-பேரின்ப சொரூபியான, ஆதி-முதல்வனே! தத்தத்து - தந்தத்தை யுடைய, அத்தி-அயிராவதத்தால் வளர்க்கப்பட்ட, தத்தை - கிளிபோன்ற தெய்வயானைக்கு, தாத-தொண்டனே! திதே-தீமையே, துதை-நெருங்கிய, தாது - சப்த தாதுகளால் நிறைந்ததும், அதத்து-மரணத்தோடும், உதி-சனனத்தோடும், ததது-பல தததுகளோடும், அத்து-இசைவுற்றதுமான, அத்தி-எலும்புகளை மூடிய, தித்தி-பையாகிய இவ்வுடல், தீ-அக்கினியினாலே, தீ-தகிக்கப்படுகின்ற, திதி-அந்நாளிலே, துதி-உன்னைத் துதிக்கும், தீ-புத்தி, தொத்தது-உனக்கே யடிமையாகவேண்டும். (எ-று.) தீ-எழுவாய். தொத்தது-பயனிலை. ஏ-அசை.

(க-து.) திதத்தத் தத்தித்த என்னுந் தாளத்தால் நடிக்கும் பரமசிவனும், பிரமாவும், தயிரையுண்டு பாற்கடலையும் ஆதிசேடனை யும் பாயாலாகக்கொண்ட திருமாலும் வணங்குகின்ற முதல்வனே! தெய்வயானை தாசனே! சனன மரணத்திற்கு இடமாய எலும்பு

முதலிய தாதுகள் நிறைந்த பொல்லாத இவ்வுடற்பை தீயில் வேகுங்கால் உன்னைத் துதிக்கும் என்புத்தியை உனது அடியிணைக்கு ஆட்படுத்த வேண்டும்.

(கு-உ.)-இச்செய்யுளுக்கு உரைகூற முடியாது வில்லிபுத்தூரார் திகைக்க அருணகிரிநாத சுவாமிகளே உரை கூறினர்.

தீதோ மரணந் தவிரும பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனை முற்றுந
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யென்றுரை தென்னுறவே. **(55)**

(ப-ரை.) தீதோ - தீங்கு மாத்திரமோ, மரணம்-இறப்பும், தவிரும் - ஒழியும், பிறப்பு - சனனமும், அறும்-நீங்குமாதலால், தீய - கொடியதொழிலை, கல் - கற்கின்ற, புந்தீ-மனமே, தோம்-குற்றத்திற்கு, அரண் - இடமாகிய, அம்பர மீது-சமுத்திரத்திலே, தானவர் - அசுரருடைய, சேனை முற்றும் - சேனையனைத்தையும், தீ - தகித்த, தோமர - கைவேலை யுடையோனே! னந்தன - கிருபையாளனே! பூசுரர்-வேதியர்கள், திரண்டு-கூட்டமாகக்கூடி, ஏத்திய - வணங்கத்தக்க, முத்து - சரவண முத்தையனே! ஈது - இந்த, ஓமரண-மறையோர் செய் வேள்வியின் அவிர்ப்பாகத்திற்கு உரியவனே, மலையாளி-குறிஞ்சிநிலத்தை யாள்பவனே! என்றுஉரை-என்று துதிசெய், தென்னுற - அழகுபெறும்படியாக. (எ-று.) நீ-தோன்றா எழுவாய் உரை-பயனிலை. ஏ-அசை.

(க-து.) தீமையையே கருதுகின்ற புத்தியே! சமுத்திரத்தின்கண் அசுரர் கிளையற மாய்த்த வேலையுடையவனே! வேதியர்கள் தொழத்தக்க சரவண முத்தானவனே! மறையோர் செய்யும் யாகத்தின் அவிர்ப்பாகத்திற்கு உரியவனே! குறிஞ்சி நிலத்திற்கு இறைவனான கந்தனே! என்று துதித்தால் உனது தீமைமாத்திரமல்ல, சனன மரணமும் அறும்.

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிகக சூலகரத்
தென்ன வனங்கனந் தபபத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் வீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே. **(56)**

(ப-ரை) தென்ன வனம்-தென்னஞ் சோலைகளையும், கனம்-மேகங்கள், சூழ் - கவிந்திராநின்ற, கா - பூஞ்சோலைகளையுமுடைய, திரிநக-திருத்தணி, பரங்குன்று, செங்கோடு என்னும் மூன்று மலைகளையும் உடையோனே! சூல கர - கையிற் சூலாயுதத்தையுடைய, தென்னவன் - தென்றிசைத் தலைவனாகிய யமனது, அங்க னந்த-உருவழியும்படி, பத நீட்டினன்-திருப்பாதத்தை நீட்டியுதைத்த பரமசிவனது, செல்வ - மைந்தனே! முன் - முற்காலத்தில், பின்-பின்னே கூனையுடைய, தென்னவன் - பாண்டியனது, அங்க-உடலை, நன்னீற்றால்-நன்மையைத் தரும் விபூதியினால், திருத்திய தென்ன-நிமிர்த்தினது போல, இன்னம்-இப்போதும், தென்ன-வனப்பு வாய்ந்த, அனங்கன்-மன்மதனது, அம - அழகிய, கை-கையிற் பிடித்த, சிலை-கருப்பு வில்லினது, கூனையும் - வளைவையும், தீர்த்து-நீக்கி, அருள் - மதன் என்மேற் பாணப் பிரயோகஞ் செய்யாதபடி உன் மாலையைத் தந்தருளவேண்டும். (எ-று.) நீ-தோன்றா எழுவாய். தீர்த்தருள்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) திருத்தணிகை, திருப்பரங்குன்று, திருச்செங்கோடு என்னும் மூன்று மலைகளிலும் உறைபவனே! கூற்றை யுதைத்த பரமசிவனது மைந்தனே! முன் [1]பாண்டியனது கூனை நிமிர்த்தினது போல என்னை வருத்த மன்மதன் கருப்புவில்லை வளைத்தலையுந் தீர்த்தருளவேண்டும்.

(கு-உ.) "[1]பாலனார்,
தைவந்து தென்னவர்கூன் றள்ளுதிருப் பாட்டெடுத்தாற்
கைவந்த வேள் சிலைக்கூன் காணுமோ"—திருவாரூருலா-௩௧௬.

தீத்தன் பரவை வெளிநீங்கிச் சேய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்கறவே
தீத்தன் பரவை தழைக்கவிண் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவையில் வேலத்த னேகுரு சீலத்தனே. (57)

(ப-ரை.) தீத்தன் - கிரணங்களையுடைய சூரியன், பாவு - சஞ்சரிக்கின்ற, ஐ-அழகிய, வெளி-ஆகாசத்தையும், நீங்கி-கடந்து, சேய் - பிள்ளையாகிய பிரமாவும், தொழ - வணங்கும்படி, செல் - சென்று, பத வுத்தீத்தன்-பாதத்தை யூர்த்த தாண்டவமாக எடுத்த திருமாலும, பரவை - சமுத்திரமும், முறையிட - அலறுகையில், மா - மாவுருக்கொண்டு நின்ற சூரனால், குறை - உண்டான குறை

பாட்டையும், தீங்கு - தீமையையும், உறவே - முழுதும், தீத்து - அற்றுப்போகும்படி யொழித்து, அன்பர்-அடியார்களுடைய, அவை-கூட்டம், தழைக்க-அதிகரிக்கும்படி, விண்-அமராபதியை, காவெனா-காப்பாற்றென்று சொல்லி, சென்னியின்மேல் - முடியின்மேல், தீத்தன் - கங்கையைச் சூடிய பரமசிவன், பரவு - துதித்த, ஐயில் - கூரிய, வேல் - வேலாயுதத்தை, அததனே-கரத்திலுடைய முருகக் கடவுளே! குரு சீலத்தனே-குருவாகிப் பரமசிவனுக்குப் பிரணவப் பொருளை யுபதேசித்த நற்குணக் குன்றமே! (எ-று.)

(க-து.) திருநெடுமால முறையிடுகின்றதைக் கண்டு சமுத்திரத்தின்கண் மாவுருககொண்டு நின்ற சூரனை வதைத்துப் பத்தர் குழாந் துன்பமற்று வாழும்படி யமராபதியைக் காப்பாற்றென்று பரமசிவன் சொல்லுங்கால வணங்கி யப்படியே முடித்த வேலாயுதனே! அப் பரமசிவனுக்குக் குருவாய் உபதேசித்தவனே!

சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கநி
சிலங் கனமுற்ற முத்தூர்செந் தூர சிகண்டியஞ்சு
சீலங் கனமுற்ற வேதனை மேவித தியங்கினஞ்சீ
சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே. **(58)**

(ப-ரை.) சீலம் - தயாளத்திலும், கன - மகத்துவத்திலும், முற்று-மேற்பட்ட, அபங்கா-பங்கமில்லாதவனே! கர-கோபத்தையுடைய, சலதீ - சமுத்திரத்தின்கண், ரக்க - அசுரக்கூட்டமாகிய, நிசி - இருளை, லங்கன - கடிந்தவனே! முற்றம் - முன்றிலின்கண், முத்து - முத்துகள், ஊர் - இறைந்திருக்கின்ற, [1]செந்தூர் - திருச்செந்தூரில் வாழ்பவனே! சிகண்டி - மயில்வாகனனே! அம் - அழகிய, சுசீ - பரிசுத்தமானவனே! லங்கனம்-பசியாகிய அக்கினியினால், உற்ற - பொருந்திய, வேதனை - வருத்தத்தை, மேவி - அடைந்து, தியங்கினம் - மயங்குகின்றேம், [2] சீசீ - இது மிகவும் இகழ்ச்சியான, லங்கனம் - பங்கமாம், முற்ற - முழுதுமாதலால், இப்பிறப்பூடு - இப்படிப்பட்ட சனனத்திலே, இனி-இனிமேலும், சேர்ப்பது-சேரப்பண்ணுவது, அன்று-நன்றல்ல. (எ-று.) இக்கவியிரண்டும், சேர்ப்பது - என்னும் ஒரே எழுவாயையும், அன்று-என்னும் ஒரே பயனிலையையுங் கொண்டு முடிந்தன.

(க-து.) பங்கம் அற்றவனே! சமுத்திரத்தின்கண் அசுரர்கிளையை மாய்த்தவனே! திருச்செந்தூர் நாயகனே! மயில் வாகனனே! பரிசுத்தமானவனே! உதராக்கினிக்கே யிரைதேடி வருந்துகின்ற

இகழ்ச்சிக்கிடமான இச்சனனத்தை யின்னும் யானடையாதிருக்கும்படி யொழித்தல் நன்று.

(கு-உ.) [1] " தெருவிலேயு நித்தில மெறிஅலைவாயச் செந்தில்"
—திருப்புகழ்-63.

"ஒருகோடி முத்தம்தெள்ளிக் கொழிக்குங்கடற்செந்தில்" கந்-அலங்.

[2] 'கெடுவதிப் பிறவி சீசீ'-தேவாரம்-தனித்திருநேரிசை (அப்பர்)

சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வதைதமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே. **(59)**

(ப-ரை.) சேர் - நெருங்கியிருக்கின்ற, பதும்-தாமரைகளும், ஆல - அசைகின்ற, அம் - சலத்தின்கண், நீலோற்பல - செங்கழுநீர் மலர்கின்ற, கிரி - திருத்தணியில் வாழும், தெய்வ - தெய்விகமாகிய, வள்ளி-வள்ளியம்மைகரு, சேர்ப்ப - தலைவனே! துமால் - தும்மலினால், லயமுற்றார் - மரணமடைந்தார், என-என்று, பலர் - பலரும், செப்ப - சொல்ல, வெப்பு - வெதும்புகின்ற, சேர்ப்பது-சிலேத்துமமும், மால் - மயக்கமும், அயவத்தை - பஞ்சாவஸ்தைகளும், மன் - நிலைபெற்ற, யாக்கை - இவ்வுடல், சிதைவதன்முன்-அழிவதற்கு முன்னமே, சேர்ப்பது-என்னைச் சேர்த்தருளவேண்டும், மால்-விஷ்ணுவும், அய-பிரம்மாவும், வாசவன் - இந்திரனும், செப்பிய-புகழ்ந்தோதிய, செ-சிவந்த, பதம்-திருவடித்தாமரையில். (எ-று.) நீ - தோன்றா எழுவாய். சேர்ப்பது - பயனிலை. அத்து-சாரியை. ஏ-அசை.

(க-து.) திருத்தணி மலையோனே! வள்ளி நாயகனே! வெப்பும் சிலேத்துமமும் மயக்கமுமாகிய அவஸ்தை நிறைந்த என்னுடல் அழிந்து விடுவதன் முன்னும், தும்மினவுடனே இறந்தானென்று பலர் சொல்வதன் முன்னும், பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோர் புகழு நின் பாத தாமரையில் என்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்

செப்பத் தமதிலை மாற்றார் கொளுமுன்னரு செல்வர்க்கிடச்
செப்பத் தமதிலை யென்னனுய் வார்தெய்வ வேழமுகன்
செப்பத் தமதிலை வானுத ஞேக்கினர் சேணில்வெள்ளிச்
செப்பத் தமதிலை வென்றூர் குமாரவத் திக்கரசே. **(60)**

(ப-ரை.) செப்ப - நடுவுநிலைமையால், தமது - தங்களுடைய, இலை-இல்வாழ்க்கைக்குரிய மனைவியையும், மாற்றார்-பகைஞர்கள், கொளுமுன்னம் - கைப்பற்றிக்கொள்ளு முன்னமே, செல்வர்க்கு-ஐசுவரியவான்களுக்கு, இடை-(வறியோர்க்கு) இட்டுண்ணை, செப்பு-சிவந்த, அத்தமது - கையானது, இலை - இல்லையாயின், எங்ஙன்-எப்படி, உய்வார் - பிழைப்பார்கள்; தெய்வ - தெய்விகமாகிய, வேழமுகன் - யானைமுக விநாயகரால், செப்பு - புகழப்பட்ட, அத்தம-(அவரது) தம்பியே! தில்லை-சிதம்பர நடேசரான, வாள்-ஒளிபொருந்திய, நுதல் நோக்கினர் - நெற்றிக்கண்ணை யுடையவரும், சேணில்-ஆகாசத்தில், வெள்ளி - வெள்ளியும், செப்பு - செம்பும், அத்த-பொன்னுமான, மதிலை - மதிலையுடைய திரிபுரத்தை, வென்றார்-செயித்தவருமாகிய பரமசிவனது, குமார - மைந்தனே! அத்திக்கு-தெய்வயானை நாயகிக்கு, அரசே - தலைவனே! (எ-று) - செல்வர்-தோன்றா எழுவாய். எங்ஙனுய்வார் - பயனிலை. ஏ - அசை.

(க-து.) கணபதிக் கிளையோனே! பாலலோசனரும் திரிபுர தகனரும் தில்லை நடேசருமான பரமசிவனது மைந்தனே! தெய்வயானை நாயகனே! செல்வமுடையார் அஃது நிலையாமை யென்றறிந்தும் அதனால் நல்லறஞ் செய்யாதிருப்பாராயின் எப்படிக் கடைத்தேறுவார்கள்.

திக்கர சத்தி தவன்சென்று முன்றி திகுமரர்வந்
திக்கர சத்தி யிடத்தோயென் செய்வ தெனத்தருநீ
திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்
திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே. **(61)**

(ப-ரை.) திக்கர்-திக்குப் பாலகர்களும், அச - ஆட்டை, திதவன் - நிலைபெற்ற வாகனமாகவுடைய அக்கினியும், சென்றுமுன்-முற்காலத்திற் பரமசிவனிடத்திற் போய், திதி குமரர்-திதியின் பிள்ளைகளாகிய அசுரர்கள் செய்த, வந்திக்கு-கொடுமைக்கு, அர-சங்கரனே! சத்தி-உமையை, இடத்தோய்-இடது பாகத்தில் உடையோனே! என் செய்வது - எப்படித் தப்பிப் பிழைப்போம், என-என்று முறையிடுகையில, தரும்-அப்பரமசிவன் உமக்களித்தருளிய, நீதி - (அடியார் இடரை நீக்கும்) நெறியையுடைய, கர சத்தி-திருக்கரத்தின் வேலாயுதத்தை, விதிர்த்திலையேல்-நீ எறிந்து அவ்வசுரர்களை யழிக்காவிடில், எவன் செய்குவர்-அத்தேவர்கள் என்ன

செய்து பிழைப்பார்கள், அத்திக்கு - தெய்வயானைக்கு, அரசு - நாயகனே! அத்தி-சமுத்திரத்தின், அலைவாய்-அலை மோதுகின்ற திருச்செந்திற்பதியில, வளர்-வளர்கின்ற, நித்திலக் கொழுந்தே-முத்தின் கொழுந்தொளி யானவனே! (எ-று)-அவர்கள்-தோன்று எழுவாய். எவன் செய்குவர்-பயனிலை. ஏ - அசை.

(க-து.) தெய்வயானை நாயகனே! திருச்செந்திற்பதியில் வாழும் முத்தொளியானவனே! முன் தேவர்கள் முறையிடக் கேட்டுப் பரம சிவனருளிய வேற்படையை நீர் செலுத்தாவிடில் அசுரர்கள் செய்த தீமையைக் கடந்து அவர்கள் பிழைப்ப தெப்படி?

திலமுந தயில மு நிகர வெங்குந திகழ்தருசெந
திலமுந தயில முருகா வெனுதத் திநகையினித்
திலமுந் தயிலமு ததரா லுருகிய சித்தவென்னே
திலமுந தயில கலவினை மேவித் தியங்குவதே. (62)

(ப-ரை.) திலமும் - எள்ளும், தயிலமும் - எண்ணெயும், நிகர-ஒப்பாக, எங்கும் - எவ்விடங்களிலும், திகழ்தரு - நிறைந்து விளங்குகின்ற, செந்தில-திருச்செந்திற் பதியோனே! முந்து-ஆயுத வருக்கங்களின் முதன்மையான, அயில-வேலாயுதத்தை யுடையவனே! முருகா - குமாரக்கடவுளே! எனுது-என்று துதித்து ஓலமிடாது, அத்தி - தெய்வயானை நாயகியினது, நகை-தந்தமாகிய, இன்-இனிய, நித்திலம் - முத்தானது, உந்து - செலுத்துகின்ற, அயில்-நுகரப்பட்ட, அமுதத்தால்-அதராமிருதத்தால, உருகிய குழைந்த, சித்த - இருதயத்தை யுடையோனே! என் - என்ன காரணம, ஏதிலம் - (வழியடிமையாகிய யாம்) அயலோர்போல, முந்தயில் - முற்சனனத்திலுல் வந்த, அகல - பெரிதான, வினை மேவி - தீவினையுற்று, தியங்குவது-வருந்துகின்றது (எ-று)-தியங்குவது-எழுவாய். என்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) தெய்வயானை நாயகியின் அதரபானத்தால் உருகும் இருதயனே! [1]எங்கும் எள்ளும் எண்ணெயும்போல் நிறைந்து விளங்குகின்றவனே! முருகனே! வேலாயுதனே! செந்திற் பதியோனே! என்று துதியாமல உனது வழியடிமையாகிய யாம் அயலோர் போலப் பழவினையான் மயங்குகின்றதென்ன?

(கு-உ) "[1]கள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும் எள்ளு மெண்ணெயும் போனின்ற எந்தையே"-திருவாசகம். -திருச்சதகம்-௯௬.

தியங்காப் பொறியுண் டெனுநத னுந் தீதலு மேதியையூர்
தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்
தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவெற்புநி
தியங்காப்பொறியுண்டை பண்டுயபோர்செய்தசேவகனே.

(ப-ரை.) தியங்கா - மயங்காத, பொறியுணடெனும் - ஐம் பொறிகளையுடைய, தனு-உடல், தீதலும்-வேகின்றதும், மேதியை, எருமைக்கடாவை, ஊர்தி - வாகனமாகவுடைய யமன், அங்கா- (என்னைக் கொண்டுபோய்) வாயைத் திறவென்றும், பொறி-யான் செய்த பாவத்திற்காகத் தீயை, உண்-தின்னென்றும், தவமிலியே யென்று-நற்றவத்தைச் செய்யாத பாவியே யென்றும், செப்பலும்- சொல்லுதலும், சத்தியம்-உண்மையாதலால், கா-இனியாவது காத்தருளும், பொறியுண்டு-பிரமலிபி யடைந்து, அயன் கைப்படாது- பிரமதேவன் சிருஷ்டிக்குள்ளாகாமற் பிறப்பொழியும்படி, திர-நிலை பெற்ற, வெற்பு-கிரவுஞ்சகிரியை, நிதியம் - சங்கநிதி பதுமநிதி யும், கா-கற்பகத்தருவும், பொறியுண்டை-செல்வத்திரளையுமுடைய பொன்னுலகானது, பண்டு - பூர்வத்தில், உய - பிழைக்கும்படி, போர் செய்த - போரினைச்செய்து வென்ற, சேவகனே - வீரனே! (எ-று) நீ-தோன்றா எழுவாய். கா - பயனிலை. ஏ-அசை.

(க-து.) முன் கிரவுஞ்ச கிரியைப் பிளந்து தேவலோகத்தைக் காத்த வீரனே! ஐம்பொறிகளையுடைய உடல் சாம்பலாவதும், செய்த பாவத்துக்குத் தக்கபடி தீப்பொறியை யூட்டும் யம தண்டனைக்கு நான் உள்ளாவதும் சத்தியம், இனியாவது இவ்வுடற் சுமை கொள்ளாமற் பிறப்பறக் காப்பாற்ற வேண்டும்

சேவக மன்ன மலர்க்கோர் முன் னீசொலத் தெய்வவள்ளி
சேவக மன்ன வதனும புயகிரி செற்றமுழுச்
சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்
சேவக மன்ன முநிக்கெங்ங ணனித் திகைப்புற்றதே. **(64)**

(ப-ரை.) சே-இடபவாகனத்தின், அகம் - மேல, மன்னு- நிலைபெற்று வருகின்ற, அமலர்க்கு-பரமசிவனுக்கு, ஓம்-பிரணவப் பொருளை, முன்-பூர்வத்தில, நீ சொல-நீ யுபதேசிக்க, தெய்வ-தெய விகமாகிய, வள்ளி-வள்ளிநாயகியினது, சே-சிவந்த, அகம் அன்ன- இருதய தாமரைபோன்ற, வதனும்புய-முகாரவிந்தனே! கிரி - கிர வுஞ்சகிரியை, செற்ற - பிளந்த, முழுச் சேவக - ஒப்பற்ற வீரனே!

மன்ன - தலைவனே! திருவாவினன்குடிச் செல்வ - சிறந்த பழநிப் பதிவாழுங் குமாரக்கடவுளே! கலவிச் சேவகம்-வேதமோதுந் திறத்தையும், அன்னம் - அன்னவாகனத்தையுமுடைய, முநி - பிரமா, எங்ஙன் - எவ்விதத்தினாலே, நாணி-வெட்கி, திகைப்புற்றது-அப் பிரணவப்பொருள் தெரியாமல் மயங்கினது. (எ-று.) திகைப் புற்றது - எழுவாய். எங்ஙன்-பயனிலை. கு-சாரியை. ஏ - அசை.

(க-து.) வள்ளிநாயகி யிருதய தாமரைபோன்ற வதனும் புயனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்த வீரனே! பழநிப்பதியானே! தலைவனே! பரமசிவனுக்கு உபதேசித்த பிரணவத்திற்கு வேத மோதுந் திறத்தையுடைய பிரம்மா பொருள் தெரியாமல் நாணித் திகைப்புற்றிருந்த தெப்படி?

திகைப்படங் கப்புயந் தந்தரு ளானெனன் படிங்கணிய
திகைப்படங் கத்தமை யார்செந்தி லாரென்ப டென்னனுய
திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னிகண் ணீர்தாவி
திகைப்படங் கத்தமை யாதெமை யாட்கொளுஞ் சீகரமே. ()

(ப-ரை) திகைப்பள் - மயங்குகிறாள்; தங்க-தழுவி யுயிர் பெற்றிருக்கும்படி, புயம - தனது புயத்தை, தந்தருளான் - தந்து கிருபை செய்கின்றானில்லை, என்பள் - என்கிறாள்; திங்கள் - சந்திரனை, நியதிகைப்பள்-நித்தியமு முபாலம்பனஞ் செய்கிறாள்; தம்-தமது, கத்து-இப்படி வருந்தி முறையிடுதலை, அமையார்-க்ஷமித்து ரக்ஷிக்கின்றாரில்லை, செந்திலார்-செந்திற்குமரர், என்பள் - என்கிறாள்; தென்னன் - கூன்பாண்டியனது, உயதி-(சுர) வருத்தத்தின், கைப்பு-வெப்பம், அடங்க - தணியும்படி, புகல்-(தமிழ்வேதமாகிய தேவாரத்தை) மொழிந்தருளிய, சேய் என்பள்-சம்பந்தப் பிள்ளையே யென்றுஞ் சொல்லுகிறாள்; கன்னி-எனதுயிராகிய பெண்ணானவள், கண்ணீர் தர-கண்ணீர் சோரும்படியாக, (ஆதலால்) விதி-பிரமனது, கை படு-கையினாற் சிருஷ்டிக்கப்படுகின்ற அங்கத்து-உடற்பைக்குள், அமையாது - இவ்வான்மா அமைக்கப் பட்டுச் சனனம் உறாதபடி, எம்-எம்முடைய, ஐ-குலதெய்வமே! ஆட்கொளும்-அடிமை கொண்டருளவேண்டும், சீகரமே - அழகிய குமாரக் கடவுளே! (எ-று.) நீர்-தோன்றா எழுவாய். ஆட்கொளும்-பயனிலை. ஏ-அசை.

(க-து) எங்கள் குலதெய்வமான அழகனே! என்னுயிராகிய பெண்ணானவள் 'செந்திற்பதியான் யான் முறையிடுங் குறையைத் தணிக்கின்றானில்லை, அவன் புயத்தைத் தழுவத் தரவுமில்லை' யென்றும், 'கூன்பாண்டியனை சுரந்தணித்தவனே' என்றும் சொல்லுகிறாள்; சந்திரனையுந் தினந்தோறும் வெறுத்து மயங்குகிறாள்; இனி இப்படிப்பட்ட சனனம் உற்று வருந்தாத வண்ணம் ஆண்டு கொள்ளவேண்டும்.

சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ
சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு
சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு
சீகர சிந்துரமால்வினைக் குன்றைச் சிகண்டி கொண்டே. **(66)**

(ப-ரை.) சீகரம் - அலைகளையுடைய, சிந்து - சமுத்திரத்தின் கண், ரவுத்த - இராவுத்தனை, வெம்-கொடிய, சூர-சூரனை, செய-வென்றவனே! புய-உனது திருப்புயத்தை, வசீகர-வசீகரித்தலில் வாஞ்சையுள்ள, சிந்துர-திலதத்தையுடைய, வல்லி-வள்ளிநாயகிக்குரிய, சிங்கார-அலங்காரத்தை யுடையவனே! சிவ சுத - பரமசிவனது மைந்தனே! சுசீ-அக்கினியினது, கர-கையிலிருந்தவனே! சிந்துர - வெள்ளையானையையும், கந்தர-மேகத்தையும வாகன் - வாகனமாகக்கொண்ட இந்திரனது, சிறை - சிறையை, விடும் - களைந்த, சுசீகர - பரிசுத்தனே! சிந்து - சிதறவடி, உர-வலிய, மால்-மயக்கத்தை தராநின்ற, வினை - இருவினையாகிய, குன்றை-கன் மலையை, சிகண்டி கொண்டு-மயில்வாகனரூடராய் என்முன் எழுந்தருளி. (எ-று.) நீ - தோன்று எழுவாய். சிந்து - பயனிலை. ஏ - அசை.

(க-து.) சமுத்திரத்தின்கண வலிய சூரனை வென்றவனே! அழகிய புயாசலனே! வள்ளி நாயகனே! பரமசிவன் மைந்தனே! அக்கினியின் கையிலிருந்தவனே! இந்திரனது சிறையைக் களைந்த பரிசுத்தனே! நீ மயிலேறி வந்து என வினையாகிய குன்றைப் பொடி படுத்த வேண்டும்

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே. **(67)**

(ப-ரை.) சிகண்டி-மயில் வாகனத்தை, தத்த - சதிபாய்ந்து செல்லும்படி, தமர-முழங்குகின்ற, வாரி - சமுத்திரத்தின்கண், விட்டு-நடத்தி, அ-அந்த, திதி-திதியினுடைய, புத்ர ராசி-பிள்ளைக ளாகிய அசுரக்கூட்டங்களை, கண்டித - சேதித்தவனே! தத்த-தந்தத்தையுடைய, நக பூதர-பாம்புபோன்ற திருச்செங்கோட்டுக் கதிபனே! தெய்வ-தெய்விகமான, வள்ளிக கொடிச்சி-குறமாதாகிய வள்ளிநாயகியை, கண்டு-பார்த்து, ஏதத்து-இதமாக, அத்த மலர்-உன் கைக ளாகிய மலரை, மேற்குவித்து-சென்னிமேற் கூப்பி, இடை - பெண்ணே உன்னிடையானது, செப்பு - சிறப்பித்துச் சொல்லத்தக்க, உரு-வடிவமாகிய, வஞ்சி-வஞ்சிக்கொடியே; கண-விழி, தித-நிலைபெற்ற, தத்து-ஆபத்துகளெல்லாம், அகல்-நீங்கு கின்ற, தபோபலம்-(விரகாக்கினியைத் தணித்தலால் நான் செய்) தவத்தின் பயனே, என்னும் - என்று நலம்புனைந்துரைக்கும், சேகரனே-தலைவனே! (எ-று.)

(க-து.) சமுத்திரத்தின்கண் மயிலேறிச் சென்று அசுரா கிளையை மாய்த்தவனே! திருச்செங்கோட்டு மலையதிபனே! வள்ளி நாயகியை நோக்கிச் சென்னிமேற் கைகூட்டி உன் இடை வஞ்சிக் கொடியே, உன் கண்கள் என் தவப்பயனே என்று நலம் பாராட்டுங் குமாரக் கடவுளே!

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுந் த்ரியம்பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சேவலென்றே. (**68**)

(ப-ரை.) சே-(அடியார்களைக்) காத்தலில்ல, கரவா-வஞ்சித்த லில்லாத, ரண-யுத்தத்தில் வலிதங்கிய, வேல-வேலாயுதத்தை யுடைய, வீர-வீரனே! வேடச் சிறும்-குறச் சிறுமியாகிய வள்ளி நாயகியினது, பத-பாதத்தை, சேகர-முடியிற் றரித்தவனே! வார ணம - தெய்வயானை, மேவும் - தழுவும், புயாசல - மலைபோன்ற புயத்தை யுடையவனே! தீவினையின்-கொடிய வினையின், சேகு-வயி ரத்தை, அர சங்கரிப்பவனே! ஆரண-வேதமபூசிக்கின்ற, வெறபாள-திருச்செங்கோட்டுமலைக் கதிபனே! நாளும-நாடோறும், த்ரியம் பகனார்-திரிநேத்திரங்களையுடைய பரமசிவனது, சே-இடபவாகன மாகிய விஷ்ணுவின், கர-கையிலிருக்கின்ற, வாரணம்-சங்குக்கும்,

நின்-உனது, கையில் - திருக்கரத்தி லிருக்கின்ற, வாரணம்-கொடியாகிய கோழிக்கும், சீவனென்றே - இரவு நீடியாமல் விடிதலேக் காட்டித் தொனிசெய்தலாலுங் கூவுதலாலும் பிராண னென்றாகவே யிருக்குமோ. (எ-ங.) சீவன்-எழுவாய். ஒன்றே-பயனிலே. இவ்விரண்டு கவியுங் குளகம்.

(க-து.) அடியார்களேக் காக்கும் வேலாயுதத்தை யுடைய வனே! வள்ளிநாயகி பதசேகரனே! தெய்வ யானே தழுவும் புயனே! வயிரமான வினையை யொழிப்பவனே! திருச் செங்கோட்டு மலேயை யுடையவனே! பரமசிவனுக்கு இடபவாகனமாகிய விஷ்ணு வின் கையிலிருக்கின்ற சங்கும் உனது கரத்திலிருக்கின்ற கொடி யாகிய கோழியும், பொழுது விடிதலேக் காட்டித் தொனி செய்த லுங் கூவுதலும ஒன்றாயிருத்தலால் அவற்றிற்குப் பிராணனும் ஒன்றாகவே யிருக்குமோ ?

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச் [வேள்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்தசெவ்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெ ணுதிடையே
சீவன சத்துரு வெய்திடியெய் தாப்பழி சிந்திப்பதே. (69)

(ப-ரை.) சீவன் - பிராணன், அசத்து - சத்தல்ல வாகையால் (சீவனுந் தநுவும் இயைந்திருக்கும்போதே), உருகு-இளகத் தக்க, அன்பால் - பக்தியினுல், பிறப்பு-சனனம், அற-(சத்தின்னதென் றறிந்து) ஒழியும்படி, தேவர் - தேவர்கள், உய்ய - பிழைக்கும்படி யாய், சீவன்-சீவகாரணனை பரமசிவனுல, ஆசத்து - ஆட்டு வாக னத்தையுடைய, உரும்மிக்கும்-வெப்பத்தைத்தருகின்ற, மெய்யோன்-தேகத்தையுடைய அக்கினியினது[1], கையில் - கரத்தில், சேர்த்த-சேர்க்கப்பட்ட, செவ்வேள்-குமாரக்கடவுளே! சீ-பிரகாசம் பொருந் திய, வனசத்து-தாமரைத் தவிசையுடைய, உருச்செய்யாள்-சிவந்த திருமேனியையுடைய மகாலக்ஷ்மிக்கு, மருக - மருகனே! எனுது-என்றுள்ளத்து இருத்தித் தியானிக்காமல், இடையே - மத்தியில், சீவன் - சீவனுனது (சத்தாகிய பரத்தையும் அசத்தாகிய தன்னேயும் அறிவதைவிட்டு), அசத்து-அசத்தாகிய, உரு - (மலபாண்டமாகிய) உடலே, எய்தி-அடைந்து, எய்தாப் பழி-அதற்கேற்கத் தகாத பெரும் பழிகளே, சிந்திப்பது - (என்னிருதயம்) சிந்தித்துக் கொண்டு

அவமே காலங் கழிக்கின்றது. (எ-று.) இருதயம்-தோன்றா எழுவாய். சிந்திப்பது-பயனிலே. ஏ-அசை.

(க-து.) சீவன் அசத்தாயிருந்தும் அவ்வசத்தைப் பற்றிவருந் தேகாதி முதலிய பிறப்பொழியும்படி, சத்தாகிய பரனே! தேவர்களைக் காத்த செவ்வேளே! இலக்குமியின் மருகோனே! என்று அன்பினால் உருகித் துதியாமல், அத்தேகம் பிழைத்தற்குரிய சீவனத்தைப்பற்றி யடாத பழியை யென்னிருதயஞ் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

(ரு-உ) [1] அக்னிகர மீதிற் ப்ரபாகரனும் (திருவகுப்பு-12.)

சிந்தூர வித்தக வாரும் புகர்முகத் தெய்வவெள்ளைச
சிந்தூர வித்தக வல்லிசிங் காரசெந் தூரகுன்றஞ்
சிந்தூர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
சிந்தூர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே. (70)

(ப-ரை.) சிந்தூர-திலதந்தீட்டிய, இத் தகவு-இத் தகைமைப்பாடு, ஆரும்-நிறைந்திருக்கின்ற, புகர்-புள்ளிபொருந்திய, முக-முகத்தை யுடைய, தெய்வ-தெய்விகமான, வெள்ளைச் சிந்தூர-அயிரா வதத்தினிடம் வளர்ந்த, வித்தக-அற்புதமான, வல்லி-தெய்வ யானைக்கு, சிங்கார-இனிமையானவனே! செந்தூர-செந்திற்பதிக்கு நாயகனே! குன்றம்-கிரவுஞ்சகிரியை, சிந்து-பொடிசெய்த, உர-வல்லவனே! வித்தக-சர்வக்ஞனே! முத்திக்கும்-மோக்ஷத்திறகும், ஆய்-ஆராய்ந்தருள்செய், நின்ற-அடியவர்கட்கெல்லாந் தாய்போல நின்ற, செல்வ-செல்வனே! துஞ்சா-கண்ணுறங்காமல் முழங்கு கின்றது, சிந்து-சமுத்திரமும்; ரவி-சூரியனுடைய, தகனம் போலும்-காந்தியைப்போலத் தகிக்கின்றது, இங்கு-இவ்விடத்தில் (இடைவிடாமல்), இளம்-இளமைதங்கிய, திங்களும்-குளிர்ந்த சந்திரனும். (எ-று.) நீ-தோன்றா எழுவாய். ஆய்-பயனிலே. ஏ-அசை.

(க-து.) சிந்தூரந் தீட்டும் புகர்முகத்தையுடைய அயிராவதத்தி னிடம் வளர்ந்த தெய்வயானை நாயகனே! முத்திக்கு வித்தகனே! கிரவுஞ்சகிரியைத் தகர்த்த செந்தில் நாயகனே! நிறைந்த செல்வனே! சமுத்திரம் முழங்கியும் சந்திரன் வெப்பத்தைத் தந்தும் என்னை வருத்துவதை நீ ஆய்ந்தருள்.

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும்ப தாம்புயன் செந்திலன்னாள்
திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே. **(71)**

(ப-ரை.) திங்களும்-சந்திரனையும், மாசுணமும் - அரவத்தையும், புனைவார்-தரித்துக்கொள்ளுகின்ற பரமசிவனது, செல்வன - புதல்வனும், என்-என்னுடைய, ஐயிரு திங்களும்-பத்துமாதமென்னுங் காலவளவுக் குட்பட்டுத் தாயின் கர்ப்பத்திலுறும் பிறவித்துன்பத்தையும், மா - மிகவும், சுணமாக்கும் - நீறாக்கத்தக்க மகத்துவம் பொருந்திய, பதாம்புயன்-திருவடித்தாமரையை யுடையவனுமாகிய குமாரக்கடவுளது, செந்தில்-திருச்செந்திற்பதியை, அன்னாள்-ஒத்துவிளங்காநின்ற இம்மங்கையினுடைய, திங்கு-தீமைகளை, அளும் - உண்டாக்கும், மாசு-(ஆத்துமகோடிகள் செய்யும பாவங்களாகிய) குற்றத்தை, உள் - ஆராய்கின்ற, நமன்போல்-யமனையொத்த, விழியும் - கண்ணையும், செழும் - செழுமைதங்கிய, கரும்பும் - கன்னலும், திம்-தித்திப்பான, களும் - தேனும், மாசுண - (ஒப்பாகாமையால்) குற்றமுறும்படி செய்கின்ற, நன்றான-மிகவும் இனிமையான, மாற்றமும்-மொழியையம், தீட்டின்-எழுத உன்னுற் கூடுமானல், நன்று-நனமையாகும். (எ-று.) மடலூர்தல்-தோன்ற எழுவாய். நன்று-பயனிலை. எ-அசை.

(க-து.) சந்திரனையுஞ் சர்ப்பாபரணத்தையுந் தரித்த பரமசிவனது மைந்தனும், என் பிறவியை மாற்றித் தமது திருவடியையருள்வோனுமான குமாரக்கடவுளது செந்தூரையன்ன இம்மங்கையினது யமனையொத்த கண்ணையும், தேனினுங் கன்னலினும் இனிய மொழியையும் உன்னால் எழுதக்கூடுமானு லாகும்; கூடாததான் மடலூர்தல் நன்றன்று.

(து-உ) இது "மொழிநடை யெழுதல் அரிதெனவிலக்கல்" என்னுந் துறை.

"சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினும்
நந்தா உரையை எழுதலெவ் வாறு நவின்றருளே." —
(வெங்கைக் கோவை.)

தீட்டப் படாவினி யுன்றலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே. (72)

(ப-ரை.) தீட்டப்படா - எழுதப்படாது, இனி - இனிமேல், உன்றல்-உன்றலே, என்-என்னுடைய, சென்னி-தலையின் விதியை, கறை-உதிரமுதலியவற்றால் நிறைந்த, பிறப்பில்-கருவிற் சனித்தலினால், தீட்டப்படு-அசூசியையடைகின்ற, ஆவியவர்-உயிர்களையுடையவரைப்போல, அல்லன் யான்-யானல்லேன, திக்கு-எட்டுத திக்குகளிற் சென்று, நான் மருப்பு - தனது நான்கு கொம்புகளையும், தீட்டு-கூர்மையிடுகின்றதும், அ-அந்த, படா-பட்டடும், விதவிசித்திர விதங்களும் பொருந்திய, முகாசலன்-முகததையுமுடைய மலைபோன்ற அயிராவதத்தில் ஏறுகின்ற இந்திரனது, சிறை-சிறையை, விட்டவன்-நீக்கியாண்ட குமாரக்கடவுளினுடைய, தாள்-திருவடித்தாமரையை, தீட்ட - அடைய, படா - ஒருகாலும் அழிவில்லாத, இவனையே - இப்படிப்பட்ட முருகனையே, நினைவன் - உள்ளத்திலிருத்தித் தியானிப்பேன் (ஆதலால்), திசாமுகனே - பிரமனே. (எ-று.) சென்னி-எழுவாய். தீட்டப்படா-பயனிலை. ஏ-அசை.

(க-து.) பிரமாவே! இனி யென்னை யுதிரநிறைந்த கருககுழியில் அழுந்துவோரைப்போல் நினையாதே! இந்திரனது சிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாததாமரையை யடையும் பொருட்டு அவனையே தியானித்துக்கொண் டிருக்கிறேனாதலால் எனது தலை யுன்கையால் இனி யெழுதப்படாது.

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறும்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே. (73)

(ப-ரை.) திசாமுக-நான்கு திக்கு முகஙகளையுடைய, வேதன்-பிரமனும், ஐயன்-அவனது பிதாவாகிய விஷ்ணுவும், பாற்கரன்-சூரியனும், திங்கள்-சந்திரனும், தஙகள்-தஙகடஙகள், அவதி-ஆயசுமுடிந்து, சாம்-இறக்கின்ற, உகவேதனை யீறிலும் - யுகாந்தத்தில் துன்புறுஙகாலத்திலும், ஈறிலர் - அழியார்கள், சீறும் - கோபித்

தொலிக்கின்ற, அம்போதி-சமுத்திரத்தின்கண் தோன்றி, சாமுக-சாமுகத்தை யுடையவனும், வேதனை - தேவர்கட்குத் துன்பத்தை விளைக்கின்றவனுமாகிய சூரனை, வென் கண்ட-புறங்காட்டச்செய்த, வேலன்-வேலாயுதத்தையுடைய முருகன் வாசஞ்செய்கின்ற, தினைப் புன - தினைப்புனங்களையும், தந்தி-யானைகளின், சாமுக-கூட்டங்களையும், வேதனை - மூங்கில்களையும், நண்ணு - பொருந்தியிருக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, கார்-மேகங்கள் தவழாநின்ற, வரை-பழமுதிர் சோலைமலையை, [1]சேர்பவர்-அடைந்து இடைவிடாமல் தியானிப்பவர். (எ-று.) சேர்பவர்-எழுவாய். ஈறிலர்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) சமுத்திரத்தின்கட் சூரனை வென்ற வேலாயுதப் பெருமான் உறைந்தருளிய சோலைமலையை யடைபவர் பிரமா விஷ்ணு சந்திரசூரியர்கள் எல்லாம அழியும் யுகாந்தகாலத்திலுந் துன்பமின்றி நித்தியராயிருப்பார்கள்.

(கு-உ) [1]சேர்தல்=இடைவிடாது தியானித்தல்; "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்"

—(திருக்குறள்.)

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென்றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே. ()

(ப-ரை.) சேர - சேர ராசனது, பொருப்பு - கொல்லிமலைச் சாரலையும் வெள்ளிமலைச் சாரலையுமுடைய, அடவி-வனத்தில் வாழ்கின்ற, தேன் - தேன்மொழியையுடைய வள்ளிநாயகிக்கு, இறைவன்-காதலனே! திரை - அலையானது, சிறையை-கரையை, சேர் - அழியும்படி, அப்பு - மோதுகின்ற, ஒர்-ஒப்பற்ற, உப்பு-உவர்க்கடலை, அட - வற்றும்படி வேல்விட்ட, வல்லவன்-வல்லவனே! சூரை-சூரனை, சிகரியுடன், கிரவுஞ்சகிரியுடன், சேர-அடியோடு, பொரு - போர்செய்து, பட - அழியும்படி, வென்று - செயித்து, அண்டர் - தேவர்களால், ஏத்திய - துதிசெய்யப்பட்ட, சேவகன் - வீரனே! வான் சேர் அப்பு-ஆகாயகங்கையை, ஒருப்பட-ஒன்றாக, வேணியில் - சடையின்கண், சேர்த்தவன் - அடக்கித்தரித்த பரம்சிவன், செய் தவமே - செய்தவமாகிய மைந்தனே! (எ-று.)

(க-து.) கொல்லிமலை வெள்ளிமலைச்சாரலையுடைய வனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகிக்குக் காதலனும், சமுத்திரத்தை வேலால் வற்றும்படி செய்தவனும், சூரனையுங் கிரவுஞ்சகிரியையும் நிர்மூலமாக அழித்துத் தேவர்களால் துதிக்கப்பட்டவனும், கங்காதராகிய பரமசிவன் செய்தவமென்னு மைந்தனுமாகிய குமாரக்கடவுளை !

செய்தவத் தாலஞ்சு சீரெழுத் தோதிலந் தீதலருஞ்
செய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுரைக் கேற்றுருப்போய்ச்
செய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதென் னேம்வினையே
செய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் செம்மல் கொண்டே.

(ப-ரை) செய் தவத்தால் - அழகிய தவத்தினாலாவது, அஞ்சு சீரெழுத்து - சிறந்த பஞ்சாக்ஷரத்தை, ஓதிலம் - துதிக்கின்றோமில்லை; தீது - தீமை, அலரும்-விளையும், செய்-நரகபூமி, தவ - அழிந்துபோகவும், தாலம்-உலகம் எல்லாம், சுக-நன்மையை, பெற-அடையவும், சேயுரைக்கு-சம்பந்தப்பிள்ளையாக அவதரித்துத் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்தினால், ஏற்றுருப்போய் - ஆணுருமாறி, செய்த-சிவந்த, அத் தாலம்-அப்பெண்ணுருவாகிய பனை, சுவைக்கனி - இனிய பழத்தை, ஈன்றது - தந்தது, என்னேம் - என்று துதிக்கின்றோமில்லை, வினையே செய்து-தீவினையே புரிந்து, அவத்தால் - வந்த துன்பத்தினால், அஞ்சுகின்றனம் - அச்சமுற்றிருக்கின்றனம்; மும்மலச் செம்மல் கொண்டு - மும்மலமாகிய போர்வையைத் தரித்துக்கொண்டு. (எ-று.) யாம்-தோன்றா எழுவாய். அஞ்சுகின்றனம்-பயனிலை. ஏ-அசை. இவ்விரண்டு கவியுங் குளகம்.

(க-து.) நெஞ்சமே! உலகத்தார் நரகம் எய்தாமல இன்பத்தையடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக் கொடுக்கவும் சம்பந்தரா யவதரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த குமாரக் கடவுளைத் துதியாமலும், அவரது பஞ்சாக்ஷரத்தை யநுஷ்டிக்காமலும், தவத்தில் முயலாமலும், தீவினைத் தொடர்பால் மும்மலப் பிணிப்புண்டு யாம அவத்தின் முயன்று அஞ்சுகின்றனம்

செம்மலை வண்டு கடாங்க மாவென்ற திண்படைவேற்
செம்மலை வண்டு வசவார ணத்தனைச் செப்பவுன்னிச்
செம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதென் னங்கையில்வாய்
செம்மலை வண்டு விருப்புறு மோகிது தேர்ந்துரையே. (76)

(ப-ரை.) செம் - சிவந்த நிறத்தையுடைய, மலை - கிரவுஞ்ச கிரியையும், வண்டு-சங்கினங்கள், உகள்-உலாவுகின்ற தரங்கம் - கடலின்கண், மா-மாவடியாய்நின்ற சூரனை, வென்ற - செயித்த, திண் - திணணிய, படைவேல்-வேலாயுதத்தையுடைய, செம்மலை - கடவுளை, வண்-வளப்பமிருந்த, துவச வாரணத்தனை - கோழிக் கொடியையுடைய குமாரக்கடவுளை, செப்ப-புகழ்ந்துபாட, உன்னி - நினைத்தும், செம்மலை-மனத்தைப் புதைத்துவிடாதே, வண்டு-குற்றம், தவு-நீங்கிய, அம்-அழகிய, தமிழ்ப்பாண-தமிழ்ப்பாணனே! தெள்-தெளிந்தும், தீம் - இனிப்புற்றும், கையில - கரத்தில், வாய் - வாய்ப்பினும், செம்மலை-பழமையாகிய பூவை, வண்டு - சுரும்பினங்கள், விருப்புறுமோ - ஆசிக்குமோ, ஓது - ஓதை, தேர்ந்து - ஆராய்ந்து, உரை-அக்கடவுளைப் பலகாலும் புகழ்ந்து பாடு. (எ-று.)

நீ-தோன்றா எழுவாய். உரை-பயனிலை, எ-அசை.

(க-து) குற்றமின்றி யின்னிசைபாடும் பாணனே! வண்டுகள் அன்றலர்ந்த மலர்களைவிட்டுப் பழமையாகிய மலர்களை விரும்புமா? அத்தன்மையன் யாரென்றறிந்து நீ கிரவுஞ்சகிரியையும் சமுத்திரத்தில் மா வடிவாய் நின்ற சூரனையும் வென்ற கோழிக் கொடியோனை கந்தசுவாமியினது திருப்புகழைக் குறைவின்றிப் பலகாலும் புகழ்ந்து பாடுவாயாக.

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்படு மாறு செறிந்தலகைத்
தேரை விடப்பணித் தென்றேடி யென்றுந திரிபவரே. **(77)**

(ப-ரை.) தேரை - தேவர்களெல்லாங் கூடிச்செய்த தேரை, விட - அச்சுமுறியும்படி, பணி-செய்து, ஏறு-இடபவாகனத்தின் மேல், ஏறி - இவர்ந்து, முப்புரம் - திரிபுரத்தை, செற்ற-நகைத் தெரித்த, பிரான்-பரமசிவனுக்கு, தேர்-பிரணவப்பொருள் தெளியச் செய்த, ஐ-சுவாமியே! விள்-சொல்லத்தகக, தப்பு-குற்றத்தால், அணி-நெருங்கிய, சூராரி-சூரசங்காரனே! எனக-என்று துதிக்கக் கடவீர்கள், தெரிவையர்பால் - காமவாஞ்சையால் பரத்தையரிடத் தில், தேரை-தேரையானது, விட-விஷத்தையுடைய, பணி-பாம்பினது, வாய்-வாயில், படுமாறு - அகப்பட்டாற்போலும், செறிந்து - சிக்கிக்கொண்டு, அலகைத் தேரை-பேய்த்தேரென்னுங் கானலை,

விடு-ஊறுகின்ற, அப்பு-சலமானது, அணித்தென்று-சமீபமாயிருக்கின்றதென்று, என்றும் ஓடி-எப்போதும் ஓடியோடி, திரிபவரே-அலைந்து திரிகின்றவர்களே. (எ-று.) நீங்கள்-தோன்று எழுவாய். என்க-பயனிலை.

(க-து.) பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல மாதராது மயக்கத்தி லகப்பட்டுக் கானலை நீரென்றெண்ணிச் செல்பவர்போல் அவர்கள் பொய்யின்பத்தை நம்பி வருந்துவோரே! அதைவிட்டுத் தேவர்கள் கட்டிச் சமைந்த தேரை முறித்து இடபமேறித் திரிபுரம் எரித்த பரமசிவனது ஸ்வாமியே! சூரசங்காரனே! என்று துதியுங்கள்.

திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைபட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திருமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்புநெஞ்சே. **(78)**

(ப-ரை.) திரி-நீ யென்றுந் திரிவாயாக, புரத்து பூரநாளில், அப்பு-கடல்சூழ்ந்த, புவி-பூவலகத்தை, தர - டெற்றருளும்படிக்கு, தோன்றி-அவதரித்த உமாதேவி, சிலை-தனதுள் பாகமாகிய இடது கரத்தால் மேருவாகிய வில்லை, பிடிப்ப-பிடித்துக்கொள்ளச்செய்து, திரிபுரத்து-முப்புரத்தின்மேல், அப்புத்தலைப்பட-விஷ்ணுவாகிய பாணத்தைப் பிரயோகஞ் செய்யும்பொருட்டு, நாண-தனது பாகமாகிய வலதுகரத்தால் வாசுகியாகிய நாணை, தொடும்-ஏறிட்ட, சேவகன் - பரமசிவனது, கோத்திரி - திருச்செங்கோட்டுமலையை, புரத்து-நகரமாகக்கொண்ட, அப் புத்திர-அந்த மைந்தனே! மான் மருக - திருமான் மருகோனே யென்றும், [1] திருக்கை-திருக்கையென்னு மீனையுடைய, அம்போதி-சமுத்திரத்தின்கண், ரிபு-அசுரராகிய சத்துருக்களது, ரத்தப் புத்துறை-இரத்தங்களையே புதிய வுறையாகத் தோய்ந்த, ஆயுத என-வேலாயுதத்தை யுடையவனே யென்றும், செப்பு-புகழ்ந்து சொல்லி, நெஞ்சே-மனமே. (எ-று.) நீ-தோன்று எழுவாய். திரி-பயனிலை. ஏ-அசை.

(க-து.) நெஞ்சமே! பூரநாளிற் பிறந்த லோகமாதாவாகிய பார்வதி வில்லைப் பிடித்துக்கொள்ள நாணேறிட்டுத் திரிபுரத்தின் மேல் விஷ்ணுவாகிய பாணப்பிரயோகஞ் செய்த பரமசிவனது மைந்தனாகிய திருச்செங்கோட்டுமலை யதிபனே! திருமால்

மருகோனே! சமுத்திரத்தில் அசுரரை வதைத்த வேலாயுதனே! என்று சொல்லிக்கொண்டு நீ திரிவாயாக.

(கு-உ.) [1]திருக்கை-ஒருவகைமீன்; "திருக்கையம் போதி" [96-னவரும் செய்யுளையும் பார்க்க]

செப்பா ரமுதலை மன்னொ திக்னங் குரும்பைமுலை
செப்பா ரமுதலை கண்கா னகைமுருந் தீரிருகண்
செப்பா ரமுதலை வாவியிற் சென்ற பிரான்மருகன்
செப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே. **(79)**

(ப-ரை.) செப்பு-சொலலானது, ஆரமுது-ஆரமுதம்போலும், அல்-இருணிறமும், ஐ-அழகும், மன் - நிலைபெற்ற, ஓதி - கூந்தலானது, கனம்-மேகம்போலும், குரும்பை-குரும்பையை யொத்த, முலை-தனமானது, செப்பு - செப்புப்போலும், ஆர - முத்துக்களையுடைய, முது-பழமையாகிய, அலை-கடல்போலும், கண்-விழியானது, கால்-ஒளி தங்கிய, நகை-பல்லானது, முருந்து-மயிலிறகினடிபோலும், ஈரிருகண்-நான்கு கண்களையுடைய, செ-சிவந்த, பார முதலை-பெரிய முதலைவாயிற் சிக்கிய யானையை, வாவியில்-தடாகத்தின்கண், சென்ற-ரக்ஷிக்கும்படி விரைந்துபோன, பிரான்-திருமாலின், மருகன்-மருகோனும், செப்பார-மிகவுந் தன்னைப் புகழ்ந்து துதிப்பவர்களது, முதலை-பிறப்பின்மூலத்தை, வேர் களைவான் - நிர்மூலமாக்குவோனுமாகிய குமாரக்கடவுளது, வரை சீரினுக்கு-மலையில்வாழு மங்கைக்கு. (எ-று.) செப்பு முதலிய எழுவாய். ஆரமுது முதலிய பயனிலை. ஏ-அசை.

(க-து.) தடாகத்தின்கண் முதலைவாயிற் சிக்கிய யானையை ரக்ஷித்த திருமான் மருகோனுந் தன்னைத் துதிப்பவர்களது பிறப்பை யொழிப்பவனுமான குமாரக்கடவுளினது மலையில் வாழு மங்கைக்கு மொழி அமுதமும், கூந்தல் மேகமும், தனம செப்பும், கண் கடலும்போன் றிருக்கின்றன.

(கு-உ.) இது "அவயவங் கூறல்" என்னுந் துறை.
(திருக்கோவையார்—௧0அ.)

சீரம ராம சிவசங்க ரானந் திருமுடிக்குச்
சீராம ராம துகாத் துழாயென்பர் தெண்டிரைமேற்
சீராம ராம னிறந்திறக் கத்தொட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே. **(80)**

(ப-ரை) சீ-இலக்குமிக்கு நாயகனான, ராம-அழகிய, ராம-திருமாலே! சிவசங்கரா-பரமசிவனே! நும்-உங்கள், திருமுடிக்கு-அழகிய சென்னிகளுக்கு, சீர்-சிறந்த தன்மையாவது, ஆம்-கங்கா சலத்தோடே, அரா-அரவாபரணமும், மதுகர-தேன்பொருந்திய, துழாய்-திருத்துழாய்மாலையும், ஏன்பர்-என்று சொல்லுவார்கள்; தெள்-தெளிந்த, திரைமேல்-அலையையுடைய கடலின்கண், [1]சீரா-கவசத்தை, மராம-மாமரமாய்நின்ற சூரனது, நிறம்-மார்பை, திறக்க-பிளக்கும்படி, தொட்ட-தனது மெய்யிற்புனைந்த, சேய் சுழற்கு-முருகக்கடவுளது திருவடிக்கு, சீராம் - சிறப்பாயமைந்திருக்கும், அரா-நெருங்கிய, மன்-நிலைபெற்ற, இமையோர்-தேவர்களுடைய, மகுட-கிரீடமணிந்த, சிகாவிம்பம்-வட்டவடிவாகிய தலைகள். (எ-று.) சிகாவிம்பம்-எழுவாய். சீராம்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) பரமசிவனே! உமது திருமுடிக்குக் கங்கையும் பாம்பும் மாலையாம்; திருமாலே! உமது திருமுடிக்குச் சிறந்த திருத்துழாய் மாலிகையாம்; மெய்யிற் கவசத்தை யணிந்து சமுத்திரத்தின்கண் சூரனை வென்ற குமாரக்கடவுளது திருவடிக்கோ தேவர்களது முடித்தலைகளே மாலையாம்.

(கு-உ.) [1]"சீரா" என்பதன் பொருளை கந்-அலங். 27-ஆம் செய்யுட் குறிப்புரையிற் காண்க.

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்செவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி லூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி யானல மன்றிலுந் தென்றலுமே (81)

(ப-ரை.) சிகாவல - மயில்வாகனனே! அன்பர் - தனக்கன்புள்ள அடியார்க்கு, இதப்பாடு செய்யும்-இன்னருள் செய்கின்ற, செவ்வேல-அழகிய வேலாயுதத்தையுடையவனே! இலஞ்சி காவல-இலஞ்சிப்பதியைக் காத்தளிப்பவனே! வன்பரிலூரார்-என்னையலர் தூற்றும் இவ்வூரினராகிய கொடியவர்களும், மதன்-மன்மதனும், நித்திலம்-முத்துவிளைகின்ற, சலராசி-சமுத்திரமும், கா-சோலையும், அலவன்-சந்திரனும், பரியங்கம்-கட்டிலும், குழல்-புள்ளாங்குழலும், பெற்ற-என்னைப் பெற்றவளாகிய, தே மொழி-இனிய மொழியையுடைய, வஞ்சி-தாயின், காவு-காவலும், அல-இவைகளெல்லாம் பெரிதல்ல, வன்-வலிய, பரியானலம்-உடவாமுகாக்கினி

போன்று வருத்துகின்றன, அன்றிலும்-(காமசின்னமாகிய) அன்றிற்பட்சியும், தென்றலும்-(தேராகிய) தென்றற் காற்றும். (எ-று.) அன்றிலும் தென்றலும் - எழுவாய். பரியானலம்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) மயில்வாகனனே! அன்பர்க்கருளும் வேலாயுதனே! இலஞ்சிப்பதியோனே! எனக்குப் பகைவராகிய ஊராராலும், காமனாலும், கடலாலும், சோலையினாலும், கட்டிலினாலும், வேய்ங்குழலாலும், தாயின் காவலாலும் உண்டாகும் இடர் பெரிதல்ல; அன்றிலும் தென்றலுமே வடவாமுகாக்கினி போன்றிருக்கின்றன; ஆகையால் எனக்கு அருள்செய்ய இது சமயம்.

தென்றலை யம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலை யம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலை யம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலை யமபு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே. **(82)**

(ப-ரை.) தென்-வண்டுகளிசைபாடுகின்ற, தலை-சிரசின் கண், அம்பு-கங்கையை, புனைவார்-அணியும் பரமசிவனது, குமார-மைந்தனே! திமிர - இருணிறமுடைய, முந்நீர்-கடல் சூழ்ந்த, தென்-அழகிய, தலை - பூதேவிக்கும், அம்புயம் - செந்தாமரைப் பூவில் வாசஞ்செய்கின்ற, மின்-ஸ்ரீதேவிக்கும், கோ-நாயகனாகிய திருமாலினது, மருக-மருகோனே! செழு-செழுமை தங்கிய, மறை தேர்-நான்கு வேதங்களுந் துதிக்கின்ற, தென்றலை-தெற்கின் கண்ணதாகிய, அம்-அழகிய, புசக-பாம்புபோன்ற, பூதர-திருச்செங்கோட்டு மலையதிபனே, எரி - அக்கினியை, சிந்தி-கொட்டிக்கொண்டு, மன்றல் - வாசனை தோய்ந்த, தென்றல்-தென்றற் காற்றனது, ஐயம்பு-என் தேகத்தில் மன்மதனது பஞ்சபாணங்களும், படு-தைத்த, நெறி-புண்வழியே, போய்-நுழைந்து, உயிர் - என்னுயிரை, தீர்க்கின்றது - (வருத்தி) நீக்குகின்றது. (எ-று.) தென்றல்-எழுவாய். தீர்க்கின்றது பயனிலை. ஏ-அசை.

(க-து.) கங்கையைச் சூடிய பரமசிவனது மைந்தனே! பூதேவி ஸ்ரீதேவிகளின் நாயகனான திருமால் மருகோனே! வேதங்கள் துதிக்கின்ற பாம்புபோன்ற திருச்செங்கோட்டு மலையில் வாழ்பவனே! காம பாணந் தைத்த புண்வழியே தென்றற்காற்று என்னுடலில் நுழைந்து உயிரை வருத்துகின்றது.

தீரா கமல சனிகித போக மெனத்தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாததென் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத்திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே. (83)

(ப-ரை.) தீரா - நீங்காமல், கமல - விஷ்ணுவினது நாபிக் கமலத்தில், ச-சனித்த பிரமா, லிகித போகமென - எழுதிய தலை விதிப் பிராப்தமென்று, தெளிந்தும்-அறிந்திருந்தும், [1] தீ-என்னறிவானது, ராகம்-இச்சையினால், அலமென - இனிய பயனுடையே மல்லேலமென்று, கருதாதது - சிந்தியாதது, என் - என்ன காரணம், சேய் - குமாரக் கடவுளே! அவம் - பயனின்மையான, நூல்-சாஸ்திரங்களை, தீர்-நீங்கிய, ஆகம - பரிசுத்தமான ஆகமம் உரைத்தோனே! லகு-(அக்கினியானவன் இப்பொறி) அற்பமானது, காம்-கையில், பொறுப்பன்-தாங்கிக்கொள்வேன், என-என்று சொல்ல, திருக்கண் - உனது சிறந்த விழியினுலே, தீ-அவ்வக்கினியினது, ராகம்-காந்தியோடுற்ற சிவந்த நிறமெல்லாம், அலமரவே - வருந்த முற்றே, கருக-கருகும்படி, சிவந்தவனே-கோபித்தவனே. (எ-று.) அறிவு-எழுவாய். கருதாததென் - பயனில்லை. ஏ-அசை.

(க-து.) குமாரக்கடவுளே! பரிசுத்த வேதாகம மொழிந்தோனே! 'இக்கனற்பொறி லகுவானது, நான் கரத்திற் றாங்கிக் கொள்வேன்' என்று வன்மைபேசின அக்கினியின் வீறடங்கி உடல் கருகக் கோபித்த விழியையுடையவனே! கமலோற்பவனுன [2]பிரமா விதித்த விதியின் அநுபவந் தவறாதென்று தெளிந்தும், எனது அறிவானது ஆசை பயன்படுவ தன்றென்று கருதாததென்ன ?

(கு-உ.) [1] தீ = புத்தி. "தீ தொத்தூதே"—௫௪.

[2] "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" திருக்குறள்-377.

சிவசிவ சங்கர வேலா யுதநினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே. (84)

(ப-ரை.) சிவ - ஏகவஸ்துவான, சிவ - பரமசிவனிடத்தில், சம்-உற்பவித்த, கர - திருக்கரத்தில், வேலாயுத - வேலாயுதத்தை

யுடைய முருகோனே! தினை - தினைப்புனத்தையுடைய, வஞ்சி-பெண்ணாகிய, குறிஞ்சி-குறிஞ்சிநிலத்தில், வசி-வாசஞ்செய்கின்ற வள்ளிநாயகியினது, வசங் கரவா - பக்கத்தை விட் டகலாத, மயில் வீர-மயிலேறுஞ்சேவகனே! செகம்-உலகத்தின்கண், திரு-சிறந்த, கண்-விழியினால், சிவ-கோபி, சிவ்-கோபி, சங்கர-எல்லாரையும அழிக்கின்ற, மாவை - சூரனுருக்கொண்ட மாமரத்தை, எனும் - என்று வேலாயுதத்தை யேவும், திறலோய்-வீரனே! பொறை வாசி-மிகுந்த பொறுமையென்னும் பாணத்தின், வசி வசம் - கூர்மையி னிடத்தில், கர-கோபமுதலிய, மான் பட்ட-மிருகங்கள் விழுந்து விட்டன, ஒளி-உனது திருவருளாகிய பிரகாசம், சேர்ந்தபின்-என் னிற் கலந்தவுடனே. (எ-று.) கரமான்-எழுவாய. பட்ட-பயனிலை. ஆ-அசை. ஏ-அசை.

(க-து.) ஏக வஸ்துவான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகனே! மயிலேறும் வீரனே! மாவடிவாய்நின்ற சூரனை வென்றவீரனே! நின்திருவருளின் பிரகாசத்தினால் எனது கோப மென்னும் மிருகம் பொறுமையென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மையதாயிற்று.

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடு மைந்த திளைத்திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னாரி யென்னுமிச் சேறுபுக்கே. (85)

(ப-ரை.) சேந்த-கந்தனே! மராத்துடர்-கடப்பமாலிகையைப் புனைந்து, தானவர் சேனையை-அசுரர்கூட்டங்களை, தெள்-தெளிந்த, திரை - அலையையுடைய கடலினிடத்தில், கண் சேந்து-விழிகள் சிவந்து, அ - அந்த, மராததுடன் - மாமரமாய்நின்ற சூரனுடன், கொன்ற-வதைசெயத, செவவேல - சிவந்த வேலாயுதததையுடை யோனே! திருமுடிமேல் - அழகிய சிரசின்கண், சே-இளமையான, இந்து-சந்திரனையும், அம்-கங்காசலத்தையும், அரா-சர்ப்பத்தையும், துள்-துள்ளலை, தர-கொடுக்கும்படி, சூடி - தரித்த பரமசிவனது, மைந்த-புதல்வனே! திளைத்து-மூழ்கி, இளைத்தேன் - மெலிந்து வருந்தினேன், சே-என்னைக் காத்தருள்வாய், தமரா-சுறறத்தா ராக, துடர்-பற்றிய, இல்-மனைவாழ்க்கையும், நாரி-பெண்ணாசை

யும், என்னும்-என்று சொல்லப்பட்ட, இச்சேறு-இந்தச் சேற்றில், புகரு-பிரவேசித்து. (எ-று.) நீ-தோன்றா எழுவாய். சே-பயனிலை. ஏ-அசை.

(க-து.) கடப்பமாலையைப் புனையுஞ் சேந்தனே! சமுத்திரத்தின்கண் மாமரமாய் நின்ற சூரனோடு அசுரர் கிளையை யழித்த வேலாயுதனே! சந்திரனையும், கங்கையையும், சர்ப்பாபரணத்தையும் தரித்த பரமசிவனது மைந்தனே! என்னைச் சூழ்கின்ற சுற்றத்தார், மனைவி, மனை என்னும் [1] சேற்றில் மூழ்கி வருந்துகின்றேன்; இனியாகிலும் என்னைக் காப்பாற்றவேண்டும்.

(கு-உ.) "[1] பிரபஞ்ச மென்னுஞ் சேற்றை"—கந்-அலங். 1.

சேறலைத் தாறலைக் கப்பா லெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்
சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே. **(86)**

(ப-ரை.) சேறு-சேற்றை, அலைத்து-உழக்கி, ஆறு-ஆற்றினின்றும், அலைக்கு அப்பாலெழுந்து-அலைகளுக்குமேல் எழும்பி, செழும்-செழுமைதங்கிய, கமுகில் - கமுகமரத்தில், சேல் - சேற்கெண்டையானது, தலை-அக் கமுகின்றலையி லிருக்கின்ற, தாறு-குலைகளை, அலைக்கும்-அலைக்காநின்ற வளப்பத்தையுடைய, செந்திலாய்-திருச்செந்திநாயகனே! சிந்தை-என் மனதானது, தீ நெறியில்-கொடிய மார்க்கத்தில், சேறலை-செல்லுதலையும், தாறு-அளவுபடாத, அலை-அஞ்ஞானவிருளை யடைதலையும், தீர்க்கும்-நீக்கியருளுகின்ற, குமார - குமாரகடவுளே! திரிய - மாறுபடும்படி, வினை-இருவினையாகிய, சேறு-சேற்றின்கண், அலைத்து-துன்பப்படுத்தி, ஆறலைக்கத்தகுமோ-வழிப்பறிப்போர்போல் என்னுயிரைக் கவரத்தகுமோ, மெய்த்திறம் - உனதருளின் உண்மைத்திறத்தை, கண்டும்-கண்டு அதுவே பற்றியிருக்க எண்ணுகிற வென்னை. நீ-தோன்றா எழுவாய். ஆறலைக்கத் தகுமோ-பயனிலை.

(க-து.) சேற்றையுழக்கி யாற்றினின்று மலைகளுக்குமேல் எழும்பிக் கமுகின் குலையை யலைக்குஞ் செந்திற்பதியோனே! அடியார்களது அஞ்ஞான இருளை நீக்கி யவரை நன்னெறியிற் செலுத்துங் குமாரக்கடவுளே! உன்னருளின் திறத்தைக் கண்டறிந்த என்னை யிருவினைச் சேற்றி னுட்படுத்தலாகுமோ? [தவிர்த்தாள வேண்டுமென்றல் குறிப்பு.]

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் செந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்செந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே. (87)

(ப-ரை.) திறம்-நமது வெற்றியை, பாடுவர்-துதிக்கின்றார், தண்-தண்ணிய, புன-புனத்தில் வாழும், தெய்வமே-தேவதையே, என்பர்-என்றழைக்கின்றார், (அவரியாரெனில), சேதத்து-கேட்டையுடைய, மாந்திறம்-வலிபொருந்திய மாமரமாய்நின்ற சூரன்றன் கிளேயோடு, பாடு-அழிந்தான், உவர்-உவர்ப்பையுடைய, முது-பழமையாகிய, நீர்-கடலின்கண்ணே, என-என்று (தேவர்கள் சொல்லும்படி), காய்பவர்-கோபித்தவராகும், செம்-சிவந்த, தினைமேல் - தினைப்புனத்தின்கண், திறம்பாள் - நீங்காதிருக்கின்றவளாகிய வள்ளிநாயகியே யுனது, துவர்-பவளம்போன்ற, இதழ் கண்டு-அதரத்தைப் பார்த்துக் கொண்டே, உருகா நிற்பர்-மனமுருகி நிற்கின்றார், செப்புற-ஏதோவொரு வார்த்தை சொல்லுதற்காகவே, செந்தில்-செந்திற்பதியென்னும், தம்பாடு-தம்மிடத்தில், வரில்-வருவாரானல், இவர்-இப்பேர்ப்பட்டவர், வல்லவர்-சாமர்த்தியரே, நம்-நமது, செயல்-உபசாரச் செய்கையை, கொள்ள-பெற்றுக் கொள்வதற்கு. (எ-று.) இவர்-எழுவாய. வல்லவர் - பயனிலே. ஏ-அசை.

(க-து.) நாயகியே, சமுத்திரத்தின்கண் சூரன் கிளேயோடு அழிந்தானென்று தேவர்கள் சொல்லும்படி வதைத்தவர் வந்துஏதோ ஒரு வார்த்தை சொல்லும்பொருட் டிங்கே நமது வெற்றியைப் புகழுகின்றார்; புனத்தெய்வமே யென் றழைக்கின்றார்; தினைப் புனத்திலிருக்கும் உனது பவள நிறம்போன்ற இதழைப்பார்த்து மனதுருகி நிற்கின்றார், இவர் தமது செந்திற்பதியில் வருவாரானல் நாம் செய்யும் உபசாரத்தைப்பெற வல்லவர்தாம்.

செயலங்கை வாளை யிறைகோயி லேச்சிவ ஞானமுதைச்
செயலங்கைவாளை முனிகொண்டல்வாளியைத் தேவர்பிரான்
செயலங்கை வாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
செயலங்கை வாளை யுகள்செந்தில் வாழ்பவள் சேல்விழியே.

(ப-ரை.) செயல் - சேற்றிலுண்டாகின்ற, அம் - அழகிய, கை-ஒப்பற்ற, வாள்-ஒளிபொருந்திய,ஐ-சிரேஷ்டமான,இறை-பிரம்

மாவின், கோயிலே - ஆலயமாகிய தாமரையையும், சிவனார் - பரம சிவனுண்ட, அமுதை - விஷத்தையும், செய - வெற்றிபொருந்திய, லங்கை - இலங்காபுரியினது, வாகை - பிரகாசத்தினழகை, முனி - கோபித்த, கொண்டல் - மேகநிறத்தையுடைய ஸ்ரீராமரது, வாளியை - பாணத்தையும, தேவர் பிரான் - தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனது, செயல் - போர்புரிகின்ற, அங்கை - அங்கையிற் பற்றிய, வாளை - வாளாயுதத்தையும், முனை - கூர்மைபொருந்திய, வேலை - வேலாயுதத்தையும், அன்ன - ஒத்துவிளங்காநின்றன, இச்சேய் உறையும் - இக்குமாரக்கடவுளமர்ந்தருளிய, செய்-வயலையுழுகின்ற, அலம்-கலப்பையை, கை-கோபிதுமோதி, வாளை - வாளைமீனகள், உகள்-புரளுகின்ற (வளப்பத்தையுடைய), செந்தில்-திருச்செந்திற்பதியில், வாழ்பவள் - வாழும்பெண்ணினது, சேல் - சேற்கெண்டைபோன்ற, விழி - கண்களிரண்டும். (எ - று.) விழி - எழுவாய். அன்ன - பயனிலை. ஏ - அசை.

(க - து.) குமாரக்கடவுளமர்ந்தருளிய திருச்செந்திற்பதியில் வாழும் பெண்ணினது கண்கள் பிரம்மாவுக்கு உறைவிடமாகிய தாமரையையும், பரமசிவனுண்ட நஞ்சையும், இலங்கையை யழித்த ஸ்ரீராமரது பாணத்தையும், இந்திரன் கைவாளையும் ஒத்து விளங்குகின்றன.

(கு-உ) இது "கண்ணயந் துரைத்தல்" என்னுந் துறை; ௬௬ - ஆம் செய்யுளையுங் காண்க.

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனேற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே. (89)

(ப-ரை.) சேலை - அசோகமரத்தை, இலார் - இல்லிடமாகவுடைய அமணர்கள், உந்து - உயர்ந்த, அ-அந்த, வன்-வலிய, சூலம்-கழுவில், ஏற-ஏறி யழியும்படிக்கு, சினத்தவன் - சம்பந்தப்பிள்ளையாய்த் தேவாரம்பாடிச் செயித்தவன், கண் - விழியானது, சேல் - சேற்கெண்டைக்கும், ஐயில் - வேலுக்கும், ஆர்-ஒப்பாகிய, உந்தி - கான்யாற்றையுடைய, வனேற்பவை - வனத்திலுற்பவித்த வள்ளிநாயகிக்கு, அரசு - தலைவனை குமாரக்கடவுள், இந்திரியச்சேலைபஞ்சேந்திரியச் செய்கைகளை, இலார் - நீக்கிய தபோதனர்கட்கும், உம்பர் - தேவர்கட்கும், ஆப-துன்பத்தை விளைத்த, ரிபு - சத்துரு

வாகிய சூரனை, குற - குற்றும்படி, சிக்கெனும் - இறுக்கிக்கட்டிய, இச்சேலையில் - பீதாம்பரககச்சையில், ஆரும் - மாதர்களெல்லாம், திறையிட்டனர் - கப்பமாகச் சமாப்பிததார்கள், தங்கள் - தங்கடங்கள், சித்தங்கள் - இருதயங்களை. (எ - ற). ஆரும் - எழுவாய. திறையிட்டனர் - பயனிலை. ஏ - அசை.

(க-து.) சம்பந்தப்பிள்ளையா யவதரித்துச் சமணர்களைக் கழுவேறும்படிச் செய்தவனும், வள்ளிநாயகிக்குத் தலைவனுமாகிய குமாரக்கடவுள் தேவர் முதலியோரை வருத்திய சூரனை வெல்லும் படி யழகிய அரையிற கட்டிய பீதாம்பரக கச்சையினிடத்தில் மாதர்களெல்லாருந் தங்கடங்க ளிருதயங்களைக் கப்பமாகச் சமர்ப்பிததார்கள்.

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்திரி கின்றதென்னர்ச்
சித்தத் தரங்கத்தர் சநததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே. (90)

(ப-ரை.) சித்த - இருதயமானது, தரங்கத்தர் - நிலைப்படாமல் அலைபோற் புரளுந்தன்மையையுடையவர், சித்தி - மோக்ஷத்தை, எய்த - அடையும்படி, திரிகின்றது - அலைந்து திரிகின்றது, என் - என்ன காரணம், அர்ச்சித்து - பூசைசெய்தே, அத்தர் - சுவாமியாகிய, அங்கத்தர் - எலும்பை மாலையாகவணிந்த பரமசிவனது, சந்ததியே - மைந்தனே! செந்திலாய் - திருசெந்திற்பதியோனே! சலராசி - சமுத்திரத்தின்கண், தத்தரம் - தங்கடங்கள் வலிமையை, கத்து - ஆர்ப்பரித்துச் சொல்லிய, அரக்கரை - அசுரரை, செற்ற - செயித்த, கந்தா - முருகனே! திங்கள் - சந்திரன், இஞ்சி - மதிலின்கண், தத்து - தவழுகின்ற, அரங்கத்தர் - திருவரங்கநாதருடைய, சேய் - பிள்ளையாகிய (பிரம்மாவின்), ஆரண - வேதம்பூசிக்கின்ற, தநதி - பாம்புபோன்ற, கிரி - திருச்செங்கோட்டு மலையில வாழும், ஐ - சுவாமியே! (எ-று). திரிகின்றது - எழுவாய். என் - பயனிலை. ஏ - ஆசை.

(க-து) திருச்செந்திற்பதிக் கதிபனே! சமுத்திரத்தின்கண் அரக்கரை மாய்த்தோனே! கநதனே! வேதம் பூசித்த திருச்செங்கோட்டுமலையில் வாழ்கின்றவனே! பரமசிவனது மைந்தனே! சித்த நிலையற்றவர்கள் வெளிப்பூசைசெய்து மோக்ஷத்தை யடையும்படி அலைந்து திரிகின்ற தென்னகாரணம்?

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே. (91)

(ப-ரை) திகிரி - சக்ராயுதத்தை, வலம் - வலது கரத்தில், புரி - தரித்த, மாற்கு - விஷ்ணுவுக்கு, அரியார்க்கு - அறிதற்கரிதான பரமசிவனுக்கு, உபதேசம் சொன்ன - ஓங்காரப்பொருளையுபதேசித்தருளிய, திகிரி - சுவாமிமலையென்னும் திருவேரகத்தையும், வலம்புரி - சங்கினங்கள், செய் - வயல்களின்கண், ஆர் - நிறைந்திருக்கின்ற, இலஞ்சி - திருவிலஞ்சிப்பதியையும், செந்தூர் - திருச்செந்தூரையும், கன - மேகங்கள் தவழாநின்ற, தந்தி - பாம்பு போன்ற, கிரி - திருச்செங்கோட்டுமலையையும், வலம் - திருவலத்தையும், புரி வேறும் - மற்றைஸ்தலங்களையும், படைத்தருள் - தனக்குறைவிடமாகக் கொண்டருளிய, சேய் - குமாரக்கடவுளது, தணியில் - திருத்தணிகையில், திகிரி - மூங்கிலானது, வலம்புரி - நந்தியாவர்த்தத்தை, சூடியவா - சூடிய விதத்தின்குறி, நன்று - நன்றாக இருக்கின்றது, சேடி - தோழியே, இன்று - இன்றையதினம். (எ-று). சூடியவா - எழுவாய்; நன்று - பயனிலை - ஏ - அசை.

(க-து.) தோழியே! பரமசிவனுக்கு உபதேசித்த சுவாமிமலை, திருவிலஞ்சி, திருச்செந்தூர், திருச்செங்கோட்டுமலை, திருவலம் இவை முதலாய பல வேறு ஸ்தலங்களிலும் உறைந்தருளிய குமாரக் கடவுளது திருத்தணிகைமலையில் மூங்கிலின் மேல் நந்தியாவர்த்தத்தைச் சூடியிருக்குங் குறி நன்றாயிருக்கின்றது.

சேடி வணங்கு வளைத்தோ ளெனப்புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கொடியிடை யாரையென் செப்புமுலை
சேடி வணங்கு தலைக்களி றீந்தது செல்லலில்லை. (92)

(ப-ரை.) சேடு - அழகியதாகும், இ - இந்த, அணங்கு - மங்கையினது, வளை - வளையலையணிந்த, தோள் என - தோளென்று மிகவு மகிழ்ந்து, புணர் - முன் வேண்டினகாலத்து என்னை மணம் புணர்ந்த, சேய - முருகனே! வட சேடி - வடக்கின்கண்ணதாகிய விஞ்சையருலகம், வணங்கு - வழிபடத்தக்க, திருத்தணி - திருத்தணிகைக்கு, காவல - தலைவனே! நின் - நினது, செருக்கால் - செருக்கி

ஞல், சேடி-கர்வித்திருக்கின்ற, வணங்கு - துவளாநின்ற, கொடி-கொடிபோன்ற, இடையாரை - இடையையுடைய பரத்தையரை, என் செப்பு-நிந்தித்துப் பேசவேண்டிய காரணமென்ன இருக்கின்றது, முலைச்சேடு - எனது கொங்கையின் திரட்சியை, இவணம் - இப்படி திரட்சியின்மையாகும்படி, குதலை - மழலைச் சொல்லையுடைய, களிறு-என்பாலன், ஈந்தது-தந்துவிட்டது, (ஆதலால்), செல்ல-என்னிடத்து வாராமற் செல்லும்படி, நில்-தூரமாக நில்லு. (எ-று.) நீ-தோன்றா எழுவாய்; நில்-பயனிலை. ஏ-அசை.

(க-து) தனிகைமலையில் வாழ்வோனே! பண்டென்னை மிகவும் அழகுடையவளென்று மணம்புணர்ந்த சேயோனே! நீ இப்பொழுது கலந்த களிப்பான் மிகுதியடைந்த பரத்தையரை யான் நிந்தித்துப் பேசவேண்டிய காரணமென்ன இருக்கின்றது? எனது யௌவன பருவத்தை யிம்மழலைச் சொல்லையுடைய பாலகன் வேறு படுத்தினனாதலால் அப்பரத்தையர்பாற் றனே செல், என்பால் வரவேண்டிய தில்லை.

செல்லலை யமபொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடிரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே. (93)

(ப-ரை.) செல் - மேகத்தை, அலை - அசைக்கின்ற, அம் - அழகிய, பொழில் சூழ்-சோலை சூழ்ந்த, செந்திலான்-திருச்செந்திற் பதியையுடையவன், அறியான் - அறிகின்றானில்லை; இறை-பரமசிவனது, கை - கரத்தில், செல்லல்-போகாதே, ஐயம்-பிச்சைக்கு, பொழில் எங்கணும்-உலகமெங்கும், ஏற்ப-இரக்கும்படியாய், என-என்று, தெறித்த - தமது இரத்தத்தைப் பிரமகபாலத்திற் றெறித்தவரும், செல்லல்-துன்பத்தையும், ஐயம்-பயத்தையும், பொழில் - பெருமையுடைய, லங்கைக்கு - இலங்காபுரிக்கு, அருள் - உண்டாக்கினவருமாகிய, திருமால்-ஸ்ரீராமரது, நிறம்போல்-நீலநிறத்தைப்போல, செல்-நடக்கின்ற, அல்-இராக்காலத்தில், ஐ யம்பு-மன்மதனது பஞ்சபாணமானவை, ஒழி - அழியும்படி, லாகவம்-மிகவு நொய்யதான, மாது உயிர்-மங்கையினுயிரை, சேதிப்பது-வதைக்கின்றதை. (எ-று.) செந்திலான் - எழுவாய்; அறியான்-பயனிலை. ஏ-அசை.

(க-து.) பரமசிவனது கையிலிருக்கின்ற பிரமகபாலத்தில் தமதிரத்தத்தைப்பலியாக வார்த்தவரும், இலங்காபுரியைச் செயித்தவருமான விஷ்ணுவின் நிறம்போ லிருண்ட இராக்காலத்திற் காமபாணங்கள் இம்மங்கையி னுயிரைப் பிளக்கின்றதைச் செந்திநாயகன் அறியானோ?

சேதிக் கணைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரங்கஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கொடெற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமா மறலி திறலினையே. **(94)**

(ப-ரை.) சேது - சிவந்த, இக்கனை - கருப்புவில்லையுடைய மன்மதனை, துகளதாக்கும் - சாம்பலாகும்படி யெரித்த, நோக்கினன் - நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனது, செல்வ-மைந்தனே! செந்திற்சே - திருச்செந்தூர் முருகனே! திககனைத்தும் - திசைகள் எல்லாம், நிலைபெற - நிலைபெற்றிருக்கும்படியாயும், சூர் - சூரனுடைய, அங்கம் - உடலை, சீரங்கம் - திருவரங்கததில் வாசஞ்செய்கின்ற, மால் - விஷ்ணுவினது, சே-பிள்ளையாகிய பிரம்மா, திக்க-திகைக்கும்படி, நைத்து-அழித்து, உவரி - சமுத்திரத்தில், தோய்-மூழ்கிய, அயில்கொடு - வேலாயுதத்தைக் கொண்டு, எற்சேர்க்க வநதால்-என்னை யமபடர்கள் கட்டிக்கொண்டுபோக வந்தால்,சேதி-கண்டிப்பாயாக, கனைத்து வரும் - கனைததுக்கொண்டு வாராநின்ற, மா மறலி - பெரிய யமனது, திறலினை-உக்ரவல்லமையை. (எ-று.) நீ-தோன்று எழுவாய்; சேதி-பயனிலை. ஏ-அசை

(க-து.) கருப்புவில்லையுடைய மன்மதனை யெரித்த நெற்றிக் கண்ணையுடைய பரமசிவனது மைநதனே! திருச்செந்திற்பதியில் வாழ்கின்ற சுவாமியே! என்னைக் கட்டிக்கொண்டு போகவரும் யமனது வலியைப் பிரமன் றிகைக்கவும், திக்குககளெல்லாம் நிலைபெறவும், சூரனை வென்று சமுத்திரத்திற் றோய்ந்த வேலாயுதத்தினாலே நீ சேதிககவேண்டும்.

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முநியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே. **(95)**

(ப-ரை) திறவு - திறவுகோல், ஆ - ஆனவனே! அனக - பாவமற்ற, புரி - கயிலாயததினது, வாசல்-கதவை, நீக்க - திறக்க, சிகரி - கிரவுஞ்சகிரியினது, நெஞ்சம் - மார்பை, திறவு - பிளந்து, ஆ-ஆச்சரியமாக, வனச-தாமரையில் வாசஞ்செய்கின்ற, முநியை-பிரமனையும், வென்றேய - வெயித்தவனே! தென்றிசை-தெற்கின் கண்ணதாகிய, திருச்செந்தில்-திருச்செந்தூரில், தவா-நீங்காதமர்ந் தருளுகின்ற, வனா-அழகிய, மயிலோய்-மயில்வாகனத்தையுடைய வனே! அந்த காலம் - எனனுடல்கெடு மனித்திய காலத்தில், என் சிந்தை - எனது சிந்தனையை, வைக்க - ஒருவழிப்படுத்திச் சேர்ப்ப தற்கு, திறவாவன-அடைக்கலஸதானமெவையெனில், நின்-நினது, திருவான - சிறப்பையுடையனவாகிய, தண்டை - தண்டையைய யணிந்த, திருவடி - திருவடியே. (எ-று.) திருவடி - எழுவாய்; திறவாவன - பயனிலை. ஏ-அசை,

(க-து.) கயிலாயத்தின் கதவு திறக்கும்படிச் செய்கின்றவனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்து பிரம்மாவையும் வென்றோனே! தெற்கின் கண்ணதாகிய திருச்செந்தூரில் வாழும் மயில்வாகனனே! என் னனித்தியகாலத்தில் உனது தண்டையணிந்த தாளே என் சிந்தையை வைக்கு மடைககல ஸ்தானமாம்.

(கு-உ.) "வனசமுநியைச் சிறிது கோபித்த காவலனும்" திருவகுப்பு - 12.

திருக்கையம் போதிக ளோகஞ்ச மோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவபத்
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே. (96)

(ப-ரை.) திருக்கை - திருக்கையென்னும் மீனையுடைய, அம் போதிகளோ-சமுத்திரங்களோ, கஞ்சமோ-தாமரையோ, நஞ்சமோ-விஷமோ, திருமால்-விஷ்ணுவினது, திருக்கை-திருக்கரத்திலிருக் கின்ற, அம்போ - பாணமோ, செய்ய-சிவந்த, வேலோ-வேலா யுதமோ, விலோசனம் - கண், தென்னன் - கூன்பாண்டியினது, அங்கத்திருக்கை - முதுகின் கூனை, அம்போருகம் - தாமரைமலர் போன்ற, கைந்நீற்றின் - கரத்திற் றரித்த திருநீற்றினால், மாற்றி - நீக்கி, தென்னூல் - தமிழ்நூலாகிய, சிவபத்தி-சிவபத்தியை விளை விக்கும், ருக்கு-ருக்குவேதசாரமாகிய (தேவாரத்தை), ஐயம் போக-

பரசமயநூல்களினு லுண்டாகுஞ் சந்தேக நிவர்த்தியாக, உரைத்தோன் - சம்பந்தப்பிள்ளையா யவதரித்துத் திருவாய்மலர்ந்தருளிய குமாரக்கடவுளது, சிலம்பில் - மலையின்கண் ணிருக்கின்ற, சிறுமிதற்கு - சிறியாளாகிய கன்னிக்கு. (எ-ற.) விலோசனம்-எழுவாய்; சமுத்திர முதலிய பயனிலை. ஏ-அசை.

(க-து) முன் சம்பந்தமூர்த்தியா யவதரித்துத் திருநீற்றாற் சமணமதம் பூண்டிருந்த பாண்டியனது கூனை மாற்றியும், எச்சமயம் பெரிதோவென்னும் ஐயமற்றுச் சைவமே பெரிதென்று நம்பும்படித் தமிழ்வேதமாகிய தேவாரத்தை மொழிந்தருளிய குமாரக்கடவுளது மலையின்கண் வாழும் கன்னியினது கண் சமுத்திரமோ, தாமரையோ, விடமோ, அம்போ, வேலோ?

(கு-உ.) "தென்னவ னங்கனன் னீற்றாற் றிருத்திய". [56] - இது "கண்ணயந் துரைத்தல்" என்னுந் துறை.

- திருக்கோவையார் - ௧௦௬

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்வீர் செந்தினைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே. **(97)**

(ப-ரை. சிற - சிறிதான, உமிகரும் - குற்றுமியையாயினும், பகிர மர நிகர்வீர் - பிறர்க்கிட்டுண்ண மனங்கூடாமல் மரம்போன் றிருப்பவரே! சிதை - அழிந்துபோவதும், உயிர் - பிராணனுக்கு, துச்சில் - ஒதுக்கிடமுமாகிய இவ்வுடலின்கண், துமி - ஒரு தும்ம லுண்டாகும் அக்காலையினும், குமர - குமரனே! சரணம் - உனக் கடைக்கலம், என்னீர் - என்று சொல்லுங்கள், உய்வீர் - பிழைப்பீர்கள், செம் - சிவந்த, தினைமேல் - தினைப்புனத்தில் வாசஞ்செய்த, சிறுமிக்கு - வள்ளிநாயகிக்கு, மரபு - தமது மரபின் வழிகளை, உரைத்து - எடுத்துரைத்து, நின்றோன - குறையிரந்து நின்றவனும், சிலை - வில்லையுடைய, வேட்டுவன - வேடத்திருமேனியை யுடைய கண்ணப்பநாயனார், எச்சில் - ஊனின் முதலியவற்றை முன் ருசிபார்த்து நிவேதித்த எச்சிலை, து - உவப்புடனே யுண்டவ ராகிய, மிக்கும்-மேன்மையாக, அரவு - சர்ப்பாபரணத்தை, அணி - தரித்த, முடியான் - முடியையுடைய பரமசிவனது, மகன் - மைந்தனுமாகிய குமாரக்கடவுளினது, சீறடிக்கு - சிறிய திருவடி

லையக் கருதிக்கொண்டே. (எ - று). நீர் - தோன்றா எழுவாய்; உய்விர் - பயனிலை. ஏ - அசை.

(க-து.) சிற்றுமியும் ஈயாமல் மரம்போ னிருப்பவர்களே! நீங்கள் பிழைப்பதெப்படி? நீர் தும்முங்காலையிலாவது தினைப்புனத்தின்கண் வள்ளியம்மையினிடத்துத் தமது மரபையோதி நின்றவனும், கண்ணப்பநாயனார் நிவேதித்த எச்சிலை யினிதாகக்கொண்ட பரமசிவன் மைந்தனுமாகிய கந்தஸ்வாமியின் றிருவடியைக் கருதிக் குமரனே சரணமென்பீரானாற் பிழைப்பீர்கள்.

சீரங்க ராக மறமோது திகிரி செங்கைகொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்தினைமேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ்நூற்
சீரங்க ராக விநோதவென் பார்க்கில்லை தீவினையே. (98)

(ப-ரை.) சீரம் - கலப்பையையும், கரா - முதலையினது, கம்தலையை, அற - அறும்படி, மோது - அமர்செய்த, திகிரி - சக்கிரத்தையும், செம் - சிவந்த, கை - கரத்தில், கொண்ட - தரித்திருக்கும், சீரங்கர் - திருவரங்கத்தையுடைய திருமாலும், ஆகமர் - ஆகமவேதத்தையருளிய பரமசிவனும், உகந்த - விரும்பத்தக்க, தேசிக - அழகனே! செம் - சிவந்த, தினைமேல் - தினைப்புனத்தில் வாழும், சீர் - சிறந்த வள்ளிநாயகியினது, அங்கராக - சாந்தணிந்த, தனகிரி - தனமாகிய மலையை, தோய் - தழுவிய, கந்த - குமாரக் கடவுளே! செந்தமிழ் நூல்-செவ்விய தமிழ்ப் பநுவலின், சீரங்க-சீர் முதலிய எட்டுறுப்புக்குரிய பாவலனே! ராக விநோத - கீதத்திலுல்லாசனே! என்பார்க்கு - என்று நாடோறுந் துதிக்கின்றவர்கட்கு, தீவினை இல்லை - கொடியவினை சேராது. (எ-று). தீவினை-எழுவாய்; இல்லை - பயனிலை. ஏ - அசை.

(க-து.) கலப்பையாயுதத்தையும் சக்கராயுதத்தையு முடைய திருமான் மருகோனே! சுந்தரனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகியைத் தழுவுங் கந்தனே! இயலிசை முதலிய தமிழ் நூற்குரிய விநோதனே! என்று துதிப்பவர்கட்குத் தீவினையில்லை.

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வநந்தா தெடுத்தனஞ் செந்தினைமேல்
தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கனகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெருஞ் செல்வனுக்கே. (99)

(ப-ரை.) தீ - அக்கினியானவன், வினையற்ற - தீக்ஷண்ணியமாகத் தகிக்கின்ற தன்செய்கையற்றதுபோல், சினந்தீர் - கோபநீங்கிய, அகத்துள் - நமது சாந்த இருதயத்துள், மெய் - உண்மையாகிய, தீபம் - ஞானவிளக்கை, நந்தம் தீவினை - நம்முடைய தீவினையாகிய, அல் - இருளானது, தவ - கெடும்படி, நந்தாது - அவிந்துபோகாமல், எடுத்தனம் - ஏற்றிவைத்தோம், செம் - சிவந்த, தினைமேல் - தினைப் பயிர் விளைவில், தீ - தீய்ந்துபோகும், வினையற்ற - செய்கையில்லாத, புன - புனத்தில் வாழும், மான் - மான்போன்ற கண்ணையுடைய வள்ளியம்மைக்கு, கொழுநன் - நாயகனாகிய, செழும் - செழுமை தங்கிய, கனகத்தீவினை - பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற மோக்ஷவுலகத்தை, அற்ற - பாச பந்தங்கள் நீங்கிய, அடியார்க்கு - தமதடியார்கட்கு, அருள் - கொடுத்தருள்கின்ற, பெரும் - பெரிய, செல்வனுக்கு, அருணிறைந்த செல்வனுக்கு (எ-று.) யாம் - தோன்றா எழுவாய்; எடுத்தனம் - பயனிலை. ஏ - அசை.

(க-து.) வளப்பமிகுந்த தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளியம்மைக்கு நாயகனும், பற்றற்ற அடியார்கட்கு மோக்ஷவுலகத்தை யளிப்பவனுமாகிய குமாரக் கடவுளுக்கு நமது சாந்த இருதயத் தகழியில் உண்மையாகிய ஞானவிளக்கை ஏற்றிவைத்தோம்.

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்தசெல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே. (100)

(ப-ரை.) செல் - அங்குசென்று, வந்தி - வணக்கஞ்செய், கழுமலம் - குமாரக்கடவுளானவர் முன் சம்பந்தப்பிள்ளையா யவதரித்தருளிய சீகாழிப்பதியின்கண், நெஞ்சமே - இருதயமே, அவன் - அவரது, தெய்வ - தெய்விகமாகிய, மின் - தெய்வயானை, ஊர் - ஏறி வருகின்ற, செல் - மேகவாகனமானது, வந்து - வந்து, இகழும் - (பிறரால்) இகழப்படும், நமது - நம்முடைய, இன்மை - இல்லாமை யாவும், தீர்க்கும் - நீக்கிவிடுமே, வெம் - கொடிய, கூற்றுவற்கு - யமனுக்கு, செல் - நம் மேல் நடப்பதாகிய, வந்தி - கொடுமையை, கழும் - துடைத்துவிடும், திருக்கையில் (முருகக்கடவுளது) திருக்கரத்தின், வேல் - வேலாயுதமானது, தினை காத்த - தினைப்புனங் காவல் பூண்ட, செல்வி - வள்ளிநாயகியினது, செல்வம் - பெருஞ்சிறப்பாக,

திகழும் - (நிறைந்து) பிரகாசிக்கின்ற, மணவாளன்-நாயகனாகிய கந்தசுவாமியானவர், நல்கும் திருவடி-தனது திருவடித்தாமரையை நமக்குத் தந்தருள்வார். (எ-று.) நீ-தோன்றா எழுவாய்; வந்தி - பயனிலை. ஏ-அசை.

(கூ-து.) நெஞ்சமே! தெய்வயானையினது வாகனமாகிய மேகம் நமது வறுமையைத் தவிர்க்கும், குமாரக்கடவுளது வேலாயுதம்[1] நமக்கு வரும் யமதண்டனையை நீக்கிவிடும், வள்ளிநாயகிக்கு மணவாளராகிய கந்தஸ்வாமி தமது திருவடித்தாமரையைத் தந்தருளுவார்; ஆதலால், நீ அக்கடவுள் முன் சம்பந்தப்பிள்ளையா யவதரித்த சீகாழியிற் சென்று அவரை வணங்கு.

(கு-உ.) [1] "தருக்கி நமன் முருக்கவரின் எருக்குமதி தரித்த முடி படைத்த விறல் படைத்த இறை கழற்கு நிகராகும்" —வேல்வகுப்பு.

கந்தரந்தாதி மூலமும் உரையும்

முற்றிற்று.

பாட்டு முதற்குறிப் பகராதி

கந்த ரந்தாதி

	பாட்டின் எண்		பாட்டின் எண்
உண்ணுமுலை	காப்பு-௨	செம்மலைவண்டு	76
சிகண்டிதத்த	67	செயதுங்க	20
சிகாவல	81	செயலங்கை	88
சிகைத்தோகை	51	செய்தவசீ	75
சிக்குற	28	செய்யசெந்	43
சித்தத்தரங்க	90	செருக்கும்பராக	46
சித்திக்க	32	செல்லலை	93
சித்திரமிக்	50	செல்வந்திகழு	100
சிந்தாகுல	21	செவிக்குன்ற	26
சிந்துரவித்தக	70	செவ்வந்தி	6
சிலைமத	9	செற்றைவரும்	22
சிவசிவசங்கர	84	சென்னிய	3
சிறமிக்கு	97	சேகரவாரண	68
சிறைவர	12	சேடிவணங்கு	92
சிற்றம்பலத்	38	சேதகமொன்று	49
சீகரசிந்து	66	சேதனந்தந்து	33
சீதனங்கோடு	8	சேதாம்பல	44
சீயனம்போதி	19	சேதிக்கனை	94
சீரங்கராக	98	சேந்தமரா	85
சீராமராம	80	சேமரவிக்கம்	40
சீர்க்கை	37	சேயவன்	48
சீலங்கன	58	சேரப்பொருப்	74
சீவனசத்து	69	சேரிக்குவடு	17
சுகம்புரவார்	24	சேர்பபதுயால	59
செச்சைய	36	சேலையிலாருந்	89
செந்திலகத்	14	சேவகமன்ன	64
செப்பத்தமதிலை	60	சேவற்கொடி	16
செப்பாரமுதலை	79	சேறலைத்தா	86
செப்புங்கவச	2	தீகழுமலங்கற்	29

	பாட்டின் எண்		பாட்டின் எண்
திகிரிவலம்புரி	91	தினகாரக்க	23
திகைப்படங்க	65	தினைவேத்தி	18
திக்கத்தி	11	தீட்டப்படா	72
திக்காச	61	தீதாவசவ	31
திங்களுமாசுண	71	தீதோமரணந்	55
திசாமுக	73	தீத்தன்பரவை	57
திடம்படு	47	தீராகமல	83
திதத்தத்தத்	54	தீவாகந்தரி	39
தித்தலித்தார	5	தீவிலங்கங்கை	53
தித்திக்குந்	52	தீவினையற்ற	99
திமிரத்திமிர	7	தீனநதினத்து	42
தியங்கா	63	தெண்டன்	41
திராளக்க	10	தெய்வமணம்	30
திரிகையிலாய்	34	தெளிதரு	25
திரிபுரத்தப்பு	78	தென்றலையம்பு	82
திருக்கை	96	தென்னவனங்	56
திருத்துள	35	தேசம்புகல	45
திருவாவி	1	தேங்காவன	13
திலமுந்தயில	62	தேடிக்கொடும்	27
திவாகா	15	தேமொழி	4
திறம்பாடுவர்	87	தேரைவிடப்	77
திறவாவணக	95	வாரணத்தானை	காப்பு-க

கந்தரந்தாதி ஆராய்ச்சி.

தமிழ்க் கடவுளாம் முருக பிரானுக்குத் தொழும்பு பூண்ட அடியார் பலரும் பாராயணமாகப் படித்துவரும் நூல்களுள் திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு என்னும் ஐந்து நூல்களும் பஞ்சரத்தினம் போல்வன. ஆறுமுகப் பெருமானுக்கு உகந்த ஆறு நூல்களுள் ஒன்றாகிய இக் கந்தரந்தாதி மகா விசேடமுடையதாயிருந்தும் ஏனைய ஐந்து நூல்கள் போலப் பாராயணங்களில் வெளிவாராது மறைந்து கிடக்கின்றது. இந்நூலில் அநேக அரிய விஷயங்கள் உள்ளன. "கந்தரந்தாதியைப் பாராதே, கழுக்குன்றத்து மாலையை

நினையாதே" என உலகவழக்கும் ஒன்றுளது. இதிலுள்ள காப்புச் செய்யுள்களால் இது திருவண்ணாமலையிற் பாடப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது.

நூலின் வரலாற்றைச் சுவாமிகளது சரித்திர ஆராய்ச்சியிற் காண்க. நூலிலுள்ள நூறு செய்யுள்களின் முதலெழுத்துக்கள் சி, சீ, செ, சே, தி, தீ, தெ, தே என்னும் எட்டெழுத்துக்களுள் அடங்குதல் கவனிக்கத்தக்கது.

விஷய ஆராச்சி

பாடலின் எண்

(1) நூலிற் சொல்லப் பட்டுள்ள தலங்கள்:-
ஆறுபடைவீடு i
திருப்பரங்குன்றம் 1, 56
திருச்செந்தூர் 1, 5, 13, 14, 23, 24, 33-35, 38, 42, 48, 58, 61, 62, 65, 70, 71, 86-88, 90, 91, 93-95.
திருவாவினன்குடி [பழநி] 1, 22, 64,
திருவேரகம் 1, 3, 91
,, சோழன் கட்டினதென்பது 3
உபதேசஸ்தானமென்பது 91
குன்றுதோறாடல் 1
திருத்தணிகை 9, 29, 56, 59, 91, 92.
திருச்செங்கோடு (வேதகிரி - 23, 26, 41, சர்ப்பகிரி) 42, 56, 67, 68, 78, 82, 90, 91.
கொல்லிமலை 74
வெள்ளிமலை 74
பழமுதிர்சோலை 1, 73
அமராவதி 29, 57

பாடலின் எண்

இலஞ்சி 81, 91
கயிலை 95
சீகாழி 29, 100
திருவண்ணாமலை (தேயுஸ்தலம்) காப்பு - உ.
திருவரங்கம் 90, 94, 98
திருவல்லம் 91
தில்லை 60

பிறவிஷயங்கள்.
(2) தேவசேனை 2, 5, 7, 16, 26, 39, 46, 51, 54, 60-62, 68, 70, 100.
(3) வள்ளியம்மை 3, 5, 7, 8, 11, 14-18, 20, 25, 26, 28, 30, 37, 39, 43, 44, 48, 50, 58, 64, 66-68, 74, 84, 87, 89, 97-100.
(4) வேல் 7, 10-15, 20, 23, 26, 28, 45, 55, 57, 61, 62, 68, 76, 78, 81, 84, 85, 88, 94, 100.
(5) மயில் 8, 9, 12, 21, 36, 51, 58, 66, 67, 81, 84, 95.
(6) கோழி 8, 16, 21, 26, 68, 76.

பாடலின் எண்

(7) **ஆறெழுத்து** 23.

(8) **முருகர்மாலை**
கடம்பு 46, 85.
செச்சை (வெட்சி) 30, 32, 35, 36, 39, 49, 50,
செவ்வந்தி 6
நீலோற்பலம் 6, 38, 39.

(9) **முருகர் பராக்ரமம் முதலிய:-**
இசையிற் ப்ரீதியுள்ளவர் 98
கடல் சுவறவேல்விட்டது 45, 74.
கடல்மீது கோபித்தது 7, 51.
கிரௌஞ்சம் பிளந்தது 12, 51, 63, 64, 70, 74, 76, 95.
சரவணோற்பவம் 36
சிவபிரானுக்குப் பிரணவம் உபதேசித்தது 4, 5, 15, 19, 23, 25, 45, 52, 57, 64, 77, 91.
சிவபிரான் வாய்புதைத்துச் செவி தாழ்த்தி உபதேசம் கேட்டது 19, 25,
செந்தமிழ்ப் புலவ ரென்பது 37, 98.
சூரனாகிய மாமரந் தடிந்தது 32, 40, 51, 57, 76, 84, 85, 87,
தம்மை லகுவென்று நினைத் தேந்திய அக்கினியைக் கருகச் செய்தது 83
பாண்டியன் பெண்ணின் குதிரைமுகத்தைச் சுந்தர முகம் ஆக்கினது 51
பிரமனை முனிந்ததும் சிறை யிட்டதும் 14, 27, 51, 95.
மறையவர் வேள்விக்குப் பலன் கொடுக்குங் கர்த்தா 40, 55.

பாடலின் எண்

முருகர் திருமுகம் வள்ளி நாயகியின் இருதய தாமரை போன்றது 64
மூவரும் வணங்கும் மூர்த்தி 54
வள்ளியம்மையிடம் பெற்ற சீதனம் 8
வள்ளியம்மையொடு லீலை (வேங்கை மரமானது) 37
"வேலாயுதமே எனக்குச் சரணம்' பிரம தேவன் சொல்லும்படி செய்த லீலை 45

(10) **ஞானசம்பந்தர் லீலை**
ஆண்பனை பெண்பனை யாக்கியது 75
சமணரிட்ட ஏடு தோல்வி யுறச் செய்தது 27
சமணரைக் கழுவேற்றினது 29, 89
ஞானசம்பந்தரின் மகிமை 29
தேவாரம் ருக்வேத சார மென்பது 96
பாண்டியன் கூன் நிமிர்த் தியது 56, 96
பாண்டியன் சுரந்தீர்த்தது 65

(11.) **விநாயகர்** 52, 60,
கஜமுகாசுர சம்ஹாரம். காப்பு-க

(12.) **சிவபெருமான்**
காலனை யுதைத்தது 20, 56,
சூரியன் கண்ணைப் பிடுங்கியது 23
சூரியன் பல்முறித்தது 16,23
தக்கன் யாகம் அழித்தது. காப்பு-க
திரிபுரம் எரித்தது 47, 60, 77, 78
பஞ்சாக்ஷரப் பொருள் 75

பாடலின் எண்

பிரம விஷ்ணுவுக்கு எட்டாதவர் 49
விஷ்ணுவாம் இடபங் கொண்டது 68
விஷ்ணுவின் ரத்தம் கபாலத்தில் நிறைத்தது 93

(13) விஷ்ணு
கடல்மீது பாணமெய்தியது 53
கலப்பை யாயுதம் 98
கஜேந்திர மோக்ஷம் 79, 98
சிவபிரானது பிரம கபாலத்தில் தமதிரத்தத்தைப் பெய்தது 93
திரிவிக்ரம சொரூபம் 57
முல்லை நிலத்துக் கடவுளென்பது காப்பு-உ
ராமாவதாரம் 93
ராவணனை யட்டது 47
வாமனாவதாரம் 91
வாலியைச் செற்றது 47

(14) பார்வதி
பூரநாள் 78

(15) முநிவர், அரசர், முதலியோர்:-
அகஸ்தியர் 19
கங்கை 20, 44
கண்ணப்பர் 97
கர்ணன் 15
துங்கபத்திரி 20
நக்கீரர் 51
நந்தகோபாலன் 44
பாரி 15

(16) அரும் பிரயோகங்கள், பதங்கள், முதலிய
கண்வர்ணனை 88, 96,
மயிலுச்சிட்ட எச்சில்=தென்றல்
மயிலுச்சிட்டம்=பாம்பு 9

பாடலின் எண்

பாம்பு எச்சில்=பாம்பு உண்ணுங் காற்று 9
இறுதி நாள்வரின் தும்மினும் மரணம் நேரிடுமென்பது-"துமாலயமுற்றார்" 59
திருநீற்றின் பெருமை 19, 56, 96
தெய்வயானை கலவி யின்பத்தினும் நக்கீரர் சொன்ன திருமுருகாற்றுப்படை முருகருக்குத் தித்தித்தது 51
மறையவர் வேள்வியில் ஆட்டைப் பலி யிடுதலைக் கண்டித்தது-"அறஅநியாயஞ் செய் வேதியரே" 31
மன நிலையாமை-குலாலன் சகஸிரம் ஒருமுறை சுழலுவதற்குள் ஆயிரங் கோடி தரம் மனம் சுற்று மென்பது 34
ஈதற் சிறப்பு 60, 97
சங்கப்பலகை 25

(17) இறைவனிடம் கேட்கும் வரம்:-
காலன் வரும்போது வந்து காத்தருள வேண்டும் 22, 94
நரகத்தினின்றும் காத்தருளவேண்டும் 41
பிறப்பொழியவேண்டுவது 63

(18) விசேடச் செய்யுள்கள்
அவையடக்கச் செய்யுள் 10
மனமொடுக்கச் செய்யுள் 34
கோளறு பதிகம் 48

(19) உபதேச மொழிகள்
ஆறுபடை வீட்டையும் புகழுங்கள் 1

பாடலின் எண்		பாடலின் எண்	
இறைவன் திருவருள் கூடப் பொறுமை யென்னும் பாணங்கொண்டு வெகுளி முதலிய மான்கள் அழிபடும்	81	தூரைச் சிந்தை செய் தாற் போதும்.	33
கோழி, வேல், வள்ளி யம்மை, தேவசேனை நமக்குத் துணையுள.	26	தும்மும்போது "குமர சரணம்" எனச் சொன்னாற் போதும்.	97
சேது முதலிய ஸ்நாநம் வேண்டாம், திருச்செந்		தேவசேனை யம்மையின் வாகனமாகிய மேகத் தால் நமது வறுமை தீரும்; வேலாயுதத்தாற் கூற்றுவன் கொடுமை நீங்கும்.	100

ஆறு கொலாம் அவர் தந்திரு மாமுகம்
ஆறு கொலாம் அவர் தோற்றிய வோரிடம்
ஆறு கொலாம் அவர் தானமு நூல்களும்
ஆறு கொலாம் அவர் மந்திரந் தாமே.

[எம்மையாளுங் கந்தபிரானுக்குத் திருமுகங்கள் ஆறு; அவர் உற்பவித்த ஒப்பற்ற இடம் (கங்கை) ஆறு; அவருக்கு உகந்த ஸ்தானங்கள் ஆறு [ஆறு படைவீடுகள (1) திருப்பரங்குன்றம், (2) திருச்செந்தூர், (3) பழநி, (4) சுவாமிமலை, (5) குன்றுதோறாடல், (திருத்தணி முதலிய மலைக்கோயில்கள்) (6) பழமுதிர் சோலை]; அவருக்கு உகந்த நூல்கள் ஆறு (1) திருமுருகாற்றுப்படை, (2) திருப்புகழ் (3) கந்தரலங்காரம் (4) கந்தரநுபூதி (5) கந்தரந்தாதி (6) திருவகுப்பு: அவருக்கு உகந்த மந்திர எழுத்துக்கள் ஆறு ["சரவணபவ" அல்லது "குமாராயநம."].

கந்தரந்தாதி

அரும்பத விளக்கம்.

அகம்-அகங்காரம் 14
பாவம் 39
மேல் 64
அக்கரம்-எழுத்து 23
அக்கம்-கண் 10, 23
அங்கத்தர்-சிவன் 90
அங்கம்-வித்தை 53
அங்கா-வாயைத்திற 63
அங்காரகம்-சாந்து 98
அசம்-ஆடு 24, 31, 69
காட்டாடு 43
அடவி-வனம் 74
அடு-கொல் 9
அணங்கு-பெண் 92
அணி-நெருங்கிய 77
அணித்து-சமீபம் 77
அண்-சேர்ந்திருக்கும் (காப்பு உ)
அதம்-இறப்பு 23, 54
அதுங்கு-ஒதுங்கு 20
அத்தமன்-தம்பி 60
அத்தம்-பாதி 4
கரம 4, 57, 60, 67
பொருள் 4, 28
பொன 60
அத்தர்-கடவுள் 90
அத்தனை-அவ்வளவு 7
அத்தி-யானை 7, 11, 54
கடல் 32, 54, 61
எலும்பு 54
அத்து-சிவப்பு 42
இசைவுறுதல் 54
அந்தம்-முடிவு 46, 95
அந்தி-மாலைக்காலம் 6
செவ்வானம் 15
அந்தித்தல-பொருந்துதல் 4, 6
அந்து-வண்டு 39
அபத்து-தீநெறி 20

அப்பு-மோது 74
ஜலம் 74, 77, 78
அமிழாநித்தர்-அழிவிலாச்
சிவன் 25
அமை-பொறு 65
அம்-ஜலம் 3, 40
அழகிய 8, 30, 40,41, 49
சிரேஷ்டமான 49
அம்பகம்-கண் 68
அம்பரம்-கடல் (காப்பு உ), 55
அம்பு-ஜலம் 30, 82
அம்புயம்-தாமரை 40, 46, 71
அம்புஜம்-தாமரை 26, 82
அம்புராசி-கடல் 51
அம்போதி-கடல19, 73, 78, 96
அம்போருகம்-தாமரை 6
அயில்-வேல் 12, 62, 89
கூர்மை 36, 57
நுகரப்பட்ட 62
அர-சங்கரிப்பவனே 68
அரண்-இடம் 55
காவல்—(காப்பு-உ)
அரம்-அரமென்னுமாயுதம் 23
அரன்-பிரமன் 19
சங்கரன் 61
அரா-பாமபு, நெருங்கிய 80
அராக்குன்று-திருச்செங்கோடு 41
அரி-பச்சைநிறம் 21
விஷ்ணு 21
அரித்தல் 29
அலகைத்தேர்-பேய்த்தேர் 77
அலங்கல-மாலை 29
அல்மர-வருத்தமுற 83
அலம்-கலப்பை 88
போதும் 36, 83
அலர்-பரந்த 14
பூ 14

அலர்தல்-விளைதல் 75
அலவன்-சந்திரன் 81
அலைவாய்-செந்தூர் 61
அல-அருள் 15, 79, 93, 99
அல்லி-ஆம்பல் 33
அவசம்-மயக்கம் 2
அவதி-ஆயுள் 73
அவம்-பயனின்மை 83
துன்பம் 75
அவி-அவிர்ப்பாகம் 40
அவை-கூட்டம் 57
அளக்கர்-கடல் 10
அற்றம்-மறைவு 11
அனக-பாபமற்ற 95
அனங்கன்-மன்மதன் 56
அனல்-அக்கினி 5
அன்றில்-அன்றிற்பக்ஷி 81
அன்னமுனி-பிரமன் 64
ஆ-ஆச்சரியமாக 95
பசு (காப்பு-உ)
ஆசு-குற்றம் (காப்பு-உ)
ஆதித்தன்-சூரியன் 45
ஆய்-ஆராய்(தல்) 70
ஆயி-பார்வதி 34
ஆரணம்-வேதம் 23, 68, 90
ஆர்-ஒப்பாகிய 89
ஆல-அசைய 59
ஆறலைத்தல்-வழிபறித்தல் 86
இகல-பகை 35, 36
மாறுபாடு .. 48
இக்கன்-மன்மதன் 51, 94
இக்கு-கரும்பு 17
கொடுமை 27
இஞ்சி-மதில் 22,90
இக்குற-மங்க 28
இடையே-மத்தியில் 69
இதப்பாடு-இனனருள் 81
இதழ்-அதரம் 87
இந்தீவரம-நீலோற்பலம்
38, 39
இந்து-சந்திரன் 9,85
இமையோர்-தேவர் 80
இரிய-முறிய 20
இலகம்-இருப்பிடம் 14
இலஞ்சி-மடு 13
இல-இருப்பிடம் 89
இனம்-கூட்டம் 1
ஈதல்-அழிதல் 23
உக-அழிய 46
உகந்த-விரும்பத்தக்க 98
உகள்-உலாவுதல் 76
புரளுதல் 88
உகளல்-உலர்தல் 11
உகவு-இறந்து 46
உங்கு-உவவிடம 2
உச்சிட்டம்-எச்சில 9
உண்-மிகுதி (காப்பு-உ)
உதாம்-உதாரத்துவம 42
உதரானலம்-வயிற்றுப்பசி 42
உதி-சனனம் 54
உத்தண்டம-வலிமை 41
உத்தீத்தன்-ஊர்த்த தாண்டவன்
57
உதூளம்-பொடி 34
உநதி-கான்யாறு 7, 16, 48, 89
உநது-உயர்ந்த 48, 89
உபாதி-வருத்தம் 29
உயறி-வருத்தம் 65
உரம-மார்பு 15,
வன்மை 66-70
உலேதல-கெடுதல் (காப்பு உ)
உவரி-கடல் 94
உவா-இளமை 1, யானை 1
உள்-ஆராய் 71
உன்னி-நினைத்து 76
எரி-அக்கினி 82
எல்-பகல் 34
என்பு-எலும்பு 35
ஏதிலம்-அயலார் 62
எத்தி-இறைவி 18
எய்-ஒத்த 25

ஏறு-ஆண் 75, இடபம் 76
ஏனல்-தினைப்புனம் 28
ஐ-அழகு (காப்பு உ, 18, 28, 78), சிரேஷ்டம 88, கடவுள் 10, 27, 37, 65
ஐயம்-பிச்சை 93, பயம் 93, சந்தேகம் 96
ஐவர்-பஞ்சேந்திரியங்கள் 21, 53, பாண்டவர் 22,
ஐவனம்-மலைநெல் 37
ஒருப்பட-ஒன்றாக 74
ஓகம்-ஆரவாரம் 3
ஓகை-மகிழ்ச்சி 5
ஓதி-கூந்தல் 79
ஓமம்-மறையோர்வேள்வி 55
ஓம-பிரணவம் 4, 52
ஓர்தல்-அறிதல் 45
கஞ்சம்-தாமரை 96
கட்செவி-பாம்பு 26
கணடி-சேதி 67
கத்து-ஆர்ப்பரித்தல 90
பிதற்றுதல் 47
வருந்திமுறையிடுதல் 64
தலை-11, 47
கந்தரம்-கழுத்து 3, மலைக் குகை 39, மேகம் 66
கம்-தலை 24, 45, 98
கம்பு-சங்கினம் 24
கரம்-கோபம் 58, 84
கரவு-வஞ்சகம் 23, 68
கரா-முதலை 98
கலம்-மரக்கலம் 45
கல்-கற்கின்ற 55
களபம்-சந்தனம் 16
களை-நீக்கு 42
கள்-தேன் 71
கழுமலம்-சீகாழி 100
கறை-உதிரம் 72
கனகம்-பொன் 99
கனம்-மேகம் 56, 79, 91
மகத்துவம் 58
கன்னபுரக்குழை-ஒருவகை யாபரணம் 15
கன்னம்-செவி 15
கா-பூஞ்சோலை 56, 81,
கற்பகதரு 63
காத்தருள 63
காப்-கோபி 87
கார்-மேகம 73
கால-காற்று 30, ஒளி 79
காவ-காவல் 81
கிளை-சுற்றத்தார் 24
கு-உலகம் 17
குடி-மனைவி, உறைவிடம் 1
கும்பம-மத்தகம் 46
குருந்து-பாலகன் 33
குலவு-பிரகாசிக்கின்ற 21
குவடு-மலை 17
குழல்-புள்ளாங்குழல 81
குறு-குற்றுமடி 89
குனித்தல்-வளைத்தல் 47
குன்ற-வருந்த 26
கூப்பிட-முழங்க 12
கூற்றுவன்-யமன் 100
கேளா-சுற்றத்தார 14
கை-கோபி 37, 88
ஒழுங்கு 51
நீதல, ஒழிதல 51, 53
ஒப்பற்ற 88
கைத்து-கோபித்து 51
தீர்த்து 15
கைப்பு-வெப்பம் 65
கைம்மா-யானை 51
கைவரு-வல்லமையுள்ள 53
கொடி-நீண்ட 16
கொடும்பு-திருகுதல் 27
கொண்டல்-மேகம் 88
கொழுநன்-நாயகன் 99
கோடு-சங்கம் 8, 11
கோணலவடிவு 8
மாறுபாடு 11
கொம்பு 5

கோத்திரி-மலை 34, 78
கோள்-குற்றம் 8
ச-சனித்த 83
சங்கம்-கூட்டம் 14
சங்கர-அழிக்கின்ற 84
சதிர்-சதுர்ப்பாடு 1
சத்தி-வேல் 23, 61
சந்ததி-மைந்தன் 90
சமுகம் (சாமுகம்)-கூட்டம் 73
சம்-உற்பவித்த 84
சம்பு-பிரமா 45
சலதி-கடல் 58
சலராசி-கடல் 81, 90
சரம்-அம்பு (காப்பு 2)
சர்-உஷ்ணம், அக்கினி-காப்பு உ
சிகண்டி-மயில் 58, 66, 67
சிகாவளம்-மயில் 36, 81
சிகாவிம்பம்-வட்டவடிவாகிய
தலை 80
சிகை-பந்தம் 50, கொண்டை51
சிக்குற-அகலாதுறைய 28
சிக்கென-உறுதியாக 27
சித்திரம்-பொய் 49, 50
சிந்தா-அழியா 21
சிந்தாகுலம்-வருந்துமனம் 21
சிந்து-பொடிசெய் 66, 70
கடல் 9, 41, 66, 70
கொடி 21
வாமனம் 21
சிந்துரம்-திலகம் 4, 66, 69, 70
யானை 39, 66
சிந்துரை-தேவசேனை 39
சிரபாத்திரி-சிவன் 34
சிலமபு-மலை 43, 51, 96
முழங்கு 51
சிலுகு-ஈஷணாத்திரயங்கள் 47
சிலை-மலை 8
வில் 9, 56, 78, 97
ஆர்ப்பரிப்பு 9
சில்-தகழி 38
சிவ-கோபி 83, 84
சிறை-தோகை 12
கரை 12, 74
சிற்றம்பலம்-ஞானவெளி 38
சீ-லக்ஷுமி 8, 80
இகழ்ச்சிக் குறிப்ப 8
பிரகாசம் 69
சீகரம்-அழகு 65
அலை 66
சீதன்-சந்திரன் 8
சீதனம்-வரிசை 8
சீயம்-சிங்கம் 19
சீயன்-சிவன் 19
பாட்டன் 19
சீரம்-கலப்பை 98
சீரா-கவசம் 80
சீர்-தன்மை 37
சீர்க்கை-மனந்திருந்துதல் 37
சீர்ப்பினும்-செல்வம்
அதிகரிக்கினும் 36
சீலம்-தயாளம் 58
சுசி-பரிசுத்தம் 58, 66
அக்கினி 66
சுதன்-மைந்தன் 66
சுண்ணம்-நீறு 71
சூடிகை-கிரீடம் 4
சூதம்-மாமரம் 11
சூராரி-சூரசங்காரன் 77
சூலம்-கழு 89
சே-உற்பவித்த 2
செனனம் 5, 6, 26
சிவந்த 36, 59
செகம்-பூமி 21, 24, 46
செச்சை-வெட்சிமாலை 32, 35,
36, 39, 49, 50
ஆடு 36
செப்பம்-நடுவு நிலைமை 60
செப்பு-கவசம் 2, சொல் 79,
சிவந்த 60
செம்-ஒழுங்கான 43
அழகிய 43
செம்மல்-போர்வை 75

செம்மல்-கடவுள் 76
புதைத்தல் 76
பழையபூ 76
செய-சிறந்த 20
செயல்-சேறு 88
செய்-நிலம், வயல் 43, 75, 88, 91
செய்த-சிவந்த 75
செய்ய-அழகிய 10, 43
சிவந்த 24
செய்யன்-குமாரக் கடவுள் 43
செய்யாள்-லக்ஷ்மி 69
செரு-போர் 40, 46
செருக்கு-மயக்கம், இறுமாப்பு 46
செல்-மேகம் 22, 93, 100
செல்லல-துன்பம் 93
செல்வன்-புதல்வன் 20, 71, 94
செவ்வந்தி-ஒருவகை மலர் 6
செவ்வி-புதுமை 51, 56
செவ்வு-செம்மையாக 6
செற்ற-செயித்த 90
செற்றை-ஒருவகை மீன 22
தூதர் கூட்டம் 22
சென்னி-சோழன 3
சே-சிவப்பம் 2,16,26,40,64,68
ஆண் 4
சிவந்த 11, 16, 64
அழகிய 33
வயிரம் பொருந்திய 40
பிள்ளை 44, 49, 94
காத்தல் 68, தூரம் 44
இளமையான 85
சேகரன்-தலைவன் 67, முடியிற் றரித்தவன் 68
சேகு-வயிரம் 68
சேடன்-பாம்பு 36
சேடி-விஞ்சையருலகம் 92
கர்வித்திருக்கின்ற 92
சேடு-அழகு, திரட்சி 92
சேண்-ஆகாசம் 35, 60
சேதம்-கேடு 48, 87
சேதகம்-பின்னம் 48
சேறு 49
சேதனம்-அறிவு 32
சேதி-கண்டிப்பாயாக 94
சேதித்தல்-வதைத்தல் 93
சேது-சிவந்த 33, 44, 49, 94
சேந்தன்-கந்தன் 48, 85
சேந்து-சிவந்து 85
சேம-சிவந்த 39
சேமம்-பொக்கிஷம் 39
சேமர்-காப்போர் 40
சேய-அழகினையுடைய 48
சேயவன்-செவ்வாய் 48
சேய்-குமாரக் கடவுள் 9, 47
மைந்தன் 6, 22, 47
தூரம் 43
சேர்தல்-இடைவிடாமல் தியானித்தல் 73
சேர்ப்பது-சிலேத்துமம் 59
சேர்ப்பன-தலைவன 59
சேலை-அசோகமரம் 89
பீதாம்பரக் கச்சை 89
சேல்-சேற்கெண்டை 85
சேவகம்-திறம் 64
சேவகன்-வீரன் 7, 74
சேவல்-காப்பாற்றுதல 15
சேறல-செல்லுதல 86
சை-இகழ்தற் கிடமான 36
சையம்-மலை 36
தகம்-தகுதி 49
தகனம்-காந்தி 70
தகர-பொடியாக 12
தடம்-பெருமை 11
தடிதல்-கொல்லுதல் 11
தண்டம்-தண்டாயுதம் 20
ததி-தயிர் 54
தத்த-சதிபாய்ந்து செல்ல 67
தத்து-ஆபத்து 54, 67
ததும்பு 54

தத்தை-கிளி 28, 54
தநு-உடல் 63
தந்தி-யானை 16, 73
பாம்பு 23, 54, 90, 91
தந்து-நூல் 33
தப்பு-குற்றம் 77
தமர-முழங்க 67
தம்பம்-பற்றுக்கோடு 38
தம்பாடு-தம்பட்டம் 87
தயிலம்-எண்ணெய் 62
தரங்கம்-கடல் 7, 76
தரம்-வலிமை 90
தரவு-கட்டளை 41
தரு-விருக்ஷம் 25
தவ-அழிய 75, 99
தவா-நீங்காத 95
தவிராத 26
தவு-நீங்கு 76
தனம்-கொங்கை 8, 46
திரவியம் 8
தா-தாவுதல், ஏறுதல்
-(காப்பு உ)
இடம் 54
தாத-பிரமன் 54
தாதன்-தொண்டன் 54
தாமம்-மாலை 43
தாமரை-சிறுகுடி 43
தாம்பு-கயிறு 44
தாரகை-நக்ஷத்திரங்கள் 4
தாரம்-மனைவி 5
தாலம்-உலகம், பனை 75
தானவர்-அசுரர் 85
தாறு-அளவுபடாத 86
குலை 86
தி-பத்தி 27
திக்க-திகைக்க 94
திக்கர்-திக்குப்பாலகர் 61
திக்கு-மயக்கம 52
திங்கள்-சந்திரன் 70, 71, 73,
90; மாதம் 71
திகிரி-சக்கிரம் 3, 91, 98
மலை 91
மூங்கில் 91
திசைமுசன் (திசாமுகன்)-
பிரமன் - 10, 72, 73
திதம்-உறுதி 53
நிலைபெறுதல் 54, 67
திதி-காத்தல், நாள் 54
தித்தி-பை 52, 54; உணட 18
திமி-திமிங்கலமீன் 7
குற்றுதல் 7
திமிர-பூச 7
திமிரம்-இருள் 6, 7, 53, 82
தியங்குதல்-மயங்குதல் 62
திரம்-உறுதி 10, 50
திர ளக்கர்-இந்திரன் 10
திரள்-அநேக 10
திரி-கெடும்படி 20
திரிகை-குலாலன் சக்கிரம் 34
திரித்தல்-ஒழித்தல் 40
திரி நகம்-மும்மலை (திருத்தணி,
பரங்குன்று, செங்கோடு) 56
திரு-லக்ஷ்மி 1
திருக்கு-கூன் 96
திருக்கை-ஒருவகை மீன் 78, 96
திலகம்-பொட்டு 13, எள் 14
திலம்-எள் 62
திவா-பகல் 15
திறம்பாள்-நீங்காள் 87
திறவு-திறவுகோல 95
அடைக்கல ஸ்தானம் 95
தினகரர்-ஆதித்தர் 23
தீ-நெருப்பு 18, 30, 54
நல்லறிவு 31, 39, 42, 53
54, 83
கொடிய 42, தகிக்கும் 54
தீய்ந்துபோகும் 99
தீட்ட (தீண்ட)-அடைய 72
தீட்டு-கூர்மையிடு, அருசி 72
தீட்டுதல்-எழுதுதல் 71, 72
தீத்தன்-சூரியன் 57

தீ மதலை-கோழி 21
தீர்தல்-அழித்தல் 39
தீவு-உலகம் 99
தீனம்-வறுமை 15, 42
தீன்-இனிய 42
து-உண்ட 54, 97
துங்க-உயர்ந்த 47
துங்கபத்திரி-சுரப்புன்னையிலை [20
துச்சில்-ஒதுக்கிடம் 97
துஞ்சா-கண்ணுறங்கா 70
துண்டம்-மூக்கு 14
துதை-நெருங்கு 54
துத்தி-படப்பொறி54
துப்பு-பவளம் 42
துமி-தும்மல் 97
தும்பு-பாசம் 27
துவசம்-கொடி (காப்பு-க , 76
துவர்-பவளம் 32, 87
துனி-துன்பம் 8, 42
துறை-தீர்த்தம் 44
தூங்குதல்-பெய்தல் 35
தெணடன்-வணக்கம்,காலன் 41
தெரிவையர்-பரத்தையர் 77
தென்-அழகு 55, 56, 82
தெனனன்-பாண்டியன் 64, 96
தென்னவன்-பாண்டியன், யமன் 56
தென்னூல்-தமிழ்நூல 96
தே-கடவுள் 4
தேக்கி-நிறைத்து 5
தேங்கு-நிறைவாகிய 13
தேஙகுதல்-திகைத்தல் 12, 13
தேசம்-உறைவிடம் 45
தேசிகன்-அழகன் 98
தேசு-கீர்த்தி 28, ஒளி 45
தேம்-நன்மை 4, இடம் 4, இனிமை 4, 11
தேள்-விருச்சிகராசி 27
தேன்-வண்டு 82
தைவருதல்-தவழுதல் 22
தொத்தது-அடிமைப்பட்டது54
தொந்திப்பு-சம்பந்தம் 52
தோகை-தூவி துவசம் 51
தோமரம்-கைவேல் 55
தோம்-குற்றம் 55
தோல்-யானை 19
ந-இன்மை 23
நகம்-மலை 47, பாம்பு 67
நகில்-கொங்கை 28
நகை-பல் 25, 62
நஞ்சம்-விஷம் 96
நந்தனம்-கிருபை (காப்பு-உ),55
நந்தன்-நந்தகோபன் 44
நந்தாது-அவியாது 99
நந்து-கெட்ட 42, சங்கு 42
நமன்-யமன் 71
நராரி-திருமால் 30
நாம்-அச்சம் (காப்பு-உ)
நாள்-நக்ஷத்திரம் 25
நிசாசரர்-அசுரர் 48
நிசாந்தகன்-சூரியன் 16
நிதியம்-சங்கநிதி, பதுமநிதி 63
நித்திலம்-முத்து 61, 62. 81
நிமிர்-நீண்ட 37
நியதி-நித்தியமும் 64
நிறம்-மார்பு 80
நீலம-கருங்குவளை, இருள் 6
நீலோற்பலகிரி-திருத்தணி 59
நுதல்-நெற்றி 60
நூக்கு-தள்ளு 41
நைத்து-அழித்து 94
நைவு-கழிதல் 18
பங்கஜம்-தாமரை 14
படாம்-பட்டம் 72
படி-பூமி 11
படு-அழிதல் 74
படுதல்-உண்டாகுதல் 9
பணி-பாம்பு 77
பண்டு-பூர்வத்தில் 63
பதுமம்-தாமரை 59
பத்தி-ஒழுக்கம் 20

பரவை-கடல் 57
பராகம்-மலர்த்தாது 46
பரி-அலர்ச்சொல் 81
பரியங்கம்-கட்டில் 81
பரியானலம்-வடவா
முகாக்கினி 81
பலம்-பயன் 38, 40, 44
பழனம்-வயல் 22
பனிக்கதிர்-சந்திரன் 10
பனிப்பானு-சந்திரன் 48
பாகம்-பக்கம் 39
பாறு-பருந்து 18
பாற்கரன்-சூரியன் 73
புகர்-புள்ளி 70
புகல்-அடைக்கல ஸ்தானம் 45
புங்கவன்-தேவன் 2, உயர்ந்
தோன் 2
புசகம்-பாம்பு 24, 82
புடை-நீக்கு 11, பக்கம் 17
புத்துறை-புதிய உறை 78
புந்தி-புதன் 48
புரத்தல்-காப்பாற்றுதல் 24, 41
புரந்தரன்-இந்திரன் 41
புரந்தர்-தொன்றுதொட்டு
வருதல 41
புரம்-ஊர் 24, பழமை 24
பூசுரர்-வேதியர் 55
பூதரம்-மலை 67, 82
பொரு-போர்செய் 74
பொருப்பு-மலை 74
பொழில்-உலகம், பெருமை 93
பொறி-எழுத்து, தீ 63
செல்வம 63
பொறை=பொறமை 84
பொன்-வியாழன் 48
போது-பொழுது 35
மகம்-வேள்வி (காப்பு-க)
மண்-மாசற்ற 30
மதம்-ஆங்காரம 9
மதனம்-கடைதல் 9
மதன்-மன்மதன் 9, 81

மது-தேன் 9
மதுகரம்-தேன் 80
மராம்-கடம்பு 85
மராமம்-மாமரம் 80
மருண்டு-மயங்கி 24
"மருப்பு-கொம்பு 72
மரை-கடம்பை 43
மலங்கல-கலக்கமுற்றழிதல் 29
மலையாளி-குறிஞ்சிநிலத்தை
யாள்பவன் (முருகன்) 55
மறலி-யமன் 94
மறை-வேதம் 82
மன்-நிலைபெற்ற 79, 80
மன்றல்-வாசனை 82
மா-பெரிய 51
மாமரம் 51, 76
மாசு-குற்றம் 71
மாசுணம்-பாம்பு 71
மாமை-அழகு 51
மாயூரம்-மயில் 21
மால்-மாயோன் 10
மயக்கம் 66
மாற்றம்-மொழி 71
மின்-செயவயானை 27
மீன்-மீனம 27
மூதல-பிறப்பின்மூலம் 79
முத்து-முத்தம் 25
முந்நீா-கடல 53, 82
முரல்-சப்தித்தல் 24
முருந்து-மயிலிறகின் அடி 79
முலலை-முல்லை நிலம், கற்பு
(காப்பு உ)
முழுச்சேவகன்-ஒப்பற்ற
வீரன் 64
முற்றம்-முன்றில் 58
முனி-கோபி 88
முனை-கூர்மை 13
மேதி-எருமைக்கடா 63
மை-மேகம், ஆடு, அஞ்சனம்-
(காப்பு உ)
இருள் 12, 51, மேஷம் 27

மைந்து-வலிமை (காப்பு உ)
மையல்-விரகதாபம் 24
ரக்க-ரக்ஷை 7
ரசதம்-வெண்மை 42
ரணம்-உரிமை 26, 55; யுத்தம் 68
ரதம்-பல 23
ரமிக்கும்-மகிழ்வை விளைக்கும் 34, 50
ரவி-சூரியன் 40, 70
ரவு-ஆரவாரத்தையுடைய 34
ரவுத்த-ராவுத்தனை 66
ராகம்-கோபம் 46
இச்சை 83
கீதம் 98
ராசி-கூட்டம் 67
ராம-அழகிய 80
ரிபு-மாறுபட்ட 20
சத்துரு 39, 78
ருகு-ருக்குவேசம 96
லகு-அற்பம் 83
லங்கனம்-கடிதல், பசி, பங்கம் 58
லத்தை-கிருபை 6, 38
லயம்-மரணம் 59
லாகவம்-நொய்யதான 93
லிகிதம்-எழுத்து 83
வசவ-ரிஷபவாகனம் 31
வசவு-இகழ்ச்சிச்சொல் 31
வசி-கூர்மை 84
வஞ்சி-பெண் 84
வடு-மாவடு, குற்றச் சொல் 17
வணம்-அழகு 45
வண்டு-சங்கு, குற்றம், சுரும்பினம் 76
வந்தி-வணங்கு 100
கொடுமை 61, 100
வருத்தம் 6
வரகு-தானியம் 39
வரை-மலை 73, 79
வல்-சொக்கட்டான்காய் 16
வலம்புரி-நந்தியாவர்த்தம் 91
வற்று-வல்லது 42
வனசம்-தாமரை 69, 95
வனப்பு-அழகு 37
வனம்-ஜலம் (கங்கை) 37,
காடு 48, அழகு 95
வனேற்பவை-வள்ளிநாயகி 89
வன்பு-வலிமை 48
வாகன் - வாகனமாகக் கொண்டவன் 66
வாகு-புயம் 14, அழகு 15
வாசகம்-சொல் 25
வாசவன்-இந்திரன் 59
வாசி-பாணம் 84
குதிரை 51
வாரணம்-யானை, சங்கு-காப்பு (க) 68
கோழி-காப்பு (க), 26
வாரணத்தான-இந்திரன், விஷ்ணு, குமாரக்கடவுள் -(காப்பு க)
வாரி-கடல் 45, 67
வாரிதி-கடல் 35
வார்-ஒழுங்கான 24, நீண்ட 35
வாவி-பொய்கை 2, 9, 33, 79
வாவு-தாவு 36
வாளி-பாணம் 88
வாள்-ஒளி 14, 60, 88
வான்-பெரிய 53
வி-விசேஷமான, நல்ல (5)
பக்ஷி 26
விக்கம்-விக்னம், தடை 40
விண்டு-ஆர்ப்பரித்து 40
விதி-பிரமன் 65
விதிர்த்தல்-எறிதல் 61
வித்தகம்-அற்புதம் 70
வித்தகன்-சர்வக்ஞன் 70
விலம்-வில்வம் 5
விலங்கம்-பலத்த தொடர்ச்சி 53
விலோசனம்-கண் 96
வில்-தனுசு 27
விள்-சொல்லுதல் 77

வீடு-மோக்ஷம் 5
வெகுநாட்டன்-ஆயிரங்
கண்ணன்-இந்திரன் 27
வெம்-கொடிய 66, 100
வென்-புறம் 10, 73
வேணி-சடை 74
வேதனை-துன்பம், மூங்கில் 73
வேதன்-பிரமன் 73
வேத்தியர்-அறிஞோர் 18
வேழம்-யானை 60

அருணகிரிநாத ஸ்வாமிகள்

அருளிச்செய்த

கந்தரலங்காரம்.

காப்பு.

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெனப்படு குட்டுடன் [1] சர்க்கரை மொக்கியகைக்
கடதட [2] கும்பக [3] களிற்றுக் கிளைய களிற்றினையே.

(கு-உ.) [1] சர்க்கரை=ஆன்மபோதம். [2] கும்பம்=மத்தகம். [3] களிற்றுக்கு இளைய களிறு=விநாயக மூர்த்திக்கு இளைய முருகவேள்.

நூல்.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய [1] வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை [2] யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே. (1

(கு-உ.) [1] வழிவிட்டவா=வழிவிட்ட ஆற்றினை (செயலினை என்னென்று கூறி வியப்பேன். 'தில்லை யம்பலவ னருட்கழல்க சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ'—திருவாசக "பிமரங் கெட·மெய்ப் பொருள் பேசியவா!"—கந்தரநுபூதி (
[2] அம்புலியின் கீற்றை=பிறைச் சந்திரனை.

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பா
[1] எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே. (

(கு-உ.) [1] எழுத்து-இலக்கணம். அன்புடனும் எழுத்துப் பி யின்றியும் இறைவன் திருப்புகழை ஓதுதல் வேண்டும் என்ப இதனாற் பெறப்படும்.

தோரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் [1] கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த [2] கடகம் நெளிந்தது [3] சூர்ப்
[4] பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. **(3)**

(த-உ.) [1] கிரௌஞ்சம்-மாயை. [2] கடகம்=சேனை - கன்மம். [3] சூர் - ஆணவம. [4] பேரணி=கூழை=நடுச்சேனை, 'கூழை யென்பது பேரணி யாகும்'—பிங்கல நிகண்டு.

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டாமல ரிட்டுனதாள்
[1] சேரவொட டா[2]ரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூர[3]கட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே. **(4)**

(த-உ.) [1] சேர=இடைவிடாது நினைக்க. [2] ஐம்புலன்களின் வன்மையைக் கூறினார்; ஐவர்=ஐம்புலன். "இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற் கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே' —திருவிசைப்பா.

"ஐம்பெருமா பூதங்கா ளொருவா வேண்டிற் றொருவர் வேண்டீ ரண்டிவ் வவனி யெல்லாம் உம பரமே உம் வசமே யாக்க வல்லீர்";

"அடுவன அஞ்சு பூதம் அவைதனைக் காற்ற லாகேன்
படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதிப் பிறவி சீசீ".— அப்பர் தேவாரம்.

[3] கட்டாரி=வேல்; "கட்டாரி வேல்விழியார்." [34]

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் [1] கடலழக் [2] குன்றழச் [3] சூரழ விம்மியழுங்
[4] குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் [5] குவலயமே. **(5)**

(த-உ.) [1] கடல்-கன்மம், [2] குன்று—மாயை.
[3] சூர் - ஆணவம். [4] குருந்து=பிள்ளை: குழந்தை.

[5] குவலயம=உலகம்; "உலகம் என்ப துயர்ந்தோர் மாட்டே" யாதலின், நக்கீரர் "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என ஓதினமை கண்டு அருணகிரியார் குறிப்பிற் கூறினர்போலும்

பெரும்பைம்[1]புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
[2]கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.

(கு-உ) [1] புனம் - உலகம், ஏனல் - மண், பொன், பெண்; பேதை-உயிர்; கொங்கை - பக்குவம், கரும்பு, தேன்-விஷயாநந்தம்.

[2] "காயத் துள்ளமு தூறவூறநீ கண்டுகொள்" —திருவாசகம்-சென்னிப்பத்து;

"திருப்புத்தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" -அப்பர் தேவாரம்.
"விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே" —திருமந்திரம்.

[1]சளத்திற் பிணிபட் [2]டசட்டுக் கிரியைகளுட் டவிக்குமென்ற
னுளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் [3] கழுதாட வேல் [4] தொட்ட காவலனே. (7)

(கு-உ.) [1] சளம்=வஞ்சனை: பொய்:
[2] பிணிபட்டு அசட்டுக்கிரியைகளுள் தவிக்கும் எனப்பிரிக்க.
[3] கழுது=பேய். [4] தொட்ட=பிரயோகித்த.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா'முக மாறுடைத் தேசிகனே. (8)

(கு-உ) பேரின்ப ஞானநிலையைக் கூறினார். "உருவிலாத பாழில் வெட்ட, வெளியிலாடு நாத நிர்த்த, உனது ஞான பாத பத்ம முறுவேனோ" —திருப்புகழ்-442.

தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித் [1]தெய்வ வள்ளி
கோனன் றெனக்கு உபதேசித்த தொன்றுண்டு [2]கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே. (9

(கு-உ.) [1] "தெய்வ வள்ளி"-கந்தரந்தாதி ௯௪.
[2] கூறவற்றோ=கூறவல்ல தகைமையதோ?

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வா இகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக்
கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல்[2]வல்லபமே.

(கு-உ.) [1] கொல்லி=கொல்லிப்பண் [2] வல்லபம்=வல்லமை.
"வல்லபமற்றழிந்து மாலாய்"—திருப்புகழ்-668.

[1]குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
[2]கசையிடு வாசி [3]விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே. ()

(கு-உ.) [1]குசை=கடிவாளம். [2] கசை=சம்மட்டி.
[3]வாசி விசை=வாசியின் விசை (வேகம்); வாசி=குதிரை;
"மகள் வாசி"—கந்த ரந்தாதி-51. மயில் - திரோதான சக்தி.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே. (12)

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே. (13)

[1]குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்க[2]விண் ணோருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே. ()

(கு-உ.) [1] குப்பாச வாழ்க்கை. கு=சிறுமை, பாபம், பூமி.
[2] விண்ணோர்=ஆன்மாக்கள்.
[3] சப்பாணி=கைகளை ஒன்றோடொன்று தட்டுதல்.

[1] தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலு [2] மென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே. **(15)**

(கு-உ.) 1 தாவடி=பிரயாணம்; "கடிதுல கெங்கணுந் தா(வ)டி யிட்டு வந்த மயில்" — திருப்புகழ்-567. 2 என் பாவடி ஏடு— 'அடிமை * * பாடும் * * கவிமாலைசூடுவதும்'—திருவகுப்பு-1.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோ [1] ளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே. **(16)**

(கு-உ.) 1 எழுபார் - பூ, புவ, சுவ, சன, தவ, மகா, சத்திய லோகங்கள்.

வேதா கமசித்ர வேலா யுதன் [1] வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே. **(17)**

(கு-உ.) 1 வெட்சி மலர் முருக பிரானுக் குகந்தது— "வெட்சி மலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்"-கல்லாடம். 'வெட்சித்தண்டைக் காலென்கிலை'-[30.]

[1] வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் [2] பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
[3] வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
[4] கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே. **(18)**

(கு-உ.) 1 "வை=கூர்மை.

2 "கதிகேள் கரவா திடுவாய்"-கந்தரநுபூதி-7.

3 "வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்" என்பது இவ் வுடம்பு எதற்கும் உதவா தென்பதை விளக்கிற்று;

"உடம்பு, தீக்கிரை யாவதல்லா லேதுக்கா மிதைச் செப்புமினே."—பட்டினத்தார்.

4 "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே"—பட்டினத்தார்.

[1] சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்ப மௌனத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.(**19**)

(கு-உ.) [1] சொன்ன=சொர்ண: பொன்னிறமான; கிரௌஞ்சத்தைக "குருகுபெயர் பெற்ற கனவட சிகரி" என்றார் திருவகுப்பிலும்; கனம்-பொன், 'கனகக கிரியைப் பொரும் வேலா' -திருப்புகழ்-250. "பொன்னஞ் சிலம்பு புலம்ப" [89]

கோழிக் கொடியன் அடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க [1] ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே. (**20**)

(கு-உ.) [1] அத்தம்=பொருள்.

[1] மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் [2] வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய [3] தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கராசுர பாஸ்கரனே. (**21**)

(கு-.உ) [1] "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்"-அப்பர் தேவாரம்

[2] பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே-[70.]

"வேலு மயிலு நினைந்தவர் தந்துயர் தீர அருள்தரு கந்த"— திருப்புகழ்-920. [3] தந்து=நாண்: நூல்.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் [1] முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த [2] இலஞ்சியமே. (**22**)

(கு-உ.) [1] முத்தமிழால் 'வைதாரையு மங்கு வாழ வைப்போன் என்றது முருகவேள் முத்தமிழ்ப் பிரியர் என்பதை விளக்கிற்று.

[2] இலஞ்சி=குளம் (சரவண தடாகம்); இலஞ்சியம்—குளத்தி லுற்ப வித்தவன். அதனுற் "குளவன்" என்றும் முருகருக்குத்

திருநாமம் உண்டு. கல்லாடம்-52. திருப்புகழ்-755.

"மலர்வாவியி லுதித்த", "சரவண மடுவினில் வந்தருள் கந்தன்" - திருவகுப்பு-4, 18.

23

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
[1] வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
[2] ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

(கு-உ.) [1] வை=கூர்மை. [2] ஐவர்=ஐம்புலன்கள்.

24

[1]கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
[2] குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் [3] குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

(கு-உ.) [1]கின்னம்=துயரம்; "கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே"—அநுபூதி-49.

[2] குன்னம்=ரகசியம்; "ரகசிய உபதேசம" - என்றார் திருப்புகழிலும்-1274. [3] குறிச்சி=குறிஞ்சி நில ஊர்.

25

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடி வாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற் றென்கைக்கெட்டவே.

(கு-உ.) "படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்னம தீச னடியரை
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடை புகாது நீர் போற்றியே போமினே '—அப்பர்.

"நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்
சிவன்வரி ஞானுடன் போவது திண்ணம் "—திருமந்திரம்.

26

நீலச் சிகண்டியி லேறும பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
[1]காலத்தை வென்றிருப் பார்; மரிப் பார்வெறுங் கர்மிகளே.

(கு-உ.) [1] காலம்-வித்தியா தத்துவங்கள் ஏழனுள் ஒன்று; அது சரீராதிகளைப் பரிணமித்து அழியச் செய்வது.

27

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மே கந்த வேள்மருங்கிற்
[1] சேலையுங் கட்டிய [2] சீராவுங் கையிற் [3]சிவந்தசெச் சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

(கு-உ.) [1] சேலை=பீதாம்பரக் கச்சை. (கந்தரந்தாதி-அக)

[2] சீரா=சிறிய கூரிய உடைவாள். "சூர் தூளாய் வீழச் சிறு தாரைச் சீராவாலே வாளாலே வேலாலே சேதித்திடும் வீரா"— திருப்புகழ்-1045. "நிசாசரக் குலத்தை * * சீராவின லறுத்தறுத் தொதுக்கிய பெருமாளே"—திருப்புகழ் - 1132.

"அரையிற் கட்டுஞ் சீராவும்" என்பர் பின்னும்:-(அக)

சீரா என்பதற்குக் கவசம் என்றும் பொருள், "சீராம ராம" என்னுங் கந்தரந்தாதிச் செய்யுளைக் (80) காண்க.

[3] செச்சை=வெட்சி.

28

வேலே விளங்கு கையான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற கரிதா யருவுரு வாகியொன் று
போலே யிருக்கும பொருளை[1]யெவ் வாறு புகல்வதுவே.

(கு-உ.) [1] "செவ்வா னுருவில்" எனத் துவக்குங் கந்தரநுபூதி யின் குறிப்புரையும், "அவனருளே கண்ணகக் காணி னல்லால், இப்படியன் இந் நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவ னென் றெழுதிக் காட்டொணாதே" - என்னும் அப்பர் ஸ்வாமிகள் திரு வாக்கும் ஈண்டுணரற்பாலன.

29

[1] கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் [2] புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் [3] பழுத்தசெவ் வாயிற் [4] பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.

(கு-உ.) [1] கடம்=மலைப்பக்கம்.

[2] புணை=தெப்பம். "அஞ்செழுத்தின் புணைபிடித்து"—திருவாசகம்: திருச்சதகம்-உஎ.

பழுத்த செவ்வாய்=செம்மை பழுத்த (முற்றின)வாய்.

[4] பணை=மூங்கில்: தோள்; ஆகுபெயர்.

30

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

31

[1] பொக்கக [2] குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

(கு-உ.) [1] பொக்கம்=பொய்; "பொக்கங்க ளேபேசும்"—திருவாசகம்-திருவெம்பாவை (ரு).

[2] குடில்=சிற்றில்; "மலஞ்சோரு மொன்பது வாயிற்குடில்"-திருவாசகம்-சிவபுராணம்-ருச. "பொக்கக் குடில்"=அழிபடுந் தேகம்.

32

[1] கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னே[2]துறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.

(கு-உ.) [1] "கிளைபட் டெழு சூருரமும்"—அநுபூதி (ச).

[2] "துறவினர் சோரச் சோர நகைத்து"-திருப்புகழ்-158.

33

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
[1] மிடியாற் படியில் [2] விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

(கு-உ.) [1] மிடி=வறுமை; அதன் கொடுமையை "வடிவுந் தனமும்" என்னும் கந்தரநுபூதிச் (19) செய்யுளிற் காண்க.
[2] விதனம்=மனத்துயர்.

34

[1] பொட்டாக வெற்பைப் பொருதகந்தா தப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

(கு-உ.) [1] பொட்டு=நுழைவாயில்: தொளை; "சாடு குன்றது பொட்டெழ"—திருப்புகழ் - 105; "மின்னயில் கொண்டொரு வெற்புப் பொட்டுப்பட"—திருப்புகழ்-492. "கிரௌஞ்சம் புழை பட் டழிய"—தணிகைப்புராணம்; புழை=உட்டொளை.

35

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் [1] தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
[2] மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.

(கு-உ.) [1] தரங்கம்=அலை. [2] மெத்தி=நிறைந்து: மிகுந்து, மெத்திய=நிறைந்த; "விடமெத்திய** கணை"—திருப்புகழ்-290

36

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

37

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் [1] டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே.

(கு-உ.)[1] "அநுராகப் பாவை படியினும் வசமழியினும் * * * இருசரணமு மறவேனே" என்றார் திருப்புகழிலும் - 513.

38

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

(கு-உ.) "எங்கள் பரமன் * * * உளமே புகுந்த அதனாற், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்களான பலவும், அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.
—சம்பந்தர்.

39

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னி [1]லொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்[2]டுரக
பதித்[3]தாம்பு வாங்கிநின் [4]றம்பரம் பம்பரம் பட்டுழல
[5]மதித்தான் திருமரு கா மயி லேறிய மாணிக்கமே.

(கு-உ.) [1]இறவியொடு பிறவியற ஏகபோகமாய் நீயுநானுமாய் இறுகும்வகை பரமசுகம் அதனையருள்"—திருப்புகழ் - 862.

[2] உரகபதி=வாசுகி; [3] தாம்பு=கயிறு; [4] அம்பரம்=கடல்; [5] மதித்தல்=கடைதல்.

40

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

41

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
[1] காலே மிகவுண்டு காலே யிலாத [2] கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.

(கு-உ.) [1] கால்=காற்று. [2] கணபணம்=ஆயிரம் பணமுடி களை யுடைய ஆதிசேடன்; கணம்=கூட்டம்; பணம்=படம்.

42

நிணங்காட்டுங் [1]கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே.

(கு-உ.) [1] கொட்டில்=கொட்டகை: ஒதுக்கிடம்.

43

[1]கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக கணபணக [2]கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே.

(கு-உ.) [1] கவி=வானரங்கள்; [2] கட்செவி=பாம்பு.

44

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுதுகோட்டிக்கைந் நாற்றிநரம
பா[1]லார்க்கையிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

(கு-உ.) [1] ஆர்க்கை=கட்டுதல்.

45

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிரு ; பூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொரு [1] பூதரமுரித் [2]தேகாச மிட்ட புராந்தகற்குக்
குரு [3]பூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே.

(கு-உ.) ¹ பூதரம்=மலைபோலும் யானை.
² ஏகாசம்=மேற்போர்வை; ³ பூதம்=சுத்தம்.

புராந்தகற்குக் குரு பூதவேலவன், சூரகுலாந்தகன், பூதவீட்டில் இராமல் ஒரு பூதருமறியாத் தனி வீட்டில் உரை யுணர்வற்று இரு என்றான். சும்மா இருக்கும் மௌனநிலையே ஒரு பூதரும் அறியாநிலை என்பதை—17-ஆவது பாடலிற் காண்க.

46

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
¹தோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே.

(கு-உ.) ¹ தோயா=தோய்ந்து.

47

¹பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

(கு-உ.) ¹ பத்தி=வரிசை; "முதலைத்தரு பத்தித் திருநகை"-திருப்புகழ்-1

48

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
¹சத்தியை ²வாங்கத் தரமோ குவடு தவிடுபட
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

(கு-உ.) ¹ சத்தி=வேல்; ² வாங்குதல்=பிரயோகித்தல்; "வேல்வாங்கவே" — திருவகுப்பு-14. "மலையாறு கூறெழ வேலவாங்கினானை' என்பர் பின்னும்-௫௧.

49

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண் ¹தண்டு ²தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் ³பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

(கு-உ.) [1] தண்டு=சேனை; [2] தாவடி=போர்; 'தண்டு தாவடி'- போர்ப் பயணம் எனலுமாம். [3] பொறி=எழுத்து.

50

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

51

மலையா றுகூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
[1]தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

(கு-உ). [1]தொலையா வழி=நீங்குதற்கரிய பிறவிகள்.

52

[1]சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீ;பணி பாச[2]சங் க்ராம பணாமகுட
[3]நிகராட் சமபட்ச [4]பட்சி துரங்க ந்ருபகுமாரா
குகராட் சசபட்ச [5]விட்சோப தீர குணதுங்கனே.

(கு-உ.) [1] சிகர+அத்ரி (மலை). [2] சங்க்ராமம்=போர். [3] நிகரம் = கூட்டம். அக்ஷமம் = பொறுமையின்மை. [4] பட்சி துரங்கம்=மயில்; "பக்ஷியெனு முக்ர துரகம்" — திருப்புகழ் (௩). [5] விக்ஷோபம்=கலக்கமின்மை.

"ஆடும் பரிவே லணி சேவ லெனப் பாடும் பணியே பணியா யருள்வாய்" (அநுபூதி - 1)

53

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

54

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
[1] றீகைக் கெனைவிதித் தாயிலை யே யிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மருகா மயில் வாகனனே.

(கு-உ.) [1] "ஈயமாட்டேன் என செய்வான் தோன்றினேன் ஏழையேனே" — அப்பர்.

55

ஆங்கா ரமுமடங் காதொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார்[1] நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
[2] ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
[3] தூங்கார்[4] தொழும்புசெய் யாரென்செய் வார்யமதூ தருக்கே.

(கு-உ.) [1] "நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப்பற்றறுக்கும் விமல னிருக்கும" — திருமந்திரம்
நினைப்பு மறப்பு=சகல கேவலங்கள்.

[2] "ஓங்காரத் துட்பொருளை ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே" — திருவாசகம் - அச்சோப் பதிகம் எ.

[3] "தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முள்ளே,
தூங்கிக் கண்டார் சிவயோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொலவதெவ் வாறே" — திருமந்திரம்.

"உணர்வொடு தூங்குவார்க்கே விளக்கு மநுபூதி — திருப்புகழ்-757.

[4] தொழும்பு=தொண்டு. "என்னைத் தன் தொழும்பிற் கொண்டருளும் வானவன்" திருவாசகம்-திருவம்மானை-14.

56

கிழியும் படி[1]யடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

(கு-உ.) [1] அடற் குன்று=வலிய கிரௌஞ்சமலை.

57

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் [1]டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
[2]ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

(கு-உ.) [1] "எமக்கென்னென் றிட்டுண் டிரும்"-ஔவையார். [2] "காயம் ஒருபிடி சாம்பலாகி விடலாமோ"-திருப்புகழ்-778.

58

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
[1]பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே.

(கு-உ.) [1] பற்றாக்கை-"பகழித்திரளின் பெயர் பற்றாக்கை"-பிங்கலம்; அம்புகட்டும் பாசம் (கயிற்றின் பெயர்) பற்றாக்கை-சூடாமணி நிகண்டு.

59

[1]பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
[2]வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
[3]சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

(கு-உ.) [1] பொங்கல் - கிளர்தல். [2] வங்காரம்=பொன்; "வங்கார மார்பில்"—திருப்புகழ்-817. [3] சங்காதம்=துணை.

60

சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்றண் டைச்சிற் றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக் கிலேனுண் மைசாதிக் கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

61

வையாயற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புயாயற்ற வேலவன் போதித் தவா! பஞ்ச பூதமுமற்
றுயாயற றுணாவற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக
கயாயற் றருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

62

[1] ஆலுக் கணிகலம வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு [2] மேருவுமே.

(கு-உ.) [1] ஆல் உ; ஆல்=கல்லால விருக்ஷம் அல்லது விஷம்; உ=இறைவன்; ஆல நீழற் கடவுள், ஆலமுண்ட கடவுள்-சிவபிரான்; முல்லை உ (முல்லைநிலக் கடவுள்) என்றார் விஷ்ணுவை-கந்தரந்தாதி-(உ)

“பூந்துருத்தி மகிழும் ஆலனை”; “நாலுவேதியர்க் கின்னருணன்னிழல் ஆலன்”-அப்பர் :

[2] மேரு-மேருமலைபோன்ற பொன் மலையாகிய கிரௌஞ்சம்.

63

[1] பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுதழு தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

(கு-உ.) [1] “மரகதம் பெறுகம் அபலுணி சிவன் புராரி”-திருப்புகழ் - 205

64

[1] பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெருமாள் திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

(கு-உ.) [1] பட்டி=களவு; “பட்டி மாடானநான்”—திருப்புகழ்-338.

65

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுகயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் [1]கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிகதுங் கலாப மயூரத்தனே.

(கு-உ.) [1] கராசலம்-(கரம்=கை; அசலம்=மலை) : கைம்மலை=யானை. கராசலங்கள் எட்டு=அஷ்டதிக்குக் கஜங்கள். கராசலங்கள்=ஆன்ம தத்துவங்கள்.

66

நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மெனபர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற் குமரற்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே.

67

[1]பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறகக்கற் றிலேன்[2]மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரச[3]வல்லி
இறுகத் தழுவுங் [4]கடகா சலபன் னிருபுயனே.

(கு-உ.) [1] "பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்"—திருமந்திரம்.
[2] மத * * * சயிலம்=ஐராவதம்; [3] வல்லி=தேவ சேனை.
[4] கடகாசல * * புயனே=கடகத்தை அணிந்த புயமலையோய்.
கடகம்=ஒருவகை ஆபரணம். "கடகபுயமீது"—திருப்புகழ்-214.
"பனிரண்டு புயமலை கிழவோனே"—திருப்புகழ்-975.

68

[1]சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் [2] சரணத்திலே
ஓடுங்[3]கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே.

(கு-உ.) [1] "சாடுந் தனிவேன் முருகன் சரணம்"—அநுபூதி-44. [2] "சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க"—திருப்புகழ்.-214.

[3] "பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின் வீட்டிற் புகுதல் மிக எளிதே"—என்பர் பின்னும்-85.

69

தந்தைக்கு முன்னந் தனி[1]ஞான வாளொன் றுசாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன் [2]வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்[3]சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோப [4]த்ரி சூலத்தையே.

(கு-உ.) [1] "ஞானவா ளேந்துமையர்"—திருவாசகம்: திருப்படை யெழுச்சி.

[2] "வெம்பி=கோபித்து. "வெம்பி வருகிற்பதன்று கூற்றம் நம்மேல்"—அப்பர்.

[3] "சத்திவா ளொன்றன் கையதுவே"—இந்நூல்-64.

[4] த்ரிசூலம்=இயமனுயுதம்; "சூலம்பிடித் தெமபாசஞ் சுழற்றித் தொடர்ந்து வருங்காலன்"—இந்நூல் இறுதிச்செய்யுள்.

70

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

71

திருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
[1] அருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

(கு-உ.) [1] அருத்தி=பூரகஞ் செய்து.

72

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

73

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே.

74

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்தஅன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடியஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
[1] இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே.

(கு-உ.) அரா=அரவு: பாம்பு. குரா=குரவு. [1] கேவல சகலங்க ளற்ற அருள் நிலை. "இரவு பகலற்றவிட மெனதற விருக்கைபுரி யோகப் புராதனனும்"—திருவகுப்பு-12.

75

[1]படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலை[2] முசி யாமலிட்டு
[3]மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள[4]விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

(கு-உ.) [1]"உனதுபழநிமலையெனு மூரைச்சேவித் தறியேனே" —திருப்புகழ்-166.

[2] முசியாமல்=சோர்வடையாமல்.

[3] மிடிக்கின்றிலை=வறுமையுறுகின்றாயில்லை.

[4]"விம்மி விம்மி மெய்ம்மறந்து"-திருவாசகம்-திருவெம்பாவை.

76

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாளனே தென்றணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாத கையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

(கு-உ) வேதன்=பிரமன்: தாடாண்மை=முயற்சி.

"சூழுதல் வேண்டுந் தாள்கள், தொழுதிடல் வேண்டும் அங்கை, தாழுதல் வேண்டுஞ் சென்னி, துதித்திடல்வேண்டுந் நாவு"—கந்தபுராணம்-சூரபன்மன் வதைப்படலம் - 444.

77

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் [1]பயோதரஞ் சேர எண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் [2]கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று [4]வேல்வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே.

(கு-உ.) [1] பயோதரம்=ஸ்தனம். [2] களிற்றான் கிழத்தி = ஐராவதத்தையுடைய இந்திரன் மனைவி: சசி. இந்திராணி. [3] நூல்= தாலி. [4] வேல்வாங்கி=வேலைப் பிரயோகித்த முருகவேள்.

"சசிதன் விளங்கிய மங்கல நூல வாங்குகிலாள் வாழ்ந்தனள்.. வேல்வாங்கவே" திருவகுப்பு - 14.

78

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண்டாடுவீர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகையும் பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரையோ கெடுவீர்நும் மறிவின்மையே.

(கு-உ) 59-ஆவது பாடலையு நோக்குக. சாளிகை=பணப்பை.

79

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
[1]சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்குமரா அமராவதி காவலனே.

(கு-உ.) [1]"சிந்தா குலமானவை தீர்த்தருள்வாய்"-அநுபூதி-46

80

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
[1]தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
[2]த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

(கு-உ.) "கார்மா மிசை காலன்வரிற்கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப்படுவாய்" அநுபூதி-10

[2] த்ரியம்பகன்=முக்கண்ணன்; அம்பகம்=கண்.

81

தாரா கணமெனுந் தாய்மார் [1]அறுவர் தருமுலைப்பால்
ஆரா [2]துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
[3]சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

(கு-உ.) [1] "சரவணப் பூம்பள்ளியறைத் தாய்மா ரறுவர் திரு முலைப் பாலுண்டான்"-சிலப்பதிகாரம்-குன்றக்குரவை.

[2] உமை முலைப்பால் - பரஞானம்.

[3] சீரா-27-ஆம் பாடற் குறிப்பைக் காண்க.

82

தகட்டிற் [1]சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்[2]புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்ட வெட்டிப்
[3]பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

(கு-உ.) [1] செங்கடம்பு-"செந்தா தடர்ந்த கொந்தார் கடம்பு"-திருப்புகழ்-368. [2] புண்டரீகன்=பிரமன்; புண்டரீகம்=தாமரை. [3] பகடு=ஆனை: பேரெருது; பகட்டில்=பகடுபோல.

83

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

84

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்து மிந்தக்
[1] கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும் போய்ப்
[2] பைவருங் கேளும் [3] பதியுங் கதறப் [4] பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

(கு-உ.) [1] கைவருந் தொண்டு=பழகிவந்துள தொண்டு; [2]பைவருங் கேள்=துன்புறும் சுற்றத்தார்; [3]பதி=ஊரார்.
"உறவின்முறை கதறியழ ஊராரும் ஆசையற" திருப்புகழ்-1143.
[4]பழகிநிற்கும் ஐவர்-ஐம்புலன்கள்.

"ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரு மச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரு மச்செய்யைக் காவல் விட்டாரே-" திருமந்திரம்.

85

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

86

வேலா யுதன்சங்கு சக்கரா யுதன்விரிஞ் சனறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
[1] காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்[2]டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

(கு-உ.) [1]காலை ஆயுதமாகக்கொண்டு பொருதலின் "காலாயுதம்" எனக் கோழிக்குப் பெயர் போந்தது; "காற்படைக் கொடியினன்" என்றார் கல்லாடத்திலும் (63). [2] என்பால் ஆயுதம் வருமோ-எனப்பிரிக்க.

87

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட [1] கடையேடு வந்தினி யென்செயுமே.

(கு-உ.)[1] கடை ஏடு=எமனோலை. "ஓலையுந் தூதருங் கண்டு" இந்நூல்.—27.

"வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய தூதரென்று
மடி பிடியதாக நின்று தொடர்போது"-திருப்புகழ்-430.

88

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய [1]கொடி யுங்கழுகும
[2] பிணங்கத் [3] துணங்கை யலகைகொண்டாடப [4] பிசிதர்தம்வாய
[5]நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

(கு-உ.) [1] கொடி=காகம். [2] பிணங்க=நெருங்க, சண்டை செய்ய. [3]துணங்கை கொண்டாட=துணங்கை என்னும் கூத்தாட; அலகை=பேய்.

"பிள்ளை வீழ வீழவும் பெருந்துணங்கை கொட்டுமே" -கலிங்கத்துப்பரணி.

"முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் தொடக்கிய நடையது துணங்கை யாகும்"-(பிங்கலம்). [4] பிசிதர்=பிசித வுணவர்; இறைச்சி தின்பவர், நிணம்=கொழுப்பு.

89

[1]பங்கே ருகனைப [2]பட்டோ லையிடப பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்[8]கோதம வாய்விடப் [4]பொன்னஞ் சிலம்பு புலம்பவரும
எங்கோ னறியி னினிநான் முகனு மிருவிலங்கே.

[1] பங்கேருகன் = பிரமன் [2] பட்டோலை = குறிப்பெழுதுமோலை. "வித்தார கவித்திறத்தினர் பட்டோலை"— திருப்புகழ்-981.

[8] ஓதம்=கடல்; [4] பொன்னஞ் சிலம்பு=கிரவுஞ்சம்.

90

மாலோன் மருகனை [1]மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த [2]நான்முகனே.

(கு-உ) [1] மன்றாடி=நடேசுரர்.

[2] நான்முகன்=பிரமன். செங்கோட்டுப் பெருமானது திவ்விய ஓலக்க விசேடம் இத்தன்மைத்து என இச் செய்யுள் விளக்குகின்றது இதனாலன்றோ "செங்கோடமர்ந்த பெருமாளே - சென்றே யிடங்கள் கந்தா எனும்பொ செஞசேவல்கொண்டு வரவேணும்" என்றார் திருப்புகழிலும்-567. "செங்கேழடுத்த" என்னும் அந்நூற் செய்யுளையுங் காண்க.

91

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைசெற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

(கு-உ) இச்செய்யுளில ஜாதிகளைக் குறிக்கும் கருமான்; செம்மான் (சக்கிலி) மாகுலவர் (வேடர்); கைக்கோளன்; வேலன் (வெறியாட்டாளன்); என்னும் பதசாதுர்யம் கவனிக்கற்பாலது. 'மறையவ னரசன் செட்டிதன் தாதை வயங்குநூற்சூத்திரன் புவனம் பறைதரு நல்ல சங்கரன் வேடன் பணிசிவன் விளங்குமூக் கணக்க னறைசெயம்பட்ட னகமது புறத்தே காவியாட் டாவமா ரிடையன் பறையனுமுன்ன ரானநீ யின்று பள்ளனு னமைதெரிந்தேன்யான்'. -என்னும் பேரூர்ப் புராணச் செய்யுளும் இத்தகைமைத்து.

கைக்கோளன்=கையிற் கொண்டவன், சேவல் திருக்கரத் துள்ளதென்பது "சேவலங்கொடியான பைங்கர (103) "செஞ் சேவற செங்கையுடைய ஷண் முகதேவே (397)-என்னுந் திருப் புகழாலும், "பசுந்தழைத தோகையுஞ் செஞ்சிறைச் சேவலுந் தாஙகிய மலாககரந்தங்கிய நிலைத்த பேரொளி மேனியன்-என்னுங் கல்லாடத்தாலும் (75) விளங்கும்

குலவன்=குலத்தவன், "குலமிலாதானைக் குலவனே என்றும்"-சுந்தரர், "பனிக்கதிர்க குலவன்"-கல்லாடம்-10.

92.

தொண்டர்கண் [1] டண்டி [2]மொண் டுண்டிருக் குஞ்சுத்த [3] ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தரு வாய்சண்ட தண்டவெஞ்சூர்

மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு
மண்டி மிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட
காவலனே.

(கு-உ) [1] அண்டி = நெருங்கி.

[2] "அருளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்" -திருவாசகம்-அடைக்கலப் பத்து.

[3] "ஞானமென்னும் புண்டரிகம்" என்பது. "ஞானபாத பத்மம்"-திருப்புகழ்-442

[4] சண்டம்=கொடுமை: கோபம்: வேகம. "சண்டக் கருநமன் அண்டிக்கொளுகயி றெடுத்து"-திருப்புகழ்-585.

இச்செய்யுள் திருவடியின் பெருமையைக கூறிற்று.

"திருவடியே சிவமாவது தேரிற்
றிருவடியே சிவலோகஞ் சிந்திககிற்
றிருவடியே செல்கதி யதுசெபபிற்
றிருவடியே தஞ்சமுட் டெளிவார்கடகே"—திருமந்திரம்.

93

மண்கம [1]ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினு லுலகமுங் கேட்டதுவே.

(கு-உ.) [1] உந்தி=வயிறு, புவியுண்டாராதலின் 'மண்கம ழுந்தித் திருமால்' ஆயினர். "செகத்தை யகத்திடு நெடியவர்"-திருப்புகழ்—303.

94

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளியகெண்டையைத் தொண்டையைத் தோதகச்சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே.

(கு-உ.) வள்ளை = வள்ளைக்கொடிபோலும் காது. கெண்டை-மீன் போலுங் கண். வெள்ளிய நித்தில மூரல்=வெண்முத்துப்போன்ற

பல். தொண்டை=கொவ்வைக் கனிபோலும்வாய். தோதகம =வஞ்சகம்: "தோதகவித்தை படித்து நடிப்பவர்"-திருப்புகழ்-197.

95

யானென் றுனெனுஞ்சொல் லிரண்டுங்கெட்டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்கரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

(கு-ரை.) யாவருக்கும் சத்தியம் (உண்மைப்பொருள்) தோன்றாது. சூகரம்=பன்றி.

"எனதென து மலமறில் * * எளிது பெறலென மறைபறை யறைவதொ ருதய மரணமில் பொருள்."-திருப்புகழ்-511.

"பாவியேற்கு முண்டாமோ * * யானென தென் றியாது மின்றி யறுதலே."-திருவாசகம்.-பிரார்த்தனைப் பத்து.

"யானென் றெனலறவே யின்பநிட்டை யென்றருணைக்
கோனென் றுரைத்த மொழி கொள்ளாயோ"—

எனத் தாயுமானவர் இச்செய்யுளை ஆண்டுள்ளனர். 'சான்று யாருமற்ற தனி வெளி' எனப் பிரித்துக் கொள்க.

96

திடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில் நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

97

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

(கு - ரை.) அநந்தன்=ஆதிசேடன். பணிலம்=சங்கு. கலபி=மயில். ராசி=கூட்டம். ஆலல்=மயிலின்குரல்: ஆடல்: ஒலித்தல். "குயில்கூவ மயில் ஆலும் ஆரூரரை"—அப்பர்.

'குயில்கூவக் கோலமயில் ஆல'-சுந்தரர்.

98

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

(கு-உ.) நதி=ஆற்றுப்பெருக்கு. "ஆற்றிற் பெருக்கானது செல்வம்"—36.

99

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேது மின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

காவிக்கமலம்=செந்தாமரை. தூவி=தோகை.

"கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன்"—திருவாசகம்.

100

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்[1]தொண் டரிற்கூட் டியவா! கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

(கு-உ.) [1]"அத்த னெனைத்தன் னடியாரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே"—திருவாசகம்.

நூற்பயன்

101

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருக்கவி தான்கற் றறிந்தவரே.

(கு-உ.) சலம்=கோபம். துலங்கா நரகம்=இருண்ட நரகம்.

சில பிரதி ரூபங்களில்
அதிகமாகக் காணப்பட்ட செய்யுள்கள்

102

திருவடி யுந் தண்டை யுஞ்சிலம்பு புஞ்சிலம்பு சூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந் தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

103

இராப்பக லற்ற இடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

(கு-உ.) இராப்பக லற்ற இடம்-74-ஆம் செய்யுளைப் பார்க்க.
கரா=முதலை. கரி=ஆதிமூலம் என அழைத்த யானை.

104

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ் செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

105,

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

106

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே.

(து-உ.) "இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத்து"—திருவாசகம்.

107

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடாந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

(து-உ.) "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"—அப்பர்.

உ

பாட்டு முதற்குறிப் பகராதி

கந்த ரலங்காரம்

	பாடலின் எண்		பாடலின் எண்
அடலருணைத்	காப்பு	கொள்ளித்தலையில்	106
அராப்புனை	74	கோடாத	76
அழித்துப்	2	கோழிக்கொடிய	20
ஆங்காரமு	55	சலங்காணும்	101
ஆலுக்கணி	62	சளத்திற்	7
ஆவிக்குமோசம்	105	சாகைக்கு	54
இடுதலைச்	100	சாடுஞ்சமரத்	68
இராப்பகலற்ற	103	சிகராத்ரி	52
உதித்தாங்	39	சிந்திக்கிலேன்	60
ஒருபூதரு	45	சுழித்தோடு	36
ஒரு ரைப்	13	சூரிற்கிரியிற்	49
ஒளியில்	6	சூலம்பிடித்	107
ஓரவொட்டார்	4	செங்கேழடுத்த	104
ஓலையுந்தூதரும்	27	சேந்தனைக்	72
கடத்திற்	29	சேலிற்	97
கண்டுண்ட	37	சேல்பட்	40
கதிதனை	98	சேல்வாங்கு	77
கருமான்மருகனைச்	91	சொல்லுகைக்	10
கவியாற்கடல்	43	சொன்ன	19
காட்டிற்	85	தகட்டிற்	82
காவிக்கமலக்	99	தடக்கொற்ற	96
கிழியும்படி	56	தடுங்கோள்	16
கிளைத்துப்	32	தண்டாயுதமுந்	25
கின்னங்குறித்	24	தந்தைக்கு	69
குசைநெகிழா	11	தாராகணமெனுந்	81
குப்பாச	14	தாவடியோட்டு	15
குமராசரணஞ்	87	திருந்தப்புவனங்கள்	5
கூர்கொண்ட	78	திருவடியுந்	102

	பாட்டின் எண்
துருத்தி	71
தெய்வத்திருமலைச்	23
தெள்ளியவேனலிற்	94
தேங்கிய வண்டத்	83
தேரணியிட்டுப்	3
தேனென்று	9
தொண்டர்	92
தோலாற்சுவர்	44
நாளென்செயும்	38
நிணங்காட்டுங்	42
நீயான ஞான	46
நீர்க்குமிழிக்கு	66
நீலச்சிகண்டியில்	26
நேற்றுப்	58
பங்கேருகனெனைப்	89
படிக்கின்றிலை	75
படிக்குந்	50
படைபட்ட	12
பட்டிக்கடாவில்	64
பத்தித்திருமுகம்	47
பத்தித்துறை	35
பந்தாடுமங்கையர்	79
பாதித்திருவுரு	63
பாலென்பது	30
பாலேயனைய	41
புத்தியைவாங்கி	48
பெரும்பைம்	6
பெறுதற்கரிய	67
பேற்றைத்	1
போக்கக்குடிலிற்	31
பொங்கார	59
பொட்டாக	34
பொருபிடியுங்	57
போக்கும்வரவும்	73
மண்கமழுந்தித்	93
மரணப்ரமாத	21
மலையாறு	51
மாகத்தை	80
மாலோன்மருகனை	90
முடியாப்பிறவிக்	33
மைவரும்	84
மொய்தாரணி	22
யான்றானெனுஞ்	95
வணங்கித்துதிக்க	88
வரையற்	61
விழிக்குத்துணை	70
வெட்டுங்கடா	65
வேடிச்சி	53
வேதாகம சித்ர	17
வேலாயுதன்	86
வேலேவிளங்கு	28
வையிற்கதிர்	18

உ

திருத்தணிகேசன் துணை

கந்த ரலங்கார ஆராய்ச்சி

["வேளைர், அலங்காரத் துட்பொருளை யாய்வதுவே தேகங் கலங்கா வலங்காரம்". .. தணிகை புலா.]

இந் நூல் முருகக் கடவுளுக்கு மிகவும் உகந்த பாமாலை. முருகபிரானது திருவடி முதல் திருமுகம் வரையும் உள்ள அங்கங்களின் சிறப்பையும், அவர் ஊர்தி, படை, கொடி இவைகளின் பெருமையையும் எடுத்தோதும் நூலாதலால் இந் நூலுக்குக் **கந்தர் அலங்காரம்** என்னுந் திருநாமம் வாய்ந்தது. உதாரணமாக:—

(i) **சிற்றடி**
"தாவடி யோட்டு." (௧௫)
"சேல்பட்ட" (௪௦)

(ii) **திருவரையிற் கிண்கிணி**
"ஒருவரைப் பங்கில்" (௧௯)
"மண்கம ழுந்தி" (௧௯)

(iii) **பன்னிரு திருக்கை.**
"குப்பாச வாழ்க்கை" (௧௪)

(iv) **திருமுகம்.**
"பத்தித் திருமுகம்" (௪௭)

(v) **ஊர்தி** (மயில்).
"குசை நெகிழா" (௧௧)

(vi) **படை** (வேல்).
"ஆலுக் கணிகலம்" (௬௨)

(vii) **கொடி** (சேவல்)
"படைபட்ட" (௧௨)

2. "அருணைத் திருக்கோபுரத்தே வடவருகிற் சென்று கண்டுகொண்டேன்" எனவரும் காப்புச் செய்யுளால் இந் நூல் திருவண்ணாமலையிற் புனைதல் பெற்றிருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்றது. நூற்பயன் கூறுஞ் செய்யுளில் "அலங்கார நூற்றுள் ஒருகவி தான் கற்றறிந்தவரே" என வருதலால் இந் நூல் நூறு செய்யுள்கள் கொண்டதாயிருத்தல் வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட ஆறு பாடல்களின் வாக்கு ஸ்வாமிகள் வாக்குப்போலச் சிறந்ததாயிருப்பதால் அவர் செய்த தனிச் செய்யுள்களோ இவை என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

இலைக்குலாம வேற்காத் தெமதண்ணல் தம்மை ஆட்கொண்டு உபதேசித்த பிறகுதான் இந்நூலை ஸ்வாமிகள் பாடியிருத்தல் வேண்டுமெனபது,

"பேற்றைதத தவஞ்சற்று மில்லாத என்னைப் ப்ரபஞ்ச மென்னுஞ் சேற்றைக கழிய வழிவிட்டவா" (க)

"வெறுந தனியைத், தெளிய விளம்பியவா முகமாறுடைத் தேசிகனே" (அ)

"வள்ளிகோ னன்றெனக் குபதேசித்த தொன்றுண்டு" (கூ)

"எலலா மிழந்து சும்மா இருக்கும் எல்லையுட் செல்ல எனை விட்டவா" (கo)

"அடியேன் செவி நீ யன்று கேட்கச் சொன்ன குன்னங் குறிச்சி வெளியாககி விட்டது" (உச)

"கந்தச் சுவாமி எனைத் தேற்றிய பின்னர்" (கூகூ)

—எனவருந திருவாககுக்களால் தெளிவாக ஏற்படுகின்றது. மேலும், திருப்புகழிற் பல இடத்தும் "முருகா! யமன் கையிற் சிக்காது அடியேனை நீயே ஆண்டு கொண்டருள்" என இரக்கும் நமது ஸ்வாமிகள் கந்தாலங்காரத்தில் அவ்வாறு இரத்தலோடு "நாம் ஆண்டவனுக்கு அடிமையாய் விட்டோம்; இனி யமன் யாது செய்யக்கூடும்" என்னும் துணிபு பெற்றவராய, அப்பர் சுவாமிகள் "நாமார்க்குங் குடியல்லோம நமனையஞ்சோம" எனக் கூறியவாறு, தாமும்

"பெருமாள் திருமுக மாறுங் கண்ட தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங் கெமராஜன் விட்ட கடையேடு வந்தினி யென் செய்யுமே." (அஎ)

"காலன் வெம்பி வந்திப்பொழுதென்னை என் செய்யலாம் சத்தி வாளொன்றினாற் சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோப த்ரிசூலத்தையே" (கூகூ)

என முருகன் அடியார் பெருமையையும் தமது துணிவையுங் கூறினவராகி அமையாது, அக்காலனையே—

"தண்டாயுதமுந் திரிசூலமும் விழத் தாக்கி யுன்னைத் திண்டாட வெட்டி விழவிடுவேன்***ஞானச்சுடர் வடிவாள் கண்டா யடா! அந்தகா வந்துபார் சற்றென்கைக் கெட்டவே" (உரு)-என்றும்,

"பட்டிக் கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய வெட்டிப் புறங்கண் டலாது விடேன்! **கட்டிப் புறப்படடா சத்திவா ளென்றன் கையதுவே" (௩௪)—என்றும்,

"வாரா தகலந்தகா வந்த போதுயிர் வாங்குவனே" (அக)—என்றும்,

விளித்து வெருட்டி வெருட்டித் திடுக்கிட்டோடும்படி அச்சுறுத்தி யுள்ளார். இதனை நோக்குமிடத்துத் திருப்புகழ் பாடிப்பாடி முருகன் திருவருள் ஊறி ஊறிச் சிந்தை தெளிந்த 'நிண்மை நிலையில் இச் செய்யுள்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

"செங்கோடனைச் சென்று கண்டு தொழு நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" (௩௦)—என்பது செங்கோட்டு வேலவர் திவ்விய சொரூபத்தை நேரிற் றரிசித்துச் சொல்லியதாதலின் திருச்செங் கோட்டைத் தரிசனம் செய்த பிறகு கந்த ரலங்காரம் பாடி யிருத்தல் வேண்டும்.

3. நூலாசிரியர் சந்தப்பா பாடின சதுரர் என்பது கட்டளைக் கலித்துறைகளாகிய இக் கந்தரலங்காரத்திற்—

"சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்க
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே"(௪)

"உதிரக்-குளத்திற் குதித்துக் குளித்துக களித்துக் குடித்து வெற்றிக்-களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே" (எ)

"உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே" (௩௧)

"சண்ட தண்டவெஞ்சூர், மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டி மிண்டக், கண்டுருண் டண்டர் விண்டோடாமல் வேல்தொட்ட காவலனே." (௩௨)

—எனவரும் உருட்டுச சந்தப் பாக்களாற் பெறப்படும்.

4. ஸ்வாமிகள் வரகவி என்பது தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளினின்றும் வாக்குப் பிரபாவம் தடையறத் தோற்றுவதால் நன்கு புலப்படும். வடமொழி

நிரம்பிய திருப்புகழ்ப் பாக்கள் உள. அதுபோல இக் கந்தரலங்காரத்திலும்—

"சரணப் ப்ரதாப சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா
பரணக் க்ருபாகர ஞான கரஸாம்ர பாஸ்கரனே." (உக)

"பாச சங்க்ராம பணாமகுட
நிகராக்ஷம பக்ஷ பக்ஷி துரங்க ந்ருபகுமரா
குகராக்ஷச பக்ஷ விக்ஷேப தீர குணதுங்கனே." (ருஉ)

—என வடமொழிச் சொற்களும் பாவடிகளு முள.

5. இந்நூலில் இரண்டு விஷயங்கள் கவனிக்கத் தக்கன: ஒன்று அவர் வயலூரைப் பற்றி ஒன்றுங் கூறாதது. பிற தொன்று ஞான சம்பந்த மூர்த்தியை முருகபிரானைத் திருப்புகழிற் பாராட்டியவாறு இங்கு ஒன்றுங் கூறாதது.

6. திருப்புகழில் எவ்வாறு சிவபிரான், உமாதேவி, திருமால், தேவசேனை, வள்ளியம்மை இவர்களின் பெருமையைக் கூறி இன்னாருக்கு மகனே, இன்னாருக்கு மருகனே, இன்னாருக்குக் கணவனே எனச் சிறப்பித்துள்ளனரோ அவ்வாறே இவ்வலங்காரத்துள்ளுஞ் சிறப்பித்துள்ளனர். உதாரணமாக :—

"செஞ்சடாடவிமேல், ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்" (க)

—இது சிவகுமாரனென்பது;

"த்ரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி தன் பாலகனே" (அ0)— இது உமை சுதனென்பது;

"மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச் சேவடி நீட்டும் பெருமான் மருகன்" (கரு)-இது திருமால் மருகனென்பது;

"மதகும்பகம்பத் - தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி யிறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே" (சுஎ)

—இது தேவசேனை காதலனென்பது;

"நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி முற்றாத் தனத்திற் கினிய பிரான்" (ருஅ)

—இது வள்ளி மணாளனென்பது.

7. இந்நூலிற் கூறப்பட்டுள்ள விசேட பிரயோகங்கள், பழமொழிகள் முதலியன :—

(1) சர்க்கரை மொக்கிய களிறு. (காப்பு)
(2) கழுத்திற் சுருக்கிட் டிழுக்கு மன்றோ கவி கற்கின்றதே. (உ)
(3) வெய்யிற் கொதுங்க உதவா உடம்பு. (கஅ)
(4) ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும் அடிப்பிறகே! (உ௦)
(5) ஏன்றவமை வாய்த்த துணை கிரணக் கலாபியும் வேலும் உண்டே. (உக)
(6) முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன். (உஉ)
(7) வந்துபார் சற்றென் கைக்கெட்டவே. (ஙரு)
(8) ஆற்றிற் பெருக்கானது செல்வம். (ஙசு)
(9) அம்பரம் பம்பரம் பட்டுழல. (ஙகூ)
(10) அயன் கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கை யெழுத்தே. (ச௦)
(11) காலே மிகவுண்டு காலே யிலாத கணபணம். (சக)
(12) தொலையா வழிக்குப் பொதிசோறு. (ருக)
(13) ஒருபிடி சாம்பருங் காணாது மாய உடம்பிதுவே. (ருஎ)
(14) கட்டிப் புறப்படடா. (சுச)
(15) ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே. (அச)
(16) விதிதனை நொந்து நொந் திங்கே யென்றன் மனம் வேகின்றதே. (கூஅ)
(17) நதிதனை யன்ன பொய் வாழ்வு. (கூஅ)
